OFF... THE REG... OF BOOKS
1- JUL 1925
MADRAS

- குமரகுருபர சுவாமிகள் -

அருளிச்செய்த

# பிரபந்தத்திரட்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1- JUL 1925
MADRAS

கழக வெளியீடு - ௫௰

உ

திருச்சிற்றம்பலம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1925
MADRAS

குமாரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

# பிரபந்தத்திரட்டு

திருநெல்வேலி இந்து கலாசாலைத்

தமிழாசிரியர்

வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை யவர்கள்

எழுதிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி :: & சென்னை

குரோதன ௵ சித்திரை ௴

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,

: Tinnevelly & Madras. :

1925

[Copyright]

77911

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUL 1925
MADRAS

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| முன்னுரை | ... | 7 |
| நூலாசிரியர் சிறப்புப்பாயிரம் | ... | 15 |
| குமரகுருபரசுவாமிகள் சரித்திர சாரபஞ்சகம் | ... | 17 |
| குமரகுருபரசுவாமிகள் சரித்திரச் சுருக்கம் | ... | 21 |

### நூல்

| | | |
|---|---|---|
| திருச்செந்தூர்க் கந்தர்கலி வெண்பா | ... | ௧ |
| மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ் | ... | ௧௩ |
| மீனாக்ஷியம்மை குறம் | ... | ௭௫ |
| மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை | ... | ௮௭ |
| மதுரைக் கலம்பகம் | ... | ௯௩ |
| நீதிநெறி விளக்கம் | ... | ௧௨௯ |
| திருவாரூர் நான்மணிமாலை | ... | ௧௪௭ |
| முத்துக் குமாரசுவாமிபிள்ளைத்தமிழ். | ... | ௧௯௭ |
| சிதம்பர மும்மணிக்கோவை | ... | ௨௨௫ |
| சிதம்பரச் செய்யுட்கோவை | ... | ௨௪௫ |
| சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை | ... | ௨௮௩ |
| பண்டார மும்மணிக்கோவை | ... | ௨௮௯ |
| காசிக்கலம்பகம் | ... | ௩௱௯ |
| சகலகலாவல்லிமாலை என்னும் சரசுவதிதோத்திரம் | | ௩௪௩ |
| கைலைக்கலம்பகம் | ... | ௩௪௭ |

அரும்பொருள் விளக்கம்

திருச்செந்தூர்க் கந்தர்கலி வெண்பா ... ௧
மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ் ... ௬
மீனாக்ஷியம்மை குறம் ... ௪௧
மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை ... ௪௫
மதுரைக் கலம்பகம் ... ௪௬
நீதிநெறி விளக்கம் ... ௮௬
திருவாரூர் நான்மணிமாலை ... ௱௧௩
முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ் ... ௱௩௩
சிதம்பர மும்மணிக்கோவை ... ௱௫௩
சிதம்பரச் செய்யுட்கோவை ... ௱௭௮
சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை ... ௱௯௧
பண்டார மும்மணிக்கோவை ... ௱௯௪
காசிக்கலம்பகம் ... ௨௱௪
சகலகலாவல்லிமாலை ... ௨௩௨
கைலைக்கலம்பகம் ... ௨௩௬

---

பாட்டு முதற்குறிப் பகராதி

---



# முன்னுரை

பிரபந்தத் திரட்டு என்னும் பெயரான் இக்காலத்திற் பல புத்தகங்கள் வெளிவந்துலவுகின்றன. அவற்றுளெல்லாம் பழைமை வாய்ந்தன குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, சிவஞான சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்னும் மூன்றுமேயாம். அவையனைத்தும் 'தொல்காப் பியானை யியற்றமி ழிலக்கியமாய்ச் சங்கச்செய்யுட் பிரயோகம் யாண்டும் பயின்று சொல்லணி பொருளணி துறுமி விளங்கும் நல்ல தமிழ்ப்பிரபந்தங்களாம்.' ஆயினும் அவற்றுட் சிவப்பிர காச சுவாமிகள் கொண்ட சமயம் அகப்புறச் சமயங்களில் ஒன் றாகிய ஐக்கியவாத சைவமாதலின் அவரியற்றிய பிரபந்தங்கள் இலக்கியமென்னும் முறையின்மட்டும் பயிலப்படுவனவாம். குமர குருபரசுவாமிகளும், சிவஞான சுவாமிகளும் அருளிச்செய்த பிர பந்தங்கள் சிறந்த இலக்கியங்களா யிருத்தலோடு 'வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்த நுண்பொருள் விளக்குங் கொழி தமிழ்க் கவிகளுடையவு'மா யிருத்தலின் நம்மவர்கள் அனைவரா லும் மிகவும் பாராட்டப்படுந் தகுதியுடையன. இக்காரணத்தால் அவ்விரு பிரபந்தங்களின் சிறப்பு அறியப்படும்.

அவற்றுள் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங் கள் திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, கைலைக் கலம்பகம், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், மீனாக்ஷியம்மை குறம், மீனாக்ஷி யம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக் கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை யென்னும் பதினைந்துமாம்.

இவற்றுட் கைலைக் கலம்பகம் நீங்கலாக ஏனைப் பதினன்கு பிரபந்தங்களையும் ஒன்ருகத்திரட்டிச் சிதம்பரம் ஈசானியமடம் **ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்** சில அருஞ்செய்யுட்களுக்குக் குறிப்புரை யெழுதிக் **குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு** என்னும் பெயரால் வெளியிட்டார்கள்.

இப்பொழுது அப்பிரபந்தத்திரட்டுப் பிரதிகள் கிடைப்பது அரிதாகின்றமையின் இப்புதிய பதிப்பு **திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால்** வெளியிடப் படுகின்றது. இப்புதிய பதிப்பில் இதற்குமுன் வெளிவாராத பிரபந்தமாகிய **கைலைக் கலம்பகச்** செய்யுட்களில் தற்காலம் கிடைத்த எட்டுச் செய்யுட்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வெட்டுச் செய்யுட்களையும் வருந்திச் சேர்த்து வைத்திருந்தவர்கள் சுவாமிகளின் பாம்பரையினரும் ஸ்ரீ வைகுண்டம் சண்முகசிகாமணிக் கவிராயரென்ற சண்முகக் கவிராயரவர்கள் குமாரரும் சுவாமிகள் பணிவிடை நடத்திவருபவர்களுமாகிய ச. **குமரகுருபரன் கவிராயரவர்க**ளாவார். அவர்கள் அவற்றை யுதவிய பெருந்தகைமைக்கு மிகுந்த நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுவாமிகள் அருளிச்செய்த இப் பிரபந்தத் திரட்டில்:—

(க) **கந்தர்கலிவெண்பா** சுவாமிகள் திருச்செந்தூர் சென்றிருந்த பொழுது பெற்றோர் முதலிய பலரும் வியக்க முருகப் பெருமான் திருவருளால் ஊமை நீங்கியதும் அப் பெருமான்மீது பாடியது. இது சைவசித்தாந்த சாத்திரப் பொருளடங்கிய மணிப் பேழையாய்த் திகழ்வது.

(உ) **கைலைக்கலம்பகம்** சுவாமிகள் தமது பிறப்பிடமாகிய ஸ்ரீ வைகுண்டத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் கைலாய நாதப் பெருமான்மீது பாடிய பிரபந்தம். இந்நூற் செய்யுட்களில் எட்டுச் செய்யுட்கள் மட்டும் கிடைத்தலின், முற்றுப் பெருத இப் பிரபந்தம் இத்திரட்டின் இறுதியிற் சேர்க்கப்பட் டிருக்கிறது.



(ங) **மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்** சுவாமிகள் மதுரை மீனாக்ஷியம்மையார்மீது பாடிய பிரபந்தம். இந்நூலிலுள்ள செய்யுட்கள் மிகவும் பாராட்டற்பாலன. இந்நூலைச் சுவாமிகள் மீனாக்ஷியம்மையார் சந்நிதியில் அக்காலத் தரசராகிய திருமலை நாயகர் கேட்க அரங்கேற்றும் பொழுது அம்மையாரே குழந்தை வடிவி லெழுந்தருளி மிகவும் பாராட்டின ரென்றால், இதன் பெருமை அளவிடற்பாலதா? சிறந்த பிள்ளைத் தமிழ்கள் சிலவற்றில் இஃதும் ஒன்று.

(ச) **மீனாக்ஷியம்மை குறம்** திருமலை நாயகர் வேண்டுகோட்கிணங்கிச் சுவாமிகள் மீனாக்ஷியம்மையார்மீது பாடியது. இதிற் குறத்தி குறி கூறுமுறை மிக்க அருமை வாய்ந்தது.

(ரு) **மீனாக்ஷியம்மை இரட்டைமணிமாலை** சுவாமிகள் நாயகர் வேண்டுகோட் கிணங்கிப் பாடிய மற்றோர் பிரபந்தம். இந்நூலின் 2, 10, 14, 16, 17 செய்யுட்கள் ஆசிரியரது மெய்யன்பை விளக்குவன.

(சு) **மதுரைக்கலம்பகம்** கலம்பக வுறுப்புக்கள் அமையச் சுவாமிகள் மதுரைச் சோமசுந்தரப் பெருமான் மீது பாடிய பிரபந்தம். இதிலுள்ள சித்திரக் கவிகளும் துறைகளும் மிக்க இன்பந்தருவன.

(எ) **நீதிநெறி விளக்கம்** திருமலை நாயகர் வேண்டுகோட்படி சுவாமிகள் நீதிகளனைத்தையும் தொகுத்து விளக்கிய ஓர் நூல். இந்நூற்குப் பரிசாக அரசர் இருபதினாயிரம் கலிப்பொன் வருவாயுடைய அரியநாயகபுரத்தைச் சுவாமிகட்குக் கொடுத்தன ரென்ப.

(௮) திருவாரூர் நான்மணிமாலை ‘மாயன் மார்பமும் வானக நாடுமுண் மதியாது’ திருவாரூரில் வீற்றிருக்கும் தியாகேசப் பெருமான்மீது சுவாமிகள் பாடியது. இந்நூலிலுள்ள, 8, 13, 14, 15, 16, 17, 20, 21, 23, 28, 32, 34, 40 செய்யுட்களில் சொற்சுவை பொருட்சுவைகள் மலிந்து கிடப்பன.

(௯) முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழ் புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுரன் கோவிலில் எழுந்தருளி யிருக்கும் முருகக் கடவுள்மீது சுவாமிகள் பாடிய பிரபந்தம்.

(௰) சிதம்பர மும்மணிக்கோவை சுவாமிகள் சிதம்பரத்தி லெழுந்தருளி யிருக்கும் நடராசப் பெருமான்மீது பாடியது. இதன் 1-வது செய்யுள் இருவகை யறங்களின் இலக்கணங்களை நன்கு தெரிப்பது: 7-வது செய்யுள் துறவு நிலையை விளக்குவது. 10-வது செய்யுள் அடியாருறவின் பெருமை கூறுவது. 16-வது செய்யுள் வேதமுங் காணாத பெருமானது பேரியல்பு கூறுகின்றது. 25-வது செய்யுளில் வரும் ‘செல்வமென்பது சிந்தையினிறைவே, யல்கா நல்குர வவாவெனப் படுமே, ஐயுணர் வடங்கிய மெய்யுணர் வல்லாத, புவாக்கடல் சிறுக வுலகெலாம் விழுங்கு, மவாக்கடல் கடத்தற் கரும்புணை யின்றே’ என்னுங் கருத்துக்கள் மிகமேலாக மதிக்கத்தக்கன. 28-வது செய்யுள் சைவசித்தாந்த தத்துவ விளக்கம்.

(௧௧) சிதம்பரச் செய்யுட்கோவை சுவாமிகள் தம்மிடம் தில்லையிலுள்ள சிவனடியார் சிலர்வந்து ‘யாப்பிற்குப் பண்டுள்ள உதாரணச் செய்யுட்கள் பரமதச் செய்யுட்களா யிருத்தலின், யாங்கள் உய்யுமாறு தேவரீர் ஒரு பிரபந்தம் இயற்றித்தரல் வேண்டும்’ என்று வேண்ட, அதற்கிசைந்து பாடியது. இதிலுள்ள செய்யுட்கள் மிக்கஅருமையுடையன. ‘அருவருக்கு முலக வாழ்வடங்க நீத்தோர்க்கு’ என்னுஞ் செய்யுளில் சிவபெருமானுடைய மாதியலும் பாதித் திருமேனியைச் சிறப்பித்து அதனை யுடையபிரானை ஒருவனென்பதா? ஒருத்தியென்பதா? இருவருக்கு முரித்தாகத் தமிழில் ஒருவசொன்னும் இயற்சொல் ஒன்றில்லையாயின் யாது கூறுகேன் என்று கூறியது நம்மனத்தைக் கொள்ளைகொள்கின்றது.



(௧௨) சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை சிவகாமியம்மையார்மீது சுவாமிகள் பாடிய பிரபந்தம். இந்நூலில் 2, 5, 8, 12, 16, 17, 18, 20 செய்யுட்கள் மிகுந்த கனிவுடையன.

(௧௩) பண்டார மும்மணிக்கோவை சுவாமிகள் தமது ஞானாசாரியராகிய தருமை - மாசிலாமணி தேசிகர்மீது செய்த தோத்திரப் பிரபந்தம். இந்நூலொன்றுமே சுவாமிகளடைந்த ஞானநிலையின் பெருமையைக் காட்டுதற்குப் போதியதாகும். இதனுள் சைவ சித்தாந்த மெய்ப்பொருள்கள் பல விளக்கப்பட்டிருக்கின்றன. சுவாமிகள் தற்போதமற்றுத் திருவருள்வழி நின்று இந்நூலையருளிச் செய்தனரென்பது அவர்களே

‘உள்ளத் தருளின் றுணர்ந்தஎன் னாவி லுறைந்தவெள்ளை
வள்ளக் கமலத் தவன்மா சிலாமணி வண்புகழில்
என்னத் தனையன வோர்தொடை யாக்கி யிசைத்தனளால்
கள்ளப் புலன்கொண் டுரைத்தே னலன்இக் கவிமுற்றுமே’

யெனக் கூறுவதா லறியப்படும்.

(கச) காசிக்கலம்பகம் சுவாமிகள் காசியம்பதி சென்ற காலத்து அங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் விசுவேசப் பெருமான்மீது பாடியது. இந்நூலில்வரும் 17, 35, 37, 40, 57, 97, 100 செய்யுட்கள் மிக்க நயம்வாய்ந்தன.

(கரு) சகலகலாவல்லி மாலை சுவாமிகள் காசியிற் பணிசெய்ய விரும்பியவழி அந்நாட்டரசன் அநுமதிபெறற்கு அவனது இந்துஸ்தானி பாஷை தெரிதற்கண் நாமகள்மீது பாடியது. இம்மாலையை நியமமாக அன்புடன் ஓதிவருவோர் நாமகள் அருள்பெறுதல் ஒருதலை.

இப்பிரபந்தங்கள் அனைத்திற்கும் முன் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் எழுதி யுபகரித்த 'அருஞ்செய்யுட் குறிப்புரை' இக்காலத்தார்க்குப் போதாதாகலின், பிரபந்தம் முழுவதற்கும் குறிப்புரை யொன்று எழுதித்தருதல் வேண்டுமெனத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் விரும்பினார்கள். அவ்விருப்பத்திற்கிணங்கி, எளிதற் பொருள்விளங்கும் ஒரு சில செய்யுட்கள் ஒழிய ஏனைய செய்யுட்களனைத்திற்கும் குறிப்புரை வரைந்திருக்கின்றேன். சுவாமிகள் அருளிய பிரபந்தங்களிலுள்ள செய்யுட்கள் சொல்வளம் பொருள்வளஞ் செறிந்து சாத்திர நுணுக்கமமைந்தன வென்பது வெளிப்படை. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பதினாறாவது மகா சன்னிதானமா யெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகளது தம்பியார் புதல்வரும் அவ்வாதீனத்திற் கற்றவரும், திருநெல்வேலி இந்துகலாசாலைத் தலைமைத் தமிழாசிரியரும் எனது இயற் றமிழாசிரியருமாகிய திருவாளர் மே. சோ. சுப்பிரமணியக் கவிராயரவர்களும், அவர்களோடு திருவாவடுதுறையாதீனத்தில் கல்வி கற்றவரும், ஸ்ரீமத் - குமரகுருபர சுவாமிகளது திருப்பனந்தாள் ஆதீனபதிகளாய் வீற்றிருந்த குமாரசுவாமித் சுவாமிகளின் தம்பியாரும், ஸ்ரீவைகுண்டம் கார்னேஷன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியருமாகிய திருவாளர் நல்லகுற்றாலம் பிள்ளை யவர்களும் எனக்கு விளங்காத செய்யுட்களின் பொருளை விளக்கினார்களாதலின், அவர்கள் உதவியால் இப்பிரபந்தத்திரட்டு முழுவதற்கும் ஒருவாறு குறிப்புரை யெழுதி முடித்தேன். அவ்விருவரும் எனக்குச் செய்த பேருதவிக்கு நான் யாது கைம்மாறு செய்யவல்லேன்? அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன்.



கந்தர்கலி வெண்பாவில் 'அண்டத்தார்ந்த அத்துவாக்கள்' என்றது பொருள் விளங்கவில்லை. அதன் பொருளை அறிவுறுக்கும் பெரியோர்க்கு நான் நன்றி மிகப் பாராட்டுதலோடு அடுத்த பதிப்பில் அப்பொருள் அவர்கள் பெயரால் வெளியிடப்படும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நிலமேழ்' என்பதற்கு மதுரைத் திருவாளர் மு. நா. அருணாசலக் கவிராயரவர்கள் கூறிய பொருளே இங்கு வரையப்பட்டிருக்கிறது. வேறு சிறந்த பொருள் கிடைப்பின் அதனை யேற்று வெளியிடச் சித்தனாயிருக்கின்றேன்.

கந்தர்கலி வெண்பாவில் வரும் 'வானுதவுந், தெய்வக் களிற்றை மணஞ் செய்தோனே' யென்பது சில ஏட்டுப் பிரதிகளில் 'வானுதவுந், தெய்வப் பிடியை மணஞ் செய்தோனே' யெனக் காணப்படுகிறது.

சில ஏட்டுப் பிரதிகளில் கந்தர் கலிவெண்பாவி னீற்றில்

'வந்த வினையும் வருகின்ற வல்வினையுங்
கந்தனென்று சொல்லக் கலங்குமே—செந்தினகர்ச்
சேவகா வென்று திருநீ றணிவார்க்கு
மேவவா ராதே வினை'

யென்னும் வெண்பா வொன்று எழுதப்பட் டிருக்கின்றது.

பெரும்பாலான ஏட்டுப் பிரதிகளிலும் அச்சிட்ட பிரதிகளிலும் காணப்படும் பாடமே பாடமாகக் கொண்டு பொருள் எழுதியிருக்கிறேன். குறிப்புரையிற் காணப்படும் குற்றங்களை நீக்கிக் குணங்களைக் கொள்ளுமாறு அன்பரனைவரையுங் கேட்டுக் கொள்கிறேன்.

இந்து கலாசாலை
திருநெல்வேலி,
௧. சித்திரை ௴

வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை,
தமிழ்ப் போதகாசிரியர்.

OFFICE OF THE REG
1 JUL 1925
MADRAS



குமாரகுருபர சுவாமிகள்.



திருச்சிற்றம்பலம்

---

## நூலாசிரியர் சிறப்புப்பாயிரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1925
MADRAS

---

நிலைமண்டில வாசிரியப்பா

திருமக ளகலாப் பரமனை குந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசி
லைந்தெனும் பருவம் வந்துறு மளவு
மழுக்குண மொருவி யிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளா
லோதா துணர்ந்த போதனுப் முன்னர்க்
கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கலக்
குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ றாகச் சால்பமை பிரபந்த
மூந்நான் கன்றியு மொழிதரு கைலைக்
கலம்பகந் துண்டிக் களிற்றுப் பதிக
மவ்விரண் டியற்றிச் சைவநற் சமய
நிலையையுங் காட்டி யுலைவிலா தியாருந்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலு
மியற்றின னில்லறந் தியக்குறு நிலையென
விளமையிற் றுறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபர னெனும்பெயர் மருவிய முனியே.

---

உ

முருகன் துணை

---

## குமரகுருபரசுவாமிகள்

# சரித்திரசாரபஞ்சகம்

---

### பதினெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அருந்தமிழ்ப் பாண்டி நாட்டில்வண் புகழ்க்கை
லாசமா புரத்தில்வே ளாள
ரரியசண் முகசி காமணிக் கவிரா
யருஞ்சிவ காமியம் மையுஞ்செய்
பெருந்தவ மதனாற் செந்தில்வேற் குகன்றன்
பேரரு ளாலுதித் தொருவர்
பேசுத லிலாதைந் தாண்டுகா றமரப்
பெற்றவர் பெரிதுள மயர்ந்தே
திருந்துமக் குகன்சந் நிதியினி லொருமண்
டலத்தினிச் சேயுறு மூகைத்
திறமகன் றிலதேன் மடிவமென் றுறையச்
சிறுவர்சொப் பனத்தினிற் கடைநாட்
பொருந்திவேள் குமர குருபர னெனப்பேர்
புனைந்துநா வதனிலா றெழுத்தும்
பொறித்தலு முடன்வாக் குடையராய்க் கந்தர்
கலிவெண்பாப் புகன்றுபோற் றினரே.

போற்றியோர் குருவை யருள்கென வேண்டப்
புகலுரை தடைப்படும் யாங்கப்
புங்கவன் றனையே கொள்கென வசரீ
ரியிற்பகர் தலும்புற விடைகொண்
டாற்றல்சான் மதுரைக் கயற்கணா யகிபிள்
ளைத்தமி ழியற்றுபு கைக்கொண்
டடைதலும் பரங்குன் றதுதிரு மலைநா
யகர்க்கம்மை கனவினி லருளத்
தேற்றிய வாறே யெதிர்கொடு பணிந்தன்
னவர்திரு முறையொடு மவரைத்
திறல்கயத் தேற்றிச் சந்நிதி சேர்க்கத்
திகழ்ந்தாங் கேற்றுழி வருகை
சாற்றுறு பருவத் துமையிளங் கோலர்
தயங்கநா யகர்மடி யமர்ந்து
தானுவந் தருளி மணிவடந் தரிக்குந்
தகைபெறீஇ முற்றுவித் தனரே. (௨)

முற்றுவித் ததன்பின் கனகமா திகளா
லாட்டிமொய் கழல்பதந் தணிந்து
முதிர்ந்தபல் விருதும் வைத்தா சிறைஞ்ச
முழுதுமேற் றம்பிகை குறமும்
மற்றிரட் டைமணி மாலையு மதுரைப்
பிரான்கலம் பகமும் மன்னர்
வாஞ்சையி னீதி நெறிவிளக் கமுமே
வளர்தாரூர் நான்மணி மாலை
தெற்றென விளம்பித் தருமைசார்ந் தொளிர்மா
சிலாமணித் தேசிகர் கடாவச்
செப்பிறக் குங்காற் றிருத்தொண்டர் புராணத்
திளிலைந்து போறி வென்ன



வுற்றவவ் விருத்தந் தனுபவம் வினவ
வுறவிடை தடைப்படு தலுமுன்
னுயர்குகன் பணித்த துணர்ந்துட னிருக்கை
யொருவியே பணிந்தனர் மாதோ. (௩)

பணிந்தெதிர் நின்றென் பிழைபொறுத் தாட்கொண்
டருள்கெனப் பரவலுங் காசிப்
பதியினி லன்றேற் றில்லையம் பதியிற்
பரிந்தொர்மண் டலம்வசித் தெய்திற்
றிணிந்தபே ரருளீ குவமெனப் பணிக்கச்
சென்றுவே ளூர்தொழு தொருவுஞ்
செவ்வியிற் செவ்வே ளருச்சகர் போலச்
சேர்ந்துவெண் ணீறளித் தெமக்கு
மணிந்துரை யொருபிள் ளைக்கவி யெனச்சொற்
றகன்றபொன் பூத்தவெண் மொழிவா
னளிக்கவங் ஙனமே துதித்தாற் றில்லை
யணுகிமும் மணிக்கோவை யோடு
தணிந்தொரு புலவர் பணிந்திடுஞ் செய்யுட்
கோவையுந் தரித்திறைக் குமைக்குந்
தகவிரட் டைமணி மாலையு மிலைந்து
தங்கியே தருமையெய்ந் தனரால். (௪)

எய்ந்துமும் மணிக்கோ வைத்துதி யியம்பி
யேற்றுப தேசமும் விடைபெற்
றேகுழிப் பிள்ளைப் பெருமானை யங்கா
ராதிய ரிகல்காஞ்சி யினில்வெண்
ருய்ந்துகா சியிற்கே தாரமுன் விளக்கிக்
கலம்பக மறைந்தகி லேசர்க்
கருட்கலா வல்லி மாலைசொற் றிந்துஸ்
தானபா ஷையில்விற லமைந்தே

பாய்ந்தெழு மரிமேல் டில்லிபா ஷாவின்
பாலுறீஇப் பலபிர சங்கம்
பண்ணியுந் தீத்தம் பந்தழு வியுமுன்
பலவுண வாக்கியும் வேட்கை
வாய்ந்துறச் செய்தன் னவர்புரி மடத்தில்
வளர்த்தறம் பலவும்வை காசி
மதிகுறை பக்கத் திருதியைத் திதியிற்
சிவனருட் கழலின்மன் னினரே. (௫)

முற்றிற்று

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1st JUL 1925
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்

## குமாரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

பாண்டி நாட்டிலே தாமிரபர்ணி நதி தீரத்தில் ஸ்ரீ வைகுண்டம் என்று பெயர் வழங்கும் கைலாசபுரத்திலே ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் சைவ வேளாளர் குல திலகராகிய சண்முகசிகாமணிக் கவிராய ரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் கற்பிற் சிறந்த சிவகாமி யம்மையாரோடு இல்லறம் நடத்திவந்தனர். நெடுநாளாக அவர்கட்குப் புத்திரப் பேறின்மையால், அவ்விருவரும் திருச்செந்தூர் முருகப்பெருமானை நோக்கித் தவஞ்செய்தனர். அத்தவத்தின் பயனாக அவர்கட்கு ஓர் சற்புத்திரர் தமிழும் சைவமும் விளங்குமாறு தோன்றி யருளினர். அப் புத்திரர் ஐந்தாண்டுவரை பேசாதிருந்தமை கண்ட பெற்றோர் மிக்க வருத்தமுற்று அப்புத்திரருடன் திருச்செந்தூர் சென்று, புத்திரரின் ஊமைத் தன்மையை நீக்கி யருளும்படி முருகப்பெருமான் சந்நிதியிற் கடுந்தவம் புரிந்தார்கள். ஒரு நாள் நள்ளிரவிலே முருகக்கடவுள் அப்புத்திரரருகில் அழகிய குமாரவடிவத்துடன் எழுந்தருளி 'குமரகுருபரா' என அழைத்து 'விசுவரூப தரிசனத்திற்கு நீ உன் பெற்றோருடன் விரைய வருக' என்றருளிச்செய்து மறைந்தனர். ஊமையாயிருந்த குமாரகுருபரர் அக்கணமே திருவாக்குந் திறக்கப்பெற்றுத் தம் பெற்றோரை யெழுப்பி நிகழ்ந்த

செய்தியைக் கூற, அவர்கள் கழிபேருவகை பூத்து 'முருகப் பெருமானுடைய திருவருள் விலாசமிருந்தபடி யென்னே' எனத் தம்மை மறந்தவராய்க், குமாரக்கடவுள் ஆணையின்படி விசுவரூப தரிசனத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது முருகப் பெருமானுடைய திருவருளால் குமரகுருபரர் வேதாந்தத் தெளிவாகிய சைவ சித்தாந்தத்தின் சாரமாய் விளங்கும் 'கந்தர் கலிவெண்பா' என்னுந் தோத்திரப் பாடலை யருளிச்செய்தனர்.

பின்னரும் அங்குச் சில நாள் தங்கிக் காலந்தோறும் முருகப் பெருமானை அவர் வழிபட்டு வந்தனர். ஒருநாள் தமக்கு ஞானகுருவை யருளிச் செய்யும்படி பெருமானை வேண்டப் பெருமான் 'வடதிசையிற் செல்லுங்கால் உன் வாக்கு எவர்பால் தடைப்படுமோ அவரே உனக்கு ஞானகுரு' என அசரீரியாய் அருளிச் செய்தனர். குமரகுருபரர் அதனைக் கேட்டு மகிழ்வுற்று முருகப் பெருமானிடம் விடைபெற்றுத் தம் பெற்றோருடன் ஸ்ரீவைகுண்டம் சென்று அங்கே யெழுந்தருளி யிருக்குங் 'கைலாய நாதர்' மீது கைலைக் கலம்பகம் பாடியருளினர்.

சிலகாலங் கழியவும் குமரகுருபரர் தம் பெற்றோரிடம் விடைபெற்று வடநாட்டு யாத்திரை செய்யப் புறப்பட்டு இடைவழியிலே 'மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்' பாடித் திருப்பரங்குன்று சேர்ந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருந்தனர். மீனாக்ஷியம்மையார் இச் செய்தியை அக்காலத்தரசராகிய * திருமலை நாயகருக்குக் கனவிற் றோன்றி யறிவித்து 'அதனை நம் சந்நிதியில் அரங்கேற்றுவிக்க' என ஆணை தந்தார். திருமலை நாயகர் அம்மையாராணையின்படி குமரகுருபரரை எதிர்கொண்டழைத்துவந்து பிள்ளைத் தமிழை யரங்கேற்றுவிக்குங்கால் வருகைப் பருவத்தின் ஒன்பதாவது செய்யுளாகிய 'தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையின் பயனே' என்று தொடங்குஞ் செய்யுளுக்குப் பொருளுரைக்கும்பொழுது அம்மையார் அரசர் பிரான்மடியில் அர்ச்சகரது சிறு பெண் போன்ற திருக்கோலங்கொண்டு வீற்றிருந்து மகிழ்ந்து அரசர் கழுத்தி லணிந்திருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினர். அரசர் வியப்புற்றுக் குமரகுருபரர்க்குக் கனகாபிஷேகம்செய்து யானை குதிரை சிவிகை முதலிய விருதுகளை யுதவினர். குமரகுருபரர் பின்னுஞ் சில நாள் அங்கிருந்து 'மீனாக்ஷியம்மை குறம்' 'மீனாக்ஷியம்மை யிரட்டைமணி மாலை' என்னும் பிரபந்தங்களை அம்பிகை மீதும், 'மதுரைக் கலம்பகம்' என்னும் பிரபந்தத்தைச் சோமசுந்தரக் கடவுள் மீதும் பாடியருளினர். அரசர் பிரான் நீதிநூல்கள் பலவாயிருத்தலானும் திருக்குறள் விரிவாயிருத்தலானும் அந்நூற் கருத்துக்களை யெல்லாஞ் சுருக்கி ஒரு நூலியற்றித் தரல்வேண்டுமென வணங்கி வேண்ட குமரகுருபரர் அதற்கிணங்கி 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை யருளிச்செய்தனர். இந்தப் பேருதவிக்காக அரசர் பிரான் இருபதினாயிரங் கலிப்பொன் வரும்படியுள்ள † அரிய நாயகபுர மென்னும் ஊரை யுதவினர்.

* அக்காலத்தரசர் திருமலை நாயகரென்பதைக் 'கச்சி நகர்த் திருமலை பூபதி வாழி' என மீனாக்ஷியம்மை குறத்தில் வருவதாலறிக.

† இதனை 'இருபதினா யிரங்கலிப்பொ னியைந்தவரு வாயுடைய, வரியநா யகபுரமென் றறையுநக ரொன்றுதவி, மருவியநீதியைச்சுருக்கி வகுத்தருள வேண்டுமெனப், பொருவிலா நீதிநெறி விளக்கமுறப் புகன்றருளி' எனவருஞ் சுவாமிகள் சரித்திரச் செய்யுளாலறிக.

பின்னர்க் குமரகுருபரர் அங்கிருந்து திருச்சிராப் பள்ளி செல்ல உடன் வந்த நாயகர் ஸ்ரீரங்கத்திலே யிருந்த வைஷ்ணவ கவியாகிய பிள்ளைப்பெருமாள் ஐயங்காரையும் குமரகுருபரரையும் நோக்கி 'நாம் புதிதாகக் காசு அச்சிட வேண்டும்: அதில் என்ன அடையாளம் போடலாம்' எனக் கேட்டனர். அப்பொழுது ஐயங்கார் 'கருடனுடைய அடையாளம் போடலா' மென்று முற்படக் கூறினர். குமரகுருபரர் 'இடபத்தினடையாளம் போடல் தகுதி' யென்றார். ஐயங்கார் 'கருடன் பறந்து செல்லுதலின், கருடனே சிறந்தது' என்றார். குமரகுருபரர் 'கருடன் வட்டமிட்டுச் செல்லும்: இடபம் முட்டமுட்டச் செல்லும். ஆதலின் இடபமே தக்கது' என்றார். அரசர் பிரான் இவ் விடையின் நயமுணர்ந்து விடைக்காசு அச்சிட்டு வழங்கினர். தோற்றுப்போன பிள்ளைப்பெருமாளையங்கார் பின் சில வைஷ்ணவர்களைக்கொண்டு சமயவாதம் புரிவிக்க அவர் கள் தோற்றுப்போயினர். ‡

அப்பால் குமரகுருபரர் பல திருப்பதிகளையும் வணங்கிக் கொண்டு திருவாரூரை யடைந்து 'மாயன் மார்பமும் வாகனாடு மூண் மதியாது' அங்கு வீற்றிருந்தருளுந் தியாக ராசப்பெருமானை வணங்கித் 'திருவாரூர் நான்மணிமாலை' பாடினார்.

பின்பு குமரகுருபரர் அங்கு நின்றும் புறப்பட்டுத் தருமபுரஞ் சார்ந்து அங்குள்ள மடாலயத்திலே எழுந்தருளி யிருந்த நான்காவது குருமூர்த்தியாகிய மாசிலாமணி தேசி கர் தம்மிடம் திருத்தொண்டர் பெரிய புராணத்துள்ள

‡ இதனைச் சுவாமிகள் சரித்திரத்தில் ௱௨. முதல் ௱௬௰௬ வரையுள்ள செய்யுட்களாலறிக. இச்சமயவாதம் காஞ்சிபுரத்தில் நடந்ததாகக் கூறுவதுமுண்டு.



'ஐந்து போறிவும்' என்று தொடங்குந் திருவிருத்தத் தின் அநுபவப்பொருள் கேட்பத் தம் வாக்குத் தடைப் பட்டு நின்றார். உடனே முருகப்பெருமான் கட்டளையை நினைந்து மாசிலாமணி தேசிகர் திருவடிகளில் விழுந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினர். தேசிக மூர்த்திகள் 'நீ சிதம்பரஞ் சென்று ஒரு மண்டலம் தரிசனம் செய்துவரின் ஆட்கொள்வோம்' என்றருளினர். குமரகுருபரர் அவ்வாறே சிதம்பரத்திற்குப் புறப்பட்டு, இடையே புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசான் கோயிலை யடைந்து குமரக் கடவுள்மீது 'முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழ்' என ஓர் பிரபந்தம் பாடிப் பணிந்து பின் சீகாழி முதலிய பதிகளை வழிபட்டுத் தில்லையை யடைந்து ஸ்ரீ நடராசப் பெருமானை வணங்கிச் 'சிதம்பர மும் மணிக் கோவை' பாடினார். அங்கேயுள்ள சிவனடியார்கள் குமர குருபரரின் தெய்விகப் புலமையை யுணர்ந்து 'யாப் பிற்கு உதாரணங்களெல்லாம் பரமதச் செய்யுட்களா யிருக் கின்றன: தேவரீர் ஒரு நூல் செய்துதவுதல் வேண்டு' மென்று வணங்க அவர் உளங் கொள்ளுமாறு 'சிதம்பரச் செய்யுட் கோவை' யென்னும் நூலை யியற்றினார். * பின்

* இச் செய்தியைச் சுவாமிகள் சரித்திரத்து வரும் 'பூதி சாதனக் கிழமையர் சிலர் வந்து போற்றி, நீதி நூன் முதற் பலவுரைத் தீர்ங்கழ் யாப்பிற், காதிநானுதா ரணமெலாம் பரமத மவாவு, மோதி யாமுயு மாறருள் செய்விரென் றுரைப்ப' 'காலை நேர்தா மகிழ்ந் துளங்கனிந்து பல் செயயுட், கோவை யாப்பியற் காட்டினி துரைத்தனர் கொடுத்தார்' என்னுஞ் செய்யுட்களா லறிக. சிதம்பரச் செய்யுட் கோவையைச் சுவாமிகள் தம்மை நிந்தித்த ஓர் பௌராணிகர் பொருட்டு இயற்றியதாகக் கூறலு முண்டு.

னர்ச் சிவகாமி யம்மையார் மீது 'இரட்டைமணிமாலை' யொன்று பாடினர்.

பின்பு சிதம்பரத்தினின்றும் புறப்பட்டுத் தருமபுரம் அடைந்து மாசிலாமணித் தேசிகர் திருவடிகளை வணங்க அவர் குமர குருபரரை யாட்கொண்டு ஞானோபதேசஞ் செய்தனர். குமர குருபரர் தம்மை யாட்கொண்ட ஞான தேசிகர் மீது 'பண்டார மும்மணிக் கோவை' என்னும் பிரபந்தம் ஒன்று பாடி அதனை அத்தேசிகர் சந்நிதியில் அரங் கேற்றி அணுக்கத் தொண்டராயிருந்து வருவாராயினர்.

அப்படி யிருக்கும் நாளில் ஒரு நாள் குமரகுருபரர் முன் தமக்குத் திருமலை நாயகர் முதலியோர் கொடுத்த பொருள்களை ஞானதேசிகர் திரு முன் வைத்து அவற்றை யேற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். ஞானதேசிகர் 'நீ காசியிற்போய் இப்பொருள் கொண்டு தரும மியற்றுக' என்று கட்டளையிட்டனர். சுவாமிகள் அவ்வாறே காசிக்குச் சென்று ஸ்ரீ விசுவேசப் பெருமானை வணங்கி 'காசிக் கலம் பகம்' பாடினார். பின்னர்ச் சுவாமிகள் சகலகலாவல்லி மாலை' யென்னும் பிரபந்தம் பாடிச் சரசுவதி யருள்பெற்று இந்துஸ் தான் பாஷையை ஓதாதுணர்ந்து, அக்காலத்து இந்தியாவை ஆட்சிபுரிந்த மகம்மதிய அரசனிடஞ் செல்ல, அவ்வரசன் தமக்கு இருப்பிடங் கொடாமையால் காளி தேவியருளால் ஒரு சிங்கத்தின் மீதேறிச் சென்று அவ்வரசன் வினவிய கேள்விகளுக் கெல்லாம் விடை பகர்ந்தும், ஏனை மகம்மதியர் தம்மீது கொண்ட பொறாமை நீங்கப் பழுக்கக்காய்ச்சிய இருப் புக்கோலைத் தாங்குதல் முதலிய அற்புதங்கள் செய்தும் அரசனது நட்புப் பெற்றுக் காசியில் பல சைவ மடங்களும் சிவாலயங்களும் கட்டுவித்து அவற்றிற்கு வேண்டும்



நிபந்தமுமமைத்தனர். சுவாமிகள் கட்டிய மடங்களில் குமார சுவாமி மடமும் ஆலயங்களில் கேதாரேசுவராலயமும் மிகச் சிறந்தன.

சுவாமிகள் தமது ஞானாசாரியரைத் தரிசிக்க மூன்று முறை காசியிலிருந்து தருமபுரம் வந்து மீண்டும் காசி சென்றனர். அங்கே சைவ வளர்ச்சி கருதிப் பல காரியங்கள் செய்து சுவாமிகள் ஒரு வைகாசி ஸ்ரீ கிருஷ்ணபக்ஷத் திருதியையில் சித்தாந்த முத்தி யெய்தினர்.

## குமாரகுருபர சுவாமிகள் பரம்பரை

| எண். | ஆசிரியர் பெயர் | இடம் | சித்தியடைந்த காலம் |
|---|---|---|---|
| க. | குமாரகுருபர சுவாமிகள் | காசி | வைகாசிமீ கிருஷ்ணபக்ஷத் திருதியை |
| உ. | சொக்கநாத சுவாமிகள் | டிை | டிை டிை துவாதசி |
| ங. | அருணாசல சுவாமிகள் | டிை | தைமீ சுக்கிலபக்ஷச் சதுர்த்தசி |
| ச. | அம்பலவாண சுவாமிகள் | டிை | மாசிமீ டிை திரயோதசி |
| ரு. | சடையப்ப சுவாமிகள் | டிை | சித்திரைமீ பௌர்ணிமை |
| சு. | தில்லைநாயக சுவாமிகள் * | திருப்பனந்தாள் | பங்குனிமீ கிருஷ்ணபக்கத் திரயோதசி |

* தில்லைநாயக சுவாமிகளுக்குப் பின் வந்த ஆசிரியர் பெயர் முதலியவற்றைச் சுவாமிகள் சரித்திரத்தாலும் அறிந்தோர் வாக்காலுந் தேறக. காசியி லேற்பட்ட மடாலய பரம்பரை திருப்பனந்தாளில் உண்டான விவரம் தெரிந்து கொள்ளுதற் பொருட்டு அவ்வளவில் இஃது எழுதலாயிற்று.



## சுவாமிகள் அருளிச் செய்த நூல்கள் †

க. கந்தர் கலிவெண்பா
உ. கைலைக் கலம்பகம்
ங. மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்
ச. மீனாக்ஷியம்மை குறம்
ரு. மீனாக்ஷியம்மை இரட்டைமணிமாலை
சு. மதுரைக் கலம்பகம்
எ. நீதிநெறி விளக்கம்
அ. திருவாரூர் நான்மணிமாலை
கூ. முத்துக் குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
ய. சிதம்பர மும்மணிக்கோவை
கக. சிதம்பரச் செய்யுட் கோவை
கஉ. சிவகாமியம்மையா ரிரட்டைமணிமாலை
கங. பண்டார மும்மணிக்கோவை
கச. காசிக்கலம்பகம்
கரு. சகலகலா வல்லிமாலை

† காசித் துண்டி விநாயகர் பதிகம் ஒன்று சுவாமிகள் செய்ததாகச் சுவாமிகள் சரித்திரம் கூறுகின்றது. அக்நூல் கிடையாமையின் இவ்வரிசையிற் சேர்க்கப்படவில்லை.

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

# பிரபந்தத்திரட்டு

திருச்செந்தூர்க்

# கந்தர்கலிவெண்பா

உ

திருச்சிற்றம்பலம்

திருச்செந்தூர்க்

# கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு
நாதமு நாதாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமா—யாதிநடு
அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமா—யறிவுக்
கனாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மனாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனாதருளின்
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளா—யெஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியி
லிந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்—முந்துங்
கருவின்றி நின்ற கருவா யருளே
உருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரண

மாகவரு மிச்சை யறிவியற்ற லாகிலைய
போகவதி காரப் பொருளாகி—யேகத்
துருவ மருவ முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவா—யிருண்மலத்துள்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த வருவுருவஞ் சார்த்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுத
லாறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தருஞ்செமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரு
மீரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
னாரவந்த நான்குநூ றாயிரத்துட்—டீர்வரிய
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தா
னற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு
சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாஞ்
சத்திநி பாதந் தருதற் கிருவினையு
மொத்துவருங் கால முளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னா
ளலமருதல் கண்ணுற் றருளி—யுலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்



கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கா
லூழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநிலை
யேழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
வாணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணு
மடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கு
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலு
மிரவுங் கடந்துலவா வின்ப—மருவுவித்துக்
கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன்—மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்ததனைய தெய்வ வடிவாகி—மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
மூன்றவத்தை யுங்கழற்றி முத்தரு டனேயிருத்தி
யான்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானந்
திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
வருளதுவே செங்கை யலரா—விருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவந்
தோய்ந்தநவ ரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந்—தேய்ந்தபிறைத்

துண்டமிரு மூன்றுமிளை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்த நுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பரிதி
பலவு மெழுந்துசுடர் பரப்பினாற் போலக்
குலவு மகரக் குழையு—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமு-மெவ்வுயிர்க்கு
மூழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமுஞ்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைக ளாகமங்க ளியாவு
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமு—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கு
மோக மளிக்கு முகமதியுந்—தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டு—மாரமுதந்
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமு—மோவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமு—மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமு
முய்த்த குறங்கி லொருகரமு—மொய்த்த



சிறுதொடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுந்—தெறுபோ
ரதிர்கே டகஞ்சுழற்று மங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமு—முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூ ணகன்மார்பும்—பைம்பொற்
புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையு
மரைஞாணுங் கச்சை யழகுந்—திருவரையு
நாதக் கழலு நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்—சோதி
இளம்பரிதி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவு—முளந்தனிற்கண்
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே—யோதியவைத்
தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்தொழிற்கு
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையா
மொத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவி
னிலையே வடிவமா நின்றோய்—பலகோடி
அண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுங் கரணமாய்த்—தொண்டுபடு
மாவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலு
மேவித் தனிநடத்து மெங்கோவே—மேவ
வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே—பருவத்

நகலாத பேரன் படைத்தோ ரகத்துட்
புகலாரு மின்பப் பொருப்புஞ்—சகலவிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீறானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்ப
மெல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகரும்—தொல்லுலகி
லீறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமு—மேறுமதந்

தோய்ந்து களித்தோர் துதிக்கையினுற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்து
ளைந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்—சந்ததமு
நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவன
மாக்கி யசைத்தருளு மாணையுந்—தேக்கமழ்ந்து
வீசம் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசத் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்

பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறைய முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமுந்—தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு
மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவன
மெங்கும் பரக்க விமையோர்க ளஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தா—லங்கை
யணைத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ—யடுத்ததொரு



பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்—முன்ன
றறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலு
மன்னவள்கண் டவ்வுருவ மாறினையுந்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறு மொன்றாக மேவுவித்துச்—செய்ய

முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பா
லகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குண் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்
தங்கட் புவன மனைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்

விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கு
நடத்தி விளையாடு நாதா—படைப்போ
னகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற்

தாருகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனாஞ்
சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே—காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளாற்பவுஞ் சங்கரித்துப்—பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுண
னங்கமிரு கூறா யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலு—மங்கவற்றுட்
சீறுமரா வைப்பொருத சித்ரமயில் வாகனமா
வேறி யடாத்திவர்ந்த வெம்மானே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடிவாஞ்
சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றை மணஞ்செய்தோனே—பொய்விரவு
காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போ
லேனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்



தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—யுள்ளமுவந்
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்
கந்திப் பொதும்பரெழு காலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமிருந்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையும்—ஏதமுறு
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையு
மெவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலு—மவ்விடத்திற்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளு
மச்ச மகற்று மயில்வேலுங்—கச்சைத்
திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறு
மெந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்க
ணெல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பல்விதமா
மாசுமுத லெண்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையு—மோசை
யெழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுட
னிம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

ளஉஉகடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

## கந்தர்கலிவெண்பா

முற்றிற்று.

---

## வரலாறு

குமரகுருபர சுவாமிகள் ஐந்து வயது வரையும் ஊமையாய் இருந்து, ஐந்தாம் வயதிலே திருச்செந்தூர் முருகக் கடவுளது திருவருளினாலே தமிழ்ச் செய்யுள் பாடுந் திறமை யுண்டாகப் பெற்று கந்தர்கலிவெண்பா என்னும் இந்நூலை அருளிச் செய்தார். கல்வியில் விருப்பமுடையவர்கள் இக் கலிவெண்பாவைத் தினந்தோறும் நியமமாக உளங் குவிந்து அன்புடன் பாராயணம் பண்ணக்கடவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

- மதுரை

# மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்

நூல் - ௨.

உ

திருச்சிற்றம்பலம்

மதுரை

# மீனாக்ஷியம்மைபிள்ளைத் தமிழ்

---

## விநாயகக்கடவுள்

கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட்
கடைக்கடைக் கனலு மெல்லை
கடவாது தடவுக் குழைச்செவி முகந்தெறி
கடைக்கா றிரட்ட வெங்கோன்
போர்கொண்ட வெண்கோட் டொருவன்றுவ பொதியும்வெண்
பொடித்துடி யடித்து வைத்துப்
புழுதியாட் டயராவொ ரயிராவ ணத்துலவு
போர்க்களிற் றைத்து திப்பார்
தார்கொண்ட மதிமுடி யொருத்தன் திருக்கண்மலர்
சாத்தக் கிளர்ந்து பொங்கித்
தவழுமிள வெயிலுமழ நிலவுமள வளவளாந்
தண்ணென்று வெச்சென்று பொன்
வார்கொண் டணிச்சுருமை மலைவல்லி கர்ப்பூர
வல்லியபி ராம வல்லி
மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக
வல்லிசொற் றமிழ் தழையவே. (க)

---

## க. காப்புப்பருவம்

---

### திருமால்

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டு மோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமானத்து
வாலுளை மடங்க லாங்கு
மணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவைத்தெ
மையனொடு வீற்றி ருந்த
அங்கயற் கண்ணமுதை மங்கையர்க் கரசியையெ
மம்மனையை யினிது காக்க
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறு செய்யக்
கழனிபடு நடவையிற் கமலத் தணங்கரசொர்
கையணை முகந்து செல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்த லைப்பப்
பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே. (உ)

### சிவபெருமான்

#### வேறு

சிகர வடவரை குனிய நிமிர்தரு
செருவி லொருபொரு வில்லெனக் கோட்டினர்
செடிகொள் பறிதலை யமண ரெதிரெதிர்
செலவொர் மதலைசொல் வைகையிற் கூட்டினர்
திருவு மிமையவர் தருவு மரவொலி
செயவ லவர்கொள நல்குகைத் தீட்டினர்
சிறிய வெனதுபுன் மொழியும் வடதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்



பகரு மிசைதிசை பரவ விருவர்கள்
பயிலு மியனெறி வெள்வளைத் தோட்டினர்
பசிய வறுகொடு வெளிய நிலவிரி
பவள வனமடர் பல்சடைக் காட்டினர்
பதும முதல்வனு மெழுத வரியதொர்
பனுவ லெழுதிய வைதிகப் பாட்டினர்
பரசு மிரசித சபையி னடமிடு
பாத பதயுக முள்ளம்வைத் தேத்துதுந்
தகர மொழுகிய குழலு நிலவுமிழ்
தரள நகையுமெ மையனைப் பார்த்தெதிர்
சருவி யமர்பொரு விழியு மறுகிடை
தளர வளர்வதொர் செல்விமுற் றாக்கன
தனமு மனனுற வெழுதி யெழுதரு
தமது வடிவையு மெள்ளிமட் டூற்றிய
தவள மலர்வரு மிளமயி லொடுசத
தளமின் வழிபடு தையலைத் தூத்திரை
மகர மெறிகட லமுதை யமுதரு
மழலை பழகிய கிள்ளையைப் பேட்டன
மடவ நடைபயில் பிடியை விரைசெறி
வரைசெய் புயமிசை வையம்வைத் தாற்றிய
வழுதி யுடையகன் மணியொ டுலவுபெண்
மணியை யணிதிகழ் செல்வியைத் தேக்கமழ்
மதுர மொழுகிய தமிழி னியல்பயின்
மதுரை மரகத வல்லியைக் காக்கவே. (ங)

### சித்திவிநாயகக்கடவுள்

#### வேறு

கைத்தல மோடிரு காடக் கரைத்திரை
கக்குக டாமுடைக் கடலிற் குளித்தெமர்
சித்தம தாமொரு தறியிற் றவக்குறு
சித்திவி நாயக னிசையைப் பழிச்சுதும்

புத்தமு தேவரு டழையத் தழைத்ததொர்
பொற்கொடி யோவென மதுரித் துவட்டெழு
முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
முத்தனை மேவுபெ ணரசைப் புரக்கவே. (௪)

முருகக்கடவுள்

வேறு

பமர மடுப்பக் கடாமெழுத் துற்றுமொர்
பகடு கடத்திப் புலோமசைக் குற்புயல்
பருகி யிடக்கற் பகாடவிப் பாற்பொலி
பரவை யிடைப்பட் டமாதெனத் தோற்றிய
குமரி யிருக்கக் கலாமயிற் கூத்தயர்
குளிர்புன மொய்த்திட் டசாரலிற் போய்ச்சிறு
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்தக் குமாரனைப் போற்றுதும்
இமிழ்திரை முற்றத் துமேருமத் தார்த்துமுன்
னெயிறுகு நச்சுப் பணாடவித் தாப்பிசைத்
திறுக விறுக்கித் துழாய்முடித் தீர்த்தனொ
டெவரு மதித்துப் பராபவத் தீச்சுட
அமுதுசெய் வித்திட் டபோனகத் தாற்சுட
ரடரு மிருட்டுக் கிரீவமட் டாக்கிய
அழகிய சொக்கற் குமால்செயத் தோட்டிக
லமர்செய் யயற்கட் குமாரியைக் காக்கவே. (௫)

பிரமதேவர்

வேறு

மேகப் பசுங்குழவி வாய்மடுத் துண்ணவும்
விட்புலம் விருந் தயரவும்
வெள்ளமுதம் வீசுங் கருந்திரைப் பைந்துகில்
விரித்துடுத் துத்தி விரியு



நாகத்து மீச்சுடிகை சுடுவட் டிடைத்தட
கம்மையைப் பெற்று மற்றந்
நாதனைத் துஞ்சுதன் றன்னைக்கு வந்துதவு
நளினக் குழந்தை காக்க
பாகத்து மரகதக் குன்றொன்றொர் தமனியக்
குன்றொடு பிணைத்து நின்ற
பவளத் தடங்குன் றுளக்கண்ண தென்றப்
பாஞ்சுடர் முடிக்கு முடிசூழ்
மகுடந் தமைத்துப் பிறைமுடிதன் முடிவைத்
தனைக்கரசு வீற்றிருக்கு
மயிலேக வல்லியை யளிக்குல முழக்குகுழ
லங்கயற் கண்ணமுதையே. (௬)

தேவேந்திரன்

வேறு

சுழியுங் கருங்கட் குண்டகழி சுவற்றுஞ்
சுடர்வேற் கிரிதிரித்த
தோன்றற் களித்துச் சுறவுயர்த்த சொக்கப்
பெருமான் செக்கர்முடி
பொழியுந் தரங்கக் கங்கைவிரைப் புனல்கால்
பாய்ச்சத் தழைத்துவிரி
புவனத் தனிப்பூந் தருண்பழுத்த பொன்னங்
கொடியைப் புரக்கவழிக்
கிழியுந் துணர்க்கற் பகத்திறல விழ்ந்தேன்
குடித்துக் குமட்டியெதிர்
செடுக்குஞ் சிறைவண் டெட்டுறவுண் டிரைக்கக்
கரைக்கு மதக்களிற்றின்
குழியுஞ் சிறுக ணேற்றுருமுக் குரல்வெண்
புயலுங் கரும்புயலுங்
குன்றுங் குலைய வுகைத்தேறுங் குலிசத்
தடக்கைப் புத்தேளே.

### திருமகள்

#### வேறு

வெஞ்சூட்டு லொட்டுடல் விரிக்கும் படப்பாயன்
        மீமிசைத் துஞ்சுசீல
    மேகத்தி னகத்து விடுசுடர்ப் படலைமணி
        மென்பா லுறந்தவொத்து
பஞ்சூட்டு சீறடி பதைத்துமதன் வெங்கதிர்ப்
        படுமின வெயிற்குடைந்தும்
    பைந்துழாய்க் காடுவிரி தண்ணிழ லொதுங்குமோர்
        பசுங்கொடியை யஞ்சலிப்பா
மஞ்சூட் டகட்டுமொடு வான்முகடு துருவுமொரு
        மறையோதி மஞ்சலிக்க
    மறிதிரைச் சிறைவிரியு மாயிர முகக்கடவுண்
        மர்தா னினிப்பெயர்த்த
செஞ்சூட்டு வெள்ளோ திமங்குடி யிருக்கும்வளர்
        செஞ்சடைக் கருமிடற்றுத்
    தேவுக்கு முன்னின்ற தெய்வத்தை மும்முலைத்
        திருவைப் புரக்கவென்றே. (௮)

### கலைமகள்

வெள்ளித் தகட்டுமொட் டேடவிழ்த் தின்னிசை
        விரும்புஞ் சுரும்பர்பாட
    விளைநறவு கக்கும் பொலன்பொகுட் டலர்கமல
        வீட்டுக் கொழித்தெடுத்துத்
தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைத்
        தினையென, வெடுத்தவிறைநாற்
    றென்னமுது கூட்டுணுமோர் வெள்ளோதி மத்தினிரு
        சீறடி முடிப்பம்வளர்பைங்
கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுதீங்
        கிளவியுங் களிமயிற்குக்



கிளரிளஞ் சாயலு நவ்விக்கு நோக்கும்விரி
        கிஞ்சுகச் சூட்டரசனப்
பிள்ளைக்கு மடநடையு முடனுடு மகளிர்க்கோர்
        பேதைமையு முதவிமுதிராப்
    பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு யாண்டிப்
        பிராட்டியைக் காக்கவென்றே. (௯)

### துர்க்கை

வடிபட்ட முக்குடுமி வடிவே றிரித்திட்டு
        வளைகருங் கோட்டுமோட்டு
    மகிடங் கவிழ்த்துக் கடாங்கவிழ்க் குஞ்சிறுகண்
        மால்யானை வீங்கவாங்குந்
துடிபட்ட கொடிநுண் ணுசுப்பிற் குடைந்தெனச்
        சுடுகடைக் கனலி தூண்டுஞ்
    சுழல்கண் முடங்குளை மடங்கலை யுகைத்தேறு
        சூரிப் பிணவுகாக்க
பிடிபட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற்
        பிடிக்குழாஞ் சுற்றவொற்றைப்
    பிறைமருப் புடையதோர் களிற்றினைப் பெற்றெந்தை
        பிட்டுண்டு கட்டுண்டுநின்
றடிபட்ட திருமேனி குழையக் குழைத்திட்ட
        வணிமணிக் கிம்புரிக்கோ
    டாகத்த தாகக் கடம்பா டவிக்குள்விளை
        யாடுமொர் மடப்பிடியையே. (௰)

### சத்தமாதர்கள்

#### வேறு

கடகளி றுதவுக பாய்மிசைப் போர்த்தவன்
        கவிகுவி துறுகலின் வாரியைத் தூர்த்தவன்
    கடல்வயி றெரியவொள் வேலினைப் பார்த்தவன்
        கடிகமழ் தருமலர் தார்முடிச் சேர்த்தவ

ளிடியுக வடலரி யேறுகைத் தார்த்தவ
ளெழுதரு முழுமறை நூலினிற் கூர்த்தவ
ளெயிறுகொ டெழுதெழு பாரினைப் பேர்த்தவ
ளெனுமிவ ரெழுவர்க டாண்முடிச் சூட்டுதல்
குடமொடு குடவியர் பாணிகைக் கோத்திடு
குரவையு மலதொர்ப ணுமுடிச் சூட்டருள்
குறிகொள நடமிடு பாடலுக் கேற்பவொர்
குழலிசை பழகளி பாடிடக் கேட்டுடை
மடலவிழ் துளபா ரூவெடுத் தூற்றிட
மழகளி றெனவெழு கார்முகச் சூற்புயல்
வரல்கு மிளையகு மாரியைக் கோட்டெயின்
மதுரையில் வளர்கவு மாரியைக் காக்கவே. (௧௧)

### முப்பத்துமுவர்

### வேறு

அமரில் வெர்கிடும வுநியர் பின்னிடுமொ
ரபயர் முன்னிடுவ னத்தொக்க வோடவு
மனவு மெம்முடைய திறையி தென்னமுடி
யூரச ரெண்ணிலரோர் முற்றத்து வாடவு
மகில மன்னரவர் திசையின் மன்னரிவ
ரமா ரென்னுமுளை திக்கெட்டு மூடவு
மமுத வெண்மதியின் மரபை யுன்னியுனி
யலரி யண்ணன்முழு வெப்பத்து மூழ்கவும்
குமரி பொன்னிவைகை பொருனை நன்னதிகள்
குறிகொள் விண்ணதியின் மிக்குக் குலாவவும்
குவடு தென்மலையி னிகர தின்மைசார்
குடிகொள் பொன்மலைது தித்துப்ப ராவவும்
குமரர் முன்னிருவ ரமர ரன்னையிவள்
குமரி யின்னமுமெ னச்சித்தர் பாடவும்
குரவை விம்மவர மகளிர் மண்ணிலெழில்
குலவு கன்னியர்கள் கைக்கொக்க வாடவும்



கமலன் முன்னிவிடு மாச வன்னமெழு
கடலி லன்னமுட னட்புக்கை கூடவும்
கரிய செம்மலொடு மிளைய செம்மல்விடு
கருடன் மஞ்ஞையொடொர் கட்சிக்கு ளூடவும்
கடவி விண்ணாக வடவும் வெம்முனைய
களிறு கைம்மலைசெல் கொப்பத்து வீழவும்
கனக மன்றுதட னளினி துன்னியிரு
கமல மின்னுமொரு பத்மத்துண் மேவவு
மிமய மென்னமனு முறைகொ டென்னருமெ
மிறையை நன்மருகெ னப்பெற்று வாழவு
மெவர்கொல் பண்ணவர்க ளெவர்கொல் மண்ணவர்க
ளெதுகொல் பொன்னுலகெ னத்தட்டு மாறவு
மெழில்செய் தென்மதுரை தழைய மும்முலையொ
டெழுமெ னம்மனைவ னப்புக்கொர் காவல
ரிருவ ரண்மர்பதி னொருவர் பன்னிருவ
ரெனும் விண்ணவர்கண் முப்பத்து மூவரே. (௧௨)

## ௨. செங்கீரைப்பருவம்

சீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
நெற்றியிற் றொட்டிட்டவெண்
ணீற்றினொடு புண்டரக் கீற்றுக்கு மேற்றிடவொர்
நித்திலச் சுட்டிசாத்தித்
தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத்
தலைப்பணி திருத்திமுத்தின்
றண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கொர்
தமனியக் கொப்புமிட்டுப்
பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுத மூட்டியொருகின்

பானூறு குமுதங் கனிந்தூறு தேறன்
பட்டாடை மடிநனைப்பச்
சீராட்டி வைத்தமுத் தாடும் பசுங்கிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧௩)

உண்ணிலா வுவகைப் பெருங்களி தளும்பநின்
றன்றிருத் தாதைநின்னை
யொருமுறை கரம்பொத்தி வருகென வழைத்திடமு
னோடித் தவழ்ந்துசென்று
தண்ணிலா மழலைப் பசுங்குதலை யமுதினிய
தாய்வயிறு குளிரவூட்டித்
தடமார்ப நிறைகுங் குமச்சே றளைந்துபொற்
றோடோய் தடக்கைபற்றிப்
பண்ணிலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும்
பணைத்தோ ளெருத்தமேறிப்
பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப்
பசுங்கதிர் ததும்பமணிவாய்த்
தெண்ணிலா விரியநின் றாடும் பசுந்தோகை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧௪)

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கா லிறுத்திமேருத்
தூணென்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
வெற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல
மெடுத்தடுக் கிப்புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்



முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவு
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடுஞ்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧௫)

மங்குல்படு கந்தரச் சுந்தரக் கடவுட்கு
மழகதிர்க் கற்றைசுற்றும்
வாணயன மூன்றுங் குளிர்ந்தமுத கலைதலை
மடுப்பக் கடைக்கணோக்கும்
பொங்குமதர் நோக்கிற் பிறந்தவா னந்தப்
புதுப்புணரி நீத்தமையன்
புந்தித் தடத்தினை நிரப்பவழி யடியர்பாற்
போகசா கரமடுப்ப
அங்கணெடு ஞாலத்து வித்தின்றி வித்திய
வனைத்துயிர் களுந்தளிர்ப்ப
வருண்மடை திறந்துகடை வெள்ளம் பெருக்கெடுத்
தலையெறிந் துகளவுகளுஞ்
செங்கயல் கிடக்குங் கருங்கட் பசுந்தோகை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧௬)

பண்ணறா வரிமிடற் றறுகான் மடுப்பப்
பசுந்தேற லாறலைக்கும்
பதுமபீ டிகையுமுது பழமறை விரிந்தொளி
பழுத்தசெந் நாவுமிமையாக்
கண்ணறா மரகதக் கற்றைக் கலாமஞ்ஞை
கணமுகி றதும்பவேங்கும்

கார்வரையும் வெள்ளெனவோர் கன்னிமா டத்துவளர்
கர்ப்பூர வல்லிகதிர்கால்
விண்ணாறு மதிமுயற் கலைகிழிந் திழியமுத
வெள்ளருவி பாயவெடிபோய்
மீனூர் தகட்டகட் டினவாளை மோதமுகை
விண்டொழுகு முண்டகப்பூந்
தேனாறு வருவிபாய் மதுரைமா நகவல்லி
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧எ)

வேறு

முகமதி யூடெழு நகைநில வாட
முடிச்சூ ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி
முரிப்பொ டசைந்தாட
இகல்விழி மகரமு மம்மக ரம்பொரு
மிருமக ரமுமாட
விடுநூ புரவடி பெயரக் கிண்கிணி
யொடுகிண் கிணியாடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்கு
றுவண்டு துவண்டாடத்
தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர்
குறுமை யாலிடைமற்
றகில சராசர நிகிலமொ டாடிட
வாடுக செங்கீரை
யவனி தழைந்திட மவுலி புனைந்தவ
ளாடுக செங்கீரை. (௧அ)

தசைந்திடு கொங்கை யிரண்டல வெனவுரை
தருதிரு மார்பாடத்



தாய்வரு கென்பவர் பேதைமை கண்டு
நகும்புபு னகையாடப்
பசைந்திடு ஞால மலர்ந்தமை வெளிறியொர்
பச்சடல் சொல்லவுமோர்
பைங்கொடி யொல்கவு மொல்கி நடங்கிய
பண்டி சரிந்தாட
இசைந்திடு தேவை பிணைந்தன வென்ன
விரங்கிடு மேகலையோ
டிடுகிடை யாட வியற்கை மணம்பொதி
யிதழ்வழி தேறலினோ
டசைந்தொசி கின்ற பசுங்கொடி யெனவினி
தாடுக செங்கீரை
யவனி தழைந்திட மவுலி புனைந்தவ
ளாடுக செங்கீரை. (௧௯)

பரிமள மூறிய வுச்சியின் முச்சி
பதிந்தா டச்சுடர்பொற்
பட்டமு டன்பிறை சுட்டியும் வெயிலொடு
பனிவெண் ணிலவாடத்
திருநுதன் மீதெழு குறுவெயர் வாடத்
தெய்வம ணங்கமழூர்
திருமே னியின்முழு மரகத வொளியெண்
டிக்கும்வி ரிந்தாடக்
கருவிளை நாறு குதம்பை ததும்பிய
காது தழைந்தாடக்
கதிர்வெண் முறுவ லரும்ப மலர்ந்திடு
கமலத் திருமுகமின்
னருள்விழி யொடும்வளர் கருணை பொழிந்திட
வாடுக செங்கீரை
யவனி தழைந்திட மவுலி புனைந்தவ
ளாடுக செங்கீரை. (௨௰)

வேறு

குருமணி வெயில்விட மாரகத நிழல்விரி
குன்றே நின்றாதுங்
குழலிசை பழகிய மழைமுகி லெழவெழு
கொம்பே வெம்பாச
மருவிய பிணிகெட மலைதரு மருமைம
ருந்தே சந்தானம்
வளர்புவ னமுமுணர் வருமரு மறையின்வ
ரம்பே செம்போதிற்
கருணையின் முழுகிய கயறிரி பசியக
ரும்பே வெண்சோதிக்
கலைமதி மரபிலொ ரிளமதி யெனவளர்
கன்றே யென்றோதுந்
திருமகள் கலைமக டலைமகண் மலைமகள்
செங்கோ செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (௨௧)

சங்குதி டந்தத டங்கைநெ டும்புய
றங்காய் பங்காயோர்
தமனிய மலைபடர் கொடியென வடிவுத
ழைந்தா யெந்தாயென்
றங்கணெ டும்புவ னங்கடொ றுந்தொறு
மஞ்சே லென்றோது
மபயமும் வரதமு மபயமு முடையவ
ணங்கே வெங்கோபக்
கங்குன்ம தங்கய மங்குல டங்கவி
டுங்கா மன்சேமக்
கயல்குடி புகுமொரு துகிலிகை யெனநின
கண்போ லுஞ்சாயற்

செங்கய றங்குபொ லன்கொடி மின்கொடி
செங்கோ செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (௨௨)

## ௩. தாலப்பருவம்

தென்னன் றமிழி னுடன்பிறந்த சிறுகா
லரும்பத் தீயரும்பத்
தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்கட்
கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புற் கறிக்கல்லா விளங்கன்
றுள்ளி மடித்தலநின்
றிழிபாலருவி யுவட்டெறிய வெறியுந்
திரைத்தீம் புனற்பொய்கைப்
பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற்று
தாடிக் கற்றைநிலாப்
பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த பொன்போற்
றுருடேதா லடிப்பொலன்சூட்
டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௨௩)

வீக்குஞ் சிறுபைந் துகிற்றோகை விரியுங்
கலாப மருங்கலைப்ப
விளையாட் டயரு மணற்சிற்றில் வீட்டுக்
குடிபுக் கோட்டியிருள்

சேக்குஞ் சுடர்தவழ் கழன்மணியின் செந்தீ
மடுத்த குட்டடுப்பிற்
செழுந்தாட் பவளத் துவரடுக்கித் தெளிக்கு
கறுந்தண் டேறலுலை
வார்க்குங் குடக்கூன் குழிசியிலம் மதுவார்த்
தரித்த வித்திலத்தின்
வல்சி புகட்டி வடித்தெடுத்து வயன்மா
மகளிர் குழாஞ்சிறுசோ
றாக்கும் பெருந்தண் பணைமதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௨௪)

ஓடும் படலை முகிற்படல முவரீத்
துவரி மேய்ந்துகரு
ஊறுங் கமஞ்சூல் வயிறுடைய வுளைத்துக்
கடவுட் கற்பகப்பூங்
காடுந் தரங்கக் கங்கைநெடுங் கழியு
சீத்தி யமுதிறைக்குங்
கலைவெண் மதியின் முயறடவிக் கதிர்மீன்
கற்றை நிரைத்துநறி
றூடுங் கனை வெளிக்கூட முகடு
திறந்து புறங்கோத்த
முந்நீ ருழக்கிச் சினவாளை மூரிச்
சுறவி னொடும்விளை
யாடும் பழனத் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ (௨௫)

வைறுங் காடக் கடத்துமுகர் துற்று
மதமா மடவியர்நின்



றுதறுங் குழற்பூந் துகளடங்க வோட
விடுத்த குங்குமச்செஞ்
சேறு வழுக்கி யோட்டறுக்குந் திருமா
மறுகி லரசர்பெருந்
திண்டே ரோதுங்கக் கொடிஞ்சிநெடுஞ் சிறுதே
ருருட்டுஞ் செங்கண்மழ
வேறு பொருவே விளைஞர்கட மிவுளி
கடைவாய் குதட்டவழிந்
திழியும் விலாழி குமிழியெதிர் நிரைத்துத்
திரைத்து நுரைத்தொருபே
ராறு மடுக்குந் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௨௬)

வார்க்குந் திரண்டு சுமந்தொசியு மலர்க்கொம்
பனையார் குழற்றுஞ்சு
மழலைச் சுரும்பர் புகுந்துழக்க மலர்ந்தா
துகுத்து வானதியைத்
தூர்க்கும் பொதும்பின் முயற்கலைமேற் புள்ளி
யுகளு முசுக்கலையின்
றழனிக் கொதுங்கிக் கழனியினெற் சூட்டுப்
படப்பை மேய்ந்துகிர்ப்
போர்க்குன் றேறுங் கருமுகிலை வெள்வாய்
மள்ளர் பிணையலிடும்
பொருகோட் டெருமைப் போத்தினொடும் பூட்டி
யடிக்க விடிக்குரல்விட்
டார்க்கும் பழனத் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ. (௨௭)

வேறு

காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி
கழியிற் சிறுகுழியிற்
கரையிற் கரைபொரு திரையிற் றலைவிரி
கண்டலில் வண்டலினெற்
போரிற் களங்றை சேரிற் குளங்றை
புனலிற் பொருகயலிற்
பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர்
குழையிற் பொருகயல்போய்த்
தேரிற் குமரர்கண் மார்பிற் பொலிதரு
திருவிற் பொருவில்வரிச்
சிலையிற் றிரள்புய மலையிற் புலவி
திருத்திட ஆழ்த்தமுடித்
தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்த்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. (௨௮)

சேனைத் தலைவர்க டிசையிற் றலைவர்கள்
செருவிற் றலைவர்களாற்
சிலையிற் றடமுடி தேரிற் கொடியொடு
சிந்தச் சிந்தியிடுஞ்
சோனைக் கணைமழை சொரியப் பெருகிய
குருதிக் கடலிடையே
தொந்த மிடும்பல் கவந்த மிவர்தொரு
சுழியிற் பவுரிகொள
ஆனைத் திரளொடு குதிரைத் திரளையு
மப்பெயர் மீனமுகர்
தம்மனை யாடு கடற்றிரை போல
வடற்றிரை மோதவெழுர்



தானைக் கடலொடு பொலியுந் திருமகள்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்த்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. (௨௯)

அமரர்க் கதிபதி வெளிறக் களிறெதிர்
பிளிறக் குளிறியிடா
அண்ட மிசைப்பொலி கொண்ட லுகைத்திடு
மமரிற் றமரினொடுங்
கமரிற் கவிழ்தரு திசையிற் றலைவர்கண்
மலையிற் சிறகரியுங்
கடவுட் படையொடு பிறகிட் டுடைவது
கண்டு முகங்குளிராப்
பமரத் தருமலர் மிலையப் படுமுடி
தொலையக் கொடுமுடிதாழ்
பைம்பொற் றடவரை திரியக் கடல்வயி
றெரியப் படைதிரியாச்
சமரிற் பொருதிரு மகனைத் தருமயில்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்த்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ.

முதுசொற் புலவர் தெளித்த பசுந்தமிழ்
நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள் படைத்த வசுந்தரை
கீழ்மே லாகாமே
அதிரப் பொருது கலிப்பகை ஞன்றமிழ்
நீர்கா டாளாமே
அகிலத் துயிர்க ளயர்த்து மறங்கடை
நீணீர் தோயாமே
சிதைவுற் றாசிய னற்றரு மங்குடி
போய்மாய் வாகாமே

செழியர்க் கபயரு மொப்பென நின்றனை
தாதா ரோதாமே
மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி
தாலோ தாலேலோ. (௧௧)

நகராக் கரிய குழற்சிறு பெண்பிளை
நீயோ தாயோவென்வாழ்
சயிலத் தெயிலை வளைப்பவ னென்றெதிர்
சீறா வீறோதா
கிரிகட் டமர்செய் கணத்தவர் சத்திபி
ரானே டேயோடா
நிலைகெட் டுலைய வுடற்றவு டைத்தெரா
ரானே ருகாமே
சிகாப் பொதிய மிசைத்தவ ழுஞ்சிறு
தேர்மே லேபோயோர்
சிவனைப் பொருத சமர்த்த னுகந்தருள்
சேல்போன் மாயாமே
மகரத் துவச முயர்த்த பொலன்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி
தாலோ தாலேலோ. (௧௨)

## ௪. சப்பாணிப்பருவம்

கானவட் டத்தளிம ளிளத் தொடர்ந்துத்தி
காவளையும் விட்டொரொட்டு
காட்டத்த னும்பரம வீட்டத்த னர்துஞ்ச
சன்னிருளி னுப்பணண்ட



கோளவட் டம்பழைய சேமிவட் டத்தினொடு
குப்புற்று வெற்பெட்டுமேழ்
குட்டத்தி னிற்கவிழ வூதண்ட வேதண்ட
கோதண்ட மோடுசக்ர
வாளவட் டஞ்சுழல மட்டித்து நட்டமிடு
மதுமத்தர் சுத்தசித்த
வட்டத்தி னுக்கிசைய வொற்றிக்க வைத்ததன
வட்டத்தை யொத்திட்டதோர்
தாளவட் டங்கொட்டு கைப்பாணி யொப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௧)

பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடிஞ்சிப்
பொலர்தேரொ டமரகத்துப்
பொன்மேரு வில்லியை யெதிர்ப்பட்ட ஞான்றம்மை
பொம்மன்முலை மூன்றிலொன்று
கைவந்த கொழுநரொடு முன்னைப் புணர்ச்சிக்
கருத்தா லகத்தொடுங்கக்
கவிழ்தலை வணக்கொடு நிலக்கண் வைத்திடுமொரு
கடைக்கணோக் கமுதமூற்ற
மெய்வந்த நாணினொடு நுதல்வர் தெழுங்குறு
வெயர்ப்பினொ டுயிர்ப்புவீங்கும்
விம்மிதமு மாய்நின்ற வுயிரோவ மெனவுன்று
விற்கடை விரற்கடைதழீஇத்
தைவந்த நாணினொடு தவழ்தந்த செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௨)

பூமரு வெடிப்பமுகை விண்டதண் டலையின்ற
புன்னாகநுர் தளிர்கள்கொய்தும்

பொய்தற் பிணாக்களொடு வண்டற் கலம்பெய்து
புழுதிவிளை யாட்டயர்ந்தும்
காமரு மயிற்குஞ்சு மடவனப் பார்ப்பினொடு
புறவுபிற வும்வளர்த்தும்
கார்தன்செங் கமலத்த கழுநீர் மணர்தெனக்
கண்பொத்தி விளையாடியும்
தேமரு பசுங்கிள்ளை வைத்துமுத் தாடியுந்
திரள்பொற் கழங்காடியுஞ்
செயற்கையா னன்றியு மியற்கைச் சிவப்பூறு
சேயிதழ் விரிந்ததெய்வத்
தாமரை பழுத்தகைத் தளிரொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௩௫)

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத
வெளியிற் றுவாதசாந்த
வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை
விரிந்ததமிழ் நாடுமொற்றிக்
கண்ணளிக் குஞ்சுந் தரக்கடவுள் பொலியுமறு
காற்பீட மும்மெம்பிரான்
காமர்பரி யங்கக் கவின்றங்கு பள்ளியங்
கட்டிலுந் தொட்டிலாகப்
பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப்
பசுந்தேற லூறலாடும்
பைங்குழவி பெருவிரல் சுவைத்துநீ பருகிடப்
பைந்தேற லூறுவண்கைத்
தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௩௬)



சேலாட்டு வாட்கட் கருங்கடற் கடைமடை
திறந்தமுத மூற்றுகருணை
தெண்டிரை கொழித்தெறிய வெண்டிரை நெருப்பூட்டு
தெய்வக் குழந்தையைச்செங்
கோலாட்டு நின்சிறு கணைக்காற் கிடத்திக்
குளிப்பாட்டி யுச்சிமுச்சிக்
குஞ்சிக்கு நெய்போற்றி வெண்காப்பு மிட்டுவளர்
கொங்கையிற் சங்குவார்க்கும்
பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற்
பசுஞ்சுண் ணமுந்திமிர்ந்து
பைம்பொற் குறங்கினிற் கண்வளர்த் திச்சிறு
பருஉமணித் தொட்டிலேற்றித்
தாலாட்டி யாட்டுகைத் தாமரை முகிழ்த்தம்மை
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்தபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௩௭)

வேறு

வானத் துருமொ டுடுத்திரள் சிந்த
மலைந்த பறந்தலையின்
மண்ணவர் பண்ணவர் வாளின் மறிந்தவர்
மற்றவர் பொற்றொடியார்
பானற் கணையு முலைக்குவ டும்பொரு
படையிற் படவிமையோர்
பைங்குடர் மூளையொ டும்புதி துண்டு
பசுந்தடி சுவைகாணச்
சேனப் பந்தரி னலகைத் திரள்பல
குரவை பிணைத்தாடத்
திசையிற் றலைவர்கள் பெருநா ணெய்தச்
சிறுநா ணொலிசெய்யாக்

உளத் திலயி னெடுங்கிளை தொட்டவள்
கொட்டுக சப்பாணி
குடைகிழ விற்புலி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௧௮)

சமரிற் பிறகிடு முதியரு மபயரு
மெதிரிட் டமராடத்
தண்ட தரன்செல் கரும்பக டிந்திரன்
வெண்பக டோடுடையாத்
திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற
வருணன் விடுக்கடவுட்
டேரி னுகண்டெழு வார்வில் வழங்கு
கொடுங்கோல் செங்கோலா
இமயத் தொடும்வளர் குலவெற் பெட்டையு
மெல்லைக் கல்லினிறீஇ
யெண்டிசை யுந்தனி கொண்டு புரந்து
வடாது கடற்றுறைதென்
குமரித் துறையென வாடு மடப்பிடி
கொட்டுக சப்பாணி
குடைகிழ விற்புலி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௧௯)

சென்றிடு வாளிகள் உளிகள் வாளிகள்
சூளிபி வளியெனச்
செருமலை செம்மலை முதலியர் சிந்தச்
சிந்திட வந்திபிரா
னின்றில னோடலு முன்னழு கும்மவன்
பின்னழு குங்காறு
நிலவுமி ரிந்திடு குறுநகை கொண்டு
செடுங்கயி லைக்கிரியின்
முன்றிலி லுடன் மறந்தம ராடியோர்
மூரிச் சிலைகுனியா



மூரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில
முனரிக் கணைதொட்டுக்
குன்றவி லாளியை வென்ற தடாதகை
கொட்டுக சப்பாணி
குடைகிழ விற்புலி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௨௰)

வேறு

ஒழுகிய கருணையு வட்டெழ வைத்தவ ருட்பார்வைக்
குளமெலி ழுடியர்ப வக்கடல் வற்றவ லைத்தோடிக்
குழையொடு பொருதுகொ லைக்கிளை யைப்பிணை யைச்சீறிக்
குமிழொடு பழகிம தர்த்தக யற்கண்ம டப்பாவாய்
தழைகெழு பொழிலின்மு சுக்கலை மைப்புய லிற்பாயத்
தவழின மதிகலை நெக்குரு புத்தமு தத்தோடே
மழைபொழி யிமயம யிற்பெடை கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி. (௨௧)

செழுமறை தெளியவ டித்தந மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிபெறும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகிமு ழுப்பிர சத்திர சத்தோடே
குதிகொளு நறியக னிச்சுவை நெக்கபெ ருக்கேபோன்
மழலையி னமுதரு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி. (௨௨)

## ரு. முத்தப்பருவம்

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொன்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாந்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
மூரலாய் முத்தந் தருகவே. (௪௧)

உருகி யுருகி நெக்குநெக்
குள்ளுடைந்து கசிந்திட் டகம்பூழ
முழுவ லன்பிற் பழவடியா
ருள்ளத் தடத்தி லூற்றெடுத்துப்
பெருகு பரமா னந்தவெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே யூறு நறைக்கூந்தற்
பிடியே கொடிதண் ணுசுப்பொசிய
வருகுங் குமக்குன் றிரண்டேந்து
மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை யரும்பச் சேதாம்பன்



முருகு விரியுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
மூரலாய் முத்தந் தருகவே. (௪௨)

கொழுதி மதர்வண் டுழக்குகுழற்
கோதைக் குடைந்த கொண்டலுமின்
குதலைக் கிளிமென் மொழிக்குடைந்த
குறுங்கட் கரும்புங் கூன்பிறைக்கோ
டுழுத பொலன்சீ றடிக்குடைந்த
செந்தா மரையும் பசுங்கழுத்துக்
குடைந்த கமஞ்சூற் சங்குமொழு
கொளிய கமுகு மழகுதொய்யி
லெழுது தடந்தோட் குடைந்ததடம்
பணையும் பணைமென் முலைக்குடைந்த
இணைமா மருப்புந் தருமுத்துன்
றிருமுத் தொவ்வா விகபாங்கண்
முழுதுந் தருவாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
மூரலாய் முத்தந் தருகவே. (௪௩)

மத்த மதமாக் கவுட்டொருநான்
மருப்புப் பொருப்பு மிசைப்பொலிந்த
வானத் தரசு கோயில்வளர்
சிந்தா மணியும் வடபுலத்தார்
கத்தம் வளர வளைகையர்கோ
னகரில் வளரும் வான்மணியு
நளினப் பொகுட்டில் வீற்றிருக்கு
நங்கை மனைக்கோர் விளக்கமெனப்
பைத்த சுடிகைப் படப்பாயற்
பதும நாபன் மார்பில்வளர்

பரிதி மணியு மெமக்கம்மை
பணியல் வாழி வேயீன்ற
முத்த முகந்த நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே. (௪௬)

கோடுங் குவடும் பொருதரங்கக்
குமரித் துறையிற் படுமுத்துங்
கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்து
மாடும் பெருந்தண் டுறைப்பொருநை
யாற்றிற் படுதெண் ணிலாமுத்து
மந்தண் பொதியத் தடஞ்சார
லருவி சொரியுங் குளிர்முத்தும்
வாடுங் கொடிநுண் ணுசுப்பொசிய
மடவ மகளி ருடனாடும்
வண்டற் றுறைக்கு வைத்துசெய்த்து
மணர்தாழ் சுறமென் புகைப்படல
மூடுங் குழலாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே. (௪௭)

வேறு

அடைவைத்த தத்திப் பருஉச்சுடிகை முன்றிற்
பசுங்கொடி யுடுக்கைவிழியப்
பாயிருட் படலங் கிழித்தெழு சுடர்ப்பரிதி
பரிதிக்கொழுஞ்சி மான்றேர்
மொய்வைத்த கொய்யுளை வயப்புரவி வாய்ச்செல்ல
முட்கோல் பிடித்துநெடுவோன்



முற்றத்தை யிருள்பட விழுங்குந் துகிற்கொடி
முகிலைக்கலின வடிம்புரக்கா
மைவைத்த செஞ்சிலையு மம்புலியு மோடமொடு
வான்மீன் மணந்துகந்த
வடவரை முகந்தநின் வயக்கொடி யெனப்பொலியு
மஞ்சிவர் வனாகநொச்சித்
தெய்வத் தமிழ்க்கூட றழையத் தழைத்தவ
டிருப்பவள முத்தமருளே
செல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி
திருப்பவள முத்தமருளே. (௪௮)

பின்னற் றிரைக்கடன் மறுக்குட மறந்தேக்கு
பெய்முகிற் காருடலவ்வெண்
பிறைமதிக் கூன்குயக் கைக்கடைகு ரொடுபுடை
பெயர்ந்திடை நுடக்கவொல்கு
மின்னற் றடித்துக் கரும்பொற் றொடிக்கடைகி
மெல்லியர் வெரீஇப்பெயரவான்
மீன்கணம் வெருக்கொள்ள வெடிவரால் குதிகொள்ளும்
விட்புலம் வினைபுலமெனக்
கன்னற் பெருங்காடு கற்பகக் காட்டுவளர்
கடவுண்மா கவளங்கொளக்
காமதே நுவுக்கன்று கடைவாய் குதட்டக்
கதிர்க்குலை முதிர்ந்தவிளையுஞ்
செந்நெற் படப்பைமது ரைப்பதி புரப்பவ
டிருப்பவள முத்தமருளே
செல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி
திருப்பவள முத்தமருளே. (௪௯)

சல்லோ லிடுங்கடற் றுணைக்கு வெள்ளிடை
தாரபதிகண் முன்றிறார்த்த
தமனியக் குப்பையுந் திசைமுதல்வர் தடமுடித்
தாமமுந் தலைமயங்கக்

கொங்கோ லிடுங்கைக் கொடுங்கோ லொடுங்கிரி
குறும்பன் கொடிச்சுறவுன்
கொற்றப் பதாகைக் குழாத்தினொடு மிரசதக்
குன்றினுஞ் சென்றுலாவப்
பொங்கோல வேலைப் புறத்தினொ டகத்தினிமிர்
போராழி பரிதியிரதப்
பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி
புலம்பப் புலம்புசெய்யச்
செங்கோ றிருத்திய முடிச்செழியர் கோமக
டிருப்பவள முத்தமருளே
சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்கொடி
திருப்பவள முத்தமருளே. (௧௰)

வேறு

பருவரை முதுபல தடியினி னெடுகில
னெக்கரு டக்கனியிற்
படுநறை படுகிறை கடமுடை படுவக
டுப்பவு வட்டெழவும்
விரிதலை முதலொடு விளைபுல முலையவு
ழுக்கிய முட்சுறவின்
விசையினின் வழிநறை யிடறொடி கமுகின்வி
ழுக்குலை நெக்குகவுங்
கரையெறி புணரியி னிருமடி பெருகுத
டத்தும டுத்தகடக்
களிறொடு பிளிறிட விகலிய முகிலினி
ரட்டியி ரட்டியமும்
முரசதிர் கடிநகர் மதுரையில் வளர்கிளி
முத்தம ளித்தருளே
முழுதுல குடையதொர் கவுரியர் குலமணி
முத்தம ளித்தருளே. (௧௧)



புதையிருள் கிழிதர வெழுதரு பரிதிவ
ளைத்தக டற்புவியிற்
பொதுவற வடிமைசெய் திடுவழி யடியர்பொ
ருட்டலர் வட்டணையிற்
றதைமலர் பொதுளிய களியளி குமிறுகு
ழற்றிரு வைத்தவளச்
சததள முளரியின் வனிதையை யுதவுக
டைக்கண்ம டப்பிடியே
பதுமமொ டொழுகொளி வளையுமி ழளினமு
கத்துமி டற்றுமுறப்
பனிமதி யொடுசுவை யமுதமு நுதலொடு
சொற்குத லைக்கணிநீ இ
முதுதமி ழுததியில் வருமொரு திருமகண்
முத்தம ளித்தருளே
முழுதுல குடையதொர் கவுரியர் குலமணி
முத்தம ளித்தருளே. (௧௨)

## ௬. வருகைப்பருவம்

அஞ்சிலம் போலிட வரிக்குரற் கிண்கிணி
யார்ப்பசெஞ் சீறடிபெயர்த்
தடியிடுந் தொறுநின் னலத்தகச் சுவடுபட்
டம்புலி யரம்பையர்கட
மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறையு மெந்தைமுடி
வளரிளம் பிறையுநாற
மணிநூ புரத்தவிழு மென்குரற் கோவசையு
மடநடைக் கோதொடர்ந்துன்
செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு
சிறையோதி மம்பின்செலச்

சிற்றிடைக் கொல்கெமனி மேகலை யிரங்கத்
திருக்கோயி லெனவெனெஞ்சக்
கஞ்சமுஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட
காமர்பூங் கொடிவருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண் ணிவருகவே. (௰௩)

குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்
கோதையும் மதுரமொழுகுங்
கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக்
கூர்தலம் பிடியுமறுகால்
வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ
மணங்கமழ விண்டதொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட
மாணிக்க வல்லிவில்லே
டுண்டுபடு மதிநுதற் றேரைகையொடு மனவில்பல
தொல்லுரு வெடுத்தமர்செயுர்
தொடுசிலை யெனக்ககன முகடுமுட் டிப்பூர்
துணர்த்தலை வணங்கிநிற்குங்
கண்டுபடு கன்னல்பைங் காடுபடு கூடற்
கலாபமா மயில்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண் ணிவருகவே. (௰௪)

முயல்பாய் மதிக்குழவி தவழ்சூ லடிப்பலவின்
முட்பொதி குடக்கனியொடு
முடவுத் தடர்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதிநீ ருண்டிருண்ட
புயல்பாய் படப்பைத் தடம்பொழில்க ளன்றியேழ்
பொழிலையு மொருங்கலைத்துப்
புறமூடு மண்டச் சுவர்த்தலை யிடித்துப்
புறக்கடன் மடுத்துழக்கிச்



செயல்பாய் கடற்றானை செங்கனங் கொளவம்மை
திக்குவிச யங்கொண்டநா
டெய்வக் கயற்கொடிக டிசைநிறை யெடுத்தெனத்
திக்கெட்டு முட்டவெடிபோய்க்
கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண் ணிவருகவே. (௰௫)

வடம்பட்ட நின்றுணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டுகடைவாய்
வழியும்வெள் ளருவியென நிலவுபொழி கிம்புரி
மருப்பிற் பொருப்பிடித்துத்
தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத்
தலத்தணிவ தொப்பவப்பிச்
சலராசி யேழுந் தடக்கையின் முகந்துபின்
றுணைநீ ரானிரப்பி
முடம்பட்ட மதியங் குசப்பண்டி யெனக்ககன
முகடுகை தடவியுமீன்
முத்தம் பதித்திட்ட முகபடா மெனவெழு
முகிற்படா நெற்றிசுற்றுங்
கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடிவருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண் ணிவருகவே. (௰௬)

தேனொழுகு கஞ்சப் பொலன்சீ றடிக்கூட்டு
செம்பஞ்சி யின்குழம்பாற்
றென்னமு திறைக்கும் பசுங்குழவி வெண்டிங்கள்
செக்கர்மதி யாக்கவைபொரும்
வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை
வாணிகதி யாச்சிவபிரான்

மருடகோ டரத் தடிச்சுவ டழுத்தியிடு
மாகதக் கொம்புகதிர்கான்
மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள்
வேழத்தின் மத்தகத்து
வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு
வெண்கவரி வீசம்வாசக்
காவொழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர்
கவுரியன் மகள்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கணா யகிவருகவே. (௩௭)

வேறு

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும்
வண்டன் மகளிர் சிறுமுற்றில்
வாரிக் குவித்த மணிக்குப்பை
வானா றடைப்ப வழிபிழைத்து
நடக்குங் கதிர்பொற் பரிசிலா
நகுவெண் பிறைகைத் தோணியதா
நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா
நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்
கடக்குஞ் சாத்தின் மதநதியுங்
கங்கா நதியு மெதிர்கொள்ளக்
ககன வெளியுங் கற்பகப்பூங்
காடுங் கடந்து கடல்சுருங்க
மடுக்குந் திரைத்தண் டுறைவைகை
வளநாட் டரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௩௮)

சுண்ணந் திமிர்ந்து தேனருவி
துளைந்தா டறுகாற் றும்பிபசுந்



தோட்டுக் கதவந் திறப்பமலர்த்
தோகை குடியுங் கோகைசெயுந்
தண்ணங் கமலக் கோயில்பல
சமைத்த மருதத் தச்சன்முழு
தாற்றுக் கமுகு நாற்றியிடுந்
தடங்கா வணப்பந் தரில்வீக்கும்
விண்ணம் பொதிந்த மேகபடா
மிசைத்தூக் கியபன் மணிக்கொத்து
விரிந்தா லெனக்கா னிமிர்க்குநிலை
விரியுங் குலைசெற் கற்றைபல
வண்ணம் பொலியும் பண்ணைவயன்
மதுரைக் கரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௩௯)

தகரக் குழலி னறையூறை
தருதீம் புகையுந் திசைக்களிற்றின்
றடக்கை நாசிப் புழைமடுப்பத்
தளருஞ் சிறுநுண் மருங்குல்பெருஞ்
சிகரக் களபப் பொம்மன்முலைத்
தெய்வ மகளிர் புடையிரட்டுஞ்
செங்கைக் கவரி முகந்தெறியுஞ்
சிறுகாற் கொளிந்து குடிவாங்க
முகரக் களிவண் டடைகிடக்கு
முளரிக் கொடிக்குங் கலைக்கொடிக்கு
முருந்து முறுவல் விருந்திடுபுன்
மூர னொடுவெண் ணிலவெறிப்ப
மகரக் கருங்கட் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௪௰)

து

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௬௧)

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக வருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே



மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௬௨)

## ௭. அம்புலிப்பருவம்

கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு
கலாபேத மென்னநின்னைக்
கலைமறைகண் முறையிடுவ கண்டோ வலாதொண்
கலாநிதி யெனத்தெரிந்தோ
வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின்
வழிமுத லெனக்குறித்தோ
வளர்சடை முடிக்கொன்றை தண்ணறுங் கண்ணியா
வைத்தது கடைப்பிடித்தோ
குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு
கூடப் பிறந்ததோர்ந்தோ
கோமாட்டி யிவணின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்றாயுனக்
கண்டுபடு சிறிதன் றுதலா லிவளுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௬௩)

குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்பளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றுங்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்

கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுகின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா
டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௧௪)

கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி
கிளர்நுதற் செவ்விவவ்விக்
கெண்டைத் தடங்கணு செருவிட் டிறைஞ்சக்
கிடந்தது முடைந்தமுதம்வின்
றேற்றுபுது வெண்கலை யுடுத்துமுழு மதியென
வுதித்தவமை யத்துமம்மை
யொண்முகத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்துகொண்
டோடினது நிற்கமற்றை
மாற்றவ ளொடுங்கேள்வன் மௌலியி லுறைந்தது
மறந்தனை யழைத்தபொழுதே
மற்றிவள் பெருங்கருணை சொற்றிடக் கடவதோ
மண்முழுதும் விம்முபயம்வைத்
தாற்றுமுடி யாசதவு மாமினக் குமரியுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௧௫)

விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேனுமது
வெம்பணிப் பகைவிழுங்கி
விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில்
விரியுஞ் சுடர்ப்பரிதியின்



மண்டலம் புக்கனை யிருந்தியெனி லுன்னொளி
மழுங்கிட வழுங்கிடுதிபோன்
வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேல்
மாசுணஞ் சுற்றவச்சங்
கொண்டுகண் டுஞ்சா திருப்பது மருப்பொங்கு
கோதையிவள் சேடிகளின்
குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெம்
கோமாட்டி பாலடைந்தா
லண்டபகி ரண்டமு மகண்டமும் பெறுதியா
லம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௧௬)

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி
யிவள்பெரும் புகழ்நெடுநிலா
எங்கணு நிறைந்திடவெ தங்கதனின் மென்னளி
யென்னளவு மொண்டுகொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்தகருணை
வெள்ளத் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனைகொலா
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது விடத்தமை
வைத்திடுஞ் சத்தியோன்
மற்றொரு சுதந்தர நினக்கென விலக்கலை
மதிக்கடவு ளீயுமுணர்வா
யண்ணலங் கனியானை யரசர்கோ மகளுட
னம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௧௭)

முன்பும்ப ராகசெய் பெரும்பாவ முங்கோப
முனிமாத் தொடர்சாபமு

மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு கொடுங்கூனு
மோசித்த வித்தலத்தின்
றன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல் சிவராச
தானியாய்ச் சீவன்முத்தித்
தலமுமாய்த் துவாதசாந் தத்தலமு மானதித்
தலமித்த லத்தடைதியேன்
மன்பெருங் குரவற் பிழைத்தபா வமுமற்றை
மாமடிக ளிடுசாபமும்
வளரிளம் பருவத்து நரைதிரையு முதிர்கூனு
மாற்றிடப் பெறுதிகண்டா
யன்பரென் புருகக் கசிந்திடு பசுந்தேனொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௬௮)

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர் கொட்டுங்
கொடுங்களி றிடும்போர்வையான்
குடிலகோ டீரத் திருந்துகொண் டந்நலார்
கொய்தளிர்க் கைவருடவுஞ்
செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற்
சிகையெனக் கொப்பளிக்குஞ்
சீறடிகள் கன்றிச் சிவந்திடச் செய்வதூர்
திருவுளத் தடையாதுபொற்
றம்பஞ் சுமந்தின்ற மானுட விலங்கின்
றனிப்புதல்வ னுக்குவட்டத்
தண்குடை நிழற்றுநினை வம்மென வழைத்தன
டழைத்திடு கழைக்கரும்பொன்
றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக்கொடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௬௯)



தூளி தூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின்
றொன்மரபு தழையவந்து
தோன்றிடுங் கௌரியர் குலக்கொழுந் தைக்கண்டு
துணைவிழியு மனமுநின்று
களி தூங்க வளவளாய் வாழாம லுண்ணமுது
கலையொடு மிழந்துவெறுமட்
கலத்திடு புதுக்கூழி னுக்கிரவு பூண்டொரு
களங்கம்வைத் தாயிதுவலா
லொளி தூங்கு தெளிவிசும் பினினின்றொ டொத்தவ
னொருத்தன் காத்தின்வாரி
யுண்டொ தக் கியமிச்சி னள்ளிருளி லள்ளியுண்
டோடுகின் றாயென்செய்தா
யளி தூங்கு ஞிமிறெழுந் தார்க்குங் குழற்றிருவொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௭௰)

மழைக்கொந் தளக்கோதை வம்மினென் றளவினீ
வந்திலை யெனக்கடுகலும்
வாண்முகச் செவ்விக் குடைந்தொதுங் கினவனெதிர்
வரவொல்கி யோபணிகின்றோ
னிழைக்குங்கொல் பின்றொடர்ந் தெனவஞ்சி யோதாழ்ந்
திருந்தனன் போலுமெனயா
மித்துணையு மொருவாறு தப்புவித் தோம்வெகுளி
யினியொரு பிழைப்பில்லைகாண்
டழைக்குந் துகிற்கொடி முகிற்கொடி நிரைத்துமேற்
றலம்வளர் நகிற்கொடிகளைத்
தாழ்குழலு நீவிநுதல் வெயர்வுந் துடைத்தம்மை
சமயமிது வென்றலுவலிட்
டழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுட
னம்புலீ யாடவாவே

ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௬௯)

வடகத் தெழுதாத வேதச் சித்ர
சிருக்குமிவள் சேடிகளின்
விதயத் தடத்தும் பொலிந்தவா திருவனத்
தென்னியன் றேகபடமா
னடகத் தைத்தொழி லடிக்கும் பிரான்றெய்வ
நதியொடு முடித்தல்பெற்றாய்
எங்கையில டிருவன மகிழ்ச்சிபெறி லிதுபோலொர்
சற்றவப் பேறில்லைகாண்
மாடகக் கடைதிரித் தின்னாம் பார்த்துதிர்
வடிம்புதை வருமர்சவார்
மகரயாழ் மழலைக்கு மாவங்க ணுண்டுமில்
வழங்கக் கொழுங்கோங்குதுங்
காடகப் பொற்கிழி யவிழ்க்குமது ரைத்திருவொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே. (௭௦)

## அ. அம்மானைப்பருவம்

வரைக்குல் வடவிரு வட்குட முடைத்துத்த
விறுபெரு வயிறுதர்ப்பச்
சுவார் திரட்டிக் கொடுப்பதென வுஞ்ஞுற்றொள்
கலைமதிக் கலசவமுதக்
கிரைக்கும் பெருந்தேவர் புள்ளவ் வுடைத்திட
வெடுத்தமுத கலசம்வெல்லவே



நீர்திடுவ தெனவுமுழு முத்திட் டிழைத்திட்ட
வெறிபர்நி விரையென்னவும்
விரைக்குர் தளிர்க்கைக் கொழுந்தா மரைத்துஞ்சி
மீதெழுந் தார்த்தபின்னை
வெண்மோ திமத்திரளி தெனவுங் கரும்பாறை
மீமிசைச் செஞ்சார்துவைத்
தரைக்குர் திரைக்கைவெள் ளருவிவை வைத்துறைவி
யம்மானை யாடியருளே
ஆகம் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (௭௧)

திங்கட் கொழுந்தைக் கொழுந்துபடு படர்சடைச்
செருகுதிரு மணவாளன்மேற்
செழுமணிப் பந்தரி லெடுத்தெறியு மமுதவெண்
டிரளையிற் புரளுமறுகாற்
பைங்கட் கரும்பென விசும்பிற் படர்ந்தெழும்
பனிமதி மிசைத்தாவிடும்
பருவமட மானென்வெ னம்மனைகி ளம்மனைப்
படைவிழிக் கயல்பாய்ந்தெழ
வெங்கட் கடுங்கொலைய வேழக்கு ழாமிதென
மேகக் குழாத்தைமுட்டி
விளையாடு மழகளிறு கடைவாய் குதட்டமுகை
விண்டலம் பைந்துகோத்த
அங்கட் கரும்பேர்து மபிடேக வல்லிதிரு
வம்மானை யாடியருளே
ஆகம் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (௭௨)

கன்றுறு கஞ்சக் காந்துறு சேயொளி
கலப்பச் சிவப்பூறியுங்
கருணைப் பெருக்கூற வமுதூறு பார்வைக்
கடைக்கட் கறுப்பூறிய

நன்னுற மறுஆ றகற்றுமுக மதியில்வெண்
ணகையூற நிலவூறிய
நற்றரள வம்மனையோர் சிற்குணத் தினைமூன்று
நற்குணங் கதுவல்காட்ட
உன்னூறு களிதுளும் பக்குரவ ரிருவீரு
முற்றிடு துவாதசாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குர்தொண்ட
ருழுவலன் பென்புருகநெக்
கன்னூற வுன்னே கசிந்துரு பைந்தேற
லம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (எ௫)

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலங்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோகனக மனையாட்டிபாற்
கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்குங்
காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக்
கறங்கருவி தூங்கவோங்கு
மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
மதகளிறு பிளிறியோடு
மலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
யம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (எசு)

தமரான நின்றுணைச் சேடியரி லொருசிலர்
தடக்கையி னெடுத்தாடுநின்



றானவம் மனைபிடித் தெதிர்வீசி வீசியிட
சாரிவல சாரிதிரியா
விமிராமு னம்மனையோ ராயிர மெடுத்தெறிய
நிரைநிரைய தாய்க்ககனமேல்
நிற்கின்ற தம்மைநீ பெற்றவகி லாண்டமு
நிரைத்துவைத் ததுகடுப்ப
இமிரா வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ
டெழுந்தபைந் தாதுலகெலா
மிருள்செயச் செய்துநின் சேனு பாகமெனு
மேக்கமன காபுரிக்கு
மமரா வதிக்குஞ்செய் மதுரா புரித்தலைவி
யம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (எஎ)

உயிரா யிருக்கின்ற சேடியரின் மலர்மீ
துதித்தவ ளெதிர்த்துநின்று
டொட்டியெட் டிப்பிடித் திட்டவம் மனைதேடி
யோடியா டித்திரியநீ
பெயரா திருந்துவிளை யாடுவது கண்டெர்தை
பிறைமுடி துளக்குமுடிமேற்
பெருகுசுர கங்கைநுரை பொங்கலம் மானையப்
பெண்கொடியு மாடன்மான
வெயரா மனம்புழுங் கிடுமமரர் தச்சனும்
வியப்பச் செயுந்தவளமா
மேடையுந் தண்டரள மாடமுந் தெண்ணிலா
வீசத் திசைக்களிறெலா
மயிரா வதத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
யம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடியருளே. (எஅ)

வேறு

முத்தம முத்திய வம்மனை கைம்மலர்
முளரிம ணங்கமழ
மொய்குழல் வண்டுகள் மைவிழி வண்டின்
முயங்கி மயங்கியிடக்
கொத்து மணித்திர ளிற்செயு மம்மனை
குயிலின்மி ழற்றியகின்
குழலினி சைக்குரு கிப்பனி தூங்கு
குறுந்துளி சிந்தியிட
வித்துரு மத்திலி ழைத்தவ கின்கை
விரற்பவ ளத்தளிரின்
விளைதரு மொண்ணொளி திருடப் போவது
மீள்வது மாய்த்திரிய
அத்தன் மனத்தெழு' தியவுயி ரோவிய
மாடுக வம்மனையே
அழகு தழைத்தகல் யாண சவுந்தரி
யாடுக வம்மனையே. (௭௯)

விளரிமி ழற்றளி குமிறுகு ழற்கொடி
வீசிய வம்மனைபோய்
விண்ணளி ளைத்தெழு வதுகக னத்திரு
மேனிய தானவருக்
கிளகில வுமிழ்பரு முத்தின் கோவை
யெடுத்தவர் திருமார்பு
கிடுவ கடுப்பவு மப்பரி சேபல
மணியி னியற்றியிடும்
வளரொளி விம்மிய வம்மனை செல்வது
வானவி லொத்திடவு
மணநெக் குருகப் பாமா னத்த
மடுத்த திருத்தொண்டர்க்



களிகனி யத்திரு வருள்கனி யுங்கனி
யாடுக வம்மனையே
அழகு தழைத்தகல் யாண சவுந்தரி
யாடுக வம்மனையே. (௮௰)

கைம்மல ரிற்பொலி கதிர்முத் தம்மனை
நகைமுத் தொளிதோயக்
கண்டவர் சிற்சில பிறர்சிலர் செங்கைக்
கமலச் சுடர்கதுவச்
செம்மணி யிற்செய் திழைத்தன வெனவுஞ்
சிற்சிலர் கட்கடையின்
செவ்வியை வவ்விய பின்கரு மணியிற்
செய்தன கொல்லெனவுந்
தம்மன மொப்ப வுரைப்பன மற்றைச்
சமயத் தலைவபெரூர்
தத்தமி னின்று பிதற்றுவ பொருவத்
தனிமுதல் யாமென்பார்க்
கம்மனை யாயவர் தம்மனை யானவ
ளாடுக வம்மனையே
அழகு தழைத்தகல் யாண சவுந்தரி
யாடுக வம்மனையே. (௮௧)

ஒண்ணொளி மரகத மும்முழு நீலமு
மொண்டா ளத்திரளு
மொழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை
யொருமுன் றடைவிலெடாக்
கண்ணவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற்செலுகின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்
பின்னவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலமேற்

பேச விடுப்ப கடுப்ப வன்னத்தொரு
        பெடையோ டரசவன
மன்னல் வயற்றுயின் மதுரைத் துரைமக
        ளாடுக வம்மனையே
    அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
        யாடுக வம்மனையே. (௮௨)

## ௯. நீராடற்பருவம்

விளையாடு வண்கைப் பொலன்சங் கொடும்பொங்கு
        மறிதிரைச் சங்கொலிட
    மதாரிக் கட்கயல் வரிக்கய லொடும்புரள
        மகரந்த முண்டுவண்டின்
கிளையாடு நின்றிருக் கேசபா சத்தினொடு
        கிளர்சைவ லக்கொத்தெழக்
    கிடையாத புதுவிருந் தெதிர்கொண்டு தத்தமிற்
        கேளிர்க டழீஇக்கொண்டெனத்
தளையாடு கறையடிச் சிறுகட் பெருங்கைத்
        தடங்களி றெடுத்துமற்றத்
    தவளக் களிற்றினொடு முட்டவிட் டெட்டுமத
        தந்தியும் பக்தடித்து
விளையாடும் வைகைத் தடந்துறை குடைந்துபுது
        வெள்ளநீ ராடியருளே
    விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
        வெள்ளநீ ராடியருளே. (௮௩)

திரைபொங் கிடுஞ்செங்கை வெள்வளை கலிப்பாகை
        நிலவுவிரி பவளம்வெளிற
    நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவற
        னெறிகுழற் கற்றைசரியத்



திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ
        செழுந்தரங் கக்கங்கைநுண்
    சிறுதிவலை யாப்பொங்கு மானந்த மாக்கட
        றிளைத்தாடு கின்றதேய்ப்பக்
கரைபொங்கு மறிதிரைக் கையாற் றடம்பணைக்
        கழனியிற் கன்னியர்முலைக்
    களபக் குழம்பைக் கரைத்துவிட் டள்ளற்
        கருஞ்சேறு செஞ்சேறதாய்
விரைபொங் கிடத்துங்க வேகவதி பொங்குபுது
        வெள்ளநீ ராடியருளே
    விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
        வெள்ளநீ ராடியருளே. (௮௪)

பண்ணூறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
        பாசொளி விரிப்பவர்தண்
    பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
        பருமுத்த மாகதமதாய்த்
தண்ணூறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
        தழைக்குங் கலாமஞ்ஞையாய்ச்
    சகலமுந் நின்றிருச் சொருபமென் றோவிடுஞ்
        சதுர்மறைப் பொருள்வெளியிடக்
கண்ணூறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
        களபமுங் கத்தூரியுங்
    கர்ப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியுங்
        காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணூறு மனவலாய் விளையாடு வைகைபுது
        வெள்ளநீ ராடியருளே
    விடைக்கொடி யவர்க்கொடி கயற்கொரு கொடுத்தகொடி
        வெள்ளநீ ராடியருளே. (௮௫)

தூங்குசிறை யறுகா லுறங்குகுழ னின்றுணைத்
        தோழியர்கண் மேற்குங்குமர்

பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருனைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே. (௯)

மறிக்குந் திரைத்தண் புனல்வைகை
வண்ட லிடுமண் கூடைகட்டி
வாரிச் சுமந்தோர்க் கம்மைதினை
மணிப்பொற் குடத்திற் கரைந்தூற்றும்
வெறிக்குங் குமச்சே றெக்கரிடும்
விரைப்பூர் துறைமண் போலொருத்தி
வெண்பிட் டிடவு மடித்தொருவன்
வேலை கொளவும் வேண்டுமெனக்
குறிக்கு மிடத்திற் றடந்துநீர்
குடையப் பெறினக் கங்கைதிருக்
கோட ரத்துக் குடியிருப்புங்
கூடா போலும் பொலன்குவட்டுப்
பொறிக்குஞ் சுறவக் கொடியுயர்த்தாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருனைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே. (௰)

வேறு

சொற்கொடி யோடு மலர்க்கொடி கொய்து
தொடுத்த விரைத்தொடையுஞ்
சுந்தரி நீட்டிய சிந்துர மும்மிரு
துங்கக் கொங்கைகளின்
விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை
வெள்ளங் கொள்ளைகொள
வெளியே கண்டுநின் வடிவழ கையன்
விழிக்கு விருந்துசெய



விற்கொடி யோடு கயற்கொடி வீர
னெடுத்த கருப்புவிலு
மிந்திர தனுவும் வணங்க வணங்கு
மிணைப்புரு வக்கொடிசேர்
பொற்கொடி யிமய மடக்கொடி வைகைப்
புதுநீ ராடுகவே
பொருனைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே. (௧௧)

கொள்ளைவெ ளருவி படிந்திடு மிமயக்
கூந்தன் மடப்பிடிபோற்
கொற்கைத் துறையிற் சிறைவிரி யப்புனல்
குடையு மனப்பெடைபோ
றெள்ளமு தக்கட னடுவிற் றோன்று
செழுங்கம லக்குயில்போற்
றெய்வக் கங்கைத் திரையூ டெழுமொரு
செம்பவ ளக்கொடிபோற்
கள்ளவிழ் கோதையர் குழலிற் குழலிசை
கற்றுப் பொற்றருவிற்
களிநற வுண்ட மடப்பெடை யோடு
கலந்து முயங்கிவரிப்
புள்ளுறை பூம்பொழின் மதுரைத் துரைமகள்
புதுநீ ராடுகவே
பொருனைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே. (௧௨)

## ௯. ஊசற்பருவம்

---

ஒள்ளொளிய பவளக் கொழுங்கால் மிசைப்பொங்கு
மொழுகொளிய வயிரவிட்டத்
தூற்றுஞ் செழுந்தண் ணிலாக்கால் விழுந்தனைய
வொண்டரள வடம்வீக்கியே
அள்ளிட வழிந்துசெற் றெளிதுளும் புங்கிரண
வருணரத் னப்பலகைபுக்
காடுமின் றோற்றமப் பரிதிமண் டலம்வளா
ரரும்பெருஞ் சுடரையேய்ப்பத்
தென்னுசுவை யமுதங் கனிந்தவா னந்தத்
திரைக்கடன் மடுத்துழக்குஞ்
செல்வச் செருக்கர்கண் மனக்கமல நெக்கபூஞ்
சேக்கையிற் பழையபாடற்
புன்னொலி யெழக்குடி புகுந்தசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௩)

விற்பொலிய நிலவுபொழி வெண்ணித் திலம்பூண்டு
விழுதுபட மழகதிர்விடும்
வெண்டரள வூசலின் மிசைப்பொலிவ புண்டரிக
வீட்டிற் பொலிந்துமதுராச்
சொற்பொலி பழம்பாடல் சொல்லுமின் றவளுநின்
சொரூபமென் பதுமினவிலாத்
தூமதி மண்டலத் தமுதமா யம்மைநீ
தோன்றுமின் றதும்விரிப்ப
எற்பொலிய வொழுகுமுழு மாணிக்க மணிமுகப்
பேதிமழை முகிறவழ்வதல்



வெறிசுடர்க் கடவுடிரு மடியிலவன் மடமக
ளிருந்தவிளை யாடலேய்க்கும்
பொற்புரிசை மதுரா புரிப்பொலி திருப்பாவை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௪)

உருகிய பசும்பொன் னசும்பவெயில் வீசபொன்
னூசலை யுதைத்தாடவு
மொண்டளி ரடிச்சுவ டுறப்பெறு மசோகூற
வொழுகுமலர் பூத்துதிர்வதுன்
திருமுனுரு வங்கார் தெரிவையார் நிற்பது
தெரிந்திட நமக்கிதுவெனுச்
செஞ்சிலைக் கன்னலொரு வன்றொடை மடக்காது
தெரிகணைகள் சொரிவதேய்ப்ப
எரிமணி குயின்றபொற் செய்குன்று மழகதி
ரெறிப்பவெழு செஞ்சோதியூ
டிளமதி யிமைப்பதுன் றிருமுகச் செவ்விவேட்
டெழுநாத் தலைத்தவமவன்
புரிவது கடுக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௫)

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக்
கலர்தாடு பொன்னூசலக்
கடவுடிரு நோக்கத்து நெக்குருகி யிடமின்
கடைக்கணோக் கந்துமற்றச்
செங்கண்விடை யண்ணலுமு மொக்கள் கரைந்துருகு
செய்கையவர் சித்தமேபொற்
றிருவூச லாவிருந் தாடுமின் றுயெனுஞ்
செய்தியை யெடுத்துரைப்ப

அங்கணெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவே
ரடியிற் பழுத்தபலவின்
னெரிபொற் சுளைக்குடக் கனியுடைந் தூற்றுதே
னருவிபில மேழுமுட்டிப்
பொங்கிவழி பொழின்மதுரை மதுரைநா யகிதிருப்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௬)

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுக்பொற்
றிருவூசல் பாடியாடச்
சிவபிரான் றிருமுடி யசைப்பமுடி மேற்பொங்கு
செங்கனா வரசுகிலம்மைத்
தார்க்கும் பணாடவி யசைப்பச் சராசரமு
மசைகின்ற தம்மனையசைந்
தாடலா லண்டமு மகண்டபகி ரண்டமு
மசைந்தாடு கின்றதேய்ப்பக்
கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ்நறும் புகைவிண்மிசைக்
கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலங்
கைக்கொள விருட்படலம்வான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௭)

தேர்க்கோல மொருநின் றிருக்கோல முங்கண்டு
சிந்தனை புழுங்குகோபத்
தீயவிய மூண்டெழுங் காமா னலங்கான்ற
சிகையென வெழுந்துபொங்குந்
தார்க்கோல வேணியர்த முள்ளமென வேபொற்
றடஞ்சிலையு முருகியோடத்
தண்மதி முடித்ததும் வெள்விடைக் கொண்மணி
தரித்ததும் விருத்தமாகக்
கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர்
செங்களத் தேற்றலமரக்
கட்கணை தூக்குங் கரும்புருவ வில்லொடொரு
கைவிற் குனித்துநின்ற
போர்க்கோல மேதிரு மணக்கோல மானபெண்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௮)

குழியும் பசுங்கண் முசுக்கலை வெரீஇச்சிறு
குறும்பலவி னெடியபாரக்
கொம்பொடி படத்தூங்கு முட்புறக் கனியின்
குடங்கொண்டு நீந்தமடைவாய்
வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்காவின்
வள்ளுகிர்க் கருவிரற்கூன்
மந்திக ளிருந்தேகும் விசையினில் விசைந்தெழு
மரக்கோடு பாயவயிறு
கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ
கிளைத்தவண் டுழுபைந்துழாய்க்
கேசவன் கால்வீச வண்டகோ ளகைமுகடு
கீண்டுவெள ளருவிபொங்கிப்
பொழியுந் திறத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௯)

ஒல்குங் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல்
லோதிவண் டார்த்தெழப்பொன்
னூசலை யுதைந்தாடு மளவின்மலர் மகளம்மை
யுன்னடிக் கூன்பிறைதழீஇ

மல்குஞ் சவட்டினை வலம்புரிக் கீற்றிநகொல்
வாளியென் நசியாடி
மணிமுறுவல் கோட்டின் வளைக்கா முடிக்கொரு
வளைக்கெடு காண்வழங்கப்
பில்கும் குறும்பனிக் கூதிர்க் குடைக்கெளைப்
பிரசதா ரைம்பாற்கிளைம்
பேதையர்க ளூட்டும் கொழும்புகை மடுத்துமென்
பெடையொடு வரிச்சுரும்பர்
புல்குந் தடம்பணை புடைத்தமது ரைத்தலைவி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௮)

கொண்செய்த செழுமணித் திருவூச லரமகளிர்
கொண்டாட வாடுந்தொறுங்
குறுமுறுவ லொடுகில வருந்துஞ் சகோரமாய்க்
கூர்தலங் கற்றைசுற்றத்
தென்செய்த மழலைக் கரும்பராய் மங்கைநின்
செங்கைப் பசுங்கிள்ளையாய்த்
தேவதே வன்பொலிவ தெவ்வுருவு மாமவன்
திருவுருவின் முறைதெரிப்ப
மின்செய்த சாயலவர் மேற்றலைத் தாடிய
விளைப்புனலி னருவிருடையும்
வெள்ளாளை குங்குமச் செஞ்சேறு காறமட
மென்பிடியை யஞ்சிநிற்கும்
பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல்வி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௯)

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறைமிட்
டிரைத்திடு மரிச்சிலம்பு



மிறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொ
னெழுதுசெம் பட்டுவீக்குந்
திருவிடையு முடைதார மும்மொட் டியாணமுஞ்
செங்கைப் பசுங்கிள்ளையுந்
திருமூலத் தானவுத் தரியமும் மங்கலத்
திருநாணு மழகொழுகநின்
றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில
வரும்புகுறு நகையுநான
ஆனந்த மாக்கடல் குடைந்துகுழை மகரத்தோ
டமராடு மோடரிக்கட்
பொருகயலும் வடிவழகு பூர்தகத் தாவல்லி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௧௦)

மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

மதுரை

# மீனாக்ஷியம்மைகுறம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1- JUL 1925
MADRAS

நூல் - ௩

உ

திருச்சிற்றம்பலம்

மதுரை

# மீனாக்ஷியம்மைகுறம்

காப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கார்கொண்ட பொழின்மதுரைக் கர்ப்பூர வல்லிமணங்
        கமழுந் தெய்வத்
தார்கொண்ட கருங்குழலங் கயற்கணா யகிகுறஞ்சேர்
        தமிழாற் பாட
வார்கொண்ட புகர்முகத்தைக் காத்தொருகோட் டிருசெவிமும்
        மதத்து நால்வாய்ப்
போர்கொண்ட கவுட்சிறுகட் சித்திவிநா யகன்றுணைத்தாள்
        போற்று வாமே.

சிந்து

பூமருவிய பொழிறிகழ்மதுரா
புரிமருவிய வங்கயற்கணம்மை
தேமருவிய மதிதவழ்குடுமித்
தென்பொதியக் குறத்திநானம்மே. (க)

செந்நென்முத்துங் கன்னன்முத்துமொளி
திகழ்மதுரை யங்கயற்கணம்மை
பொன்னுமுத்துஞ் சொரியும்வெள்ளருவிப்
பொதியமலைக் குறத்திநானம்மே. (உ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

செண்டிருக்கும் வடவரையிற் சேலிருக்கு மாசிருக்குந்
 தென்ன ரீன்ற
கண்டிருக்கு மதுரமொழிக் கனியிருக்குந் துவரிதழுங்
 கயற்கட் பாவை
வண்டிருக்கு நறைக்கமல மலரிருக்கும் பரிபுரத்தாண்
 மனத்தான் வைத்துக்
கொண்டிருக்குந் தமிழ்முனிவன் குடியிருக்கும் பொதியமலைக்
 குறத்தி நானே. (௩)

### சிந்து

மங்கைகுங்குமக் கொங்கைபங்கயச்
செங்கையங்கயற் கண்ணினாள் மறைபண்ணினாள்
பங்கனைக்கழ லங்கனைச்சொக்க
லிங்கனைக்கூடி மேவுவாய் கொல்லிப்பாவையே. (௪)

### மேற்படி வேறு

வஞ்சியேயப ரஞ்சியேமட மயிலேவரிக் குயிலே
கொஞ்சியேபழி யஞ்சியாருனைக் கூடுவாரினி யம்மே. (௫)

### மேற்படி வேறு

புழுகாலே தரைமெழுகு பிள்ளையார்வை
பொற்கோல மிட்டுநிறை நாழிவையாய். (௬)

### மேற்படி வேறு

ஆழிகைதா வழகாருமங் கயற்கணம்மை பங்க
ரழகியசொக்க ரருள்புரிவருன் பான்மருவி யம்மே. (௭)

### மேற்படி வேறு

பேசு மென்குறி மோச மென்றிடி
லார்சொ லும்பரி யாசமே
வாச மென்குழ லாய் சவுந்தர
மாறர் வந்தனை வாரம்மே. (௮)



### மேற்படி வேறு

நங்கை நீகரு துங்குறி சொல்லவுன்
செங்கை தனைக்கொடு வாவெங்க
ளங்க யற்கண்ணி பங்க ரருட்சொக்க
லிங்க ரினியனை வாரம்மே. (௯)

### மேற்படி வேறு

தூசுமொரு காசும்வையுண் ணேசம்வரவே சொல்லுநா
னீசர்கயி லாசர்மது ரேசருனைச்சேர் வாரம்மே. (௰)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கைக்குறியின் முகக்குறிநன் றிடத்தெழுந்த கவுளிநன்று
 கன்னி மார்வந்
திக்குறிநன் றென்கின்று றிடக்கண்ணூந் துடிக்கின்ற
 திதன்மே லுண்டோ
பொய்க்குறிய சிறுமருங்குற் பூங்கொடிநீ யங்கயற்கட்
 பூவை மாதின்
மெய்க்குறியும் வளைக்குறியு முலைக்குறியு மணிந்தவர்தோண்
 மேவு வாயே. (௧௧)

### சிந்து

கடமலைக்கும் வெம்மலையாங் கைம்மலையு மாயிரவாய்ப்
படமலைக்கு மரவாசும் பரித்தருளும் பார்மடந்தை
குடமலைக்குந் தடமுலையாங் குலமலைக ளிரண்டெனவும்
வடமலைக்குந் தென்பொதியு மலயமலை யென்மலையே. (௧௨)

திங்கண்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குமுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே. (௧௩)

கன்னமதம்பெய் துறங்குகொலைக் களிறுகிடந்து பிளிறுமலை
தென்னர்தமிழும் பசுங்குழவித் தென்றற்கொழுந் துந் திளைக்குமலை
அன்னம்பயிலும் பொழிற்கூட லறலங்கூந்தற் பிடியாண்ட
பொன்னங்குடுமித் தடஞ்சாரற் பொதியமலையென் மலையம்மே. ( )

மந்தமா ருதம்வளரு மலையெங்கள் மலையே
வடகலைதென் கலைபயிலு மலையெங்கள் மலையே
கந்தவேள் விளையாடு மலையெங்கள் மலையே
கனகவ மணிவிளையு மலையெங்கள் மலையே
இந்தமா நிலம்புரக்கு மங்கயற்கண் ணம்மை
இன்பமுறுந் தென்பொதிய மலையெங்கள் மலையே. (க௰)

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடு மொருபாற்
சினப்புலியு மடப்பிணையுந் திளைத்திடுமங் கொருபால்
வெங்காடி மரையினொடும் விளையாடு மொருபால்
விடவரவு மடமயிலும் விருந்தயரு மொருபா
லங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீ
ழும்பொன்முடி சூடுமெங்க ளபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவுங் கும்பமுனி பயிலுந்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கண்மலை யம்மே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கச்சைப் பொருது மதர்த்தெழுந்து கதிர்த்துப்
பணைத்த மணிக்கொங்கைப்
பச்சைப் பசுங்கொம் பங்கயற்கட் பாவை
பயந்த வாதிருதோட்
செச்சைப் படலை நறுங்குஞ்சிச் சிறுவன்
றனக்குப் பெருந்தடங்கட்
கொச்சைச் சிறுமி தனைக்கொடுத்த குறவர்
குலமென் குலமம்மே (கள)



சிந்து

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போங்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம் [யோம்
பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே யுடுப்போஞ்
செழுந்தினையு நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போஞ்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போ
மெழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போ
மெங்கள்குறக் குடிக்கடுத்த வியல்பிதுகா ணம்மே. (கஅ)

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை யிணங்கும்
புற்றினைகல் லுரற்பாறை முன்றிறெறு முணங்குங்
கல்விடரில் வரிவேங்கை கடமானொ டுறங்குங்
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்குஞ்
சில்வலையும் பல்வாரு முன்னிறப்பிற் றூங்குஞ்
சிறுதுடியும் பெருமுரசுந் திசைதொறுமின் றேங்குங்
கொல்லையின்மான் பிணையுமிளம் பிடியும்விளை யாடுங்
குறிச்சியெங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வெள்ளிமலைக் குறவன்மகன் பழனிமலைக் குறவனெங்கள்
வீட்டிற் கொண்ட
வள்ளிதனக் கேகுறவர் மலையாட்சி சீதனமாய்
வழங்கி னூரற்
பிள்ளைதனக் கென்னையிலை யனைக்குமொரு துணையிலையென்
பிறகே வந்த
கள்ளிதனைக் கொண்டவன்றே குறவனுக்கு மெனக்குமிலை
கஞ்சி தானே. (உ௰)

## சிந்து

கூடல்புன வாயில்கொடுங் குன்றுபரங் குன்று
குற்றால மாப்பனூர் பூவணநெல் வேலி
ஏடகமா டானைதிருக் கானப்பேர் சுழிய
விராமேசந் திருப்புத்து ரிவைமுதலாந் தலங்க
ளாடியெங்க ளங்கயற்கண் ணாண்டதமிழ்ப் பாண்டி
நன்னாடும் பிறநாடு மென்னாட தாகக்
காடுமலை யுந்திரிந்து குறிசொல்லிக் காலங்
கழித்தேனென் குறவனுக்குங் கஞ்சிவரா தம்மே. (௨௧)

பொற்றொடிவள் ளிக்கிளைய பூங்கொடியென் பாட்டி
பூமகண்மா யவன்மார்பிற் பொலிவளென்று சொன்னாள்
மற்றவள்பெண் களிலெங்கள் பெரியதாய் கலைமான்
மலரயனார் திருநாவில் வாழ்வளென்று சொன்னாள்
பெற்றவெங்கள் நற்றாயுஞ் சுந்தரியிந் திரன்றேவி
பெறுமென்றாள் பின்னெங்கள் சிறியதா யம்மே
சொற்றகுறிக் களவில்லையென் கன்னிமா ரறியச்
சொன்னேன்பொய் யலாங்கள் சொன்னதுசொன் னதுவே. ()

முன்னொருநா ளம்மைதடா தகைபிறந்த நாளின்
முகக்குறிகண் டவளுலக முழுதாளு மென்றேன்
பின்னொருநாள் கைக்குறிபார்த் தம்மையுனக் கெங்கள்
பிஞ்ஞகர்தா மணவாளப் பிள்ளையென்று சொன்னே
னன்னையவள் மெய்க்குறிக ளனைத்தையும்பார்த் துனக்கோ
ராண்பிள்ளை யுண்டுபிறந் தரசாளு மென்றேன்
சொன்னகுறி யெல்லாமென் சொற்படியே பலிக்குந்
தொகுத்துநீ நினைந்தகுறி யினிச்சொலக்கே ளம்மே. (௨௩)



## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஒருகாலங் கஞ்சியுமென் குஞ்சிதலைக் கெண்ணெயுமோ
ருடுப்பு மீந்தாற்
பொருகால வேற்கண்ணாய் மனத்துநீ நினைந்தவெலாம்
புகல்வன் கண்டாய்
வருகால நிகழ்காலங் கழிகால மூன்றுமொக்க
வகுத்துப் பார்த்துத்
தருகாலந் தெரிந்துரைப்ப தெளிதரிதன் றெங்கள்குறச்
சாதிக் கம்மே. (௨௪)

## சிந்து

குங்குமஞ்சந் தனக்குழம்பிற் குழைத்துத்தரை மெழுகிக்
கோலமிட்டுக் குங்குலியக் கொழும்புகையுங் காட்டிச்
செங்கனக நவமணிக டிசைநான்கும் பரப்பித்
தென்மேலை மூலைதனிற் பிள்ளையாரும் வைத்துப்
பொங்குநறு மலரறுகோ டைங்கரர்க்குச் சாத்திப்
புழுகுநெய்வார்த் திடுவிளக்கு நிறைநாழி வைத்து
மங்கையருக் கரசியெங்க ளங்கயற்கண் ணம்மை
மனத்துள்வைத்து நினைத்தகுறி யினிச்சொலக்கே ளம்மே. ()

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லையென் முன்னேவை யம்மே
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
யிரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்னாமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தா
ருனக்கினியென் வினைகரும மிமைப்பினிற்கை கூடு
மென்னாணை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே. (௨௬)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செல்லவர் திட்ட போது நிமித்தான் றிடத்தெ ழுந்த
பல்லியும் வாத்தே சொல்லும் பத்தினிப் பெண்கள் வாயாற்
சொல்லிய வாய்ச்சொ லன்றித் தம்மது நல்ல தேகா
ணல்லது கிளைகூட் டும்புற் ருக்கைதனிச் சுழகி தம்மே. (௨௭)

## சிந்து

கொண்டுவா வம்மேகை கொண்டுவா வம்மே
 கொழுங்கனக நவமணிக ளணிந்திடுமுன் கையே
வண்டுசுலா மலர்கொய்ய வருந்திடுமுன் கையே
 வருந்ினர்க்கு சவந்தியுஞ் சொரிந்திடுமுன் கையே
புண்டரிகம் பூத்தழகு பொலிந்திடுமுன் கையே
 புழுகுநறுசெய்ச் சொக்கர்புயர் தழுவிடுமுன் கையே
அண்டர்நாய கியெங்கண் மதுரைநா யகியை
 அங்கயற்கண் ணுயகியைக் கும்பிடுமுன் கையே. (௨௮)

அம்மேநின் செங்கையைநின் கொங்கையில்வைத் ததுதா
 னபிடேகச் சொக்கருனை யணைவரென்ற குறிகா
ணிம்மேலைத் திகையினிற்கை யெடுத்ததுவு மவர்தா
 மின்றந்திப் பொழுதினில்வக் தெய்துவரென் றதுகாண்
கைம்மேற்கை கட்டியதுந் தப்பாம லுனக்குக்
 கைகூடு நினைத்த காரியமென் றதுகாண்
செம்மேனி மணிவயிற்றிற் கைவைத்த தினிநீ
 சிறுவர்புதி னறுவரையும் பெறுவையென்ற தம்மே. (௨௯)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அங்கைத் தலத்துத் தனரேகை யுளவில் செல்வர் தருமுனது
செங்கைத் துடிநேன் மதுரேசர் செம்பொற் புயத்திற் சேர்குமா
லிங்கிப் படிபுத் திரரேகை யெவர்க்கு மிலையிப் படிதோளிற்
றங்கு மறுவங் கயற்கணம்மை தன்னே டிருக்கத் தருமம்மே. (௩௰)



## சிந்து

பொன்பொதியுந் துகிலெனவெண் புயலொடுதண் பனிமூடுந்
தென்பொதிய மலையாட்டி பேரைச்சொல்லாய் பாடநான். (௩௧)

பலாதிகள் புணர்ந்தநதிப் பதியையணை யாதவைகைக்
குலாதித்தன் டுறைச்செல்வி பேரைச்சொல்லாய் பாடநான். (௩௨)

அன்பாண்டு கல்வலிதென் றவ்வைபா டியவெங்க
டென்பாண்டி நாட்டாடன் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௩)

பொன்மாடஞ் சூழ்ந்தகரும் புயலமலன் போர்வைநிகர்
பன்மாடக் கூடலாள் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௪)

எண்டிசைக்கும் வேம்பாயெம் மிறையவர்க்குக் கரும்பாகும்
வண்டிசைக்குந் தாரினள் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௫)

இனவட்ட மிடும்பரிதித் திண்பரிமண் பரியாக்குங்
கனவட்ட வாம்பரியான் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௬)

திக்கயங்கள் புறங்கொடுப்பத் திசையெட்டுந் திறைகொண்ட
கைக்கயத்தை மேற்கொண்டான் பேரைச்சொல்லாய் பாடநான். ()

ஆனேற்றுங் கொடியானை யைங்கணையான் வென்றிடவம்
மீனேற்றின் கொடியுயர்த்தாள் பேரைச்சொல்லாய் பாடநான். ()

இனியானை யிலையாசர்க் கென்றுதிசை யெட்டுமொரு
தனியானை செலுத்தினள் பேரைச்சொல்லாய் பாடநான். (௩௯)

கருமலையச் செருமலையுங் கைம்மலைய மன்னர்தொழ
வருமலையத் துவசனருண் மடக்கொடியைப் பாடுவனே. (௪௰)

விண்புரக்குங் கதிர்மௌலி முடிகவித்து வெண்குடைக்கீழ்
மண்புரக்கு மபிடேக வல்லியைநான் பாடுவனே. (௪௧)

வெம்புருவச் சிலைகுனித்து விழிக்கணைக ளிரண்டெடுத்தே
மொய்ம்புருவத் தொடுத்தெய்த மொய்குழலைப் பாடுவனே. (௪௨)

வான்கொண்ட முடைத்தலையிற் பலிகொண்டார்க் குலகேழுந்
தான்கொண்ட வரசாட்சி தந்தாளைப் பாடுவனே. (௪௩)

வானவர்கோன் முடிசிதறி வடவரையிற் கயலெழுது
மீனவர்கோன் றனைப்பயந்த மெல்லியலைப் பாடுவனே. (௪௪)

கான்மணக்குஞ் சடைக்காட்டிற் கவின்மணக்குங் கடிக்கொன்றைத்
தேன்மணக்கும் பிறைநாறுஞ் சீறடியைப் பாடுவனே. (௪௫)

எவ்விடத்துந் தாமாகி யிருந்தவருக் கருந்தவரும்
வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே. (௪௬)

வைத்தபகி ரண்டமெனு மணற்சிற்றி லிழைத்திழைத்தோர்
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப் பாடுவனே. (௪௭)

இலக்குறியுங் குணமுநமக் கென்பார்க்கு விளக்குறியு
முலக்குறியு மணிந்திட்ட மொய்குழலைப் பாடுவனே. (௪௮)

ஒன்றாகி யனைத்துயிர்க்கு முயிராகி யெப்பொருளு
மன்றாகி யவையனைத்து மானாளைப் பாடுவனே. (௪௯)

பாசிருக்குந் தமிழ்க்கூடற் பழியஞ்சிச் சொக்கருட
னாசிருக்கு மங்கயற்கண் ணாரமுதைப் பாடுவனே. (௫௰)

## கோச்சகக்கலிப்பா

சீர்வாழி தென்மதுரை நின்மலனா ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே. (௫௧)

மீனாக்ஷியம்மைகுறம்
முற்றிற்று.

---

மதுரைமீனாக்ஷியம்மை

# இரட்டைமணிமாலை

MADRAS

P. R. RAMA IYAR AND CO.,

PRINTERS



திருச்சிற்றம்பலம்

## மதுரைமீனாக்ஷியம்மை

# இரட்டைமணிமாலை

### நேரிசைவெண்பா

கார்பூத்த கண்டத்தெங் கண்ணுதலார்க் கோரேழு
பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பே—சீர்கொள்
கடம்பவனத் தாயேநின் கண்ணருள்பெற் றாரே
யிடம்பவனத் தாயே யிரார். (௧)

### கட்டளைக்கலித்துறை

இராநின் றதுஞ்சொக்க ரெண்டோள் குழைய விருகுவட்டாற்
பொராநின் றதுஞ்சில பூசலிட் டோடிப் புலவிரலர்
தராநின் றதுமம்மை யம்மண வாளர் தயவுக்குள்ளாய்
வராநின் றதுமென்று வாய்க்குமென் னெஞ்ச மணவறையே. (௨)

### நேரிசைவெண்பா

மதம்பரவு முக்கண் மழகளிற்றைப் பெற்றுக்
கதம்பவனத் தேயிருந்த கன்னி—மதங்க
னடியார்க் குடம்பிருகூ றாக்கினான் பார்க்கிற்
கொடியார்க் கிலைகொல் குணம். (௩)

### கட்டளைக்கலித்துறை

குணங்கொண்டு நின்னைக் குறையிரந் தாகங் குழையப்புல்லி
மணங்கொண் டவரொரு வாமங்கொண் டாய்மது ரேசரவர்
பணங்கொண் டிருப்ப தறிந்துகொள் ளாயம்மை பைந்தொடியார்
கணங்கொண் டிறைஞ்ச நினக்குமுண் டாற்பொற் கனதனமே. (௪)

நேரிசைவெண்பா

கணமிருக்குங் கந்தரர்க்குன் கன்னிநா டந்தென்
றிணமிரப்ப தோவொழியார் தேனே—பணவனுக்காப்
பாமாறி யார்க்குனைப்போற் பாரத் தனமிருந்தாற்
றூமாறி யாடுவரோ தான். (௫)

கட்டளைக்கலித்துறை

தானின் றுலகு தழையத் தழைந்த தமிழ்மதுரைக்
கானின்ற பூங்குழற் கர்ப்பூர வல்லி கருங்கட்செய்ய
மீனின் றுலாவி விளையா டுவதுவிண் ணுறலைய
வானின்ற தோர்வெள்ளி மன்றூடு மானந்த மாக்கடலே. (௬)

நேரிசைவெண்பா

கடம்பவன வல்லிசெல்வக் கர்ப்பூர வல்லி
மடந்தை யபிடேக வல்லி—நெடுந்தகையை
யாட்டுவிப்பா ளாடலிவட் காடல்வே றில்லையெமைப்
பாட்டுவிப்ப துங்கேட் பதும். (௭)

கட்டளைக்கலித்துறை

பதுமத் திருவல்லி கர்ப்பூர வல்லிநின் பாதபத்ம
மதுமத் தொடுந்தம் முடிவைத்த வாமது ரேசாவ
ரிதுமத்தப் பித்தமன் றேழைமை முன்ன ரிமையவர்கைப்
புதுமத் தினைப்பொற் சிலையென் றெடுத்த புராந்தகர்க்கே. (௮)

நேரிசைவெண்பா

தருமே கடம்பவனத் தாயேநின் சிற்றி
லகமேயென் னெஞ்சகமா தானன்—மகிழ்நரொடும்
வாழாநின் றூயிம் மனையிருண்மூ டிக்கிடப்ப
தேழாய் விளக்கிட் டிரு. (௯)

கட்டளைக்கலித்துறை

இரைக்கு நதிவைகை பொய்கைபொற் றாமரை யீர்ந்தண்டமிழ்
வரைக்கு மலைதென் மலயம தேசொக்கர் வஞ்சநெஞ்சைக்



கரைக்குங் கனகள்வி கர்ப்பூர வல்லிக்குக் கற்பகத்தார்
நிரைக்கும்பொற் கோயி றிருவால வாயுமென் னெஞ்சமுமே. (௰)

நேரிசைவெண்பா

நெஞ்சே திருக்கோயி னீலுண் டிருண்டகுழன்
மஞ்சேந் தபிடேக வல்லிக்கு—விஞ்சி
வருமந் தகாவென் வழிவருதி யாலிக்
கருமந் தகாவுன் கருத்து. (௧௧)

கட்டளைக்கலித்துறை

கருவால வாய்நொந் தறமெலிந் தேற்கிரு கான்மலரைத்
தருவால வாய்நின்ற தொன்றுத வாய்வன் றடக்கைக்குநேர் [ண்ட
பொருவால வாயெட்டுப் போர்க்களி றேந்துபொற் கோயில்கொ
திருவால வாய்மருந் தேதென்னர் கோன்பெற்ற தெள்ளமுதே. ()

நேரிசைவெண்பா

தென்மலையுங் கன்னித் திருநாடும் வெள்ளிமலைப்
பொன்மலைக்கே தந்த பொலங்கொம்பே—நின்மா
முலைக்குவடு பாய்ச்சுவடு முன்காய மாலம்
மலைக்குவடு வன்றே மணம். (௧௩)

கட்டளைக்கலித்துறை

மணியே யொருபச்சை மாணிக்க மேமருந் தேயென்றுன்னைப்
பணியேன் பணிந்தவர் பாலுஞ்செல் லேனவர் பாற்செலவுந்
துணியேன் றுணிந்ததை யென்னுரைக் கேன்மது ரைத்திருநாட்
டணியே யனைத்துயிர்க் கும்மனை நீயென் றறிந்துகொண்டே. (௧௪)

நேரிசைவெண்பா

கொண்டைச் செருக்குங் குறுநகையு நெட்டயிற்கட்
கெண்டைப் பிறக்கமும்வாய்க் கிஞ்சுகமுங்—கொண்டம்மை
கற்பூர வல்லி கருத்திற் புகப்புகுந்தா
ணற்பூர வல்லியுமென் னு. (௧௫)

### கட்டளைக்கலித்துறை

நாவுண்டு செஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாத் தொடுத்துப் புனைவதற்கே. (௧௬)

### நேரிசைவெண்பா

புனைந்தான் கடம்பவனப் பூவைசில பூவை
வனைந்தானென் வாயும் மனமுந்—தினந்தினமும்
பொற்பதமே நாறுமவள் பூம்பதமன் றோமது
சொற்பதமே நாறுஞ் சுவை. (௧௭)

### கட்டளைக்கலித்துறை

சுவையுண் டெனக்கொண்டு சூடுதி யான்மற்றென் சொற்றமிழ்ச்
நவையுண் டெனவற நாணுதி போது நகைத்தெயின்மூன் [கோர்
றவையுண் டவரோ டருட்கூடல் வைகுமம் மேசொற்பொருட்
செவையுண்டு குற்ற மவையுண்டு நீவி ரிருவிர்க்குமே. (௧௮)

### நேரிசைவெண்பா

விண்டிருந்த பொற்கமல மீதிருந்த பொன்னனையுங்
கொண்டிருந்து குற்றேவல் கொள்ளுமாற்—றொண்டரண்டர்
தேங்காவில் வீற்றிருப்பத் தென்மதுரைக் கேகடப்பம்
பூங்காவில் வீற்றிருந்த பொன். (௧௯)

### கட்டளைக்கலித்துறை

பொற்பூர வல்லி கமலத்த னேகொல் புகுந்தகமும்
வெற்பூர வல்லி பிறந்தது மும்மது வீட்டுமென்னே
யற்பூர வல்லியெம் முண்ணெஞ்சக் கஞ்சத்தெம் மையனொடுமென்
கற்பூர வல்லி குடிபுகுந் தென்ற காரணமே. (௨௰)

## மீனாக்ஷியம்மையிரட்டைமணிமாலை
## முற்றிற்று.

---

# மதுரைக்கலம்பகம்

## நூல் - ரு.

PRINTERS
P. R. RAMA IYAR AND CO.,
MADRAS.

OFFICE OF THE REGIST[illegible] OF BOOKS
1- JUL 1925
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்

# மதுரைக்கலம்பகம்

---

காப்பு

## கட்டளைக்கலித்துறை

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணளிசூய்
வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.

---

## மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா

மணிகொண்ட திரையாழி சுரிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைக்கிழவன் றிருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் றலைநிற்ப
அம்பொன்முடி முடிசூடு மபிடேக வல்லியொடுஞ்
செம்பொன்மதிற் றமிழ்க்கூடற் றிருநகரம் பொலிந்தோய்கேள்.

இஃது எட்டடித்தரவு

விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ
பெண்ணரசு தாக்கொண்ட பேரரசு செலுத்தினையே.

தேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்த நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே.
வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த
மீனேன்றே வானேறும் விடுத்தடிக ளெடுப்பதே.
மனவட்ட மிடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டந் தினவட்ட மிடக்கண்டு களிப்பதே.
விண்ணுறு தலைமடுப்ப நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணுறு குடைந்துவைகைத் தண்டுறையும் படிந்தனையே.
பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

அவனவ ளதுவெனு மவைகளி லொருபொரு
ளிவனென வுணர்வுகொ டெழுதரு முருவினை.
இலதென வுளதென விலதுள தெனுமவை
யலதென வளவிட வரியதொ ரளவினை.
குறியில னலதொரு குணமில னெனநினை
யறிபவ ரறிவினு மறிவரு நெறியினை.
இருமையு முதவுவ தெவனவ னெனநின
தருமையை யுணர்வுறி னமிழ்தினு மினிமையை.

இவைநான்கும் ஈரடியராகம்.

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடிமண் சுமந்ததே.
அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னையவ
டரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே.
மூலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைக்கை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னி வளைகொண்டு சுமந்ததே.
ஊன்வலையி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே. (௪)

இவைநான்கும் ஈரடித்தாழிசை

போகமாய் விளைந்தோய் நீ, புவனமாய்ப் பொலிந்தோய் நீ,
ஏகமா யிருந்தோய் நீ, யெண்ணிறந்து நின்றோய் நீ.

இவைநான்கும முச்சீரோரடி யம்போதரங்கம்

வானு நீ, நிலனு நீ, மதியு நீ, கதிரு நீ,
ஊனு நீ, யுயிரு நீ, யுளது நீ, யிலது நீ.

இவையெட்டும் இருசீரோரடி யம்போதரங்கம்
எனவாங்கு, இது தனிச்சொல்

பொன்பூத் தலர்ந்த கொன்றையீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
அண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து
வரியுடற் கட்செவி பெருமூச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் டாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பசும்பொன் சும் பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்றி
மூரசுவீற் றிருந்த வாதியங் கடவுணின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுது
மைம்புல வழக்கி னருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக
பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉ
மிறைமையுண் டாயினு மாக குறுகினின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக்கொண்

டம்மா னிடைத்தவா வென்று
செம்மாப் புறூஉந் திறம்பெறற் பொருட்டே. (௧)

இது பத்தொன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்

## நேரிசைவெண்பா

பொருளொன் றொருங்கின்ற பொன்மாடக் கூட
லிருளொன் றிருண்டகண்டத் தெம்மான்-சரணன்றே
மண்டுழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மலரித்
தண்டுழாய் பூத்த தடம். (௨)

## கட்டளைக்கலித்துறை

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் றண்மலர்த்தா
ணடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி தங்கநக்கோர்
இடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறலின்றோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே. (௩)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை
வெள்ளைப் பள்ளை
ஆனேறும் வலனுயர்த்த வழகியசொக் கர்க்கிதுவு
மழகி தேயோ
கானேறுங் குழல்சரியக் கர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
வானேறு முடைத்தலையிற் கடைப்பலிகொண் டூரூர்ப்புக்
குழலு மாறே. (௪)

## கட்டளைக்கலித்துறை

மாற்றொன் றிலையென் மருந்துக்கர்
தேரொக்கள் மாலைகொடார்
கூற்றொன் றலவொரு கோடிகெட்
டேன்கொழுந் தொன்றுதென்றற்



காற்றொன் றிளம்பிறைக் கீற்றொன்று
கார்க்கட லொன்றுகண்ணி
லூற்றொன் றிவளுக் குயிரொன்
றிலையுண் டுடம்பொன்றுமே. (௫)

## விருத்தக்கலித்துறை

ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங் குடம்பொன்றிலா
ரொன்றே யறிந்தும்பி னின்றே யிரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன்றி வெண்பொன் பசும்பொன் குயின்றேசெயு
மன்றே யிருக்கப் புறங்கா டரங்காட வல்லாரையே. (௬)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு விற்பீர்போன்
மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல் லாங்கொள்ளை
கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டிமக்குப் பலித்ததுநன் றுனீரிப்
பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ கொள்வதற்கோ
புறப்பட் டீரே. (௭)

## நேரிசைவெண்பா

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே - கட்ட
விரும்பாவத் தானேநின் மென்மலர்த்தா ளன்றே
தரும்பாவத் தானே தனே. (௮)

## கட்டளைக்கலிப்பா

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யா
மினியி ருப்பவொண் ணுது மடந்தைமீ
ரிடம ருங்குஞ் சடைமருங் கும்மிரு

கனியி ருக்குங் கடம்பவ னேசனார்
  கண்பு குந்தென் கருத்து ளிருக்கவும்
பனியி ருக்கும் பிறைக்கூற்ற முற்றியென்
  பாவி யாவியை வாய்மடுத் துண்பதே. (௯)

### நேரிசைவெண்பா

உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதைமீர் - தண்ணந்தழி
இந்தா நிலமே வெனச்சொலா ரென்செய்வாண்
மந்தா நிலமே வரின். (௰)

### புயவகுப்பு

வரியளி பொதுளிய விதழியொ டமரர்
  மடந்தையர் நீல வனம்புக் கிருந்தன
மதியக முடைபட நெடுமுக டடைய
  நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன
மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
  லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டுதிறன் முறைமுறை துதிசெய்
  தணங்கவ ராடு துணங்கைக் கிணங்கின,—

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
  பிணந்தொரு போர்வை புறஞ்சுற் றின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
  வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன
புலவெயி றயிறரு குருதியொ டுலவு
  மடங்கலின் வீர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில்பண் ணொடுதெய் வருமை
  யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன,—

உருமிடி யெனவெடி படவெதிர் கறவி
  நடந்தொரு பாண னொதுங்கத் திரிந்தன



உருகிய மனமொடு தழுவியொர் கிழவி
  கருந்துணி மேலி டுவெண்பிட் டுகந்தன
உறுதியொ டவண்மனை புகும்வகை கடிது
  சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன
உருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
  பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன,—

தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
  பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
  தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
  ததும்பிய ஊற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
  சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே. (௧௧)

### கட்டளைக்கலித்துறை

புயல்வண்ண மொய்குழல் பொன்வண்ணக்
  தன்வண்ணம் போர்த்தடங்கண்
கயல்வண்ண மென்வண்ண மின்வண்ண
  மேயிடை கன்னற்செந்நெல்
வயல்வண்ணப் பண்ணை மதுரைப்
  பிரான்வெற்பில் வஞ்சியன்னா
ளியல்வண்ண மிவ்வண்ண மென்னெஞ்ச
  மற்றவ் விரும்பொழிலே. (௧௨)

### அம்மானை, மடக்கு, கலித்தாழிசை.

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகி
லருமையுடம் பொன்றிருகூ றுவதே னம்மானை
ஆனாலுங் காயமிலை யையரவர்க் கம்மானை. (௧௩)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அம்ம கோவெனும் விழுமழு மெழுந்தழுதின்
றருவிநீர் விழிசோரும்
விம்மு மேங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென்
மெல்லிய லிவட்கம்மா
வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு
மணந்தவர் மலர்த்தாமந்
தம்மி னேவெனுந் தவப்பயன் பெரிதெனுந்
தந்தைதா னெழிந்தார்க்கே. (௧௪)

### மதங்கியார், எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

எறிவே லிரண்டுமென துயிர்சோர வுண்டுலவ விகல்வா
ளிரண்டு விசிறு
வெறிசேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி விளையாடு
மின்கொ டியனீர்
சிறுநூன் மருங்குலிற மிறுமாகொ லென்றுசில சிலேது
புரஞ்சொன் முறையீ
டறியீரொன் னெஞ்சமல மரவேசு ழன்றிடுதும் மதிவேக
கன்ற றவமே. (௧௫)

### கட்டளைக்கலித்துறை

அறந்தந்த பொன்பொலி கூடற் பிரான்வெற்பி லம்பொற்படா
நிறந்தந்த கும்ப மதயா னையுநெடுந் தேர்ப்பரப்பு
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ
புறந்தந்த வாவணங் கோன்று காமவெம் போரினுக்கே. (௧௬)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத்துப்
புழைக்கை நால்வாய்க்
காரானைப் போர்வைதழீஇ வெள்ளானைக் கருள்சுரந்த
கடவு ளேபோ



ரோரானை முனைப்போருக் கொருகணைதொட் டெய்திடுநீ
ரொருத்தி கொங்கை
யீரானை முனைப்போர்க்கும் வல்லீரே லொருகணைதொட்
டெய் திடீரே. (௧௭)

### மேற்படிவிருத்தம்

எய்யாது நின்றொருவ னெய்வதுவு மிளையாட
லிளைப்பும் புந்தி
வையாதார் வைதலுநின் மதியார்தா மதித்திடுதல்
வழக்கே யன்றோ
மெய்யாத மெய்கடிந்து வீடாத வீடெய்தி
வீழார் வீழச்
செய்யான்செய் சரக்கறையாந் திருவால வாயிலுறை
செல்வ னாரே. (௧௮)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவுமை
யாளுடைய பச்சை மயிலோ
டேறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர
மேசரொரு சற்று முணரார்
நீறுபடு துட்டமதன் வேறருவெ டுத்தலரி
னீள்சிலைகு னித்து வழிதே
னூறுகணை தொட்டுவெளி யேசமர்வி ளைப்பதுமென்
னூழ்வினைப லித்த துவமே. (௧௯)

### தழை, கட்டளைக்கலித்துறை

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசப் பாண்டியன்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின் களபக்கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினாய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே. (௨௰)

### வஞ்சித்துறை

தழைத்திடுங் கூடலார், குழைத்துடன் கூடலார்
பிழைத்திடுங் கூடலே, யிழைத்திடுங் கூடலே. (௨௧)

### வஞ்சிவிருத்தம்

கூட லம்பதி கோயில்கொண்
டாடல் கொண்டவ ராடலே
ஊட லும்மூடம் பொன்றிலே
கூட லும்மொரு கொம்பரோ. (௨௨)

### ஊசல், கலித்தாழிசை

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கம்மக் கலனுஞ் சிலம்புங் கலந்தார்ப்ப
மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
அம்மென் மருங்கொசிய வாடுகபொன் னூச
லழகெறிக்கும் பூண்முலையீ ராடுகபொன் னூசல். (௨௩)

### களி, தாழிசை

அழகுற்றதோர் மதுரேசனை யமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினோம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதோர் சான்றாண்மை பயின்றோர்தின முயன்றாற்
பலமுண்டதி னலமுண்டவ ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது வீடுத்தா வற்று
லெழுதாததோர் திருமந்திர மினம்பாளை யுளுண்டே. (௨௪)

### கலிவிருத்தம்

உண்பது நஞ்சமா லுறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத மின்னதே பெரும வேள்கணை
எண்பது கோடிமே லெவன்றொ டுப்பதே. (௨௫)



### மடக்கு, கட்டளைக்கலிப்பா

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
எடுத்து நின்றது மாயவ ராகமே
யெயிறி றுத்தது மாயவ ராகமே
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே
யணிவ தஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே
கொள்வ தையர் கடம்பவ னத்தையே. (௨௬)

### நேரிசைவெண்பா

கடங்கரைக்கும் வெற்பிற் கரைகரைக்கும் வைகைத்
தடங்கரைக்க ணின்றவர்நீர் தாமோ—நெடுந்தகைநுங்
கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையி
னோட்டம் புயமே நமன். (௨௭)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நம்பாவி னக்கோல முறையோவெ னக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர்
செம்பாதி மெய்யுங் கரும்பாதி யாகத்
திருத்தோளு மார்பும் வடுப்பட்ட துங்கண்
டெம்பாவை யைப்பின்னு மம்பாவை செய்வா
ரெளியாரை நலிகிற்பி னேதா மிவர்க்கே. (௨௮)

### கொச்சகக்கலிப்பா

ஆவமே நாணே யடுகணையே யம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுஞ் சமனன்றே
ஓவமே யன்னா ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே. (௨௯)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து
 கயல்வா வுறங்கு புள்ளீரே
பருவமு மிழந்தென் மகடுய ருழந்து
 படுவிர கமொன்று முள்ளீரோ
அருமையொ டுமெங்கள் பெருமையை யுதிர்து
 மருள்புரிய விங்கு வல்லீரே
மருவிய கடம்ப வனமது புகுந்தெ
 மதுரைய ரன்முன்பு சொல்லீரே. (௬௰)

### கொச்சகக்கலிப்பா

எரித்த தென்ற லிளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப் பிணியோ தணியாவாற்
பாருக்கு ணீரே பழியஞ்சி யாரெனின்மற்
றூருக் குரைக்கே மடிகே ளடிகேளோ. (௬௧)

### பிச்சியார், கட்டளைக்கலிப்பா

அடுத்த தோர்தவ வேடமும் புண்டர
 மணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தொடுத்த தாள்பதித் தாடிக் கடைப்பிச்சைக்
 கிச்சை பேசயப் பிச்சனெ னச்செல்வீர்
கடைக்க ணோக்கமும் புன்மூர லும்முயிர்
 கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றோ
 பிச்சி யாரெனும் பேருமக் கிட்டதே. (௬௨)

### கட்டளைக்கலித்துறை

இடங்கொண்ட மாலும் வலங்கொண்ட
 வொண்மழு வும்மெழுதும்
படங்கொண்டு வந்தனை யானெஞ்ச
 மேவினிப் பங்கயப்பூத்



தடங்கொண்ட கூடற் சவுந்தர
 மாறன்பொற் றாள்பெயர்த்து
நடங்கொண்ட தோர்வெள்ளி மன்றே
 றுதுமின்று நாளையிலே. (௬௩)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இருநில னகழ்ந்ததொரு களிறுவெளி றும்படியொ
 ரிருளியி னணைந்த ணையுமக்
குருளையை மணந்தருளி னிளமுலை சுரந்துதவு
 குழகரி னுணர்ந்திலர் கொலாங்
கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில
 கணைமதன் வழங்க வவைபோ
யுருவிய பசும்புணில்வெண் ணிலவனல் கொளுந்தியதெம்
 முயிர்சிறி திருந்த தரிதே. (௬௪)

### கொற்றியார், எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அருநாம மாசிவசங் கராநாம மெனக்கொண்
 டவற்றொருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
 பெற்றியார் தமிழ்மதுரைக் கொற்றியார் கேளீ
ரொருநாமம் பயந்தவர்முன் றருநாமம் வியந்திங்
 குலகரிடு நாமமுமொன் றுள்ளதீர் வெள்ளைத்
திருநாம மிட்டவன்றே கெட்டவன்றோ விமையோர்
 தெரித்திடுநா மமுமுனிவோர் தரித்திடுநா மமுமே. (௬௫)

### நேரிசைவெண்பா

மும்மைத் தமிழ்க்கூடன் மூலலிங்கத் தங்கயற்க
ணம்மைக் கழகா மருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கொழித் தாளலாங் கண்டகாம்
முள்ளத் திருக்கோயி லுள். (௬௬)

### கட்டளைக்கலித்துறை

உன்னும் புறம்புங் கசிந்தூற் றெழுசெக் குடைத்துருதி
கொன்னுஞ்செச் தேறல் குனிக்கின்ற வாயத்திக் கொத்தரும்ப
வின்னுங் கமலத்தும் வேத சிரத்தும்வின் மீனைமுகச்
தன்னுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கத்துமே. (௩௭)

### மடக்கு, கட்டளைக்கலிப்பா

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
யால யம்பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கல னென்பர வாமையே
யுணர்வு ருமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே. (௩௮)

### விருத்தக்கலித்துறை

கூடார் புரந்தீ மடுக்கின்ற துஞ்சென்று கும்பிட்டதோ
ரேடார் குழற்கோதை யுயிருண்ப தும்மைய ரிளமூரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீ ரெனக்கன்னி வளநாடெலு
நாடாள வைத்தாளு நகையா திளிப்போடு நகையாடவே. (௩௯)

### கொச்சகக்கலிப்பா

நகையே யமையுமிந்த நாகரிக நோக்கு
மிகையே யனங்கன் வினைகொளல்வீ ணன்றே
தகையே மதுரேசன் றண்டமிழ்நா டன்னீர்
பகையே துமக்கு நமக்கும் பகர்வீரே. (௪௰)

### கலிவிருத்தம்

வீரம் வைத்தவில் வேள்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணே
ஈரம் வைத்த விளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்ப வனேசனே. (௪௧



### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற்றுங்
கடம்பா டவிச்சுந் தரரேநுந்
தடந்தோள் குறித்திங் கணைந்தே மெனிற்பின்
றரும்பே றன்யத்தின் பெருவாழ்வோ
தொடர்ந்தே யுடற்றிந் திரன்சா பமுற்றுந்
தூரந்தா லுமிப்பெண் பழிபோமோ
அடைந்தேம் விடக்கொன் றைபந்தா ரெவர்க்கென்
றமைந்தே கிடக்கின் றதுதானே. (௪௨)

### வேறு, அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தான வெங்களி றேறு மிந்திரன் சாப மூந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூனி மிர்ந்திட வேகி மிர்ந்திடு கூட லம்பதியே. (௪௩)

### கைக்கிளைமருட்பா

அஞ்சேன் மடநெஞ் சபிடேகச் சொக்கருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போற் - றுஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கு
மறலியற் கூர்தற் காடமர்க் கண்ணே. (௪௪)

### கட்டளைக்கலித்துறை

கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத்துக் கேமுத்த முண்டிமயத்
தண்முத் தமைந்த தபனிய மேகலைச் சங்கம்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே. (௪௫)

## பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பாணரு மழலைச் சீறியாழ் மதுரப்
பாடற்குத் தோடுவார் காதும்
பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும்
பாலித்தாய் பாட்டளி குழைக்குங்
கோணரு வளைப்பூங் கொத்தலர் குழலிக்
குறுங்கணெட் டிலைச்சிலை குனித்த
கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலா மலதென்
கொடியிடைக் காற்றமா றனதோ
சேணுறப் பசும்பொற் றசும்பசும் பிருக்குஞ்
சிகரியிற் றகராா றைம்பாற்
சேயரிக் கருங்கட் பசுங்கொடி நுடங்குஞ்
செவ்வியிற் சிறைமயி லகவத்
தூணுரு முழவுத் தோண்மடித் தும்பர்
கவல்பிடித் தணர்துபார்த் துணங்குந்
தோரண மாடக் கூடலிற் சோம
சுந்தரா சுந்தரசே கரனே. (௬௬)

## நேரிசையாசிரியப்பா

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்குந்
௫ தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூட
லொண்ணுத றழீஇய கண்ணுதற் கடவு
ளெண்மர் புறந்தரூஉ மொண்பெருந் திகைக்குந்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரித்து
விரசதங் குயின்ற திருமா மன்றகம்



௰ பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் றயினுங்
கருந்தாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டு
மிருவே றமைந்தநின் னொருபெருங் கூத்தே. (௬௭)

## நேரிசைவெண்பா

தேத்தந்த கொன்றையான் றெய்வத் தமிழ்க்கூடன்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றெமைவிட்
டேகவி மானமுனக் கேன். (௬௮)

## கட்டளைக்கலித்துறை

எனின் றிரங்குநி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுமற்றோர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
றேனின்ற வைந்தருச் சிந்தா மணியொடந் தேனுவுமே. ()

## தாழிசை

தேனுருத சிலைக்கரும்பு கொலைக்கரும்பொரு வேம்பெனுந்
தேம்புயத்தணி வேம்பிணைக்கனி தீங்கரும்பெனு மிவ்வண
மானுருத மழைக்கணங்கையு மாறியாடத் தொடங்குமான்
மாறியாடுநின் வல்லபந்தொழ வந்தபேர்க்கும் வருங்கொலோ
கானுருத சுரும்புநாண்கொள் கருப்புவில்லியைக் காய்ந்தநாட்
கைப்பதாகை கவர்ந்துகொண்டதோர் காட்சியென்ன வெடுப்ப
மீனுருத வடற்பதாகை விடைப்பதாகை [illegible]கொளும் [illegible]தோர்
வீரசுந்தர மாறமாறடும் வெள்ளிய[illegible] (௭௰)

## பதினான்குசீர்க்கழிநெடி[illegible]யவிருத்தம்

வாணிலாப் பரப்பு ம[illegible]
மறிபுனற் கங்கை[illegible]கைக்கும்
வையமீன் றளித்த மா[illegible]க் கொடிக்குன்
வாமபா கமும்வழங் [illegible]

O-,11LK6
N25
77911

பூணுலாங் கனபப் புணர்முலை யிவட்குன்
பொற்புயம் வழங்கலை யெமர்போற்
பொதுவினின் றுய்க்கு நடுவின்மை யிடையே
புகுந்தவா றென்கொலோ புகலாய்
தூணுலாம் பசும்பொற் றோரண முகப்பிற்
குளிகை நெற்றிநின் றிறங்குஞ்
சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கந்
தோன்றலு மூன்றுநா ணிரப்பா
நீணிலா வெணக்கொண் டணங்கனூர் வளைக்கை
நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கு
நீடுநான் மாடக் கூடலிற் பொலியு
நிமலனே மதுரைநா யகனே. (௩௧)

### கட்டளைக்கலிப்பா

மதுமலர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
தறிலொர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
கறிவு நாணுநம் மாவியு மேகொலாம்
பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பினைப்
புதிய தூர்நம் முயிர்ப்பலி யேயன்றோ
பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே. (௩௨)

### கிள்ளைவிடுதூது, கட்டளைக்கலித்துறை

புழுகுநெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க
ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண்
டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந்ததமீ
பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே. (௩௩)



### நேரிசைவெண்பா

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி யார்க்கவுமே
வந்ததொரு பெண்பழியென் வாழ்த்துகே—ளந்தோ
அடியிடுமுன் னையர்க் கடுத்தவா கெட்டேன்
கொடியிடமாப் போந்த குறை. (௩௪)

### காலம், மடக்கு, தாழிசை

குறுமுகைவெண் டளவளவின் மணந்துவக்குங் காலங்
கொழுநரொடு மிளமகளிர் மணந்துவக்குங் கால
மறுகுதொறு நின்றெமர்க ளுருத்திகழுங் காலம்
வரிசிலைகொண் டுருவிலியு முருத்திகழுங் காலஞ்
சிறுமதிநம் பெருமதியி னுகப்படருங் காலந்
தென்றலிளங் கன்றுமுயி ருகப்படருங் கால
நிறையினொடு நாணினொடு மகன்றிரியுங் கால
நேசர்மது ரேசர்வரை யகன்றிரியுங் காலம். (௩௫)

### நேரிசைவெண்பா

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே - யிம்முறையு
மிம்மேனி காமநோய்க் கீடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொ றீங்கு. (௩௬)

### சிந்து, கட்டளைக்கலிப்பா

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாங்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினே
மிருந்த வீடும் வறும்பாழ தாமனர்
செருத்துக் கொட்டிலும் பொன்னெய்த் திடச்செய்தே
யருந்த வன்னமக் கோதன மேயப்பா
ஆட கத்துமத் தூசையல் வையர்க்கே. (௩௭)

### மடக்கு, அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஐய மணிக்கல மென்பணியே
யன்பவ னக்கொள்வ தென்பணியே
மெய்யணி சார்தரும் வெண்பலியே
வேண்டுவ துங்கொள வெண்பலியே
எய்ய வெடுப்பதோர் செம்மலையே
யேந்தி யெடுப்பதோர் செம்மலையே
வையகம் வாய்த்த வளம்பதியே
வாழ்வது கூடல் வளம்பதியே. (௮)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஏடார் புண்டரிகத் தினமான் முதுபாட
லெழுதா மறையோடு மிசைமுத் தமிழ்பாடப்
பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும்
பெருமான் முன்சென்றான் சிறுமா னென்சொல்கேன்
பாடா அம்மனையு மாடா ளம்மனையும்
பயிலா டண்டலையு முயலா வண்டலையு
மாடாண் மஞ்சனமுந் தேடா வஞ்சனமு
மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே. (௯)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இன்னியந் துவைப்பச் சங்க மேங்கிடச் செழிய ரீன்ற
கன்னியை மணந்தே யன்றோ கன்னிநா டெய்தப் பெற்றார்
மின்னிவண் மயக்கும் பெற்றால் வெறுக்கைமற் றிதன்மே லுண்
டோன்னியல் குமரி மாடக் கூடலம் பதியு ளார்க்கே. [டோ (௰)

### கார், விருத்தக்கலித்துறை

கேளார் புரஞ்செற்ற வின்னுரி தோயக் கிளர்ந்தெழுதேர்
தோளாளர் கூடற் பதிக்கேகு முகில்காள் சொலக்கேண்மினோ
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த வென்சொன் மறந்தேகன்
றுளாண்மை யன்றே தளைப்பட்ட தூரிற் றனித்தேகலே. [மின்



### இடைச்சியார், அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற
ரெண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சியே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத் தோயீர் வாளா
மண்டுமென் னகத்தி லென்னீர் மத்திட்டு மதிக்கின் றீரே. (௧௨)

### கட்டளைக்கலித்துறை

ஈர மதிக்கு மிளங்தென் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்கோலு மேகொடுங் கோன்மைமுற்றுந்
தீர மதிக்குஞ்செங் கோன்மையென் றுஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே. (௧௩)

### வஞ்சிவிருத்தம்

கரிய கண்டங் கார்தவோர்
திருபர் கூடலி னெஞ்சிரே
உருவ மும்பெண் ணுருக்கொலா
மருவ மென்பதென் னுவியே. (௧௪)

### விருத்தக்கலித்துறை

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசார்த
தீவா னின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி தொடுந்தனு வுங்கூ னிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே. (௧௫)

### வலைச்சியார், அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
சுழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு மூங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட்டீரே. (௧௬)

### நேரிசைவெண்பா

விற்கரும்பே யொன்றிதுகேண் மென்கரும்பே யன்னார்தஞ்
சொற்கரும்பே முற்றுமவர் துற்றுமா - னற்கரும்பை
ஆளார் கடம்பவனத் தையருமற் றென்னியும்
வாளா வலர்தூற்று வாய். (௬௭)

### கட்டளைக்கலிப்பா

வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டென் னுருயென்று வம்பிலே
ஞால மின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பாதுவி லோசன
பரம லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே. (௬௮)

### கலிவிருத்தம்

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணிஞட்
கிட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே. (௬௯)

### நேரிசைவெண்பா

குங்குமச்சே றுடுங் கொடிபாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூட - லங்கயற்க
ணம்மைமயிடங் கொண்டானை யஞ்சலித்தே மஞ்சலமுற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி. (௭௰)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இன்னி ரமுதுக் கிடமுமா கவுங்
கெழிலார் கனனுங் கனலு வகுளாக
கன்னி ரமுதக் கடல பெயரார்
சுவையைப் பரியாக் கொடத்திரைதர
லக்கீர் மையின்மிக் கெவ்வீர் மையெரு
வடன்மா மடன்மா வரமா றுசெயா
மைர்கீ ரனைத் திளமா லையன்னீர்
வருவேன் மதுரைத் திருவீ தியிலே. (௭௧)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத்
திகிரிப் படையுய்த் தவர்கூடற்
றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத்
தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர்
புருவச் சிலையிற் குழைபட் டுருவப்
பொருகட் கணைதொட் டமராடுஞ்
செருவிற் றொலைவற் றவரைக் கொலுமற்
சிலைசித் தசர்கைச் சிலைதானே. (௭௨)

### கட்டளைக்கலித்துறை

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேண்
மலைசிலை யாக்கொண்ட வாறுத லாய்மின் மருங்குல்சற்ற
மிலைசிலை யாக்கொண் டினமாலை யெய்திற மின்னிறுவும் [தே.
குலைசிலை யாக்கொண் டவர்போலு மசற்செம்மல் கொள்கைகள்

### பாண், அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கொங்குலை யாற்றி விட்டுக் குளத்தினிற் றேடநீடு
மங்குரேய் முதுகுன் றையர் மதுரையோ மதியிற் பாணு
வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்ந்தும்
மங்கையர் மனம்போ லன்றே மகிழ்சர்தம் வாழ்க்கை தானே. (௭௪)

### நேரிசைவெண்பா

வாழிமடக் கிள்ளாய் மதுரை யிறைவர்
மூழி முதல்வர்க் குரைத்திடுதே - யாழியான்
செய்தொடுத்த வம்போ திரண்டுமலையும் கொமலருந்
தாய்தொடுத்த வம்போ தலை. (௭௫)

### மறம், எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
    சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்று
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தா
    ருனைவிடுத்த மன்னவர்யா ருரையாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
    மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னாய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்துந்
    தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினொடுஞ் சென்றே. (எசு)

### குறம், அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செல்விட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா
        தேவிக் கன்ற
சொல்விட்ட குறமகள்யான் றம்மனுநல் வரத்தேகாண்
        சுளகி லம்மை
நெல்விட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொருளதுந்
        திலக்கச் சார்க்கும்
வல்விட்ட குறியினொடும் வளையிட்ட குறியுளதோர்
        வடிவு தானே. (எஎ)

### விருத்தக்கலித்துறை

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவர வரையினர் திருமுனி தொருவர் விளம்பாரோ
குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவு கொழுந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள் படும்பாடே. (எஅ)

### கட்டளைக்கலித்துறை

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய் நாணும்விட் டாள்வண்டு மென்கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே. (எக)



### மேகவிடுதூது, எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஏமவெற் பென்றுகயி லாயவெற் பென்றுமல
    யாசலத் தென்று முறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
    கூடலிற் சென்று புகலீர்
தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி
    சாரலிற் றுஞ்சு முகில்காள்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர்
    வாய்மடுத் துண்டொ ழிவதே. (அய)

### சம்பிரதம், மேற்படி வேறு

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
    றைத்துடன்வி டுத்தி டுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவ
    னித்தனையும் வித்தை யலவாற்
றட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
    சொக்கர்குண மெட்டி னொடுமா
சிட்டர்கடு தித்திடுமெ கத்துவம னைத்துமொரு
    செப்பினுள டக் கிடுவனே. (அக)

### நேரிசைவெண்பா

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
எடுத்த பதஞ்சலியா ரேனுந் - தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனார்
சீறிக் குனித்தார் சிலை. (அஉ)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ
    சிவவாவி யொன்று முளதோ
விலையோ வறிந்திலமிம் மதனுண்மை யென்புகல்வ
    திதுவே தவம்பி றிதெனு

முலையே யணிர்தமுகிழ் நகையீரொர் பெண்கொடியின்
முலையோடு முன்கை வளையான்
மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே. (௮௩)

### உருவெளிப்பாடு, கட்டளைக்கலித்துறை

வரும்புண்ட ரீக மிரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே. (௮௪)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர்நுங்
கடுக்கைக் காட்டின்
மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து மூண்டெழுமான்
மதித்தீ கெட்டேன்
செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற்
செங்கை யீட்டு
மெருவிட்டு மூட்டிடநீர் விறகிட்டு மூட்டியவா
வென்சொல் கேனே. (௮௫)

### விருத்தக்கலித்துறை

என்போ டுள்ளமு நெக்குரு கப்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ
தன்போல் காமன் சாப முடித்தாற் றாழ்வுண்டே
முன்போர் காமன் சாப மனைத்து முடித்தாய்க்கே. (௮௬)

### நேரிசையாசிரியப்பா

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவா வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா லுரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் மூழ்கிப் பதும பீடத்
தாற்றவீ ற்றமு முலப்பில பல்றவம்



வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றொருவநின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரி னொருபழி சுமந்த
புன்றொழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
அன்றருள் சுரந்த தொன்றே சென்றதோர்
வலியாற் கருள்வது உ நோக்கி
எளியார்க் கெளியை மற்றென்பது குறித்தே. (௮௭)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

குறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றே யாற்றுச்
சிறுதுயிலும் பெருமூச்சுங் கண்டுமிரங் கலையாற்
றெறுமறலி நீயேயித் தெண்ணிலாவு
மெறியுநெடும் பாசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா யிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனை மதுரேசர் பிறைச்சு
நாகிளவெண் டிங்களென நவில்கின் றாரே. (௮௮)

### தாழிசை

நவ்வியங்கண் மானுமானு மீனிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங்க றுத்துளார்
கைவ்விளங்கு குன்றமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்

கொவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகைநீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவ்விரிந்த வல்குலீர்நும் மன்னைமார்கள் சங்கையிற்
படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே (அகூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற்
பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமையடைதல்
கணக்கே யன்றோ
மாமிக்குக் கடலேழும் வழங்கினீ ரொருவேலை
மகனுக் கீந்து
பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும்
போக்கி னீரே. (கூய)

### மேற்படிவிருத்தம்

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்போடு நெட்டுயிர்ப்பு
நெடுங்கண் ணீரிற்
பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுமிரும்
பெற்றா ளன்றே
காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர்நறை
கமழ்பூங் கொன்றைத்
தாரோடு மனஞ்செல்லத் தலையோடுந் தான்செல்லாத்
தமிய டானே. (கூக)

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ற
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவத் தனிமுத லொருநீ
சவுந்தரமாறனா னதுவுங்



குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெளிவிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றூநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே. (கூஉ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந் தளித்தீ
ரொருவற் கதுநிற்கத்
தொடுக்குங் கணைவே டனக்குலவாத் தூணி
கொடுத்தீர் போலுமா
லெடுக்குங் கணையைந் தெய்தகணை
யெண்ணத் தொலையா தென்செய்கேன்
றடுக்கங் கொளமால் சிலைமதனைச்
சினத்தீர் கடம்ப வனத்தீரே. (கூங)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கடமுடையு நறுநெய்க்குண் முழுகியெழு வதையொத்த
காடமத கரிபெற்றோர் பிடியேபோன்
மடவநடை பயில்பச்சை மலையிலொரு புறம்வைத்த
மதுரையழ கியசொக்கர் வரைவேலோய்

நடையுமெழ துவைநிற்கு நிலையுமெழ துவைசொற்கு
 ணலமுமெழ துவைசித்ர ரதிபோல்வா
ளிடையுமெழ துவைமுற்று மிலதொர்பொரு ளையுமொக்க
 வெழுதிலெவ ருனையொத்த பெயர்தாமே. (௧௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல்
 விகிர்த கேண்மோ
வேதமினின் றிருவுருவொன் றீருருவாய் நின்றதிறு
 மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு
 பூவை மார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு
 காட்சி தானே. (௧௫)

## நேரிசைவெண்பா

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்த
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்மமதா
மெள்ளத் திருப்பீர் மிக. (௧௬)

## கட்டளைக்கலித்துறை

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே. (௧௭)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்த மிசையே
மலரா கிடந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே. ()



## தாழிசை

தேனவழங்கு கடுக்கையார்கரு மான்வழங்கு முடுக்கையார்
 திருவிருந்த விடத்தினாருள் கருவிருந்த நடத்தினார்
மானடங்கிய வங்கையார்சடைக் கானடங்கிய கங்கையார்
 வைகையொன்றிய கூடலாரிவள் செய்கையொன்றையு நாடலார்
கானவேயிசை கொல்லுமாலுற வானவேய்வசை சொல்லுமாற்
 கன்றியன்றி லிரங்குமாலுயிர் தின்றுதென்ற னெருங்குமாற்
றீநிலாவனல் சிந்துமாற்கொல வேனிலான்மெல முந்துமாற்
 றினமிடைந்திடைநொந்தபோன்மகள்மனமிடைந்ததுணர்ந்துமே.

## ௨௦, அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உடையதொர் பெண்கொடி திருமுக மண்டல
 மொழுகு பெருங்கருணைக்
கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புன
 கடவுணை டும்பதியாம்
புடைகொள் கருங்கலை புனைபவன் வெண்கலை
 புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலையும்பொலி
 மதுரைவ ளம்பதியே. (௱)

## பதினைந்துசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிந் தமர்த்த
 மதரரிக் கண்ணியு நீயு
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
 மடித்தலத் திருத்திமுத் தாடி
உள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்தாங்
 குகந்தனி ரிருந்திரா லுலக
மொருங்குவாய்த் தீருக் கொருதலைக் காம
 முற்றவா வென்கொலோ வுரையாய்

வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம்
வெஞ்சுடர்க் கடவுளுங் கிடைத்து
வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட
மீக்கொளூஉத் தாக்கணங் கனையார்
கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட
காப்பென வேப்பலர் மலைச்சுங்
கைதவக் களிறே செய்தவக் கூடற்
கண்ணுதற் கடவுண்மா மணியே. (௱௧)

## நேரிசையாசிரியப்பா

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னொடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரே ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ரூர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழுமலைக் கொலைமதக் களிற்றொடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியுமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவே லுழவன் பணித்தனன் றொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்முறை வாரி பெயும்பெய லல்ல
செய்பா றயிர்முதற் பல்பெய றலைஇப்



பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட
லிருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுழை மருங்குற் பொன்னொடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்
முளையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
லின்பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாமென
மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
இனையநின் றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் றகவே
வாழியெம் மனனு மணிநா வும்மே. (௱௨)

## மதுரைக்கலம்பகம்

முற்றிற்று

# நீதிநெறிவிளக்கம்

நூல் - கூ

திருச்சிற்றம்பலம்

# நீதிநெறிவிளக்கம்

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக—ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. (க)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (உ)

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கு
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி—நெடுங்காம
முற்பயக்குஞ் சின்னீ ரின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது. (ங)

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. (ச)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. (ரு)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
யீத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (சு)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (எ)

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பக
லேதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். (அ)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (கூ)

எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா—மனைத்தக்காண்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். (ய)

இன்சொலன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (கக)

இவறன்மை கண்டு முடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப—பெரிதுந்தா
முற்பக னோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (கஉ)



கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (கங)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றனெ மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (கச)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று. (கரு)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பப்போற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். (கசு)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. (கஎ)

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே—புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின். (கஅ)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர்ச் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம். (ககூ)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (௨௰)

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். (௨௧)

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்—திறப்படூஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். (௨௨)

கற்பன் ஊழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவா யங்காத்தன்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். (௨௩)

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா—தாக்கணங்கு
மாணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில். (௨௪)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். (௨௫)

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு. (௨௬)



குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு—மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை. (௨௭)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. (௨௮)

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. (௨௯)

இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறா
னின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவ
னுவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன். (௩௰)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். (௩௧)

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றோ டணியாத் தெரிதந்துங்—குற்ற
மறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று. (௩௨)

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு. (௩௩)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகு—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. (௧௪)

நட்புப் பிரிதல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தா ராரைய மையுறுத—றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (௧௫)

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் றாழ்வார்க்—கணிய
திணையாண் முயக்கெனினுஞ் செய்தன்றே மூத்தாள்
புணர்முலைப் போகங் கொளல். (௧௬)

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (௧௭)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. (௧௮)

மாகஞ் சிறகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னெக்குழைந்த மிக்குடைய—மாகொல்
பகைமுகந்த வெள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகந்த நன்கு மதிப்பு. (௧௯)

கிளைகளுந் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளையுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தானுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம். (௨௰)

தம்முடைய யாற்றலு மானமுந் தோற்றுந்த
மின்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்க்
கிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின். (௨௧)

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும்—கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூ டினும். (௨௨)

புழுநெளிந்து புண்ணுழல் யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழைவர்
விளிவுன்னி மெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டேற்கு. (௨௩)

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மெக்கப் புகழ்ப—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை. (௨௪)

செவிசுடச் சென்றுந் திடுத்தறிவு மூட்டி
வெகுளினும் வைவெரீஇப் போகா—கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு. (௨௫)

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க—வெவ்வொருகா
லெண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னான். (௨௬)

பழமை கடைப்பிடியாக் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றாற் கொள்ளார்—வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு. (௨௭)

மன்னர் புறங்கடைக் காத்து வறிதேயா
மொர்நலங் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாட்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும். (௪௮)

உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கு
மாயுண் மருந்தொழுக்க நீதன்றா லல்லனபோ
லாவனவு முண்டு சில. (௪௯)

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்திறத்த வென்னார்—மயலாயு
மூற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றா ரெறிகான் முகத்து. (௫௰)

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. (௫௧)

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து வினையறிந்து—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். (௫௨)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (௫௩)

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (௫௪)



புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சா
ரகப்பகை யொன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை. (௫௫)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டுங்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (௫௬)

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமா
நாணுலர்ந்த தன்றே நடுவ ணடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து. (௫௭)

மனத்த கறுப்பெனி னல்ல செயினு
மனத்தெவையுந் தீயவே யாகு—மெனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். (௫௮)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். (௫௯)

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கு
மெய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்று
நலமன்றே நல்லா றெனல். (௬௰)

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (௬௧)

குலம்விற்றுக் கொண்டேனும் வெறுக்கையுடம் வாய்மை
நலம்விற்றுக் கொண்டேனுந் திருவுந்—தலம்விற்றுங்
கூடேனும்பும் வாழ்வு முரிமைவிற் றன்பருடன்
தானோம்பிக் காத்த றலை. (௬௨)

இடைதெரிந் தஞ்சுதுத்து வஞ்சித் தெளியா
ருடைமைகொண் டேமாப்பார் செல்வ மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும். (௬௩)

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுன்னுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவா வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா. (௬௪)

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி—எய்த்தும்
மறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள். (௬௫)

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வங்
குலமகளே யேனையோர் செல்வம்—கலனழிந்த
கைம்மையார் பெண்மைநலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். (௬௬)

வன்னன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னல்குரவே போது நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். (௬௭)

நகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்த
லோகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்பியனுள் வாய்பூட் டிடப்படினுற்
றுவா ரிவரென்செய் வார். (௬௮)



சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழித
னல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
மாக்கங் கெடுவ தறிதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். (௬௯)

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழா—ரறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினு
மொண்மையிற் றீர்ந்தொழுக லார். (௭௰)

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னுஞ்—செயிர்த்துரைப்பி
னெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளியோ
லெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. (௭௧)

அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டலம்புப—அல்லாற்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார். (௭௨)

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்
கைவிதிர்த் தஞ்சப் படும். [போற் (௭௩)

தெய்வ முனாதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்குந்—தெய்வ
மிலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (௭௪)

தீய செயற்செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். (௭௫)

நன்மக்கள் சேராத் தழும்பிருக்க நான்வாயுஞ்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்—முன்னைத்தம்
மூழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில. (எசு)

பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேற
லறனன்றே யாயினு மாக—சிறுவரையு
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய். (எஎ)

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே—பெரிதுந்த
மின்னலமுங் குன்றாமே யேரினங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்த னலம். (எஅ)

கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார். (எகூ)

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார்—நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னுந்
தீய விலங்கிற் சிலர். (அ௰)

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. (அக)

ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேள்வனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம். (அஉ)



கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லர்—மற்றுத்தங்
கேள்வற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார். (அங)

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார்—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவங்
கற்பின் மகளிர் பிறப்பு. (அச)

பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்—பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார். (அரு)

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லா
மயிற்சுவையி னுகுவவென் றெண்ணி—அயிற்சுவையும்
பித்துணைக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போன்
மொத்துணை மொய்ம்பி னவர். (அசு)

அன்பொ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார்—புன்புலாற்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றம்மேய்ந்த
புக்கில் குடிபுகுது வார். (அஎ)

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில். (அஅ)

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉ—மவ்வினை
காத்த விலரே லெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர். (அகூ)

பாபாப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப—ஒருவாற்றா
னல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றா னுய்வா ரிவர். (௯௰)

இளைய முதுதவ மாற்றுது நோற்றென்
றுளைவின்று கண்பாடு மூழே—விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாருந்
தாழாமே நோற்பார் தவம். (௯௧)

நல்லவை செய்யத் தொடங்கினு நோனமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கு—மெல்லி
யியனெறிச் செல்வாரை யாறலைத் துண்டார்
செலவு பிழைத்துய்ப்ப போல். (௯௨)

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே—கஞ்சுக
மெப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது. (௯௩)

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (௯௪)

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்—கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து. (௯௫)

மெலியார் விழினு மொருவாற்றா னுய்ப
வலியாமற் றொன்றானு முய்யார்—நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினு
முய்யுமா றுய்யா பிற. (௯௬)



இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லாற்—பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவே
யானோம்பி யூன்றின் பவர். (௯௭)

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி—யெவரெவர்க்கு
முப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையா
னெப்பாலு நிற்ப தென. (௯௮)

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணும் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. (௯௯)

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போன்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றவதே யின்ப
மிறந்தவெலாந் துன்பமலா தில். (௱)

கற்றாங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். (௱௧)

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முனோ
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். (௱௨)

நீதிநெறிவிளக்கம்

முற்றிற்று

## நூல் - எ

திருச்சிற்றம்பலம்

# திருவாரூர் நான்மணிமாலை

---

## காப்பு

நாடுங் கமலேசர் நான்மணிமாலைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும்—வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

### நேரிசைவெண்பா

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—யாரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. (க)

### கட்டளைக்கலித்துறை

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாணால் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரே. (உ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

என்பாக கருதலையோ டெழிலாக வணிந்தகம லேச மற்றுன்
றன்பாக மிடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்துந் தலைவி பாகத்
தன்பாக நின்றிருகோக் கவைதோய்ந் துந் திருநிறம்வே றுகைவாலப்
பொன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவெனவும் புகலொ ணாதே.

### நேரிசையாசிரியப்பா

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் கண்டது முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்தவள் ளுகிராற்
றெடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானுட மடங்க றூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணாரூ ரெந்தையெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயு
நடுவண் வைகு நாகிளங் குழவியை
ஒருவிரி னொருவி ருன்னொக் குருக
இருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
உச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகு
மெழுதாக் கிளவியி னேழிசை பழுத்த
விழுமென் குதலை மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
அருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே. (௪)



### நேரிசைவெண்பா

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண் டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாந்—தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது. (௫)

### கட்டளைக்கலித்துறை

போதொன் றியதண் பொழிற்கம லேசர்பொன் மார்பிலெந்தாய்
சூதொன்று கொங்கைச் சுவடென்ப ராற்றோல் களிற்றுரிவை
மீதொன் றுவகண்டு வெங்கோப மாமுகன் வெண்மருப்பா
லீதொன் றடுகளி றென்றெதிர் பாய்ந்த வினைச்சுவடே. (௬)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இணங்குகம லாலயமா விதயத்திற் பொலிந்ததியா
கேச ரம்பொற்
கணங்குழைமண் மகளிதய கமலத்தும் பொலிதலினக்
கமல மான
மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் கமலைகம லாலயப்பேர்
வாய்த்த தான்மற்
றணங்கனையா ரிதயமுந்தம் மருட்கொழுந ரிதயமுமொன்
றாகுந் தானே. (௭)

### நேரிசையாசிரியப்பா

தானமால் களிறு மாநிதிக் குவையு
மேனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ
இலம்பா டின்றி யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே
அதாஅன்று
ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
இடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப

வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகண்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரொத்துனைக் கொடுமை செய்யினு
மதியார் செய்திடு முதவியை யுணர்ந்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. (௮)

நேரிசைவெண்பா

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானுங்
கருமா னுரியதனுந் தச்ச—மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா. (௯)

கட்டளைக்கலித்துறை

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகர் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
ஆவியம் போருகர் தாயிரங் கூற்றுடன் றூலுமஞ்சே
ஞவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே. (௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தரு
ளங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர்
மங்கைகொண் டனள்போலாந்
தாம நீற்றொளி தன்னிறங் காட்டவெண்
டலையிலை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக்
கயலுலா வாவலே. (௧௧)



நேரிசையாசிரியப்பா

வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமு
மாயிரு டூர்ந்து மழகதி ரெறிப்பன
சுரநதி முதல வரநதி மூன்றுந்
திருவரீன் மறுகிற் செல்வது கடுப்ப
ஒன்னொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தென்னமு திறைக்குந் திங்களங் கண்ணித்
தீவிறக் கடவுணின் கான்முறை வணங்குதுங்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுலைய
னூற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென வமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டி றூண்டி யத்தலை
வாழ்நாண் மிதப்பு நோக்கித் தாழு
தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்
றன்னா முயற்சி தவறுபட் டொழிந்தென்
வெங்குறீஇ மற்றவன் விம்மித னாக
அருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமா னந்தத் திரையொடு முலாவி
எய்தரும் பெருமித மெய்த
ஐயநின் கடைக்க ணருளுதி யெனவே. (௧௨)

நேரிசைவெண்பா

என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க—ளன்பென்னும்
புண்சுமந்தோ நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வார். (௧௩)

## கட்டளைக்கலித்துறை

வாந்தந் தருள வரதம்வைத் தாலென் வரதமிடக்
காந்தந்த தாலிவர் கையதன் றேபவி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமந் தியாகரென்ப
தாந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே. (கச)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசிர
மாலை யாகக்
கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக்
கோத்துச் சாத்த
உள்ளுவது மொழிவதுமற் றொழியாயே லடிமுடிக
ளுணர்ந்தே மென்றே
கள்ளமொழி வான்புகிற்றென் கமலேச வவர்க்கவையே
கரியு மாமே. (கரு)

## நேரிசையாசிரியப்பா

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமை பைங்குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டுவெண் ணெகின
நூற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்
தென்பான் மேருவிற் றிகழுங் கோயின்
மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்



றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
அறியா யல்லை யறிந்துவைத் திருந்துந்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருள்கிலை
புறக்கணித் திருந்ததை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
ருடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதைப்
பிறவியின் றுயர்நினக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே. (கசு)

## நேரிசைவெண்பா

கண்ணனார் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தென்புலத்தா
ரண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ—விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா டேக்கா
திருந்தாடு கின்றவா றென். (கஎ)

## கட்டளைக்கலித்துறை

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயொ டேழுல கீன்றவனை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப் பிரான்மணி கண்டங்கண்டு
மின்னுயிர்க் கும்புய லென்றுமென் கொன்றைபைந் தாதுயிர்க்கப்
பொன்னுயிர்க் கொண்கன் பொலன்றுகி லாமெந்தை பூந்துகிலே.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பூமாதி னிதயகம லத்துவைகும்
பொலிவானு மரியணைமேற் புணரியீன்ற
மாமாது வழிபடவீற் றிருத்தலானு
மறைமுதலு நடுமுதலு முடிவினின்ற

தாமாத றெளிவிப்பார் போலுநீலத்
        தாங்கநெடுங் கடன்ஞால மொருங்குவாய்த்த
கோமாது மனக்குழையக் குழைந்தவாரூர்க்
        குழகனார் கிண்கிணிக்கா லழகனாரே. (கக)

### நேரிசையாசிரியப்பா

அழலவிர் சோதி முழுவெளி லெறிப்ப
இளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
உடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளொறழ்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகுகொப் புளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் காடத் தடங்களிற் றுரிவையு
மடங்கலி னுரியு முடன்கிடந் தலமா
விண்பட நிவந்த திண்பு யாசல
கெட்டிலைக் கமுகி னெடும்பெயி ருர்ந்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்
பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்தது தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
அந்தி வாங்கவ ரார்த்தன ரலைப்ப
ஒண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்மூந் தழுந்துக் கறும்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்



சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
ஒருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையி
னொத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
ஆருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுள்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்
றேவரி னொருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறிய தாகு மாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே. (உ0)

### நேரிசைவெண்பா

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென். (உக)

### கட்டளைக்கலித்துறை

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு மேற்பதெது
அதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்கும்
பொதுவே யென்றாலும் பொருந்துமெல் லோர்க்கும் பொதுவி
மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்மைகும் லைகளுமே. [னிற்கு

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வைய முழுது முழுதுண்ண வல்லாற் களித்து நவநிதியுங்
கையி லொருவற் களித்தெமக்கே கதிவீ டளித்தோர் கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால் விமலர் கமலைத் தியாகரென்ப
தைய ரிவர்க்கே தகுமுகம னன்று புகழு மன்றாமே. (உஉ)

## நேரிசையாசிரியப்பா

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பாசுகர் பாசப் பணிகுநர் பணிய
அரசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
எருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
இடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவ
டாமரைச் சீறடி தைவர் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தபனிய மாடத் தாமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
தணங்கிய நசைப்பி னணங்கனர் குழுமிக்
கைவருத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
வம்மென் கார்த்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலஞ்செய் வீதிப் பொன்மதிற் கமலை
அண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே. (உச)

## நேரிசைவெண்பா

இன்னி ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்ந்து
நன்னீர் வயற்கமலை நாதனார் - பொன்னார்ந்த
சேவடிக்கா ளானார் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலைந்து. (உரு)

## கட்டளைக்கலித்துறை

குலைவைத்த செவ்விள நீர்குளிர் பூம்பொழிற் கொம்புக்கின்ப
முலைவைத்த தொக்குங் கமலேசர் வேணி முகிழ்நகைவெண்
டலைவைத்த வேனற் புனமொக்குங் கங்கையத் தண்புனற்றி
னிலைவைத்த மாதரை யொக்குங் கனனெக்கு நீள்பிறையே. (உசு)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின்
பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும் வேணிக்
கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர்
நறையொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர்
நானிரண்டு மாவடுவு நாடிக் காணே
னிறையொழுகு மினநீரு நிற்கக் காணே
னீர்செய்த காரியமென் னிகழ்த்து வேனே. (உஎ)

## நேரிசையாசிரியப்பா

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
நோக் கறியத் திருக்கண் டிறந்தோய்
நான்மறை முனிவன் நான்முனை நிற்பு
விடற்கரும் பாசத்தொ டேற்பொறை நீங்க
உயிருண் கூற்றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
அடிக டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களொன் றோடினர் வணங்கி
அருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
இத்தலத் துற்றவ ரினித்தலத் தாரோனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வறமு
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மார்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வரமிகு கமலைத் திருநகர்ப் பொலிந்தோ
யெழுதாக் கிளவியின் மொழியெனப் படுதலி
னின்பெருந் தன்மை நீயே நவிற்றுதன்
மன்பெரும் புலமைத் தன்றே யும்பரி
னின்னே ரன்ன ரின்மையி னின்னிலை
கூறுய் நீயெனிற் றேறுந ரிலராற்
றன்னுடை யாற்றன் முன்னூர்முன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தகுமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனெ நீயே யாக
இருடீர் காட்சிப் பொருளெனத் துணர்த்தா
தியல்கா மரபி னிதுவிது பொருளென
மயக்கக் கூறுதன் மாண்புடைத் தன்றே
அளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்

றளரா நிலைமைத் தென்ப வென்றலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் றிசைமயங் கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்னு முழுவது
மெய்யா திசைக்குதும் போலு
மையநின் றன்மை யளப்பரி தெமக்கே. (௨௮)

## நேரிசைவெண்பா

அன்னற் கருஞ்சேற் றகன்பணை சூழாரூர்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள் - புள்ளுருவாய்
நண்ணிலா தாரை நகைக்கு நகையையன்றோ
தண்ணிலா வென்னுஞ் சகம். (௨௯)

## கட்டளைக்கலித்துறை

தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற
ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்
பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே. (௩௰)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும் வாம பாகத்
தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு
மிருவருக்கு மமுத மான
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு
மருவுருவாங் குணங்கண் மூன்று
நல்லுருவா தலினன்றோ விவாகில
காரணராய் நவில்கின் றாரே. (௩௧)

## நேரிசையாசிரியப்பா

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் கிடக்கு
மூவளகங் கண்ணுற் றுவாக்கட லிஃதெனப்

பருகுவா னமைந்த கருவிமா மழையுஞ்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்விலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைநிமிர்த் தெழுந்து
பாகொடு முலாவிப் படர்தரு தோற்ற
நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலை நிகர்க்குஞ்
சீர்கெழு கமலைத் திருநகர் புரக்குங்
கார்திரண் டன்ன கறைமிடற் றண்ணன்
மூவரொன் றெண்ணநின் முதற்றொழில் பூண்டு
மேவலிற் செய்துமென் றெண்ணா ராகி
அடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி
உடம்பு வேறா யுயிர்ப்பொறை சுமந்து
நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணா தொழிந்ததை நிற்க நாணா
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரொன் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
மிகப்பருந் தொண்டரொ டிகலிமற் றுன்னொடும்
பகைத்திறம் பூண்ட பதகனே யெனினு
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெந் தாய்க்கு
நமனார் செய்த நற்றவம் பெரிதே. (௬௨)

## நேரிசைவெண்பா

நற்கரும்பு முக்கட் கரும்பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னுஞ்—சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்கரும்பா மாரூரர்
காமக் கரும்புங் கரும்பு. (௬௩)



## கட்டளைக்கலித்துறை

கரும்புற்ற செந்நெல் வயற்கம லேசர்கண் டார்க்குமச்சந்
தரும்புற்றி னிற்குடி கொண்டிருந் தாரது தானுமன்றி
விரும்புற்று மாசுணப் பூணணிந் தார்வெவ் விடமுமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகைபங் கான துணிவுகொண்டே. (௬௪)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கொண்டலை யலைத்தபல தண்டலை யுடுத்தழகு
கொண்டகம லைப்ப தியுளார்க்
கண்டபி னெனக்கிதழி தந்தன ரெனப்பசலை
கண்டுயிர் தளிர்த்த மடவா
ளண்டரமு தொத்தவமு தந்தனையி ருட்கடுவி
தன்பாருண் மிச்சில்கொ லெனு
உண்டிடு முளத்திலவ ருண்குவரொன் மிச்சிலென
வுண்டதை மறுத்து மிழுமே. (௬௫)

## நேரிசையாசிரியப்பா

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்த
லமிழ்துகு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெகுண்டு
மாலா யினனென வணங்கினை யிரத்தலிற்
றேலா மொழியை வாழிய பெரிதெனப்
புலந்தன ளெழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்
பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின னல்லள் கூடா ளல்லள்
கைம்மிகு சீற்றமுங் காதலு மலைப்ப

வெள்ளப் புணர்ச்சியின் வேட்கையு ளடக்கி
உள்ளப் புணர்ச்சிய ளூடின னிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
இத்திற மகளி ரிளைஞரோ டாடு
நித்தில மாட நீண்மறு குடுத்தமைம்
மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா னாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் துரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
உண்டுமிழ் நீரீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றன்னாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே. (௧௬)

## நேரிசைவெண்பா

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே — யம்மேனி
மானே யழலையந்த வாணிநதி யுங்குமரன்
றானே குடைவேர் தனித்து. (௧௭)

## கட்டளைக்கலித்துறை

தன்னொக்குஞ் செல்வக் கமலைப்
பிரான்செஞ் சடாடவிமற்



றென்னொக்கு மென்னி லெரியொக்குங்
கொன்றை யெரியிலிட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்குங்
கங்கையப் பொன்செய்விக்கு
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல
னொக்குமவ் வெண்பிறையே. (௧௮)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வெண்ணிலவு கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோ
லியர்வீதி விடங்க ராரூர்க்
கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைக
ளிரண்டவற்றுட் கனக மேரு
அண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை
வணங்கிடுமெம் மன்னை யார
வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப்
பொருவதல்லால் வணங்கி டாதே. (௧௯)

## நேரிசையாசிரியப்பா

வண்டுகூட் டுண்ண தண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னக் கிளைதொறும் பணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிக
ணாற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி லடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி

தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டோடா மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின ணிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
அருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
அந்தமி றிருவொடு மாசவற் குதவி
ஒருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றாங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவா வழங்குமான் மன்ற
யாவிரு நமர்கா ளிறைஞ்சுமின் னீரே. (௪௰)

திருவாரூர்நான்மணிமாலை

முற்றிற்று.

---

வைத்தீசுரர்கோயில்

# முத்துக்குமாரசுவாமி
# பிள்ளைத்தமிழ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1925
MADRAS

நூல் - அ.

உ

திருச்சிற்றம்பலம்

## வைத்தீசுரர்கோயில்

# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

---

### விநாயகக்கடவுள்

பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான்
பொருப்பிற் பிறந்தவளைப்
பொழிநிலவு தவழுமுழு வெள்ளிவே தண்டத்தோர்
போர்க்களிற் றைப்புணர்ந்து
தென்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற்
செழும்பிடி பயந்தளித்த
சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக் கன்றினிரு
செஞ்சரணை யஞ்சலிப்பா
மின்பூத்த சிற்றிடைப் பேரமர்க் கட்கடவுள்
வேழங் கடம்படுபடா
வெம்முலைக் கோடுகொண் டுழுதுழு துழக்கமுகை
விண்டுதண் டேன்றுளிக்குங்
கொன்பூத்த தெரியற் கடம்பணி தடம்புயக்
குரிசிலைப் பொருசிலைக்கைக்
குமரனைக் கந்தபுரி முருகனைப் பாவுமென்
கொழிதமிழ்க் கவிதழையவே.

---

## க. காப்புப்பருவம்

### திருமால்

பூமேவு கற்பகப் பொங்கரிற் செங்கட்
புலோமசை வளர்த்தகும்பப்
புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு
பொருப்பனை விருப்பனைத்துங்
கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த
குழகனைக் கழகர்தொறுங்
கொத்துமுத் தமிழ்மொய்த்த கந்தபுரி முத்துக்
குமாரனைத் தனிபுரக்க
தேமேவு கடவுட் பொலங்கிரி திசைக்கரிக
டிகிரிகிரி குலகிரியொடுந்
திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற்
றெண்டிரை முகட்டுதித்த
பாமேவு மதுரம் பழுத்தமுத மொழுகும்
பசுங்குதலை மழலையஞ்சொற்
பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர்
பச்சைப் பசுங்கொண்டலே. (க)

### வைத்தியநாதர்

வேறு

ஒருபுறத்துமர கதமிமைப்பவொளிர்
மாமேருமற்றொரு மேருவைச்சாய்த்தென
உலகளக்கவிமிர் வடபொருப்பையொரு
தோளால்வளைத்தபி னாகியைத்தீக்கண
னும்முழுமுக்குடுமி யயிறிரித்துவரு
வாய்வாண்மழுப்படை வீரனைப்பார்த்தனோ
டெனுமற்றெழிலி னறவிளைத்துமெதி
ரோடாதுடற்றுகி ராதனைக்கூக்குரல்
விரிகடற்புடவி முழுதுணச்சமையு
மோர்காளகட்டுப்ர தாபனைக்கார்க்கடு



விடமெடுத்தரிய திருமிடற்றிலிடு
காமாரியைக்கவு மாரியைப்போற்றிரு
விழிமுனிற்கும்வடி வழகுடைக்கடவுண்
மாமோகினிக்கும ணாளனைச்சூக்கும
வெளியினிற்பரம நடநவிற்றுதிறல்
வேளூர்வயித்திய நாதனைப்போற்றுதுங்
குரவுசெச்சையொடு நறவுயிர்ப்பவிரி
தேனூறுவட்டெழு மார்பனைப்பேய்த்திரள்
குரவையிட்டவுணர் தடிசுவைத்திடவோர்
கூர்வேல்விடுத்தகு மாரனைப்பார்ப்பதி
குமரனைச்சமரி லுருமுகக்குளிறு
காலாயுதக்கொடி யாளனைக்கோட்டிய
குறுநகைக்குமன முருகவெற்பவர்த
மானோடுமற்பொரு தோளனைத்தாக்கிய
திரண்மருப்பினமர் பொருதனிக்கடவுண்
மால்யானையைப்புணர் காளையைச்சாற்றிய
செழுமறைப்பொருளி னுரைவிரித்துமெனும்
வேதாமுடித்தலை மோதுகைக்காய்ப்பொடு
திருவடித்துணையின் முடிபதித்தவடு
வாறுதமெய்ப்புக ழாளியைப்பூட்டிய
சிறைவிடுத்தமரர் குறைமுடித்துதவு
சேனாபதிப்பெரு மாடனைக்காக்கவே. (உ)

### தையனாயகியம்மை

வேறு

குழையடர்ந்துவடி கணைதுரந்துசெறி
குமிழ்மறிந்தவிழி நவ்வியைக்கோட்டொடு
குவடெறிந்தமுத கலசம்வென்றதட
முலைசுமந்தமலை வல்லியைச்சேற்றொளிர்
குமுதம்விண்டசுவை யமுதமுண்டினிய
கொழுநர்கொஞ்சுசிறு கிள்ளையைத்தாட்டுணைக்

குழுகுதொண்டர்பிழை யறமறந்துபிறர்
குணமிகழ்ந்தநக வில்லியைச்சேட்செறு
மெழுபெரும்புவன முழுதொருங்குதவு
மிறைவியென்றுமறை கையெடுத்தார்க்கவு
மிடைநுடங்குமட நடையிளங்குமரி
யெனவிருந்தகன் கன்னியைப்பூத்தவென்
னிதயபுண்டரிக மலரிலெந்தையொடு
மினிதமர்ந்தவொரு செல்வியைப்பாற்றெரு
மிருவர்கண்கன்கது வரியசெஞ்சுடரி
னிடமருங்குடைய தையலைப்போற்றுது
முழுதுணர்ந்துமுணர் வரியதொன்மையொரு
மொழியின்விண்டசிறு பிள்ளையைச்சூர்ப்பெயர்
முதுபழம்பகையை யறவெறிந்தவுணர்
முதறடிந்தனி வில்லியைப்பாட்டளி
முரலவிண்டதரு நிழறெழும்புகுடி
புகவழங்குகொடை வள்ளலைப்போற்றுடி
முடியுமின்றிவெறு வெளிகடந்துமறை
முடிவினின்றநிறை செல்வனைக்காத்தொறு
மழலைவண்டுதட மலர்குடைந்துபுது
மதுவருந்திரறு மல்லிகைச்சேக்கையின்
வடிபசுந்தமிழி னிசைபயின்றபெடை
யொடுதுயின்றினிய செவ்வழிப்பாட்டினை
வருவிபஞ்சிபயி றருமதங்கர்தெரு
மாமுரன்றுறொடு வைகறைப்போய்ச்செழு
மலரிலஞ்சிதொறு முலவுகந்தபுரி
மருவுகந்தனையெம் மையனைக்காக்கவே. (௧)

கற்பகவிநாயகக்கடவுள்

வேறு

கடாமுமிழ் கைக்கதக் கிம்புரிக் கோட்டொரு
காசல மிட்டமெய்க் கஞ்சுகிச் சேற்பவொர்



படாமணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள்
பராவரு கற்பகக் கன்றினைப் போற்றுதும்
வடாதுபொ ருப்பினிற் றுன்றுபுத் தேட்கெதிர்
மனேலைய முற்றமெய்ப் பண்பினைக் காட்டிய
சடானன னைத்தலைச் சங்கம்வைத் தாற்றிய
சடாயுபு ரத்தருட் கந்தனைக் காக்கவே. (௨)

பிரமதேவர்

வேறு

பைங்காய்க் கமுகு செம்பழுக்காய்ப்
பவள முதிர்ப்பக் கதிர்ச்செந்நெல்
பனிமுத் துகுக்குஞ் சோணாட்டின்
பரிசு பாடி ஞிமிறிரப்பக்
கொங்கார்த் திறைக்கு நறைக்காந்தள்
குறிஞ்சி மலரோ டணிந்தநறுங்
குஞ்சிப் பெருமான் வேதபுரி
குமரப் பெருமா டனைக்காக்க
செங்காற் கருங்கட் பைந்தொடியார்
சிற்றாய்ப் பாடிப் பெருங்குடியிற்
றீம்பா றிருடிக் கட்டுண்டு
திரியா வண்ணர் திருத்தாதைக்
கங்காப் படங்கப் பாறயிர்நெ
யருந்தேன் கடலோ டிருந்துண்ண
அகிலம் படைத்துத் தனக்கேற
வன்னம் படைத்த பெருமானே. (௩)

தேவேந்திரன்

வேறு

காணுறு கற்பகக் காவுமூ வுலகுமக்
காவென நிழற்றுமொற்றைக்
கவிகையுங் குணதிசைக் காவலும் பிறவுமுள
காணியுங் காணியாக

வானாறு கோட்டிமைய மலைவயிறு வாய்த்ததலை
மகளுக்கு மணமகற்கு
மருமகளை யுரியதன் றிருமக ளெனப்பெற்ற
மாலடி களைத்துதிப்பாம்
பானாறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென்
பைங்குவளை வாய்குதட்டும்
பணைமருப் பெருமைமடு மடிமடை திறந்ததீம்
பாலாறு பங்கயச்செந்
தேனாறு டன்கடவுள் வானா றெனப்பெருகு
சித்தாமிர் தஞ்சிவபிரான்
சீர்த்திப்ர தாபங்கர் தினகர புரித்தேவ
தேவனைக் காக்கவென்றே. (௬)

## திருமகள்

### வேறு

மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி
வனத்துழாய்க் காடுமூடி
மாயிருள் வழங்குதன் றிருமாளி கைக்கந்தண்
மணிவிளக் கிட்டுமுட்டாட்
கானிறைக் குங்கமல வீட்டுக்கு நெட்டிதழ்க்
கதவந் திறந்தளித்துங்
காதன்மை காட்டுங் கவுத்துவத் துடன்வந்த
கன்னிகையை யஞ்சலிப்பா
மீனிறப் புணரியை விழுங்குங் கடற்றானை
வெள்ளமொடு கள்ளமனமு
மெய்யுமிரு ளத்திரளு மவுணக் கருங்கங்குல்
விடியக் கடுங்குரல்விடுந்
தீநிறக் குடுமிவெண் சேவலை யுயர்த்துவண்
சிறைமயிற் பரிநடாத்துஞ்
சேவகப் பெருமானை வேதபுரி வருமிளஞ்
சேயைப் புரக்கவென்றே. (௭)



## கலைமகள்

துறைபட்ட மறையவன் செந்நாப் படிந்துதன்
சுதைந்நறுஞ் சிதைவுறாமே
தொன்மறை கனிந்தூறு மன்பனீ ரூறலிற்
றூத்துகி ளனைப்புறாமே
நறைபட்ட வெண்டோட்டு நளினப் பொகுட்டெமது
நன்னெஞ் செனக்குடிபுகு
ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்ளமுதை
நாத்தழும் பத்துதிப்பாஞ்
சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந்
தீர்த்தந் திளைத்தாடிய
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்
றெள்ளமுத மயமாகலா
லுறைபட்ட சுதைநிலவொடிளவெயிலு மளவளா
யுண்ணச் சகோரம்வெஃகு
மோங்கெயிற் பரிதிபுரி முருகனைச் சண்முகத்
தொருவனைக் காக்கவென்றே. (௮)

## சத்தமாதர்கள்

### வேறு

பயிறரு முதுமறை நூலைத் தெரித்தவள்
பகைதொகு புரமெரி மூளச் சிரித்தவள்
பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவ
ளெயிறுகொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவ
ளெறிதரு குலிசம்வி டாமற் றரித்தவ
ளிடுபலி கொளுமொர்க பாலக் கரத்தின
ளெனுமிவ ரெழுவர்க டாளைப் பழிச்சுதுங்
கயறிரி சரவண வாவிக் கரைக்குரை
கழலொடு பரிபுர மோலிட் டிடக்கட

களிறொடு களிறெதிர் மோதத் திசைத்திசை
கடுநடை யுளதக ரேறச் சமர்த்தனை
முயறரு கறையொடு தேய்வுற் றிளைத்தொரு
முழுமதி குறைமதி யாகத் துசிற்கொடி
முகிலொடு தடமதில் வேதப் பதித்தனி
முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே.

### முப்பத்துமுக்கோடிதேவர்கள்

வேறு

முறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு
சொர்க்கத் தலத்தோடு சேடசயனத்தையு
முடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதித்தவர்த
மக்குக் கொடுத்தானை மாதிரமொரெட்டையு
மிறைப்பொழு தினிற்பொடி படுத்தருங் கொடுக்கவல
சத்திக் காத்தானை யூதியமெனத்தனை
யிருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெமர்
சித்தத் திருப்பானை யாறிருபுயத்தனை
வெறுப்பொடு விருப்பினை யறுத்தவ ருளத்துமலர்
பத்மப் பதத்தானை வேதபுரியிற்சின
விடைக்கொடி வலத்தினு மடக்கொடி யிடத்துமுள
முக்கட் டிருத்தாதை யார்பணிகுருக்களை
மறைக்கிழ வனைத்தலை புடைத்துல் கனைத்தினையு
மொக்கப் படைத்தானை மூவிருமுகத்தனை
மருத்துவர் வசுக்களி ருருத்திர ரெனப்பொலியு
முப்பத்து முக்கோடி தேவர்கள்புரக்கவே.



## ௨. செங்கீரைப்பருவம்

---

இருக்கோ லிடும்பரி புரக்கோல முந்நுதலி
லிட்டபொட் டுஞ்சுட்டியு
மெரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரைஞாண்
மிளஞாயி றுதயஞ்செயு
முருக்கோல முஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி
யுச்சியும் வாளிமுத்து
மொள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டெண்
டோடரிக் கண்களிக்கு
மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு
மருந்தா யிருந்ததெய்வ
மகக்கோல மேழுதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமு னடந்துமற்றத்
திருக்கோல முடனொரு மணக்கோல மானவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (௧௧)

கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக்
கொண்டவகி லாண்டங்களின்
குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக்
கூடினுந் தான்றனக்கச்
சொம்பாதி யன்மைக் கனைத்துந்தன் மயமெனுஞ்
சுருதிகரி யாவைத்துமச்
சுருதிக்கு மெய்ச்சுடர்ப் பரிதிக்கு மிரவிகுல
தோன்றற்கு மிளவலுக்குஞ்
சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந்
தவமுனிவ ரெழுவருக்குந்
தண்ணளி சுரந்திட்ட நீராத வினைதீர்த்த
தம்பிரான் றிருமேனியிற்

செம்பாதி யுங்கொண்ட தையனு யகிகுமர
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (கஉ)

கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக்
களிற்றோடு முட்டவிட்டுக்
ககனவட் டத்திஞெடு பரிதிவட் டத்தைவளை
திகிரிவட் டத்திலிட்டு
முக்கட் டிருத்தாதை கோதண்ட மெனவைத்த
வேதண்ட மாதண்டமா
மூதண்ட கூடந்தரி கூடத்தொ டுஞ்சாடி
மூரிக் கடாசலமவன்
மெய்க்கிட்ட சட்டைக்கு நேரிட் டிடப்பட்ட
மேகபட லத்துமொண்டு
மேல்கட லினைப்பெருங் கீழ்கடல் புகப்பெய்து
விளையாட்டு வீரர்களொடுந்
திக்கெட்டும் விளையாடு சேனு பதிக்கடவுள்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (கங)

மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு வாணிக்குநான்
மறைமுதலி செந்நாத் தடந்தைய லாளொடும்
வயித்தியக் கடவுளார்க்கு
மெய்விரிக் குந்தொண்ட ருள்ளத் தடத்திஞெடு
வேதச் சிரங்கடுப்ப
வேதபுரி கந்தபுரி புள்ளூ ரெனப்பொலியும்
வேளூர திசைதிசைதொறுங்
கைவருத் தாமகளிர் குரவையாட் டயர்பெருங்
கயிலைத் தடஞ்சாலுங்



கனகா சலத்தும்வள ரிமையா சலத்துமுயர்
கந்தமா தனவெற்பெனத்
தெய்வதப் பிடியோடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (கச)

மீனேறு குண்டகழி நீவாய் மடுத்ததனி
வில்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கு
மானே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கு
மருமருந் தாகின்ற
வாதிப் பிரானென்று மும்முதற் கடவுளு
மடித்தொழும் பாற்றமற்றக்
கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணித்தெனக்
குறையிரந் தவடொண்டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. (கரு)

வேறு

செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி
திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்

பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக்
கதிர்முத் தொடுமாட
அம்பவ ளத்திரு மேனியு மாடிட
வாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை. (௧௬)

குழையொடு குழையெதிர் மோதிக் காதணி
குண்டலம் வெயில்வீசக்
குமுத விதழ்க்கனி வாயமு தூறிய
குறுநகை நிலவூர
முழுவயி ரப்புய வலயமு முன்கை
முதாரியு மொளிகால
முத்த மரும்பி யெனக்குறு வேர்வு
முகத்தி லரும்பியிடப்
புழுதி யளைந்த பசுந்திரு மேனிப்
பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை
பொழியருள் கரைபுரள
அழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி
யாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை. (௧௭)

விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே



கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணுமே
உருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துதி
ஞெண்பத நோவாமே
யொருதா னூர்தி யெழுந்திரு கையு
மொருங்கு பதித்துநிமிர்ந்
தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை. (௧௮)

வேறு

கும்ப மதக்களி யானை யிரண்டே யொன்றேமைக்
கொண்டல் விழிக்கயன் மீனு மிரண்டே கொண்டேயிச்
சம்ப ரனைப்பொரு சேவகன் வந்தான் வந்தானும்
சண்டை கொளற்கென சேர்வனு மென்பா லன்பாலே
அம்ப வளக்கொடி யேவனர் கொம்பே யென்றேகி
யன்று புனத்துயிர் சோர்வது கண்டே முன்போதுங்
கம்ப மதத்தர் சகோதர செங்கோ செங்கீரை
கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. (௧௯)

திங்க ளுதற்றிரு மாதொடு நின்றே மன்றுடெஞ்
செங்கண் விடைக்கொடி யோனருள் கன்றே யென்றேயா
யெங்க ளுளத்தமு தூறு கரும்பே யன்பாளர்க்
கின்ப மளிக்குமெய்ஞ் ஞான மருந்தே யொன்றாயின்
கொங்கலர் மைக்குழல் வாழ்பெருதி வண்டே வண்டேதுங்
கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்றோதுங்
கங்கை மகட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை
கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. (௨௰)

## கூ. தாலப்பருவம்

பில்கும் பசுந்தே னசும்பிருந்த
பின்ரு ழளகத் தரமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
போரா யத்துச் சிறுமருங்குற்
கொல்குங் கொடிபோய் நுடங்கியிட
வோங்கும் பளிக்கு நிலாமுற்றத்
துயர்சூ ளிகையின் மரகதத்தி
னொளிகால் வீசத் தெளிவிசும்பிற்
பல்குஞ் சுரபி தரங்கநெடும்
பாகீ ரதியின் கரைசிளைத்த
பசும்புல் லெனச்செந் நாவளைக்கும்
பைம்பொற் றலங்கள் பலகோடி
மல்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (உக)

தொடுக்குந் தொடைவெண் டுகிற்கொடிக
டொடுநீர்ப் பரவை முகம்புழுங்கத்
தோன்றும் பரிதி மணித்திண்டேர்
தூண்டுங் கலின வாம்பரியை
முடுக்குஞ் சுடர்ப்பொற் றலத்திழைத்த
முழுநீ லத்தி னெழுகொளியின்
முழுகுங் கடவுண் மால்யானை
முகிலிற் றோன்ற வகலிடநின்
றடுக்குங் களிறென் றமகளி
ரையுற் றிடத்தன் வெளிறுமுடம்
பளறு படிந்த தெனக்கங்கை
யாற்றுப் பசும்பொ னசும்புபுனன்



மடுக்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (உஉ)

தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத்
திரண்மா மணிகள் வெயில்விரிக்குஞ்
செம்பொற் றலத்துப் போமர்க்கட்
சிறியார் நறிய வகிற்புகையிட்
டாற்றுங் குழற்காட் டினைப்புயலென்
றாடு மயில்கண் டம்பவளத்
தரும்பு நகையைச் சகோரப்புள்
ளருந்த விரிந்த முழுநகைவிண்
டூற்று நிலவுக் கிந்துசிலை
யொளிர்மா ளிகையுஞ் சூளிகையு
முருகிப் பெருகுங் கலுழிவெள்ள
முவரோ டுவரிக் கடற்புலவு
மாற்றுங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (உங)

கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாவியங்குங்
கீழ்நீ ரழுவக் குண்டகழி
கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து
திளைக்குங் கமஞ்சூ னெடும்புயலைச்
சிறுகட் பெருங்கைப் பகடென்றோர்
செங்கட் களிறு பிளிறதிமிர்
திகிரி கிரியென் றிவர்ந்துடல
மிளைக்கும் படிவிண் டொடநிவந்த
வெழிற்பொற் புரிசை விண்டுபதத்

தேறு மேனி பொற்றருவக்
கிடுவே வியுமா யேழுலகும்
விளக்குங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையான் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (௨௪)

சோலைப் புறமும் புடைக்கனிக
ளேக்கு முடத்தெங் கிமையவர்தந்
தோன்றற் றிருவோ லக்கத்துத்
தோகை மயிலி னடங்குயிற்று
மேலைக் கருங்கொந் தளவளகத்
திளமா தருக்கு முதிர்வேனி
விளைப்பாற் றுதற்குத் தாற்றொடுஞ்செவ்
விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த
காலைப் புயலின் முகந்துடைக்குங்
கமுகு பழுக்காய்ப் பவளமுடன்
கதிர்முத் திட்டுச் செழும்பாளைக்
கற்றைக் கவரி புடையிரட்டு
மாலைப் பழனப் பரிதிபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையான் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (௨௫)

வேறு

மாலி மயத்து மடப்பிடி பெற்று
வளர்த்த விளங்களிறே
மழவிடை யேறிரு மாமடி மட்டென
வைத்த கவுத்துவமே
மூல மெனக்குல நான்மறை யோலிடு
முழுமுத லேமுளை



முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி
முத்திக் கொருவித்தே
காலை யிளங்கதி ருக்கெதிர் முதிருங்
கதிர்செம் பவளமுடன்
கதிர்முத் திட்டு வணங்கக் கன்னல்கொல்
கமுகுகொ லெனவளருஞ்
சாலி வயற்றமிழ் வேளூ ரடிகேள்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. (௨௬)

கருமுகி லுக்கரி தாமடி வாரங்
கண்டிரு பறவைகடங்
கண்களி பொங்கவொர் பறவை முடித்தலை
காணு துட்குவரப்
பொருபுன லருவித் தலையின் மிசைத்தவழ்
புதுமதி நிலவொழுகப்
புன்னு ரிற்பொலி வெள்ளி மலைக்கட்
பொன்மலை யைக்குவவு
குருமணி வயிரப் புயமென மெட்டுக்
குவடுஞ் சுவடுபடக்
குத்திப் பொருமிரு கோடு படைத்ததொர்
கூர்தர் பிடிபெற்றுத்
தருமொரு தொந்தித் தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. (௨௭)

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட
வொளிவிடு முழுமணியே
யுயர்மறை நூற்கலை முடியின் முடிந்திடு
மொழுகொளி மாகதமே

விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர்
விரியு மிளஞ்சுடரே
மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததொர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே
புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே
புள்ளூ ரெனவெம துள்ளத் தடங்கிற
புத்தமு தக்கடலே
தண்ணொளி பொங்கிய கருணை நிதியே
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. (௨௮)

வேறு

தோலா தமுத்தமிழ் நாவா மூவா மாவாமச்
சூர்வே ரறத்தொடு வேலா நூலா நூலோதுஞ்
சீலா மலைக்கொடி பாலா கீலா மேலாகுந்
தேவா இபற்கொரு தேவா வோவா தேகூவுங்
காலாயுதக்கொடி வீரா வேரா வேறேறுங்
காபா லிபெற்றகு மாரா வீரா பேராளா
சேலார் வயற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனா பதிப்பெரு மானே தாலோ தாலேலோ. (௨௯)

ஊனா யுயிர்க்குயி ரானாய் தாலோ தாலேலோ
வோதா துணர்ந்திடு போதா தாலோ தாலேலோ
ஆனா வருட்கனு பானா தாலோ தாலேலோ
வாயா தசொற்சொனு பாயா தாலோ தாலேலோ
நானா யெனக்கரி தானாய் தாலோ தாலேலோ
நாதா திகட்கனு பூதா தாலோ தாலேலோ
தேனார் பொழிற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனா பதிப்பெரு மானே தாலோ தாலேலோ. (௩௰)



## ௪. சப்பாணிப்பருவம்

முடங்குந் திரைப்பாவை வயிறுளைந் தீன்றநறு
முளரிப் பிராட்டிவைத்து
முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை
முதிருமென் குதலைகற்பத்
தொடங்குங் குறப்பாவை சுற்றைக் குழற்கிற்
றாமமொடு தாமமிட்டுச்
சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டுதீட்டிக்
குடங்கைக் கிடங்கா நெடுங்கட் கடைக்கழுகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத் தடத்தும் பசுங்களப மப்பியவள்
குற்றேவன் முற்றுமாற்றித்
தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட்டவன்
சப்பாணி கொட்டியருளே
தையலா யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. (௩௧)

மழைக்கொந் தளக்கலப் மயிலிளஞ் சாயனெடு
மதாரிக் கெண்டையுண்கண்
மான்கன்றை யமருலகு வாழப் பிறந்திடு
மடப்பிடியை வானவில்லைக்
குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கையேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
கொம்புமின் கொடியினெல்கி
இழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன்
னிளமுலை முகங்கோட்டிநின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கணைக்
கின்னமுத மூற்றவின்பந்

தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
தையலொ டகிமருவு தெய்வா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. (௩௨)

உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட
வும்பருஞ் செங்களம்பட்
டொண்பரிதி யுடல்கிழித் தோடுங் கடற்றானை
யொளிறுவா ளவுணர்குழுவுந்
தெண்ணிலா மதிநுதற் றெய்வப் பிணாக்கள்வாய்த்
தேனமுத மமுதவாரித்
தெள்ளமுது முடனிருந் துண்ணப் பணித்திட்ட
செங்கைவேல் பைம்புனத்துப்
பண்ணுலா மழலைப் பசுங்கிளி யெயினர்பொற்
பாவைவிழி வேலொடொப்பப்
பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துநின் றவடிருப்
பவளத்து முத்தரும்புந்
தண்ணிலா வுக்கொண் சகோரமென நின்றவன்
சப்பாணி கொட்டியருளே
தையலொ டகிமருவு தெய்வா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. (௩௩)

மடாவைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின்
மயிலினஞ் சாயலுநிலா
மணிவட மறப்புடைத் திறமார்ந் தனதன
வணப்புங் குறித்துநோக்கி
இடையிடைப் பாவிக் கிளிப்பிழைப் பில்லைகொ
லெனுந்திரு வுளங்குழைந்தாங்
கேர்கிளங் கொங்கையை யிணைப்புயத் தேந்திநின்
றெல்லா வுறுப்புமிற்கக்
குடமுலைக் கேவலன் குடிப்பிறப் புக்கிளை
குணக்கிடைத் தருமொலென்றக்



கோதையொடு நாளெய்த வுவயல் கட்குன
குறைகுணர் தனிதெரிக்குந்
தடமலர்க் கைத்தலஞ் சேர்த்தொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தையலொ டகிமருவு தெய்வா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. (௩௪)

விண்ணென் கடற்புவன முடவுப் படத்தேந்து
வேந்துமொலி யாந்தன்வைப்பும்
விரிநீர் வரைப்புமெழில் விஞ்சைய ரிருப்புமுகை
விண்டுநறை விரிமுண்டகக்
கண்ணன் றிருப்பதமு நான்முகக் கடவுள்பூங்
கஞ்சமுங் குலிசப்பிரான்
கற்பகக் காவுநின் றொண்டர்க டொழும்புக்கோர்
காணியா வைத்துமற்றத்
திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
சீறூரு மூரூர்தொறுஞ்
செந்தினைப் புனமுமு தண்சாரல் பிறவுமாஞ்
சீதனக் காணிபெற்றுத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே
தையலொ டகிமருவு தெய்வா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. (௩௫)

வேறு

கடலைச் சுவற வடித்து மிடித்துக்
கனவரை துகள்கண்டுங்
கடிதிற் றிரிய வஞ்சப்பகை யொப்பக்
காரவு ணக்கடலி
னுடலிற் பெருகிய குருதிக் கடல்பின்
வோங்கலொ டோங்கலமைத்

தொட்டிய வொட்டல சிற்பிற கிட்டவ
ரொழியப் பிறரையெலாந்
தடவுத் தாழியின் மத்தெறி தயிரிற்
றத்துதி ரப்புனலிற்
றசைகுடர் நிணமொடு மூளை குழம்பச்
சமர்விளை யாடல்செயுங்
குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி. (௬௬)

சமரிற் பட்டவர் வெட்டிய பூதத்
தலைவர்க ணிற்பமுதற்
றுமறை நாயகன் வயிறு கிழித்துத்
தந்தொழி றலைநின்றுங்
கமரிற் குரிய மடக்கொடி யாரை
யலைத்தனர் பற்றியெயிற்
றவுண ரெனத்தமை யுணரார் கணவர்க
ளார்ப்பில் வெடித்தபெருங்
கமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு
களமெதிர் கண்டினியக்
காரவு ணக்கடல் சூரொடு மாளக்
கடிதிற் றடிதியடற்
குமரக் கடவு ளெனப்பணி வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி. (௬௭)

அற்ற வுடற்குறை யிற்ற முடித்தலை
யங்கைத் தலம்வைத்திட்
டாடு பறந்தலை யோடுதி ரப்புன
லாறு கடத்துகெனுஞ்



சிற்றல கைக்கொரு பேரல கைப்பெண்
டோழி யக்கழியுந்
திகிரிப் பரிசில் விடப்படு சுழியிற்
றெருமால் மட்பகைஞன்
பற்றிய திரிகை திரித்து விடத்திரி
பரிசென வுஞ்சுழலும்
பம்பர மெனவும் வரும்படி யவுணர்
படக்கள வேள்விசெயாக்
கொற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி. (௬௮)

வேறு

வளரிள வனமுலை மலைமக ளுக்கொர்த வப்பேறே
மறிதிரை பொரநிமிர் கருணைகொ ழித்தபெ ருக்காறே
அளியுமி னமுதெழு வெளியிவரில் வைத்தசு வைத்தேனே
யறமுது தவமொடு வளரவ ளர்த்திடு நற்றாயே
களிமயில் கடவிவி ணடையமு டுக்கிய புத்தேளே
கலைமறை யெனுமுரல் வரியளி மொய்த்தம லர்க்காவே
தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. (௬௯)

கனியொடு சுவையமு தொழுகிய சொற்பயி றத்தாய்வேள்
கணையொடு பிணையென வுலவுக டைக்கண்ம டப்பாவாய்
நனைமலர் பொதுளிய வெழிலித ழைத்தகு ழற்கோதாய்
நளிர்புன மிசைவளர் கலபம்வி ரித்தம யிற்பேடே
எனவொரு குறமக ளடிமுடி வைத்தனை முத்தேவா
மிறைவரு முறைமுறை பணியவி ருக்குமு தற்றேவே
சினவிடை யவருண் மழவிடை கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. (௭௰)

## ரு. முத்தப்பருவம்

குருகு நாறு செந்தளிர்க்கைக்
கொடிநுண் ணுசுப்பிற் கோட்டிமையக்
குலப்பூங் கொம்பு நறவூழ்த்த
கொழுந்தா மரையோ டவிழ்ந்ததுழாய்ச்
சருகு நாறு முடைத்தலையின்
றூம நாறு திரடிண்டோட்
டாதை யாருங் கண்டுகண்டு
தடங்கண் களிப்பக் குரவுவிரிந்
தருகு நாறு திருமேனி
யந்தீங் குதலை மழலைகனிந்
தமுத மூறு பசுந்தேற
லசும்பு நாறத் தெய்வமண
முருகு நாறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. (௪௧)

நறவு விரிந்த விரைத்தோட்டு
நளினத் தொட்டிற் றடமுலைப்பா
லல்கி வளர்த்த கைத்தாயர்
நகைவாண் முகத்து மார்பகத்துங்
குறமெ னடைய சிறப்பங்காற்
குருதி ததும்ப வுதைந்துசில
குறும்பு செய்தா னெனமென்
கோல்கொண் டோச்சப் பெரும்புவன
மிறவு மொருநின் பெருந்தன்மை
நினைந்தாய் போலக் கனிந்தமுதச்
செக்குப் பசுந்தே னகம்பூற
செடுவெண் ணிலவு விரிந்தகுறு



முறுவ லரும்புஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. (௪௨)

பொழியுங் கருணைப் பெருவெள்ளப்
புணரி பெருகி யலையெறியப்
பொங்கி யெழுந்த பெருங்காதற்
புளகம் போர்ப்பப் போதுசெயும்
விழியு மனமுங் குளிர்தூங்க
விரிநீர்ச் சடிலத் தொருவனிரு
வீணைக் குதவுந் திருச்செவிகள்
விருந்தாட் டயா விரைகொழித்து
வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு
மதுர வமுது குழைத்தூற்று
மழலை ததும்பப் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தையொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. (௪௩)

கலைப்பா னிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலங்
கனியக் கனிய வமுதூறுங்
கடவுண் மறையு முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியுந்
தண்டே னறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழு நாறத் தடங்கரைகொ
லலைப்பாய் புனற்றெண் கடல்வைப்பு
மகிலாண் டமும்பன் மூறையீன்று

மழகு முதிர முதிராவென்
னம்மை யமுதூ றூற்கொண்ட
முலைப்பா லூறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. (௪௪)

புயலுண் டிருண்ட கொந்தளமும்
பொன்னங் குழையு மின்னகையும்
புளகம் பொதிந்த வளமுலையும்
புருவச் சிலையும் போர்த்தடங்கட்
கயலுங் கலப மயிலியலுங்
கன்னிப் புனத்தோர் பெண்ணமுதின்
காமர் நலனும் பன்னிரண்டு
கண்ணுன் முகந்துண் டின்னமுதி
னியலுஞ் சுவைநல் லவியொடுநீத்
தேக்கற் றிருந்தத் தாக்கணங்கி
னிழுமென் குதலை கனிந்தூறு
மிதழ்த்தேன் சுவைகண் டேமாப்பான்
முயலுங் குமுதக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. (௪௫)

வேறு

கோடுபடு கொங்கைக் குவட்டுக் கிளைத்திட்ட
கொடியிடைக் கடைசியர்குழாங்
குரவையிடு துழனியிற் கொண்டறிரை யத்தாவு
குழவுப் பகட்டுவாளை
சேடுபடு புத்தே ளிலத்துப் புனிற்றிளஞ்
சேதா வயிற்றுமுட்டச்



செங்கன் றெனத்தடவு மடிமடை திறந்தூற்று
தீம்பால் சினைக்கற்பகத்
தேடுபடு தடமலர்த் தேனருவி யொடுசொரிந்
தேரியொடு கானிரம்ப
விழுதுபடு கழனியுந் தெய்வமண நாறவேன்
றின்சுவை முதிர்ந்துவிளையுங்
காடுபடு செந்நெல்பைங் கன்னனிகர் புள்ளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. (௪௬)

துளிதூங்கு மழைமுகிற் படலங் கிழிக்குந்
துகிற்கொடிகள் சோலைசெய்யத்
தோரண முகப்பிற் றவழ்ந்தேறு கலைமதித்
தோற்றத்தை யறுகான்மடுத்
தளிதூங்கு தேனிறு லிதுதம்மின் வம்மினென்
றழிநறு வார்ந்துமிற்கு
மந்நலார் கைகூப்ப வாடவர் பிழிந்தூற்று
மளவினப ராதமிதென்று
ஒளிதூங்கு முகமதிக் கொப்பென்கி லேன்விடுதி
ருயிரொன்று மெனவிடலுமவ்
வுடுபதிக் கடவுணற வுண்டமற் றவரினு
முய்ந்தோ மொழிந்தோமெனக்
களிதூங்கு மாடமலி கந்தபுரி வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. (௪௭)

பூமரு வுயிர்க்குங் கருங்கொந் தளத்துவிரி
பூந்துகட் படலமுமணம்
பொங்கிய நறும்புகைப் படலமுங் காலமழை
பொழிமுகிற் படலஞ்செயத்

தாமரை முகச்சோதி யெழவெழுஞ் சிறுமுறுவ
றண்ணிலவு செயவெயில்செயத்
தழன்மணிக் கலனக னிதம்பமொடு வெம்முலை
தடங்கடலு மலையுஞ்செயத்
தேமரு குழற்கோதை மயிலனீர் கோசிகன்
செம்மலென வேறு புவனஞ்
செயவும்வல் லீரென மணந்திடை தணந்தவர்சொல்
செஞ்சொற் பசுங்கிளிசொலக்
காமரு மணங்குழைய மாதர்பயில் வேளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. (௪௮)

வேறு

மதியு நதியு மரவும் விரவு மவுலி யொருவன் முக்கணும்
வனச முகமு மகமு மலர மழலை யொழுகு சொற்சொலும்
புதல்வ விமைய முதல்வி யருள்செய் புனித வமரர் கொற்றவன்
புதல்வி தழுவு கொழுந குறவர் சிறுமி குடிகொள் பொற்புய
கதிரு மதியு மொளிர வொளிரு மொளிய வளிய கற்பகக்
கனியி லினிய வுருவ பருவ மழையி னுதவு கைத்தல
முதிரு மறிவி லறிஞ ருணரு முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. (௪௯)

வடிவி னழகு மெழுத வரிய புயமு நறிய செச்சையு
மருமம் விரவு குரவு மரையின் மணியு மணிகொள் கச்சையுங்
கடவு மயிலு மயிலு மொழுகு கருணை வதன பத்மமுங்
கமல விழியும் விழியு மனமு மெழுதி யெழுதி நித்தலு
மடிக ளெனவு னடிகள் பணியு மடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவு மகில மறையு மரியு மயனு முற்றுமின்
முடியு மடியு முணர வரிய முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. (௫௰)



## ௬. வருகைப்பருவம்

செம்பொற் கருங்கழ லரிக்குரற் கிண்கிணி
சிலம்பொடு கலின்கலினெனத்
திருவரையி லரைமணி கிணின்கிணி னெனப்பொலந்
திண்டோளின் வளைகலிப்ப
அம்பொற் பகட்டுமார் பிற்சன்ன வீரமு
மாரமுந் திருவில்வீச
வணிமகர குண்டலம் பரிதிமண் டலமென்ன
வலர்கதிர்க் கற்றைசுற்றப்
பைம்பொற் சுடர்ச்சுட்டி கட்டுசூ ழியமுடன்
பட்டமொளி விட்டெறிப்பப்
பங்கய மலர்ந்ததிரு முகமண் டலந்தொறும்
பனிமுறுவ னிலவரும்பக்
கும்பப் படாமுலை மலைப்புதல்வி செல்வக்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமாரகுரு பரன்வருகவே. (௫௧)

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின்
மடித்தல நனைப்பவம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனன்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்

குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வாச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. (௫௨)

இருளற விமைக்குமின் றிருவுருவி னலர்சோதி
யிளஞாயி றெனமுகையவிழ்
தேடுவிரி தாமரைக் காடுமுகிழ் நகைநில
வெறிப்பவலர் குமுதவனமுங்
கரைபுரள வலைமோது கடலைக் கலக்குமழ
களிறென வுழக்கியொருநின்
கண்மலர்கள் செம்மலர்க ளாகமோ கப்பெருங்
கலவியங் கடலின்மூழ்கும்
வெருளின்மட னோக்கினி ளமகளி ருடனாடும்
விளையாட் டெனத்திரைபொரும்
வெள்ளநீர்ச் சரவணப் பொய்கையந் துறையினீர்
வீரக ளொறுங்கோளரிக்
குருளைக ளொடும்புனல் குடைந்துவிளை யாடிய
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. (௫௩)

கட்டுண்ட படர்சடைக் காட்டெம் பிரான்வைத்த
கலைமதியொ வடையவீயக்
கவரிதிரு முடியினித் திலமிட் டிழைத்திட்ட
கதிரிளம் பிறையிணைப்பத்
தெட்டுண்ட பொன்முழுத் திங்களென் றேக்கறுஞ்
செழுமணிச் சுட்டுமோட்டுச்
செம்பாம்பு பைவிரித் தாடுதலு மோடிநின்
சிறகறுங் குஞ்சிக்கிடு
மட்டுண்ட பைங்குவலைக் காத்தளென் றிணையலம்
மாசுணம் வெருண்டோடலு



மணிமுடியி னருதலையை மற்றெமை நகைத்தியான்
மலரவன் றலைநீமுனங்
குட்டுண்ட தறியாய்கொ லெனவிதழ துக்குங்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. (௫௪)

அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற்
கடங்காமை யாலெம்பிரா
னலர்விழிகள் பொத்தலு மிருட்படல மூடவுள்
ளஞ்சிநின் றேங்கவேங்கிச்
செங்கைத் தலங்கொண் டெடுத்திணைப் பாட்டுர்
திருத்தாதை யார்க்குமுத்தர்
திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற்
றெறித்தமுத் தந்தருகெனுங்
கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங்
கண்ணீர் துடைத்தெடுத்துக்
கான்மலரு நீவித்தன் மார்புற வணைக்குமக்
கவுமாரி யருண்மாரியிற்
கொங்கைக் குடங்கொட்டு பாலருவி யாடுங்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. (௫௫)

வேறு

பைந்தண் கமல வட்டவணைப்
பாவை யனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படல மூட முடைநறவின்
கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செச்செலைப்பைங்

கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்
தந்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறுஞ்
சமயத் தவர்போற் றலைமயங்கு
மந்தண் பழனக் கந்தபுரிக்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. (௫௬)

வள்ளைக் குழையிற் குவடிபோ
மடமா னுளக்கிற் கடைசியர்கண்
மாலைக் குழல்வண் டோலமிட
மடுவில் வெடிபோம் வரிவாளை
பள்ளத் திருடுங் கழுவநீர்ப்
பரப்பென் றகல்வான் மிசைத்தாவப்
பாகீ ரதித்தீம் புனல்கிடைத்த
பரிசு வீட்டின் பயன்றுய்க்கு
முள்ளக் கருத்தாற் பிறிதொன்றை
யுண்மைப் பொருளென் றுள்ளவுந்த
முணர்விற் றெய்வங் கடைக்கூட்ட
வுறுதி கிடைத்த படிபோலு
மள்ளற் பழனப் புள்ளூருக்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. (௫௭)

நஞ்சிற் றோய்த்துக் கொலைதீற்று
நயன வேலுங் கரும்புருவ
நாமச் சிலையு மகலல்கு
னகுபொற் றேரு மிகல்கடந்து



வஞ்சிக் கொடிநுண் ணிடைசாய்த்து
மதர்த்துக் களித்த மால்களிறு
மற்றும் படைகள் பற்பலவும்
வருத்துக் கொண்டு மடலவிழ்ந்த
கஞ்சத் தவிசிற் றிருவன்னார்
கடலந் தானைக் கைக்கிமிரக்
காமன் படைவீ டெனப்பொலியுங்
காட்சி யானு மப்பெயரிட்
டஞ்சொற் றமிழோர் புகழ்வேளூர்க்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. (௫௮)

வேறு

உலகு குளிர வெமது மதியி லொழுகு மமுத கிரணமே
யுருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
யறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமைதழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. (௫௯)

இழுமெ னருவி சொரியு மிமைய முதல்வி புதல்வன் வருகவே
யியலு நடையும் வடிவு மழகு மெழுத வரியன் வருகவே
ஒழுகு கருணை முழுகு கமல வதனன் வருக வருகவே
யொருவ னிருவ ரொடுகை தொழுந லுபய சரணன் வருகவே
விழுது விடுவெ ணிலவு பொழியு நகையன் வருக வருகவே
விளரி பயிலு மளியு ஞிமிறும் விரவு குரவன் வருகவே
மழலை முதிர முதிரு மதுர வசனன் வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. (௬௰)

## எ. அம்புலிப்பருவம்

மண்டலம் போற்றுருவ மமுதமய மாய்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வானுறு தலைமடுக் கப்பொங்கு மானந்த
மாக்கட லிடைத்தோன்றலாற்
றண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்வின் னக்கரத்
தாமரை முகிழ்த்திடுதலாற்
சகலபுவ னத்திலு முயிர்ப்பயிர் தழைப்பாற்
றண்ணளி சுரந்திடுதலாற்
றண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பாஞ்
சோதிகட் பொறியாதலாற்
ரேன்றலிவ னின்னையொத் தனனு னினக்குமொரு
துணையிவன் போலில்லைகா
ணண்டாண் டத்தொடகி லாண்டம் படைத்தவனு
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௧)

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்
தோகைமேல் கொண்டருளினாய்
தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோதுமச்
சோதிவே லையுமுகந்தா
குற்றமில் குணத்தைக் குறித்தவிர வலர்முகங்
கோடா தளித்தல்செய்தாய்
கோகனக நாயகன் வாக்கூ விடுங்குக்
குடங்கொடிய தாகவைத்தா
யுற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனுமுக
வொளிநிலா நகைமுகிழ்த்தா
யுன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமா
லினையுமிவ னெவ்வாறிரா



னற்பொதி களைந்தவ னளித்தகும ரேசனுட
னம்புலீ யாடவாவே
அழகு பொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௨)

கங்கைமுடி யடிகட்கோர் கண்ணு யிருந்தியக்
கண்ணினுண் மணியிவன்காண்
கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
கலைமுழுது நிறையநின்று
னெங்குமிர வோனெனத் திரிதியிவ னடியவ
ரெவர்க்குமிர வினையொழித்தா
னிருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவ
னெவ்வுயிரும் வாழச்செய்தான்
பொங்கமுத மமுதா சனர்க்குதவி னாயிவன்
புத்திமுத் தியுமளித்தான்
புவனம் படைத்தவிவ னின்னின்மிக்
கானெனப் புகல்வதோர் பொருளன்றகா
ணங்கண்மறை யோவிட் டாற்றின் றவனுட
னம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௩)

பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட்
படலங் கிழிப்ப துணராய்
பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப்
பரப்பெலாம் பொலிவதோராய்
சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாதுளத்
திருமலர் திறக்கவறியாய்
சிறைவிரி சகோரப்பு ளன்றியெவ் வுயிருந்
திளைத்தின்ப மாரச்செயாய்
நீயிவற் கொப்பன்மை செப்புவதெ னிப்பரிசி
னின்பெருந் தவமென்சொல்கே

நெடியவன் முதற்றேவர் குறுகிநிற் பவுமுனை
நினைத்தழைத் தருளினன்கா
ணுயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவனொ
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௪)

தருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மொக்கத்
தலைத்தலை மயங்கத்தொகுஞ்
சந்நிதி யடைந்தவர்கள் பையுணோய் முற்றுந்
தவிர்ந்தக மகிழ்ந்ததவிராக்
கருமன்னு மூழிப் பெரும்பிணியு மாற்றிடுதல்
கண்டனை யிருத்தியானின்
கயரோக முடன்முயற் கறையுந் துடைத்திடக்
கருதிடுதி யேலெம்பிரான்
றிருமுன்ன ரள்ளியிடு வெண்சாந்து மற்றைத்
திருச்சாந்து நிற்கவற்றாச்
சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந்
திவலையொன் றேயமையுமா
லருவென்ன வுருவென்ன வன்றென்ன நின்றவனொ
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௫)

ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டெனவெடுத்
துரையா லுணர்த்துவதை யொழியவெவரெவர்கட்கு
மூன்கண் ணுளக்கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை யென்றுணர்தியாற்



பொழியாத புயறங்கு புவனமுந் திசைமுகப்
புத்தேள் பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகு மெவ்வுலகு வேண்டினும்
பொருளன் றிவற்குமற்றை
அழியாத வீடுந் தரக்கடவ னிவனுட
னம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௬)

நெட்டுடற் பைங்கட் கரும்பேய்கள் செம்மயிர்
நிரைத்தூணம் வீக்கியார்த்து
நிற்குங் குறட்பூத மொன்றினை விடுத்துடலி
னெடியபழு வென்புநெரியக்
கட்டெனப் பிடியெனக் கொடிறுடைத் தடியெனக்
கணநாதர் கடுகமுடுகிக்
கடல்வாய் திறந்தெனப் பிலவாய் திறந்தலறு
காட்சிநீ காணுயலை
மட்டுடைத் தூறுந் தடங்கமலன் முதலியோர்
வாய்புதைத் தஞ்சிநிற்ப
வருகென் றழைத்திடவும் வாரா திருத்தியான்
மற்றிவன் முனிந்தாலுனக்
கட்டதிக் கினிலுமொரு திக்கிலையெ மையனுட
னம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௭)

குன்றைத் திறந்திட்ட குடுமிவேல் சூருயிர்
குடித்திட விடுத்துநின்றான்
குண்டிகைக் கள்வனைக் குடுமித் தலைப்பசுங்
குருதி பொங்கப்புடைத்தா
னின்றைக் குழந்தையென் றெண்ணுது குலிசன்முத
லெண்மரும் பிறருமொருஞான்

றெதிர்நின் றுடற்றியவர் பட்டபா டறியா
திருத்தியலை யதுகிடக்க
மூன்றக்கண் வேள்விக் களங்கொலைக் களமென்ன
முடியமரர் மொத்துண்டாரவ்
முழுமதிக் கடவுளை யவமதிப் புண்டதை
மொழிந்திடல் கடவதன்று
லன்றைக் கனைக்கின்றும் வந்திருக் கின்றதினி
யம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௮)

தன்றும் பவக்கட லுழக்குமெலை முத்தித்
தடங்கரை விடுப்பவனுனைத்
தலையளிப் பான்வர வழைப்பவும் வராவிடிற்
றண்ணளி சுரந்துகருணை
வெள்ளங் கொழிக்குங் கடைக்கண் சிவப்பவிவன்
வெகுளாது விடினுமழுது
விழிசிவப் பக்காணி லிரவிபகை சாய்த்தவினை
வீரன் பொறுப்பானலன்
கள்ளம் பழுத்தகட் கடைசியர் சிறார்திரைக்
காவிரித் தண்டுறைதொறுங்
கதிர்த்த் திலங்குயி மணற்குன்ற மேறிநின்
கலைமதிக் கலசவமுதை
அள்ளூர் தடம்பணைச் சோணாட னிவனுட
னம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௬௯)

தன்னொத்த தெய்வச் சிறுருமின வீரரும்
தாணிழற் கீழ்நிற்பவிச்
சகதண்ட மண்டல மடுக்கழியு நாளமரர்
தமையழக் காண்பவனிவ



னின்னைப் பொருட்படுத் தொருவிரற் றலைசுட்டி
நீள்கழற் றுளுதைத்து
நெடுமலர்க் கண்பிசைந் தழுதழு தழைத்தனை
னினக்கிதில் வியப்பில்லைகாண்
பின்னற் றிரைச்சுர நதித்தண் டுறைத்தேவர்
பேதைக் குழாங்களென்னப்
பெருகுந் தடம்புனற் காவிரிப் பூவிரி
பெருந்தண் டுறைச்சிறைவிரித்
தன்னக் குழாந்திளைத் தாடுசோ ணாடனுட
னம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. (௭௰)

## அ. சிற்றிற்பருவம்

குறுமென் னடையு நெடுவெணிலாக்
கோட்டு நகையும் வாட்டடங்கண்
குளிர முகந்துண் டொளிர்சுட்டிக்
குஞ்சி திருத்தி நறுங்குதலை
முறுகு நறைத்தேன் கனிபவள
முத்துண் டுச்சி மோந்துகொண்டுன்
முகமுந் துடைத்து விளையாட
முன்றிற் புறத்துப் பொன்றதம்பி
இறுகும் புளகக் கும்பமுலை
யெம்பி ராட்டி விடுத்ததுமற்
றிளையார் மறுக மறுகுதொறு
மிடுக்கண் செயற்கோ வெந்தாய்நின்

சிறுகிண் கிணிச்செஞ் சீறடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்கோற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௭௧)

கொழுநாண் மலர்க்கற் பகமுநறைக்
குரவு நாறு நறுங்குஞ்சிக்
கோமான் மகனே நங்கள்குலக்
கொழுந்தே யென்று குறையிரந்து
தொழுவா னவர்த முடிசூட்டுஞ்
சோதி முடியிற் றகளொழுநின்
றணைத்தாள் வண்டற் றறைப்புழுதித்
தூளி படினும் படுகசுடர்க்
கழுவா மணியு நிலவுவிரி
கதிர்நித் திலமு மமையம்மை
கண்ணி லுறுத்த வடிகேணின்
காலி லுறுத்தல் கடனன்றாற்
செழுநான் மறையின் பெருஞ்செல்வச்
செருக்கே சிற்றில் சிதையேலே
செங்கோற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௭௨)

வழிக்குப் புறம்பா யாமிழைத்த
வண்டன் மனையவ் வசுரேசன்
வான்கூட் டுண்பா னடுக்கடலில்
வகுத்த நகரன் றிகழாமே
கொழிக்குஞ் சிறுமுற் றிலில்வாரிக்
கொடுவந் தடியே மனைமுன்றிற்
குவியா நின்ற மணிக்குவையக்
குருகுப் பெயர்க்குன் றமுமன்றாற்
சுழிக்குண் டகழி வாய்மடுப்பச்
சுடர்வால் வளைத்தெண் டிரைக்கரத்தாற்



சுரபி சொரிபான் மடையடைத்த
சோற்றி னொடுங் கலந்தூட்டிச்
செழிக்குந் தடங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்கோற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௭௩)

மூரிக் களிறூ மழவிடையோ
முடுகிற் றெனப்பார்த் தழியுனது
முகத்தி னழகெம் வடிக்கண்ணா
மொண்டுண் டனம்யா மெனவுமிகப்
பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயத்தைக் கண்ணேறு
பட்டே மெனவு மடிகள்பகை
பாராட் டுவதோர் பண்பன்றால்
வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை
விரிபூங் கமுகும் பால்பாயும்
வேழக் கரும்பு மிருட்பிழம்பை
விழுங்கிக் கக்குஞ் சுடர்ப்பரிதித்
தேருக் கெழில்செய் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்கோற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௭௪)

பொன்னங் கொடிபோ லுடங்குமிடைப்
புத்தேண் மகளிர் விளையாடப்
புனைமா ளிகையுஞ் சூளிகையும்
புதுக்கிக் கொடுத்தாய் பொதுஞான
மெய்ந்நின் றவருன் விழிப்பாவை
விளையாட் டயரவழியாத
வீடுங் கொடுத்தா யெம்மனையும்
விடுத்துச் சென்றான் மிகையுண்டோ

பின்னூர் திரைத்தீம் புனற்கங்கைப்
போராற் றூற்று நறைக்கோட்டுப்
பெருங்கற் பகத்தின் கழுத்தொடியப்
பிறழும் வாளைப் பகடுதைத்த
தென்னம் பழம்வீழ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (எ௬)

கானக் குறப்பெண் குடியிருந்த
கன்னிப் புனத்துத் தினைமாவுங்
கமழ்தேன் றெளிவு முண்டுசுவை
கண்டா யென்றே மதுவல்லான்
மீனத் தடங்க ணவண்மிச்சின்
மிசைந்திட் டதுவு நசைமிக்கு
விரைத்தீங் குமுதத் தமுதடிகள்
விருந்தா டியதும் விண்டோமோ
கூனற் பிறையின் கோடுரிஞ்சுங்
கொடிமா டத்து வெயில்விரிக்குங்
குருமா மணியாற் சுரநதியிற்
கொழுந்தா மரைகண் முறுக்குடைந்து
தேனக் கலருஞ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (எக)

பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும்
பெருமா னார்க்கு முலகேழும்
பெற்ற தாய்க்கு நீயருமைப்
பிள்ளை யெனிலெம் பேராய
வெள்ள மமைத்த சிறுசோறு
வேண்டி விடுகே மலதெளியேம்



விளையா டிடத்துச் சிறுகுறும்பு
விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ
கள்ள விழிச்சு ராமகளிர்
காமன் கொடியேற் றெனவியப்பக்
கற்ப தருவிற் படர்ந்தேறு
காமர் கொடிச்செங் கயல்பாயுந்
தெள்ளு புனற்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (எஎ)

மடல்வா யவிழ்ந்த குழற்பேதை
யொருத்தி திருத்தும் பகிரண்ட
மணற்சிற் றிலையோர் கணத்தின்கண்
மட்டித் தாடு மைந்தனருள்
விடலாய் தமியேஞ் சிற்றின்முற்றும்
விளையாட் டாகவொருநீயும்
வீட்டா நிற்பத் தொடங்கினையால்
வித்து முளையும் வேறன்றே
கடமா மருப்புஞ் சுடர்மணியுங்
கதிர்நித் திலமு மகளிர்முலைக்
களபத் தொடுகுங் குமச்சேறுங்
கரைத்து விடுத்தக் கடற்குட்டந்
திடராச் செயுங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (எஅ)

வாமாண் கலைப்பே ரகலல்குன்
மடமா னோக்கி னரமகளிர்
மகிழ்பூத் திருப்பப் புத்தேட்கு
வந்த விடுக்கண் மாற்றினையால்

கோமா னினக்கப் பெருந்தேவர்
குலமே யன்றி யடியேமுங்
குற்றே வலுக்கா மகம்படிமைக்
குடியாக் கொண்டாற் குறையுண்டோ
காய்மாண் குலைச்செவ் விளநீரைக்
கடவுட் சாதி மடநல்லார்
கதிர்ப்பூண் முலையென் றேக்கறப்பைங்
கமுகு நகைவாண் முத்தரும்புந்
தேமாம் பொழிற்றீம் புள்ளூடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௭௯)

கருவீற் றிருந்த பெருங்கருணை
கடைக்கண் பொழிய வீற்றிருக்குங்
கடவு ளியே பகிரண்டங்
கண்டா யெனின்வண் டடைகிடப்ப
மருவீற் றிருந்த குழன்மகளிர்
வண்டற் றுறைக்கு மணற்சிற்றின்
மனைகோ லுவது மற்றடிகேள்
வகுக்குந் தொழிற்கு மாறன்றே
குருவீற் றிருந்த மணிமாடக்
கொடிமா நகரத் தொறுமலர்ந்த
கொழுந்தா மரைப்பூங் கோயிலிற்பல்
கோடி யுருவங் கொண்டுசெழுந்
திருவீற் றிருந்த சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (௮௰)



## க௦. சிறுபறைப்பருவம்

---

ஊற்றும் பசுந்தே னுவட்டெட் டிதழ்விரியு
மொண்காந்தண் முச்சியுச்சி
யொருவனீ மும்முதற் கடவுளு மிளைப்பாற
வுலகெலாந் தலையளித்துப்
போற்றுந் திறத்தினைப் பழமறைக் கிழவன்
புரிந்தபகி ரண்டங்கடாம்
புதுக்குவ கடுப்பகெடு வெளிமுகட் டுக்குவிரி
புதுநிலாக் கற்றையிட்டுத்
தூற்றும் பெயற்கரு முகிற்படாத் தையும்வெண்
டுகிற்படா மாக்கிவீக்கித்
தொடுகடற் புவனப் பெருந்தட்டொ டண்டச்
சுவர்த்தலத் தூக்கும்வெள்ளை
நீற்றுஞ் சுதைத்தவள மாடமலி வேளூரா
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. (௮௧)

விளைக்கும் பெரும்புவன மொ[illegible]க் கரைந்தகடை
வெள்ளஞ் சுருங்கவீங்கி
வேதண்ட மெட்டினொடு மூதண்ட கூடத்தும்
விளையாடி யுலகமேழும்
வளைக்குங் கருங்கடல் பெரும்புறக் கடலொடும்
வாய்மடுத் தெதிரெடுப்ப
வருபுனற் காவேரி வளநாட நாடொறு
மதிக்கடவு ளேறியேறி
இளைக்கும் பளிக்கறை முயற்கறை யறக்கானு
மிளநிலா வெள்ளமூழ்கி
யெறிதிரைப் பாகீ ரதிப்புனல் குடைந்திடு
மிடைக்கொடி நகிற்கொடியெனத்

திளைக்குந் துகிற்கொடி முகிற்கொடிசெய் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. (௮௨)

இருளூர் தரங்கக் கருங்கடன் முகட்டெழு
மிளம்பிறை முயற்குழந்தைக்
கேறவிடு மோடமென வான்மீன் றடந்திரை
யெடுத்தெறியு நெடுமீனெனத்
தாளம் பதிர்திட்ட மணிமுறுவ லவரோடு
தருநிழற் செல்வருய்க்குந்
தபனிய விமானமும் வெயிற்கதிர்ப் போர்வையான்
றனியாழி திசையுருட்ட
உருளுங் கொடித்தேரும் வீற்றுவீற் றெழில்புனைந்
தோட்டுபொற் றெப்பமென்ன
வுலகேழு மலையெட்டு மொழுகுகதிர் விழுதுவிடு
மொண்ணிலாப் புணரிகோப்பத்
திரளும் பளிக்குமா டங்கள்பொலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. (௮௩)

மொய்ம்பிற் பெரும்புவன மொக்கச் சுமக்கின்ற
மோட்டாமை முதுகுளுக்க
முடவுப் படங்கிழிந் தாவரசி னுயிர
முடித்தலையு மூளைபொங்கக்
கம்பக் கடாயானை யெட்டும் பிடர்த்தலை
கழுத்தொடு முரிந்துகவிழக்
கதிர்மணிச் சூட்டுநெட் டரவெட்டும் வடவைக்
கடுங்கனற் கண்பிதுங்க
அம்பொற் றடம்புரிசை யெழுபெருந் தட்டுருவி
யண்டகூ டத்தளவலா



லவரவர் வழங்குதற் கிடுதலைக் கடையென
வடுக்கேழு நிலையேழுமாஞ்
செம்பொற் றிருக்கோ புரங்கள்பொலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. (௮௪)

தரிக்குஞ் சுடர்ப்பரிதி முழுமதிக் கடவுளொடு
தடமதில் கடந்தகநகர்
சாரவரி தாற்புவன கோடிகட் கொளிசெயச்
சதுர்முகன் கற்பந்தொறும்
விரிக்கின்ற விருசுடரு மொருவழித் தொக்கென
வியன்கதிர்ப் படலமூடி
வீங்கிருள் விழுங்குசெம் மணிமாட நிரையுமொளி
விளைபசுங் கதிர்வெண்புரி
புரிக்குஞ் செழுந்தரள மாடமும் வெயிலினொடு
பொழிநிலாப் போர்ப்பமுற்றும்
போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
போதுமே யிருபோதையுந்
தெரிக்குந் தடம்பணை யுடுத்ததமிழ் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. (௮௫)

வேறு

மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை
மடமயி லினமகவ
மால்கட லோலிடு மொலியென விரக
மடந்தையர் மனநெகிழப்
பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண்மகிழப்

பாரா தத்தொலி யெனவனு பூதி
பலித்தவர் னெக்குருக
அழலவிர் சோதியெ மைய னடஞ்செய
வாயிர மங்கையிளே
ரண்ண முலைத்திடு குடமுழ வொடுசுட
ராழி யவன்கொட்டு
முழவென வமாரு முனிவரு மார்ப்ப
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. (௮௬)

பெருவெளி முகடு திறந்திட் டண்டப்
பித்திகை வெடியாமே
போண் டத்துள வேதண் டங்கள்
பிதிர்ந்துதிர் வாகாமே
குருமணி சிதறிய வென்ன வுடுத்திரள்
கொட்டுண் டுதிராமே
குவடு படுந்திசை செவிடு படச்சிலர்
குடர்கள் குழம்பாமே
திருவிர லொடுநக கண்களி னுஞ்செங்
குருதி ததும்பாமே
சேயொளி நின்று துளும்பிட நின்சிறு
செங்கை வருந்தாமே
முருகலர் தாரவ னொருமுறை மெல்ல
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. (௮௭)

வம்மி னெனப்புல வோரை யழைத்திடு
வண்கொடை முரசமென
வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி
வாணர்க ளோடிவர



அம்மென் மடப்பிடி பொன்னுல கீன்ற
வணங்கை மணம்புணரு
மணிகிளர் மணிமுர சென்னவெ மையனெ
டம்மை மனங்குளிரத்
தெம்முனை சாய்தரு சமர்விளை யாடிச்
செங்கள வேள்விசெயுந்
திறன்முர செனவிமை யவர்விழ வயரச்
செழுநகர் வீதிதொறு
மும்முர சமுமதிர் காவிரி நாடன்
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. (௮௮)

வேறு

பெருகுசு வைத்தெளி நறவொழு கக்கனி கனியமுதே
பிடிநடை கற்றிட வடிகள்பெ யர்த்திடு மடவனமே
கருவரை னெக்குட னுருகமி ழற்றுமொர் கிளியரசே
கருணைசெ யத்தகு மரியணி டத்தெனு மொழிபுகலா
அருளில்பு னத்தவர் மகளிரு பொற்பதம் வருடல்செயா
வவண்முனெ டுத்துநின் முடியின் முடித்திடு காமலராற்
பருவயி ரப்புய சயிலன்மு ழக்குக சிறுபறையே
பரிதிபு ரிச்சிறு குமரன்மு ழக்குக சிறுபறையே. (௮௯)

இழுமென்மொ ழித்தெளி தமிழின்வ டித்திடு நவரசமே
யிதயவி ருட்டற வுணர்விலு தித்திடு சுடரொளியே
கழுவும ணிக்கல னடுவிலி ழைத்திடு குலமணியே
கனிதரு முக்கனி யொடுவடி கட்டிய சுவையமுதே
ஒழுகுந றைச்செழு மலர்விரி யக்கமழ் புதுமணமே
யுருகுமு ளத்தருள் பெருகியு வட்டெழு சலநிதியே
பழமறை கட்கொரு முதல்வன்மு ழக்குக சிறுபறையே
பரிதிபு ரிச்சிறு குமரன்மு ழக்குக சிறுபறையே. (௯௰)

## ௰. சிறுதேர்ப்பருவம்

போரோடு படைதுறந் துடறிறந் தோடுசெம்
புனலோட வோடிநிமிரும்
புணரிப் பெருந்தானை யவுணப் படைத்தலைவர்
பூதப் படைத்தலைவர்முன்
றூரோ டவிழ்ந்திட்ட குஞ்சிக் கிமைத்திட்ட
தழல்விழிக் கெதிர்செலாத
தாளுக்கு வாள்சோர் தடக்கைக்கு நாமநுந்
தாலிக்கு வேலிகொலெனப்
பீரோடு கொங்கைக்க ணீரோடு வெள்ளருவி
பெருகக் கடைக்கணிற்கும்
பெய்வளை யவர்க்கோத வவர்விழிக டொறுமிளம்
பேதையர்கள் கண்டொறுமெனத்
தேரோடு மொருபெருஞ் சிலையோடு நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (கக)

கம்பக் களிற்றுக் கடற்றானை வீரர்கட்
கடையிற் கடைக்களலெழக்
கண்டொட் டுணுஞ்சில மருட்பேய் கரிந்தெழு
கடுங்குருதி வெள்ளமூழ்கித்
தும்பைத் தலைச்செம் மயிர்ச்சிகை யினைச்சுடு
கனற்சிகை யெனப்பதைப்பச்
சூட்டிறைச் சிக்குச் சிணுங்குங் குறட்பேய்க்கொர்
சூர்ப்பேய் கொழுந்தசைகள்கோத்
தம்பிற் சுடத்தான் கவந்தமொடு தொந்தமிட்
டாடும் பறந்தலைநிலத்
தானைப் பிணக்குன்று மவுணப் பிணக்காடு
மளறுபட் டொழியநின்றோர்



செம்பொற் றடந்தே ருருட்டிவரு சேவகன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (கஉ)

வண்டேறு செந்நிறப் பங்கித் தலைக்கமல
வனமூடு குருதியாற்று
மால்யானை கையெடுத் தார்த்துநீந் தப்புணரி
மகரமீ னனநினைந்து
கொண்டேகு சிறுகுடர்ப் பெருவலை யெடுத்தெறி
குறட்பேய் நெடுஞ்சினமுறக்
குறுநரி பிடித்தீர்ப்ப வலறுவதும் வீரர்தொடு
கொலைநேமி யவுணருயிரை
உண்டேகு வதுமொருவன் விடவோ விடுங்கரிக்
குதவவரு திகிரியேய்கரு
மொல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்டசூ
ருய்த்திட்ட விர்த்தாஞாலத்
திண்டேரை யுருளாது நிற்கப் பணித்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (கங)

பைங்கட் சிறைக்கால் கடைக்கால் செயக்கிரிகள்
விரிசிறை படைத்தெழுவபோற்
படருந்தன் வேகத்தி னுக்கப் பறக்கப்
பறந்தலைச் செந்தலையறும்
வெங்கட் டயித்திய ருடற்குறை தலைக்குறை
விரைந்துயி ரினைத்தொடர்ந்து
மீச்செல்லு மாச்செல் லெனச்செலப் பூமாரி
விண்டூர்ப்ப தெனவுடுவுகப்
பொங்கற் கடற்குட்ட மட்டதிக் குந்தமிற்
போர்செயப் பார்கவிழவெம்

பொறியுடற் சேடன் படர்தூக்கி யார்க்கும்
புகைப்படல வடவாமுகச்
செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௧௪)

நெய்வைத்த கூந்தர் பிடிக்குதவ நாற்கோட்டு
நிகளத் தடங்குன்றுவா
னிமிருங் கதிர்க்குலைச் செந்நெலைப் பாகுபடு
நெட்டிலைக் கன்னல்கொலெனக்
கைவைத் திடப்பரி முகஞ்செய்து வெய்யோன்
கடும்பரியை ஈட்புக்கொளுங்
கழனிவிரி காவிரித் திருநாட கற்பகக்
காட்டிற் பிறந்துபிசியர
மெய்வைத்த காதன்மை யரமகளிர் பேராய
வெள்ளர் திளைத்தாடியோர்
மென்னடைக் கேக்கற்ற பிடிபின் பிடிக்கமுலை
வேழங்க ளுடனுலாவுந்
தெய்வப் பிடிக்குக் கிடைத்ததொரு மழகளிறு
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௧௫)

பற்றுவிற் காமன் கொடிப்படைக் கூறெலாம்
படைவீடு கயல்கடாவும்
பழனங்க ளோவத்த சாலைபூஞ் சோலைப்
பரப்பெலாங் காற்றேரோடுங்
கொற்றவன் கங்குற் கடாயானை யுங்கட்டு
கூடமே யெண்ணுமருதக்
கோமகன் குடிகொண்ட சோணாட சேறாடு
குங்குமக் கொட்டிலிண்டோட்



பொற்றடங் குன்றினிரு கொங்கைப் பொருப்புமொரு
பூங்குழற் காடும்வெயில்கால்
புனைமணிக் கலையல்குல் மாக்கடலு மேந்தியோர்
புனத்தின்கண் மிகநடங்குஞ்
சிற்றிடைக் கொல்குமென் கொடிபடர நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௧௬)

கோல்பாய் பசும்புன் னைசம்புகும் பத்தடங்
குன்றகவுண் மடைதிறந்து
கொட்டுநெட் டருவியொடு தேனருவி யுந்திரை
கொழித்துடன் கோப்பமேறிப்
பால்பாய் பெருக்கா றுவட்டெழுத நன்றுணைப்
பாவைய ரொடுங்குறுகுமப்
பாகீ ரதிக்குநிகர் தண்டுறை தொறுந்திக்கு
பாலர்மேற் படையெடுத்து
வேல்பாய் நெடுங்கட் கடற்றுணை யொடுமொருவன்
மேற்செல்ல நாற்றிசையிலும்
வெற்றிக் கயற்கொடி யெடுத்தென வெடுத்தெறியும்
வெண்டிரை கிழித்துவெடிபோஞ்
சேல்பாய் தடம்பணை யுடுத்தகா விரிநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௧௭)

மீத்தந்த மாகத்து மேகத்தி னேறுமூடு
மீனிரியில் போகவுகளும்
வெடிவாளை மதியக முடைத்தூற்று தெள்ளமுத
வெள்ளருவி யாற்பசுந்தண்
காத்தந்த சண்பகப் பூவேரி மாரிசெய்
காவேரி யாயிரமுகக்

கங்கையா கச்செய்து மீட்டுநாற் கோட்டுவெங்
களிறுபிளி றத்தாவிவான்
பூத்தந்த கற்பகக் காட்டினை யுழக்கிவிரி
பொற்று தெழுப்பிமற்றப்
பூந்துகட் படலத்தி னூற்றெய்வ நதியையும்
பொன்னிநதி யாகச்செயுந்
தேத்தந்த தண்பணை யுடுத்ததிம் புனனாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௮)

கன்னவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்துபூங்
கற்பகத் தும்படர்தலாற்
காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் குழுமியக்
கமுகின் கழுத்தில்யாத்த
ஒன்னொளிய செம்மணிப் பொன்னூசல் பன்முறை
யுதைந்தாட வாடுந்தொறு
மொண்கமு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடு
மொக்கவசை யத்தலையசைத்
தன்னிலை யலங்கல்வே லெம்பிரா னைப்பாடி
யாடுகின் றாரெனத்தா
மலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வ
மம்பொன்மலர் மாரிதூர்க்குந்
தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௯)

வாரார்ட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென
மணிமுறுவ னிலவுகாலு
மழலைவாய் முத்துண்டு முச்சிமோந் துந்திரு
மடித்தலத் திவரிவிருத்திப்



பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவையின்
படிவமா கக்காட்டியிப்
பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள்
பார்வைகளி யாடச்செயுந்
தாராட்டு மதிமுடித் தீராத வினைதீர்த்த
தம்பிரா னுந்தம்பிரான்
றழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
தையனு யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேனு பதிக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. (௰)

## முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்

முற்றிற்று

---

# சிதம்பரமும்மணிக்கோவை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUL 1925
MADRAS

நூல் - கூ

உ

திருச்சிற்றம்பலம்

# சிதம்பரமும்மணிக்கோவை

## காப்பு

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
மும்மணிக்கோ வைக்குவந்து முன்னிற்கு-மெம்மணிக்கோ
வஞ்சக் கரக்கற் பகத்தா ரிறைஞ்சமஞ்ச
கஞ்சக் கரக்கற்ப கம்.

## நேரிசையாசிரியப்பா

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு
நாமநீர் வரைப்பி னுநில வளாகமு
மேனைய புவனமு மெண்ணில் குயிருந்
தானே வகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் னமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலு
மாற்றுவ தாரழ லமைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப

வையமீன் றளித்த தெய்வக் கற்பி
னருள்சூற் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியு
மற்புதக் கூத்தநின் னமுதவாக் களித்த
நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில
இல்லறந் துறவற மெனச்சிறந் தனவே
அந்நிலை யிரண்டினுண் முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவ
னற்குண நிறைந்த கற்புடை மனைவியோ
டன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியு மாற்றி யிவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவா னறன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித் தன்றே
மற்றையது கிளப்பின் மனையற நிரப்பி
முற்றுணர் கேள்வியின் முதுக்குறை வெய்திப்
பொருளு மின்பமு மொரீஇ யருளொடு
பொறையு மாற்றலு நிறைபே ரொழுக்கமும்
வாய்மையுந் தவமுந் தூய்மையுந் தழீஇ
ஓரறி வுயிர்க்கு முறுதுய ரோம்பிக்
காலோய் நடைய ளாகித் தோலுடுத்
தென்பெழு மியாக்கையன் றன்புறத் துளங்காது
வரையுங் கானு மெய்திச் சருகொடு
கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீ ரமுவத் தமுங்கி வேனிலி
னைவகை யழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை யொழுகு மியல்பிற் றன்றே
அதனால்



இந்நிலை யிரண்டு மெம்மனோர்க் கியலா
நன்னிலை யாகலி னந்நிலை நிற்றற்
குரனு மாற்றலு மின்றி வெருவந்
தெளிதினிற் றமியனே னரியது பெறுதற்
குளதோ நெறியொன் றுணர்த்துமி னீரென
மூத்தலந் தலங்களுண் முத்தித் தலமா
வித்தல முடைத்தன விசைத்தனர் சிலரே
அறிஞராங் குரைத்த வுறுதிக் கட்டுரை
உலகியல் வழக்கும் புலனெறி வழக்குமென்
றிருவகை வழக்கினு நிலைபெற் றன்றே
அவற்றுள்
ஆரூர்ப் பிறத்த னேர்படி னல்லது
செயற்கையி னெய்து மியற்கைய தன்றே
அதாஅன்று
காசியி னிறத்த லூக்கித் தேசம்விட்
டறந்தலைத் தந்த வரும்பொரு டாங்கிப்
பிறன்பொருள் கொள்ளாப் பேரறம் பூண்டு
கழிபெருங் கான நீங்கி வழியிடைத்
தீப்பசிக் கிரங்கி நோய்ப்பனிக் கொதுங்கிப்
பல்பிணிக் குடைந்து செல்லுங் காலத்
திடைச்சுரத் திறவா தின்னுயிர் தாங்கிக்
கிடைத்தன னாயி னடுத்தநல் லொழுக்கமோ
டுடல்விடு காறுமத் தடநகர் வைகி
முடிவது கடைபோக முடிவதோ வரிதே
அதனாற்
சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூ
ருற்றநின் றிருக்கூத் தொருகா னோக்கிப்
பரகதி பெறுவான் றிருமுன் பெய்தப்
பெற்றன னெளியனேன் பற்றில னாயினு
மன்பிலை கொடியையென் றருளா யல்லை
நின்பதம் வழங்குதி நிமலவென் றனக்கே

மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினு
மருந்தழி யொருவ னருவருப் புறீஇத்
தன்முகஞ் சுழித்துத் தலைகடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாற்றினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்குந்
தீப்பிணி மாற்றுத றிண்ணமே யன்றி
யொதுமலும் பகையும் போக்கி யொருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
வழக்குமன் றைய மன்றுடை யோர்க்கே. (௧)

### நேரிசைவெண்பா

மன்றம் பொருட்டா மதிலிதழா மாடங்க
ளென்றும் புயல்கள் சுரும்பராப் - பொன்றங்கு
நற்புண்ட ரீகமே யொக்கு நடராசன்
பொற்புண்ட ரீக புரம். (௨)

### கட்டளைக்கலித்துறை

புரமொன் றிரண்டும் புகையழ லுண்ணப் புவனமுண் ணுஞ்
சரமொன் றகிலஞ் சலிக்கவெய் தோய்சலி யாநடஞ்செய்
வரமொன் றிரண்டு மலர்த்தாளு மூன்றிற்றன் மாமகுடம்
பரமொன்று மென்றுகொல் லோகொண்ட வாவப் பதஞ்சலியே. ()

### நேரிசையாசிரியப்பா

சலியா துயன்ற தவப்பெருந் தொண்டர்
பலரை யொருவிக் கலைமுற்று நிரம்பி
அளவையி னளந்துகொண் டுத்தியிற் றெளிந்து
செம்பொரு ளிதுவெனத் தேறி யம்பலத்
தாரா வன்பினோ டனைமர்ந் திறைஞ்சிப்
போரா வியற்கை பெற்றனர் யானே
சரியையிற் சரியா துகிரியையிற் றளரா
தியோகத் துணங்கா தொண்பொரு ளிக்காது
வறிதே நின்றிரு மன்ற நோக்கிப்
பிறவா நன்னெறி பெற்றனனன்றே



முட்புறம் பொதிந்த நெட்டிலைக் கைதை
கரிமுகப் பணிலமொடு குருளைக் குமிழ்ந்த
தாளமும் வெண்மடற் றொகுவ தம்ம
கருங்கழிக் கரையில் வெண்பொடி பூசி
இருந்தவ முனுற்றியு மியாம்பெறற் கரிய
செஞ்சடைக் கிடந்த வெண்மதிக் கடவுள்
வருகவென் றழைத்துப் பெருநயப் பெய்திக்
கண்ணீர் வாரக் கலந்துடன் றழீஇ
உண்மனை வெண்சோ றேந்தித் தன்னொ
டுடுக்கணத் தொடுமவ் வுடுபதிக் கடவுளை
மடற்றலைத் தாங்கி வைகுவது கடுக்கு
நெய்தலொடு தழீஇய மருத வேலித்
தெய்வப் புலியூர் வைதிகக் கூத்த
பொன்னிறப் புறவுங் கருநிறக் காக்கையு
மன்னுமா லிமைய வரைப்புறஞ் சேர்தலி
இருநிறப் பறவைக்கு மொருநிற னல்லதை
நிறம்வேறு தெரிப்ப துண்டோ விறைவநின்
னின்னருள் பழுத்த சந்நிதிச் சேர்தலி
இருவேம் பெற்றது மொருபே றாகலின்
வேற்றுமை யுளதோ வில்லை
ஆற்றல்சால் சிறப்பி னனையரோ டெனக்கே. (௪)

### நேரிசைவெண்பா

ஒட்டுவிக்கக் கட்டினைவிட் டோடும் பொறியரவைத்
தாட்டுவிக்குஞ் சித்தர்நீ யானக்காற் - கட்டமிட்டு
மன்றாடு மும்மையொரு மாசனநின் றூட்டுவிக்க
நின்றாடு கின்றதென்கொ னீர். (௫)

### கட்டளைக்கலித்துறை

நீருண்ட புண்டரி கத்துணைத் தாணிழற் கிழ்ப்பொலியுஞ்
சீருண் டடித்தொண்டு செய்யா வெனக்குஞ்சிற் றம்பலத்தெங்
காருண்ட கண்டனைக் கண்டனை ஞாலங் கடலமுதம்
மாருண் டனர்மற் றவரெவ ரேனு மமரர்களே. (௬)

## நேரிசையாசிரியப்பா

அமரர் கோமக னரும்பெறல் வாழ்க்கையு
மிருநிதிக் கிழவ னொருபெரு வெறுக்கையு
மைங்கணைக் கிழவ னஞ்சா நலனு
மொருவழிக் கிடைப்பினும் வெருவந்து கலங்கிக்
கைத்துண் வாழ்க்கை யுத்தம யோகிகட்
கெத்திறம் வைகினு மிடையூ றின்றே
யானே
வளியுண் புளிப்பும் பித்துண் கைப்பு
மையுண் மதுரமு மல்லன பிறவு
நாச்சுவை யறிய நல்கின மேற்சென்
றதுவது வாக வழுந்திப் புதிதுண்டு
கழிபெருங் காம மூழ்கி முழுவதும்
பாவமும் பழியு மேவுவ தல்லது
செம்பொரு டெரிந்து சிற்றறி வொரீஇ
ஐம்புல னடக்கி யறந்தலை நின்று
தீநெறி விலக்கி நன்னெறிப் படர்தற்
குரனில் காட்சி யிழுதைய னாதலிற்
பூவாது பழுக்குஞ் சூலடிப் பனசம்
பார்கிழித் தோடிப் பணியுல களந்த
வேர்தொறும் வேர்தொறும் வெவ்வேறு பழுத்து
முட்புறக் கனிக ளுக்குவ தொட்பமொடு
பதஞ்சலி முனிவனைப் பார்கொளத் தந்த
பிலங்கொளக் கொடுக்கும் பலங்கள்பல நிதர்க்கு
மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்
அதுவே
பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
புலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடக்கைக்



கிடம்பிறி தில்லை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையு மல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டாற்றினு
மீகுந ரில்லை யாகநா னாளு
மொழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திற
முடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே. (௭)

## நேரிசைவெண்பா

வேதண்ட மேபுயங்கள் விண்ணே திருமேனி
மூதண்ட கூடமே மோலியாங் - கோதண்ட
மொற்றைமா மேரு வுமாபதியார் நின்றாடப்
பற்றுமோ சிற்றம் பலம். (௮)

## கட்டளைக்கலித்துறை

பற்றம் பலமிதித் துத்துதித் தேசெவ்வி பார்த்துப்புல்லர்
வெற்றம் பலர்தொறு மெய்யிளைத் தேறுவர் வீணர்கெட்டேன்
குற்றம் பலபொறுத் தென்னையு மாண்டுகொண் டோன்புலியூர்ச்
சிற்றம் பலங்கண்டு பேரம் பலத்தைச்செய் யாதவரே. (௯)

## நேரிசையாசிரியப்பா

செய்தவ வேட மெய்யிற் றாங்கிக்
கைதவ வொழுக்கமுள் வைத்துப் பொதிந்தும்
வடதிசைக் குன்றம் வாய்பிளந் தன்ன
கடவுண் மன்றிற் றிருநடங் கும்பிட்
டுய்வது கிடைத்தன னியானே யுய்தற்
கொருபெருந் தவமு முஞற்றில் னுஞற்று
தெளிதினிற் பெற்ற தென்னெனக் கிளப்பிற்
கூடா வொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற் கேற்பநின் றொண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறு

நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னு ளெனக்கினை ராகவி னன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலி
னெவ்விடத் தவருனை யெண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையெனற் கையமே தின்றே
அதனால்
இருபெருஞ் சுடரு மொருபெரும் புருடனு
மைவகைப் பூதமோ டெண்வகை யுருப்பின்
மாபெருங் காயந் தாங்கி யோய்வின்
றருண்முற் றுறுத்த வைந்தொழி னடிக்கும்
பரமா னந்தக் கூத்த கருணையொடு
நிலையில் பொருளு நிலையியற் பொருளு
முலையா மரபி னுளங்கொளப் படுத்திப்
புல்லறி வகற்றி நல்லறிவு கொளீஇ
எம்ம னோரையு மிடித்தவரை நிறுத்திச்
செம்மைசெய் தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே. (௰)

### நேரிசைவெண்பா

தக்கனார் வேள்வி தகர்த்துச் சமர்முடித்த
நக்கனார் தில்லை நடராச - ரொக்கப்
படப்பாய லான்காணப் பைந்தொடிதா னென்றே
விடப்பாதந் தூக்கியவா வின்று. (௧௧)

### கட்டளைக்கலித்துறை

இனமொக்குந் தொண்டரொ டென்னையு
மாட்கொண்ட வீசர்தில்லைக்
கனமொக்குங் கண்டத்தெங் கண்ணுத
லார்சடைக் காடெஞ்ச



வனமொக்கு மற்றவ் வனத்தே
குடிகொண்டு வாழும்வெள்ளை
யனமொக்குங் கங்கை யருகேவெண்
சங்கொக்கு மம்புலியே. (௧௨)

### நேரிசையாசிரியப்பா

புலிக்கான் முனிவற்குப் பொற்கழல் காட்டிக்
கலிக்கா னிவந்த கட்டில் வாங்கி
மாயோன் மணிப்படப் பாயலு மெடுத்து
வறும்பாழ் வீட்டில் வைத்துக் கொண்டிருந்
துறங்காது விழித்த வொருதனிக் கள்வ
காற்றோர்க் குடம்பைக் காமப்புட் படுக்கத்
தீப்பொறி வைத்த திருநுதற் கண்ண
ஆதி நான்மறை வேதியற் பயந்த
தாதை யாகிய மாதவ ரொருவரு
மிருங்கா னத்தி யிறைவர்முன் னுண்ண
வருஞ்சா பத்தா லமுதமு னுக்கு
நற்றவ வேடக் கொற்றவ ரொருவரு
மொருபிழை செய்யா தருள்வழி நிற்பவவ்
விருவர்கண் பறித்த தரும மூர்த்தி
முட்டையிற் கருவில் வித்தினில் வியர்ப்பி
னிற்பன செலிவ தத்துவ தவழ்வ
நடப்பன கிடப்பன பறப்பன வாகக்
கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் கோடி
பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்கு
நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்
கெண்ணான் கறமு மியற்றுதி நீயென
வன்னன்மை செலுத்து மொண்ணுதிச் செல்வ
வளியன் மாற்றமொன் றிகழாது கேண்மதி
எழுவகைச் சனனத் தெம்ம னோரு
முழிதரு பிறப்பிற் குட்குவர் தம்ம

முழுவது மொரீஇ முத்திபெற் றுய்வா
னின்னடிக் கமலம் போற்றுப விந்நிலத்
தொருபது வகைத்தாம் யோனிதோ றுழன்றும்
வெருவரும் பிறப்பின் வேட்கைய னாகிநின்
சந்நிதிப் புக்குமத் தாமரைக் கண்ணோன்
றுஞ்சினன் றுயிலொரீஇ யெழாஅ
னஞ்சினன் போலுநின் னுடல்காண் பதற்கே. (௧௩)

## நேரிசைவெண்பா

ஆட்டுகின்றோ நின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று - வேட்டதனை
உற்றுநெடு நாளாக வுண்ணுமோர் மால்யானை
பெற்றதொரு கூர்தற் பிடி. (௧௪)

## கட்டளைக்கலித்துறை

பிடிப்ப துமக்கெனை வேண்டில்வெங் கூற்றெனும் பேர்முடிய
முடிப்பது மத்த முடியார்க்கு வேண்டுமுக் கட்பாளு
ரடிப்பது மத்தொன் றெடுத்துத்தென் பான்முக மாகநின்று
நடிப்பது மத்தன்மை யாகம ளுரிது நாடுமினே. (௧௫)

## நேரிசையாசிரியப்பா

மின்வீழ்ந் தன்ன விரிசடைக் காட்டிற்
பன்மாண் டெத்திப் பஃறலைப் பாந்தட்
சிறுமூச்சிற் பிறந்த பெருங்காற் றடிப்ப
விரிதிரை சுருட்டும் பொருபுனற் கங்கை
படம்விரித் தாடுமச் சடிகைவா ளரவி
னழற்கண் கான்றவவ் வாழல் கொளுந்தச்
சுழித்துள் வாங்கிச் சுருங்கச் சுருங்காது
திருநுதற் கண்ணிற் றீக்கொழுந் தோட
உருகுமின் னமுத மூவட்டெழுந் தோடியக்
கங்கை யாற்றின் கடுநிரப் பொழிக்குந்
திங்களங் கண்ணித் தில்லை வாண
அன்பருக் கெளியை யாகவி னைய



நின்பெருந் தன்மை நீயே யிரங்கி
உண்ணின் றுணர்த்தி னுணரி னல்லதை
நுண்ணு லெண்ணி நுணங்க நாடிப்
பழுதின் றெண்ணிப் பகர்து மியாமெனின்
முழுது மியாரே முதுக்குறைந் தோரே
நால்வகைப் பொருளு நவையறக் கிளந்த
வேத புருடனு மியாதுநின் னிலையெனத்
தேறலன் பலவாக் கூறின னென்ப
அதாஅன்று
முன்னைநான் மறையு முறைப்பட நிரீஇய
மன்னிருஞ் சிறப்பின் வாதரா யணனுங்
கையிழந் தனனது பொய்மொழிந் தன்றே
அதனால்
தெளிவில் கேள்வியிற் சின்னூ லோதி
அளவா நின்னிலை யளத்தும் போலு
மறிவு மாயுளுங் குறையக் குறையாத
பையுளே யெண்ணில படைத்துப்
பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே. (௧௬)

## நேரிசைவெண்பா

புனையேந் தருவுதவு பொன்னரிய மாலை
வனையேம் பசுந்துழாய் மாலை-பனிதோய்
முடிக்கமலஞ் சூடினேன் மொய்குழலோ டாடு
மடிக்கமலஞ் சூடினே மால். (௧௭)

## கட்டளைக்கலித்துறை

சூடுங் கலைமதி யைத்தொட ராதுபைந் தோகைக்கஞ்சா
தோடும் பொறியா வொன்றுகெட் டேன்மறை யோலமிட்டுத்
தோடும் பிரான்றிருக் கூத்தினுக் கேமையல் செய்யுமென்று
மாடுந் தொழில்வல்ல தாகையி னுலவ் வருமைகண்டே. (௧௮)

## நேரிசையாசிரியப்பா

கட்புலங் கதுவாக் கதிர்மணி குயிற்றி
விட்புலஞ் சென்ற மேனிலை மாடத்து
வல்லியி னுடங்கு மயிலினஞ் சாயற்
சில்லரித் தடங்கட் டிருந்திழை மகளி
ரளவில் போழ வாற்றியும் வாளா
இளமுலைத் தொய்யி லெழுதிய தோற்றந்
தருகிழற் செய்த வாரிய முற்றத்
தமரர் மாதரோ டம்மனை யாடுறீஇ
இமையா நாட்ட மிருவர்க்கு மொத்தலி
னற்குறி தெரிதற்கு நாகிளங் குமரர்
விற்குறி யெழுதி விடுத்தது கடுக்கும்
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்
பொன்னடிக் கொன்றிது பன்னுவன் கேண்மதி
என்றுநீ யுளைமற் றன்றே யானுள
னன்றதொட் டின்றுகா றலமரு பிறப்பிற்கு
வெருவா துற்றில னன்றே யொருதுய
ருற்றுழி யுற்றுழி யுணர்வதை யல்லதை
முற்று நோக்க முதுக்குறை வின்மையின்
முன்னீர் நீந்திப் போந்தவன் பின்னர்ச்
சென்னீர்க் கழிநீந் தஞ்சா னின்று
மெத்துணைச் சென்ன மெய்திறு மெய்துக
வத்தமற் றதனுக் கஞ்சல னியானே
இமையாது விழித்த வமரரிற் சிலரொன்
பரிபாக மின்மை நோக்கா ரியார்கொ
றிருநடங் கும்பிட் டொருவனுய்ந் திலனுற்
சருதியு முண்மை சொல்லா கொல்லென
வதிதே யஞ்சுவ ரஞ்சாது
சிறியேற் கருளுதி செல்கதிச் செலவே. (௧௯)



## நேரிசைவெண்பா

சென்றவரைத் தாமாக்குந் தில்லைச்சிற் றம்பலத்து
மன்றவரைத் தாமாக்க வல்லவர்யா - ரென்றுமிலை
நாடப் பதஞ்சலியா ராக்கினுஞ் செங்கிறவி
சாடப் பதஞ்சலியார் தாம். (௨௰)

## கட்டளைக்கலித்துறை

தாமக் குழலினல் லார்விழி மீன்பொரச் சந்திரனிக்
காமக் கருங்குழி யிற்சுழ லேங்கலர் நாடப்பெற்றே
நாமப் புனற்கங்கைப் போராறு பாயுஞ் சங்கரந்தம்
வாமத் தமுதமுஞ் சேர்ந்தாடு மானந்த மாக்கடலே. (௨௧)

## நேரிசையாசிரியப்பா

கடங்கலுழ் கலுழிக் களிறல் யானை
மடங்கலர் துப்பின் மானவேல் வழுதிக்
கிருங்கல மகிழ்ந்து மெண்ணில்பல் கால
மொருவன் சாலு மொளித்திருந் தோயை
வனசப் புத்தேண் மணிநாப் பற்றிக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவ
னைந்திணை யுறுப்பி னூற்பொருள் பயக்குங்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய வொருபெருஞ் செல்வ
திருத்தொண்டத் தொகைக்கு முதற்பொரு ளாகி
அருமறை கிளந்தநின் றிருவாக்கிற் பிறந்த
வறுபதிற் றுக்கிய வைம்பதிற்று முனிவரு
ளொருவனென் றிசைத்த விருபிறப் பாள
வரைசெய் தன்ன புரிசை மால்களிற்
றாகிளங் குமரர் திருவுலாப் போதத்
தவளமா டங்கவினவாய் பாய்பீச்
செங்கண்யா னைக்கு வெண்சுதை நிற்ற
முகிரா விளமுலை முற்றிழை மடந்தையர்

கதிர்செய் மேனிக்குக் கண்மலர் சாத்தக்
கடவுட் களிற்றிற் கவின்கொளப் பொலிந்த
உடலக் கண்ண னொருவ னல்ல
னிருநிலத் தநேகரென் றெடுத்துக் காட்டுந்
திருவளர் மறுகிற் றில்லை வாண
வேய்ச்சொற் றுக்க வாய்ச்சொற் போல
விரிச்சியிற் கொண்ட வுரைத்திற நோக்கி
வினைமேற் செல்லுநர் பலரே யனையர்க்
கவ்வினை முடிவதூஉங் காண்டு மதாஅன்று
பல்லியும் பிறவும் பயன்றூக் காது
சொல்லிய பொருளுந் துணிபொரு ளுடைத்தெனக்
கொண்டோர் கொளினுங் குறைபா டின்றே
அதனால்
யாவர் கூற்றுநின் னேவலி னல்லதை
நிகழா நிகழ்ச்சி யுணராது போலுங்
குழந்தை யன்பிற் பெரும்புகழ் நவிற்றிநின்
றுணைய வின்ற வென்னை
நாணிலை கொல்லென நகுவதென் மனனே. (௨௨)

## நேரிசைவெண்பா

மன்றுடையான் செஞ்சடைமேல் வாளரவுக் குள்ளஞ்சி
என்றுமதி தேய்ந்தே யிருக்குமா - னின்றதவஞ்
செய்யுமுனி வோர்காமத் தீப்பிணிக்கஞ் சித்தமது
பொய்யுடலை வாட்டுமா போல். (௨௩)

## கட்டளைக்கலித்துறை

வாடிய நுண்ணிடை வஞ்சியன் னீர்தில்லை மன்றினுண்ணின்
றாடிய கூத்த னலர்விழி மூன்றி னரும்பகலு
நீடிய கங்குலுங் கண்ணிரண் டாலுற நெற்றிக்கண்ணாற்
கூடிய தீப்பொழு தாகுங்கொன் மாலைக் கொழும்பொழுதே. (௨௪)



## நேரிசையாசிரியப்பா

கொடியு முரசுங் கொற்றவெண் குடையும்
பிறர்கொளப் பொறாஅன் றானே கொண்டு
பொதுநீக்கு திகிரி திசைதிசை போக்கிச்
செவியிற் கண்டு கண்ணிற் கூறி
இருநிலம் புரக்கு மொருபெரு வேந்தன்
மிக்கோ னொருவன் வெறுக்கை நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை சுருங்கித் தோன்ற
விழைப்புறு விழும மெய்தி யழுக்கறுத்து
மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
அயிற்சுவை பெறாஅன் றுயிற்சுவை யுறாஅன்
மாணிழை மகளிர் தோணலங் கொளாஅன்
சிறுகாற்று வழங்காப் பெருமூச் செறிந்து
கவலையுற் றழிவதூஉங் காண்டு மதாஅன்று
விறகெடுத் தூர்தொறுஞ் சுமந்து விற்றுக்
கூலிகொண்டு
புற்கையு மடகு மார்ந்து மக்களொடு
மனையும் பிறவு நோக்கி யயன்மனை
முயற்சியின் மகனை யிழித்தன னெள்ளி
எனக்கிணை யிலையென வினையன்மற் றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங் காண்டும்
அதனால்
செல்வ மென்பது சிந்தையி னிறைவே
அல்கா நல்குர வவாவெனப் படுமே
ஐயுணர் வடக்கிய மெய்யுணர் வல்லுநர்
உவாக்கடல் சிறுக வுலகெலாம் விழுங்கு
மவாக்கடல் கடத்தற் கரும்புணை யின்றே
அதனால்
இருபிறப் பமைந்த வொருபிறப் பெய்து
நான்மறை முனிவர் மூவா யிரவரு

மாகுதி வழங்கும் யாக சாலையிற்
றூட நறும்புகை வானுற வெழுவ
தெழுநாப் படைத்த முத்தீக் கடவுள்
கடலமிழ் தமிழ்ந்தாங் கவியமிழ் துண்ண
வரும்பெருந் தேவரை வானவர் கோனொடும்
விருந்தெதிர் கொள்கென விடுத்தது கடுக்கும்
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்
னருள்பெற் றுய்தற் குரிய னியானெனிற்
பல்லுயிர்த் தொகுதியும் பவக்கட லழுந்த
அல்லல் செய்யு மவாவெனப் படுமவ்
வறுமையி னின்றும் வாங்கி
அறிவின் செல்வ மளித்தரு ளெனக்கே. (௨௫)

## நேரிசைவெண்பா

என்செய்தீர் தில்லைவனத் தீசரே புன்முறுவன்
முன்செய் தெயிலை முடியாமற் - கொன்செய்த
பொற்புயங்க நாணேற்றிப் பொன்மலையைத் தேவரீர்
மற்புயங்க ளோவ வளைத்து. (௨.௬)

## கட்டளைக்கலித்துறை

வள்ளக் கலச முலையெம் பிராட்டி வரிநயனக்
கள்ளச் சுரும்பர் களிக்கின்ற வாசடைக் காட்டிற்கங்கை
வெள்ளத்தை மேலிட்டு வெண்டா தளிர்ந்து விராட்புருட
னுள்ளக் கமலத்தி னூறுபைந் தேறலை யுண்டுகொண்டே. (௨.௬)

## நேரிசையாசிரியப்பா

கொண்டல்கண் படுக்குந் தண்டலை வளைஇத்
தடம்பணை யுடுத்த மருத வைப்பி
னிடம்புரி சுரிமுக வலம்புரி யீன்ற
தெண்ணீர் நித்திலம் வெண்ணில வெறிப்ப
வூற்றெழு தீம்புனல் பாற்கட லாக
விரிதிரைச் சுருட்டே யரவணை யாகப்
பாசடைக் குழாங்கள் பசுங்கதிர் விரிக்குந்
தேசுகொண் மேனித் திருநிற னாகப்
பொற்றாது பொதிந்த சேயிதழ்க் கமல
மலர்விழி முதல பல்வுறுப் பாக
அங்கனோர் வனசத் தாசுவீற் றிருக்குஞ்
செங்கா லன்னந் திருமக ளாகப்
பைந்துழாய் முகுந்தன் பள்ளிகொண் டன்ன
அந்தண் பூந்தட மளப்பில சூழ்ந்து
பல்வளம் பயின்ற தில்லையம் பதியிற்
பொன்னின் மன்றிற் பூங்கழன் மிழற்ற
நன்னடம் புரியு ஞானக் கூத்த
ஒருபெரும் புலவனோ டே தீர்ப்பப்
பரவை வாய்தலிற் பாயிரு ணடுநா
ளேதமென் றன்றே திருகா லொருகாற்
றூதிற் சென்றநின் றுணையடிக் கமலத்
தீதொன் றியம்புவல் கேண்மதி பெரும
அலையா மாபி னணவக் கொடியெனும்
பலர்புகழ் சேரிப் பரத்தையொடு தழீஇ
ஏகலன் றணந்தாங் கென்னையு முணராது
மோகமொ டழுந்தி முயங்குறு மமையத்
தங்கவட் குரிய தங்கைய ரிருவருட்
குடிலை யென்னு மடவா ளொருத்தி
எய்தரும் புதல்விய ரைவரைப் பெற்றனண்
மோகினி யென்பவண் மூவரைப் பயந்தன
ளாகிய புதல்விய ரங்கவர் மூவருட்
கலையெனப் பெயரிய கணிகைமற் றொருத்தி
தானு மூவரைத் தந்தன ளவருண்
மானெனப் பட்ட மடவா ளொருத்தி
எண்மூன்று திறத்தவ ரீன்றன ளித்திற
நண்ணிய மடந்தைய ரையெழு வரையுங்
கிளப்பருங் காமக் கிழத்திய ராக

அளப்பில் கால மிணைந்தனன் முயங்குழி
முறைபிறழ்ந் திவரொடு முயங்குத லொழிகென
அறிஞராங் குணர்ந்த வஞ்சின னொரீஇ
இன்னிடைப் புகுந்தனன் மன்னோ வென்னிடை
ஞான வல்லியை நன்மணம் புணர்த்தி
யானு னேயத் தரும்பொருள் வழங்கி
இறவா வீட்டினி லிருத்திக்
குறையாச் செல்வமொடு கூட்டுதி மகிழ்ந்தே. (௨௮)

### நேரிசைவெண்பா

கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென
நாடு மபிமதத்தை நண்ணிற்று - லோடியகட்
காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனார் செய்யு நடம். (௨௯)

### கட்டளைக்கலித்துறை

நடிக்கச் சிவந்தது மன்றெம் பிராட்டி நறுந்தளிர்க்கை
பிடிக்கச் சிவந்தது மன்றுகொ லாமெம் பிரானென்றும்பர்
முடிக்கச் சிவந்தன போலுங்கெட் டேன்புர மூன்றுமன்று
பொடிக்கச் சிவந்த நகைத்தில்லை யான்மலர்ப் பூங்கழலே. (௩௰)

சிதம்பரமும்மணிக்கோவை
முற்றிற்று

# சிதம்பரச்செய்யுட்கோவை

நூல் - ௰

திருச்சிற்றம்பலம்

# சிதம்பரச்செய்யுட்கோவை

## க. வெண்பாவிகற்பம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன்றைக் கண்ணி யவர்.

இது சீர்முழுதும் எதுகை யொன்றத் தொடுத்தமையாற் றலையாகெதுகை. பூங்கொன்றைக் கண்ணியான் (எ-ம்) பொன் மன்றிறைஞ்சிடுக (எ-ம்) வெண்சீர்வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வருதலின், இஃது ஒழுகிசைச் செப்பலோசைத்து. இதனானே, வெண்பா இரண்டடிச் சிறுமையுடைத் தென்பதூஉங் கொள்க. இதனுட் கண்ணியவர் என்னும் ஒரு மொழியைக் கண்ணியெனவும், அவரெனவும், வகையுளிசெய்து சீர்கொள்ளப் படுதலின், இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்த ஒருவிகற்பக் குறள்வெண்பா. (க)

அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள.

இஃது இருவிகற்பக்குறள்வெண்பா. மோனை முதலியதொடையும், தொடைவிகற்பமும் போலாது தொடுத்தமையால், இது செந்தொடை. (உ)

கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றேற்றங் கொளல்.

இதுவுமது. அனுவெழுத்தால் இணைமோனையமைந்து, ஏனைத் தொடையும், தொடைவிகற்பமும்போலாது தொடுத்தமையால் இது மருட்செந்தொடை. (௩)

திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு - பெருமான்
திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.

இது குறளிரண்டாய் இடையே தனிச்சொற்பெற்று ஒருவிகற்பமாய் நடத்தலின் ஒருவிகற்பத்திருகுறணேரிசை வெண்பா. அடிதோறும் ஈற்றுச்சீர் ஒருசொல்லே வரத் தொடுத்தமையால் அடியியைபு. இது காசென்னும் வாய்பாட்டுக் குற்றியலுகர இயற்சீரான் முடிந்தது. (ச)

கறையரவுக் கஞ்சுறா தஞ்சுறாவுர் திங்க
னிறைவி நறுநுதலைக் கண்டு - பிறைமுடியோன்
கைம்மா னடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்சு
மம்மான் விழிமானைக் கண்டு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தா னடந்தமையான், இருவிகற்பத்திருகுறணேரிசைவெண்பா. அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையால் அடியெதுகை. இதனுள் முதற்றொடை இரண்டாமெழுத்து மாத்திரையே ஒன்றத்தொடுத்தமையால் இடையாகெதுகையுமாம். (ரு)

வணங்கு சிறுமருங்குற் பேரமர்க்கண் மாதர்க்
கணங்கு புரிவ தறமாற் - பிணங்கி
யிணங்காது முத்தலைவே லீர்சடையெங் கோமாற்
கிணங்காது போது மிரவு.

இது குறளிரண்டாய் முதற்குறளீற்றின்கண், ஓரசிடையிட்டுத் தனிச்சொற்பெற்று, ஒருவிகற்பமாய் நடத்தலான் ஒருவிகற்பத்தோராசிடை நேரிசைவெண்பா. இதனுள் முதலடி ஈற்றிருசீரும் முரணத் தொடுத்தமையால் இடைப்புணர் முரண். இது பிறப்பென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான் முடிந்தது. (சு)



வாத்திற் பிறப்பொன் றருள்கெனினும் வள்ளல்
காத்திற் கபாலத்தைக் காணுடைப் - புரத்தை
இரும்புண்ட நீசபுரத் தெய்தினர்க் கேயோ
னரும்புண்ட நீகத் தயன்.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலான் இருவிகற்பத்தோராசிடை நேரிசைவெண்பா. இதனுள் முதலடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉமோனை. (எ)

கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற் - சீற்றஞ்செய்
யேற்றினன் றில்லை யிடத்தினன் னெவ்வினியாம்
போற்றினு னல்கும் பொருள்.

இது முதற்குறளீற்றின்கண் இரண்டசிடையிட்டு ஒருவிகற்பமாய் நடத்தலால் ஒருவிகற்பத்தீராசிடை நேரிசைவெண்பா. (அ)

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் - நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலால் இருவிகற்பத் தீராசிடை நேரிசைவெண்பா. (கூ)

வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்.

இது நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒருவிகற்பமாய் நடத்தலின் ஒருவிகற்பத் தின்னிசைவெண்பா. இஃது அடிதோறும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் அடிமோனை. இதனுள் அடிதோறும் ஈற்றுச்சீர் முரணத் தொடுத்தமையால் கடைமுரணுமாம். (ய)

பூந்தண் பசுந்துழாய்ப் போது நறுவிரி
தேர்தண் டிரடிண்டோட் டேவற்குந் தேவிக்குங்
கார்தன் பதமலர்கள் காமுற்றார் காமுறார்
பார்தண் முடிச்சூடும் பூ.

இதுவுமது. இதனுள் மூன்றாமடி இரண்டாஞ்சீரொழிந்தவனை முச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவாய் மோனை. இதனுள்ளே போ என நெட்டெழுத்துத் தனியேநின்றும், து எனக் குற்றெழுத்துத் தனியேநின்றும், பூந் என நெட்டெழுத் தொற்றடுத்துநின்றும், தண் எனக் குற்றெழுத்தொற்றடுத்துநின்றும், நேரசை நான்கும் வந்தன. விரி எனக் குறிலிணைந்தும், நறு எனக் குறினெடிலிணைந்தும், பசுந் எனக் குறிலிணைந்தொற்றடுத்தும், துழாய் எனக் குறினெடிலிணைந் தொற்றடுத்தும் நிரையசை நான்கும் வந்தன. ஓரசைச்சீ ரிரண்டனுட், பூ என நேரசைச்சீரும் வந்தவாறு காண்க. இது நாலொன்றும் வாய்பாட்டான் முடிந்தது. (௧௧)

புனலழுவம் புக்குடைந்தோர் தாளூன்றி நின்று
வனசங்காள் செய்தவநீர் வாழியரோ வாழி
பொருவிடையோன் றெய்வப் புலியூரை யொப்பா
டிருமுகத்துக் கொப்பச் செயின்.

இது பலவிகற்பத்தின்னிசைவெண்பா. தமிழ்வழக்கால் இருவிகற்பமும் பலவிகற்பமெனப்பட்டது. இதன் முதலடி முதற்சீரிரண்டும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் இணைமோனை. இது முதற்றொடை ஓரெதுகைத்தாயும், ஏனைத்தொடை வேறோரெதுகைத்தாயும் வந்தமையால் இரண்டடியெதுகையென்க. இதனுள்ளே தாளூன்றி எனத் தேமாங்காயும், வனசங்காள் எனப் புளிமாங்காயும், புனலழுவம் எனக் கருவிளங்காயும், புக்குடைந்தோர் எனக் கூவிளங்காயுமாக வெண்சீர் நான்கும், செயின் என நிரையசைச்சீரும் வந்தன. (௧௨)



ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
ஓஒ பெரிது மரிதே யெளிதேயோ
வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்
பேதுற்றும் வெஃகேம் பிற.

இதுவுமது. இதனுள் இரண்டாமடி ஈற்றுச்சீரிரண்டும் முரணத் தொடுத்தமையால் கடையிணைமுரண். இதனுள்ளே ஆ என நெட்டெழுத்தும், இ எனக் குற்றெழுத்தும், ஆ என வுயிரெழுத்தும், ஓஒ என அளபெடையெழுத்தும, வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்ந்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக்குறுக்கமும் வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களும் மெய்யும் உயிர்மெய்யுமாகிய அசைக்குறுப்பாமெழுத்துப் பதின் மூன்றுங் காண்க. முதலுணர்ந்தியாமெனக் கனிச்சீர் வெள்ளையின் விரவிவாராமையிற் குற்றியலிகரம் அலகுபெறாதெனத் தள்ளிக் கருவிளங்காய் எனச் சீர்கொள்க. ஐகாரம் கை எனக் குறுகாதவழி நெட்டெழுத்தினியல்பிற்றாயும், துறை எனக் குறுகியவழிக் குற்றெழுத்தினியல்பிற்றாயும் நின்றவாறு காண்க. (௧௩)

பொன்மன்றம் பொற்றா மரையொக்கு மம்மன்றிற்
செம்ம றிருமேனி தேனொக்கு மத்தேனை
உண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
எம்பெரு மாட்டி விழி.

இதுவும் பலவிகற்பத் தின்னிசைவெண்பா. இதன் முதலடியிரண்டும் மூன்றாமெழுத்தொன்றிவரத்தொடுத்தமையால், மூன்றாமெழுத்தொன்றெதுகை. (௧௪)

ஆடகச் செம்பொ னணிமன் றிடங்கொண்ட
பாடகச் சீறடியாள் பாகத்தான்-சூடகக்கைக்
கங்கையாள் கேள்வன் கழறொழுஉக் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறைஞ்சுங் கூற்று.

இதுவும் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. இதன் மூன்றாமடி

முதற்சீரும் மூன்றாஞ்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்புமோனை. இதனுட் செம்பொன் எனத் தேமாவும், அணிமன் எனப் புளிமாவும், கழறொழுட எனக் கருவிளமும், ஆடக எனக் கூவிளமுமாக ஆசிரியவுரிச்சீர் நான்கும் வந்தன. (கரு)

கர்தன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சம் பிழைத்தகன்றார் நன்னெஞ்சம்
போதம் படரும் புலியூரே-தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு.

இது மூன்றாமடியி னிறுதி தனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. இதன் முதலடி யிரண்டாமெழுத்துத் தகாஅகாரமும், இரண்டாமடி யிரண்டாமெழுத்துத் தகர உகரமுமாக வந்தமையால் வருக்கவெதுகை. (கசு)

காம ருயிர்செருக்குங் கண்ணென்றே-காமருசீர்
மாதர் நலனழிக்குங் கண்ணென்றே-மாதருக்
கின்னு விரவொழிக்குங் கண்ணென்றே-யிர்நிலத்திற்
றன்னே ரிலாதான் றனக்கு.

இஃது அடிதோறும் ஒரூஉத்தொடையமைய முதன் மூன்றடிகளினும் தனிச்சொற்பெற்றுப் பல விகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா. இதன் மூன்றாம்டி யீற்றயற்சீ ரொழிந்த வனை முச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் மோனை. (கஎ)

செக்கர்ச் சடையிற் பசுங்குழவி வெண்டிங்காண்
முக்க ணொருவற்கு வின்னோ டிருசுடரு
மொக்க விழித்தலா லுய்ந்தே மொருநீயே
அக்க ணொருமூன்று மாயின்மற் றய்வுண்டே
மைக்கண் மடவா ருயிர்க்கு.

இஃது ஒரு விகற்பத்து ஐந்தடிப்பஃறொடை வெண்பா. இதன் முதலடி யிரண்டாஞ்சீ ரொழிந்த வனைமுச்சீரும் முரணத் தொடுத்தமையால் மேற்கதுவாய்முரண். இரண்டாமடியீற்றயற்சீ ரொழிந்த வனைமுச்சீரும் முரணத்தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் முரண்.



இது பிறப்பென்னும் வாய்பாட்டுக் குற்றுகர இயற்சீரான் முடிந்தது. (கஅ)

பொன்புரிந்த செஞ்சடைக்கு வெள்ளிப் புரிபுரிக்கும்
வெண்டிங்கட் கண்ணியான் வெல்கொடியு மானேறே
அங்கவன்ற னூர்தியுமற் றவ்வேறே யவ்வேற்றின்
கண்டத்திற் கட்டுங் கதிர்மணிக்கின் கென்கொலோ
பைர்தொடியார் செய்த பகை.

இது பல விகற்பத்து ஐந்தடிப்பஃறொடை வெண்பா. இதன் முதலடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் முரணத் தொடுத்தமையால் பொழிப்புமுரண். நான்காமடி யிறுதிச்சீ ரொழிந்த வனை முச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் கூழை மோனை. இஃது அடிதோறு மிரண்டாமெழுத்து மெல்லினம் வரத் தொடுத்தமையால் இனவெதுகை. (ககூ)

கருந்தாது கொல்லுங் கருங்கைத்திண் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றிறொறுஞ் சென்றுசிலர் தூங்க
இருந்தேங் களிதுங்கி யாமேமற் றம்ம
வருந்தா தலர்தில்லை யம்பலத்திற் றூங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

இஃது ஒரு விகற்பத்து ஆறடிப்பஃறொடை வெண்பா. (உ௰)

விண்மதனை வென்ற தலர்விழியே யொன்னார்தம்
பொன்னெயி றீமடுத்த தின்னகையே பூம்பிசையோன் *
றார்முடி கொய்தது கூருகிரே யாருயிருண்
கூற்றுயி ருண்ட தடித்தலமே யேற்றான்
பாசும் பிணைமுஞ் சூலமு மென்னே
காமலர் சேப்பக் கொளல்.

இது பல விகற்பத்து ஆறடிப்பஃறொடை வெண்பா. இதன் முதலடி யீற்றயற்சீ ரொழிந்த வனைமுச்சீரும இரண்டாமெழுத் தொன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாயெதுகை. இரண்டா

மடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்பெதுகை. மூன்றாமடி முதலயற்சீ ரொழிந்த வனைமூச்சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத் தமையால் மேற்கதுவாயெதுகை. நான்காமடி முதற்சீரும் ஈற்றுச் சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉ வெதுகை. (௨௧)

வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனே யவ்வூனி லுயிரே யுயிர்த்துணையே
ஆனே றுமேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியோங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
யானு மென்போன்மற் றார்பெற்றா ரம்பலத்துண்
மானா டகங்காணும் வாழ்வு.

இஃது ஒரு விகற்பத்து எழடிப்பஃறொடை வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் இறுதி யெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றியைபு. இரண்டாமடி முதலயற்சீ ரொழிந்த வனைமூச்சீரும் இறுதி யெழுத்தொன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாயியைபு. மூன்றாமடி முதற்சீ ரொழிந்த வனை மூச்சீரும் இறுதியெழுத் தொன்றத் தொடுத்தமையால் கூழையியைபு. நான்காமடி யீற்ற யற்சீ ரொழிந்த வனைமூச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத் தமையால் மேற்கதுவாயியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச் சீரும் இறுதி யெழுத்தொன்றைத் தொடுத்தமையால் ஒரூஉ வியைபு. இது காசென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான் முடிந்தது. (௨௨)

வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந்தார்ப்பத்
தண்டே னிறைக்குமிதழி நறுங்கண்ணி
எண்டோண்முக் கண்ணு னிமையம் புனைமன்றி
லண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வன்றிண் மறலி புடைத்துக் கொடிறுடைக்கு
மன்று முருகீர்கொல் லாம்.



இது பல விகற்பத்து எழடிப்பஃறொடை வெண்பா. இத னிரண்டாமடி இறுதிச்சீ ரிரண்டும் இறுதி யெழுத்தொன்றத் தொடுத்தமையால் இணையியைபு. மூன்றாமடி முதற்சீரும் இரண் டாஞ்சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத்தமையால் இணை யெதுகை. நான்காமடி யிறுதிச்சீ ரொழிந்த வனைமூச்சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத்தமையால் கூழையெதுகை. அதுவே இரண்டாஞ்சீரும் இறுதிச்சீரும் இறுதி யெழுத்தொன் றத் தொடுத்தமையால் பொழிப்பியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் முரணத் தொடுத்தமையால் ஒரூஉமுரண். (௨௩)

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தான் செயலென்னே-யெங்கோமான்
பங்குற்றாந் தீரா பசப்பு.

இது மூன்றடியாய் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று ஒரு விகற்பத்தால் வந்தமையால் ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா. (௨௪)

கம்பக் கடாக் களிற்றின் தோலாயணிந்த
அம்பொற் புயத்தார்க் கமைந்ததா - லம்மை
முலையானைக் கோடணிந்த மார்பு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தான் வந்தமையால் இரு விகற்ப நேரிசைச் சிந்தியல்வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றுமோனை. (௨௫)

போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுவந்தான் பொற்றா ளிணை.

இது தனிச்சொலின்றி மூன்றடியாய் ஒருவிகற்பத்தான் வந்த ஒருவிகற்பத்தின்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் ஒருசொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத் தொடை. (௨௬)

உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தம்பொற் புயம்வேட்டேந் தார்மாலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

இஃது இரண்டு விகற்பத்தால்வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடியி னிறுதியெழுத்து இரண்டாமடிக்கு முதலாகவும் அவ்வடியினிறுதிச்சீர் மூன்றாமடிக்கு முதலாகவும் தொடுத்தமையால் அந்தாதித்தொடை. (௨௭)

கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்ற னென்னு
மழுவலத்தன் மானிடத்த னென்னு-முழுவலத்த
மன்றுடையான் றார்வேட்ட மான்.

இது பலவிகற்பத் தின்னிசைச் சிந்தியல்வெண்பா. இதன் முதற்றொடை இரண்டா மெழுத்தின்மேனின்ற உயிரொன்றத் தொடுத்தமையால் உயிரெதுகை. இதன் முதலடி இறுதிச்சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத் தொடுத்தமையாற் கூழைமுரண். ()

---

## ௨. வெண்பாவினம்

செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்
தம்பொன் மேருவுக் கடிமுடி யின்றே.

இது விழுமியபொருளும் ஒழுகியவோசையும் உடைத்தாய் அடியிரண்டாய்த் தம்மில் ஒத்துவந்தமையால் குறள்வெண் செந்துறை. (௨௯)

கம்பைமாநதி யின்கரைச்சிறு கன்னிபார முலைத்தழும்பணி
உம்பர்கோன்விடை யொன்றுலகேழு முண்டதுவே.

இஃது அடியிரண்டாய்ச் சீர்வரையறையின்றி யீற்றடிகுறைந்து வந்தமையால் குறள்வெண்டாழிசை. (௩௰)

முன்புல வின்ற முகிழ்முலைக் கன்னியோ
டின்புறும் யோகி யெழுபுவிக் கரசே.



இஃது ஒழுகியவோசையும் விழுமிய பொருளுமின்றிக் குறள் வெண்செந்துறையோடு மாறுபட்டுவந்த குறள்வெண்டாழிசை. ()

பின்றாழ் நறுங்கூந்தற் பிடிதழீஇ மால்யானைக்
கன்றீனு முக்கட் களிறு.

இது குறள்வெண்பா செப்பலோசையிற் சிதைந்துவந்த குறள் வெண்டாழிசை. இவையிரண்டும் குறள்வெண்பாவினம். (௩௨)

கனக மார் கவின்செய் மன்றி
லனக நா டகற்கெம் மன்னை
மனைவி தாய் தங்கை மகள்.

இது மூன்றடியாய் வெண்பாவேபோன் முடிந்தமையால் வெள்ளொத்தாழிசை. இதனுள் ஆர் என நேரசைச் சீர்நின்று மேலே கவினென நிரையசை வர மாஞ்சீர்போல இயற்சீர்வெண் டளையாயினவாறு காண்க. (௩௩)

அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்.

வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்.

இது சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளொத்தாழிசை. இதில் ஆளாக ஆண்டான் என முத லிரு சீரும் முரணத்தொடுத்தமையால் இணைமுரண். (௩௪)

பரசிருக்குந் தமிழ்மூவர் பாட்டிருக்குந் திருமன்றிற்
பரசோன் றேந்தி
யரசிருக்கும் பெருமானார்க் காட்செய்யா ரென்செய்வார்
முரசிருக்கும் படைநமனார் முன்னாகு மந்நாளே.

இது முதலடி அறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த மூன்றடி வெண்டுறை. (௧௫)

படர்தரும்வெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படரா நிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கொழிபுண்டே வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த நான்கடி வெண்டுறை. (௧௬)

கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன் [மன்றத்
தொருதா ளூன்றி
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத
துண்டமா டப்புலித் தோலுமா டப்பனி
ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஓரோசைத்தாய் ஏனையடி நாற்சீராய் வேறோரோசைத்தாய் வந்தமையால் எழுடிவேற்றொலி வெண்டுறை. (௧௭)

உருவல னருவல னொருவன்மற் றிருவருக்
கரியவ னெனவுணர்ந் தறைகுந ரறைகமற்
பரவைதன் மனைவயிற் பாவல னேவலி
னிருமுறை திரிதலி னெளியனென் றெளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.

இதுவும் ஈற்றடி ஒருசீர் குறைந்துவந்தமையால் ஒரொலி வெண்டுறை. இதன் முதலடிநாற்சீரும் மோனைத்தொடுத்தமையால் முற்றுமோனை. அதுவே நாற்சீரும் இரண்டா மெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றெதுகையுமாம். (௧௮)



அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலுந்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரு நீரேபோலும்.

இஃது அடிதோறும் தனிச்சொற்பெற்று மூன்றடியால் வந்தமையால் மூன்றடி வெளி விருத்தம். (௧௯)

வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்கா
ளஞ்ச லெனுஞ்சொல் லார்சொல வல்லார் நமரங்காண்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்கா
ணஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

இது நான்கடியாய் அடிதோறும் தனிச்சொற்பெற்று வந்தமையால் நான்கடி வெளி விருத்தம். (௨௰)

---

## ௩. ஆசிரியப்பா

பொற்றூது பொதிந்த சிற்சபை பொலியப்
பச்சிளங் கொடியொடு படருஞ்
செக்கர் வார்சடைக் கற்பகத் தருவே.

இஃது ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையால் நேரிசையாசிரியம். இஃது அடிதோறும் முதற்சீர்மோனைத்தொடுத்தமையால் அடிமோனை. இதனுள் பொதிந்த சிற்சபை என நேரொன்றாசிரியத்தளையும், சிற்சபை பொலிய என நிரையொன்றாசிரியத்தளையும் வந்தவாறு காண்க. இதனானே ஆசிரியம் மூன்றடிச் சிறுமை யுடைத்தென்பதூஉ மறிக. (௨௧)

பூஉந் தண்ண் புனமயி லகவ
மாஅங் குயில்கள் சாஅய்த் தொளிப்பக்
கோஒ டரங்கண் முசுவொடும் வெரீஇக்
காஅ றமீஇக் கவிழ்ந்த தொடுங்கச்

சூஉன் முதிர்ந்து காஅல் வீஇழ்
வாஅன் றூஅழ் மழைப்பெய றலைஇத்
தேஎன் றூஅழ் பூஉங் காஅ
வளங்கனிந்த மணிமன் றுள்
விளங்கொளியை யுளங்கொள றவமே.

இதுவுமது. இஃது அடிதோறு முதற்கண்ணே அளபெடுத்தமையால் அடியளபெடை. இதனுள், இணையளபெடை முதலாகிய விகற்பம் ஏழும் முறையானே வந்தவாறு காண்க. ஏனைத் தொடை ஏழும் விகற்பம் இருபத்தெட்டும் முன்னர்க் காட்டப்பட்டன. (சஉ)

தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்தர
வெண்மதிக் கண்ணி சூடுங்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும்
விண்மிசைப் போகிய வீடுபெறற் பொருட்டே.

இது முதலடியும் ஈற்றடியும் அளவடியாகக் குறளடியும் சிந்தடியும் இடையிட்டுத் தொடுத்தமையால் இணைக்குறளாசிரியம். இவ்வகவலுள் புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும் என நெடிலடியும் அருகிவந்தவாறு காண்க. குறளடி முதல் நான்கும் இதனுள்ளே வந்தன. ஏனைக் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்துட் காண்க. (சரு)

மாயிரு விசும்பிற் றாநிலாப் பரப்பிப்
பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியு
மின்செய் கொண்மூ வெள்ளிவீழ் வீழ்ப்பப்
பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும்
புலியூர் மன்றி னொலிகழன் மிழற்றப்
பரம நாடக மிருவரைக் காட்டு
மெரிநிறத் தைம்முகத் தெண்டோண் முக்கட்
கருமிடற் றொருவநின் செஞ்சடைப் பொலிதலி
னேயு மருந்து மோர்வழிக் கிடைத்தென



வாருயிர் தரித்தன வன்றே யதாஅன்று
தெள்ளமு தன்னவ ருள்ளுயிர் குடிக்குமித்
திங்க ளொன்றே திருமுடிக் கணியிற்
கங்கை யாளு முயிர்வா ழாளே.

இது முற்றும் நேரடியாய் வந்தமையின் நிலைமண்டிலவாசிரியம். இதனுள், பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியும் என இயற்சீர் வெள்ளடியும், பொன் செய்மலர்ப் பூங்கொன்றையும் என வஞ்சியடியும் மயங்கி வந்தவாறு காண்க. எரிநிறத் தைம்முகத் தெண்டோண் முக்கண் என முதற்சீரொழிந்து ஏனை மூச்சீரும் முரணத்தொடுத்தமையால் கடைக்கூழைமுரண். (சசு)

தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

இது முத லிடை கடையடிகளை மாறிமாறி யுரைப்பினும் பொருடிரியாமையின் அடிமறிமண்டிலவாசிரியம். (சஎ)

---

## ௬. ஆசிரியப்பாவினம்

சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகவி னனந்தன் கண்களே
யுத்தம வானந்தெழுத் துருவங் காண்பன.

இது மூன்றடியாய்த் தம்மிலொத்து வந்தமையால் ஆசிரியத் தாழிசை. (சஅ)

சிற்றம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
கற்றைச் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கண்
மற்றப் புனன்மங்கை வாணுதலை யொக்குமால்.

பேரம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
வார்செஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ணீர்மங்கை கொங்கைக்கு நித்திலக்கச் சொக்குமால்.

பொன்னம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
மின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ளந்நங்கை செங்கைக் கணிவளையு மொக்குமால்.

இஃது ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை. (௪௭)

நாகம் பொதிசடைமே ணண்மதியும் வாண்மதிபோ னங்கை கங்குன்
மேகஞ்செய் கூந்தன் மிலைச்சுந் தலைக்கலனும் விளங்குந் தோற்ற
மாகம் பகுந்தளித்த வந்நாளி லம்பலத் தான்
மாகம் பதியு மதியும் பகுந்தளித்த வண்ணம் போலும்.

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்று ளாடு
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கறுதேலர் நாட்டமார் [போலும்,
சேயிழை மாதருக்குச் செங்கைகளுங் கொங்கைகளுஞ் சிவக்கும்

இஃது அவ்வாறே இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை. (௪௮)

உண்டாங் கெனினு மிலதென் றறிஞர்கள்
பொய்யெனப் புகலவு மெய்யெனப் பெயர்பெற்
றுன்னுமுன மின்னுமென வுளதாய் மாய்வது
நிலையில் யாக்கை
கண்டாங் கெழுங் கிழமுதி ரமையத்
தைவளி பித்தெனு மெய்தரும் வித்திற்
கடலிற் றிரையென வுடலிற் றிரையொடு
கலியா நின்றன கலிவுசெய் நோய்கள்
புண்டாங் கயின்முக் குடுமிப் படையொடு
மெயிறலைத் தழல்விழித் துயிருணக் கனல்சேர்
புகையாமென கிழலாமெனத் திரியா நின்றது
கொலைசெய் கூற்றம்



விண்டாங் ககலுபு மெய்ப்பொரு ளுணிவோர்
மின்பொலி பொன்புனை மன்றிலெம் முயிராம்
விமலன் குஞ்சித கமலங் கும்பிட
வேண்டுவர் வேண்டார் விண்மிசை யுலகே.

இது முதலடியும் மூன்றாமடியும் பதினான்குசீராய் ஏனை இரண்டடியும் பதினாறுசீராய் வந்தமையின் இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை. (௫௰)

திங்கட் சடைக்கற்றைப் புத்தே டிருமார்பிற்
பைங்கட் டலைகள் பலவு நகுவ போலுமால்
பைங்கட் டலைகள் பலவு நகுவகண்
டங்கட் கமலத் தயனு மாலு மழுவரால்.

இது முதலடியும் மூன்றாமடியும் நாற்சீராய் ஏனை இரண்டடியும் ஐஞ்சீராய் இடைமடக்காய் வருதலின் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை. (௫௧)

கனமளித்தபைங் காவில்வெண் டாளமும்
பவளமுங் கமுகினைப்
புனமளித்தபூங் கொன்றைபொன் சொரிதரப்
புண்ணிய மலர்தில்லை
வனமளித்ததே யெனினுமோ ரானந்த
மாக்கடற் றிளைத்தாடு
மனமளித்தவேழ் பொழிற்குமோர் பலமென்ப
தம்பொனம் பலந்தானே. (௫௨)

இஃது அறுசீர்க்கழிநெடிலடியால் வந்த ஆசிரியவிருத்தம்.

கோமுனிவ ருக்குமரி தாய்முழுது மறைப்பனுவல்
கூறியப ரப்பி ரமமா
மோமெனுமெ ழுத்தின்வடி வாய்நடா விற்றுபுலி
யூரன்மரு டச்ச டிலமேன்

மாமதியி னைத்தனது கோடெனவெ டுப்பபத
மாமுகன்மு கக்கை தொடவத்
தூமதிப ணிப்பகையெ னுவாந திப்புகவொர்
தோணியென விட்ட கலுமே.

இஃது எழுசீர்க்கழி நெடிலடியால் வந்த ஆசிரியவிருத்தம். (ருரு)

அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனுமெண் வகையுருப்பின் வடிவு கொண்ட
ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றாவ
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி யென்
இருவருக்கு மரித்தாக வொருவ னென்றோ [கோ
ரியற்சொலில தெவரில்யான்மற் றென்சொல்கேனே.

இஃது எண்சீர்க்கழிநெடிலடியால் வந்த ஆசிரியவிருத்தம். (ருச)

வளங்கு லாவரு மணங்க ளார்விழி
மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு
காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ றழுங்க வாடல்செய்
சோதி யானணி பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீர்யமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே.

இஃது ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியால் வந்த ஆசிரியவிருத்தம்.

கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ



நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றைத்த டிக்க ளைத்து
நிற்கு மற்பு தச்ச னத்தி னிடையேவே
ளத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு கெட்ட யிற்க ணித்தி
லத்தி னூற்றி டச்செய் விக்கு மதுதானே.

இது பதின்முச்சீர்க்கழிநெடிலடியால் வந்த ஆசிரியவிருத்தம்.

---

## ரு. கலிப்பா

கொன்செய்த கலையல்குற் கொலைசெய்த மதர்வேற்கண்
மின்செய்த சிறுமருங்குற் பெருந்தேவி விழிகுளிர்ப்பப்
பொன்செய்த மணிமன்றி னடஞ்செய்த புகழோய்கேள்.

இது மூவடித்தரவு.

முருகுயிர்க்கு நறுந்தெரியன் மொய்குழலின் மையுண்கட்
பொருகயற்குன் றிருமேனி புதுவெள்ளப் புணரியே.

தேன்மறிக்கும் வெறித்தொங்க லறற்கூந்தற் றிருந்திழைகண்
மான்மறிக்குன் றிருமேனி மலர்முல்லைப் புறவமே.

பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கட்
சிறையளிக்குன் றிருமேனி தேனளிக்கும் பொதும்பரே.

இவைமூன்றும் ஈரடித்தாழிசை.

அதனால், இது தனிச்சொல்.

மதுவிரி கோதை மடவாற் கம்ம
புதுவிருந் துண்ண வுண்ண
அதிசயம் விளைக்குநின் னற்புதக் கூத்தே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவொன்றும் தாழிசைமூன்றும் தனிச்சொல்லும் சுரிதகமுமாய் வருதலின் நேரிசையொத்தாழிசைக்கலிப்பா. இதனுட் பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கண்

னை இரண்டாஞ்சீரும் ஈற்றுச்சீரும் மோனைத்தொடுக்கப்பட்டுப் பின்மோனை வந்தவாறு காண்க. இதனானே தரவு மூன்றடிச் சிறுமையுடைத்தெனவும் தாழிசை இரண்டடிச் சிறுமையுடைத்தெனவு முணர்க. (௩௭)

பேதைமீர் பேதைமீர் !
பூமன்னு திசைமுகனும் புயல்வண்ணப் பண்ணவனுங்
காமன்னு புரத்தானுங் கடவுளரும் புடைநெருங்க
இருகோட்டுக் கிடைத்தவிடு கிடையவர்பல் லாண்டிசைப்ப
ஒருகோட்டு மழகளிறு மிளங்கோவு முடன்போத
அம்பொன்மணி மதிற்றில்லை நடராச னணிமறுகிற்
செம்பொன்மணிப் பொலந்திண்டேர்த் திருவுலாப் போதுங் [கால்.

இஃது ஆறடித்தரவு.

பாரித்த பேரண்டஞ் சிறுபண்டி கொளப்பெய்து
வாரித்தண் புனற்றுஞ்சு மாலுக்கு மால்செய்வீர்
வேரித்தண் குழலார்கை வளைகொள்ள விழைந்தேயோ
பூரித்து வீங்குவதும் புயமென்பார் சிலமாதர்.

சொன்மாலை தொடுத்தணிந்த தொண்டர்க்குத் துணைவராய்
நன்மாலைக் குழலியர்பா னள்ளிருளிற் செலவல்லீர்
பன்மாத ருயிர்கொள்ளல் பழியன்றே பகைகொள்ளும்
வின்மார னுயிர்கொண்ட விழிக்கென்பார் சிலமாதர்.

அங்கமலன் முடைத்தலையே பலிக்கலனா வையமிடு
மங்கையர்க ணலங்கவர்வான் பலிக்குழலு மாதவத்தீர்
தங்கலர்தங் கெயுமும்மைப் புரமன்றே தலையன்பி
னங்கையர்தம் புரமுமது நகைக்கென்பார் சிலமாதர்.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

அருங்கலை கவர்ந்தநீ ரளிக்கப் பெற்றதும்
மருங்கலை யினிதெமக் கென்ப ரோர்சிலர்.



நன்னிறங் கவர்ந்தநீர் நல்கப் பெற்றதும்
பொன்னிற மினிதெனப் புகல்வ ரோர்சிலர்.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

தேரினை நோக்கியே திரிவர் சிற்சிலர்.
ஊரினை நோக்கியே யெழுவர் சிற்சிலர்.
தாரினை நோக்கியே தளர்வர் சிற்சிலர்.
மாரினை நோக்கியே மருள்வர் சிற்சிலர்.

இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம் அளவெண்.

நலனழிந்து நிற்பார் சிலர். நாணுறந்து நிற்பார் சிலர்.
கலனழிந்து நிற்பார் சிலர். கண்கலுழ்ந்து நிற்பார் சிலர்.

இவைநான்கும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பாடு வார்சிலர். ஆடு வார்சிலர்.
பரவு வார்சிலர். விரவு வார்சிலர்.
வாடு வார்சிலர். ஓடு வார்சிலர்.
மகிழு வார்சிலர். புகழு வார்சிலர்.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண்.
ஆங்கொருசார், இது தனிச்சொல்.

முதிரா விளமுலை மழலையர் தீஞ்சொன்
மங்கைமற் றிவ ணங்குலக் கொழுந்து
கணங்குழை யவரொடும் வணங்கின ணிற்பச்
சோர்ந்தது மேகலை நெகிழ்ந்தன தோள்வளை
சாந்தமுங் கரிந்தது நாணமுந் தீர்ந்தன
இவ்வா றுயின ளிவளே செய்விதி
னும்பற் பூவின் முல்லையு முகைத்தில
இளையோன் சாலவு மம்ம
முதியோன் போலுங் காம நோய்க்கே.

இஃது ஒன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் தனிச்சொற்கும் இடையே நால்வகையம் போதரங்கமும் பெற்று வருதலின் அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா. இதனது முதற்கண் பேதைமீர் பேதைமீர் என அடி கூறுய் வந்தவாறு காண்க. (௫௮)

தொல்லுலகம் படுசுடிகைச் சுடருமணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தாதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
இந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவி துணைக் கண்களிப்ப
ஆடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்.

இஃது ஆறடித்தரவு.

முன்மலையுங் கொலைமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடநாக மெட்டும்விடங் காளுக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமட
லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.



உலகமொ டுயிர்களு மலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
அலைகடல் விடமுண மருந்துசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இலவிதழ் மதிநுத விரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை.

இவைநான்கும் நான்கடியராகம்.

அருவமு முருவமு மாகி நின்றமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.
சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.
இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.
அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.
இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம். அளவெண்.
முத்தொழிலின் வினைமுதனீ. மூவர்க்கு முழுமுதனீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ. இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ. எழின்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ. ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.
இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பெரியை நீ. சிறியை நீ. பெண்ணு நீ. ஆணு நீ.
அரியை நீ. எளியை நீ. அறமு நீ. மறமு நீ.
விண்ணு நீ. மண்ணு நீ. வித்து நீ. விளைவு நீ.
பண்ணு நீ. பயனு நீ. பகையு நீ. உறவு நீ.

இவைபதினாறும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண் எனவாங்கு, இது தனிச்சொல்.

கற்பனை கடந்தநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே லுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றகிழ வோனே.

இஃது ஏழடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் அம்போதரங்கத்திற்கும் இடையே அராக வுறுப்புப் பெற்று கலியுறுப்பாறுங் குறைவின்றி வந்தமையால் வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா. இவ்வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், சிறுமைபெருமையின்றி ஆறடித்தரவே வந்தவாறு காண்க. (௯௯)

---

## அ. வெண்கலி

சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்



வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிக்தொல்கு மருங்குல்வர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று.

இது கலித்தளைதட்டுத் துள்ளலோசைத்தாய் வெண்பாவே போல் முடிந்தமையால் வெண்கலிப்பா. (௧0)

அற்புத மணிமன்றி லடிகணின் னடியுன்னார்
மைக்கடல் விடமென்னும் வடவைத்தீ யெழவஞ்சி
யொஎன வடிவீழ்ந்தார்க் குதவிலர் காணார்கொல்
கைத்தல வபயத்தர் வரதத்தார் கைசெய்யாச்
சித்திர மன்ன சிலர்.

இது பிறதளைவிரவிவந்த வெண்கலிப்பா. இதனுள் ஒா எனக் குற்றெழுத்து விட்டிசைத்தவழித் தனியே நின்று மூதற்கண் நேரசையாயிற்று. அவ்விட்டிசை வல்லொற்றோ டொத்துளதுகை யாய் நடத்தலின் இது விட்டிசைவல்லொற்றெதுகை. (௧௧)

தொடலைக் குறுந்தொடித் தோகாய்நம் பாவை
படலைச் சிறுமுச்சி யுச்சிப் பசுங்கிள்ளை
பேதைக் குழாத்தொடு நென்னற் பொழுதின்கண்
வீதிக்கே நின்று விளையாட் டயருங்கா
ரு லஞ்சனக் கண்ணார்நூர் தாமு மணிதில்லைச்
செஞ்சடைக் கூத்தனார் வெள்விடைமேற் சேறலு
முண்ணெக் குருக வெதிர்ப்பட் டுடையானைக்
கண்ணிற் பிணித்து மனத்திற் கொடுபுக்
கிறைவளை சிந்த வணிதுகில் சோரப்
௰ பிறரறியா வண்ணம் புணர்ந்தும் புணரான்போன்
மையுண்கண் ணீர்சோரச் சோர்தலும் வார்குழலாற்
கைகோத் தெடுத்துக் கடிமனை கொண்டுய்ப்பப்
பைந்தண் குளிரி படுத்துக் கிடத்தலுஞ்
செந்தீப் பிழம்பிற் கிடத்திச் செருச்செய்வ

தந்தோ கொடிதுகொடி தென்செய்தி ரன்னைமீர்
பொன்னஞ் சிலையே சிலையாப் புரமெய்தான்
றண்ணென் கடுக்கை கொணர்ந்தாரோ தம்பினென
யின்றந்த நுண்ணிடையா யெங்கோன் விரைத்தொங்க
றன்றந்தை தானெறிந்தார்க் கன்றித் தாரென்றேற்
கன்றே பகைநோக் களித்தாண்மற் றம்ம
சிறியாள் பெரும்பித் தறிந்திருந்துஞ் செவ்வி
யறியா துரைத்தே னது.

இது செப்ப லோசைத்தாய் ஒருபொருணுதலி அவ்வாறு வந்தமையாற் கலிவெண்பா. (௧௨)

---

## எ. கொச்சகக்கலி

அடிகொண்ட குனிப்பன்றே யரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லா முறைமுறை
கடிகொண்ட பொழிற்றில்லை நடராசன் கழற்காலிற் [போய்க்
குடிகொண்ட படிபோலு மடத்தாளிற் குஞ்சிதமே.

இது கலித்தளைதட்டுத் தனிச்சொல்லும் சுரிதகமும் பெறாது தனியே வந்த தரவுகொச்சகம். (௧௩)

மல்லாண்ட திரடிண்டோட் டுழாய்முதலு மணிநாவிற்
சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் தொலைவெய்தப்
பல்லாண்டு செலச்செல்லா வினையோரும் பணிப்பெய்த
வல்லாண்ட நள்ளிருளி லழலாடுந் தொழிலினையே.

இது நாலடித்தரவு.

அதனால், இது தனிச்சொல்.

பல்பே ரூழி செல்லினு மடிகட்
கொல்லையுஞ் செல்லா தாகு மாகலி
னளவில் கால மலக்கணுற் றழலுமென்



றளர்வு நோக்காய் போலு நோக்கிற்
கருணைசெய் தருளா யல்லை
யருணலம் பழுத்த வாடல்வல் லோயே.

இஃது ஆறடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த தரவுகொச்சகம். (௧௪)

குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்க
ளிழைதூங்கு முலைக்கணவைத் தேயெய்தா நாணெய்த
உழைதூங்கு குயினேங்க வுருமுத்தீ யுகாக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

மீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
ஞானேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எனவாங்கு, இது தனிச்சொல்.

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
அந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்
முனியான் முனிவன் போலு
மனைய தன்றே யான்றோர் கடனே.

இது நாலடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவிணைக்கொச்சகம். (௧௫)

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக்
குறைதங்கு கலைநிறையிற் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நீம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்.

இஃது ஐந்தடித்தரவு.
எனவாங்கு, இது தனிச்சொல்.

வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் றிருமார்பி னுறவழுத்துங்
கள்ளிருக்குங் குழலுமையாண் முலைச்சுவட்டைக் கடுவொடுங்கு
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால்.

அதாஅன்று, இது தனிச்சொல்.

சிலைக்கோடு பொருமருப்பிற் புகர்முகனின் றிருமார்பின்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோண்
மலைக்கோடு விளையாடும் பருவத்து மற்றத்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

அதாஅன்று, இது தனிச்சொல்.

விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பில்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெந்தை
தடமார்பம் விடர்செய்பச் சமர்செய்தான் கொல்லென்று
கடமார்வெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

இவை மூன்றும் நான்கடித்தாழிசை.
அதனால், இது தனிச்சொல்.

சிலைமுகங் கோட்டுமச் செல்லரித் தடங்கண்
முலைமுகங் கோட்டின னகுமான்
மலைமுகங் கோட்டுநின் மற்புய மறைந்தே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவு ஒன்றுந் தாழிசை மூன்றும் இடையிடை தனிச் சொல்லும் பெற்றுச் சுரிதகத்தா லிறுதலின் சிஃறாழிசைக் கொச்சகம். (௬௬)



ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
இருநோக்கிற் றொழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணோக்கஞ் செய்ஞ்ஞானத்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

இஃது ஐந்தடித்தரவு.

கடிக்கமலப் பார்வைவைத்துங் கண்ணனார் காணுநின்
அடிக்கமல முடிக்கமல மறியாதே மறிதுமே.
முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் றலையிழந்த
அத்தொழிலிற் கெனிற்றமியே மறிதொழிற்கும் வல்லமே.
இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
றிருக்கோல மியாமுணர்ந்து சிந்திக்கக் கடவமே.
நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முய்த்துணர்வ பெரியமே.
தாமடிகண் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாமடிகண் மறவாமை யுடையமே.
பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகலையு முணராதே முணர்துமே.

இவையாறும் ஈரடித்தாழிசை. அதனால், இது தனிச்சொல்.

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது பஃறாழிசைக் கொச்சகம். (௬௭)

சூன்முகத்த சுரிமுகங்க ணிரைத்தார்ப்பத் தொடுகடல்வாய்
வான்முகத்த மழைக்குலங்கண் மறிபுனல்வாய் மடுத்தென்னக்
கான்முகத்த மதுகரத்தின் குலநீண்டிக் கடிமலர்வாய்த்
தேன்முகக்கும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலத்துறைவோய்.

புற்புதமுந் தொலைவெய்து நிலையெய்தாப் புலையுடம்பி
னிற்புதவு துறந்திறவா வின்பவீ டெய்தவொரு
நற்புதவு திறந்தன்ன நறும்பொதுவி னங்கையுட
னற்புதவு மானந்த நடம்பயிலு மறவோய்கேள்.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எவ்விடத்தி லெப்பொருளு மொருங்குண்ண விருக்குநீ
வெவ்விடத்தை யெடுத்தமுது செய்ததுமோர் வியப்பாமே.

எண்பயிலா வுலகடங்க வொருநொடியி லெரித்திடுநீ
விண்பயிலு மெயின்மூன்று மெரித்ததுமோர் வீறாமே.

பெருவெள்ளப் பகிரண்டந் தரித்திடுநீ பெயர்த்துமலை
பொருவெள்ளப் புனற்கங்கை தரித்ததுமோர் புகழாமே.

மாயையினா லனைத்துலகு மயக்குநீ மாமுனிவர்
சேயிழையார் சிலர்தம்மை மயக்கியதோர் சிறப்பாமே.

மேதக்க புவனங்க டொலைத்திடுநீ வெகுண்டாய்போன்
மாதக்கன் பெருவேள்வி தொலைத்ததுமோர் வன்மையே.

ஒருருவாய நிறைந்தநீ யிருவர்க்கன் றுணர்வரிய
பேருருவொன் றுடையையாய் நின்றதுமோர் பெருமையே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

அறிவினி லறிபவ ரறிவதை யலதொரு
குறியினி லறிவுறு குறியினை யலை.

உளவையி னுளவன வுணர்வதை யலதுரை
யளவையி னளவிடு மளவினை யலை.

அருவெனி னுருவமு முளையுரு வெனிலரு
வுருவமு முளையவை யுபயமு மலை.

இலதெனி னுளதுன தெனிலில திலதுன
தலதெனி னினதுரு வறிபவ ரெவர்.



இவைநான்கும் ஈரடியராகம்.

எத்தொழிலுங் காரணங்க ளிறந்தநினக் கிலையெந்து
மெய்த்தொழில்செய் வதுமடிகேள் விளையாட்டு நிமித்தமே.

சீராட்டு நினக்கிலையச் சீராட்டுஞ் சிறுமருங்குற்
பேராட்டி விளையாட்டின் பெயர்த்தாகி நடந்ததே.

மெய்த்துயா முயிர்க்கெய்தும் விளையாட்டு முலகின்ற
வத்திருவுக் கிலையதுவு மவர்பொருட்டே யாமன்றே.

இன்னருளே மன்னுயிர்கட் கெத்தொழிலு மீன்றெடுத்த
வன்னைமுனி வதுந்தனயர்க் கருள்புரிதற் கேயன்றே.

எவ்வுருவு நின்னுருவு மவளுருவு மென்றன்றே
யவ்வுருவும் பெண்ணுருவு மாணுருவு மாயவே.

நின்னலா தவளில்லை யவளலா னீயில்லை
யென்னினீ யேயவனு மவளுமா யிருத்தியால்.

இவையாறும் ஈரடித்தாழிசை. அதனால், இது தனிச்சொல்.

தந்தை நீ. தாயு நீ. தமரு நீ. பிறரு நீ.
சிந்தை நீ. யுணர்வு நீ. சிவ னீ. யாவு நீ.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

நெஞ்சகங் குழைந்து நெக்குநெக் குருகநின்
குஞ்சித சரண மஞ்சலித் திறைஞ்சுது
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையிற்
செம்மாந் திருப்பது தீர்ந்து
மெய்ம்மையிற் பொலிந்த வீடுபெறற் பொருட்டே.

இஃது ஐந்தடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது மயங்கிசைக் கொச்சகம். (௯௮)

## ௮. கலியினம்

செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னோனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

ஆங்கற் பகக்கன் றளித்தருளூர் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

இஃது இரண்டடியாய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி ஈற்றடிமிக்குவந்த கலித்தாழிசை. (௬௯)

இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
ஒருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.

இஃது இடைமடக்காய் ஈற்றடி மிக்க நான்கடிக்கலித்தாழிசை.

காளி யாடக் கனலுமிழ் கண்ணுதன்
மீளியாடுதல் பாருமே
மீளி யாடல் வியந்தவ டோற்றெனக்
கூளி யாடிக் குனிப்பதும் பாருமே பாருமே.

இஃது இரண்டாமடி குறைந்து இடைமடக்காய் ஈற்றடிமிக்கு வந்த நான்கடிக் கலித்தாழிசை. (௭௧)

பாவாற் கருங்கட் பசுந்தோகை யேமெய்ப் பயன்றுய்ப்பவத்
தேனைக் கலர்கொன்றை சாரூப்பி யந்தந்த செயலோர்கிலா
ஞானக் கணிதுயிலை யொழுகும் புறக்கண் ணுனக்கண்ணதா
ஞானக் கணையாத னல்கும் பிரான்றில்லை நடராசனே.

இது நெடிலடிநான்காய் வந்தமையால் கலித்துறை. (௭௨)



செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கு
மொவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினைமற்
றெவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப்
பைவ்வாய்ப் பொறியா வல்குலெந் தாயென்று பாடுதுமே.

இது நேரசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன் முதலடி முரணடுக்கி வந்தமையால் வழிமுரண். (௭௩)

கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வே
ளிரும்புங் கரைந்துரு கச்செய்யு மாவிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே.

இது நிரையசை முதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன் முதலடி வழியெதுகை. (௭௪)

கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லிரே
தேவே சன்பயி றில்லையி னெல்லையிற்
சேர்வீ ரேலது செய்யவும் வல்லிரே.

இஃது அளவடிநான்காய் வந்தமையால் கலிவிருத்தம். இஃது அடிதோறும் இரண்டாமெழுத்து நெட்டெழுத்தாகத் தொடுத்தமையால் நெடிலெதுகை. முதலெழுத்து நெட்டெழுத்தேயாகத் தொடுத்தமையால் நெடின்மோனையுமாம். மூன்றாமடியும் நான்காமடியும் முதலெழுத்து அனுவெழுத்தாய் வந்தமையின் அனுமோனை. (௭௫)

---

## ௯. வஞ்சிப்பா

மையமீன்ற மறைக்கிழவனுந்
கொய்துழாய்மௌலிக் குணக்கொண்டலுந்
தருவார்நீழற் றார்வேந்தனும்
வான்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப

மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச
இமையம்பயந்த விளங்கொடியொடுந்
தபனியப்பொதுவிற் றாண்டவம்புரி
தில்லைவாணநின் றிருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன் றிது சொலக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கு
மமளியைநின்மருங் காதரித்தனை
செங்கேழ்ந றுந்தற் றிருமகளொடு
மங்கவனுறைதரு மாழிச் சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நலந்தருகருணையி னயந்தளித்தனை
அவன் அதனால்
பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகின னவனையொடு
மத்திரு மனையவற் களித்திநின்
மெய்த்தொழி லன்றே வீடுநல் குவதே.

இது குறளடிவஞ்சிப்பா. இதனடிதோறு முதற்கண்ணே பொதுச்சீர் பதினாறும் வந்தன. தாங்வேந்தனும் (எ-ம்) குணக் கொண்டலும் (எ-ம்) மறைக்கிழவனும் (எ-ம்) தாண்டவம்புரி (எ-ம்) வஞ்சிச்சீர் நான்கும் வந்தன. இதனுள்ளே அங்கவனுறைதருமாழிச் சேக்கையை என ஆசிரியவடி அருகி வந்தது. அவன் என வஞ்சி யீற்றின்கண் அசை கூனாய் வந்தது. (௭௬)

கடித்தாமரைக் கண்ணன்விழிக் கமலந்தர
அடித்தாமரைச் சுடர்ப்பரிதியை யளித்தருளினை-அதனால்
புதுமலர்ப் பொழிற்றில்லை வாண
உதவியின் வரைத்தோ வடிகள்கைம் மாறே.

இது சிந்தடிவஞ்சிப்பா. (௭௭)

---



## ௰. வஞ்சியினம்

பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீ
ரணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே.

என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே.

அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீ
ருருமன்ற லுமைபாகன்
றிருமன்று பணியீரே.

இது குறளடி நான்காய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை. (௭௮)

பொன்செய் மன்றில்வாழ்
கொன்செய் கோலத்தான்
மின்செய் தாடொழா
ரென்செய் திற்பரே.

இது குறளடி நான்காய் வந்தமையால் வஞ்சித்துறை. (௭௯)

ஒன்றி னம்பர லோகமே
யொன்றி னம்பர லோகமே
சென்று மேவருந் தில்லையே
சென்று மேவருந் தில்லையே.

இது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சிவிருத்தம். (௮௰)

## ௧௧. மருட்பா

அரசியல் கோடா தரனடியார்ப் பேறு
முரசிய ஞானவேன் மன்னர் - பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலைவாழ்த் தாய் வருதலின் புறநிலைவாழ்த்துமருட்பா. வெள்ளடியும் ஆசிரிய வடியுஞ் சமமாகலின் இது சமநிலை. (௮௧)

பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந்-திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனைக்
குலமுனி புதல்வனுக் கீந்த
வலைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

இதுவும் அவ்வாறே கைக்கிளைப் பொருண்மேல் வருதலின் கைக்கிளை மருட்பா. வெள்ளடி குறைந்து ஆசிரியவடி மிகுதலின் இது வியனிலை. (௮௨)

வம்பி னமரங்காண் மன்றுடையான் வார்கழல்கண்
டுய்ம்மி னுறுதி பிறிதில்லை-மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையா தாகும்
பின்வழி நமக்குப் பெரும்பயன் றருமே.

இது வாயுறைவாழ்த்துமருட்பா. (௮௩)

வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு-வீழ்த்த
புறநெறி யாற்று தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉமருட்பா. (௮௪)

சிதம்பரச்செய்யுட்கோவை
முற்றிற்று

- சிதம்பரம் சிவகாமியம்மை -

# இரட்டைமணிமாலை

நூல் - ௧௧

திருச்சிற்றம்பலம்

## சிதம்பரம் சிவகாமியம்மை

# இரட்டைமணிமாலை

### நேரிசைவெண்பா

சீர்பூத்த செல்வத் திருத்தில்லை மன்றகமென்
கார்பூத்த நெஞ்சகமாக் கைக்கொண்டா-ளோர்பூத்து
ளைய மொருங்கின்ற வந்நண் மருங்கொசிய
வைய மொருங்கீன்ற மான். (௧)

### கட்டளைக்கலித்துறை

மாகந் திருவுரு மன்றுடை யார்க்கெனின் மற்றுனக்கோர்
பாகந் தரவொர் படிவமுண் டேபர மானந்தமே
ஏகந் தருந்திரு மேனிய தாக்கிமற் றெண்ணிறந்த
ஆகந் தருவது மம்மைநின் னுடல்கொ லங்கவர்க்கே. (௨

### நேரிசைவெண்பா

அங்கம் பகுந்தளித்த வம்பலத்தார்க் காம்பலங்கைச்
சங்கொன்று கொங்கைத் தழும்பொன்றே-நங்கையுனை
வந்திப்பார் பெற்றவா மற்றொருநீ வாய்த்ததிரு
வுந்திப்பா ரேழு மொருங்கு. (௩)

### கட்டளைக்கலித்துறை

ஒருவல்லி யல்லிக் கமலத்து ளூறுபைந் தேறலொத்த
திருவல்லி தில்லைச் சிவகாம வல்லியென் சித்தத்துள்ளே
வருவல்லி செம்பொன் வடமேரு வில்லினை வாட்கணம்பாற்
பொருவல்லி பூத்தலி னன்றேயிப் பூமியைப் பூவென்பதே. (௪)

## நேரிசைவெண்பா

பூத்ததுவு மீரேழ் புவனமே யப்புவனங்
காத்ததுமென் னம்மை கருணையே-கூத்தரவர்
பாடுகின்ற வேதமே பாராவிப் பாரொடுங்க
ஆடுகின்ற வேதமே யங்கு. (௬)

## கட்டளைக்கலித்துறை

அங்கைகொண் டேநின் னடிதைவந் தாரழ லாறமுடிக்
கங்கைகொண் டாட்டுநங் கண்ணுத லாரக் கனகவெற்பைச்
செங்கைகொண் டேகுழைத் தார்சிவ காமிநின் சித்திரமென்
கொங்கைகொண் டேகுழைத் தாயவர் பொற்புயக் குன்றெட்டுமே.

## நேரிசைவெண்பா

குன்றஞ் சுமந்தொசிந்த கொம்பேநின் கோயிலும்பொன்
மன்றும் பணிந்தேம் வழிவந்தாற்-பொன்றாழ்
வரைசென்ற திண்டோண் மறலிக்கு நெய்தன்
முரசன்றே வென்றி முரசு. (௭)

## கட்டளைக்கலித்துறை

முருந்தடர்ந் தார முகிழ்த்தபுன் மூரன் முதல்விகயல்
பொருந்தடங் கண்விழிக் கும்புலி யூரர்பொன் மார்பின்மற்றுன்
பெருந்தடங் கொங்கை குறியிட்ட வாகண்டப் பிஞ்ஞகர்க்குன்
கருந்தடங் கண்ணுங் குறியிட்ட போலுங் கறைக்கண்டமே. (௮)

## நேரிசைவெண்பா

கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தா ரென்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே-யிறைகொண்
டயிலிருக்கு முத்தலைவே லண்ணலுக்கென் னேயோர்
மயிலிருக்கத் தில்லை வனத்து. (௯)



## கட்டளைக்கலித்துறை

வன்னஞ் செறிவளைக் கைச்சிற காற்றன் வயிற்றினுள்வைத்
தின்னஞ் சராசர வீர்ங்குஞ் சனைத்திரை தேர்ந்தருத்திப்
பொன்னம் பலத்துளொ ரானந்த வாரிபுக் காடும்பச்சை
அன்னம் பயந்தன கொல்லாம்பல் லாயிர வண்டமுமே. (௰)

## நேரிசைவெண்பா

அண்டந் திருமேனி யம்பலத்தார்க் கென்பதுரை
கொண்டங் குணர்தல் குறைபாடே-கண்டளவில்
விண்ணம் பொலிந்ததொரு மின்கொடியே சொல்லாதோ
வண்ணம் பொலிந்திருந்த வா. (௧௧)

## கட்டளைக்கலித்துறை

வாய்ந்தது நின்மனை வாழ்க்கையென் றேதில்லை வாணரம்மே
காய்ந்தது வென்றிவிற் காமனை யேமுடிக் கங்கையைப்பின்
வேய்ந்தது பாவநின் மென்பதந் தக்கவவ் வெண்மதியுந்
தேய்ந்தது பெண்மதி யென்படு மோவச் சிறுநுதற்கே. (௧௨)

## நேரிசைவெண்பா

சிறைசெய்த தூநீர்த் திருத்தில்லைத் தொல்லை
மறைசெய்த வீர்ந்தண் மழலைப்-பிறைசெய்த
ஒண்ணுதலைக் கண்ணுதலோ டுள்ளத் திருத்தியின்ப
நண்ணுதலைக் கண்ணுதலே நன்று. (௧௩)

## கட்டளைக்கலித்துறை

நங்காய் திருத்தில்லை நன்னுத லாய்நுத லூட்டமொத்துன்
செங்காவி யங்கண் சிவப்பதென் னேசெழுங் கங்கையைபின்
பங்காளர் நின்னைப் பணியுமப் போதுகைப் பற்றிமற்றென்
றங்கா யெழுந்திரென் றுலவட் கேது தலையெடுப்பே. (௧௪)

### நேரிசைவெண்பா

தலைவளைத்து நாணியெந்தை தண்ணளிக்கே யொல்குங்
குலைவளைத்த கற்பகப்பூங் கொம்பர்-கலைமறைக
ணான்குமறி யார்க்கிந்த ஞாலமெலா மீன்றளித்துந்
தான்குமரி யாகியிருந் தாள். (௧௫)

### கட்டளைக்கலித்துறை

தாளிற் பதித்த மதித்தழும் புக்குச் சரியெம்பிரான்
றோளிற் பதித்த வளைத்தழும் பேதொல்லைத் தில்லைப்பிரான்
வாளிற் பதித்த முலைத்தழும் பங்கவர் மார்பினிலர்
நாளிற் பதித்ததொன் றேயெம் பிராட்டி நடுவின்மையே. (௧௬)

### நேரிசைவெண்பா

இன்றளிர்க்கைக் கிள்ளைக்கே யீர்ங்குதலை கற்பிக்கும்
பொன்றளிர்த்த காமர்ப் பொலங்கொம்பு - மன்றவர்தம்
பாகத் திருந்தாள் பதுமத்தாள் பாவித்தா
ளாகத் திருந்தா ளலன். (௧௭)

### கட்டளைக்கலித்துறை

அல்லிக் கமலத் துணைத்தாளி லென்றுமென் னாவிக்குள்ளே
புல்லிக் கிடந்தன போலுங்கெட் டேன்புன் மலக்கிழங்கைக்
கல்விப் புலக்கலை கட்டருள் பூத்துட் கனிந்தமலை
வல்லிக் கிலைகொன் மருங்கென் றிரங்கு மறைச்சிலம்பே. (௧௮)

### நேரிசைவெண்பா

மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்-நறைநாறு
நாட்கமலஞ் சூடே நறுந்துழாய் தேடேநின்
றாட்கமலஞ் சூடத் தரின். (௧௯)

### கட்டளைக்கலித்துறை

தருவற நாணத் திருவறச் சாலை சமைத்தம்மைநீ
பொருவறு நல்லறம் பூண்டதென் னாமெந்தை பொற்புலியூர்
மருவறு மத்த முடித்துக் கடைப்பலி தேர்ந்துவம்பே
தெருவற வோடித் திரிதரு மாண்மற் றுன் சீர்த்திகொண்டே. (௨௰)

சிவகாமியம்மையிரட்டைமணிமாலை
முற்றிற்று

- - தருமபுரம் - -

# பண்டாரமும்மணிக்கோவை

நூல் - ௧௨

MADRAS

P. R. RAMA IYAR AND CO.,

PRINTERS

உ

திருச்சிற்றம்பலம்

---

## தருமபுரம்

# பண்டாரமும்மணிக்கோவை

---

## காப்பு

### நேரிசைவெண்பா

எண்டிசைக்குஞ் சூளா மணிமாசி லாமணிசேர்
கொண்டிசைக்கு மும்மணிக் கோவைக்குக்-கண்டிகைப்பொற்
பைந்நாகத் தானனத்தான் பாற்கடலான் போற்றவருள்
கைந்நாகத் தானனத்தான் காப்பு.

### நேரிசையாசிரியப்பா

பூமலி சததளப் பொன்னர் தாதுகு
காமர்பீ டிகையிற் கருணையொடு பொலிந்து
வீற்றுவீற் றமைந்த விரிதலைப் புவனம்
பாற்பட வகுத்த பழமறைக் கிழவனு
மதுக்குட முடைந்தாங் கிதழ்க்கடை திறந்து
பிரசமூற் றிருந்து முருகுகொப் பளிப்ப
வண்டுமு ழுழக்குந் தண்டுழா யலங்கற்
புரவுபூண் டகிலம் பொதுக்கடிந் தளிக்குங்
கருணைபூத் தலர்ந்த கமலக் கண்ணனு
மஞ்சிறைச் சுதைநிறச் செஞ்சூட் டன்னமுஞ்
செம்மயிர்க் கருங்கண் வெள்ளெயிற் றேனமு
மாகுபு தனித்தனி யலமா நிவந்த
மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட் டம்ம

எம்மனோர் போல வினிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில்பே ரின்ப
மோனவாழ் வளிக்கு ஞான தேசிகன்
விரிகதிர் பரப்பு மாகதத் தகட்டிற்
சுடர்செய் செம்மணி யிடையிடை பதித்தெனப்
பாசடைப் பரப்பிற் பதும ராசிகள்
சேயிதழ் விரிக்குஞ் செழுமல ரோடையு
மண்டகோ ளகையு மெண்டிசா முகமுங்
கோட்டுடைத் தடக்கை நீட்டியவார் தென்னச்
சேட்பட நிவந்த செண்பகா டவியுங்
கால்கிளர் விசும்பிற் கற்பகா டவிக்கு
வேலியிட் டன்ன வியன்மணிப் புரிசையு
மருங்குசூழ் கிடந்த வண்டமிழ்க் கமலைப்
பெரும்பதி புரக்கும் பேரருட் குரிசில்
நான்மறை நவின்ற நற்பொரு ளிவையென
மோனவா சகத்தான் முப்பொரு ளவிற்றுபு
நன்னலம் புரியு ஞானப்பிர காச
னின்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன்
றிருக்கிளர் ஞானத் திருந்திழைக் கணியா
மருட்பெருஞ் சைவத் தருங்கல னுப்ப
ளுசற விளங்கு மாசி லாமணி
அமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பின்னோமை விடுத்த தன்னரும் பருவத்
துன்னாதன் படிவ முணர்ந்தவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தன்
பொன்னடிக் கமலஞ் சென்னிவைத் திறைஞ்சுது
மிருகால் சுமந்த வொருபெருஞ் சேவகத்
தைம்புலக் களிறுந் தம்புலத் திழுப்ப
வைதுடைப் பிறவிக் கானகத் துழலா
தேனைய முத்திரா டெய்தவோர்
ஞான வாரண நல்குதி யெனவே. (௧)



### நேரிசைவெண்பா

என்வடிவ நின்வடிவாக் கொண்டா யெளியேற்குன்
றன்வடிவ நல்கத் தகுங்கண்டாய்-மன்வடிவால்
வெம்பந்த நீக்கும் விமலநீ மெய்ஞ்ஞான
சம்பந்த னென்பதனாற் றான். (௨)

### கட்டளைக்கலித்துறை

தானின் றெனைத்தனக் குள்ளே யொளிக்குமென் றன்மைநிற்க
யானின்ற போதெனக் குள்ளோ யொளித்திடு மிப்பரிசே
வானின்ற சின்மய மாமாசி லாமணி மன்னுந்தன்மை
நானின்று கண்டனன் காணே னிதற்கொத்த நன்மணியே. (௩)

### நேரிசையாசிரியப்பா

மணிவடஞ் சுமந்த புணர்முலைக் கொழுங்கி
ளயா மாக்க ளமொழி கவர்ந்த
சிற்றிடை படைத்த பேரமர்க் கண்ணியர்
கரைகொன் றிரங்குந் திரைசெய்நீர்ப் பட்டத்து
மைவிழி சேப்பச் செவ்வாய் விளர்ப்பக்
கருங்குழல் சரிய வெள்வளை கலிப்பச்
சீராட் டயரு நீராட் டயர்ந்து
புலவியிற் றீர்ந்து கலவியிற் றிளைக்கு
நீர மகளிர் பெரொழில் காட்ட
மருதம்வீற் றிருந்து பெருவளஞ் சுரக்குந்
தருமையம் பதிவாழ் சற்குரு ராய
னொள்ளொளி பரப்பும் வெள்ளிவே தண்டத்
தொருபாற் பொலிந்த மாகதங் கவினச்
சுடர்விடு செங்கதிர்க் கடவுண்மா மணிக்கு
விளங்கெழின் மிடற்றோர் களங்கமுண் டென்பவக்
காசுலா மவினங் காந்தகா ரணத்தான்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மென்மையோ டமர்ந்த ஞானசம் பந்த
னண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனி

னந்நிய மென்று மாகிய மென்று
மிந்நிலை யிரண்டு மெய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே
அங்கது புரிதற் கரிதெனி னிங்கொரு
சனனம்யான் வேண்டுவ தினிதரு ளெனக்கே
அதுவே
ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கு
மிந்திர னாகிவாழ்ந் திருப்பதோ வன்றே
மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
அடலரா வணையி லறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே
அவைதாம்
ஆரா வின்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே
அன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனின்
விழுத்தகு கல்வியு மொழுக்கமு மிலராய்ப்
பழிப்புண ராயினு மாக வழுத்திநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வானுடை ஞமலி யாகிநின்
னருளையு மயரா தவதரிப் பதுவே. (௪)

## நேரிசைவெண்பா

அவமாசி லாமனத்தார்க் காருயிரா ஞானேற்
பவமாசி லாமணிச்சம் பந்தா-தவமார்
தநியருளத் தானேநின் சந்நிதிப்பட் டேற்குத்
தநியருளத் தானே கடன். (௫)



## கட்டளைக்கலித்துறை

கடல்பெற்ற தோர்மணி சிந்தித்த நல்குங் கருத்துக்கெட்டா
மிடல்பெற்ற பேரின்ப நல்கிய வாவருள் வேலைபெற்றென்
னுடல்பெற்ற கண்மணிக் குண்மணி யாகியொண் கூடல்வைகு
மடல்பெற்ற ஞானச் சுடர்மாசி லாமணி யானதொன்றே. (௬)

## நிலைமண்டிலவாசிரியப்பா

ஒன்றே தன்மை யுனக்குமற் றெமக்கு
மன்றென மொழியினு மாமெனப் படுமே
அங்ஙனங் கூறிய தெங்ஙனம் பிறவெனி
னெஞ்ஞான் றுளையுள மஞ்ஞான் றியாமே
அழியா நிலைமையை யனையம் யாமே
வியாபக நினக்குள தியாமுமஃ துளமே
அறிவெனப் பெயரிய பெயரினை யப்பெயர்
பிறிவரும் பெயராப் பெற்றனம் யாமே
இச்சா ஞானக் கிரியையென் றிசைக்குஞ்
சத்திக ளுளையுள தத்திற மெமக்கே
இந்நிலை முழுவது மெமக்குமுண் டாகலி
னந்நிய மலநினக் கநந்நியம் யாமே
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந்
திருநக ராக வரசுவீற் றிருக்கு
மாசி லாமணித் தேசிக ராய
சம்பந் தப்பெயர் தரித்தமை யாலெமைச்
சம்பந் தஞ்செயத் தகுந்தகு நினக்கே
கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலிற்
புருட நாமமும் புனைந்தன மாயினு
மத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே
புருடனைச் சத்தியிற் புணர்த்தனை யன்னதற்
கொருகாட் டென்ப புருடோத் தமனே
உன்னுட னெம்மையு மொப்பனைப் படுத்து
முன்னர்க் கூறிய முறைமையிற் சிற்சில

முழுவது மொவ்வா தொழியினு மொழிக
உயர்ந்தோன் றலைவ ஞெத்தோட் புணரினு
மிழிந்தோட் புணரினு மிழிபெனப் படாதே
ஆதலின் யாமுனைக் காதலித் தனமாற்
காதலி னெமையருட் கைப்பிடித் தருளி
ஒருவரு முணராப் பரம வீட்டி
னிருளறை திறந்த பெருவெளி மண்டபத்
துயர்நா தாந்தத் திருமல ரமளியிற்
புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற
உள்ளொலி நாதப் புள்ளொலி முழங்க
ஞானவா ரமுத பானம தருந்திக்
கருவிகள் கழன்று பரவச மாகிப்
பரமா னந்தப் பரவையுட் படிந்து
போரா வியற்கை பெற்றினி திருப்ப
ஆரா வின்ப மளித்தரு ளெமக்கே. (எ)

### நேரிசைவெண்பா

எம்மா ருயிரா மெழின்மாசி லாமணியை
அம்மா பெறுதற் கரிதென்றே-சும்மா
இருந்தாரே பெற்றார்மற் றெவ்வுலகில் யாரே
வருந்தாது பெற்றார் மணி. (அ)

### கட்டளைக்கலித்துறை

மணிகொண் டவர்தம் பொருளாவ தன்றியம் மாமணியா
மணிகொண் டவரைக்கொண் டாள்வதுண் டேயருட் கடல்வரும்
கணிகொண்ட கொன்றைத் தொடைமாசி லாமணி கண்டவுடன்
பணிகொண்டு தொண்டுங்கொண் டாளுங்கொள் வோமென்று பார்க்குமுன்னே. (௯)



### நிலைமண்டிலவாசிரியப்பா

முற்படு மாயை முதற்களை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
ஈரிரு கண்ணுற் றெழுதாம் வகுத்த
வாறே ழிரட்டி யாரு யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
யைமெனப் பட்ட தாழ்புனற் படுகரிற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகு
மொவ்வொரு மதகா வுடலுடன் றிறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வான்முறை தேக்கலு
மிதத்துட னகித மெனுமிரண் டேற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா
ஓரறு வகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன வறுத்தாங்
கொருகளஞ் செய்யு முழவ னாகி
மாநிலம் புரக்கு மாசி லாமணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவய லுப்ப
னருள்வித் திட்டுக் கருணைநீர்ப் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை

விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னாயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே. (௰)

### நேரிசைவெண்பா

விண்புரக்குஞ் சிந்தா மணியென்கோ மெய்ச்சுடரான்
மண்புரக்குஞ் சூளா மணியென்கோ - பண்பாற்
றிருமா முனிவர் சிகாமணியென் கோசீர்
தருமாசி லாமணியைத் தான். (௧௧)

### கட்டளைக்கலித்துறை

தானவ னாகிய தன்மைபெற் றானடி தாழப்பெற்றாற்
றானவ னாகிய தன்மைபெற் றுய்வனத் தன்மையின்றித்
தானவ னாகிய தன்மைபெற் றேற்கரு டாழ்சடிலத்
தானவ னாகும் பெருமாசி லாமணிச் சம்பந்தனே. (௧௨)

### நேரிசையாசிரியப்பா

பந்தனை தவிராச் சிந்தனை நிகர்ப்பப்
பாயிருள் பரந்த மாயிரும் பொழிலிற்
கொளற்குரி மாந்தர்க் களித்தல் செய்யா
தரும்பூண் சுமந்த வறிவி லாளரிற்
சுரும்பூண் வெறுத்த துதைமலர் வேங்கை
தன்மருங் குறீஇப் பொன்மலர் பிலிற்ற
விலையறப் பூத்த சுதைமலர்ப் புன்னையின்
மெய்ப்புல னேக்கார் கட்புலன் கடுப்ப



இமையா வருங்கண் ணிமைத்தலைங் கூர்தற்
பசுந்தார் மஞ்ஞை யசைந்தமர் தோற்றம்
பொற்றுணர் பொதுளிய கற்பகப் பொதும்பர்
பொறிவண் டுண்ணு நறுமலர் தூற்றப்
பாடல் சான்ற கோடுபல தாங்கிக்
கவளங் கொள்ளாத் தவளமால் களிற்றிற்
கண்பல படைத்த கார்முகில் வண்ணத்
திந்திரன் பொலியு மெழிலலங் காட்டுந்
தண்பணை யுடுத்த தமிழ்ப்பெருங் கூடல்
வண்பதி புரக்கு மாசி லாமணி
தலைப்படு கலைமதி தாங்கா தாங்கத்
தலைப்படு கலைமதி தாங்கி நிலைப்படு
மானிட னாய வடிவுகொண் டருளாது
மானிட னாய வடிவுகொண் டருளி
யெற்பணி பூணு தெற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
ஆரூ ரமர்ந்த ஞானசம் பந்த
நிற்புகழ்ந் திறைஞ்சுங் கற்பின் மாக்கள்
விருப்பு வெறுப்பற் றிருப்ப ரென்ப
பொருட்டுணி புணர்ந்த புலமை யோரே
இகபர மிரண்டினு மெதிர்நிறை கோளினுந்
தொகுதியுள் வேற்றுமைத் தொகைப்பொருள் கோளினு
முன்னவர் மொழிந்ததற் கன்னிய மாகலின்
விருப்பு வெறுப்புள வாய
கருத்தின ராகவுங் கண்டனம் யாமே. (௧௩)

### நேரிசைவெண்பா

கண்ணிற் கணியாங் கதிர்மாசி லாமணியைப்
பண்ணிற் கணியாப் பகர்வரா-லெண்ணுங்காற்
பன்னூலிற் கோக்கப் படுமணியன் றிம்மணிமற்
றிந்நூலிற் கோக்குமணி யென்று. (௧௪)

## கட்டளைக்கலித்துறை

என்வச மாகவில் வாதநெஞ் சயிரும் பைக்குழைத்துத்
தன்வச மாக்கொண் டழுக்கின்ற நற்குருண் டா நம்மையருண்
மன்வச மாகச் செபுணரி வாமணி மாமணிக்குப்
பொன்வச மாக்கொள் வாக்கொண் டேமெசலப் போர்த்ததுவே. (௧௨)

## நேரிசையாசிரியப்பா

போர்வைதயங் கண்ணி வேர்தலிற் பொதிந்த
மண்பெருஞ் சிரியின் மென்கரும் பெழுதித்
தேசலாம் பசும்பொற் சிகாமக் தரத்தின்
வாசமி பிணித்தென மணிக்கச் சிறந்தி
டாம்பொழி காடக் களிநல் வியாலை
படாம்புனை தென்னைப் பைந்துகில் போர்த்துப்
பிதிர்சணங் கலர்ந்த கதிர்முலை மடந்தையர்
விட்புலத் தவர்க்குங் கட்புலன் கதவாக்
குளிகை வருந்த மாளிகை வைப்பிற்
சுவல்கைத் தாங்குபு மதியணர்ந்து பார்க்கச்
சேணிகர் தோங்கும் யாணர்செய் குன்றத்
தாடகத் தியன்ற கூடகக் காத்தான்
மாடகத் திவவியாழ் மருமமி தணைந்து
மூலைக் கிலயத் தேமுகரு கிழீஇக்
கொவ்வைவாய் திறந்து குயிலென மிழற்றுபு
மென்னரம் புகரான் விரன்முறை தடவிக்
கின்னரம் வியக்கும் கீதம் பாட
மைகில வெறிக்கு முகமதி காணூஉச்
சந்திர காந்தத்திற் சமைத்தசெய் குன்ற
மைந்தர்போன் றுருகி மழைக்கணீர் சொரியப்
பல்வளஞ் சுரக்கும் பைந்தமிழ்க் கமலை
நல்வளம் பதிவாழ் ஞானசம் பந்த
பாசமா மிருட்கோர் படர்மணி விளக்கெனு
மாசி லாமணித் தேசிக ராய



சாற்றவன் சேண்மதி மாற்றமொன் றுளதே
மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார
தொழுதெழு மாற வழுவலன் பலைப்பச்
சத்திசி பாதந் தன்மைவர் தடைந்தோர்க்
கப்பொருள் புரிதற் கதுபொழு தாகலின்
மெய்ப்பொரு ளுணர்த்துதல் வியப்பெனப் படாதே
சொற்றமிழ் விரகன் றுணைக்கண் சாத்த
முற்றுணர் கேள்வியர் பற்பல ராயினும்
கைசொலக் கேட்குங் கட்செவி மூங்கைக்
குய்வகை புணர்த்த தொருவியப் பாகலி
னன்னது கடப்பதின் சத்தி விசேடத்
தின்னருள் பெறுநவர் யாவரு மிலரென
வியப்புள தாகு நயப்பதொன் றுளதே
அனையதிங் கென்னென வினவுதி யாயெனிற்
கதலித் தண்டிற் பொதிதழல் கொளீஇப்
பற்று திருப்பினும் பைப்பைய மூட்டுபு
மற்றொரு சூழ்ச்சியிற் பற்றவித் தாலென
ஒருசிறி தெனினும் பருவமின் றாயினும்
பலவிருள் தீர்தருள் பதியத்
தவமில் பேதையேன் றனக்கருள் வதுவே. (௧௩)

## நேரிசைவெண்பா

தன்னே ரிலாஞான சம்பந்தன் றானடைந்தார்க்
கென்னே யிருள்வெளியா மென்பா லன்றோ
வருளாத போது வெளியா யிருந்தவெல்லா
மிருளா யிருந்த வெனக்கு. (௧௪)

## கட்டளைக்கலித்துறை

என்செய லாவொன்று மியான்செய்த தில்லை யெனக்கவமே
புன்செய லாம்வினைப் போகமுண் டாவதென் போதமில்லேன்
றன்செய லாயவெல் லாமாசி லாமணிச் சம்பந்தன்
றன்செய லாயினு மென்செய லாச்செய்யு மாறென்பதே. (௧௫)

## நேரிசையாசிரியப்பா

நான்மறைக் கிழவ நற்றவ முதல்வ
நூன்முறை பயின்ற நுண்மைசா லறிஞ
சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞ
கற்றவர் வியக்குங் காவியப் புலவ
செவிதொறுஞ் செவிதொறுந் தெள்ளமு தூட்டுபு
கவிஞர்வயி னிரப்புங் கல்விப்பிர சங்க
வெள்ளிடைத் தோன்று துள்ளத் துணர்த்தவுஞ்
செய்நிலை நின்ற திருக்கண் சாத்தவுஞ்
சாயா மும்மலச் சகலரோ முய்ய
வெம்முருக் கொண்டு மெம்மொடு பயின்று
மும்மலக் கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பர முணர்த்துஞ் சற்குரு ராய
பளிங்கினிற் குயின்ற பனிநிலா முற்றத்து
விளங்கிழை மடந்தையர் விளையாட் டயர்தரக்
கொங்குவார் குழலுங் குவளைவாள் விழியும்
பங்கய முகமும் பத்திபாய்ந் தொளிர்தலிற்
சைவலம் படர்ந்து தடங்கய லுகளுஞ்
செய்யபூங் கமலச் செழுமல ரோடையென்
றுடவர் சிற்சிலர் நாடினர் காணூஉ
வம்மின் வம்மின் மடந்தையர் நீவிர்மற்
றம்மெல் லோதி யாம்பைய ராதலி
னீர்நிலை நிற்றிரா னீரவர் தங்களுள்
யார்கொல் யார்கொ லிசைமி னிசைமினென்
றிறும்பூ தெய்தி யிரந்தன ரிசைப்ப
மறுமொழி கொடாது குறுநகை முகிழ்ந்தாங்
கையுற வகற்று மணிமதிற் கமலை
நன்னகர் புரக்கு ஞான தேசிக
ஆசிலா வண்புக ழணிநிலா வெறிக்கு
மாசி லாமணி ஞானசம் பந்த



என்பொருட் டாயினு மென்பொருட் டன்றிது
நின்பொருட் டொருபொரு ணிகழ்த்துவன் கேண்மோ
வறிஞ ரோம்பிய செறுவொன் றேய்ப்பப்
பருவ நோக்காப் பவந்தொறும் பவந்தொறு
மிருவினைப் போகமு மேற்கொண் டார்த்துபு
மற்றென் னுருக்கொடு முற்றனை யாவினித்
தாகமின் றாகலிற் பாகமின் றெனக்கென
அருளா தொழியினும் பரிபவ நினக்கே
சேய்முகம் பாராள் சினந்தன ளாகினும்
போயெடுத் தாற்றுமத் தாய்மீட் டன்றே
ஆதலி னெனைப்போ லடிக்கடித் தோன்றலை
ஈதியா லின்னரு ளின்னண மெமக்கே
சமையர் தீர்ந்த தனிப்பொரு டெரித்தற்
கமையர் தேர்கலை யருளுதி யாயினு
மெண்ணி ராண்டைக் கிலக்கமிட் டிருந்த
அண்ணலங் குமரற் காருயிர் தோற்றக்
கடாவிடை யூர்திபாற் கண்டு
மடாதென மொழிகுந ரார்கொன்மற் றுனையே. (௧௯)

## நேரிசைவெண்பா

ஆரூரே யூர்பே ரருண்மாசி லாமணியென்
றோரூர்பே ரில்லாற் குரைத்தேற்குப்-பாரேறப்
பொய்யென்றான் மெய்யென்றான் பொய்யான பொய்யுடலை
மெய்யென்றான் பொய்யென்றான் மீண்டு. (௨௰)

## கட்டளைக்கலித்துறை

மீனா மணிமந் திரமருந் தாற்சென்ம வெவ்விடநோய்
வானா மணியொன்றி ஞன்மீண்ட வாவம் மணிபிறர்கொண்
டானா மணியெமை யாட்கொள்சிந் தாமணி யைந்தவித்தோர்
ஞானா மணிமெய்ச் சுடர்மாசி லாமணி சூழ்திடினே. (௨௧)

### நேரிசையாசிரியப்பா

சூழ்போய் நிவந்த வாழ்கட லுலகத்
தின்னருட் டிறத்தா லிடைமரு தமர்ந்த
பொன்னவிர் கடுக்கைப் புரிசடைப் புங்கவ
னமையாக் காத லிமையவல் லிக்கும்
வழிபடன் முறைமை விழுமிதி னுணர்த்தத்
தானே தன்னைப் பூசனை புரிந்தென
அருத்தியோ டெம்மைநம் முருத்திர கணங்க
டெரித்துமற் றிவ்வா றருச்சனை புரிதிரென்
றங்கயற் கண்ணி பங்கில்வீற் றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்கநா யகனை
ஈரெண் டிறத்துப சாரமும் வாய்ப்பப்
பூசனை புரியுந் தேசிக ராய
மழைக்குலந் தழைப்பத் தழைத்ததிம் பலவின்
வேரிடைப் பழுத்துப் பாரினுட் கிடந்த
முட்புறக் கனிகள் விட்புறக் கமழ்தலுஞ்
சிறகண் மந்தி குறிவழிச் சென்று
கீண்டுபொற் சுளைபல தோண்டுவ தம்ம
முற்பக லொருவர் பொற்குட கிரம்பப்
புதைத்தனர் வைத்த நிதிக்குழா மனைத்தும்
வஞ்சகம் பழகு மஞ்சனக் கள்வர்
கண்டுகண் டெடுக்கும் காட்சித் தன்ன
தண்டலை வளைஇத் தடமதி லுடுத்த
தேசலாங் கமலைத் திருநகர் புரக்கு
மாசி லாமணி ஞானசம் பந்த
வாக்கு மனனும் யாக்கையு மொன்றாய்ச்
சொற்றரு காண மற்றிவை மூன்று
நின்புகழ் நவிற்றியு நினைத்துநின் றனைத்தா
ளன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவா
லவகர ணங்களே யல்லமற் றம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன வன்றே



அதனால்
திரிகர ணங்களென் றுரைசெயு மப்பெய
ரொருபொருட் கிளவியெல் லோர்க்கு
மிருபொருட் கிளவியா யிருந்ததின் றெனக்கே. (௨௨)

### நேரிசைவெண்பா

எற்கமலஞ் செய்யு மெழின்மாசி லாமணிதாட்
பொற்கமலஞ் சென்னி பொலிவித்தே - னற்கமலை
யூரிற் குறுகினே னோர்மாத் திரையளவென்
பேரிற் குறுகினேன் பின். (௨௩)

### கட்டளைக்கலித்துறை

பின்னம் படைத்த சமய விரோதப் பிணக்கறுத்தோர்
சின்னம் படைத்த முனிமாசி லாமணிச் சித்தரியா
மின்னம் படைத்தவ ரேதுபெ றாமு நிங்கெமக்கென்
றன்னம் படைத்தவர் பெற்றார் புவன மடங்கலுமே. (௨௪)

### நேரிசையாசிரியப்பா

அடங்கா வைம்புல னடங்கினர்க் கம்ம
ஒடுங்கா வைம்புல னுளத்தினு முளவே
அவைதாம்
செவிப்புல னறியா வகத்தொலி யொன்றே
மெய்ப்புல னறியாத் தட்பமற் றொன்றே
கட்புல னறியாக் கதிரொளி யொன்றே
நாச்சுவை யறியா நறுஞ்சுவை யொன்றே
மூக்குயிர்த் தறியா மூருகுமற் றொன்றே
போரா வின்பமிப் பெற்றியிற் றினைக்கு
மாறா வின்பமொன் றூர்தனம் யாமே
அதுவே
கரையெறிந் தார்க்கும் பொருபுனற் படுகரிற்
பனிலமீன் றளித்த மணிநிலாப் போர்ப்பத்
தருணவெண் ணெனினர் தன்னகத் தடங்க
வருண முண்டக மகிழ்தழ் முகிழ்ப்பது

தெண்டிரை யுடுத்த தீம்புனன் மடந்தை
வெண்டுகிற் படாஅம் விசித்தனள் போர்த்து
வள்ளவாய்க் கமல மலர்க்கையால் வளைத்துப்
பிள்ளைவெண் ணெகினம் பிடிப்பது கடுக்குங்
காசலாம் பசும்பொற் கடிமதிற் கமலை
மாசி லாமணி ஞானசம் பந்தனென்
றருந்தவர் துதிப்பவோர் பெரும்பெயர் நிறீஇப்
பரமா னந்தப் பரவையுட் டோன்றிய
இன்பவா ரமுதமவ் வமுத
மன்பருக் கெளிதெளி தரிதுவிண் ணவர்க்கே. (௨௫)

### நேரிசைவெண்பா

விண்மணியாய்க் காண்போர் விழிக்குட் பொலிந்ததுணைக்
கண்மணியாய் நின்றெவையுங் காட்டுமா-லொண்மணிச்சூட்
டம்மா சுணந்தன்னி யம்முடிமேற் கொண்டிருந்த
இம்மா சிலாமணிமற் றின்று. (௨௬)

### கட்டளைக்கலித்துறை

இன்றோர் வியப்புள தான்மாசி லாமணி யென்றிருப்ப
தொன்றோர் மணிகண் டவர்பல ராலதற் கோர்மருங்காய்
நின்றோர் பலபல பேதங்க ளாச்சொல்வர் நீக்கமறச்
சென்றோர்மற் றிம்மணி செம்மணி யேயென்று செப்புவரே. (௨௭)

### நேரிசையாசிரியப்பா

எழுயர் மும்மதச் சூழிமால் யானை
தடம்புனல் குடைந்து படிந்தெழுஉத் துழக்கத்
தெண்டிரை சுருட்டுங் குண்டகழ் வாவியிற்
பங்கயத் தவிசிற் பசும்பொற் றுதளைந்
தங்கம் வேறுபட் டரசனம் பொலிதலு
மாவலிற் படர்ந்த சேவல்கண் டயிர்த்தரம்
பெடையன் றிதுமல ரோடையு மன்றாற்
படரும்வெண் டாமரை படர்ந்ததை யன்றிது
கடவு ளமுதங் கடைந்தபாற் கடலே



கார்துவெங் கனற்கட் களிறுமன் றிதுகடம்
சாய்ந்தெழு மந்தரத் தடங்கிரி யதுவே
போருவா வுறுப்பும் புழைக்கையுந் தைவரும்
பாகரோ வாசுகி பற்றும்வா னவரே
பொங்கிவெண் ணிலவு பொழிந்தவெண் டாளமன்
றிங்கிது வங்கதி லெழுந்தவா ரமுதே
கொடிவிடு பாசடைக் குழாமன் றிங்கிதக்
கடலிடைத் தோன்றிய கற்பகா டவியே
சேயிதழ் விரிக்குஞ் செந்தா மரையிதன்
றூயதன் வடிவமா யமர்ந்தமா நிதியே
சங்கமன் றிதுவதன் றனிப்பெயர் நிதியே
செங்கிடை யன்றிது சிந்தா மணியே
ஆதலி னமதுபேட் டன்னமு மன்றிதப்
போதிலங் குறித்த பொலங்கொம் பன்றே
என்றன மருளவோ ரெழினலம் பயக்கு
மன்றலம் பணைசூழ் மருத வேலிப்
பொன்மதிற் கமலை நன்னகர் புரக்குந்
தேசிக ராய சிற்பர முதல்வ
மாசி லாமணி ஞானசம் பந்த
எனையாட் கொள்ளவந் தெய்தினை யாகலின்
முனியா தொன்றிது மொழிகுவன் கேண்மதி
கற்றன ராயினுங் கல்லா ராயினு
மற்றனம் யாமென வடைந்தனர் தமையெனிற்
காலம் பாரார் கருத்தினை யளவார்
சீல நோக்கார் நீக்குணங் கொள்ளார்
பரிசிலர் வேண்டிய பரிசுமற் றெல்லாம்
வரிசையோ டளிப்பது வள்ளியோர் கடனே
நன்னெறிப் படரா நலமிலி யாயினுஞ்
செந்நெறிப் படர்ந்தநின் சீர்புனைந் தேத்தலிற்
சத்திநி பாதநின் சந்நிதிப் பட்ட
இத்திறத் தெளிதினி லெய்திய தெனக்கே

அகவல்
சரியையிற் றாழ்க்கிலை கிரியையிற் பணிக்கிலை
யோகத் துய்க்கிலை பாசமு நோக்கிலை
ஞானையின் றனையொரு வேலையு நவிற்றிலை
ஈண்டெனக் கருளுதி யிறைவ
ஈது பூண்டுகொண் டிருப்பனின் பொன்னடித் துணையே. (உஅ)

### நேரிசைவெண்பா

பொன்னேயல் லாமற் பொருளோ டுடலுயிரிற்
றன்னே மணியொன் றவர்கொள்வார் - கொன்னே
குருமாசி லாமணியைக் கொள்வோர் கொள்ளார்முன்
றருவார்மற் றிம்மூன் றுயர் தாம். (உக)

### கட்டளைக்கலித்துறை

தருமணிக் கோவைத் தருஞான சம்பந்தன் றண்கமலக்
குருமணிக் கோவை நிகர்மாசி லாமணி கோத்திடலா
லொருமணிக் கோவையி மும்மணிக் கோவையொண் சங்குகஞ்சம்
பொருமணிக் கோவைப் பொருளாக்கொள் ளாரிது பூண்டவரே.

### நூற்சிறப்பு

தடுத்த பிறவித் தளையாம் விலங்கு தனைமுறித்து
விடுத்த கருணைக் கடன்மாசி லாமணி மெய்ப்புகழாற்
றொடுத்த தமிழ்மும் மணிக்கோவை கீர்த்தர் துதிக்கவல்லா
ரெடுத்த சனனத்தி லெய்தாத பேரின்ப மெய்துவரே. (கக)

உள்ளத் தருளின் றுணர்த்தவென் றுவி லுறைந்தவெள்ளை
வள்ளக் கமலத் தவன்மாசி லாமணி வண்புகழி
லெள்ளத் தனையள வோர்தொடை யாக்கி யிசைத்தனனாற்
கள்ளப் புலன்கொண் டுரைத்தே னலனிக் கவிமுற்றுமே. ()

விரிக்குஞ் சரியையிப் பாமாலை சேர்த்தது மெய்க்கிரியை
தரிக்கும் படிக்கின்ற சாத்திய தேமற்றென் றண்டமிழ்நீ
தெரிக்கின்ற போதருள் செய்தது வேறிவ யோகமுண்மை
பரிக்கின்ற ஞானமொன் றேமாசி லாமணி பாலித்ததே. (கங)

பண்டாரமும்மணிக்கோவை
முற்றிற்று.

# காசிக்கலம்பகம்

உ

திருச்சிற்றம்பலம

# காசிக்கலம்பகம்

## காப்பு

### நேரிசைவெண்பா

பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே-மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
வோரானை வந்தென் னுளத்து.

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா

நீர்கொண்ட கடலாடை நிலமகளுக் கணியான
கார்கொண்ட பொழிற்காசிக் கடிநகரங் களிதூங்க
விடமருங்கிற் சிறுமருங்குற் பெருந்தடங்க ணின்னமிர்தஞ்
சடைமருங்கி னெடுந்திரைக்கைப் பெண்ணமிர்தந் தலைசிறப்பக்
கண்கதுவு கடவுண்மணி தெரிந்தமரர் கம்மியன்செய்
விண்கதுவு பொலங்குடுமி விமானத்தின் மிசைப்பொலிந்தோய்.

நிற்பனவுந் தவழ்வனவு நடப்பனவு மாய்நிலத்துக்
கற்பமள விலகண்டு முறுகளைகண் காணாமே
பழங்கணுறு முயிர்கடுயர்க் கடனீந்திப் பரங்கருணை
வழங்குபர மானந்த மாக்கடலிற் றிளைத்தாட
உரையாத பழமறையின் முதலெழுத்தி னொண்பொருளை
வரையாது கொடுத்திடுநின் வள்ளன்மை வாழ்த்துதுமே. (௨)

இவையிரண்டும் ஆறடித்தரவு.

நீரொழுக்குக் கொத்தவுட னீத்தார்க்கு நீகவில்வ
தோரொழுத்தே முழுதுமவ செவ்வண்ண முணர்வதுவே. (௧)

என்பணிவ தடுப்பதுதோ வெம்பிரான் றமர்களவர்
முன்பணியும் பேறுடையார் திசைமுகனு முகுந்தனுமே. (௨)

செடிகொண்முடைப் புழுக்கூடே சிற்றடியோ மிருநிறைமற்
றடிகளடி யார்க்களிப்ப தாகுக்கும் பெருவாழ்வே, (௩)

பற்பகலோற் றருந்தவரும் பெறற்கரிய பரத்தாம
மெற்புடல்விற் றனியேமுன் கொளப்பெறுவ திறம்பூதே. (௪)

நிணம்புணர்வெண் டலைக்கலன்கொ ளேரிழைமுத் திருவை
மணம்புணர்வார்க் கையனருண் மணவாளக் கோலமே. (௫)

முடைத்தலையிற் பலிகொள்வான் மூவுலகு மவரவர்தங்
கடைத்தலையிற் றிரிவதுகொல் யாம்பெறுமின் காணியே. (௬)

இவையாறும் ஈரடித்தாழிசை.

உளதென விலதென வொருவரொ ரளவையி
னளவினி லளவிட லரியதொ ருருவினை. (௧)

இதுவென லருமையி னெழுதரு மொழிகளு
மதுவல வெனுமெனி லெவருனை யறிபவர். (௨)

அவனவ ளதுவெனு மவைகளி னுளனல
னெனவவ ளிவனென வெதிர்தரு தகைமையை. (௩)

அறிபவ ரறிவினு ளறிவொடு டறிவுறு
நெறியல தொருவரு மறிவரு நிலைமையை. (௪)

இவை நான்கும் ஈரடியராகம்.

ஆணொடு பெண்ணுரு வமைந்து நின்றனை.
பூண்முலை தவத்துமைம் புலனும் வென்றனை.
எண்வகை யுறுப்பினோ டுருவெ டுத்தனை.
தொன்மறைப் பனுவலின் றொடைதொ டுத்தனை.

இவ்நான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம்.

வடவரைக் குழைய வளைத்தனை.



மலைமகள் முலைக டிளைத்தனை.
விடமமிர் தமா விளைத்தனை.
விசயனொடமர்செய் திளைத்தனை.
வரிசிலை மதனை யெரித்தனை.
மதகரி யுரிவை தரித்தனை.
அருமறை தெரிய விரித்தனை.
அலகில்பல் கலைக டெரித்தனை.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம்.

அழல்வி ழித்தனை. பவமொ ழித்தனை.
ஆற ணிந்தனை. மாற ணிந்தனை.
மழுவ லத்தினை. முழுந லத்தினை.
மான டத்தினை. மாணி டத்தினை,
அலகி றந்தனை. தலைசி றந்தனை.
அருள்சு ரந்தனை. இருடு ரந்தனை.
உலக ளித்தனை. தமிழ்தெ ளித்தனை.
ஒன்று மாயினை. பலவு மாயினை.

இவை பதினாறும் இருசீரோரடியம்போதரங்கம்.

அலகில்பல புவனங்க ளடக்கலுமுண் டொழிப்பாய்க்குக்
கொலைவிடமுண் டனையென்ற கூறுவதோர் வீறுமே, (௧)

பயின்மூன்று புவனமுங்கட் பொறிக்கிரையாப் பாலிப்பாய்க்
கெயின்மூன்று மெரிமடுத்தா யென்பதுமோ ரிசையாமே. (௨)

அடியவரே முக்குறும்பு மறவெறிந்தா ரெனிலடிகள்
விடுகணைவிற் காமனைமுன் வென்றதுமோர் வியப்பாமே. (௩)

இக்கூற்றின் றிருநாமந் தொருகூற்றுங் கிலக்கென்று
லக்கூற்றங் குமைத்தனையென் றிசைப்பதுமோ ரற்புதமே. (௪)

இவைநான்கும் ஈரடித்தாழிசை.

எனவாங்கு இது தனிச்சொல்.

உலகுசூற் கொண்ட தலைவியு நீயும்
மலைபக வெறிந்த மழவிளங் குழவியை
அமிர்தமூற் றிருக்குங் குமுதவாய்த் தேறல்
வண்டுகி னளைப்ப மடித்தலத் திருத்திக்
கண்களிற் பருகியக் காமரு குழவி
எழுதாக் கிளவி யின்சுவை பழுத்த
மழலையா றமிர்தம் வாய்மடுத் தண்ணச்
செஞ்செவி நிறைத்தநும் மஞ்செவிக் கடிகளென்
புன்மொழிக் கடுக்கொளப் புகட்டின
னின்னருள் விழைகுவா மிறும்பூ துடைத்தே. (௧)

இது பத்தடிநேரிசையாசிரியச்சுரிதகம்.

## நேரிசைவெண்பா

உடையா ளகிலேசர்க் கோங்குமுலைக் கோட்டி
னடையாள மிட்டுவையா னானல்-கடையிலவர்
செவ்வண்ணம் பெற்றார் திரளொடுநிற் கின்றாரை
எவ்வண்ணங் கண்டிறைஞ்சு வேம். (௨)

## தூது-கட்டளைக்கலித்துறை

இறைவளைக் காகம் பரிந்தளித் தாரகி லேசர்கொன்றை
நறைவளைக் கும்முடி யாரடிக் கேகங்கை நன்னதியின்
றுறைவளைக் குங்குரு கேகுரு கேசென்று சொமொழிகைக்
குறைவளைக் கும்முங்கள் பேரிட்ட தாற்சென்று கூறிடுமே. (௩)

## புயவகுப்பு

இடமற மிடைதரு கடவுளர் மடவிய
றெறிதரு கவரிநி ழற்கட் டுயின்றன
இனவளை கொடுமத னிடுசய விருதென
விறையவ னெழுதுசு வட்டுக் கிசைந்தன



இருவரு நிகரென வரிசிலை விசயனொ
டெதிர்பொரு சமரினி ளைப்புற் றிருந்தன
இணையடி பரவிய மலடிமு னுதவிய
விடியலி னுணவொரு தட்டைப் பரிந்தன,—

படவர வுமிழ்தரு மணிவெயில் விடவளர்
பரிதியொ டெழுமுத யத்திற் பொலிந்தன
பருகுமி னமிர்தென வருகிரு கவிஞர்கள்
பனுவலின் மதுரவி சைக்குக் குழைந்தன
படரொளி விடுசுடர் வலயம தெனவொரு
பருவரை நெடுவிலை டுத்துச் சுமந்தன
பரர்புர மெரியொடு புகையெழ மலர்மகள்
பணைமுலை தழுவுச ரத்தைத் துரந்தன,—

மடலவிழ் தடமல ரிதழியி னிழிதரு
மதுமழை யருவிகு ளித்துக் கிளர்ந்தன
வழிதர வுதிரமு நிணமொடு குடர்களும்
வருசர கரியின்ம தத்தைத் தடிந்தன
மறகரி யுரியதன் குலகிரி முதுகினின்
மழைமுகி றவழ்வதெ னப்பொற் பமைந்தன
மலிபுகழ் நிலவொடு மடுதிறல் வெயிலெழ
மதிகதிர் வலம்வரு வெற்பொத்து நின்றன,—

குடவளை துறைதொறு முடுநிரை யெனவிரி
குளிர்நில வெழவுமிழ் முத்தைத் தடங்கரை
குலவிய படர்சிறை மடவன மொடுசில
குருகுகள் சினையொட ணைத்துத் துயின்றிடு
குரைபுனல் வரநதி சுரர்தரு முருகவிழ்
தொழுமலர் சிதறவி முத்தத் துவின்டொடு
குலகிரி யுதவிய வளரிள வனமுலை
தொழுநர்த மழகிய கொற்றப் புயங்களே. (௪)

### நேரிசைவெண்பா

புயலார் பொழிற்காசிப் பூங்கோயின் மேய
கயலார் தடங்கணாள் காந்தன்-செயலாலே
யுய்யத் துணியா ருணிப்பார் துணிப்பாரேல்
வையத் துணியார் மறந்து. (௫)

### கட்டளைக்கலித்துறை

மறைக்கோலம் கொண்ட வகிலேச ரேகம்ப மாதர்முன்னே
பிறைக்கோலங் கொண்டு புறப்பட்ட வாமுன் பிறைமுடித்த
இறைக்கோல மேல மெனத்தேவ ரோல மிடவிருண்ட
கறைக்கோலங் கொண்டதங் கண்டத் தொளித்த கனல்விடமே. ()

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

விடுத்த வாளிக்கும் விரலாக் கருப்புவில்
வீரன்பி ளவும்வாளாத்
தொடுத்த வாளிக்கு மோரகை மூண்டடித்
தூயான் மொழிக்கென்று
மடுத்த நான்மறை முனிவர் நால்வர்க்கு
மம்மறைப் பொருளுற
வடுத்த கோலமா யானந்த வனத்துமெம்
மிதயத்து மிருப்போனே. (௭)

### கட்டளைக்கலித்துறை

இருப்பா ரவிழ்த்தத் தென்கேசன் றூமவெ
ரென்றும்வெள்ளிப்
பொருப்பான கோதைத் திலகநல் லாவிப்,
புனைங்கலை
உருப்பாதி பிற்பட்டுத் தோர்பாதி பித்தனைத்
தழிதொறும்
விருப்பா ருயிர்களின் மெய்யுரைத்துத் தழுவேயும்
விண்ணனடே. (௮)



### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கண்ணொன்று திருநுதலிற் கனலுருவ மாப்படைத்த
காசி நாதா
தண்ணொன்று மறையிதழித் தாரொன்று மெட்டுயிர்த்தா
டரைமேல் வீழ்த்தா
வெண்ணொன்று முனராமே யடக்கின்று வீழ்கண்டா
லெழுந்தொன் றேறத்
தண்ணென்று வருவதொனத் தணிர்தனமோ வறியேனித்
தோகை தானே. (௯)

### நேரிசைவெண்பா

தோகை யுயிர்முடிப்பான் றம்மைமுடித் தான்மதவேள்
வாகை முடித்திடவும் வல்லனே-யாகெடுவீர்
காமாந் தகர்காசிக் கண்ணுதலார்க் கோதிர்மற்
றேமாந் திராம லெடுத்து. (௰)

### கட்டளைக்கலித்துறை

எடுக்கச் சிவக்கு சிலம்படி யாரகி லேசர்மறைக்
கடுக்கைச் சடைமுடி யார்க்குக் கிலகன்செய்து
கொடுக்கக் கொடுக்க வளர்கின்ற வாவெறுங் கூட்டிலெரி
மடுக்கக் குறையுயிர் மாதரைத் தேடு மதிக்கொழுந்தே. (௧௧)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கொழுதி வரிவண் டுழுதுழக்குங் குழலீர் நறுங்கட் கோதையிவ
ளழுத விழிநீர் முந்நீரை யுவர்நீ ராக்கு மதுகூறீ
ரெழுத வரிய திருமார்பி லிளஞ்சேய் சிறுசே வடிச்சுவடு
முழுது முடையான் முலைச்சுவடு முடையார் காசி முதல்வருக்கே.

### நேரிசைவெண்பா

வடிரவிளக்கும் பொற்றடந்தோள் மைந்தர்க் கிவரார்
கிளைவளைக்கை யார்கைக்கு சேராக்-களையிற்
குவிமுத்தம் வெண்ணிலவு கொப்பளிக்குங் கங்கை
யவிமுத்தஞ் சென்றிறைஞ்சா தார். (௧௨)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஆர்க்கும் படைவே ளாசிருப்பென் றஞ்சா
 தடிக ளருட்காசி
யூர்க்கும் புதுத்தோ ரணமமைத்தா லுமக்கிங் கிவன்பேச்
 சுரைப்பாரார்
வார்க்குங் குமப்பூண் முலைச்சுவட்டை வளையென்
 றேடி வளைந்துசுற்றிப்
பார்க்குந் தொளைமுன் னெயிற்றாகப் பணியீர்
 மோகந் தணியீரே. (௧௪)

### பிச்சியார். கட்டளைக்கலிப்பா

தண்ணு லாம்பொழிற் காசித் தெருவினீர்
 தரித்தி டுந்தவக் கோலமுஞ் சூலமும்
பெண்ணொ டாடுமப் பிச்சனுக் கொத்தலாற்
 பிச்சி யாரெனும் பேர்தரித் தாடுவீர்
வெண்ணி லாமுகிழ்க் குங்குறு மூரலால்
 வீணி லேயெம் புரத்தெரி யிட்டநீர்
கண்ணி னாலுமிக் காமனைக் காய்ந்திடிற்
 கடவு ளீரென் றிறைஞ்சது காணுமே. (௧௫)

### இதுவுமது

காணுங் காணு நதிகளெல் லாம்புனற்
 கங்கை யேயங் குளதெய்வம் யாவையுந்
தாணு வெங்க ளகிலேச ரேமற்றைத்
 தலங்கள் யாவுந் தடமதிற் காசியே
பூணு மாசைமற் றொன்றே யுடல்விடும்
 போது நன்மணி கர்ணிகைப் பூந்துறை
பேணு மாறு பெறவேண்டு மப்புறம்
 பேயொ டாடினு மாடிப் பெறுதுமே. (௧௬)



### இதுவுமது

பெற்ற மூர்வதும் வெண்டலை யோட்டினிற்
 பிச்சை யேற்றுத் திரிவதும் பேய்களே
சுற்ற மாகச் சுடலையில் வாழ்வதுந்
 தோலு டுப்பதுந் தொண்டர்க் கரிதன்றால்
கற்றை வார்சடைக் காசிப் பதியுளீர்
 கற்பந் தோறுங் கடைநா ளுலகெலாஞ்
செற்று மீளப்ப டைக்கவும் வேண்டுமே
 தேவ ரீர்பதஞ் சிந்திப்ப தில்லையே. (௧௭)

### நேரிசைவெண்பா

இல்லானை முப்பத் திரண்டறமுஞ் செய்திருப்பச்
செல்லார் பொழிற்காசிச் செல்வனார் - மெல்லப்
பரக்கின்ற புண்ணீர்ப் படுதலைகொண் டைய
மிரக்கின்ற வாறென்சொல் கேன். (௧௮)

### கொச்சகக்கலிப்பா

சொல்லா வதுமறையே சொல்லுவது நல்லறமே
யில்லா வதுமுத்திக் கேதுவா மித்தலமே
யல்லார் குழலளவு மாகொன் மனம்வயிரக்
கல்லா யிருந்தவா காசிப் பிரானார்க்கே. (௧௯)

### கட்டளைக்கலித்துறை

பிரானென் றவர்க்கொரு பெண்ணொடு மோடிப் பெருங்கருணை
தராநின்ற காசித் தடம்பதி யார்வந்தென் றன்னகத்தே
யிராநின் றனரைம் புலக்கள்வர் கொள்ளையிட் டேகுதற்கே
வராநின்ற போதுள்ள மாதனங் காத்து வழங்குதற்கே. (௨௰)

### கொற்றியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வழுத்துமவர்க் கானந்த வாழ்வையருள் வார்காசி
 வளமை யெல்லாங்
கொழுத்ததமி ழாற்பாடித் துளசிமணி தரித்தாடுங்
 கொற்றி யாரே

பழுத்தநவச் சோலையுள்ளமைச் சங்குமமர் ஸ்ரீபுவனத்
பணிக்கே மாசின்
முழுத்தநவத் தால்யாழு மாலாயி னேங்கடி
முயங்கு வீரே. (உ௧)

கட்டளைக்கலித்துறை

முயலாம வேதவ முத்தித் திருவை முயங்கால்கும்
கயலார் பெருந்தடங் கண்ணிபங் காருட் காசியிலே
செயலாவ தொன்றிலை வாளா நெடுந்துயில் செய்யுமுங்கள்
பயலாக வேபணி செய்வார் புவனம் படைப்பவரே. (உஉ)

வேறு. கட்டளைக்கலிப்பா

படுத்த பாயுட னேபிணி சூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினு
மடுத்த நிங்கிவர்க் கேபெரு வாழ்வெனு
மப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிர் திரதிரு வம்புவி
வென்கு டைக்கு விடுமெ சாட்சியும்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவார்
காத லித்து வருந்திருக் காசியே. (உ௩)

கட்டளைக்கலித்துறை

திருக்கோலங் கொண்டாற் றென்மொழி யாளென்
டிசையினுங்கின்
றுருக்கோல மேகண்டுங் கண்டிலன் போது
மொழுகுகறை
மருக்கோல நீலக் குழல்சே ரவிமுத்த
வாணதொல்லை
இருக்கோல மிட்டனை ராயெங்கு மாகி
யிருப்பதுவே. (உ௪)



இருகுங் குமக்குன்று பீர்பூப்பக் காம வெரியினினின் [டுத்துச்
றுருகும் பசும்பொன்னுக் கோர்மாற் றுண் டேனுமை யாய்தொ
செருகு நறுங்கொன்றை தேன்பிழிந் தூற்றச் சிவறத்தரும்பர்
பருகும் பொலஞ்சடை யாய்காசி வாழ்முக்கட் பண்ணவனே. (உ௫)

விருத்தக்கலித்துறை

பண்ணோர் வேதம் பாடிய காசிப் பதியாயிப்
பெண்ணே யொருவ னெய்கனை யைந்தும் பெய்தானு
ளுண்ணோர் நின்று யின்னரு ளாலென் னுயிரன்னாள்
கண்ணோர் நிற்றற் கொல்கி யொழிந்த கழுநீரே. (உ௬)

கட்டளைக்கலித்துறை

கழியுர் தலைக்கலன் பூண்டாடுங் காசிக் கடவுணுதல்
விழியு மிடக்கண்ணும் வெண்ணெருப் பேயவ் விழியிரண்டிற்
பொழியுங் கனல்விழி காமனைக் காய்ந்ததப் போரினுடைந்
தொழியும் படைகளொன் றேவெமைக் காயுமற் றோர்விழியே. ()

மடக்கு. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

விழைகுவ தன்பர கஞ்சகமே
வெங்கரி யின்னுரி கஞ்சகமே
தொழிலடி கட்குள மாலயமே
தூமுனி வோருள மாலயமே
அழகம ரும்பணி யென்பணியே
யாட்கொள மேற்கொள்வ தென்பணியே
மழகரி நீன்ற வளம்பதியே
வாழ்வது காசி வளம்பதியே. (உ௮)

மடக்கு. கட்டளைக்கலிப்பா

வண்ண மேனி யரும்பு வனங்கனே
வாசம் வாச மரும்பு வனங்கனே
கண்ணு மாலய மாதவ ரங்கயே
ஞால மேழ்தரு மாதவ ரங்கமே

தண்டேனுண் மாலை தருமருக் கொன்றையே
தருவ ளையார் தருமருக் கொன்றையே
கண்டனி ளிர்ப்பார் மனத்திருக் கோயிலே
காசி யேயவர்க் கோர்திருக் கோயிலே. (உ௯)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

திருகுசினக் கூற்றினெயிற் றிடைக்கிடந்துங் கடைநாளிற்
றிகையே யொன்றாய்ப்
பெருகுறுமூ வேந்தத்திற் றிரிந்தாடப் புணைதேடும்
பேதை நெஞ்சே
உருகிலொக் குடைந்திலமொண் டானந்த வனத்தேனை
யோடி யோடிப்
பருகிலைகண் ணரும்பிலமெய் பொடித்திலமற் றெனச்செல்ல
பாவந் தானே. (௩௰)

நேரிசைவெண்பா

பாவலரு நாவலரும் பண்மலரக் கண்மலருங்
காவலரு மேடவிழ்க்குங் காசியே - நிவளருங்
கஞ்சக் கரத்தான் கலைமறைக்கு நாயகமா
மஞ்சக் கரத்தா னகம். (௩௧)

[illegible]

அகமே பயின்முத்த னையரிவர்க் காகஞ்
சகமேழு மீன்றெடுத்த தாயே - மிகமேவு
மெண்ணாம் பரமே யெமக்களித்தன் முச்சடருங்
கண்ணாம் பரமே கலை. (௩௨)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை

கலைமதியின் கீற்றணிந்த காசியமர் வேச்ர்
நிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்கா ணம்மானை
நிலைமதனைக் கண்ணழலாற் செற்றனரே யாமாயின்
மலைமகட்குப் பாகம் வழங்குவதே னம்மானை
வழங்காரோ வப்பாகு மாலாகு லம்மானை. (௩௩)



கட்டளைக்கலித்துறை

அம்மனை தம்மனை யாத்திருக் கோயி லவிமுத்தமா
எம்மனை யாய்த்தந்தை யாயிருந் தாரடிக் கேழிறைஞ்சீர்
நம்மனை மக்களென் றேக்கறப் பீருங்க ளுருவர்தாஞ்
சொம்மனை வைத்தெப் படிநடப் பீர்யமன் றூதரொடே. (௩௪)

கட்டளைக்கலிப்பா

தூது கொண்டூர் தமைத்தோ மூமைகொண்ட
தொண்டர் தண்டமிழ்ச் சொற்கொண்ட குண்டலக்
காது கொண்டெங் கவிதைகொண் டாட்கொண்ட
காசி நாதர் கருத்தே தறிகிலேம்
போது கொண்டொரு பச்சிலை கொண்டுதாம்
பூசை செய்திலர் புண்டரி கப்பத
மேது கொண்டு கொடுப்பர் கொடுப்பரே
லிருவ ருக்குமற் றென்படு நெஞ்சமே. (௩௫)

சிந்து. நேரிசைவெண்பா

எடவிழ்பொற் கொன்றையணி வேசர்ன்பர்க் கேயிருப்பை
ஆடகமாக் கிக்கொடுத்தோ மவ்வனவோ-சீடுதிறல்
காட்டுமிமை யோர்க்கிருப்புக் கற்கனக மாக்கியண்ட
ஓட்டினையும் பொன்னாக்கி னேம். (௩௬)

நேரிசையாசிரியப்பா

பொன்னுருக் கன்ன பூந்துணர்க் கொன்றையும்
வெள்ளிமுளை யன்ன விரிநிலாக் கொழுந்தும்
கார்தண் மலர்ந்தன்ன யார்தளி ளிரையுந்
திரைசுழித் தெறியும் பொருபுனற் கங்கையில்
வெள்ளிதழ்க் கமலம் வள்ளவாய் விரித்தென
முழுநகை முகிழ்க்குங் கழிமுடை வெண்டலை
தோலடிச் செங்காற் பால்புரை வரிச்சிறைக்
கிஞ்சுக மலர்ந்த செஞ்சூட் டெகினத்
துருவெடுத் தகல்வான் றுருவியுங் காணத்

தொன்மறைக் கிழவ சென்னிமற் றியானே
கண்டுகொண் டனனிக் கடவுண்மா முடியெனப்
பெருமகிழ் சிறப்பக் குரவையிட் டார்த்து
வெண்ணெயி றிலங்க விரையிற் சிரித்தெனப்
பெருவியப் பிழைக்கு மெரிபுரை சடையோ
யான்வழக் கறுக்கும் வாளமர்த் தடங்கண்
மின்னிழை மருங்குற் சின்மொழி மகளி
ரொழுகொளி மிடற்றி னழகுகவர்ந் துண்டெனக்
கயிறுகொண் டார்க்குங் காட்சித் தென்ன
மரகதங் காய்த்துப் பவளம் பழுக்குங்
கமஞ்சூழ் கமுகின் கழுத்திற யாத்து
வீசொளிப் பசும்பொ னூசலாட் டயர்தரப்
பருமணிக் கமுகின் பசுங்கழுத் துடைந்து
திரைபடு குருதித் திரடெறித் தென்ன
முழுக்குலை முரிந்து பழுக்காய் சிதறு
மங்குல்கண் படுக்கு மதுமலர்ப் பொதும்பர்
கங்கைசூழ் கிடந்த காசி வாணு
வைவளி பித்தெனு மவைதலை யெடுப்ப
மெய்விட் டைவருங் கைவிடு மேல்வையின்
மாமுத றடிந்த காமரு குழவியும்
பொழிமதங் கரையு மழவிளங் களிறு
மூண்டெழு மானம் பூண்டழுக் கறப்ப
இடக்கையி னணைத்துநின் மடித்தலத் திருத்தி
உலகுமோ ரேழும் பலமுறை பயந்து
முதிரா விளமுலை முற்றிழை மடந்தை
ஒண்டொடித் தடக்கையின் வீசு நுண்டுகிற்
றலைகையிற் பிறந்த நாகிளந் தென்றன்
மோகமுந் தளர்ச்சியுந் தாகமுந் தணிப்ப
மறைமுதற் பொருளி னிறைசுவை யமுதினை
அஞ்செவி மடுத்துண வூட்டிநின்
குஞ்சித வடிக்கீழ்க் குடியிருத் துகவே. (௧௭)



### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

குடியிருக்கும் புன்குரம்பை குலைந்திடுநாட் கொலைக்கூற்றங்
குமைத்த செம்பொ
னடியிருக்கும் பார்தாமப் புக்கில்புகுந் தானந்த
வமுத மார்ந்திக்
கடியிருக்கு நறைக்குழன்முத் தித்திருவை முயங்கிடவுங்
கடவேன் கொல்லோ
துடியிருக்கு மிடையவளோ டவிமுத்தத் திருந்தபராஞ்
சோதி யானே. (௧௮)

### கலி - தாழிசை

சோதியொன்றிலொரு பாதிசத்தியொரு
பாதியும்பரம சிவமெனத்
தொகுத்துவைத்தவவி முத்தநாயகர்
துணைப்பதம்பரவு களியரே
மோதியோதியுமி ளைப்பர்வேதம
துணர்த்துதத்துவமு முணர்கிலா
ருணரும்வண்ணமநு பவத்தில்வந்திடுமோ
ருண்மைவாசகமு ணர்த்துகே
மேதினுலற மனைத்தினும்பசுவி
னைப்படுத்தனல்வ ளர்த்திடும்
யாகமேயதிக மென்பதன்பர்த
மிறைச்சிமிச்சிலதி விச்சையா
ராதியாரிவ ரதுகிடக்கமது
வருந்திலப்பொழுதி லேபெறற்
கரியதோர்பரம சுகம்விளைந்திடுவ
ததுமறுத்தவவை யில்லையே. (௧௯)

### கட்டளைக்கலித்துறை

இல்வாழ்வை விட்டுக் கதிவேட் டடைபவர்க் கேழைபங்க
னல்வாழ்வை யேதருங் காசிப் பிரானறும் பூங்கடுக்கை
வல்வார் முலைக்கொம்ப ருய்தந்தை தாண்மழு வாலெறிந்து
கொல்வா ரொருவருக் கல்லா தெவர்க்குங் கொளற்கரிதே. (௨௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சொன்னையிடச் சிலர்க்குமுத்திச் சாக்கறையைத் திறந்துகொடுத்
தனந்த கோடி
பிள்ளைகள்பெற் றுடையபெரு மனைக்கிழத்திக் கேகுடும்பம்
பேணு கென்று
உள்ளபடி யிருநாழி கொடுத்ததிலெண் ணெண்கறமு
மோம்பு கென்று
நன்னல்வள வயற்காசி யாண்டகையார் பெருந்தகைமை
யழகி தாமே. (௪௧)

தூறம். மேற்படி வேறு

அழகு துயில்கும் குமக்கொங்கை யணங்கே யெங்க ளருட்காசிக்
குழகர் மகற்கு மகட்கொடுத்த குடியிற் பிறந்த குறமகள்யா
னெழுகு தொடிக்கைக் குறியுமகக் குறியுந் தருமொன் வளைக்குறியும்
புழுகு முழுகு முலைக்குறியு முடையா ரவர்பொற் புயந்தானே. ( )

கட்டளைக்கலித்துறை

புயல்வண்ணக் கண்ணற் கொளித்தவக் கள்வன்
புணர்ப்பையென்னுள்
கயல்வண்ணக் கண்ணிதன் கண்ணினுட் புக்கது
கண்டிருந்துஞ்
செயல்வண்ணங் கண்டிலன் வானப் புறத்தெங்குந்
தேடுகின்றான்
வயல்வண்ணப் பண்ணை யவிழுத்தத் தானை
மனத்துள்வைத்தே. (௪௩)

மறம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வையமுழு தொருங்கீன்ற விடப்பாக ரானந்த
வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை வேட்டரசன்
விடுத்த தூதா



கையிலவன் திருமுகமோ காட்டிருகண் டொட்டுமுட்டைக்
கதையிற் ருக்கிச்
செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோ ராரியொடு
செவியுந் தானே. (௪௪)

மேற்படி வேறு

தாக்கு படைவேள் கணைமழைக்குத் தரியா திருகண் மழைபொழி
தேக்கு மிவட்கா னந்தவனத் திருந்தா ருன்னைத் திருந்திரிசொல்
காக்க வரிய விளவாடைக் காற்றுக் குடைந்து காந்தவச்சை
மாக்க ளெனவே முடவலவன் வளைவா யடைக்கு மழைகாளே. ( )

தழை. கட்டளைக்கலித்துறை

மழைவளைக் கும்பொழிற் காசிப் பிரான்வெற்பில் வண்டறைபூந்
தழைவளைக் கைக்கொடுத் தேன்கண்ணி லொற்றித் தனிவைத்தன்
னிழைவளைக் குங்கொங்கை யூடனைத் தாளித் தழையினுள்ளே
கழைவளைக் குஞ்சிலை வேளை யாயுளங் கண்டுகொள்ளே. (௪௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந் திருக்காமுங்
கலந்தோர் பேதைப்
பெண்ணிருக்கு மிடப்பாலும் பிறையிருக்கு மவுலியுமாய்ப்
பிரிக்க லாகா
எண்ணிருக்குங் கணத்தொடுமா னந்தவனத் திருப்பாரை
யெங்கே காண்பார்
பண்ணிருக்கு மறைகளுமெண் கண்ணனுங்கண் ணனுமமார்
பலருந் தாமே. (௪௭)

கட்டளைக்கலித்துறை

பல்லாண்டு தம்மைப் படைத்தவத் தேவரைப்
பார்த்துப்பைம்பொன்
வில்லாண்ட தோள்கொட்டி யெந்தையர் கோல
விடம்பழுத்த

அல்லாண்ட கண்டத்தெம் மாதிப் பிரானவி
முத்தத்திலே
சில்லாண் டிருந்து சிவமாய்ச் செலுஞ்சிற
செந்துக்களே. (௪௮)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சேர்ந்தே னொழுகும் பொழிற்காசிச்
சிறுநுண் ணுசுப்பிற் பெருந்தடங்கட்
பைந்தே னொழுகு மிடப்பாகர்
படைவீ டென்ப துணராய்கொல்
வந்தேன் விளைந்தா யெமைப்பாவி
மதனு வினையே விளைந்தபோ
ருய்ந்தே குவதிங் கரிதனற்க
ணுடையார் மழுவாட் படையாரே. (௪௯)

### மதங்கியார். மேற்படிவேறு

படலோடறங் கடுக்கைமுடிப் பரஞ்சுடரா ரிசைபாடிப்
பசுந்தேன் பில்கி
மடலவிழ்பூம் பொழிற்காசி மணிமறுகில் விளையாடு
மதங்கி யாரே
உடலுமெமக் குயிருமொன்றே யோடரிக்கண் வாளிரண்டு
மொழிய வென்னே
தொடலைவளைத் தடக்கையின்வா ளிரண்டெடுத்து வீசிடநீர்
தொடங்கு மாறே. (௫௰)

### ஊசல். கலித்தாழிசை

தொடங்காமே பண்மலருந் தூவாமே நல்குங்
கடங்கால் களிற்றுரியார் காசிவளம் பாடி
விடங்கான் றகன்றுகுழை மேற்போய்க் குடங்கைக்
கடங்காத வுண்கணீ ராடுகபொன் னூச
லம்பொன்மலர்க் கொம்பன்னீ ராடுகபொன் னூசல். (௫௧)



### நேரிசைவெண்பா

பொன்னந்தா தென்னமலர்ப் பூந்துறையிற் புண்டரிகத்
தன்னந்தா தாடு மவிமுத்த - நின்னமிர்தா
முன்னங் கடுக்கை முகந்துண்டார் நல்காரே
இன்னங் கடுக்கை யிவட்கு. (௫௨)

### தவம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

குன்றிரண்டு சுமந்தொசியுங் கொடியன்னீ ரவிமுத்தங்
குடிகொண் டாக
மொன்றிரண்டு வடிவானார் திரள்புயத்து மார்பகத்து
முமிழ்தேன் பில்கி
மின்றிரண்ட தெனப்புரளும் பொலங்கடுக்கைத் தாமத்தின்
விரைத்தா தாடிப்
பொன்றிரண்ட தெனவிருக்கும் பொறிவண்டு செய்தவமென்
புகலு வீரே. (௫௩)

### கொச்சகக்கலிப்பா

புகுமே மதிக்கொழுந்தும் புன்மாலைப் போது
நகுமே கிளையு நகைத்தா னமக்கென்னே
உகுமே யுயிர்காசி யுத்தமரைக் காணத்
தகுமேயப் போதிதழித் தாரும் பெறலாமே. (௫௪)

### இதுவுமது

ஆமோ வவிமுத்தத் தையரே பெண்பழிவீண்
போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ
தேமோது கொன்றைச் செழுந்தாம நல்கானீர்
தாமோ தருவீ ருமதுபரந் தாமமே. (௫௫)

### விருத்தக்கலித்துறை

பரந்தா மத்தைப் பல்லுயிர் கட்கும் பாலிப்பார்
வரந்தா மத்தைப் பின்றரு வதைமூன் வழங்காரேற்
புரந்தா மத்தைப் பொருதரு காசிப் புரமானூர்க்
கிரந்தா மத்தை யெனப்புக லீரேந் திழையீரே. (௫௬)

### பாடாண். நேரிசையாசிரியப்பா

இழுமென் மழலை யின்னமு துறைப்பப்
பிழிதே னொழுக்கி யொழுகுமின் னரம்பின்
வள்ளுகிர் வடிம்பின் வரன்முறை வருடித்
தெள்விளி யெடுக்குஞ் சிறியாழ்ப் பாண
வாழிய கேண்மதி மாற்றமொன் றியானு
மேழிசைப் பாணன்மற் றிறைமக னலனே
பலவுடன் பழிச்சுவ தொழிகமற் றம்ம
சிலபகல் யானுநின் னிலைமைய னாகி
நலம்பா டறியா விலம்பா டலைப்ப
சீர்வாய்ச் சிதலையு நூல்வாய்ச் சிலம்பியுஞ்
சிலவிட மேய்ந்த சிறுபுன் குரம்பையின்
மசகமு மூலங்கும் வாய்ப்படைக் கூடவனும்
பசையில் யாக்கைத் தசைகறித் துண்ண
அரும்பசிக் குணங்கியும் பெரும்பிணிக் குடைந்துஞ்
சாம்பல்கண் டறியா வாம்பி பூத்த
வலிதுயி லடுப்பிற் றலைமடுத் தொதுங்கிச்
சிறுசிறா ரலறப் பெருமனைக் கிழத்தி
குடங்கையிற் றாங்கிய கொடிற்றினக் குடங்கைக்
கடங்கா வுண்க ணுறலைத் தொழுக
அழுகுரல் செவிசுட விழுமநோய் மிக்குக்
கலைகண் காணா தலமரு மெல்லையிற்
கடவு ணல்லூழ் பிடர்பிடித் துந்தக்
குரைபுனற் கங்கைக் கரைவழிச் சென்றுகுத்
தேம்பழுத் தழிந்த பூம்பொழிற் படப்பையிற்
கடவுட் கற்பகக் கொடிபடர்ந் தேறி
வான்றொடு கமுகின் மடற்றலை விரிந்து
நான்றன திசைதொறு நறுநிழற் கதலித்
தேங்கனி பழுத்த பூங்குலை வளைப்ப
அம்மலர்க் கொடியிற் செம்முக மந்தி
முடவுப் பலவின் முட்புறக் கனியைப்
புன்றலை சுமந்து சென்றிடுங் காட்சி
குடமிசைக் கொண்டொரு கூன்மிடை கிழவ
னெடுநிலைக் கம்பத்தின் வடமிசை நடந்தென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதக்
கன்னிமதி லுடுத்த காசிமா நகரம்
பெருவளஞ் சுரக்க வாசவீற் றிருக்கு
மழுவல னுயர்த்த வழனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி யின்னிசை பாடலு
மங்கலைக் கண்ணே யகல்விசும் பொரீஇச்
சுரபியுந் தருவும் பெருவளஞ் சுரப்ப
இருமையும் பெற்றனன் யானே நீயுமத்
திருநகர் வளமை பாடி யிருநிலத்
திருநிதிக் கிழவனைக் கறுப்பத்
திருவொடும் பொலிக பெருமகிழ் சிறந்தே. (௨௭)

### வண்டுவிடுதூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சிறைவிரிக்கு மதுகரங்கா டேம்பிழிபூம் பொழிற்காசித்
திருநா டாளு
மறைவிரிக்குஞ் சிலம்படியார் திண்புயத்துப் புரளுநறு
மலர்ப்பூங் கொன்றை
நறைவிரிக்கு மிதழ்க்காத்தா லூட்டுமது விருந்துண்டு
நயந்து மற்றென்
குறைவிரித்தோ ரிருவரிசை கூட்டுண்ணு நீர் திருச்செவிக்கே
கூறு வீரோ. (௨௮)

### கட்டளைக்கலித்துறை

கூற்றடிக் கஞ்சிக் குலையுநெஞ் சேயஞ்சல் கோச்செழியன்
மாற்றடிக் கஞ்சு மிடப்பா கனைமன்னர் கொண்டகருஞ்
சேற்றடிக் கஞ்ச மலர்வயற் காசிச் சிவக்கொழுந்தைப்
போற்றடிக் கஞ்சலி செய்பற்று வேறு புகலில்லையே. (௨௯

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இலைமுகங் குழைத்த பைம்பூ ணேந்திள முலையோ டாடு
மலைமுகங் குழைத்த காசி வாதர்கண் டிலர்கொன் மாரன்
சிலைமுகக் கணைக்கெம் மாவி செகுத்துண வருத்தத் திங்கட்
கலைமுகம் போழ்ந்த காயங் களங்கமாய் விளங்கு மாறே. (௬௰)

### கட்டளைக்கலித்துறை

விளங்கனி யொன்றெறி வெள்விடை யோடும் விழிக்கணுழைந்
துளங்கனி யப்புகுந் தாய்விர கானலத் துற்றதென்னும்
வளங்கனி பண்ணை வயல்சூ ழவிமுத்த வாணநுங்
களங்கனி யென்றமை கைக்கிளி பார்க்குங் கறைக்கண்டனே. ()

### தாழிசை

கண்டமட்டு மிருண்டுபாதி பசந்துபாதி சிவந்துளார்
 காசிநாதர் கரத்துவைத்த கபாலமொன்றல தில்லையா
லுண்டுகோடியின் மேலுமையர் பதம்பெறக்கட வாரவர்க்
 கொவ்வொருத்தர் கரத்திலொவ்வொர் கபாலம்வேண்டு மதற்கெ
பண்டிருந்த விரிஞ்சன்மார்தலை மாலையுஞ்செல வாயவிடிற் [லாம்
 பாரமென்றலை மேல்வருங்கொ லெனுங்கவற்சியி னுற்பசுங்
கொண்டல்வண்ணர் துயிலவுந்துயி லார்பிதாமக னொனுங்
 கொள்கைகண்டும் விழைந்தவாவவர் பதஞ்சமீரகு மாரனே. (௬௨)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

கும்ப மிரண்டு சுமந்தொசியுங் கொடிநுண் மருங்கு லிறுமிறுமென்
றம்பொற் பசுங்கொம் பன்னாளை யாகத் தணைத்த வகிலேசர்
செம்பொ னிதழித் தெரியலையே சிந்தித் திருப்பத் திரண்முலையும்
பையபொ னுருவும் பீர்பூத்த பவளச் செவ்வாய்ப் பசுங்கிளிக்கே. ()

### கட்டளைக்கலித்துறை

கிள்ளைக் கமர்ந்த மொழிசாற் றிடுங்கிஞ் சுகவிதழ்ப்பெண்
பிள்ளைக் கிடந்தந்த காசிப் பிரான்பிறை யோடுமுடிக்
கொள்ளைச் சிறைவண்டு கூட்டுணுங் கொன்றையுங் கூடவைத்தார்
வள்ளைக் கலச முலைக்கங்கை யாளுயிர் வாழ்வதற்கே. (௬௪)



### கலிவிருத்தம்

வாட்ட டங்கண் மழைப்புனன் மூழ்கியே
சேட்டி னங்கொங்கை செய்தவ மோர்கிலார்
தோட்டி னங்கொன்றை சூடிப்பொ னம்பலத்
தாட்டு வந்த வவிமுத்த வாணரே. (௬௫)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நரைமு திர்ந்தன கண்கள்பஞ் சார்ந்தன
 நமன்றமர் வழிக்கொண்டார்
திரைமு திர்ந்துட றிரங்கின திரங்கலை
 செயவிது மடநெஞ்சே
உரைமு திர்ந்தவர் குழாத்தொடு மடைதியா
 லொழுகொளி முடிக்கங்கைக்
கரைமு திர்ந்திடாக் கலைமதி முடித்தவர்
 காசிநன் னகர்தானே. (௬௬)

### வஞ்சித்துறை

நகர மாய்மறைச்
சிகர மானதா
லகர மாயினு
னிகரில் காசியே. (௬௭)

### கட்டளைக்கலித்துறை

இல்லொன் றெனவெள் ளிதயம்புக் காய்மத னெய்கணைகள்
வல்லொன்று பூண்முலை மார்பகம் போழ்வன மற்றென்செய்கே
னல்லொன்று கூந்த லணங்கர சோடுமொ ராடகப்பொரு[illegible]
வில்லொன்று கொண்டவி முத்தத்தி லேகின்[illegible]னவனே. ()

### கைக்கிளை மருட்[illegible]

விண்ணமிர்து நஞ்சாம் விடமு[illegible]மா
முண்ணமிர்த நஞ்சோ டுதவ[illegible]ணென்
கடலொடு பிறந்தன போலுங் [illegible]மலர்க்

கடிநகர்க் காசியுள் மேவு
மடலவிழ் கோதை மதர்நெடுங் கண்ணே. (௬௯)

### வஞ்சிவிருத்தம்

கண்ணொ டாவி கருத்துமா
யுண்ணி றைந்தசொ லன்பொரு
ளென்னு மாசை ரானதா
லண்ண லாசி முத்தமே. (௭௰)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

முத்தாடி மடித்தலத்தோ ரிளஞ்சேயை யுலகீன்ற
முதல்வி யோடும்
வைத்தாடு வீர்பொதுவி லின்றாடு முமக்கிந்த
வார மென்னே
கொத்தாடு சடையொடுமொ னர்தவனத் தேகுமந்தா
ளொடும்பூ தத்தோ
டொத்தாடு வீரடிகட் கெல்லோமும் பிள்ளைகளென்
றுணர்ந்தி டீரே. (௭௧)

### சம்பிரதம். பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உண்டவில கோடியு முமிழ்ந்திடுவன் முகிலேழு
மொக்கப் பிழிந்துகடலே
ழுடன்வாய் மடுத்திடுவன் வடமேரு மூலத்
தொடும்பிடுங் கிச்சுழற்றி
அண்டபகி ரண்டமு மடித்துடைப் பன்புவன
மனையெழு பிலமெழுமா
யடைவடை வடுக்கிய வடுக்கைக் குலைப்பனிவை
யத்தனையும் வித்தையலவால்
கொண்டன்மணி வண்ணனும் முண்டகக் கண்ணனுங்
குன்றிரச் செஞ்சரணமுங்
குடிலையொ டாறுந் தேடியவ ருமமண்ட
கோளமுந் துருவியோடப்



பண்டைமறை யோலமிட வெளியிடை மாடும்
பரஞ்சுடர் பொலிக்காசிப்
பதியிலடை யாமலிப் பல்லுயிர்த் தொகுதியும்
பரமபத மடைவிப்பனே. (௭௨)

### தூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

விரைகுழைக்கு மழைமுகில்கள் விண்டலர்தண் டுழாய்ப்படலை
விடலை யென்ன
வரைகுழைக்கும் பொழிற்காசி யணிநகருக் கேகுதிரே
லறன்மென் கூந்தல்
வரைகுழைக்கு முலைநுழைப்பக் குழைதிரடோ ளழகின்முடி
வணங்கி யென்னக்
கரைகுழைக்கு மலைகுழைத்த கண்ணுதற்கென் பேதைநிறங்
கழறு வீரே. (௭௩)

### கட்டளைக்கலித்துறை

கழைக்கரும் பைக்குழைத் தான்மத வேளைக் கனைத்திலம்பொற்
குழைக்கரும் புங்குழைச் சிட்டதந் தோகுளிர் துங்குழவி
மழைக்கரும் பும்பொழிற் காசிப் பிரானென்மலை யாண்முலைபோழ்
முழைக்கரும் புற்றர வட்டவின் றூடிய முக்கண்ணனே. (௭௪)

### [illegible]

கண்ணனுஞ் சனத்தைக் கரைத்தோடு நீர்கடல் செய்யநின்று
ளுண்ணனுஞ் சனத்துக்கு மஞ்சவைத் தாரும்ப ரோட்டெடுப்பப்
பண்ணனுஞ்ச நச்சமிர் தாக்கொண்ட காசிப் பரமர்பச்சைப்
பெண்ணனுஞ்ச நச்சர வார்த்துமின் றூமைப் பிறுகுவரே. (௭௫)

### கட்டளைக்கலிப்பா

கருகு கன்குழ் கரும்பை ஓர்ந்துவெவ்
கலைம திங்களைக் கூற்றங் கவர்ந்துயிர்
பருகு நற்குன் மாதரால் வீசிநாப்
பாசம் வீசி வனைந்ததிங் கென்செய்கேன்

முருகு நாறு குழற்பொலங் கொம்பனீர்
முத்தர் வாழவி முத்தமு நெக்குடைந்
துருகு பத்தர்தஞ் சித்தமுங் கோயிலா
வுடைய நாதற் குரைத்திடு வீர்களே. (௭௬)

### ௭௭. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

உரைத்த நான்மறைச் சிரத்துமைந் தவித்தவ
ருளத்தும்வண் டொருகோடி
நிரைத்த பூங்குழ லிரைவளை யவனொடு
நின்றவ ருறைகோயில்
குரைத்த தெண்டிரைக் கங்கைமங் கையர்துணைக்
கொங்கைமான் மதச்சேற்றைக்
கரைத்தி ருங்கடல் கருங்கட லாச்செயுங்
காசிமா நகர்தானே. (௭௭)

### கட்டளைக்கலிப்பா

மான மொன்று நிறையொன்று நாணொன்று
மதிய மொன்று குயிலொன்று தீங்குழற்
கான மொன்று கவர்ந்துணு மாமதன்
கணைக்கி லக்கென் னுயிரொன்று மேகொலாம்
வான மொன்று வடிவண்ட கோனமே
மவுலி பாதல மேழ்தாண் மலையெட்டு
ஞான மொன்று புயமுச் சுடருமே
நயன மாப்பொலி யும்மகி லேசனே. (௭௮)

### நேரிசைவெண்பா

அகிலாண்ட மாயகண்ட மானவகி லேசா
முகிலாண்ட சோலையவி முத்தா-நகிலாண்ட
சின்னவிடைப் பாகா திருநயனஞ் செங்கமல
மன்னவிடைப் பாகா வருள். (௭௯)



### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

அருகுமதன் குழைத்தகழை தெறித்தமுத்தே றுண்டெழுவண்
டாற்று மோசை
பெருகுசிறு நாணொலியென் றறிவழிந்து பேதுறுமிப்
பேதைக் கென்று
முருகுபசும் பொன்னசும்பு தசும்புவிசும் பிரவியென
வுடைந்து கஞ்ச
முருகுயிர்க்கும் பொலங்குடுமி விமானத்திற் பொலிந்தவவி
முத்த னாரே. (௮௰)

### கட்டளைக்கலித்துறை

முத்திக்கு வேட்டவர் மோட்டுடற் பார முடைத்தலையோ
டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பின ராலிவை யன்றியப்பாற்
சித்திக்கு மற்ற திலைபோலுங் காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவல மேபல மாகப் பலித்ததுவே. (௮௧)

### விருத்தக்கலித்துறை

பல்வே றுருவாய் நின்றருள் காசிப் பதியுள்ளீர்
வில்வே றில்லை பூவல தம்பும் வேறில்லை
அல்வே றல்லாப் பல்குழ லாரை யலைக்கின்றான்
சொல்வே றென்னே பாரு மனங்கன் றொழிறானே. (௮௨)

### கட்டளைக்கலித்துறை

தானென் றவர்மு னொளித்தோடித் தன்னை யிழந்தவர்முன்
யானென்று சென்றிடுங் காசிப் பிரானுடம் பெண்பதென்போ
ஊனென்று விட்டொழிந் தார்களிப் பாருவட் டாதவின்பத்
தேனென் றடைந்தவர்க் குண்ணக் கிடைப்பது தீவிடமே. (௮௩)

### கட்டளைக்கலிப்பா

தீவி டங்கொடுத் தேயமு துண்டவத்
தேவ ருக்கொளித் துத்திரி கின்றநீர்
பாவி டும்மலர்ப் பஞ்சணை மேலிவள்
பவள வாயமிர் துண்டாற் பழுதுண்டோ

நாவி டங்கொண் டொருவன் முகங்களோர்
நான்கி னுங்கடிக் குந்தா கத்தைவிட்
டாவி டங்கொண் டருட்காசி வீதிக்கே
யாடல் செய்திடு மானந்தக் கூத்தரே. (அச)

### நேரிசைவெண்பா

ஆனந்த வல்லியுட னானந்த கானகத்தே
யானந்தக் கூத்தா டருட்கடலை—யானந்தஞ்
சொன்னத் தினைத்தாலுங் கூடாதே லிப்பிறவி
யென்னத் தினைத்தாடு வீர். (அரு)

### கலிவிருத்தம்

வீர மென்பது வின்மதற் கேகுணங்
கோர மென்பது கொண்டிருந் தாலதென்
வீர மென்ப திலையிவர்க் கென்றதால்
வார மென்பதி வாழவி முத்தரே. (அசா)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

முத்து நிரைத்த குறுநகையீர்
முளரிக் கணையான் கணைகடிகைப்
பத்து நிரைத்தா னினித்தொடுக்கிற்
பாவைக் கொருதிக் கிலைபோலு
மொத்து நிரைத்த வுடுநிரையோ
வொன்றோ பிறவோ வெனவரும்பூங்
கொத்து நிரைத்த பொழிற்காசிக்
குழகற் கொருவர் கூறீரே. (அஎ)

### கட்டளைக்கலித்துறை

கூற்றடிக் கஞ்சி முறையோ வெனக்குல நான்மறையும்
போற்றடிக் கஞ்சம் புகலடைந் தேமுனைப் போலவைத்தாற்
சேற்றடிக் கஞ்ச வயற்காசி நாத செருப்படிக்கும்
மாற்றடிக் குந்தொண்டர் வில்லடிக் கும்புகன் மற்றில்லையே. (அஅ)



### மடக்கு. கட்டளைக்கலிப்பா

இல்லை யென்ப திலையோர் மருங்கிலே
யெல்வ றங்களு முண்டோர் மருங்கிலே
சொல்லு கின்ற தெழுதருங் கூற்றமே
கூறு மாற்ற மெழுதருங் கூற்றமே
வில்லு மேற்றிடு நாணும்பொன் னாகமே
விடுக ணைக்குண்டு நாணும்பொன் னாகமே
மல்லன் மார்பின் மணிமுத்த மென்பதே
வாச மையர்க் கவிமுத்த மென்பதே. (அகூ)

### கலிவிருத்தம்

என்ப ணிக்குப் பணியென் றிரந்தபோ
தென்ப ணிக்கும் பணிதிக்கு மேக்கென்று
ரென்ப ணிக்கும் பணியா யிருந்ததோ
ரென்ப ணிக்குமின் பாமகி லேசர்க்கே. (கூய)

### நேரிசைவெண்பா

கேயூர மூரக் கினர்தோ ளகிலேசர்
மாயூர முருமொரு மைந்தற்குத்—தீயூரு
மவ்வேலை யீந்தா ரடித்தொழும்பு செய்தொழுகு
மிவ்வேலை யீந்தா ரெமக்கு. (கூக)

### தூது. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

குருகை விடுத்தா ளெனக்குருகே கூறாய் சுகத்தை விடுத்தாளென்
றருகு வளருஞ் சுகமேசென் றறையாய் கிறைநீர் தெரிந்துபால்
பருகு மனமே யனம்விடுத்த படிசென் றறையாய் படிவருணத்
தருகு பசும்பொன் மதிற்காசி யுடையார் வரித்தோ லுடையார்க்கே.

### இதுவுமது

உடுத்த கலையு மேகலையு மொழுகும் பணியும் விரும்பணியுந்
தொடுத்த வளையுங் கைவளையுந் துறந்தா ளாவி துறந்தாளு
மடுத்த துமது பரந்தாம மதனு விதழிப் பரந்தாமம்
விடுத்து விடுவா ளலளெனப்போய் விளம்பீர் காசி வேதியர்க்கே.

### நேரிசைவெண்பா

வேதத் துரகர் விரக ரகிலேசர்
பாதத் துரகப் பரிபுரத்தார்—நாதரிவர்
சேவடிக்கண் டாரே திறம்பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண் டாரே குலைந்து. (௯௪)

### கட்டளைக்கலித்துறை

குலைவளைக் கும்பழுக் காய்முழுத் தாறு கொழுங்கமுகின்
றலைவளைக் கும்பொழிற் காசிப் பிரான்றடங் கோட்டுப்பைம்பொன்
மலைவளைக் கும்புயத் தாண்மையென் னூர்தெய் வளைந்துகழைச்
சிலைவளைத் துத்தன் படைவீ டமர்க்களஞ் செய்திடினே. (௯௫)

### தாழிசை

இடமருங்கினின் மருங்கிலாதவவன்
குடியிருக்கவுமன் முடியில்வே
றிவளொருத்தியை யிருத்திவைத்துமதி
மோகமோகினியி னுருவமாய்
கடமிடிங்கிவடன் மேலும்வைத்துளா
நயந்தொர்பிள்ளைமுன் பயந்தநீர்
நங்குலத்திருவை மருவினின்றபிறர்
நாவளைக்கவிட மாகுமோ
குடமுடைந்ததென வானினங்கண்மடி
மடைதிறந்துபொழி பாலொடுங்
கொழுமடற்பொதி யவிழ்ந்தகைதைசொரி
சோறுமிட்டணி திரைக்கையாற்
கடல்வயிற்றினை நிரப்புகின்றசுர
கங்கைகுண்டகழி யாலொடுங்
ககனநீள்குடுமி மதில்களேழுடைய
காசிமேவுமகி லேசரே. (௯௬)

### மடக்கு. தாழிசை

சரியோடொழுகுங் கரவளையே சக்கோடொழுகுங் கரவளையே
தையற்கனமே நீவிடமே தவழுங்கனமே நீவிடமே
சொரிவதடங்காக் கண்ணீரே துளிக்குந்தடங்காக் கண்ணீரே
துயரேவதிதன் றினமே தூர்க்கழுத்தி னந்தினமே



கருகிப்புலர்ந்த நாவாயே கரைவந்திழியு நாவாயே
கண்களுறங்கா கழுநீரோ கடலேகழியே கழுநீரோ
அரிவையிவளுக் குருகீரோ யனத்தோடுறங்குங் குருகீரோ
யரியாரிதழி வனத்தாரே யருளானந்த வனத்தாரே. (௯௭)

### ஊர். எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

வனத்தினுமொர் பொற்பொது முகப்பினு நினைப்பவர்
மனத்தினு நடித்த ருள்செய்வார்
சினக்கயல் விழிக்கடை கருக்கொளுங்கரு ணைக்கொடி
திளைத்தமரு மத்த ரிடமா
நனைக்கமல நெக்குடை தரக்குடை துறைச்சுர
நதிக்கரையின் முட்டைகொ லெனுக்
கனத்தபரு முத்தினை யணைத்தன மினத்தொடு
களிக்குமவி முத்த நகரே. (௯௮)

### மேற்படி வேறு

கருமுகில் வெருப்பவற விருளமள கத்திவள்
கதிர்முலை முகட்டணைய வணைமீதே
வருகில ரெனிற்செவியி லொருமொழி சொலச்சமையம்
வருகென வழைக்கிலுடன் வருவார்காண்
சுரநதி சுருட்டும்விரி திரைகளொரு முத்திமக
டுணைமுலை திளைக்குமவர் மணநாளின்
முரசொடு முழக்குகுட முழவென விரைக்கவளை
முரலுமவி முத்தநக ருடையாரே. (௯௯)

### நேரிசையாசிரியப்பா

உடைதிரைக் கங்கை நெடுநதித் துறையின்
வலம்புரி யென்னவாங் கிடம்புரி திங்கள்
வெள்ளிவீ ழன்ன விரிநிலாப் பரப்பும்
பொன்வீ ழன்ன புரிசடைக் கடவுள்
௫ முடவுப் படத்த கடவுட் பைம்பூண்
கறங்கெனச் சுழலுங் கால்விசைக் காற்று

தமிழ்தரு குருதித் திரடெறித் தாங்குத்
திசைதொறுந் தெறித்த திரண்மணிக் குலங்கள்
வானேறு கடுப்ப வெரிகிற் றாக்கலுங்
கையெடுத் தெண்டிசைக் களிறும் வீறிடத்
தெய்வநா டகஞ்செய் வைதிகக் கூத்தன்
வரைபகப் பாயும் வானரக் குழாத்தொரு
கருமுக மந்தி கால்விசைத் தெழுந்து
பழுக்காய்க் கமுகின் விழுக்குலை பறித்துப்
படர்தரு தோற்றஞ் சுடரோன் செம்மல்
தசமுகத் தொருவன் றிரண்முடி பிடுங்கி
விசையிற் பாய்ந்தென விம்மிதம் விளைக்குந்
தடமலர்ப் படப்பைத் தண்டலைக் காசிக்
கடிநகர் புரக்குங் கண்ணுதற் செல்வன்
வேம்புங் கடுவுந் தேம்பிழி யாகச்
செஞ்செவி கைப்பயான் றெரித்த சின்மொழி
யஞ்செவி மடுத்தாங் களித்தன னதனால்
வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்குந்
தேத்தமிழ் தெளிக்குஞ் செந்நாப் புலவீர்
மண்மகள் கவிகைத் தண்ணிழ றஞ்சப்
புரவுபூண் டிந்திர திருவொடும் பொலிந்து
முடிவினு முடியா முழுநலங் கொடுக்குஞ்
சொற்றெறி வினவுதி ராயி னின்னிசைப்
பாத்தொடுத் தடுத்த பாஞ்சுடரை
நாத்தழும் பிருக்க வேத்துமி னீரே. (௩)

காசிக்கலம்பகம்

முற்றிற்று

# சரசுவதிஸ்தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

# சகலகலாவல்லிமாலை

என்னும்

# சரசுவதிதோத்திரம்

---

### கட்டளைக்கலித்துறை

வெண்டா மரைக்கன்றி நின்யதர் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. (க)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. (௨)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. (௩)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுர்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செர் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. (௪)

பஞ்சப் பிதர்தரு செய்யபொற் யாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென் னேனொடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. (௫)

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யா
னெண்ணும் பொழுதெளி தெய்நல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. (௬)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. (௭)

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. (௮)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. (௯)

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. (௰)

## சரசுவதிதோத்திரம்

முற்றிற்று

---

# கைலாசக்கலம்பகம்

நூல் - கசு.

உ

திருச்சிற்றம்பலம்

# * கைலைக்கலம்பகம்

கங்கைச் சடையுங் கயிலைப் பிரானிமய
மங்கைக் கமுதாம் வடிவழகுஞ்—சங்கத்
திருத்தோடுங் கண்டுளத்திற் சிந்தித்தாற் கால
னிருத்தோடு மோடும் வினை. (௧)

தேமாம் பொழிலுடுத்த தென்வைகுந் தைக்கயிலைக்
கோமானை முக்கட் கொழுங்கனியைக்—காமருபூந்
தாமச் சடையானைத் தாடொழுதாற் புன்புழுக்கூ
டாமச் சடையா னயன். (௨)

தன்னந் தனியே நின்றுமதித் தழலின் றெரியச் சமைந்திடுமென்
னன்னஞ் சுவையா ரமுதெனநஞ் சமுதாக் கியதா மறிவாரோ
பொன்னம் பலமும் வெள்ளிமன்றும் பொதுவென் றுரிமைத் [திருத்தொண்டர்
நன்னெஞ் சகத்து நாடகஞ்செய் நடத்தார் கயிலை யிடத்தாரே. (௩)

கூற்றிருக்குங் கொலைமழுவுங் கொடியிருக்கு மிடமருங்குங்
கொண்டு தண்டே
னூற்றிருக்கும் பொழிற்கயிலை வீற்றிருக்கும் பெருமானார்க்
குரையீ ரந்தோ
மாற்றிருக்கும் பசும்பொன்முலை யுயிரிருக்கு மிடந்தேடி
வருந்தித் தென்றற்
காற்றிருக்குந் தமிழ்நாட்டிற் குடியிருக்க முடியாது
களிவண் டீரே. (௪)

* அரிதிற் பெற்ற ஏட்டுச்சுவடியி னின்றுங் கிடைத்த செய்யுட்கள்.

கழியே கழிக்கரை யேகண்ட லேதெண் டிரைக்கடலே
சுழியே சுழிபடு தண்டுறை யேயொண் டுறைத் தமிழின்
மொழியோர்வை குர்தைக் கயிலேசர் வெற்பின் முழுவதும்பெண்
பழியே கொளக்கட வாரொரு கூற்றம் பகருமினே. (௫)

நங்கள் புன்க ணொழுத்து ளக்க ணளிக்க வைத்த வருட்கணூர்
நடன குஞ்சித பதமெ டுத்தொரு நாத கீத முழங்கிடக்
கங்கை பொங்கான் மங்கை யொடுநட மாடு வார்மதி சூடுவார்
கயிலை நாதர்வை குர்த வாணர் கடுக்கை மாலை கொடுக்கிலா
ரங்கண் மாலையின் மதிய மல்ல வசைந்த தென்றலு மல்லவெற்
காகு லம்புரி கோகி லங்களல வாசு வாவென வருகிலான்
மங்கு லறவிடு கங்கு லளவிள வாடை யலவளர் கொம்பனூர்
வம்பு மலமல ரம்பு மலவலை மாற்றமே கொடுங் கூற்றமே. ()

பூணுதற்கு வைத்ததுத்திப் பூணர்கயி லேசரொரு
வாணுதற்கு மாலானூர் வைகுர்தத் தம்மானை
வாணுதற்கு மாலானூர் வைகுர்தத் தாமாகில்
காணுதற்குக் கார்மேனி காட்டாரோ வம்மானை
கண்டமட்டில் மெத்தக் கறுத்திருப்பா ரம்மானை. (எ)

கைம்மான் மறியேர்துங் கண்ணுதலார் தென்கயிலைப்
பெம்மா னொருபாதிப் பெண்ணர்கா ணம்மானை
பெம்மா னொருபாதிப் பெண்ணரே யாமாகில்
அம்மா னருர்தன்முன் டாகாதோ வம்மானை
ஐயம் புகுவார்க் கருர்தனமே தம்மானை. (அ)

# அரும்பொருள்விளக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1925
MADRAS

380
237
17
634



திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

# கந்தர் கலிவெண்பா

## அரும்பொருள் விளக்கம்

க. புத்தேள் - கடவுள்: செங்கமலப் புத்தேள் - பிரமன். தே - தெய்வத் தன்மை. தேம் எனப் பிரித்து இனிமை யென்று பொருள் கொள்ளுதலுங் கூடும்.

௩. நித்திய ஆனந்த போதம்-சத்து ஆனந்தம் சித்து. சச்சிதானந்தமென்பது முறைமாறிக் கூறப்பட்டது செய்யுளாதலின். பந்தம்-கட்டு.

௫. குணமும் அற்று-இங்கே குணமென்றது மாயா குணங்களாகிய சத்துவகுணம் ரசோகுணம் தமோகுண மென்பனவற்றை. இதுவே நிர்க்குணமென்றது வேதங் கூறியதன் கருத்து. இவ்வுண்மையுணராதார் கடவுள் எவ்வித குணமுமில்லாதவரென்று கூறுவர். குணமில்லாத பொருள் யாதுமின்மையானும் வேதாகமங்களுட் சிவபிரானுக்கு எல்லாமறிதல் முதலிய கலியாண குணங்கள் கூறப்படலானும் அவர் கூற்றுப் பொருந்தாது.

௬. மருதி - மனம் முதலியன. பஞ்சவிதரூபம் - பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவனென்னும் ஐந்துவித வடிவம்.

௭. போக்கும் வரவும் புணர்வும்......இல்லாக் கதி யென்பது 'போக்கும் வரவும் புணர்விலாப் புண்ணியனே' என்னும் திருவாசகத் திருவாக்கினை அடியொற்றி வருதல் காண்க.

௰—௧௧. இச்சை அறிவு இயற்றல்-இச்சை ஞானம் கிரியை. இம்மூன்றனுள் இச்சை யாண்டுமொரு தன்மையாய் வியாபரிக்கும்: ஏனைய இரண்டும் தனித்தனியும் ஒத்தும் தம்முளேறிக் குறைந்தும் வியாபரிக்கும். அவ்விரண்டும் தனித்தனி வியாபரிப்பதே இலய மெனப்பட்டு அருவமென்னுங் குறியுடையதாம்: ஒத்து வியாபரிப் பதே போக மெனப்பட்டு அருவுருவமென்னுங் குறியுடையதாம்: தம்முள் ஏறிக்குறைந்து வியாபரிப்பதே அதிகாரமெனப்பட்டு உருவ மென்னுங் குறியுடையதாம். இங்குக் கூறப்பட்டதன் விரிவைச் சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்து ௯௫-ஞ் செய்யுளுக் குச் சிவஞான சுவாமிக ளருளிச்செய்த உரையால் அறிக.

௧௧. பருவவடி வம்பலவாய்—போக வடிவம் யோகவடிவம் வேகவடிவமென்பன. ‘ஸ்திரேபி ரங்கை: புருரூப உக்ர:’ என்று இருக்குவேதத்தும் (இருக்குவேதம் - ௨, ௩௩, ௯.) ‘ஒன்றொடொன் றொவ்வா வேட மொருவனே தரித்துக் கொண்டு, நின்றலால்’ எனச் சிவஞானசித்தியாரிலும் (சித்தியார் - ௧, ௫௧.) வருதல் காண்க.

௧௨. பல்லுயிர்-இங்கே சகலர்.

௧௩—௧௪. விந்து - சுத்தமாயை, மோகினி - அசுத்தமாயை, மான்-பிரகிருதிமாயை. பெந்தம்-பந்தம் என்னுஞ் சொல் மோனை நோக்கி அவ்வாறாயிற்று. மந்திர முதல் ஆறத்துவா-மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத் துவா என்பன. இவற்றின் விரிவைச் சிவஞானசித்தியார் எட் டாஞ் சூத்திரம் ௭. முதல் ௯. வரையுள்ள செய்யுட்களால் அறிக. சிமிழ்ப்பு-கட்டு.

௧௫. ஈரிரண்டு தோற்றம் - அண்டசம், சுவேதசம், உற்பிச் சம், சராயுசமென்னும் நால்வகைத் தோற்றம். எழுபிறப்பு - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னும் எழுவகைப் பிறப்பு. யோனி என்பான் ஆரவர்த நான்கு நூறாயிரம்- எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதம். யோனிபேதங்களின் எண்களை ‘அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ,



டெண்டரு காலெண்பத்து நான்குநூறாயிரத்தா, லுண்டு’ என் னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலும் ‘உரைச்சேரு மெண் பத்து நான்குநூறாயிரமாம் யோனி பேத, நிரைச்சேரப் படைத்த வற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்’ என்னும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத்தாலும் அறிக.

௧௬. ஜெனித்து-பிறந்து. திரோதித்து-மறைந்து.

௧௭—௧௮. தர்க்கமிடும்......நாட்டுவித்து-‘சமய வாதிக டத்த மதங்களே, யமைவ தாக வரற்றி மலைந்தனர்’ என்பது திருவாசகம். ‘அளப்பரிதா மப்பொருளை யரனருளா லனுக்க, டுருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற் றர்க்கமொடுத் தரங்களினுற் சம யஞ் சாதித்து’ என்பது சிவஞானசித்தியார்.

௧௯. சைவசமயத்திற்கு மற்றைய சமயங்களெல்லாஞ் சோபா னமாமென்பதனைப் ‘புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, மறத்துறைக ளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மார ணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத் தடை வரிதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்’ என்றுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறிக.

௨௰—௨௧. ஆலோகம் - அறிவு. அகற்றுவித்து - விரியுமாறு செய்து. நால்வகையாஞ் சத்தி நிபாதம் - மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரமென்று கூறப்படும். சத்தி நிபாதம்-சத்தி வீழ்ச்சி. இரு வினை யொப்பு என்பது ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாத லின்றிப் புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோன தறிவின்கண் அவ்விருவினை யும் அவ்வாறொப்ப நிகழ்தலாம். இதனைச் சிவஞானபாடியத்தில் ௮-ஞ் சூத்திரத்து முதலதிகரண வரையிற் காண்க.

௨௨. காசினிக்கே-பூமியில்: உருபு மயக்கம்.

உடு. உடலறுபத்தெட்டு - தூலதேகக் கருவிகள் அறுபதும், சூக்குமதேகக் கருவிகள் எட்டும். நிலமேழ் - மூலாதார முதலிய ஆறாதாரங்களும் அவற்றின்மேலுள்ள நிராதாரமாகிய சூனியாகாசமும்.

உசு. படலம்-நேத்திரபடலம்.

உஎ. பொருள்-பதிப்பொருளை யுணர்த்திற்று.

௩௰. கன்ம மலத்தார்-மல கன்மங்களுடைய பிரளயாகலர்.

௩உ. ஒருமலத்தார்-விஞ்ஞானகலர்.

௩௪. பரானந்தம்-மேலான இன்பம்.

௩௯. எவ்வுயிர்க்கும் பின்னம் அற நின்ற பெருமான் - எல்லாவுயிர்களிடத்தும் வேற்றுமையின்றிக் கலந்துநின்ற கடவுள்.

சஉ. தெவ்வர்-பகைவர்.

சஉ—சஎ. இங்கே கூறப்பட்ட திருமுகங்களின் தன்மை போன்று திருமுருகாற்றுப்படையிலும் 'மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக, மார்வலரேத்த வமர்ந்தினி தொழுகிக், காதலினுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக, மந்திர விதியின் மரபுளி வழாஅ, வந்தணர் வேள்வி யோர்க்குமே யொருமுக, மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித், திங்கள் போலத் திசைவிளக்குமே யொருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக், கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங், குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே' என வருதல் காண்க.

சஅ—௫௯. இங்கே கூறப்பட்ட திருக்கரங்களின் தன்மை போன்று திருமுருகாற்றுப்படையிலும் 'விண்செலன் மரபி னையர்க் கேந்திய தொருகை, யுக்கஞ் சேர்த்திய தொருகை, நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை, யங்குசங் கடாவ வொருகை யிருகை, யையிரு வட்டமொ டெஃகு வலந்திரிப்ப வொருகை, மார்பொடு விளங்க வொருகை, தாரொடு



பொலிய வொருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை, பாடின் படுமணி யிரட்ட வொருகை, நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட' என வருதல் காண்க.

௫௧. வாம மருங்கு-அழகிய இடை. குறங்கு-தொடை.

௫அ. ஐந்து ஓங்காரம்-ஐந்து உறுப்புக்களை யுடைய பிரணவம். ஐந்துறுப்புக்களாவன :—அகரம் உகரம் மகரம் விந்து நாதம்.

௫௯. 'தாங்கரிய' என்பது முதல் 'நின்றோய்' என்பது வரை அத்துவா வடிவங் கூறப்படுகின்றது. இவ்வத்துவா வடிவம் சிவபெருமானுக்கு உபசாரத் திருமேனி யென்பது சிவஞானசித்தியார் முதற் சூத்திரத்து ௬௬-ஞ் செய்யுளுக்குச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த வுரையா லறிக.

௬௰. தொக்கு-தோல்.

௬௧. சத்ததாது-எழுவகைத் தாதுக்கள்: இங்கே முற்கூறிய சொரி தொக்கொழிந்த ஐந்து தாதுக்களைக் குறிக்கும்.

௬௩—௬௪. இவ்வடிகள் சிவஞானசித்தியார் ஐந்தாஞ் சூத்திரத்து ஏழாவது செய்யுளில் வரும் 'அலகிலா வுயிர்ப் புலன்கட் கறிவினை யாக்கி யைந்து, நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பனாதன்' என்னும் அடிகளை யொற்றி வருதல் காண்க.

௬௫. அட்ட மூர்த்தம்—ஐம்பூதம், இருசுடர், உயிர் என்னும் எட்டுமாம். அட்டயோகம் - அட்டாங்கயோகம். அட்டாங்கங்களாவன இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன.

௬௫—எஉ. இவ்வடிகளில் தசாங்கங் கூறப்படுகின்றது. இங்கே கூறப்பட்ட தசாங்கங்களாவன மலை, யாறு, நாடு, நகர், பரி, களிறு, தார், கொடி, முரசு, ஆணை யென்பனவாம். இவ்வாறே உமாபதி சிவாசாரிய சுவாமிகள் 'நெஞ்சுவிடு தூது' என்னுஞ் சாத்திரத்திற் கூறியருளினார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் தாம் அருளிச்செய்த 'திருத்தசாங்கத்' தில் மேற்கூறப்பட்ட

பத்தனுள் களிறு ஆனை யென்னு மிரண்டினையு மொழிக்கும் பெயர், படையென்னு மிரண்டுங் கொண்டார்கள்.

கஎ. மீதானம்-பிரமாந்திரம்.

கக. குரகதம்-குதிரை.

எய. பஞ்சமலம் - ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி. இவற்றைச் சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்து அஅ-வது செய்யுளா லறிக.

எச. விபுதர்-புலவர்.

எக. தருவர்-அசுரர். அதோ முகம்-கீழ்நோக்கிய முகம். சிவ பிரானுடைய ஏனைய ஐந்து திருமுகங்களுள் ஈசானம் மேல் நோக்கி யும், தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னும் நான்கும் முறையே கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு என்று நான்கு திசைகளை நோக்கி யிருப்பன.

எக. அடுத்ததொருபூதம்-வாயுவுக்குக் கீழ்ப்பட்ட பூதமாகிய நெருப்பு: அதன் தலைவன் அக்கினிதேவன்.

அக. சரவணம் - நீலநிறத்தையுடைய தருப்பை வளர்ந்த பொய்கை. இதனை நக்கீரர், ‘நெடும் பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை’ யென்றார். ‘கிவர்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனை’ என்பது பரிபாடல்.

அஉ. அறுமீன்-கார்த்திகைப் பெண்கள். விளையாடி யென்னும் வினையெச்சம் மேல் கஉ-வது அடியில் ‘உயர்ந்தோன்’ என்னும் வினைப்பெயர் கொண்டு முடிந்தது.

அச. கந்தனெனப் பெயர் புனைந்ததை ‘அந்த மில்லதோர் மூவிரு வடிவுமொன் றாகிக், கந்த னென்று பேர் பெற்றனன் கவுரி தன் குமரன்’ என வரும் கந்தபுராணத்தா லறிக.

அகூ. மரு பாயும் தார்-வாசனை கமழும் பூமாலை.

அக. செங்கட் கடா - (நாரதர் செய்த வேள்வியினின்றும் எழுந்த) சிவந்த கண்களையுடைய ஆடு.



கஉ. சிட்டி-சிருட்டி. அஃதாவது படைப்பு.

கங. பிரமம் - பிரணவ மந்திரப்பொருள். ‘சண்முகன் குடிலை யென்னு, மொன்றொரு பதத்தினுண்மை யுரைத்தனன்’ என்பது கந்தபுராணம்.

கச. தடங்கிரி - கிரௌஞ்சமலை. இது ‘குருகு பெயர்க் குன்றம்’ என்றுஞ் சொல்லப்படும்.

கரு. வெள்ளைக் கய இந்திரன்-ஐராவதமென்னும் வெள்ளை யானையையுடைய தேவேந்திரன்.

கஅ. பானு பகைவன்-பானுகோபன்.

ாஉ. அரவைப் பொருத சித்ரமயில் என்பதனைக் ‘கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும், பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கு’ என்னுந் திருக்கோவையா லறிக.

ாரு. தெய்வக் களிறு-இங்கே களிறென்னுஞ் சொல் யானை யென்னும் பொருளைக் குறித்து நின்றது. கந்தபுராணத்தும் ‘குமர நாயகன் றெய்வதக் களிற்றொடுங்கூடி’ எனவும், ‘சேணுதித்திடு தெய்வதக்களிற்றினைச் செவ்வே, ஞாணினிற்கட்டி’ யெனவும் வருதல் காண்க. வள்ளியம்மையாரை ‘மான்மறி’ யென்றல் போலத் தெய்வக்களிற்றாற் பேணப்பட்டமையின் இவளுந் ‘தெய்வக்களிறு’ எனப்பட்டாள்.

ாசு. கலை முனிவன்-நூல்களில் வல்ல முனிவன். அவன் பெயர் சிவமுனி.

ாக. ஆறு திருப்பதி - திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலையென்பன. ஆறெழுத்து மன்பினுடன், கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே என்பது திருத்தித் திருத்தி வந்தென் சிந்தையிடங் கொள்கயிலாயா’ எனவும், ‘சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்’ எனவும் வருந் திருவாக்குக்களின் பொருளை மேற்கொண்டது.

௱௰. காந்தி-கமுகு.

௱௧௮. ஆசுமுதல் நாற்கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் நான்கு வகைக் கவிகள்.

௱௧௯. எழுத்து முதலாம் ஐந்திலக்கணம்-எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணம்.

௱௨௰. இருவாதனை-அகப்பற்றுப் புறப்பற்றுக்களால் வரும் இருவகைத் துன்பங்கள். தம்மை விடுத்தல்-ஆன்மபோத மொழிதல்.

உ

திருச்சிற்றம்பலம்

# மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்

பிள்ளைத் தமிழென்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள்ளே ஒருவகைப் பிரபந்தம். அப் பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத் தமிழென்றும் பெண்பாற்பிள்ளைத் தமிழென்றும் இருவகைப்படும்.

அதன் இலக்கணமாவது தெய்வங்களையேனும் பெரியோர்களையேனும் குழந்தையாகப் பாவித்துத் தம் அன்புடைமை தோன்றப் பாராட்டிப் பாடுவது. இதன் விரிவைப் பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல்களிற் கண்டுகொள்க.

ஆண்பாற் பிள்ளைத்தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேராகிய பத்துப் பருவங்களுங் கூறப்படும். அவற்றுள் காப்புப்பருவமாவது பாட்டுடைத் தலைவனைத் திருமால் முதலிய தேவர்கள் காக்குமாறு வேண்டிக்கொள்ளும் பருவம். செங்கீரைப் பருவமாவது அத் தலைவனாகிய குழந்தை செவ்விய மழலைச்சொற்களைப் பேசும்பருவம். தாலப்பருவமாவது அக்குழந்தை தாலாட்டைக் கேட்கும் பருவம். சப்பாணிப் பருவமாவது இக்குழந்தை இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்துக் கொட்டும்பருவம். முத்தப் பருவமாவது முத்தமிட்டுக் கொள்ளும் பருவம். வருகைப் பருவமாவது குழந்தை வருதலை விரும்பிய பருவம். அம்புலிப் பருவமாவது சந்திரனை விளையாட அழைக்கும் பருவம். சிற்றிற் பருவமாவது அக்குழந்தை சிறுமியர் கட்டி விளையாடும் சிறுவீடுகளை அழிக்கும் பருவம். சிறு பறைப் பருவமாவது சிறுபறையை முழக்கி விளையாடும் பருவம். சிறுதேர்ப் பருவமாவது நடைவண்டி யுருட்டிவிளையாடும் பருவம்.

பெண்பாற் பிள்ளைத்தமிழில் ஆண்பாற்குக் கூறப்பட்ட சிற்றில், சிறுபறை, சிறுதே ரென்னும் மூன்றுபருவமும் நீக்கி அம்மானை, நீராடல், ஊசலென்னும் மூன்று பருவமுங் கூறப்படும். அவற்றுள் அம்மானைப் பருவமாவது அப்பெண் அம்மானையாடும் பருவம். நீராடற் பருவமாவது நீர்நிலையிற் சென்று புனல் விளையாட்டயரும் பருவம். ஊசற் பருவமாவது ஊசலொன்றிலேறி விளையாடி மகிழும் பருவம்.

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழிலே உமாதேவியார் மலையத்துவச பாண்டியன் மகளாய்த் தடாதகைப் பிராட்டியாராய் அவதரித்த காலத்துச் சுற்றத்தார் முதலியோர் பாராட்டிப் பேணிய செய்தி கூறப்படும்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

மதுரை

# மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ்

## அரும்பொருள் விளக்கம்

### காப்பு

௧. கவுள் - கபோலம். தடவு - விசாலம். இரட்டுதல்-தடுத்தல். விநாயகப் பெருமான் தனது இருசெவிகளாலும் எழுப்பும் காற்று, கபோலத்தினின்று வழியும் மதசலமும் கண்ணினின்று வரும் அக்கினியும் தத்தம் வரம்பு கடவாமலிருக்குமாறு தடுக்கின்ற தென்க. எங்கோன் - சிவபிரான். பொலன் - பொன். வெண்பொடி துடியடி துவைத்து-திருநீற்றைத் தனது மென்மையான பாதங்களால் துவைத்து. அயிராவணம் - பக்கத்துக்கு ஆயிரம் கொம்புகளாக இரண்டாயிரங் கொம்புகளையுடைய யானை. "விநாயகப் பண்ணவ னெழுந்து, மருப்பி ராயிர மேந்தயி ராவணமென்னும், பொருப்பி னேறினன்" என்பது விநாயக புராணம். சிவபெருமானுக்குச் சூரியனுஞ் சந்திரனும் முறையே வலக்கண்ணும் இடக்கண்ணுமாம். வலக்கண் சாத்தியவழி யெழும் இளவெயில்பட மீனாக்ஷியம்மையாரது தனபாரம் குளிர்ச்சியாயும், இடக்கண் சாத்தியவழி யெழும் மதிநிலவுபட அது வெம்மையாயுமிருத்தல் கூறப்பட்டது. இதனை "வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமும், மேவனைய வன்னமுலை-மேவியதே, மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனி, லின்பாருஞ் சீதனமாமே"

என்னும் நீதிவெண்பாவா னறிக. உமாதேவியார் மலையரசன் மகளாய் அவதரித்தமையின் ‘மலைவல்லி’ யென்றும், அபிடேக பாண்டிய அரசன் பச்சைக் கருப்பூர சலத்தால் அபிடேகஞ் செய்தமையின் ‘கர்ப்பூரவல்லி’ யென்றும், மிகுந்த அழகுடைமையின் ‘அபிராமவல்லி’ யென்றும், மாணிக்க நிறமும் மாகதநிறமுங் கொண்டமையின் ‘மாணிக்கவல்லி’ ‘மாகதவல்லி’ யென்றும், மதுரையில் தடாதகைப் பிராட்டியாராய்த் திருமுடி சூடினமையின் ‘அபிடேகவல்லி’ யென்றுங் கூறப்பட்டார். அபிராமம்-அழகு.

---

# நூல்

## காப்புப்பருவம்

உ. நேமி-கடல். வலயம்-பூமி. மாசுணம்-பெரும் பாம்பு: இங்கே ஆதிசேடன். சூடு - உச்சி. மோடு - பெருமை. இங்கே கூறப்பட்ட விமானம் இந்திர விமானம். இது விண்ணிழி விமானமென்றுஞ் சொல்லப்படும். இதன் வரலாற்றைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணத்தில் இந்திரன் பழி தீர்த்த படலத்திற் காண்க. உளை-பிடரிமயிர். மடங்கல்-சிங்கம். பீடிகை-பீடம். இப்பீடம் முப்பத்திரண்டு சிங்கங்களால் தாங்கப்படுதலின் ‘மடங்கல் தாங்கும் அணிகொண்ட பீடிகை’ எனப்பட்டது. பொன்முடி-பொற்கிரீடம். முடி-சிரசு. அம்மனை - தாய். கணி-கண்ணி: பூமாலை. கலுழி - காட்டாறு. தேன்+கலுழி=தேங்கலுழி. அளறு - சேறு. நடவை - வழி. கமலத்து அணங்கு-இலக்குமி. முடவுப் படம்-வளைந்த படம். வருத்து-பிடர்.

இச் செய்யுளின் பின் விரண்டு அடிகளிற் கூறப்பட்ட கதை:—திருமழிசை யாழ்வார் காஞ்சிபுரத்தில் வசிக்கும் பொழுது, திருவெஃகாவிற் பணிவிடை செய்துவந்த ஓர் கிழவிக்கு யௌவனப் பருவம் அநுக்கிரகித்தார். இதனை யறிந்த பல்லவராசன் ஆழ்வார் தனக்கும் யௌவனம் அநுக்கிரகிக்கும்படி அவரை யழைத்து வருமாறு அவ்வாழ்வாரது சீடராகிய கணிகண்ணரிடம் கூற அவர் எமது ஆசாரியர் நும்மிடம் வாராரென்றனர். பின்னர் அரசன் கணிகண்ணரை நோக்கி ஆழ்வார் வாராதிருந்தால் இருக்கட்டும். நீரேனும் நம்மீது ஒரு கவிபாடுமென்றனன். அவர் அதற்கிசைந்திலர். உடனே அரசன் சினங்கொண்டு கணிகண்ணரைத் தன் நாட்டினின்று நீங்குமாறு கட்டளையிட்டான். அவர் இச்செய்தியை ஆழ்வாரிடம் தெரிவித்து முற்செல்ல, ஆழ்வாரும் ‘கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டா-துணிவுடைய, செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன், பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்’ என்று பாடிக்கொண்டு புறப்பட்டார். உடனே விஷ்ணு மூர்த்தியும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டனர். இதனை யறிந்த அரசன் கணிகண்ணரைப் பிரார்த்திக்க, அவர் ஆழ்வாரிடம் செய்தியைக் கூற, ஆழ்வார் அச்செய்யுளையே சிறிது மாற்றிக் ‘கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீகிடக்க வேண்டும்-துணிவுடைய, செந்நாப்புலவன் யான் செல்வொழிந்தேன் நீயுமுன்றன், பைந்நாகப்பாய் படுத்துக் கொள்’ என்று பாடிவேண்ட விஷ்ணு மூர்த்தி மீட்டு மெழுந்தருளி வீற்றிருந்தனர் என்பதாம்.



ங. வடவரை - மேருமலை. செரு - போர். கோட்டினர்-வளைத்தவர். மதலை யென்றது இங்கே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரை. கைத்தீட்டினர்-கையெழுத்துடையவர். திருமால் இலக்குமியையும் இந்திரன் கற்பகத்தையும் தாஞ்செய்த சிவபூசையின் பலனாகப் பெற்றனர் என்பதாம். இருவர்கள் - அசுவதரன், கம்பளன் என்பவர்கள். இவர்கள் எம்பெருமானுடைய காதில் தோட்டு வடிவமாக இருந்து இசைப்பணிவிடை செய்பவர்கள்: தும்புரு நாரதருமாம். வைதிகப் பாட்டு-வேதம். இரசித சபை-வெள்ளியம்பலம். பதயுகம்-இரண்டு திருவடிகள். தகரம்-மயிர்ச் சாந்து: அது பெண்கள் தலையிலணியும் ஒருவகை வாசனைப் பொருள். தாள நகை-முத்துப்போன்ற பல். சருவுதல்-சைகை காட்டுதல். மறுகு இடை-துவளும் இடை. செவ்வி முற்று-பருவம் முதிராத.

தனை மலர்-வெண்டாமரைப் பூ. சததளமின் - செந்தாமரைப்பூவி லிருக்கும் இலக்குமி. சாகவதியும் இலக்குமியும் மீனாக்ஷியம்மை யின் திருவுருவத்தின் அழகை நோக்கித் தமது வடிவம் அழகில்லா மையைத் தேர்ந்து இகழ்ந்து மீனாக்ஷியம்மையின் குழல் முதலிய உறுப்புக்களைத் தமது மனத்தில் எழுதி வழிபடுகின்றன ரென்ப தாம். பேட்டனம்-பெண்ணன்னம். மடவாடை-இளநடை.

௪. கடாம் - யானையின் கன்னம். கடாம் - மதநீர். எமர்-எம்மவர். மதுரித்து-தித்தித்து. உவட்டு-பெருக்கு. மூத்தனம் மேவு பெண் அரசு - மூன்று தனங்களைப் பொருந்திய மீனாக்ஷி யம்மை. தடாதகைப் பிராட்டியார் மூன்று தனங்களோடு பிறந் தருளினமையின் 'முத்தனமேவு பெண் அரசு' எனப்பட்டார். சித்திவிநாயகர் என்பது தல விநாயகர் திருநாமம்.

௫. பமரம்-வண்டு; இது ப்ரமரமென்னும் வடசொல்லின் திரிபு. மடுத்தல்-உண்ணுதல். பகடு-யானை: இங்கே ஐராவதம். நடத்தி யென்னும் வினை யெச்சம் பொலியென்னும் வினையைக் கொண்டு முடிந்தது. புலோமசை - இந்திராணி. சூல்புயல்-கருக்கொண்ட மேகம்: சூர்ப்புயல் என்ற பாடத்திற்குத் தெய் வப் பெண்ணாகிய புயல் என்பது பொருள். பரவை-கடல். இந்தி ராணியை மேகமென்றதற்கேற்ப இந்திரனைக் கடலென்றார். குமரி-தெய்வயானை யம்மையார். கலா-தோகை. இமிழ்திரை முற்றம்-ஒலிக் கின்ற அலைகளையுடைய பாற்கடல். மேரு-இங்கே மந்தர மலையை யுணர்த்திற்று. பண அடவி-படத்தின் தொகுதி. தாம்பு-கயிறு. நீர்த்தன்-திருமால். மதித்தல் - கடைதல். பராபவம்-அவமதிப்பு. தீ - ஆலாகலவிடமாகிய தீ. கிரீவம் - கழுத்து. சொக்கன்-அழ குடையோன்.

௬. விட்புலம் - விண்ணாகிய இடம்: இங்கே தேவரைக் குறித்து நின்றது. உத்தி - படப்பொறி. சுடிகை - உச்சி. பிரம தேவர் தாம் பெற்ற பூமிதேவியைத் தமது பிதாவாகிய திருமா லுக்கு மனைவியாகக் கொடுத்த அறியாமை தோன்ற 'களிக் குழந்தை' எனப்பட்டார். பாகத்து மரகதக் குன்றென்று ஓர்



தமனியக் குன்றொடு கிளைத்தெழுகின்ற பவளத் தடங்குன்று-விஷ்ணு மூர்த்தியையும் பிரமதேவரையும் இருபாலுங் கொண்ட சிவபெரு மான். உளக்கன்னம்-உள்ளத்திலிருப்பது. தடாதகைப் பிராட்டி யாரது மூன்று தனங்களும் அவரது உள்ளத்திருக்கும் மூவர் முடி களுக்கும் கிரீடங்கள் போன்று விளங்கின என்பதாம். அளி-வண்டு.

௭. கருங்கட் குண்டகழி-கரிய இடத்தையுடைய ஆழமான கடல். துணர்-பூங்கொத்து. உருமுக்குரல் - இடிபோன்ற ஓசை. வெண்புயல் - ஐராவதம். இந்திரனுக்கு ஐராவதமும் மேகமும் ஊர்தியாதலால் 'வெண்புயலுங் கரும்புயலும் உகைத் தேறும் குலிசத் தடக்கைப் புத்தேள்' எனப்பட்டது. குலிசம்-வச்சிரப் படை.

௮. வெஞ்சுட்டியினையும் நெடிய உடலினையும் விரிக்கும் படத்தையுமுடைய பாயல் - ஆதிசேடன். ஆகம்-மார்பு. மணி-கௌஸ்துபமணி. பஞ்சு-செம்பஞ்சுக் குழம்பு: இது பெண்கள் காலில் ஊட்டப்படுவது. மஞ்சு ஊட்டு அகட்டு நெடுவான்-மேகம் தங்கும் இடத்தையுடைய பெரிய வானம். மறையோதி மம்-பிரமனாகிய அன்னம். கங்காதேவியை வெள்ளையன்ன மென்ற தற்கேற்பக் கங்கையின் அலை சிறகெனப்பட்டது. சிவபெரு மானது சடை பிரமனாகிய அன்னத்திற்கு அரிதாயினும் கங்கை யாகிய மற்றோ ரன்னத்திற்கு எளிதாயிற் றென்பதாம்.

௯. வடு-மலரினிதழ். பொகுட்டு - தாமரைக் கொட்டை. அன்பினைந்திணையென எடுத்த இறைநூல்-சோமசுந்தரக்கடவுள் 'அன்பினைந்திணை களவெனப்படுவது' என்று தொடங்கி அறுபது சூத்திரங்களால் அருளிச் செய்த இறையனாரகப் பொருளென்னும் நூல். அஃது இறையனார் களவியலென்றும் வழங்கும். அதன் வரலாற்றை அந் நூல்முதற் சூத்திரவுரையிற் காண்க. முடிப்பம்-முடியில் வைப்போம். நவ்வி-மான். கிஞ்சுகம்-முள் முருக்கம்பூ.

௰. வடி-கூர்மை. திரித்தல்-சுழற்றிவீசுதல். யானை-இங்கே தனத்தைக் குறித்தது. வாங்குதல் - வளைதல். துடிபட்ட - துடி

போன்ற. உடைந்தெனத்-தோற்றதென்று. முடங்கு உளை-மடங்கிய பிடரிமயிர். உகைத்தல்-செலுத்துதல். அரிப்பிணவு-பெண்சிங்கம் : இங்கே துர்க்கை. பிடிக்குழாம்-பெண்யானை போன்ற தோழியர் கூட்டம். கிம்புரி-யானைக் கொம்பிற் கட்டப்பட்ட பூண். கிம்புரிக்கோடு-இங்கே தனம்.

௧௧. கபாய்-நிலையங்கி. கவி-குரங்கு. வாரி-கடல். தரு-கற்பகமரம். எயிறு-பல். இங்கே கூறப்பட்ட எழுவராவார் முறையே மாகேசுவரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வாராகி யென்போர். குடம்-திருமால் வாணாசுரன் பேரூரிலாடிய கூத்து. குடவியர்-இடைப்பெண்கள். பணம்-பாம்பின்படம். கார்முகம்-வில். சிவபெருமான் தனது இடப்பாலினின்று விஷ்ணுமூர்த்தியையும் உமாதேவியாரையும், வலப்பாலினின்று பிரமதேவரையும் இலக்குமியையும், நெஞ்சினின்று கால ருத்திரரையும் சரசுவதியையுந் தந்தமையால் உமாதேவியார் திருமாலின் தங்கையெனப்பட்டார். இவ் வரலாறு காஞ்சிப் புராணத்தில் வீரட்டகாசப் படலத்து ௨௧-வது செய்யுளிற் கூறப்பட்டது.

௧௨. வெங்-முதுகு : வெந்நிடல் - முதுகிடல். அஃதாவது புறங்காட்டித் தோற்றல். உதியர்-சேரர் : அ உதியர்-அந்தச் சேரர். அபயர்-சோழர். அளவும்-அளந்து கொள்ளுங்கள். திறை-கப்பம். அலரி-சூரியன் : அலரி அண்ணல்-சூரியனாகிய தேவன். குமரி-கடல் கொண்ட தமிழ்நாட்டுப் பகுதியிற் சென்ற குமரியாறு. பொன்னி-காவிரி. பொருநை-தாம்பிரபன்னி. பொன்மலை-மேரு. குமார்-குமாரக்கடவுள். மூன் இருவர்-அவருக்கு மூத்த விநாயகரும் வீரபத்திரரும். எழுகடல் - மதுரையிலுள்ள எழுகடற்றீர்த்தம். கட்சி-பறவைக்கூடு. கனக நளினி-பொற்றாமரைத்தீர்த்தம். இரு கமலமின் - இலக்குமியும் சரசுவதியும். இமயமென்ன - இமயமலையரசன்போல. பண்ணவர்கள்-தேவர்கள். வனப்பு-அழகு. இருவர்-அசுவினி தேவர் இருவர். எண்மர்-எட்டு வசுக்கள். பதினொருவர்-பதினொரு ருத்திரர்கள். பன்னிருவர்-பன்னிரு சூரியர்கள். ஆக இத் தேவர் தொகை முப்பது மூன்றாதல் காண்க. இம் முப்பத்து மூன்று தலைவர் இனத்தில் ஒவ்வொருவருக்குக் கோடியாக முப்பத்துமுக்கோடி தேவர் இருக்கின்றனர்.



---

## செங்கீரைப்பருவம்

௧௩. ஆட்டு பொற்சுண்ணம்-இடித்து அமைக்கப்பட்ட பொற்சுண்ணம். எற்றிட-தக. தார் ஆட்டு சூழியக் கொண்டை-பூமாலை சூட்டப்பட்ட உச்சிக்கொண்டை. குதம்பை, கொப்பு என்பன பண்டைக்காலத்திற் பெண்கள் காதிலணியும் ஆபரண விசேடங்கள். பாண்டிப் பெருந்தேவி-காஞ்சனமாலை: இவள் மலையத்துவச பாண்டியன் மனைவி.

௧௪. தாள் தோய் தடக்கை-முழங்கால்வரை நீண்ட பெரியகை.

௧௫. நேமிச்சுவர் - சக்கரவாளகிரியாகிய சுவர். எட்டுச் சுவர்க்கால்-கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனமென்னும் அஷ்டகுல பர்வதங்கள். எற்று புனல்-பிரளயவெள்ளம். மத்தப் பெரும்பித்தன்-சிவபிரான்.

௧௬. மங்குல் படு கந்தரம் - இருள் பொருந்திய கழுத்து. கடைக்கண் நோக்கும் பொங்கு மதர் நோக்கு-கடைக்கண்ணாற் பார்க்கின்ற மிகுந்த அழகினையுடைய பார்வை. உகளுதல்-புரளுதல். செங்கயல் கடக்கும் என்ற பாடத்திற்குக் கயல்மீனை வெல்லும் என்பது பொருள்.

௧௭. அறுகால்-வண்டு. செந்நா-பிரமனது செவ்விய நாக்கு. இமையாக் கண் என்றது மயிலின் தோகையிலுள்ள கண்கள். கணமுகில் - கூட்டமான மேகம். வெள்ளென - வறியனவாய்ப்போக ; இலக்குமியும் சரசுவதியும் தோழிகளாக உமாதேவியார் மதுரையில் தடாதகைப் பிராட்டியாராக அவதரித்தமையால் அம்மூவர்க்குமுரிய பதும பீடிகையும் பிரமன் நாவுங் கைலையும் பொலிவிழந்தன. இதனை 'மனைக்குப்பாழ் வாணுதலின்மை' என்றதனா லறிக. வெடிபோதல் - தாவுதல். தகட்டு அகடு-தகடுபோன்ற வயிறு. தேன் நறு-தெளிந்த தேன்.

கஅ. முரிபுருவம்-வளைந்த புருவம். விழிமகாம் - விழியாகிய மகரம். இருமகாம் - இரண்டு மகரக்குழைகள். நூபுரம் - சிலம்பு. உந்தி - கொப்பூழ். நிகிலம் - முழுவதும்.

க௯. தசைந்திடுகொங்கை - தசையினையுடைய தனம். தாய் - விளி. பசைந்திடுஞாலம் - செழித்த பூமி. பைங்கொடி யென்றது இடையை.

உ௰. முச்சி-உச்சிக்கொண்டை.

உக. குரு-நிறம். செம்போது-செந்தாமரை போன்ற திருமுக மண்டலம். திருமகள் கலைமகள் தலைமகள் மலைமகள் - இலக்கு மிக்கும் சரசுவதிக்கும் தலைவியாகிய மலைமகள்.

உஉ. தங்காய் - தங்கையே. அபயமும் வரதமுமாகிய இரண் டென்க. உபயம் - இரண்டு. மதகயமென்பது சந்தம் நோக்கி மதங் கயமென்று நின்றது. கங்குலாகிய யானையை இராமுழுவதும் விடும் மன்மதனுடைய மீனக் கொடிபோலும் பொலன்கொடி யென்க. உமாதேவியார் உயர்த்தகொடி உயிர்கள் இன்பமடையு மாறு செய்தல்பற்றிக் 'காமன் கயல்குடி புகுமொரு துகிலிகை யென' என்று கூறினார்.

---

## தாலப்பருவம்

உ௩. சிறுகால் - தென்றல். தீ-சிவந்த தளிரையுணர்த்திறறு. தேமாமரம் தென்றல்வீசத் தளிர்க்குமாதலின 'சிறுகாலரும்பத் தீயரும்புந் தேமா' எனப்பட்டது. கயவாய் - பெரியவாய். புனிற்று எருமை - ஈன்றணிமையையுடைய எருமை. கறிக்கல்லா - கறித்த லறியாத. உள்ளி - உள்ள என்பதன் திரிபு. தாங்கம் - இங்கே பாற்கடலை யுணர்த்திநின்றது. பொறையுயிர்த்தல் - ஈனுதல். பொன் - இலக்குமி. பொய்கையில் தாதாடிப் பொன்போல் அன் னம் பொலியும் மதுரை என்க. சூல் - கருப்பம்.

உச. தோகை - கொய்சகம். இதனைத் தோக்கையென்று கூறுதலுமுண்டு. கலாபம்-அரையிலணிவது; அஃது இருபத்தொரு



கோவைகளை யுடையது. அழல்மணி - செம்மணி. துவர் - விறகு. குடக்கூன் குழிசி - திரட்சியையுடைய நத்தையாகிய மிடா. கூன் - சங்குமாம். வல்சி - சோறு. நித்திலத்தின் வல்சியென்பதில் இன் அல்வழிச்சாரியை. 'வலம்புரியடுப்பா மாமுத்தரிசி, சலஞ்சல நிறையவேற்றி நலந்திகழ், பவளச் செந்தீமூட்டிப் பொலம்பட, விப்பியந் துடுப்பா லொப்பத்துழாவி, யடாஅதட்ட வமுதம்' எனத் திருவாரூர்மும்மணிக்கோவையில் வருதல் ஒப்புநோக்கத் தக்கது.

உரு. படலைமுகில்-மாலைபோன் றடுக்கிய மேகம். கமஞ்சூல்-நிறைந்த கருப்பம். வாளை கங்கையை எளிதில் நீந்தினமைதோன்ற அதனைக் கழியென்றார். திரைத்தல் - சிதைத்தல். புறங்கோத்த முந்நீர் - பெரும்புறக்கடல். மதுரைப் பழனத்துள்ள வாளைமீன் மேகமண்டலங் கிழித்து மேலேபோய்க் கற்பகக்காட்டையுங் கங்கை யையுங் கடந்து சந்திரமண்டலத்தைத் தாக்கி நக்ஷத்திரங்களைச் சிதைத்துப் பகிரண்டத்தைப் பிளந்து பெரும்புறக் கடலைக் கலக்கி அங்குள்ள சுறாமீனோடு விளையாடியதென்க.

உசு. கடத்து - குடத்தால். மதமா - யானையை. மடவியர் - பெண்கள். பெண்கள் கூந்தலினின்று விழுந்த பூந்துகள் அடங்கு மாறு விடுத்த குங்குமச்சேறு யானையை வழுக்கி அஃது ஓடுதலைத் தடுக்குமென்க. இவுளி - குதிரை. விலாழி - குதிரை வாய்நுரை. இளைஞர் செலுத்துகின்ற குதிரைகளின் வாய்நுரை குமிழியெறிந்து ஆரவாரித்து அலையெறிந்து நுரைவீசி யொரு பேராறு போலச் செல்லும் மதுரை யென்க.

உஎ. வார்-கச்சு. இங்கே குன்றென்றது தனம். துஞ்சுதல்-நிலைபெறுதல். சுரும்பர் - வண்டுகள். பொதும்பின் - சோலையினின் றும். முயற்கலை - முயலையுடைய சந்திரன். முசுக்கலை - ஆண்முசு. முசுவென்பது குரங்கின் விசேடம். துழனி - ஆரவாரம். படப்பை - கொல்லை. எருமைப்போத்து - எருமைக்கடா. முசுக்களின் ஆர வாரத்துக்கு ஒதுங்கி வயலிற் படப்பைமேய்ந்து போரிலேறும் கரு முகிலை மள்ளர் பிணையலடிக்கும் எருமைக் கடாவினொடும் பூட்டி யடிக்க அம்முகில் இடிக்குரல்விட்டு ஆர்க்கின்ற தென்க.

௨௮. கண்டல் - தாழை. வண்டல் - மகளிர் விளையாடுமிடம். சேர் - செற்சேர். கார்முதற் புனல் ஈறாகிய பதினொரிடங்களிலும் பொருகின்ற கயல்போல. குழல் அடர்ந்திருத்தலின் 'பொழிலிற் சுருள்புரிகுழல்' எனப்பட்டது. கணிகையாது குழலிலும் குழையிலும் பொருகின்ற கயலாவது கண். திரு - மேம்பட்ட சிறப்பு. பொருஇல் - உவமையில்லாத. ஊழ்த்தல்-மலர்ந்து உதிர்தல். கணிகையாது கண்கள் தேரிற்செல்லும் குமாரர்களுடைய மார்பிலும் சிறப்பிலும் சிலையிலும் புயத்திலும் தாரிலுஞ் சென்று பொருகின்றன என்க. உமாதேவியார் சர்வ வித்தியாப்பிரதாயினி யாதலால் 'சங்கம் வளர்ந்திடுகின்ற பொலன்கொடி' யெனப்பட்டார்.

௨௯. திசையிற் றலைவர்கள்-திசையிலுள்ள அரசர்கள். செருவில் தலைவர்-தடாதகைப் பிராட்டியாரது சேனைவீரர்கள். சிலையிற் சோனைக்கணைமழை என்க: அஃதாவது சிலையினின்றும் விடாது சொரிகின்ற சரமாரி. தடமுடி - பெரியகிரீடம். சொரிய-சொரிதலால். தொந்தமிடுதல் - இணைந்து ஆடுதல். கவந்தம்-உடற்குறைப் பிணம். பவுரிகொள-சுழல. அப்பெயர்மீன்-ஆனைமீன், குதிரைமீன். யானைமீனையும் குதிரைமீனையும் அம்மனையாக ஆடுகின்ற கடலலைபோல யானையையுங் குதிரையையும் இவ்விரத்தக் கடலலை அம்மனையாடுகின்றதென்க. தானை - சேனை.

௩௰. வெளிறு அக்களிறு - வெண்ணிறமுடைய அந்த ஐராவதம். பிளிறுதல்-யானையின் முழக்கொலி. குளிறுதல்-மேகத்தின் முழக்கொலி. குளிறியிடா பொலிகொண்டல் என்க. தமர்-தம்மவராகிய தேவர். திசையிற் றலைவர்கள் - ஏனைய திக்குப் பாலகர்கள். கடிவட்டபண்டை-இங்கே வச்சிராயுதம். பிறகிட்டு உடைவது என்பதை உடைந்து பிறகிடுவது என மாற்றிக்கொள்க. தரு - கற்பதரு. கொடிமுடிதாள் - சிகரங்கள் தங்கிய. பண்ட - வளை, செண்டு, வேலென்பன. திருமகன்-உக்கிரகுமார பாண்டியர். உக்கிரகுமாரர் வளை யெறிந்து இந்திரன் முடி தொலைத்ததும், மேருவைச் செண்டா லடித்ததும், கடலில் வேலை விடுத்ததும் திருவிளையாடற்



புராணத்திற் காண்க. அதிபதி யுடைத்திடும் அமரில் பிறகிடுவது கண்டு குளிராப் பொருதிருமகன் என முடிக்க.

௩௧. வசுந்தரை-பூமி. கலிப்பகைஞன்-கலியாகிய பகைவன். தமிழ் நீர் நாடு-தமிழ் வழங்குந் தன்மையை யுடைய பாண்டி நாடு. அயர்த்தல் - மறத்தல். அறங்கடை - பாவம். உயிர்கள் மறந்தும் பாவக் கடலிற் படியாமல் என்க. செழியர்-பாண்டியர்.

௩௨. சிறு பெண்பிள்ளையாகிய நீயோ சிவபெருமான் வாழுங் கயிலாயத்தின் மதிலை வளைப்பவனென்று எதிராகச் சீறி என்க. எதிர் சீறுதல்-போருக்கு அழைத்தல். வீறு-(தம்முடைய) பெருமை. நிகரிட்டு-எதிர்த்து. நந்தி கணத்தவர் உடைந்தமையின் அவர் உயர்த்த இடபக் கொடி பயனற்றதாயிற்று. பொதியமிசைத் தவழுஞ் சிறுதேர்-தென்றல். சமர்த்தன்-இங்கே மன்மதன். மன்மதன் சிவபிரானால் எரிக்கப் பட்டமையின் அவன் உயர்த்த மீனக் கொடியும் பயனற்ற தாயிற்று. தடாதகைப் பிராட்டியார் திக்கு விசயத்தில் அனைவரையும் வென்றமையின் அவள் உயர்த்திய மீன் கொடி பயனுடைய தாயிற்று.

## சப்பாணிப்பருவம்

௩௩. நாளம்-தாமரையின் தண்டு. வட்டத் தவிசம்-வட்டமான தவிசு. எட்டு நாட்டத்தன்-எட்டுக் கண்களை யுடைய பிரமன். பரம வீட்டத்தன்-பரமபத மெனப்படும் வைகுண்டத்திலிருக்கும் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தி. நள் இருளின் நாப்பண்-மிக்க இருட்டை யுடைய நடு இராத்திரி. நேமிவட்டம்-பூமண்டலம். குட்டம்-சமுத்திரம். வேதண்ட கோதண்டம்-மேரு மலையாகிய வில். மட்டித்தல்-மண்டலித்தல். மது-தேன். மத்தர்-ஊமத்த மலரணிந்த சிவபிரான். வட்ட நிர்த்தம்-பவுரிக் கூத்து. ஒற்றுதல்-சேர்த்தல்.

௩௪. கொடிஞ்சி-தேர் மொட்டு. ஞான்று-நாள். பொம்மல்-பூரித்தல். மெய்வந்த நாண்-இயற்கை நாணம், உயிரோவம்-உயிருள்ள சித்திரம்.

௩௫. மரு வெடித்தல்-வாசனை வீசுதல். தண்டலை-சோலை. புனை நறுந்தளிர்-அலங்கரிக்கின்ற வாசனை யுடைய தளிர்கள். பொய்தற் பிணைக்கள்-தோழியர் கூட்டம். கலம்புழுதி பெய்து வண்டல் விளையாட்டு அயர்ந்தும் என்க. புறவு-புறா. காந்தண் மலர் கைக்கும், செங்கமலம் முகத்திற்கும், கழுநீர் கண்ணுக்கும் உவமிக்கப்படும் மலர்கள். கையிற் செயற்கைச் சிவப்பு மருதோன்றி யரைத்துப் பூசியதா லுண்டாயிற் றென்க.

௩௬. விண் அளிக்கும் சுடர் விமானம்-இந்திர விமானம். துவாதச அந்தம்-சிரசின்மேற் பன்னிரண்டங்குல வெல்லையிலுள்ள இடம். அறுகாற் பீடம்-சோமசுந்தரக் கடவுள் சந்நிதியி லுள்ள அறுகால் மண்டபம். பரியங்கம்-படுக்கை. இந்திர விமான முதலிய ஆறிடங்களும் தொட்டிலாகக் கொண்டு என்க. ஊறல் ஆடுதல்-ஊறுதல். பைங்குழவி-விளி.

௩௭. கண்ணைக் கடலென்றமைக் கேற்பக் கருணையை அமுதத் தெண்டிரை யென்றார். வெண்டிரை நெருப்பூட்டு தெய்வக் குழந்தை-உக்கிர குமார பாண்டியர். நெய்போற்றுதல்-எண்ணெய் பூசுதல். கொங்கையி னின்றும் சங்கிலே வார்க்கப்படும் பால்: உண்ணுமுலை யாதலின் இவ்வாறு கூறினார். பால் ஆட்டி-பாலைக் குலுக்கி. சுண்ணம்-வாசனைப் பொடி. தாலாட்டுதல்-நாவசைத்தல்.

௩௮. உடு-நக்ஷத்திரம். பறந்தலை-போர்க்களம். தேவர்களின் வாளினால் மரித்தவராகிய மண்ணவ ரென்க. இவர் தடாதகைப் பிராட்டியாரின் சேனாவீரர். இவ் வீரர்கள் வீர சொர்க்கம் பெற்று ஆண்டுள்ள தெய்வப் பெண்களோடு களிக்கின்றா ரென்க. அவர் பொற்றொடியார்-தேவர்களது பெண்கள். பானல்-நீலோற்பலம்: இங்கே கண்ணைக் குறித்து நின்றது. படையிற் பட-படைபோலத் தம்மைத் தாக்கவும். இதுவரை தடாதகைப் பிராட்டியாரது சேனா வீராய்ச் சென்று போர்க்களத்தி லிறந்தோர் எய்துஞ் சிறப்புக் கூறினார்; இனித் திக்குப் பாலகரது சேனா வீராய்ச் சென்று போர்க்களத்தி லிறந்தோர் எய்து மிழிவு கூறுகின்றார். புதிதுண்டல்-முன்னிகழ்ந்த போரிலெல்லாம் மண்ணவர் குடர் தடி மூளை



களே யன்றி வேறு பெருமையின் இப்பொழுது பெற்ற தேவர்களது குடர் தடி மூளைகள் அலகைகளுக்குப் புதிய வுணவாயின. சேனம்-கழுகு. பெரு நாண்-பெரு வெட்கம். சிறு நாண்-சிறிய வில்லிற் கயிறு.

௩௯. முதலில் பிராட்டியாருக்குத் தோற்ற சேரும் சோழரும் பின்பு நண்புபூண்டு திக்கு விசயத்தில் தேவரை யெதிர்த்தமை கூறினார். தண்டதரன்-இயமன். கரும்பகடு-எருமைக் கடா. வெண் பகடு-வெள்ளையானை. இவ்விரண்டும் போரில் நிற்றலாற்றாது கடலிற் புகுந்தன. வருணன் விட்ட சுறா அருணனாலே செலுத்தப்படும் சூரியனது தேரிற் பாய்ந்தது. அருணன்-சூரியனது தேர்ப்பாகன். கோல்-அம்பு. அம்பு செங்கோலாய தாவது பகைவரைக் கடிதலும் அறமாதலின். எல்லைக்கல்-கேதுக் கல்லென இக்காலத்து வழங்கப்படும். வடகடற் றுறையிலே குமரித் துறைபோல ஆடும் பிடி யென்க. இதனால் உலக முழுவதும் அடிப்படுத்தினமை கூறினாராயிற்று.

௪௦. கூளிகள்-பூத கணங்கள். ஞாளி-நாய். ஆளிபோலப் போர் செய்யும் வயிரவக் கடவுளென்க. இவரனைவரும் சிதறும்படி வாளிகள் நாசஞ் செய்ய. முன் அழகு-முதலிற் போர் செய்ய வரும்போ திருந்த முகமலர்ச்சி. பின் அழகு-பின்புறங் காட்டியோடும் போதிருந்த உடலயர்ச்சி. சிவபெருமான் வலிய குன்ற வில்லி யாதலின் அம்மையார் மூரிச்சிலையோடு இரு புருவச் சிலையுமாக மூன்று சிலை பிடித்தார். மூரிச்சிலை-பெரிய வில். மூளரிக் கணை மூரிச் சிலைக்கேற்ப அக்கினிபாண மென்றும், புருவச் சிலைக் கேற்பத் தாமரை போன்ற கண்ணாகிய பாணமென்றும் பொருள் படும். வெல்லுத லெளிதன் றென்பார் 'வென்ற' என்றார்.

௪௧. குமிழ்-இங்கே நாசி. முசுப் பாய்தலாலே சந்திரனி னின்று வடியும் அமுதத்தொடு மழை பொழிந்த தென்க.

௪௨. மறை-இங்கே வேதத்தின் பொருள். கழுமலம்-சீகாழி. கழுமல மதலை-திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள். இதனாலே அரிதுணர் சிறப்பினை யுடைய வடமொழி வேதப் பொருள்களைத்

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் எளிதுணர் தமிழ்ப் பதிகமாக அருளிச் செய்தமை கூறினர். பிரசம்-தேன். குதிகொளல்-பெருகுதல்.

---

## முத்தப்பருவம்

௪௧. கருவூலம்-பொற் களஞ்சியம் : கருவூல மென்பதும் இப் பொருட்டு. செல்வரென்றது இங்கே அறிஞரை. ஆலவாலம்-பாத்தி. தோன்றாத் துணை-சிவபெருமான். முக்கட் சுடர்-சிவபெருமான் : அவருடைய மூன்று கண்களுமாம்.

௪௨. உழுவல் அன்பு-எழுமையுந் தொடர்ந்த அன்பு. சேதாம்பல்-செவ்வாம்பல்.

௪௩. கொழுதி-கோதி. மேகம், கரும்பு, தாமரை, சங்கு, கமுகுகள், மூங்கில், யானை, மருப்பு ஆகிய இவைகள் உனது கோதை, மொழி, அடி, கழுத்து, தோள், தனமாகிய இவற்றிற்குத் தோற்றமையின் அவைகள் தரும் முத்துக்கள் உன் வாய் முத்திற்கு ஒவ்வா என்றவாறு. பிறைக்கோடு உழுத சேந்-சிவபிரான் உமாதேவியாரது ஊடல் தணிக்க முயன்றதைக் குறிக்கும்.

௪௪. நால் மருப்புப் பொருப்பு-நான்கு கொம்புகளை யுடைய ஐராவதம். நத்தமென்றது இயக்கர் நகரங்களை. வான்மணி-தேவமணி. பைத்த சுடிகைப் படம்-விரித்த உச்சிப் படம். பரிதிமணி-கௌத்துவ மணி. பணியல்-பணித்தருளாதே. வேய் ஈன்ற முத்தம்-சிவபெருமான் திருநெல்வேலியில் வேயினடியில் சுயம்புவாகத் தோன்றினமை குறித்தது.

௪௫. தரங்கம்-அலை. படுதல்-உண்டாதல். கொற்கை-பாண்டியரது பழைய தலைநகர். இது தாமிரபர்ணி தீரத்தில் சங்கமத் துறைக்கு நான்கு மைல் மேலே யுள்ளது. இங்கே வெற்றிவேற் செழியனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கன்னகி யாலயம் உள்ளது. குவால்-தொகுதி.

௪௬. பசுங்கொடி-நிலமகள். ஆதிசேடனால் அவள் தாங்கப் படுதலின், அவளை ஆதிசேடனது உச்சியாகிய முற்றத்தில் கிடக்



கும் பசுங்கொடி யென்றார். அவளது உடை கடல். சூரியன் கடலிற் றோன்றுதலின் 'பசுங்கொடி யுடுக்கை கிழிய' என்றும், அவன் இருளை நீக்குதலின் 'இருட் படலங் கிழித்தெழு சுடர்ப் பரிதி' என்றும் கூறினர். மான்றேரென்பது திருமுருகாற்றுப் படையில் வரும் 'செவ்வேற்சேய்' போல நின்றது. மொய் வைத்த-நெருங்கின. உளை-பிடரிமயிர். வாய்ச்செல்ல-வழியிற் செல்லுமாறு. முட்கோல் என்றது வேலுருப் போன்றவாய கொடிநுனிகளை. துகிற்கொடிகள் தடாதகைப் பிராட்டியாரது வெற்றிக் கொடிபோல மதிலிற் பொலிதல் கூறப்படுகின்றது. தடாதகைப் பிராட்டியாரது வெற்றிக் கொடி சேரனது சிலைக் கொடியும் சோழனது புலிக்கொடியும் தோற்று ஓட மீனொடு பொருந்தி, உயர்ந்த மேருமலையிற் பொலிகின்றது; துகிற் கொடிகள் வானவில்லும் சந்திரனும் தாழ்ந்தோட நக்ஷத்திரங்களை மணந்து மதிலிற் பொலிகின்றன. மஞ்சு-மேகம். வளாகம்-சூழ்ந்த இடம். வானவில் ஏனைய விற்கள் போன்று கணை வடிம்பு படாததாகலின் 'கணை வடிம்பு நக்காச் சிலை' என்றார்.

௪௭. மதுரை வயலில் நிலத்துக் கனியாகிய நெல்லுங் கரும்பும் விண்ணளவும் உயர்ந்து வளர்ந்து காமதேனுவும் ஐராவதமும் விண்ணே தமக்கு உணவு விளையும் வயலெனக் கருதி உணவு கொள்ளுமாறிருக்கின்றன என்பதாம். விண்புலமாதலின், வரால் குதி கொள்கிறது. விளைபுலத்துவரால் குதி கொள்ளும்போது கட்குடம் வறிதாமாறு கள்ளை நிறைய உண்ட, கரிய உடலையும் வளைந்த அரிவாள் பிடித்த கையையுமுடைய கடைஞர்களும் மின்னல் போன்ற கடைசியர்களும் அஞ்சிப் பெயர்வார்கள்; மீன் கூட்டம் வெருவும். அவ்வாறே இவ்விண் புலத்தில் வரால் குதி கொள்ளும்போது கடல் வறிதாமாறு நீரை நிறையவுண்ட, பிறையோடு தோன்றும் மேகமும் மின்னல்களும் அஞ்சிப் பெயர்கின்றன; நக்ஷத்திரங்கள் வெருவுகின்றன. இஃது உருவகம். கடைவாய் குதட்டுறல்-கடை வாயிலிட்டு அசையிடுதல்.

௫0. கடற்றானை-கடல்போற் பரந்த சேனை. வெங்-முதுகு. தராபதிகள்-அரசர்கள். தபனியம்-பொன். திசை முதல்வர்-திக்குப் பாலகர்கள். அவர்கள் முடியிலணிந்த மாலை கற்பகமலரானியன்றதாகலின் தபனியத்தொடு மயங்குவதாயிற்று. கொங்கு - வாசனை. கொங்கு ஒலிடுங் கோல்-மலரம்பு. குறும்பன்-சிற்றரசனாகிய மன்மதன். வெள்ளி மலையில் மன்மதனது மீனக்கொடியுலாவுத லென்றது தடாதகைப் பிராட்டியாரைக் கண்ட சிவபெருமான் அவ் வம்மையாரை மணக்க விரும்பினமைபற்றி யென்க. போராழி-ஆக்ஞா சக்கரம். அம்மையாரது ஆக்ஞா சக்கரம் சூரியனது தேர்ச் சக்கரம் அஞ்சிச் சக்கரவாளகிரியில் திரிந்து நாளுமாறு வருத்துகின்றது; அஃதாவது சூரியன் முதலியோர் உலகிற்குத் தீங்கு விளையாதபடி தத்தங் கதிகளிற் செல்லுமாறு பிராட்டியாரது திருவாணை பணிக்கின்றதாம். திரிபு+உலம்ப என்று பிரியாது திரி+புலம்ப என்று பிரித்துத் திரிந்து வருந்த என்றலுமாம்.

௫௧. பருஅரை-பருத்தஅடி. பலவு-பலாமரம். குடக்கனி-குடம் போன்ற பழம். நறை-தேன். படு நிறை கடம்-கள் நிறைந்த குடம். கடுப்ப - போல. முதல் - நெற்பயிரினடி. புலம் - வயல். எழவும் உகவும் பெருகு தடம் என்க. தடம் புணரியின் இருமடி பெருகுதற்குக் காரணம் பூமியின் கீழிருந்து பலாப்பழத்தின் றேன் உவட்டெழுதலும் பூமியின் மேலிருந்து வழிநறை கமுகின் விழுக்குலை நெக்கு உகுதலுமாம். அத்தடத்து நீர் குடித்துப் பிளிறிய களிற்றோடு எதிர்த்து முகில் ஆரவாரிக்க அம்முகிற்கு இருமடங்காக மதுரையில் முரசதிர்கின்ற தென்க. மும்முரசு-தியாகம், வீரம், மங்கலமென்னும் மூன்றையுங் குறிக்கும் முரசுகள். கவுரியர்-பாண்டியர்.

௫௨. பொதுஅற அடிமை செய்தல்-ஏனைத் தேவரினீக்கிச் சிறப்பால் வழிபாடு செய்தல். ‘பொது நீக்கித் தனை நினையவல்லார்க் கென்று, மருந்தனையை’ என்பது திருநேறித்தமிழ். அலர் வட்ட அணை-தாமரையாகிய வட்டமான ஆசனம். வட்டணையில் திரு என்க. தவளச் சததள முளரி-வெண்ணிறமுள்ள நூறுஇதழ்களையுடைய தாமரை. வனிதை - சரசுவதி. உமாதேவியார் தம் வலக்கண்ணினின்று இலக்குமியையும் இடக்கண்ணினின்று சரசுவதியையும் பிறப்பித்தனராதலின் ‘திருவை வனிதையை உதவு கடைக்கண் மடப்பிடி’ யென்றார். பதுமம்-பதுமநிதி. வளை-சங்கநிதி. இவ்விரண்டும் மீனாக்ஷியம்மையாரது முகத்தும் மிடற்றும் பொருந்தின என்க. நளின முகம்-இதமொழியோடு கூடிய முகம். மதியும் அமுதமும் நுதலிலும் சொல்லிலும் அமைந்தன என்க. தடாதகைப் பிராட்டியார் தமிழ்க் கடலிற்றோன்றிய திரிலக்குமி: இலக்குமியோடு பதுமநிதி சங்கநிதி சந்திரன் அமுதம் தோன்றியமை போலப் பிராட்டியாரோடு அவற்றையுவமைகளாகக் கொண்ட இவ்விவை தோன்றின என்க.

---

## வருகைப்பருவம்

௫௩. அம் சிலம்பு-அழகிய சிலம்பு. அரி-கிண்கிணியின் உள்ளிடுமணி. அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு. நுதல் அளகத்து இளம்பிறை எனப்பட்டது. உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாராய் அவதரித்த காலத்துத் தெய்வப் பெண்களும் பரிசனங்களாய் வந்தனரென்க. நாறுதல் - தோன்றுதல். நூபுரம்-சிலம்பு. ஓதிமம்-அன்னம், ‘நெஞ்சக் கஞ்சமும் கூடலுங் கொண்ட’ என்றார் ‘தில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளு முறைவான்’ என்னுந் திருக்கோவையாரிற் போல. கற்பக அடவியின்-கற்பகச் சோலைபோல.

௫௪. பைங்கோதை - இலக்குமி. கூந்தலம் பிடி-சரசுவதி. இவ்விருவரும் தாமரை வீட்டிற்புக அது கண்ட பிராட்டியாரும் அடியார் மனத்தாமரையிற் குடி கொண்டாரென்க. மாணிக்க வல்லி-இயல்புவிளி. மதிநுதற்றேகை - இரதி. சிலை-வில். ககன முகடு-வானமுகடு. கண்டுபடு கன்னல் - கற்கண்டு உண்டாகும் கரும்பு. கரும்பு காடுபோல உண்டாயிருத்தல் மன்மதன் அமர் செய்தற் கெடுத்த விற்போன்றிருந்த தென்க.

ருரு. முயல் - சந்திரனிடத்துள்ள களங்கம். சூல் அடிப் பலவு-காய்களோடு விளங்கிய அடிமரத்தையுடைய பலாமரம். முடவு - வளைவு. தாழை - தென்னை. முப்புடைக்கனி-தெங்கம் பழம். பாய்தல்-பாத்தல். படப்பை-மருதநிலம். அப்புறக்கடல்-பெரும்புறக் கடல். சூரம்பு-வரம்பு. பணை-வயல். கயல்மீன்கள் சிந்த மோதி அலைத்து இடித்து மடுத்துழக்கித் திசைதிசை யெடுத் தென முட்ட வெளிபோகின்றன என்க. எழ் பொழில்-மேலே முலகம்.

ருசு. வடம்படுதல் - மணிவடம் பொருந்துதல். கிம்புரி-யானை மருப்பிற்பூண். மருப்பின்-மருப்பினால். பொற்றூது-மகரந்தம், பொற்பொடியுமாம். சலராசி-கடல். தானநீர்-மதசலம். முடம்பட்டமதி - பிறைச்சந்திரன். உடுமீன் - நக்ஷத்திரம். உடுமீனாகிய முத்துக்களென்க. கடம்-மதம். விநாயகப் பெருமானது திருவிளையாடல்கள் இதிற்கூறப்பட்டமை காண்க.

ருஎ. ஊடனீக்கத்தில் உமாதேவியாரது சீறடி சிவபிரான் முடியிற் படுதலின் சீறடியிலூட்டிய செம்பஞ்சுக் குழம்பால் முடியிலுள்ள வெண்டிங்களும் கங்கையும் செக்கர்மதியும் சோணாதியும் போல்கின்றன வென்க. மரகதக் கொம்பு-விளி. மதுரையிலுள்ள கமுகு மரங்கள் ஆகாயம் வரை அளவி விசும்பில் ஐராவதமீது செல்லும் இந்திராணிக்குக் கவரி வீசுகின்றன வென்க.

ருஅ. சிறு முற்றில்-மிகச் சிறிய சுளகு. முற்றிலால் வாரிக் குவித்த மணிகள் ஆகாய வழியை அடைத்தலால் வழி தவறிச் செல்லும் சூரியனென்க. பரிசில் தோணி மிதப்பு என்பன ஓடத்தின் விசேடங்கள். நாற்கோட்டுக் கடக்குஞ்சரம்-நான்கு கொம்புகளையுடைய ஐராவதம். வைகையின் நீர்ப்பெருக்குக் கூறப்பட்டதென்க.

ருகூ. மலர்த் தோகை - இலக்குமி. மருதத் தச்சன்-மருத நிலமாகிய தச்சன். பழுத்தாறு - கிரம்பிய குலை. செந்நெற்றை மணிக்கொத்து விரித்தாலெனப் பொலிகின்றதென்க.



சுய. குழலின் நறை- குழலினது இயற்கைமணம். குழற்கு இயற்கைமண முண்டென்பது 'கொங்கு தேர்வாழ்க்கை' என்னும் நற்றிணைச் செய்யுளாலறியப்படும். புழை-துவாரம். மருங்குல் குடி வாங்க என்க. குடிவாங்குதல்-தள்ளாடுதல். முகரம்- ஒலி.

சுக. கடவுட் பழம்பாடல்-வேதசிவாகமங்கள். துறைத்தமிழ்-பலதுறைகளுடைய தமிழ். அகந்தை காரியவாகுபெயர். ஆணவம் எல்லாப்பெருங்கேட்டிற்கும் மூலமாயிருத்தலின் அதனைக் 'கிழங்கு' என்றார். ஓவியம்- சித்திரம். மதுகரம்-வண்டு.

சுஉ. மும்முதல்- பிரம விஷ்ணு ருத்திரர்கள். வித்தின்றி யாதும் விளையாதென்பதே யுண்மையாகவும் எண்மை நோக்கி வித்தின்றி விளைக்கும்' எனப்பட்டது. இதனைச் சிவஞானபாடியத்து இரண்டாஞ் சூத்திர வுரையிற் காண்க.

---

## அம்புலிப்பருவம்.

சுங. கிளியிவள்-கிளியாகிய இவள். கலாபேதம்-கலைப்பிரிவு. அஃதாவது கூறு. கலாநிதி - கலையின் தொகுதியுடையோன். பாண்டியராசவமிசம் சந்திரவமிசமாதலால் சந்திரனைத் 'தாதையார் மரபின் வழிமுதல்' என்றார்-இலக்குமியும் சந்திரனும் பாற்கடலினின்று பிறந்தார்களென்க. கொம்மென வம்மென-விரைவாக வருகஎன. அண்டு படுசீர்-கிடைக்கத்தக்கசிறப்பு. ஆணி-உரையாணி. பொன்வில்லி-மாமேருவாகிய வில்லையுடைய சிவபிரான்.

சுச. அமுதம் சந்திரனிடமிருந்து கிடைத்தமையின் 'தெய்வக்குழாம் பிழிந்தூற்றிக்குடித்துச்சுவைத்து' என்றார். இருகோள்-இராகு கேதுக்கள். சந்திரனைப்பற்றுவது இராகுவேயாயினும் இனம்பற்றிக்கேதுவு முடன் கூறப்பட்டது; அன்றி இருங்கோள் இருகோளென நின்றதாகக் கொண்டு பெரிய இராகுவாகிய கிரகமென்றலுமாம். கலைத்தோடு-கலைகளாகிய போர்வை. ஒருநாள் பார்க்கவுங் கடவதன்று. விநாயகசதுர்த்தியன்று சந்திரதரிசனம் செய்யலாகா தென்பதைக் குறிக்கின்றது. இதன் வாலாற்றைக்

கந்தபுராணச் சந்திர சாபப்படலத்தும், விநாயகபுராணத்துங் காண்க.

௬௫. எருவிட்டு இறைஞ்சுதல்- இளம்பெண்கள் தங்கட்கு விரைவில் மணமுடிப்பிக்குமாறு நிலாச்சோறு சமைத்துப்படைக்கும் பொழுது எருப்பிட்டிட்டுச் சந்திரனை வணங்குதல். சந்திரன் முதலில் அம்மையாரது நுதற் செவ்வியையும் பின்னர் முகத்திரு வழகையும் கவர்ந்தது மன்றி மாற்றவளாகிய கங்காதேவியோடுஞ் சிவபிரானது சடாமுடியில் வசித்தான்.

௬௬. சந்திரன் விசும்பிற்பொலிந்தால் இராகு பற்றுவன்: சூரியமண்டலம் புகின் ஒளிமழுங்குவன்: சிவபிரான்சடையிற் செல்லின் மாசுணங்கவருமென்றஞ்சுவன் அன்றி உமாதேவியாரால் உதையுண்பன். குடர்-குடல்.

௬௭. நினது நிலவு தட்பங்களும் பயிர்வளர்க்குந்தன்மையும் அம்மையாரின் திருவருள் கொண்டன்றி வேறில்லை யென்பது. பைங்கூழ்-பயிர்.

௬௮. உம்பர் அரசு - தேவேந்திரன். சூரிமா-ஐராவதம். செழியன்-நின்ற சீர் நெடு மாறநாயனார். இங்கேகூறப்பட்ட நான்கு வரலாறுகளையும் திருவிளையாடற்புராணத்திற்காண்க. மோசித்தல் நீக்குதல். குரவன்-குரு. இங்கே வியாழப்புத்தேள். மாமடிகள்-மாமனாகிய அடிகள். தக்கன். மதுரை பாவம் சாபம் வெப்பு கூன் நீக்கியதலமாதலின் நீ இங்குவரின் உனது பாவம் சாபம் நரைதிரை கூன்கள் நீங்கப்பெறுவாயென்றதாம்.

௬௯. கும்பம்-மத்தகம். போர்வையான்- சிவபிரான். குடிலம் வளைவு. கோடீரம்- சடை. குடிலகோடீரம்-வட்டமாக வளைத்துக் கட்டப்பட்டசடை. இருந்து கொண்டு என்பது கன்றிச் சிவந்திடச் செய்வதென்பதனோடு இயையும். வருடவும் உறுத்தவும் பதைபதைத்துக்கொப்புளிக்குஞ் சீறடிகள் என்க. மாலுடை விலங்கு-நாரசிங்கவடிவினனாகிய திருமால். அவன் புதல்வன்-மன்மதன். உமாதேவியாருக்குங் கருப்புவில்லும் பஞ்சபாணங்களும் உளவென்பதறிக.



௭௰. அளவளாய்-கலந்து. அமுது கலையொடுமிழத்தல்-அன்னவஸ்திரமில்லாமை யெனவும் அமுதத்தைக்கலையோடுமிழத்தலெனவும், மட்கலத்திடு புதுக்கூழ் சிறுமியர் துறையிலட்டுப் படைக்கும் நிலாச்சோறு எனவும், இரவு பூண்டு-யாசித்தலை மேற்கொண்டெனவும் இராத்திரியை மேற்கொண்டெனவும், களங்கம் பழியெனவும் கறையெனவும் பொருள்படும். ஒத்தவன் ஒருத்தன்-சூரியன். மிச்சில் இங்கே இருள். நள்ளிருள்-நடுராத்திரி.

௭௧. மழை-மேகம். கொந்தளம்-கூந்தல்; குந்தளமென்பது மது. வெள்கினவனாகிய நீ முன் வருதற் கொல்கியோ அன்றிப் பாம்புகள் வருத்து மென்றஞ்சியோ காலந்தாழ்த்தாயென்று உன்னைத் தப்புவித்தோம். மதுரைப்புரிசைத்துகிற்கொடிகள் மின்னற் கொடிகளைத்திரையும்படிசெய்து வானுலகத்துள்ள பெண்களைக் குழல்கோதி வெயர்வுதுடைத்து அழைக்கின்றன என்க. நகில்-கொங்கை. அலுவலிடல்-ஊக்கக்கூப்பிடுதல்

௭௨. சிவபிரான் சந்திரனை முடியிற் சூட்டுதற்குக்காரணங் கற்பித்தவாறு. மாடகம்-யாழில் முறுக்காணி. உகிர் வடிம்பு- நகத்தின் விளிம்பு. மாவம்-குங்குமமாம். இப்பருவத்தில் முதல் மூன்று செய்யுளில் சாமமும், அடுத்த மூன்று செய்யுளில் தானமும், அடுத்த இரண்டு செய்யுளில் பேதமும், பின் இரண்டு செய்யுளில் தண்டமும் கூறுதல் காண்க.

## அம்மானைப் பருவம்

௭௩. கடாம் ஊற்று களிறு என்க. கரைக்கும் கடாம்-சிந்தூர முதலியவற்றைக்கரைக்கும் மதநீர். ஓர் கலை மதி-கலைகளையுடைய ஒரு சந்திரன். புன்கண்-துன்பம். பந்தின் நிரை-பந்தின் வரிசை. பந்தரென்று பாடமாயின் வண்டு வண்டரொன்றாற்போல மொழியிறுதிப்போலியாகக் கொள்க. ஆகம்-சரீரம்.

௭௪. கொழுந்து படு சடை-கொழுந்துவிட்டு நீண்டு வளர்ந்த சடை. அம்மனைக்காயோடு கண்ணுஞ் செல்லுதல் திரளையிற் சுரும்பு

போலவும் மதிப்பிசைத்தாவிடும் மான் போலவுமிருந்ததென்க. என் அம்மனை-என் தாயே. எழ ஆடியருளென முடிக்க. மழகளிறு விநாயகக்கடவுள். குதட்டக் கரும்பேர்து மபிடேக வல்லி யென்க.

எரு. சேயொளி-சிவந்தநிறம். அம்மனை முத்தினாற்செய்யப் பட்டதாகலின் அது கையின் சார்பாற் சிவந்து காட்டிற்று. அவ் வாறே கடைக்கட்பார்வையால் கறுப்பாயும் முகநோக்கால் வெண் ணிறமாயும் காட்டிற்று. இவ்வாறு ஒரு பொருளிற் பல நிறஞ்சார் தல் ஓர் உயிரின் அறிவில் ரசோகுணமும் தமோகுணமும் சத்துவ குணமும் சார்தலொக்குமென்க. ரசோகுணம் சிவப்பு; தமோ குணம் கறுப்பு; சத்துவகுணம் வெண்மை. கதுவல் - பற்றுதல் குரவிருவர்-சிவபிரானும் உமாதேவியாரும். விழித்து உறங்குந் தொண்டர்-சாக்கிரத்தே அதீத்தைப்புரியுமெய்யன்பர்.

எசா. காந்தள் தளிர்க்கை-காந்தள் மலர் வடிவிற்கும் தளிர் மென்மைக்கும் உவமைகளாக வந்தன. கையினின்று முத்தா லியன்ற அம்மனை முன்னும் செம்மணியாலியன்ற அம்மனை பின்னு மாகச் செல்லுதல் சூரியன் தன்மனையாளாகிய தாமரையைச்சந்தி ரன் தோய்ந்து செல்வதைக்கண்டு புழுங்கிப்பின் செல்லுதல் போன் றிருந்ததென்க. எய்ப்ப ஆடியருளென முடிக்க. ஆரம்-முத்து. அலைபட்ட வைகை-அசையுந்தன்மையுடையவைகை.

எஎ. திரியா-திரிந்து. எறிய அவ்வம்மனைகள் அடுக்கடுக்காய் ஆகாயவெளியில் நிற்றல் என்க. கடுப்ப-போல. இமிரா-மொய்த்து. தாது-மகரந்தம். சேனு பராகம்-சேனை செல்லுதலாலுண்டாகும் தூசி. ஏக்கம்-கவலை.

எஅ. ஒட்டல்-சபதஞ்செய்தல். இட்ட அம்மனை- தவற விட்ட அம்மானை. ஆடி - சுழன்று. முடிதுளக்குதலாலே கங்கை நுரை பொங்குதல் அக்கங்கையும் அம்மனை யாடுவது போன்றி ருந்த தென்க. கங்கைக்கு அலை கைகளெனவும் நுரையெறிதலா லுண்டாகுந் துமிழி அம்மனையெனவும் கொள்ளப்படும். வெயரா- வெயர்த்து. அமரர் தச்சன்-விசுவகருமன். முன் மனம் புழுங்கிய விசுவகருமனும் பின் வியர்த்தானென்க. திசைக்களிறு-ஐராவத



மொழிந்த ஏனைய புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபமென்பன.

எகூ. குழல் வண்டு-குழலிடத்துள்ள வண்டு. விழி வண்டு விழியாகிய வண்டு. வித்துருமம்-பவளம். முத்தாற் செய்யப் பட்ட அம்மனை நின்கைத்தாமரை மணங் கமழுதலாலே குழலிடத் துள்ள வண்டுகள் (அம்மனைக்காய் மேலெழுந்து செல்லும்போது உடன் செல்லும்) நின் விழியாகிய வண்டு போல மயங்கி மயங் கவும், மணித்திரளாற் செய்யப்பட்ட அம்மனை நின் குழலிசைக்கு உருகித் துளி சிந்தவும், பவளத்தாற் செய்யப்பட்ட அம்மனை நின் விரலின் செந்நிறத்தைத் திருடுதற்காகப் போவது வருவதாகித் திரியவும் ஆடுக என்க.

அய. விளரி-யாழ். கொடி-விளரி. மேனியது-அது பகுதிப் பொருள் விகுதி. முத்தாற் செய்த அம்மனைக்காய்கள் தொடர்ந்து போதல் சிவபெருமானது மார்பிற் பிராட்டியார் சாத்தக்கொண்ட முத்துவடம் போன்றிருந்த தென்க. அப்பரிசே-அவ்வாறே. வான வில்லிற் பலவேறு நிறங்கள் உள்ளன வாதலின் அது பல நிற மணி களாற் செய்யப்பட்ட அம்மனைமே லெழுந்து தொடர்ந்து செல் வதற்கு உவமையாயிற்று.

அக. நகை முத்து-பல்லாகிய முத்து. கண்டவர் நிற்க-கண்ட வர் இருக்கவும். தம்மனம் ஒப்ப உரைப்பன-தம் மனத்திற் றோன் றியவாறு சொல்லுவன. தனி முதல் யாமென்பார்-யாமே பரம் என்று கூறும் பிரமவிஷ்ணுக்கள் 'பங்கயன் முகுந்தன் யாம்பர மென்றுன்னியே' என்பது கந்தபுராணம். அம்மனை-தாய். பிரம விஷ்ணுக்களைத் தன்பானின்று தோற்றுவித்தலிற் சிவபெருமான் 'அம்மனையாயவர்'. தனிமுதல்யா மென்பார் சிவபெருமானெனக் கொண்டு அப்பெருமானுக்கு முதலில் அன்னையாய்ப் பின் மனை வியுமானவளே என்றலும் பொருந்தும் : 'எம்பெருமான் இமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்' என் பது திருவாசகம், 'சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் ' சத்திதான்

சிவத்தை யீன்று, மூவர்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்' என்பது சிவஞானசித்தியார்.

௮௨. மரகதத்தாற் செய்த அம்மனை யொன்றும், நீலத்தாற் செய்த அம்மனை யொன்றும், முத்தினாற் செய்த அம்மனை யொன்று மாக மூன்று அம்மனைகள். இம் மூன்றினையும் முறையாக ஒன்றன் பின் ஒன்றாக விசும்பின்மேற் செல்ல வீசுதல் பிராட்டியார் தாம் வளர்த்த கிளியையும், குயிலையும், அன்னத்தையும் சிவபிரானிடம் சென்று தாம் கொண்ட காதலை யறிவிக்குமாறு விடுத்த தொக்கு மென்க. விடுப்ப ஆடுக என்று முடிக்க. அரசஅனம்-ராஜ ஹம்ஸம் என்னும் அன்னம்.

---

## நீராடற் பருவம்

௮௩. வளையாடு சங்கு-வளைவு பொருந்திய சங்கவளை. அரிக் கயல்-செவ்வரிபடர்ந்த கயல் போலுங்கண். கேசபாசம்-கூந்தலின் றொகுதி. சைவலம்-நீர்ப்பாசி. ஒலிடப் புனல் எழக் குடைந்தாடி யருள் என முடிக்க. கேளிர்கள்-சுற்றத்தார்கள். தளையாடுதல்-தளை செய்தல். தறை-உரல். அத்தவளக்களிறு - ஐராவதம். தழீஇக் கொண்டென முட்ட விட்டென்க. வைகை, நீர் மிகுதியால் யானைகளை யீர்த்து, மதுரையையடைந்த ஐராவதம் எதிர்கொள்ளுமாறு செய்கின்றது. தடந்துறை-விசாலமான நீராடுந்துறை. சிவபெருமான் தடாதகைப்பிராட்டியாரை மணந்தபின் பாண்டியநாட்டை யரசு செய்யுங்காலத்து அவ்வரச நிலைமைக்கேற்பக் கயற்கொடி எடுத்தாரென்க.

௮௪. கலித்தல்-ஒலித்தல். பவளம்-இங்கே வாயை யுணர்த்திற்று. கருங்குவளை - கண்ணையுணர்த்திற்று. அறல் - கருமணல், ஆவேசு - ஆவேசு. கலிப்ப வெளிறப் பூப்பச் சரிய ஆடுவ வென்க. எய்ப்ப - போல. எய்ப்ப ஆடியருளென்று முடிக்க. விரை - வாசனை. வேனில் - வைகாசி. நீராடும் காலத்துக் கைவளை



யொலித்தலையும், வாய் வெளுத்தலையும், கண் சிவத்தலையும், குழல் சரிதலையும் கூறினார்.

௮௫. பண் நாறுதல்-பண்கள் தோன்றுதல். யாமை-விளரி. திருமேனியானது பசுமையான ஒளியைப் பரப்புதலாலே என்க. களி-களிப்பு. மஞ்ஞை-மயில். உமாதேவியாரது திருமேனியின் பசுமை பரவுதலால் பவளக்கொடி பச்சைக்கொடியாயும் முத்து மரகதமாயும் அன்னம் மயிலாகவும் ஆகி எல்லாம் அம்மையாரது சொரூபமென்று வேதங்கூறும் பொருளை வெளியிடுகின்றன என்க. கள்-தேன். களபங் கத்தூரி கருப்பூரமிவை மூன்றுங் கரைத்தோடுதல் நிறத்தாற் சோணநதி யமுனைநதி கங்காநதி மூன்றும் கலத்தல் போன்றிருக்கின்ற தென்க. அளவளாய் என்பதிலுள்ள ஆய் உவம வுருபின் பொருள் படுகின்றது 'ஆள்வாரிலிமாடாவேனோ' என்னுந் திருவாசகத்தில் ஆவேனோ என்பது போல்வேனோ என்று பொருள் பட்டாற்போல.

௮௬. தூங்குதல் - அசைதல். குழல் இன் - கூந்தலையுடைய உனது. குங்குமம் தோயும் பனித்த உறை-குங்குமத்தோடு கலந்த குளிர்ந்த திவலை. சிவிறி-நீர்தூவுந்துருத்தி. ஆகாசமாகிய வடிவம். திகம்பரம்-திக்காகிய ஆடை. ஒரு சுழியிலே யானை யொன்று அகப்பட்டுச் சுழல அதன்புறத்தே மாசுணத் திரள் சுற்றியிர்க்கின்ற தென்க. மதித்தல்-கடைதல். மாலும்-போலும்.

௮௭. கலைக்கொடி-சரசுவதி. மடுத்தல்-அமிழ்தல். பதம்-பொழுது. சரசுவதி நீருள் மூழ்கி ஒளிக்குஞ் சமயத்தில் மீனாக்ஷியம்மையார் அவளென்று கருதி ஓர் அன்னப்பெடையை ஓடிப்பிடித்தல் தமது சிலம்பின் ஓசையையும் தமது மடநடையையும் அது கவர்ந்தமை தெரிந்து பின் றொடர்ந்தமை போலாக என்க. பரிபுரம்-சிலம்பு. கழங்கு - அம்மனை. கடவுள் வைகை - தெய்வத் தன்மையுடைய வைகை.

௮௮. இளம் பெண்கள் கூடங்கொண்டு நீந்தி விளையாடும் வழக்கம் கண்டு இவ்வாறு கூறினார். அற-மிகவும். சேந்த-சிவந்த. வண்டுகள் சுண்ணத்தின் வாசனை கருதி விசும்பின் எழுந்தன

வென்க. புகையூட்டிக் கதலிக் காய்களைப் பழுக்கச் செய்தல் வழக்காதலின் ' அகிற் புகையால் திரள் காய்க் கதலி பழுத்து ' என்றார். பொருநை பாண்டியநாட்டு நதியாகலின் பாண்டியனைப் ' பொருநைத் துறைவன் ' என்றார்.

௮௯. துறை முன்றில்-துறையின் முன்னுள்ள இடம். சரசுவதி பிராட்டியாரை நோக்கி அம்மே யிவ்விடம் எம்பெருமான் மண் சுமந்த இடமென்று கூறலும் பிராட்டியார் மனங் கசிந்து உருகிக் கண் சிவக்குமாறு ஆனந்த வெள்ளம் பொழிந்து நின்றாள். முன் வைகை வெள்ளம் பொழிந்து நின் கணவரை வேலையாளாக விடுத்தது. மறுபடியும் நீ அவர்க்கு இது காரணமாக வேலையிடுதல் தகாதன்றோ என்க.

௯௰. வண்டல் இடும் மண்-வண்டலாக இட்ட மண்ணினை. அம்மை-விளி. வெறி-வாசனை. எக்கர்-மேலேறச் செய்தல். பிட்டுப் பிதிர்வு நோக்கி 'மண்போற் பிட்' டென்றார். கோடீரம்-சடாபாரம். குங்குமச் சேற்றால் எழுந்த வைகையின் வெள்ளப் பெருக்கு இம் முறையும் இறைவர் வந்தாலன்றி அடைக்கப்படாதென் றெண்ணுமாறு வந்தது. ஆயினும் பிராட்டியார் குடையப் பெறின் அப் பெருக்கு மட்டுமன்றி அவ் வைகையின் மூலமாகிய கங்கைப் பெருக்கும் வற்று மென்பதாம். வற்றுதல் எங்ஙனமெனின், பிராட்டியார் நீர் குடைய வருங் காலத்து உடன் வந்த யானை முதலியன நீரைக் குடித்தல், உழக்குதல் முதலியன செய்தலானென்க. பொலன்குவடு-பொன்மயமான மேருமலைச் சிகரம்.

௯௧. சொற்கொடி-சரசுவதி. மலர்க்கொடி-இலக்குமி. சுந்தரி-இந்திராணி. விற்கொடி வடிவில் மார்பிற் றீட்டிய குங்குமம். கண்டு-காணப்பட்டு. நின்வடிவழகு வெளியே காணப்பட்டு என்க. ஐயன்-சிவபிரான். செய ஆடுக என முடிக்க. இற்கொடி-மனையாளாகிய கொடிபோன்ற இரதி. அவட்குங் கருப்புவில் உண்டென்பதறிக. தடாதகைப்பிராட்டியாரது புருவத்தைக் கண்டு இரதியின்



வில்லுடன் மன்மதனது கருப்பு வில்லும், வானவில்லும் பணிகின்றன என்பதாம்.

௯௨. கொள்ளை-மிகுதி. பிடிபோலவும், அன்னப் பெடைபோலவும், குயில்போலவும், பவளக்கொடிபோலவும் ஆடுக என்று முடிக்க. வரிப்புள்-வரிகளையுடைய வண்டு.

---

## ஊசற்பருவம்

௯௩. பிராட்டியார், பவளக்கால் நிறுத்தி மேலிட்ட வயிரவிட்டத்தில் தூங்கவிடப்பட்ட முத்துவடத்திற் பூட்டிய இரத்தினப் பலகை மீதிருந்து ஊசலாடுகின்றாளென்க. கால்-இங்கே கிரணம். அள்ளிக் கொள்ளுமாறு வழிந்து நிறைந்து என்க. செற்றல்-நிறைதல். எய்ப்ப ஆடியருளென்று முடிக்க. செல்வச் செருக்கர்கள்-திருவருட் செல்வத்தாலுண்டாகிய செருக்கினையுடைய அடியார்கள். பழைய பாடல்-வேதம்: ' கடவுட் பழம் பாடல் ' என முன்னுங் கூறப்பட்டது. மெய்யடியார்க்குச் செருக்குண்டாதலை ' இறுமாந்திருப்பன் கொலோ, ஈசன் பல்கணத் தெண்ணப் பட்டுச், சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங், கிறுமாந்திருப்பன் கொலோ ' என்னுந் திருவாக்கான் அறிக.

௯௪. அம்மையார் முத்துமாலையணிந்து முத்த வூசலின்மீதிருத்தல் நாமகள் தமது சொரூப மென்பதையும், சந்திரமண்டலத்து அமுதமாயிருந்து தாம் தோன்றுகின்றாரென்பதையும் குறிக்கின்றதென்க. புண்டரிகம் - வெண்டாமரை. விரிப்ப ஆடியருளென்க. புரிசையின் மாணிக்க மணி முகப்பில் மேகந் தவழுதல் சூரியன் மடியில் அவன் மகளாகிய யமுனை விளையாடுவது போன்றிருக்கின்றதென்க. யமனும் யமுனையும் சூரியனது பிள்ளைகள். ' பரிதி மார்பினிற் சமனொடு காளிந்தி பயிலும் ' என்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளானும் அதனை யறிக.

௯௫. உமாதேவியார் பொன்னூசல் மேலிருந்து எதிர் நின்ற அசோகினை உதைத்து ஆடுகின்றார். அசோகமரம் பெண்கள் காலா

ணுழைத்தவழிப் பூக்கு மாமாதலின் அம்மரத்தினின்று பூக்கள் உதிர்ந்தன. அவ்வாறு உதிர்தல் மன்மதன் உன் முன் சிவபிரான் வடிவ மறைந்து நிற்பதைத் தெரிந்து கணை தொடுத்த தொக்கு மென்க. இடம் நமக்கு இது-இதுவே நமக்குச் சமயம். எய்ப்ப ஆடியருளென்று முடிக்க. எழுநாத்தலை-அக்கினியில். 'அக்கினி யின் எழு நாக்களாவன இரணியை, கனகை, இரத்தை, கிருஷ்ணை, சுப்பிரபை, அதிரத்தை, வெகுரூபை என்பன.

கசு. திருநோக்கம் நெருப்பாதலின் பொன்னூசல் உருகியது. சிவபிரான் திருநோக்கால் பிராட்டியார் ஆடுகின்ற பொன்னூசல் உருகிற்று; பிராட்டியார் கடைக்கணோக்கத்தால் சிவபிரானது மனம் உருகிற்று. உருகியாடுகின்ற ஒன்று பிராட்டியாருக்கு ஊச லெனத் தெரிகின்றமையின் இப்பொழுது பிராட்டியாரது கடைக்கணோக்கத்தால் உருகி அசைந்தாடும் சிவபிரான் திருவுள ளமே அவருக்கு ஏற்ற பொன்னூசலென்பது விளங்குகின்றது. விடர்-வெடிப்பு. பிலம்-பாதாள உலகம்.

கஎ. பாடலாகிய அமுது இனிது ஒழுகும் திருப்பொன்னூ சற் பாடல்களைப் பாடி யென்க. பணுவல்-படத்தொகுதி. அம் மனை-தாய். அம்மனையாகிய நீ என்க. எய்ப்ப ஆடியருளென்று முடிக்க. இரவி யென்பதன் இகரம் விகாரத்தாற் றொக்கது. 'வாரி நீர் லவணம் போலும்' என்னும் சித்தியார்ப் பகுதிக்குச் சிவஞான சுவாமிகள் அருளிய வுரையைக் காண்க: வடமொழியி லுள்ளவாறு கூறப்பட்டதென்றலு மொன்று.

கஅ. பிராட்டியார் திக்கு விசயத்தில் கைலையை அணுகியவழி முதலில் சிவபிரானுக்குப் பிராட்டியாரது தோற் கோலத்தையுந் திருக்கோலத்தையுங் கண்டு கோபம் மூண்டது. பின்பு அக்கோபம் நீங்கி யொழியுமாறு காமக்கனலெழுந்தது. அக் கனலின் சிகை போன்றது எம்பிரானது செவ்வேணி என்க. பிராட்டியார்மீது கொண்ட காதலால் உள்ளம் உருகிற்று அதுபோல வில்லுமுரு கிற்று; காதல் கொண்டவர்க்குச் சந்திரனும் மணியோசையுந் துன்பமிகுவிக்கு மாதலால் 'தண்மதி முடித்ததும் விடைக்கு



மணிதரித்ததும் விருத்தமா' யின. கருங்களம்-கரியகழுத்து. செங் களம்-போர்க்களம். அலமர-சுழல.

ககூ. கலை-ஆண்பாற் பெயர். முசுக்கலை-ஆண் குரங்கு. வெருவி நீந்த உவட்டெழு கா என்க. கொம்பு கனியின் சுமை பொறுக்க லாற்று தென்பார் 'கொம்பு ஒடிபடத் தூங்கு கனி' யென்றார். கனி யின் குடம்-கனியாகிய குடம். குடங் கொண்டு நீர்தல் வழக்க மென்பது நீராடற்பருவத்து சு-வது செய்யுளாலு மறிக. தடங்கா வின்-பெரிய சோலையில். விசைந்து-விசை கொண்டு. மாக்கோடு பாய்தலினாலே சந்திரன் வயிறு கிழிந்த தென்க. வயிறு கிழிந்து அமுதம் அருவியாக விழுதல் திருமால் திரிவிக்கிரம அவதாரங் கொண்ட காலத்து அவரது கால்பாய அண்டகோளகை பிளந்து கங்கை பொழிந்தது போன்ற தென்க.

ா. மருங்குல்-இடை. இடையின் மென்மை பாரந் தாங் காமை நோக்கி வண்டுகள் கூந்தலினின்றும் எழுந்தன. மலர் மகள் - இலக்குமி. வலம்புரிக் கீற்று - சங்கரேகை. வாணி-விளி. அசதி யாடல்-நகையாடல். அவ்வாறவள் அசதியாடிய வழி உண் டாகிய நாணம் பிராட்டியாரது வணங்கா முடிக்கு வணக்கமுண் டாக்கியது. வழங்க ஆடியருளென முடிக்க. பில்குதல்-துளித் தல். ஐம்பால்-முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சையென் னும் ஐந்து பகுப்பாகிய மயிர் முடி: அவற்றுள் முடி உச்சியிலும் கொண்டை பக்கத்திலும் முடிக்கப்படும்: சுருள் பின்னே செருகப் படும்; குழல் சுருட்டி முடிக்கப்படும்; பனிச்சை பின்னிவிடப் படும். பெடையோடு சுரும்பர் கூதிர்க்கு உடைந்தெனப் புகை மடுத்துப் புல்கும் பணை யென்க.

ாக. கொள்-பெருமை. பிராட்டியார் ஊசலாடும்போது சிவ பிரான் பிராட்டியாரது முறுவலாய நிலவையுண்ணும் சக்கரவாகப் பறவையாகவும் கூந்தலைச் சுற்றும் வண்டாகவும் கையில் வீற்றிருக் கும் கிளியாகவும் அமர்ந்திருத்தல் எவ்வடிவுமாகின்ற அப்பிரானது தன்மையைத் தெரித்ததென நயம்பட வுரைத்தமை காண்க. புன லின் அருவி-புனலாகிய அருவி. பிடியை அஞ்சுதலாவது குங்கு

ம்சேறு நாறுதலான் வேறோர் பிடியைத் தோய்ந்து வந்ததெனக் கருதிப் பிடியூடுமேயென்றஞ்சுதல்.

௯௨. பொன் எழுதுபட்டு-பொற்சரிகையாற் சித்திரிக்கப்பட்ட பட்டாடை. உடைதாரம்-உடை விசேடம். ஞான ஆனந்தமாக் கடல் என்றது சிவபிரானை. குழை மகரம்-மகரக் குழை. வடிவு அழகுபூத்த - வடிவத்தில் அழகாக மலர்ந்த. பிராட்டியாரின் பாதாதி கேசவர்ணனை கூறப்படுதல் தெளிக.

## மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்
## அரும்பொருள்விளக்கம்

முற்றும்.

---

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

# மீனாக்ஷியம்மை குறம்
## அரும்பொருள் விளக்கம்

குறமாவது தொண்ணூற் றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. இது குறத்திப்பாட்டு என்றுங் கூறப்படும். இதனிலக்கணம் பன்னிரு பாட்டியலிலே

‘ இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே’

என்று கூறப்பட்டது.

இக்குறத்தின் வேறுபாடுடையது குறவஞ்சி யென்பது. குறவஞ்சி யென்பது இசைநா லுறுப்புக்கள் பயின்று வருவது. அதில் குறத்தி யிலக்கணமும் ஒரு பகுதியிற் கூறப்படும். அத்துடன் குறவன் சிங்கனிவர்களின் றொழிற் றிறங்களும் பலபடப் பாராட்டிக் கூறப்படும். அது குறவஞ்சி நாடகமென்றுங் கூறப்படும். அவ்வகை நாடகப் பிரபந்தங்களுட் சிறந்து விளங்குவது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருக்குற்றாலத் திருப்பதிக்கு அணித்தாய மேலகரத்து விளங்கிய சிறந்த கவியும் திருவாவடுதுறை யாதீனத்துப் பதினொருவது மகா சந்நிதானமா யெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகளின் வமிசத்து முன்னோருமாகிய **திரிகூட ராசப்பக் கவிராசரவர்கள்** இயற்றிய **குற்றாலக் குறவஞ்சியே** யாகும்.

இனிக் குறத்திற் கூறப்படும் பொருளாவது மக்கட் பெண்டிருள் ஒருத்தி கடவுட் டலைவனைக் கண்டு காமுற்ற பாடாண் பகுதியாகும். ஒரு பெண் சோமசுந்தரக் கடவுளைக் கண்டு காமுற்று அப் பெருமானது திருத்தோளைச் சேர்தல் தனக்குக் கிடைக்குமோ வென்று வருந்தி நிற்கும் பருவத்துக் குறத்தி யொருத்தி வந்து குறி சொல்லத் தொடங்கி இன்ன இன்ன குறிகள் நிகழ்கின்றன வாதலால் நீ கருதியவாறு தலைவனைக் கூடுதல் விரைவில் வாய்க்குமென்று கூறுவதே அதன் இலக்கணம். இதனை இக்குறத்தில் வரும் ௯, ௧௦, ௧௧, ௨௮, ௨௯ பாட்டுக்களா லறிக.

இக்குறத்தில் குறத்தி தன்மலைச் சிறப்புக் கூறுவதும் தன் குலப் பெருமை கூறுவதும் தன் மரபுத் தொழில் கூறுவதும் மனத்தைக் கவர்வனவாகும். அவள் தன் குறி தப்பாதென்பதற்குச் சான்றாக அவளுடைய பாட்டி, பெரிய தாய், தாய், சிறியதாய் என்னுமிவர்கள் கூறிய குறிகள் தப்பின்றிப் பலித்ததையும் தான் தடாதகைப் பிராட்டியாருக்குக் கூறிய குறி மெய்ப்பட நிகழ்ந்ததையும் கூறுகின்றாள்.

பன்னிரு பாட்டியலிற் கூறப்பட்ட அவ்விலக்கணம் இக்குறத்தில் இருபத்து நான்காவது செய்யுளில் ‘வருகால நிகழ்காலங் கழிகால மூன்று மொக்க வகுத்துப் பார்த்துத், தருகாலந் தெரிந்துரைப்ப தெளிதரிதன் றெங்கள்குறச் சாதிக் கம்மே’ என வருதல் காண்க.

இக்குறத்தில் குறி சொல்லக் குறத்தி செய்யச் சொல்லும் கிரியைகளனைத்தும் (குறத்தின் இருபத்தைந்தாவது செய்யுள் பார்க்க) தென்னாட்டில் இன்றும் நிகழ்கின்றன. குறி பார்க்கப் பெண்ணையவள் கைதருமாறு குறத்தி கேட்கும் முறை மிகவும் இரசிப்பது.

---



௧. அரசு இருக்குந் தென்னர் - அரசாட்சியைக் கொண்ட பாண்டியர்.

௪. கழல் அங்கன் - கழலுகின்ற எலும்புமாலையை யுடையவன்.

௬. அபராஞ்சி-ஓடவைத்த பொன்.

௭. ஆழி-மோதிரம்.

௧௧. கைக்குறியின்-கையிலுள்ள குறிகளை விட. குறிய சிறு மருங்குல்-மிகச் சிறிய இடை.

௧௨. கடம் அலைக்கும் வெம்மலையாம் கைம்மலை - மதநீரால் அலைக்கப்படுகின்ற கொடிய மலைபோன்ற யானை; இங்கே திக்கு யானைகள் குறிக்கப்பட்டன. அரவரசு - ஆதிசேடன். பரித்தல்-தாங்குதல். குலமலைகளிரண்டு - வடமலையும் மலயமலையும். தென்-அழகு. வடமலையினும் அழகு சிறந்து நிலவுவது மலயமென்பதாயிற்று.

௧௫. தென் அம் தமிழ்-தென்றிசையில் வழங்கு மழகிய தமிழ்.

௧௬. மரை - மானின் விசேடம். வெம்கவிகை - யாவரும் விரும்பும் குடை. ‘வெம்மை விருப்பம்’ என்பது தொல்காப்பியம்.

௧௭. செச்சைப் படலை - வெட்சிமாலை. கொச்சை இளமை குறித்து நின்றது.

௨௰. என் பிறகே வந்த கள்ளியென்றது குறவனது இரண்டாவது மனைவியை.

௨௧. இச்செய்யுளிற் பாண்டி நாட்டிற் பாடல் பெற்ற சிவதலங்கள் பதினான்கும் கூறப்படுதல் காண்க.

௨௪. தருகாலம் – பயன் விளைக்குங்காலம்.

௨௬. சிறங்கை யென்பது உள்ளங்கை கொண்ட அளவு.

௨௮. வர-வருக.

௨௯. திசை-திசை.

௩௨. நதிப்பதி-கடல். வைகையாறு கடலிற் சேராமைக்குப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் ‘தொடுத்த வறு மையும்பயனுந் தூக்கிவழங்குனர்போல, அடுத்தவயல் குள நிரப்பி யறம்பெருக்கி யவனியெலா, முடுத்தகட லொருவர்க்கு முத வாத வுவரியென, மடுத்தறியாப் புனல்வைகை’ யென்றார்.

௩௩. அன்பு ஆண்டு - அன்புகொண்டு. ‘வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்ற, ஞன்மாடக் கூடலிற் கல்வலிது, சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான், கச்சியிற் காக்கை கரிது’ என்பது ஒளவையார் பாடிய பாட்டு.

௩௫. வண்டு இசைக்கும் தார்-வண்டுகள் பாடுகின்ற பூமாலை.

௩௬. கனவட்டம் - பாண்டியரது குதிரை. இது மிக்க வேகத்தை யுடைமையின் சூரியனது தேர்க்குதிரை தன் தெய்வத் தன்மையை யிழந்து ‘மண்பரி’ யாயிற்றென்க.

௩௭. கைக்கயம்-ஒழுங்காகிய மேன்மை.

௪௰. கருமலைய - கருமயங்க.

௪௨. மொய்ம்பு-தோள். உருவ-உருவும்படி.

௪௪. மீனவர்கோன்-உக்கிரபாண்டியர்.

௪௮. இலை - இல்லை. குணமும் குறியுமில்லை யென்பார்-சிவ பெருமான்.

௫௰. பழியஞ்சி - பெயர்.

௫௧. திருமலைபூபதி-அக்காலத்து அரசு செலுத்திய திருமலை நாயகர் என்னும் அரசர்பிரான்.

## மீனாக்ஷியம்மைகுறம்

## அரும்பொருள் விளக்கம்

முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் றிருவடி வாழ்க

---

மீனாக்ஷியம்மை

# இரட்டைமணிமாலை

## அரும்பொருள் விளக்கம்

---

௧. பெற்று-பெறுதலால். பவனம் - நீர். தமக்குரிய இடம் நீராக இரார் யார் என்க. இதனால் திருமால் பெற்ற பேறும் அம் மையாரின் திருவருளா லென்பது குறிக்கப்பட்டது. பவனம் - அரண்மனையெனக் கொண்டு இவ்வுலகத்தில் தமக்குரிய இடம் அரண்மனையாகக் கொண்டு வாழாதார் யாரென்றலு மொன்று. இவ்வாறன்றிக் கண்ணருள் பெற்றார் பூமியிற் பிறவா ரென்றலும் பொருந்தும். இவ்வாறு மூன்று பொருள் கோடலால் இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் அம்மையாரருளாற் கிடைத்தல் பெறப்பட்டது.

௨. அம்மே நீ என் நெஞ்ச மணவறைக்குள் இராநின்றது முதலிய வாய்ப்பது என்றோ என்றவாறு. நன்றென் வன்னெஞ்ச மோ தன் மணவறையே என்ற பாடத்திற்கு இராநின்றது முதலி யன நல்லன; அவ்வாறாதற்கு என் வன்னெஞ்சமோ தன் மண வறை என்று பொருள்கொள்க. நன்று தனித்தனி சென்றியையும்.

௪. மதங்கன்-பாடகன் : இங்கே குறிக்கப்பட்டவர் பாணபத்திரர். அவரது அடியாரென்றது சோமசுந்தரக்கடவுளை. இச் செய்தியைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் 'பண்டரு விபஞ்சி பாண பத்திரனடிமை யென்றான்' என வருதலால் அறிக. கொடியார் - கொடிபோன்றவர் என்றும் கொடுமை யுடையோர் என்றும் இலைசொல் குணம் - கொடியார்க்கு இல்லை சொல்லோ குணம் எனவும் இருகூறாக்கின கொடியார்க்குச் சொல்லுங் குணமில்லை யென்றும், கொடிக்குக்குணம் இலை தாமா என்றும் பொருணயர் தருதல் காண்க.

௫. பணம்-பாம்பின் படம், திரவியம். அம்மை - விளி. கனதனம்-பெருங்கொங்கை, மிகுந்த பொருள்.

௬. கனம்-மேகம். கந்தரர்-கழுத்தையுடையவர். பனவன் - பிராமணச் சிறுவன் ; இங்கே தருமியாகிய ஆதி சைவச் சிறுவன். பனவனுக்காப் பாமாறிய வரலாற்றை திருவிளையாடற்புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி யளித்த படலத்திற் காண்க.

௭. நின்று-நிற்பதால். கான்-வாசனை. விளையாடுவது கடல் என முடிக்க. ஆறலைய ஆடும் கடல் என்க.

௮. தாமரையை வாமத்தமலரோடு முடித்தல் பைத்தியமன்று அறியாமையேயாம், அவர் மத்துஞ் சிலையுமொப்பக் கொண்டவராதலான் என்க. மந்தரமும் மேருவும் வேறு வேறாயினும் ஒன்றாகக் கூறுதல் சுவை சுமியம்.

௯. ஏழாய்-ஏழை என்பதன் விளி. தகுமே - தகும் எனவும் தகுமோ எனவும் பொருள்படும். சிற்றிலானுற் றகும், மகிழ்ந்தோரும் வாழா நின்றாயாதலிற் றகாது என்க. ஏழையாதலின் விளக்கேற்றியெனாள் என்பதாம். விளக்கு-தீபம், ஞானம்.

௰. கதி வைகை, பொய்கை பொற்றாமரை, மலை மலயம், கோயில் திருவாலவாயும் என் செஞ்சமு மென்க. வரைக்கும் மலை-வரையறுக்கின்றமலை. கனகன்வி - பெருங்கல்வி. கற்பகத்தார் - கற்



பகப்பூமாலை ; தேவர்களுமாம். கற்பை யகத்திலேயுடைய பெண்டிரென்றும் புலவரென்றும் பொருள் கோடலுமாம்.

௧௨. அவாய்க் கருவால் சொர்துமெலிர்தேற்கு என்க. ஆலவாய்-ஆலமரத்தினிடம். நின்றதொன்று - சிவம். தடக்கைக்கு நேர்பொரு வாலவாய் - விசாலமான துதிக்கைக்குச் சமானமாகிய வாலினை யுடையனவாகி.

௧௩. பொன்மலை - சிவபெருமான். சுவடு-குறி. சுவடு காயமும் ஆலம் வடுவுமாயமையிறும் அவை மணமே என்பதும் ஒரு பொருள்.

௧௪. துணிர்தது - பனியாதும் செல்லாதும் செலத்துணியாது மிருக்க மனர்துணிர்தமை.

௧௫. பூரவல்லி-சரசுவதி.

௧௬. நார்-பூத்தொடுக்கும் நார், அன்பு.

௧௭. புனைந்து ஆள் என்க. புனைந்து ஆளுதலாவது திருத்தியாட்கொள்ளுதல். சிலபூ-பிராட்டியின் அவயவங்கள். பத மூன்றும் முறையே ஒளி, திருவடி, பொருளென்னும் பொருளன.

௧௮. சொல் பிராட்டியார் வடிவும் பொருள் பிரானார் வடிவுமாதலின் இவ்வாறு கூறினார்.

௧௯. பொன் - இலக்குமி. கொண்டிருத்தல் - அடிமையாகக் கொண்டு வீற்றிருத்தல். அண்டர் - தேவர். அண்டர் தேங்காவில் தொண்டர்கள் வீற்றிருப்பத் தாம் மதுரையில் கடப்பம் பூங்காவில் வீற்றிருக்கும் எளிமையை வியர்தவாறு.

௨௰. கற்பூரவல்லி பொற்பூரவல்லி சொல் அன்றி கமலத்தனே சொல்-கர்ப்பூரவல்லியாகிய மீனாக்ஷியம்மையார் அழகிய சரசுவதியோ அன்றி இலக்குமியோ, புகுந்தகமும், அல்லி வெற்பு ஊரப்பிறந்தகமும் அது-புகுந்த இடமும் அடியாரது இதயத்தாமரை, அகவிதழ்போலும் உள்ளடி இமயமலையிலே தவழும்படியாகப்

பிறந்த இடமும் இமயமலையிற் பொய்கையிலுள்ள தாமரை : இங்ஙனமாகவும் மீட்டும் அன்பு அதிகரிக்கப் பாசத்தளையையுடைய எனது வன்னெஞ்சத்தாமரையில் ஐயனொடும் புகுந்துநின்ற காரணம் என்னை என்பதாம். புகுந்த, பிறந்த என்பனவற்றிலுள்ள அகரம் தொகுத்தல் விகாரம்.

## மீனாக்ஷியம்மை இரட்டைமணிமாலை

## அரும்பொருள் விளக்கம்

முற்றும்.

---

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

---

# மதுரைக்கலம்பகம்

## அரும்பொருள் விளக்கம்

---

கலம்பகமாவது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. இதனுள் முதலிற் கவி யுறுப்பாக மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் வெண்பாவுங் கலித்துறையும் கூறப்படும். பின்னர் மருட்பா ஆசிரியப்பா கலிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சித்துறை வஞ்சிவிருத்தம் முதலியன வரும். இப் பிரபந்தத்தில் புயவகுப்பு மதங்கு அம்மானை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களும் காலத்தால் மருவிய பிச்சியார் கொற்றியார் இடைச்சியார் வலைச்சியார் முதலியனவும் வரும். இஃது அந்தாதியாகச் செய்யப்படும் ; இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் மடக்குச் செய்யுளும் விரவி வரும்.

கலம்பகம் தெய்வ சம்பந்தமாகப் பாடுங்கால் நூறு செய்யுளுடையதாயும், அந்தணர் முதலிய நால்வர் சம்பந்தமாகப் பாடுங்கால் முறையே தொண்ணூறு எழுபது ஐம்பது முப்பது செய்யுளுடையதாயும் பாடப்படும்.

கலம்பகத்தின் இலக்கணத்தைப் பாட்டியல்களுட் கண்டு கொள்க.

## காப்பு

தடம்-மலைப்பக்கம். தடத்துப் பிளிறு எனக் கூட்டுக. விநாயகப்பெருமான் புலக்களிறுகள் ஓடுமாறு புந்தித் தடத்துப் பிளிறுகின்றமை கூறினார். தந்தை தமிழ் - தந்தையார்மீது பாடப்படும் இத் தமிழ்நூல். அரி - அன்பாகியமலர். அலர்தூய் என்பதும் பாடம்.

## நூல்

௧. சுரி-மடிப்பு. அசைஇ-உடுத்து. ஆழியாகிய ஆடைமடிப்பு உலையும்படி உடுத்து என்க. பணி-ஆதிசேடன். பைந்தொடி-பூமிதேவி. திருந்திழை-இலக்குமி. மனைக்கிழவன்-திருமால். குறங்கு-தொடை. தனக்கு-அபிடேகவல்லியாகிய மீனாக்ஷியம்மையாருக்கு. முதற் கற்பு என்றது கணவன் நலங்கருதி அவனாற் காட்டப்பட்ட கடவுளை வழிபடுதலெனக் கொள்க.

சிலபுள் என்பதிற் சில என்றது ஈண்டு இரண்டை யுணர்த்திற்று. வானேறுஞ் சிலபுள்-விண்ணிற் பறக்கும் கருடனும் அன்னமும். மனவட்டமிடுஞ் சுருதியென்றார் - வேதம் மனத்தாற் சிந்தித்துணர வேண்டுதலின். கனவட்டம் - பாண்டிய அரசனது குதிரையின் பெயர்.

இலதுநீ என்றது தருக்க நூலார் அபாவத்தைப் பொருளாகக் கொண்டமை பற்றி. இருமை-இம்மை மறுமை.

கங்கையைச் சடாபாரத்தின் உரோமக்காலி லடக்கிய பெருமானுக்கு அதன் கூறாகிய வையையின் பெருக்கினை யடைத்தல் எளிதே யாகவும், அப் பெருமான் மண் சுமந்த செயலானது இன்னதற் கென்று யாமறிய வாராத தாயிற் றென்க. பிட்டிரண்டனுள் முன்னது பெயர், பின்னது வினை. மொய்வளை-உமாதேவியார். வளை-வளையல். இங்கே குறிக்கப்பட்டது வளையல் விற்ற திருவிளையாடல். ஊன்-இங்கே உடம்பு. உயிரை மீனாகக் கருதி உடம்பை வலை யென்றார். உமாதேவியார் பரதவர் மகளாய்ப்



பிறந்து வளர அவரை மணத்தற்குச் சிவபெருமான் வலைஞனாய் வந்தமையின் 'ஒருத்தி விழி வலையிற் பட்டு' என்றார்.

எனவாங்கு-அசைச் சொல்.

பீர்-பசலை. சிவபெருமான் கொன்றையந் தார் தணந்து விடை நிறுத்தி விடநாகக் கலனகற்றி வேப்பந் தொடை முடித்துக் கயலெடுத்து மாணிக்கச் சுடர்ப் பூணேந்தினமையின் முன்கொண்ட அவை பீர்பூத்தும் மண்ணுண்டும் பெருமூச்செறிந்தும் இடப்பன வாயின. முடங்கு உளை-மடங்கிய பிடரி மயிர். மடங்கல்-சிங்கம். அசும்பு இருத்தல்-நெகிழ்ந்து தோன்றல். சின்மலரென்பதிலுள்ள சில என்பதற்கு முன் 'சில புள்' என்பதற்கு உரைத்தது காண்க. ஐம்புல வழக்கின் அருஞ்சுவை யறியாச் செம்பொருட் செல்வ-ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவையும் ஒழித்த செம்பொருளாகிய செல்வனே; ஐம்புல வுணர்ச்சிக்கு எட்டாத செல்வனே என்றுமாம். தொழும்பு - அடிமைத் தொழில். அம்மா-வியப்பிடைச் சொல். பொருட்டுப் பழிச்சுதும் என முடிக்க.

௨. இருள்-இங்கே விஷம். நான்று-பொருந்தியதால். தடம்-குளம், மலைப் பக்கமென இரு பொருளில் பயின்று வந்தது. திருமால் சக்கரம் பெறும்பொருட்டுக் கண் மலராகிய தாமரையைச் சாத்துதலின் குளமென்ற பொருளும் சிவபெருமானை அவர் வணங்கும்பொழுது முடியி லணிந்த துழாய் சிவபெருமான் திருவடியிற் பதிதலின் மலைப்பக்க மென்ற பொருளும் பொருந்துமாறு காண்க.

௩. தட முண்டகம்-குளத்தில் தோன்றுந் தாமரை. கண்டகம்-முள். தாளது-நாளத்தை யுடையது. அதனை நீக்கி என வருவித்துக் கொள்க. உண்டு-உட்கொண்டு. அகம் அகங்கொண்டு-மனம் செருக்குக் கொண்டு. உண்டிலை-உளதாத லில்லை. விண்ணோர் தேற என்க. கந்தர சுந்தர-தொகையுமாம்.

௪. மீனேறும் ஆனேறும் உயர்த்த சொக்கர் என்க. முல்லைக் கொடி விடுங் கொல்லைகளை யுடைய சிறந்த முல்லை நிலத்தை

யுடைய (திருமாலாகிய) வெண்மையும் பருமையுங் கொண்ட ஆனேறென்க. முடைத்தலை-முடைநாற்ற முள்ள பிரமகபாலம். கடைப்பலி-இழிந்த பிச்சை.

௫. தலைமகள் தலைமகனது பிரிவுபற்றி வருந்தும் வருத்தங் கண்டு செவிலித்தாய் கூறியது. மருந்து-தேவாமிருதம் போன்ற என் மகள். கூற்று-யமன். கொழுந்து ஒன்று தென்றல்-இளமை பொருந்திய தென்றல். என் மகளுக்குக் கூற்று தென்றல் பிறை கடலென்பன. ஊற்றொன்றுதல்-ஊற்றாகப் பெருகுதல். உயிர் ஒன்றிலை-உயிர் சிறிதுமில்லை. இதனால் தலைமகள் மரணவத்தை போலுந் துன்பம் உறுகின்றா ளென்றதாம். இது மக்கட் பெண் கடவுளைக் காமுற்ற பாடாண் பகுதி. இனி வருபவைகளும் இவ் வாறே காண்க.

௬. ஒருடம்பில் இடம் பங்கு இரண்டு. வெண்பொன் பசும் பொன் என்பவற்றைக் குன்றோடுங் கூட்டி வெள்ளிமலை மேருமலை யென்னு மிரு மலைகளு மல்லாமல் எனப் பொருள் கொள்க. மன்று-சபை. தலைவி தலைவன்பால் மிக்க காதலுடையவ ளானமை கண்ட தோழிக் கூற்று.

௭. குலம் கொண்ட-உயர் குலத்திற் பிறந்த. பலம்-பலன். செட்டு-வியாபாரம். பலித்தல்-பயன் பெறுதல். சோம சுந்தரக் கடவுள் வளையல் விற்கப் புறப்பட்ட காலத்துப் பெண்கள்பால் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கண்டா ளொருத்தி இவ்வாறு கூறினள்.

௮. பாண்டரங்கம்-சிவபெருமான் முப்புர மெரித்த காலத் தில் தேரினின் றாடிய கூத்து. மட்டு-வாசனை. நீபம்-கடம்பு. மென்மலர்த்தாள் பரவத் தானே தன்னைத் தருமென்க.

௯. கனி-கன்னி யென்பதன் இடைக் குறை. தனித்திருக் கும் தலைவியைச் சந்திரன் வருத்த லியல்பு; ஆனால் தலைவன் என் கண் வாயிலாகக் கருத்துட் புகுந்திருப்பவும் அவன் வருத்தல் தகா தெனச் சந்திரனைப் பழித்ததாயிற்று. மடக்கைமீ ரென்றது பாங்கியரை.



௰. இந்தா-இதனைப் பெற்றுக்கொள். நிலம் மேவு-இவ் விடத்தில் பொருந்தி யிரு. மந்த அநிலம்-தென்றற் காற்று. செவி லித் தாய் தலைமகள் பொருட்டு இரங்கிக் கூறியது.

௧௧. நீலவனம்-இங்கே கண்ணை யுணர்த்திற்று. வணங்குதல்-வளைதல். வலயம்-தோள் வளை; வாகு வலய மென்பது மிது. சிவபெருமானுக்குப் பாம்பு வாகுவலய மாதலின் 'வலயங் கொடு லோக மடங்கச் சுமந்தன' என்றார். அணங்கு-பேய். அணங் காகிய அவர் என்க. பேய்கள் பெருமானது வலிமையையும் அடு திறத்தையும் துதித்து ஆடுகின்றன என்க. துணங்கை-ஒருவகைக் கூத்து; அதுதான் இரண்டு கைகளையும் விலாப் பக்கத்தில் முடக்கி வைத்து ஆடும் கூத்து. உழுவை-புலி. மடங்கல்-நாரசிங்கமூர்த்தி. புகலியர் குரிசில்-திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். வெடி-கடுந்தொனி. கறுவுதல்-கோபங் கொள்ளுதல். நடந்த ஒரு பாணன்-ஏமநாதன். உறுதி-நிச்சயம். உந்தி-எழும்பி. செழியர்-இங்கே அரிமர்த்தன பாண்டியர். இளமதலை-குமாரக் கடவுள். இதில் சோமசுந்தரக் கடவுளது தோள் வருணிக்கப் பட்டமையால் இது புய வகுப்பாயிற்று.

௧௨. இஃது இயலிடங்கூறல்; தலைவன் பாங்கன் வினவத் தான் கண்ட வடிவுக்கு இயலுமிடமுங் கூறுகின்றானாதலின். என் வண்ணமும் மின் வண்ணமுமே இடை. என் வண்ணமென்றான் தன் தளர்ச்சி நோக்கி.

௧௩. இருவர்-பிரமவிஷ்ணுக்கள். விருதுகட்டுதல்-பிரதாபங் கூறுதல். அங்கம் வெட்டிய விவரத்தைத் திருவிளையாடற் புராணத் தில் அங்கம் வெட்டிய படலத்திற் காண்க. இவர் வென்றாராயின் அவருடம்பு இரு கூறா யிருப்பது ஏனென்பது வினா. காயம்-தழும்பு, சரீரம். மூன்று பெண்கள் கூடி வார்த்தையாடி யம்மானை யாடினார்களென் றறிக.

௧௪. என் மெல்லிய லிவட்கு அம்மா-மெல்லியலாகிய இவ ளுக்கு என்ன துன்பம் நேர்ந்தது என்றவாறு. மாதரீர்-தோழி யரை விளித்தது. தந்தை தாளெறிந்தார்-சண்டேச நாயனார்.

அவர் தவப்பயன் பெரிதாகியது அவர் கொன்றை மாலை பெறாத லால். செவிலித்தாய் தலைமகன் தலைமகனது மாலையை விரும்பி வருந்துதல் கண்டு இரங்கிக் கூறியது.

௧௫. மதங்கியார் என்றது இரண்டு கைகளிலும் இரண்டு வாள் பிடித்து வீசிச் சுழன்றாடும் இளம் பெண்ணை விரும்பின ஒருவன் தன் வேட்கை தோன்ற அப்பெண்ணிடம் கூறுவதென்ற இலக்கண முடையது. எறிவேல் என்றது கண்களை. சிலைத்தல்-ஒலித்தல். அலமர-சுழல.

௧௬. இது புறங்காட்டல்; தலைமகள் கலவியில் மெலிந்ததைத் தலைவன் அவட்குக் கூறுதலின். கும்ப மதயானை கொங்கையையும், தேர்ப்பரப்பு அல்குலையும், விற்படை புருவத்தையும், வாட்படை கண்களையும் குறித்தன. படைகொண்டு பொரவந்தநீ படையின்றி நின்ற எனக்குத் தோற்றமை பொருத்தமன் றென்றவாறு. காமப்போரினுக்கு யான் உடையாதபடி நீ யானை முதலியன கொண்டு என்னைக் காத்தவாறு நன்றென வியந்து கூறிய தென்றலு மொன்று. பொன்-உமாதேவியாரைக் குறித்தது; செல்வமுமாம். நிறம்-அழகு; மார்பு.

௧௭. உறைப்ப-வருந்த. பொறை-பொறுத்தல். நால்வாய்-தூங்குகின்ற வாய். வெள்ளானைக் கருள்சுரந்த செய்தியைத் திருவிளையாடற் புராணத்தில் வெள்ளானை சாபந் தீர்த்த படலத்திற் காண்க. ஓரானை யென்றது சோழவரசனால் ஏவி விடப்பட்ட யானையை. இதனை யானை யெய்த படலத்திற் காண்க. ஈரானை-இரண்டு கொங்கைகளை யுணர்த்திற்று. போர்-கலவியைக் குறித்தது. ஒரு கணை-மன்மத பாணங்களில் ஒன்றாகிய தாமரையை யுணர்த்திப் பின் அத் தாமரை போன்ற கையை யுணர்த்திற்று. ஆகவே ஒருகணை தொட்டு எய்திடு என்று கைகளைப் பிடித்துச் சேரும் என்று பாங்கி வரைந்து எய்துமாறு தலைவனை வற்புறுத்தியவாறாம்.

௧௮. எய்யாது-அறியாது. 'எய்யாமையே அறியாமையே' என்பது தொல்காப்பியம். ஒருவன்-மன்மதன். அனங்கனாதலால் எய்யாது என்று கூறினர். இளையாள்-இளமைப் பருவத்தளாகிய



இவள். புந்தி வையாதார்-அறிவிலே ஏற்றுக் கொள்ளாதவர்கள். மதியார்-அறிவுடையோர். மதித்திடுதல்-எண்ணி வந்து கூடுதல். மெய்யாத-மெய்யில்லாத. வீடாத-கெடாத. வீழார்-விரும்பாதார்: இங்கே முத்தர். செய்யாள்-இலக்குமி. மற்றும் சொல் நயங்களைக் கண்டு கொள்க. இது முன்னும் பின்னும் ஒக்கும். தலைமகள் மெலிவு நோக்கிய பாங்கி தலைவனை வந்து கூடுமாறு உணர்த்தியது.

௧௯. அலரின் நீள்சிலை-புட்பவில். இப் புஷ்ப வில்லுடைமையின் மன்மதன் புஷ்பதந்வா என்னும் பெயருடையன். இவ் வில் அவனுக்குரிய மூவகை விற்களுள் ஒன்று. இவ் வில்லை வடநூலார் காமதநுவென்றும் கூறுவர். சமர்-போர். விளைப்பதும் பலித்ததும் உணராரென்று முடிக்க. இது தலைவி கூறியது.

௨௰. இது தழையேற்பித்தல். தோழி கூறுதலின் 'என் வாட்கண்ணினாய்' என்றாள். கல்லானைக்குக் கரும்பிட்டதைக் கல்லானைக்குக் கரும்பருத்திய படலத்திற் காண்க. இத்தழை அஃதன் றென்றமையின் அதனினுஞ் சிறந்த தென்பது கூறியவாறு. தழை யென்றது மலர்களை யிடையிலே வைத்துத் தழையினாற் செய்யப்பட்டதோர் உடையை.

௨௧. தழைத்தல்-செழித்தல். கூடலார்-மதுரையிலுள்ளார். குழைத்தல் - மகிழச் செய்தல். கூடலார் - கூடுதலைச் செய்யார். இழைத்திடுங்கூடல் கூடல் பிழைத்திடும்-யான் இழைக்கின்ற கூடற் சுழி கூடுதலைத் தவறும். கூடற்சுழியாவது கடற்கரையிலே நின்று இரங்கிய தலைவி பிரிந்த தலைவன் வருவானோ வாரானோ என்று மணலிலே வட்டமாகச் சுழித்திட்ட சுழிகள். எண்ணிப் பார்த்த வழி இரட்டைப்பட்ட சுழிகள் வரின் தலைவர் வருவரென்பதும் ஒற்றைப்பட்ட சுழி வரின் அவர் வாராரென்பதும் தலைவி கருத்து. இதனை 'ஆழி திருத்திச் சுழிக்கணக்கோதி' என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையிலுங் காண்க. வேறு கூறுவாரு முளர். இது கூடலிழைத்தல்.

௨௨. இஃது இறைவரது அர்த்தநாரீச வடிவத்தை வியந்தது. ஆடல் கொண்டவர்-திருவிளையாடல்களைச் செய்தவர்;

ஆடல் - திருவிளையாடல். ஒரு பெண் வடிவும் கூடவும் ஒருடம்பிலே இலங்கும் அப்பிரானுடைய ஆடலே போலும் என்றவாறு.

௨௩. கொம்மை - பருமை. குவடு-இங்கே தனங்கள். கம்மக் கலன் கம்மியர் செய் தொழில் முற்றுப் பெற்ற காவணி; 'கம்மப்பல் கல' மென்பது சிந்தாமணி. அம்மென் மருங்கு-அழகிய மெல்லிய இடை.

௨௪. களியாவது கட் குடியர் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் கூறும் இலக்கண முடையது. கலம்-ஓளவு, மட்பாத்திரமுமாம். வெளிப்படைப் பொருளாவது குற்றமற்ற சான்றாண்மை யென்னுந் தொழிலையுடைய சான்றோர் நாளும் ஏறி முயன்றால் பல அறிவ மது உண்டு; அதன் நலத்தை உண்டவர்கள் அறிவார்கள். அதில் பல சாத்திரங்க ளெழுதுதற்குரிய ஓலையேடு உண்டு. அவ் வோலை வீட்டையுங் கொடுக்கும். எழுதாத மந்திரமாகிய கள் இலைய பாளையிலே யுண்டு என்பது. உட்பொருளாவது பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றையாளுந் தன்மையமைந்தவர்கள் நாளும் வழிபாடு செய்யின் மிகுந்த பயனுண்டு. அந்நலத்தை அநுபவித்தவர்கள் அறிவார்கள். பல சாத்திரங்களும் எழுதப்பட்ட சுவடிகள் உண்டு. முத்தியுங் கொடுக்க வல்லது. எழுதாக் கிளவியாகிய வேதமுமுண்டு. இங்கே குருமூர்த்தி யென்றது தக்ஷிணாமூர்த்தியை. இளம்பாளை-முருகக்கடவுள்.

௨௫. தலைவன் பிரிந்தமைபற்றி வருந்திய தலைவியின் தன்மையைத் தோழி தலைவனிடம் கூறியது. பதம்-நிலைமை; இத்தலைவியின் நிலை உனது நிலையேயாம்; எதனாலெனின் உண்பது நஞ்சம் உறக்கமில்லை வன்பழி கூடலே வாய்த்ததென்று மதனும். இம்மன்மதக்கும் பெருமானே மன்மதன் பலகோடி கணைகளைத் தொடுப்பது என்னை யென்றவாறு. பெருமானுக்கு உணவு நஞ்சு, ஒடுக்கமில்லை, வளவிய நகரம் மதுரை; இவளுக்கு உணவு நஞ்சாயிற்று. துஞ்சலில்லை, தலைவனைக் கூடியதால் இத் துன்பம் வாய்த்தது என்க. இவ்விடையாற் பொருள் கொள்க. என்பதனோடு - திருவிளையாடல் உணர்த்திற்று. 'எழுபது கோடியுறும்' 'கோடி தொகுத்தார்' என்னுந் திருக்குறளிற்போல.



௨௬. அம் புதர் அங்கம் - அழகிய தேவர்களுடைய உடம்பு. அம்புதாங்க மென்பதைத் தாங்க அம்பு என மாற்றுக: அலைகளையுடைய கங்காநதி யென்பது பொருள். மாயவர் ஆகம்-திருமாலின் உடம்பு. மாய எயிறு இறுத்தது வராகமே - மாயுமாறு மருப்பை ஒடித்தது பன்றியையே. அந்தணர்களாகிய பன்னசாலையில் வசிப்பவர்களுடைய ஆசீர்வாதம் என்க; அடுப்பது ஆசி அந்தணர் பல் நகர் என மாற்றிப் பொருந்தி யிருப்பது ஆசீர்வாதத்தைச் செய்தலையுடைய அந்தணர்களது பல வீடுகளில் என்றலுமாம்; பன்னகர் அந்தணரென்றலும் ஒன்று. பன்னக ராசி-பாம்பின் தொகுதி. ஐயர்கள் தம் பவனம் - தேவருலகம். கொள்வது ஐயர் கடம்ப வனத்தையே-தம்முடையதாகக் கொள்வது மதுரையையே.

௨௭. கடம்-மதநீர். கரைக்கும் - சொரியும், முழங்கும் என்றுமாம். வெற்பு - இங்கே யானை. யானையின்மேல் நின்றவர் என்க; யானைபோல நின்றவ ரென்பதுமாம். நெடுந்தகை நம்புயம் கூட்டம் கொடாவிடி லென்க. நாட்டு அம்புயம் என்றது மன்மதன் பூட்டுகின்ற தாமரை மலராகிய கணையை. மன்மதனது ஐந்து பாணங்களில் தாமரை நினைப்பையும், மா பசலையையும், அசோகு உணவு தவிட்டலையும், முல்லை மோகத்தையும், நீலம் கொல்லுதலையும் உண்டாக்குவன. இவற்றுள் நினைப்பை யுண்டாக்குந் தாமரையே எனக்கு நமனாயின் ஏனைய பாணங்கள் என்ன செய்யா என்றவாறு. இது பெருமான் யானைமேல்வரக் கண்டு காதல் கொண்டா ளொருத்தி அப்பெருமானை முன்னிலைப்படுத்திக் கூறியது.

௨௮. நம்பன் - விரும்பப்படுபவன். கால நஞ்சு - காலன் போன்ற நஞ்சு; காளகூட விஷமுமாம். பித்துண்டு நாம் தேவ ரென்பார்-மயக்கங்கொண்டு நாம் கடவுளென்று கூறும் பிறதேவர்கள். நஞ்சுண்டு காதோலை பாலித்த தயவாளர் என்க. காதோலை பாலித்தலாவது சுமங்கலையாயிருக்கச்செய்தல்; கணவனை யிழந்

தார் காதணி களைதல் வேண்டுமென்பது விதியாதலின். வண்டீர்-வண்டுகளே. ஒருத்தியை மணந்ததனால் தமது திருவுருவிற் பாதி கருமேனியாகியும் தோளும் மார்பும் வடுப்பட்டு மிருப்ப, எம்முடைய கண்மணிபோன்ற பெண்ணை மயலாக்கிச் சித்திரம்போலசைவற்றிருக்கச் செய்தல் தகாதென்பதாம். முன்னொருத்தியால் இத்துணை விளைந்தது இன்னும் யாது விளையுமோ என்பதும் குறிப்பித்தவாறு. எளியார் - அபலைகள். தலைமகள் வருத்தம் நோக்கிச் செவிலி வண்டுகளிடம் கூறியது.

௨௯. ஆவம் - அம்பறாத்தூணி: இங்கே பூங்கொத்தாகிய அம்பறாத்தூணி. சாவம்-வில். தூக்கில்-ஆராய்ந்தால். மேற்கூறிய நான்கனுள் ஒன்றுக்கேனும் யமன் சமமாகான்: இங்ஙனமாகவும் அவன் அவ்வினைத்துந் தாங்கிவரின் இவள் நிலைமை என்னாமென்றவாறு. ஓவம்-சித்திரம். உயிர் விற்றலாவது-மன்மத பாணத்தால் இவள் இறத்தற்குத்தான் காரணனாதல். பாவமே பாவம் - பாவமோ கருத்து. பழியஞ்சிய செய்தியைப் பழியஞ்சிய படலத்திற் காண்க. இது செவிலிகூற்று: பாங்கி கூற்றுமாம்.

௩௰. இது செவிலித்தாய் நீர்ப்பறவைகளைத் தூதுவிடுத்தது. பொருது - மோதி. இரங்குதல்-ஒலித்தல். கழி - உப்பங்கழி. கயல் வர - கயல் வருமளவும். பருவமாவது யௌவனபருவம். வல்லீரே-நீங்கள் வன்மையுடையீரா? மாட்டீரே யென்றுமாம்.

௩௧. ஈரித்த தென்றல்-குளிர்ந்த தென்றல். மும்மைப்பிணி-மூன்றுநோய். பழியஞ்சியார் - முன்னிலைப் படர்க்கை. இது தலைவி கூற்று: பாங்கி கூற்றுமாம்.

௩௨. பிச்சியார் என்பது சிவசின்னம் அணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிரை நோக்கித் தன்வேட்கையை வெளிப்படுத்தி ஓர் காமுகன் கூறு மிலக்கணமுடையது. கடை - வீட்டு வாயில். பிச்சன் என - சிவபெருமான் போல. உங்கட்குப் பிச்சியாரென்னும்பேர் நீங்கள் சிவபிரானைப் போலத் தவவேடமும் புண்டரம் அணிந்த முண்டமுமாய்த் தான்பதித்தாடிப் பிச்சைக்குச் செல்கின்றீர்; உங்களுடைய நோக்கமும் மூரலும் உயிரைக்



கொள்ளை கொள்தற்குத் தோன்றின வாகின்றன: கையிற் கபாலமுஞ் சூலமுங் கொள்கின்றீ ரென்னு மிக் காரணங்களால் வந்தது போலுமென்க. சிவபெருமானுடைய நோக்கம் மன்மத னுயிரையும் மூரல் முப்புரத்தவுண ருயிரையும் கொள்ளை கொண்டன. கபாலி-சிவபிரான்.

௩௩. இது தலைவி மன்றேறத் துணிதல். தலைவன் தலைவியாகிய இருவரும் களவிற் புணர்ந்து நீங்கியவழிப் பிரிவாற்றாமை மிகுந்த தலைவன் தன் பெருமை முதலியன அழிந்து தலைவியினுருவத்தையும் தன்பெயரையும் ஒருபடத்தி லெழுதிக்கொண்டு பனைமடலாற் செய்யப்பட்ட ஒரு குதிரையிலேறிப் பிறரால் இழுப்பித்து வீதி வீதியாகப் பலருங் கூடும் பொது விடங்களிற் செல்லுதல் தலைவன் மடலூர்ந்து மன்றேறுதலாம்; தலைவிக்கு அவ்வாறு பிரிவாற்றாமை மிகுந்தவழி மடலூர்தல் ஒழிந்த வினைய நிகழுமென்க. தாள் பெயர்த்தல்-கான்மாறி யாடுதல். இன்று நாளையில்-இந்நாளையில், இந்நாளில்; இன்று அல்லது நாளை யென்றுமாம்.

௩௪. களிறு - ஆண்பன்றி. 'வேழக்குரித்தே விதந்துகளிறெனல், கேழற் கண்ணுங் கடிவரையின்றே' என்பது தொல்காப்பியம். இருளி - பன்றி. இருளியின் - பன்றிவடிவத்தின். அணையும் அக்குருளை-தம்மையணைந்த பன்றிக்குட்டிகள். மணத்தல்-சேர்தல். அருளின் - அருளால். குழகர் - அழகர். இச் செய்தியைப் பன்றிக் குட்டிகளுக்கு முலைகொடுத்த படலத்திற் கண்டுகொள்க. இது உணர்ந்திலர் என்பதில் இது தொகுதியை யுணர்த்தியது. கங்குல் கருகியதும் கொங்கை பசலையால் வெளிறியதும் மதன் சிலகணை வழங்க அவைபோய் உருவிய புண்ணில் நிலவு அனல் கொளுத்தியதும் எமதுயிர் அரிதாகச் சிறிதிருந்ததும் குழகர் உணர்ந்திலர் கொலாம் என்க. பசும்புண் - புதியபுண். இது தலைவனைப் பிரிந்த தலைவிகூற்று.

௩௫. கொற்றியார் என்பது வைணவ சின்னம் அணிந்து பிச்சைக்குத் தெருவிலே வருகிற மகளிரைநோக்கித் தன் வேட்கையை வெளிப்படுத்தி ஓர் காமுகன் கூறு மிலக்கணமுடையது.

அருமையான பெயர்கள் எவையெனின் அர சிவ சங்கர என்னும் பெயர்களென்க. பெருநாமம் - பெரிய பட்டம். அவர்தம் கருநாமம் - அவர்களுடைய பிறப்பின்பெயர். நாமம் - அச்சமுமாம். பெற்றியார் - சோமசுந்தரக் கடவுள். ஒரு நாமம் என்றது பெண் என்று கூறும் ஒருபெயர் என்க. வியர்திங் குலகரிடும் பெயர் - பூங்குழல், துடியிடை முதலியனவாக வரும் பெயர்கள். வெள்ளைத் திருநாமம் - வெள்ளைமன்னு விடப்படும் நாமம். இமையோர் தரித்திடு நாமமு முனிவோர் தரித்திடு நாமமுங் கெட்டன என்க. தரித்திடுமென்பது மோனைநோக்கித் தெரித்திடு மென்றாயிற்று: சலம் செலமெனவும் கங்கை கெங்கை யெனவும் சயம் செயமெனவும் வருதல்போல. நாமம் - புகழ். இளையோர் தெரித்திடு நாமமென்பதும் பாடம்.

௩௭. வினைக் கள்ளத்திருக்கு ஒயில் - வினைக்குக் காரணமாகிய வஞ்சனையாகிய மாறுபாடு ஒழிந்தால்.

௩௮. உள் - மனம். புறம்பு - உடம்பு. நெக்குடைந்து வைற்றெழ என்க. குதிகொள்ளுதல் - பெருகுதல். தேறல் - தேனுகிய சிவபெருமான். குனிக்கின்றவாறு என்ன வியப்பு என்க. பத்திக் கொத்து அரும்ப விள்ளுங்கமலம்-அன்பர்களது உள்ளத் தாமரை.

௩௯. வெள்ளி அரங்கம் - வெள்ளியம்பலம். பிற ளள்ளியர் அகம் - எளிய பொருள்களை வெறுத்தோருடைய மனம். என்பு அரவு ஆமை - எலும்பு, பாம்பு ஆமையோடு. இவை மார்பிலணிந்த பல அணிகலன்களென்க. உணர்வு உருமையும் என்பரவாமையே-அப்பெருமான் அறியாதிருப்பதும் (பொருளாகக் கொள்ளாதிருப்பதும்) என் வழிபாடின்மையையே யாமென்க. இதனை 'வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின்பெருமையினுற் பொறுப்பவனே' என்ற திருவாசகத்தாலறிக. நான் நல்லுணர்வு பெறுதிருத்தலும் எனது வழிபாடின்மையாலா மென்று பொருள் கூறுவாருமுளர்: அரங்கு முதலிய எல்லாம் பெருமானுடையன வாகவும் [illegible] வேறுபடுதலே பொருத்தமாதென்க. மா கவின் மண்ணம் - [illegible] மா கவி யென்று மாற்றிப்பெருமையை யுடைய



சிறந்த செய்யுட்க ளென்று பொருள் கொள்க. கவியென்றது திருஞான சம்பந்த மூர்த்திகள் முதலிய பெரியாரது அருள் வாக்குகளை. மானம்-விமானம். மாக விமானம்-விண்ணளாவிய விமானம். நடமதில்-பெரிய மதில். வெள்ளிநடம் - வெள்ளிமலை. வெள்ளிமலையிற் சேர்தல் செயற்கை யென்க.

௪௰. கூடார்-பகைவர். புரம்-முப்புரம்: உடம்புமாம். இளமூரல்-புன் சிரிப்பு. பகைமை பூண்ட அசுரரையும் அன்பு பூண்ட பெண்ணையும் ஒரு தன்மையாக மூரலால் உயிருண்டல் தகாதென்றவாறு. நாடாளவைத்தாள்-தடாதகைப்பிராட்டியார். நகையாது-பரிகாசஞ்செய்யாதபடி. இனிப்போடு நகையாட - இனிதாகும்படி நகையாடுக. ஆட-அகரவீற்று வியங்கோள். இனிப்போது நகையாடலே என்பது பாடமாயின் கன்னி நாடென நாட்டை யாளுவதற்கு நீர் கொண்ட நகையாது? நீர் நகையாடல் அமையுமென்று பொருள் கொள்க. இது தலைவனை நோக்கிச் செவிலி கூறியது: பாங்கி கூறியதுமாம்.

௪௧. நகை-புன்சிரிப்பு. என்னை வருத்துதற்கு உம்முடைய புன்சிரிப்பொன்றே போதுமானது: இந்த நாகரிகமான பார்வை மிகையேயாம்: அதன் மேலும் மன்மதன் தன் தொழிலைத் தொடங்குதல் வீணுகும் என்றவாறு. தகையே - என்னை வருத்துதல் தகுதியோ. தலைவன் தலைவியை நோக்கிக் கூறியது; தலைவி கூற்றுமாம்.

௪௨. வில்வேள்-வில்லையுடைய மன்மதன். கணை வைத்த பசும்புண் கணையைச் செலுத்தியதால் உண்டாகிய பசம்புண். அப்புண் புண்ணுகவேயிருக்கின்றது வெண்ணிலாக்காரம் வைத்தும் ஆறவில்லை. உலகத்துப் புண்ணிற் காரம்வைத்தவழி அஃதாறுதல் இயல்பு; இஃதாறாமல் மிகுவதென்னே யென்றவாறு. இது தலைவி கூறியது.

௪௩. கடம் கால் பொருப்பு - மதநீரைச் சொரிகின்ற மலையாகிய யானை. கடம்பாடவி-கடம்பவனம்; அது மதுரை. உன்மத்தின் பெருவாழ்வோ-பைத்தியமாகிய பெரிய வாழ்வோ. உடற்று

தல்-வருத்துதல். பெண்வழியாவது கொன்றையர்தார் தாராமல் மரணம் போன்ற விரகதுன்பத்தை விளைத்தலாலுண்டாம் பழி. அடைந்தேம்விட-உம்மை விரும்பி யடைந்த எங்களுக்கல்லாமல். பிரமகத்தியினும் இது கொடியதென்பாள் 'இந்திரன் சாபமுற்றுந் தீர்ந்தாலுமிப்பெண்பழி போமோ' என்றாள். இது தலைவனை நோக்கித் தலைவி கூறியது.

௪௩. தானம்-மதநீர். வெள்ளையானையும் இந்திரனும் அடைந்த சாபம் நீக்கி வெண்ணிறமும் சிறந்த உருவமும் அளித்த கல்யாண சுந்தரரென்க. வான் இமிர்ந்திட-மேகங்கள் (அச்சத்தால்) முழங்க, வான் நிமிர்ந்திட எனப் பிரித்து மேலுகத்தை நெருங்க என்றலுமாம். நிமிர்ந்திடு கூடல்-உயர்ந்த மதுரை. இது பிரபந்தங்களுக்குரிய ஊரென்னுந் துறை.

௪௪. அஞ்சேல்-அஞ்சாதே. நெஞ்சு-விளி. அருட் சேவடி யென்க. செஞ்சேவடி-மிகச் சிவந்த அடி : அழகிய சிவந்த அடியுமாம். துஞ்சுதல்-ஓய்தல். அறல்-கருமணல். ஆடு அமர்க்கண்-அசைகின்ற கண் : போர்செய்தலையுடைய கண். கண் கருங்கடலை யொக்குமென்க. கண்கள் பொது நோக்கும் காதல் நோக்குமாகிய இரண்டுமுடையதால் விடமும் அமுதமுமுடைய கடலை யொக்குமென்றவாறு. தலைவியின் குறிப்பை அறிந்து தலைவன் நெஞ்சிற்குக் கூறும் இஃது உட்கோளெனும் துறை. தனியே பொழிலிலே தலைவியைக் கண்ட தலைவன் இவள் மாநுடப்பெண்ணோ தெய்வப் பெண்ணோ என ஐயுற்றான் அவளது கண்ணி னிமைப்பு நோக்கி மாநுடப்பெண்ணென்றே தெளிந்தானெனக்கொண்டு தெளிதலென்னுந் துறை யென்றலுமாம். ஒருவர் கருத்து ஒருவர் அறியாத ஒரு தலைக்காமமாதலின் இது கைக்கிளையாயிற்று.

௪௫. முத்தும் பொன்னும் முறையே கண்ணீரையும் பசலையையும் உணர்த்தின. கனி பவளத்து ஒண் முத்து அரும்பும் என் பெண் முத்துக்கே. முத்தம் உண்டு - கனித்த பவளம் போன்ற வாயில் ஒள்ளிய முத்துப் போன்ற பற்கள் தோன்றிய எனது சிறந்த பெண்ணுக்கோ பிரிவு உண்டாயது. முத்தம் - பிரிவு.



தலைவன் பிரிவால் தலைவி கண்ணீர் வார்த்தும் கொங்கை பசலை பூத்தும் வருந்துதல் கண்ட செவிலி கூறியது இச் செய்யுள். இமையத் தண் முத்து-பார்வதிதேவியார். தபனியம் - பொன். விரைந்து வந்தணைதல் வேண்டுமென்பது கருத்து.

௪௬. சீறியாழ்-சிறிய யாழ். அசுவதரன் கம்பளனென்னுமிரண்டு கந்தருவர்கள் சிவபெருமானது திருக்காதில் தோட்டு வடிவமாயிருந்தது இசைப் பணிவிடை செய்கின்றாரென்க. பொதும்பு-பொந்து. கூற்று-இங்கே யமன் போன்ற மன்மதனைக் குறித்து நின்றது. அளி குழைக்கும் சிலை-வண்டுகளாகிய நாண் பூட்டப்பட்டவில். கோணுதல் நீங்காத (எப்பொழுதும் வளைந்த) மேலே துய்யையுடைய பூங்கொத்து மலர்ந்த நுனியையும் குறிய கணுக்களையும் நெடிய இலைகளையுமுடைய சிலை யென்க. மன்மதனுயிரைக்குடித்த வுமக்கு யாழ் பாடலையும் மதிக்கொழுந்தினையும் ஆற்றி யிருத்தலாமல்லது என் மகட்காற்றியிருத்தலாகாது என்று செவிலி கூறியது இச்செய்யுள். சேண்-உயர்ச்சி. தசும்பு - கலசம். அசும்பிருத்தல் - நெகிழ்ந்திருத்தல். சிகரி-மலைபோன்ற மாடம். தகரம்-மயிர்ச்சாந்து. பசுங்கொடி-பெண்கள். தூண் அரு முழவுத் தோள்-தூண் ; வலிமைக்கும் முழவு வடிவுக்கும் தோள்கள் உவமையாயின. உம்பர்-தேவர். சுவல்-பிடரி. மாடங்கள் தேவருலகத்தினும் மேற்சென்று உயர்ந்து தோன்றுதலின் தேவர்கள் மாடங்களின் மீது மயில் அகவுதலைத் தோள் மடித்துச் சுவல் பிடித்து அண்ணாந்து பார்க்கின்றாரென்க. அணந்து-அண்ணாந்து. உணங்குதல்-வாடுதல். தோரணம்-மாடத்தின் வாயில். என் மகளாற்றாளாதலின் விரைந்து வந்தணைதல் வேண்டுமென்பது கருத்து.

௪௭. பொறி-புள்ளி. சுரும்பர்-வண்டு. செவ்வழி - ஓர் பண். தாமரை கைக்கும் இதழ்கள் பலகைக்கும் உவமையாயின. பாணற்குப் பலகையிட்டமை பலகையிட்ட படலத்திற் காண்க. படி-பிரதி. அஃதாவது ஒன்றன் வடிவுடைத்தாய் அதுவென்றே கருதப்படுவது. ஒள்நுதல் - மீனாக்ஷியம்மையார். எண்மர் - இந்திரன் முதலிய திசைகாப்பாளர். திசை - திசை. இரசதம் குயின்ற திருமா

மன்றகம் - வெள்ளியாற் செய்யப்பட்ட அழகிய பெரிய சபை. உகத்தல் - விரும்புதல். சிறந்தன்று - சிறந்தது. பொன்மலை விரும்பவும் அதனினும் சிறந்ததாக வெள்ளிமலையை விரும்பினார்க்கும் பொன்மன்றினும் இரசதமன்று சிறந்ததாயிற்றென்றவாறு. கருந்தாது - இரும்பு. வருந்தியும் - வருந்தியேனும். உடந்து வழங்கல் வேண்டுமென முடிக்க. இருவேறமைதலாவது ஆண்பெண் என்னுமிரண்டு வேறு வடிவமும் ஒருங்கமைந்திருத்தல். ஒண்பேருடுக்கையென்பதும் பாடம்.

சஅ. தேன் தந்த கொன்றையான் - தேனைச் சொரிகின்ற கொன்றை மாலையையுடைய சிவபெருமான். மா தந்த வேழம் - பெரிய மருப்புக்களையுடைய யானை. மீதந்த - மேலே கொண்டு தாங்குகின்ற. மாக விமானம்-விண்ணிழி விமானம். கூற்று-விளி. எமைவிட்டு ஏகு அவிமானம் உனக்கு என் - எம்மைவிட்டு நீங்கு, உனக்குச் செருக்கு ஏன். அவிமானம்-அபிமானம்.

சக. கடப்பங்கான் - கடம்பவனமாகிய மதுரை. சிவபெருமான் அன்பர் வேண்டினவெல்லாம் அருளுதலின் 'கற்பகம்' என்றார். கொடி - மீனாக்ஷியம்மையார். அப் பசுங் கொடியே ஐந்தரு சிந்தாமணி தேனுவாகிய இவற்றைப் பாலிக்குமென்க. ஐந்தரு - அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிஜாதம், மந்தாரமென்பன. இது நெஞ்சிற்கு அறிவுறுத்துதல்.

ருய. சிலைக்கரும்பு - மன்மதனது வில்லாகிய கரும்பு. கொலைக்கு அரும்பு ஒருவேம்பு கொல்லுதற்கே தோன்றின ஒரு வேம்பு. இவ்வாறன்றிச் சிலைக்கு அரும்பு கொலைக் கரும்பு ஒரு வேம்பு எனப் பிரித்து வில்லாதற்குப் பொருந்திய கொல்லையில் தோன்றும் கரும்பு ஒருவேம்பு என்றலுமாம். இப்பொருள் கொள்ளுங் கால் இடைக்குறை. தேம் பயம் அமுதிய தோள் [illegible] பார்வையின் தன்மை [illegible] என்க. [illegible]

ருக. [illegible] தோழி [illegible] கேள்வி [illegible]



தொலைவு. ஏன்க. [illegible] : இங்கே [illegible]. இது செவிலி கூற்று [illegible]

ருஉ. ஒரு பெண்ணுக்குச் சடையையும் [illegible] இடப்பாகத்தையும் கொடுத்த நீ [illegible] புயத்தை வழங்காதிருத்தல் பொதுவின்று [illegible] செவிலித்தாய் கூறுகின்றாள். கோமளம் - [illegible] மடங்குகின்ற நீர். எமர்போலென்பது [illegible] என்றும் [illegible] பெண்கள்போல என்று [illegible] தோரணம் - கோபுரவாயில். குளிகை - மேன்மாடம். [illegible] நிரம்பா நிலா - மூன்றாம்பிறைச் சந்திரன். [illegible] விரைவில் நல்ல கணவன் கிடைத்தல் வேண்டுமென்று [illegible] தொழுதல் பண்டைவழக்கு. கைக்கமலங்கள் முகிழ்த்த [illegible] கைகுவித்து வணங்குதல். சந்திரன் தோன்றிய வழிக் [illegible] குவிதல் இயல்பாமென்று கூறும் சொன்னயமும் காண்க. [illegible] இவ்வாறே வரும் சொன்னயம் அறிக.

ருங. பிக்ஷாடனக் கோலங்கண்டு காமுற்றாள் [illegible] செய்யுள். குழலாய் - காமுற்றாள் தோழியை விளித்தல்; [illegible] டனர் காமுற்றாளை விளித்ததுமாம். அதில்-பலகையைப் [illegible] பதும காரும் பலிக்கலம்-பிரமனுடைய கபாலம். [illegible] மாலின் குருதி. பலி-பிச்சை. பூவை-நாகணவாய்ப் பறவை [illegible] காலத்தார் மைனா என்பர்; இங்கே உமாதேவியாரைக் குறித்தது.

ருச. அங்கயற்கண் - மீனாக்ஷியம்மையார்: இஃது அன்மொழித் தொகை. 'கிளியே, நீ முன்னெல்லாம் புழுகு செய்த் [illegible] முதலாகத் தலைவர் பெயரைப் பலமுறை கூறிப் பழகினவே [illegible] பயனாக நீ இப்பொழுது தலைவர்பாற் சென்று என் [illegible] கூறி வா' எனத் தலைவி கிளியைத் தூதாக விடுத்தது. பயன் தேர்ந்து வா என்பதற்குத் தலைவர் என்மாட்டு அன்புடையரா என்பதைத் தெரிந்து வா என்றலுமாம்.

ருரு. சோமசுந்தரப்பெருமான் உலாப்போதற்கு வாயிலை [illegible] அங்குவந்த ஒரு பெண் மீனாக்ஷியம்மையார் இடப்பா

லமர்ந்திருப்பதுகண்டு தனக்கும் அவ்வித வாழ்வு வேண்டுமென்று விரும்பினன். அதனை யறிந்த அவளது தோழி இவ்வாறு விரும்பிய இவள் கருத்து முற்றுதாயின் பழியஞ்சிய பெருமாலுக்கு வீணே ஒரு பெண்பழி வருமே என்று வருந்திக் கூறினள். கொடியிடமாப் போந்தகுறை என்பது உமாதேவியார் இடப்பக்கத்தில் வீற்றிருந்தகுறை எனவும் காக்கை இடப்புறமாக வந்ததனுலாகிய தோஷமெனவும் பொருள்படும்.

௩௫. மாலைக்காலங்கண்ட தலைவி வருந்திக் கூறியது இச் செய்யுள். வெண்தளவுக் குறுமுகை-வெண்மையான முல்லையின் சிறிய அரும்புகள். மணம் துவக்கும் காலம்-வாசனை வீசத் தொடங்குங் காலம். கொழுநர் - கணவர். மணந்து உவக்கும் - சேர்ந்து மகிழும். எமர்-எம்மவர்கள். உருத்து-சினந்து. உருவிலி-மன்மதன். உருவில்லாத மன்மதனும் சிலைதாங்கி உருவோடு வெளிப்படுங் காலமென்க. பெரு மதியின் உகப்பு - பெரிய அறிவின் மகிழ்ச்சி. அடரும்-அழிக்கும். உயிர் உகப்படரும்-உயிர் கெடுமாறு உலாவும். அகன் திரியும்- மனம் மாறுபடும். வரை அகன்று இரியும் காலம்-வரையின் அகன்று சென்ற காலம். அகன்று சென்ற காலம் துவக்கும் காலம் முதலாகக் கூறப்பட்டது.

௩௬. அன்று நம்மேற்பட்டது பெம்மான் மேற்பட்ட பிரம்படி. இன்று இந்த எனது மேனி காம நோய்க்கு வலி கெட்டதால் அப்பெருமானது திருமேனிக்கும் ஏதேனும் தீங்கு உண்டாயிருக்குமோ எனத் தலைவி தோழிக்குக் கூறினள். உண்டாங்கொல் என்றல் உண்டாயின் வந்து நம்மை அணைந்திருப்பான்றே என்பதைக் குறிப்பதாகும்.

௩௭. சித்து என்பது இரசவாதிகள் தம் பெருமையை ஒருவனிடத்துக் கூறும் இலக்கணத்தை யுடையது. வெம்முலை-மீனுக்ஷியம்மையார். கரும்பு கல்லானைக்கிடுஞ் சித்தர்-சோமசுந்தரப்பெருமான். இவ்வரலாற்றைக் கல்லானைக்குக் கரும்பருத்திய படலத்திற் காண்க. செங்கல் என்பது மண்ணை நீர்விட்டுக் குழைத்துக் கட்டளையால் அறுத்தவழி உண்டாவது எனவும் செவ்விய மகா



மேரு எனவும், வறும்பாழ் என்பது நகரப்படும் பொருளில்லாமை எனவும் சிதாகாயமெனவும், எருத்துக்கொட்டில் பொன் வேய்ந்திடச் செய்தல் என்பது மாட்டுக்கொட்டிலைப் பொன்னால் மூடும்படி செய்தலெனவும், (சிவபிரானது எருதாகிய) திருமாலுக்குப் பொருந்திய மனைவி பொன் என்னும் பெயர் புனையச் செய்தலெனவும், அருந்தனம் நமக்கோ தனமென்பது ஓகோ நமக்கு இச் செல்வம் ஓரரிய செல்வமா எனவும், நமக்கு அரியசெல்வம் சோறேயெனவும், ஆடகம் பொன் எனவும் நடிக்குமிடமெனவும், பொருள்படும். அப்பா என்பது சித்தர்கள் வழங்கும் சொல்விழுக்காடு.

௩௮. ஐய-அழகிய. என்பு அணி - எலும்புமாலை. அன்பு அணிய - அன்பு பொருந்த. என் பணி - என்னுடைய தொண்டு. வெண்பலி-வெண்மையான திருநீறு. எண்பலி-இகழ்த்தக்கபிச்சை. செம்மலை-சிவந்த பொன்மலையாகிய மேரு. செம்மல் - திருமகனாகிய முருகக்கடவுள். வாய்ந்தவள் அம்பதி - பெற்ற உமாதேவியாரது அழகிய கணவர். எந்தி அணைப்பதும் என்பதும் பாடம்.

௩௯. ஏடு - இதழ். புண்டரிகத்து இளமான் - நாமகள். முதுபாடலாகிய மறை யென்க. இளமான் மறையோடு முத்தமிழும்பாட அதனுற் பெருமை பொருந்திய மதுரை என்க. பாடா-பாடி. ஆடல்செயும் பெருமான்-கூத்தாடும் பெருமான். சிறுமான்-சிறுபெண். எம்மனையும் - எந்த வீட்டையும்: இது தோழிகள் வீட்டைக் குறித்தது. தண்டலை-சோலை, வண்டல்-விளையாட்டு. மஞ்சனம்-நீராடுதல். அஞ்சனம்-கண்ணுக்கிடும் மை. அயிலான்-உண்ணுள். இது தலைமகள் வருத்தங்கண்ட செவிலிக்கூற்று.

௪௰. இயம்-வாச்சியம். துவைத்தல்-ஒலித்தல். கன்னிநாடு - அழிவில்லாத பாண்டியநாடு. மின் இவள் - மின்னல் போன்ற இப் பெண். முயக்கு - சேர்க்கை. வெறுக்கை-செல்வம். நோன்-பெருமை. குமரி-அழியாமை. உத்தமவிலக்கணமுடைய பெண்ணை மணந்தால் அளவில்லாத செல்வம் பெருகுமென்பது நூற்றுணிபு. வெறுக்கைக்கு ஏதுவாகிய முயக்கை வெறுக்கை என்றூர்: இஃது உபசாரம். இது செவிலி கூறியது; பாங்கி கூறியதுமாம்.

கக. தலைவன் கார்காலத்து மீண்டு வருவதாகத் தலைவியிடம் கூறி வினைவயிற்பிரிந்து வினைமுடித்து மீளுங்கால் தனக்கு முன்னாக மதுரையை நோக்கிச் செல்லும் முகில்களைக்கண்டு தலைவி இவற்றைப் பார்த்து வருந்துவாளே யென வுட்கொண்டு அம்முகில்களை நோக்கிக் கூறியது இச்செய்யுள். தேளார் - பகைவர். வில் நாரி - வில்லின் நாணாகிய ஆதிசேடன். அந்நாரி தோளில் தோய்தல் அம்பெய்ய நாணியை இழுத்துப்பிடிக்கும் போதாகும். வாளா - பயனின்றி. மின்னும் - மின்போன்ற தலைவியும். தாளாண்மை - நல்ல முயற்சி. மேகங்கள் தளைப்பட்டமையாவது உக்கிரகுமார பாண்டியரால் புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி யென்னும் நான்கு மேகங்களும் சிறையிடப்பட்டமை. இதனைத் திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்திற் காண்க.

கஉ. இடைச்சியாரென்பது தெருவில் தயிர்விற்கும் இடைச்சியைக் கண்டு வேட்கை கொண்ட காமுகனொருவன் தன் விருப்பத்தைப் புலப்படுத்திக் கூறும்இலக்கணமுடையது. காமர் மெய் கறுத்தலாவது அழகிய தமது திருமேனியில் இடப்பாதி கறுத்துத் தோன்றுதல்: அன்றி மன்மதன் உடலைச் சினந்தெரித்தலுமாம். சிற்றிடைச்சி-சிறிய இடையை யுடையவள். பேர் இடைச்சி-பெரிய இடைக்குலத்திற் பிறந்த பெண். தொண்டை - கொவ்வைக்கனி. வாய் அமுது-அதரரசம். தோய்தல் - கூடுதல். இது பாலை அழுதிட்டுக் கடையுங்களெனவும் பொருள்தருதல் காண்க. வாளா - சும்மா. அகம் - மனம். மத்து - மயக்கம். மதித்தல் - கலக்குதல். இது தயிரில்லா என் வீட்டில் வன் மத்தையிட்டுக் கடைகின்றீர்களெனவும் பொருள் தருதல் காண்க.

கங. சந்திரனாலும் தென்றலினாலும் தனக்கு மிகும் வருத்தத்தைப் பொறாது தலைவி இரங்கிக் கூறியது. காமதி - குளிர்ந்த சந்திரன். இன்று-இன்றி. மதன் கோரமது இக்கு - மன்மதனது அச்சந்தரும் கரும்புவில். கொடுங்கோல்-கொடிய மலரம்புகள். மதிக்கும் இரண்டனுள் முன்னது வரையறுத்துச் செலுத்தும் என்றும் பின்னது அடையும் என்றும் பொருள்படும். மன்மதனது கொடையும் தேருமாய் என்னை வருத்தும் சந்திரனையும் தென்றலையும் அடக்காமல் அவனது வில்லையும் அம்புகளையும் அவற்றின் நிலைமை தீர அடக்கிய இவரது செங்கோன்மைப்புகழ் யாது பயனுடைத்தென்றைத் தலைவி இரங்கிக் கூறினாள். கோரமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

கச. திருபர் கூடல் - சோமசுந்தரக் கடவுளுடைய மதுரை. நெஞ்சிரே-மனம் வைத்தவர்களே: அஃதாவது பற்றுடையவர்களே என்றவாறு. என் ஆவி அருவம் என்பது என் (அதன்) உருவமும் பெண் உருக் கொல் ஆம் - என்னுடைய உயிரை அருவமென்று கூறுவது என்னை? எனது உயிரின் வடிவமும் பெண் வடிவமாம். தலைவன் தான் கலந்த பெண்ணினையே தன்னுயிராகக் கருதிக் கூறலின் இது நலம் பாராட்டல். நெஞ்சிரே என்பது நெஞ்சினை விளித்ததுமாம். இனி சோமசுந்தரப் பெருமானைக் காதலித்த பெண்களை நோக்கி ஒருத்தி கூறியதாகவும் இச் செய்யுட்குப் பொருள் கொள்ளுதல் கூடும். அஃதாமாறு:—திருபர் கூடலின் நெஞ்சிரே - சோமசுந்தரப் பெருமான் வந்து கூடுதலின் மனங்கொண்ட பெண்களே, உருவமும் பெண்ணுருக்கொலாம் - அவரது எடுத்த வடிவமும் சத்தி வடிவமாம், என் ஆவி அருவ மென்பது-தன் உயிர் அவரது சொருப வடிவம் அருவமென்று கூறுவது, இவ்வாறுயின் நீவிர் அப்பெருமானைக் கூடுவ தெவ்வாறு என்பதாம்.

கரு. ஆஆ - இரக்கக் குறிப்பு. தென்னவர்கோன் - பாண்டியன். அன்றணி சாந்தம்-அன்று திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் பூசிய திருநீறு. நீவுதல்-தடவுதல். காம அனலம்-காமத்தீ. வில்லி-மன்மதன். தனுவும் கூனிமிராது என்றது சிலேடை. மூவா-மூத்தலில்லாத. நீ திருநீற்றை என்மேற் பூசுகின்றாய். முன் இங்கே ஆளுடைய பிள்ளையார் திருநீறு பூசியதும் பாண்டிய வரசனுடைய சுரநோய் நின்றது: அவனது உடம்பும் கூனிமிர்ந்தது. ஆனால் எனக்கோ திருநீறு பூசியும் காமச்சுரம் நிற்கவில்லை: மன்மதனது வில்லும் வளைந்தவாறே (நாணேறிட்டவாறே) யிருக்கின்றது. ஆத

வின் இது மதுரையம்பதியன்றோ எனத் தலைவி தோழியை நோக்கி வருத்தமிகுதியாற் கூறுகின்றான்.

௬௬. வலைச்சியா ரென்பது மீன் விற்கும் வலைஞர் மகளைக் கண்டு காமுற்ற ளொருவன் அவளை நோக்கித் தன் வேட்கையை வெளிப்படுத்திக் கூறியதாக வரு மிலக்கணத்தை யுடையது. மொழிக்கு அயலாகலாவது - சொல்லின் எல்லையைக் கடந்து நிற்றல். வேதமுடிவு-உபநிடதம். அம்முடிவினின் முடிந்துநின்றவழி-சித்தாந்தம். இதனை 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்' எனவும், 'வேதத்தலைதரு பொருள்' எனவும் வரும் சந்தானசாரியார் திருவாக்கானும், 'ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த, வாராவின்ப வருங்கனி பிழிந்து, சாரங்கொண்ட சைவ சித்தாந்தத், தேன்' என வரும் இவ்வாசிரியர் கூற்றானும் அறிக. அவ்வழிக்கு அயலாகார் என்றது அவ்வழியின் எல்லை கடவாதவ ரென்றவாறு: அஃதாவது அவ்வழியிற் செல்வோரால் அறியப்படுவ ரென்பதாம். அவர் சோமசுந்தரக் கடவுள். அவரது கூடலென்க. கூடலில் வாழும் வலைவாணருடைய பெருவாழ்வு போன்ற பெண்ணே என்க. இவ்வாறன்றி வழிக்கயலாகாராகிய கூடல் வலைவாணரென்று கூட்டிச் சோமசுந்தரக் கடவுளுடைய பெருவாழ்வு போன்றவரே என்பாருமுளர். முன் இடைச்சியாரில் 'கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற, ரெண்டரு மதுரை' எனவும், கொற்றியாரில் '......அவர் தங்கருநாமர் துடைக்கும் பெற்றியார் தமிழ் மதுரை' எனவும் மதுரையே சிறப்பித்துக் கூறப்பட்டதாகலின், அவற்றிற் கேற்ப ஈண்டும் கூடலையே முற்சொற்றொடர் சிறப்பித்து நின்றதன்றி வேறன்மையின் அது பொருந்தாது. கழிக்கயல்-உப்பங்கழியிலுள்ள கயல்மீன். காசினி ஏழும்-நிலவுலகிலுள்ள ஏழுதீவுகளும். ஏழுதீவுகளாவன-சம்புத்தீவு, பிலக்கத்தீவு, குசத்தீவு, கிரௌஞ்சத்தீவு, சாகத்தீவு, சான்மலித்தீவு, புட்காரத்தீவு என்பன. விலை யென்ப-விலையென்பது.

௬௭. இது தோழி தலைவியின் வருத்தத்திற் காற்றாது மன்மதனது கருப்புவில்லை நோக்கிக் கூறியது. விற்கரும்பே - மன்மதனது வில்லாகிய கரும்பே. மென்கரும்பே யன்னார் - மெல்லிய கரும்புபோன்ற மகளிர்: கரும்பேயை யன்னாரெனச் சுற்றத்தாரைக் கருதிக் கூறியதாகக் கோடலுமொன்று. கருமை-பருமை. சொற்கரும்பு-சொல்லாகிய கரும்பு. அலர் தூற்றும்-பழி தூற்றும். கடம்பவனத்தையரும் நற் கரும்பையாளா ரென்க. அலர் தூற்றுவாய்-மலர்க்கணைகளைத் தொடுத்துச் சொரிவாய்.

௬௮. சிவபெருமான் பாலராயும், விருத்தராயும், குமாரராயும் வந்த வரலாற்றை **விருத்த குமார பாலரான படலத்திற்** காண்க. வம்பு-வீண். ஞாலம்-ஆகுபெயர். ஞாலம் வியக்கும்-உலகத்தார் வியப்பார்கள். நயக்கும்-சிறக்கும்; விரும்புமாம். நயக்கும் என் நடனமாவது பலபிறவிகளெடுத்து அவ்வப் பிறவிதோறும் பால குமார விருத்தனாகி வருதல். பாலம்-நெற்றி. லோசனம்-கண்: அஃது அக்கினிக் கண். பானு-சூரியன். பரமன்-இங்கே சந்திரனையுணர்த்திற்று: மேல் 'பால லோசன பானுவி லோசன' என்றமையால். பக்த சகாய-அடியார்க்குத் துணையாயுள்ளோனே. மாகால கால - பெரிய காலனுக்குக் காலனே. சாம்ப - உமையோடு கூடியுள்ளோனே.

௬௯. இது தெப்பத் திருவிழா முடிவில் சோமசுந்தரப் பெருமானது எழுச்சிப் பொலிவுகண்டு காதலித்த தலைவி கூறியது. வார்குழல் - நீண்ட கூந்தல். கரையேற்றுதலாவது தெப்பத்தினின்றும் கரையிலே எழுந்தருளச் செய்தல். மட்டு - அளவு. காம மடு-காமமாகிய பெரிய நீர்நிலை. குங்குமச் சேற்றைக் கொட்டுவீர் என்னே என்க. விரகமிக்க தலைவிக்குக் குங்குமச்சேறு முதலியன துன்பந் தருவனவாதலின் இவ்வாறு கூறினாள். விரும்பினார் விரும்பப் பட்டாரென்னு மிருவருள் ஒருவரைமட்டுங் கரையேற்றி மற்றொருவரைக் கரையேற்றா திருத்தலேயன்றி மேலும் வருத்துதல் நீதியன் றென்றவாறு.

௭௰. ஆடும் - நிரம்பும்: ஆடும் வீதி யென்க. சங்கத் தமிழ்க் கூடல்-சங்கத்திற் பயின்ற தமிழ் விளங்கிய மதுரை. அம்மை இடங் கொண்டாரென்க. அஞ்சலம் - அஞ்சமாட்டோம். மையிடம்-எரு

மைக்கடா : மஹிஷம் என்னும் வடசொல் மயிடமென்றாய் எதுகை நோக்கிப் போலிபெற்று மையிடமென்றாயிற்று.

எக. அமுது என்றது உமாதேவியாரை. இடம்-இடப்பக்கம். கடு-நஞ்சு. களனிரண்டனுள் முன்னது கழுத்து பின்னது இடம். அருளா-அருளி. அமுதக்கடலாகியுளார் - சோமசுந்தரக் கடவுள். நரியைப் பரியாக்கி நடத்தினமை நரியைப் பரியாக்கிய படலத்திற் கண்டுகொள்க. அந்நீர்மையின் மிக்கு என் நீர்மை - எனது தன்மை நரியைப் பரியாக்கிய தன்மையினும் மிக்கது. மிக்கு - மிக்கது என்பதன் விகாரம். மிக்கதாவது - ஒரு விலங்கினை மற்றோர் விலங்காக்குவதினும் ஒரு மாத்திரைகுறைப்பினை விலங்காக்குதல். மடல்மா அடல்மாவா - பனை மடலாற் செய்யப்பட்ட குதிரை வலிய குதிரையாய் வருமாறு. மாறு செய்தல் - மாற்றுதல். மை நீர் அளகம் - கரிய தன்மையையுடைய கூந்தல். இது தலைவன் தான் நாணிழந்தமை வெளியிலே தோன்றுமாறு யான் மடலூர்வேனெனக் கூறுதல். "தோட்டின் மீதுசெல் விழியினாய் தோகையோ டென்னைக், கூட்டி டாயெனிற் கிழிதனி லாங்கவன் கோலந், தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனி, லோட்டு வேனிது காணையான் செய்வதென் றுரைத்தான்" என வருங் கந்தபுராணச் செய்யுளும் அது. இது மடலேறும் வகை யுரைத்த லென்னுந் துறை.

எஉ. இது தலைவன் வருத்தமிகுதியாற் கூறியது. புயலென்றது திருமாலை. திகிரி - சக்கரம். படையைச் சலந்தராசுரன் மீது உய்த்தவனென்க. சலந்தராசுரனைக் கொல்லுதற் பொருட்டுச் சிவபெருமான் தன் காற் பெருவிரலால் விளையாட்டாக வரைந்த சக்கரத்தைப் பின்னர் அதன் பெருமை கண்டு திருமால் பெற்றனனென்பதறிக. கடலிலே யுள்ள கொடி போன்றவர்களே யென்க. அக்கொடி வெற்பமர் பொற்கொடி. மாங்கன் மொய்த்தலினாலே முன் இழந்த அரிய சிறகுகளை மீண்டும் பெற்றாலொத்த தமிழ் வெற்பாகிய பொதியமென்க. சிறைபெற்றன என்பதற்குச் சிறைக்காவலைப் பெற்றாலொத்த என்று பொருள் கோடலுமாம். குழையிலே பட்டிருவுமாறு புருவமாகிய சிலையிலே கன்னாகிய கணை



யைத் தொடுத்துப் பொரும் போரென்க. குழை-இங்கே காதினை யுணர்த்திற்று. காதளவு நீண்ட கண் என்றவாறு. தொலைவு அற்றவர் - நீங்குதலில்லாதவர் : அயராவார் காதல் கொண்டோர். அவரைக் கொல்லுகின்றன அல்ல சிலையாவது மன்மதன் கைச்சிலையென்றவாறும்.

எா. "சிலைசிலையாக் கொண்ட தென்மதுரேசர் - மலையை வில்லாகக் கொண்ட சோமசுந்தரக் கடவுள். சிலம்பு - மலை. வேள் மலைசிலை - மன்மதன் மலைதற்குரிய வில். அத்தகைய வில்லாகக் கொண்ட நெற்றியை யுடையவளே யென்க. மருங்குல் சுற்றும் இலை - இடையிலே உடுத்தும் தழை. அதனைச் சிலையாகக்கொண்டு மானை யெய்தலாவது - தலைவன் தலைவிக்குக் கொடுக்கும் கையுறையாகிய தழையைக்கொண்டு அதனால் மானைத் தாக்கிச் செல்லுதலாம். இவர் - தலைவர். பூங்குலை - பூங்கொத்து. சிலை - கல். பூங்குலை சிலையாக் கொண்டவர்-சாக்கியநாயனார். தலைவன் வருந்தித் தலைவிபால் தழையைக் கையுறையேற்பித்தலாகவும் இப்பொழுது அதனை மானைத் தாக்கற்குத் தாங்கிச் செல்லுதலின் கருத்துவேறு செய்கை வேறாகக் கொண்ட சாக்கியநாயனார் போலுமென்று கூறினான். இதற் கிவ்வாறன்றிப் பூங்கொத்தினைச் சிலையாகக் கொண்ட மன்மதனார்போலு மென்றலு மொன்று. இப்பொருட்குத் தலைவர் தழையை வில்லாகக் கொண்டிருப்பினும் அவர் நம்பால் விளைக்கும் காதலை நோக்கின் பூங்கொத்தினை வில்லாகக் கொண்ட மன்மதனார் போலுமென வியந்ததாகக் கொள்க. செம்மல் - தலைவர். இது பாங்கி தலைவனை நகையாடித் தலைவிக்குக் கூறியது.

எச. இது பாணனொடு வெகுளுதலென்னுந் துறை. அஃதாவது தலைவன் பரத்தைபால் நீடியதால் தலைவியூடியிருந்தாளாக அவளை அது தீர்த்தல் கருதி அவன் கருத்தறிந்து சமாதானப்படுத்தித் தான் வருவதற்குப் பேசி மீளுமாறு தலைவனால் விடுக்கப்பட்ட பாணனைத் தலைவி வெகுண்டு கூறுதலாம். கொங்குரை - மாற்றுயர்ந்த பொன். இது கொங்கம் பொன்னென முற்காலத்து

வழங்கியதென்ப. உரை - கல்லிலே உரைக்கப்படுவதால் பொன்னைக் குறித்தது. முதலிரண்டடிகளிற் குறிப்பிடப்பட்ட வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்ற மெனப்படும் விருத்தாசலத்திற் சிவபெருமானைப் பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்று அதனைச் சிவபெருமான் அருளியபடி அங்குள்ள மணிமுத்தா நதியிலே யிட்டுப் பின் திருவாரூர் சென்று அங்கே ஆலயத்துள்ளால் உள்ள தீர்த்தத்திலிறங்கித் தேடிப் பதிகம்பாடி பெற்றனரென்பதாம். இதனைப் பெரிய புராணத்திற் காண்க. ஆற்றில் பொன்னையிட்டுப் பின் குளத்திற் றேட அது கிடைத்தற்குக் காரணமாயிருந்த முதுகுன்று எம்பெருமானுடைய மதுரையோ என்க :· முதுகுன்றையர் சிவபெருமானெனக் கொண்டு அவரது மதுரையோ இஃது என்றலுமொன்று. எங்கையர்- எமது சக்களத்திகள். வைத்தல்-தலைவனை இருத்துதல். மகிழ்நர் - கணவர். எமது கணவர் வாழ்க்கை அம்மங்கையர் மனம்போன்றதன்றோ என்க.

எரு. இது தலைவி கிளியை நோக்கி யிரங்கிக் கூறியது. வாழி - வாழ்வாயாக. மடமை - இளமை. ஊழி முதல்வர் - சிவபெருமான். அப்பெருமானுக்கு உருவழிதலாவது அவரால் மன்மதன் அநங்கனுக்கப்படுதல். ஆழியான் சேய் - மன்மதன். அவன் தொடுத்த அம்புகளோ திரண்ட முல்லைமலரும் ஏனைய தேனிரம்பிய மலர்களுமாம். தாய் தொடுத்த வம்பு - தாய் கற்பித்துக்கூறிய பழிச்சொல். மன்மதன் தொடுத்த அம்புகளோ வருத்தஞ் செய்யும் முல்லை முதலிய மலர்களாம்: தாய் கற்பித்துக் கூறும் பழிச்சொல்லோ அவற்றினும் கொடிதா யிருக்கின்ற தென்றவாறு கிளியே நீ மன்மதனது அம்புகளின் கொடுமை மாத்திரமா தாய் தொடுத்த வம்பினையும் ஓதினை யல்லையென்றலு மொன்று. மன்மதன் தொடுத்த அம்புகளோ முலையளவும் கண்ணளவுமாகத் தாய் தொடுத்த வம்போ தலையளவாயிற்றெனப் பொருள் தொனித்தலுங் காண்க. உருவழிந்தேன் என்பதும் பாடம்.

எசு. மறமென்பது ஓரரசன் மறவர் மகளைத் தனக்கு மணம்பேசி வருமாறு ஒரு தூதனை விடுக்க மறவர்கள் மணத்தினை மறுத்து



அவ்வரசனையு மிகழ்ந்து கூறியதாகப் பாடுமிலக்கண முடையது. தருமுகம் - கற்பக தருவின் நுனி. நிமிர்தல் - உயர்தல். குடுமியென்றது மாடங்களின் சிகரங்களை. யாம் சவுந்தரபாண்டியர் குடியாங்கள் - சௌந்தரபாண்டிய ராட்சிக்குட்பட்ட குடிகள். சமர் - போர். ஒரு முகம் - ஒரு பக்கம். மன்னர் மடிந்தொழிந்தா ரென்றது தங்கள் வீரத்தைக் கூறியதாம். மருமுகத்த நெறிக்குழல் - இயற்கை வாசனையை யுடைய நெறித்த கூந்தல். திருமுகம்-ஓலை. திருமுடியிலெழுத்து-தலையெழுத்து. சிகை - குடுமி. திருமுகத்தெழுத்துத் தெரிந்தோம் திருமுடி யெழுத்துந் தெரிதற்குச் சிகையோடுங் கொண்டுவா என்றவாறு.

எஎ. குறமென்பது குறத்தி தலைவிக்கு அவள் காமுற்ற தலைவன் வாய்ப்பைக் குறிதேர்ந்து கூறுவதாகப் பாடுமிலக்கண முடையது. செல் - மேகம். சொல்லிட்ட - குறி சொல்லியிட்ட. வரத்து - வருதல். அம்மை தலைவியைக் குறித்தது. நித்திலக்கச்சு - முத்துக்கச்சு. ஆர்த்தல் - கட்டுதல். வல் - சூதாடு கருவி: இங்கே ஆகுபெயராய்க் கொங்கையை யுணர்த்திற்று. நீ நினைந்த பொருளின் வடிவு வல்லிட்ட குறியும் வளையிட்ட குறியுமுள்ளதென்க. மதுரைத் தேவர் மணத்தைத் தடாதகைப் பிராட்டியாருக்கு யான் கூறினேனெனத் தன் பெருமையைக் குறத்தி வெளியிடுகின்றாள். இறைவியின் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் இறைவர் கொண்டமை காஞ்சிப்புராணத்துத் தழுவக் குழைந்த படலத்திற் காண்க.

எஅ. வடகலை - ஆரிய மொழியிலுள்ள கலைகள். பலகலை - தமிழல்லாத பிறமொழிகளிலுள்ள கலைகள். தமிழ்-தமிழ்மொழியிலுள்ள கலைகள். இம் முத்திறக் கலைகளும் வளர்தற்கு இடமாகிய மதுரை யென்க. வடகலை வளர்தற்குக் காரணம் வடமொழி ஒரு தேயமொழியாகாது எல்லாத் தேயத்துக்கும் விண்ணுக்கும் புவனங்கட்கும் பொதுவாய மொழியாத லென்க. இக்காலத்தொரு சிலர் ஆரியச்சொல் இந்தியநாட்டினருள் ஒரு பகுதியார் மொழியென வாதிடுப. ஆரியச்சொல் எல்லாத்தேய முதலியவற்றிற்கும் பொதுவென்று சேனாவரையர், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயப்

புலவர், வைத்தியநாதநாவல ரென்னு மிலக்கண வாசிரியர்களனை வரும் வெளிப்படையாகக் கூறுகின்றார்கள். தமிழும் சைவமுஞ் செய்த தவப்பயனாக வெழுந்த சிவஞானசுவாமிகள் கருத்தும் அது வேயாமென்பது இலக்கண விளக்கச் சூறாவளி யாராய்ச்சி செய்வா ரறிவதொன்று. அன்றியும் ஹர்ஷகவி தானியற்றிய நைஷதீய காவியத்தில் தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்த அரசர்கள் பேசும்மொழி பலவா யிருந்தமையின், தத்தம் கருத்துக்களை ஒருவர் மற்றவர்க்கு வடமொழி வாயிலாயுரைத்தன ரெனக் கூறுதலும் அறியத்தக்கது. உரை வகுத்த நாராயணரும் அக்கருத்தை நன்கு வலியுறுத்தினர். ஆதலின் அவ்வொரு பகுதியார் கூற்றுப் பொருந்தா தென்க. பல கலை வளர்தற்குக் காரணம் பலவேறு நாட்டினரும் மதுரைவளங் கண்டு அங்கு வந்து நெருங்கி யிருத்தலாம். தமிழ் வளர்தற்குக் காரணம் சொல்லாமலே யமையும். அரவு அரையினர் - பாம்பினை அரையிலே கட்டியவராகிய, சோமசுந்தரக் கடவுள். திருமுன்-சந்நிதானம். புகையெழ - புகையெழுமாறு. அழல் உமிழ் நிலவு - தீயைச் சொரிகின்ற இளஞ்சந்திரன். குடதிசை கொழுந்து ஓட - மேற்றிசையிலே ஒளியை வீச. அதற்குப் படவரவிற்கு அஞ்சுவா ரென அஞ்சும் தமியளாகிய இவள் படும்பாட்டை யொருவரேனும் கூறாரோ எனத் தோழி தலைவி வருத்தமாற்றாது கூறுகின்றாள்: செவிலி கூற்றுமாம். புகையென்றது மாலையிருளை. அழல் என்றது காந்தியை.

௭௯. பணைப்புயம் - பருத்ததோள். வேட்டல் - விரும்புதல். குருகும் மெய்ந்நாணும் விடுதலாவது கைவளையும் இயற்கை நாணு மிழத்தல். பேட்டுக்குருகு - பெண் நாரை. வண்டு முதலியனவற் றைத் தலைவர்பால் தூதாக விடுத்தாளென்க. இருகோடு-இரண்டு நுனிகள். குருகு மதிக்கொழுந்து - வெண்மையான இளஞ்சந்திரன், கொழுந்துக்கு என் குலக்கொழுந்து என் செய்வாளென்க. இது செவிலி கூற்று.

௮௰. ஏமவெற்பு - மேருமலை. ஏமவெற்பும் கயிலாய வெற்பும் போல மலயவெற்பில் என்றும் உறைபவரும் தடாதகைப் பிராட்டியாரது அன்பருமாகிய சுந்தரேசரென்க. தலைச்சங்கம் கடல் கோட்பட்ட தென்மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்திலும், கடைச்சங்கங் கூடலிலும் நடந்தனவாகவும் சங்கமென்னும் ஒற்றுமை கருதி மூன்று சங்கங்களும் கூடலில் வளர்ந்தனவாகக் கூறினார்: இனி முச்சங்கமென்பது வெற்றி மங்கலம் கொடையென்னு மூன்றினையும் குறிக்கும் சங்கு என்றலுமாம். தாமரைக்கண் - தாமரை மலர் போன்ற கண். சந்தம் - சந்தனமரம். துஞ்சுதல் - தங்குதல். மதிப்பிஞ்சு-இளஞ்சந்திரன். வாய் மடுத்தல் - வாயினுட் கொள்ளுதல். இது மேகத்தைத் தலைவன்பாற் றூதுவிடுத்தது.



௮௧. சம்பிரதமாவது சாலவித்தை முதலியன செய்வார் தம்மைத் தாமே புகழ்ந்து கூறியதாகச் செய்யுள் செய்யும் இலக்கணமுடையது. மட்டு - அளவு. புவியினைத்தும் ஓர் இமைப்பினில் மறைத்து உடன் விடுத்தல் என்றது உலக முழுவதும் ஒரு நொடிப் பொழுதில் மறையும்படி செய்து மீளவுந் தோன்றும்படி செய்த லென்றும் உலகமுழுவதும் கண்ணை இமைக்கின்ற காலத்து மறையும்படி செய்து விழிக்கின்ற காலத்துத் தோன்றும்படி செய்த லென்றும் பொருள்படும். எட்டு வரையைக் கடலை முட்டியுளடக்குதல் என்றது அஷ்டகுல பர்வதங்களையும் சப்த சமுத்திரங்களையும் கைப்பிடியு ளடங்கும்படி செய்தலெனவும் எள்ளையும் துவரையையும் கடலையையும் சிறு மட்பாண்டத்து ளடங்கும்படி செய்த லெனவும் பொருள் படும். குண மெட்டு-அளவிலாற்ற லுடைமை, இயல்பாகவே பாசங்களி னீங்குதல், இயற்கை யுணர்வின னாதல், தன்வயத்தனாதல், முற்று முணர்தல், பேரருளுடைமை, தூய வுடம்பினனாதல், வரம்பி லின்பமுடைமை யென்பன. சிட்டர்கள் - அடியார்கள். ஒரு செப்பினுளடக்குதல் என்பது ஒரு சிமிழினுளடக்குதலெனவும் ஒரு சொல்லினுள் அடக்குதலெனவும் பொருள்படும்.

௮௨. அடுத்தல் - தம்மைச் சரணாக அடைதல். அஞ்சலியாநிற்ப - கைகூப்பித் தொழுது நிற்க. எடுத்த பதம் - தூக்கிய இடது திருவடி. சலித்தல் - தளர்தல். தடுத்தவன் - இராச சேகரபாண்டியன். குனித்தல் - ஆடுதல். இப்பாண்டியன் வேண்டுகோட் கிணங்

இக் கான் மாறி யாடி யருளியதைத் திருவிளையாடற் புராணத்திற் கான்மாறியாடிய படலத்திற் காண்க. குனித்தல் பின்னிரண்டும் வளைத்தல். சிவபெருமான் திண்ணிய மலையை வில்லாக வளைத்தும் பயனில்லையே மன்மதன் என்மீது சிறி மெல்லிய கரும்புவில்லை வளைத்துப் போர் தொடங்க லுற்றனனே யெனத் தலைவி இரங்கி யது இச்செய்யுள்.

அங. மன்மதனுக்கு வில்லோ கரும்பு கணையோ அரும்பு இவற்றில் ஐயப்பாடில்லை ஆனால் அவனுக்கு உயிரொன்றுமட்டும் உளதோ இலதோ யாம் அறிந்தேமில்லை என்றவாறு. மன்மதன் அனங்கனாதலின் இவ்வாறு கூறினாள். உருவமில்லாதிருந்தும் வில்லிலே கணைகளைப் பூட்டி யெய்கின்றானே என்பதாம். இதுவே தவம் பிறிது என் ஆம் - இவ்வாறு செய்வதே அவனுக்குத் தவமாம், வேறே யாது ஆகும். முலை-இடைக்குறை. அணிந்த-உவமவாசகம். முகிழ் நகை - வெளித்தோன்றிய நகையினை யுடையீர். ஓர் பெண் கொடியின்......மதுரேசர் - முன் எஎ - வது செய்யுட் குறிப்புப் பார்க்க. இவ்வாறு அவன் செய்வது மதுரேசர் தந்த வரமா மென்க. இது தலைவி இரங்கியது.

அச. புண்டரீகம்-தாமரை. இரண்டு-திருக்கரமும் திருவடியும். திருக்கரத்தால் மேருமலையையும் திருவடியால் நெஞ்சத்தையும் குழைத்த பிரானென்க. எழ்பரியோன் - சூரியன். சூரியனது தேரிற் பூட்டப்பட்ட குதிரை யொன்று சப்த என்று பேர் பெறுதலின் அவன் எழ்பரியோனெனப்பட்டான் : இதற்குப் பிறவாறும் உரைப்ப. வலவன்-பாகன். இஃது அன்றே-இஃது அன்றோ என்க. இஃது அன்று என்றுமாம். கரும்பு தலைவியின் இன்மொழியும், கனி அவளது இதழும், இளநீர் அவளது கொங்கைகளும் குறிப்பன. தலைவியைப் பிரிந்து சென்று வினைமுடித்து மீண்டுவரும் தலைவன் இடைச் சுரத்தில் அவளது உருவெளிப்பாடு கண்டு வியந்து பாகனோடு கூறுகின்றானென்க.

அரு. சோமசுந்தரக் கடவுளது விறகு விற்ற திருக்கோலங் கண்டு காமுற்றா ளொருத்தி கூறியது. கரு இட்டகாடு-பிறப்பாகிய



பொருந்திய காடு. கடுக்கைக் காடு - கொன்றைமலர்த் தொகுதி. தாமரைமலரின் தொகுதியைத் 'தாமரைக் காடு' என்றனர் திருவாதவூரடிகள். கொள்ளை வெள்ள மடு-மிக்க வெள்ளமாகிய மடு : கங்கை. அது கொன்றை மலர்த் தொகுதியின் வாசனை பொருந்திய வெள்ளமடு. செரு இட்ட விழி - போர் செய்தலைக்கொண்ட கண். மடவார் வாயிட்டுச் சுடுவதாவது பெண்டிர் பழிதூற்றுதல். மடவார் எருவிட்டு மூட்டுதலாவது இளையமகளிர் தமக்குத் தக்க மணாளனைப் பெறும்பொருட்டுச் சந்திரனை எரு விட்டு வணங்குதல். விறகிட்டு மூட்டுதல் - சந்திரன் தங்கிய சடையின்மேல் விறகினைத் தாங்குதல்.

அசு. என்போல்வார் - என்போன்ற மகளிர். அடிகேளோ-அடிகளே. தன்போற் காமன் - தனக்குத் தானே உவமிக்கப்படுங் காமன் : ஈடில்லாத காமனென்றவாறு. சாபம் முடித்தல் - வில்லையொழித்தல். முன்பு ஓர் காமன் - முன்பு ஒப்பற்ற கற்பகச் சோலைக்கு அரசனாகிய இந்திரன். அவன் சாபம்-அவனுக்கு நேர்ந்த பிரமகத்தி தோஷம் : அன்றி அவனுக்குத் துருவாசரால் கொடுக்கப் பட்ட சாபமுமாம். இது தலைவி கூறியது.

அஎ. முள்தாள் - முள்ளையுடைய நாளம். பாசடை - பசிய இலை. கமலத்து-தாமரையில். இரைவரா-இரையாகிய மீன் வரும் வரை. உறங்கும் - உறங்குவன போலிருக்கும். குருகு - இங்கே நாரைகள். இங்கே கிடைத்ததென்று கருதி யென்க. ஊற்றம்-பற்றுக் கோடு : அஃதாவது இறைவனை யன்றி வேறு பற்றுக் கோடு. உலப்பு - கெடுதல். வீற்று வீற்றிருந்து - தனித்தனியிருந்து. கடுக்கும் பட்டத்தென்க. பட்டம்-குளம். தண்டுறைச் சங்கம்-சங்கப் புலவர்கள். துறையென்றது அகம் புறமென்னும் பொருட் பகுதிகளை. ஒண்டுறைச் சங்கம் முத்துக்களைத் தன்னகத்தே கொண்டு (நீரிலேயன்றிச்) சோலையில் இயங்குதலின்றிச் சிறந்த இசையின் இயல்களைத் தேர்கின்றன ; தண்டுறைச் சங்கம் முத்தகச் செய்யுட்களைப் பயின்று காவியங்களைக் கற்று பாட்டியல் நூல்களைத் தேர்கின்றன வென்க. முத்தகம்-தனித்து நின்று

முடியுஞ் செய்யுள். பழனை-வயல். தாய் நலம் கவருபு.........ஒருவன்-இதனைத் திருவிளையாடற் புராணத்தில் மாபாதகந் தீர்த்த படலத்திற் காண்க. வலியான்-கரிக்குருவி. குறித்து வழுத்துதுமென முடிக்க. நாரைக்குச் சிவபதங் கிடைத்தமையும் வலியாற் கருளியதும் நாரைக்கு முத்தி கொடுத்த படலத்திலும் கரிக் குருவிக் குபதேசஞ் செய்த படலத்திலும் காண்க.

௮௮. முயல் - சந்திரனிடத்துக் காணப்படும் களங்கம்: இதனை மானென்றுங் கூறுப. கலை-சந்திரனுடைய பகுதி. பிறைச் சந்திரனிடத்துக் களங்கமும் மற்றைக் கலைகளுங் காணப்படாமையால் அவற்றை அவனிழந்ததாகக் கூறினள். மதிக்கூற்றே-சந்திரனாகிய இயமனே. சிறு துயிலும் பெருமூச்சும் தலைவன் பிரிந்தமையால் தலைவிக்கு உண்டாயின. நீயே இயமன்; உன்னுடைய கிரணம் இயமன் வீசுகின்ற பாசமென்க. இயமனுயின் உடனிமிர்ந்து கருநிறங்கொள்ள வேண்டுமேயெனின் அஃதொக்கும் ஆயினும் நரையினால் இயமன் உடல் வளைந்து நிறம் வெளிறினன் போலுமென்று கூறினள். இங்ஙனமாகவும் இளம் பெண்கள் உன்னை இளவெண்டிங்களென்று கூறுதலென்னை யெனப் பாங்கி கூறினள்: செவிலி கூற்றுமாம்.

௮௯. நீர் விளையாடல் செய்யும் மகளிரை நோக்கித் தலைவி கூறியது இச் செய்யுள். கண்மான் - உமாதேவியார். மான் - காத்திலேயுள்ள மான். நஞ்சமார்ந்து களம் கறுத்துளார் நெஞ்சமார்ந்து களங்கு அறுத்துளா ரென்க. குன்று - மேரு. அதனைக் கோவில்லாக் குனித்துளார். கோவில்-சிறந்தவில். மன்று-சபை. அதனைத் தமக்குக் கோவிலாக் கொண்டு கூத்தாடினவர். திளைத்திர் - விளையாடுகின்றீர். பை - பாம்பின் படம். அன்னைமார் - ஆட்டுவாள் ஊட்டுவாள் முதலிய ஐந்து தாயர். சங்கையிற்படில்-ஐயப்பாடு கொண்டால். சந்தயப்படி லென்பதும் பாடம். பரிகரித்தல்-நீக்குதல். இங்கே நீக்கிக் கொள்ளுதற்குரியராகுதல். பாவம்-கொடுமை. நீராடினார்க்கும் தலைவனைக் கூடினார்க்கும் வாய் விளர்த்தல் கண் சிவத்தல் முதலியன ஒப்ப நிகழ்வன. நீராடியதனால்



வாய விளர்த்துக் கண் சிவந்த உங்களை அன்னைமார் தலைவனைக் கூடினீர்களாகச் சங்கையிற்படில் அதனைப் பரிகரித்தற்குரியராய் நீங்களாகுதல் பாவமென்றவாறு. கொழிதரங்க மென்பதும் பாடம். வள்ளியம்மையார் குமரக் கடவுளைக் களவிற் புணர்ந்து புனத்தில் வந்த காலத்துப் பாங்கி அவரது நிலை வேறுபாடு நோக்கி அதன் காரணம் வினவ, வள்ளியம்மையார் தாம் நீராடச் சென்றதாகக் கூறினர். அது கேட்ட பாங்கி 'மைவிழி சிவப்பவும் வாய் வெளுப்பவு, மெய்வியர் வடையவு நகிலம் விம்மவுங், கைவளை நெகிழவுங் காட்டுந் தண்சுனை, எவ்விடை யுளது' என்று வினவினமை அறியற்பாலது. திளைத்திரால் - திளைத்தீரில்லையே என்றும், பாவம் - பாவனை யென்றும் பொருள் கொண்டு அதற்கேற்பத் தலைவனைக் கூடி வந்தாராயினும் நீராடி வந்தார் போன்று நிற்கும் தலைவியரை நோக்கிக் கூறியதாகவுங் கூறுப.

௯௰. பா-பாட்டு. ஒருத்தி-மீனாக்ஷியம்மையார். காமித்தல்-விரும்புதல். கணக்கு-முறைமை. மாமிக்குக் கடலேழும் வழங்கியதை எழுகட லழைத்த படலத்திற் காண்க. வேற்படையால் உக்கிரகுமார பாண்டியர் கடலை வறிதாக்கினமை கடல் சுவற வேல் விட்ட படலத்திற் காண்க. மீன்களுக்குப் பற்றுக் கோடாகிய கடல்களனைத்தையும் ஒழித்து விட்ட உம்மை மீன்களெல்லாம் வந்து அடைதல் முறைமையன்றோ எனத் தலைவி சாதுரியம்படக் கூறினள்.

௯௧. இது தலைவியின் நிலைகண்டு பாங்கி கூறியது: செவிலி கூறியதுமாம். வெயர்ப்பும் உயிர்ப்பும் முலையும் உயிரும் பெற்றாளென்க. நீர் ஓடு குறு வெயர்ப்பு - ஓடுகின்ற சிறுவேர்வை நீர்த்துளி. நெருப்புப்போன்ற மூச்சு. கண்ணீரோடு பசலை பொருந்திய அழகிய கொங்கை. குறையால் நிரம்பிய உயிர். காரோடுதல் - கருநிறம் பொருந்துதல். தனை - தாய்; இது தன்னை யென்னுந் திசைச் சொல்லின் இடைக்குறை. வீதியிலே தலைவன் வரும் பவனி கண்டாள் தன் மனந் தாரோடு சென்றமையின் தாயோடு வீட்டுச் செல்லாது தமியளாய் நின்றாளென்க. தனை விலங்கெனக்

கொண்டு விலங்கு பூட்டினாற்போல இடம்பெயராது தம்பியாய் நின்றுனென்றலுமாம்.

கஉ. தமரம் - ஒலி. ஈன்றாள் - உமாதேவியார். தரிக்கவருதல் - தரிக்குமாறு வந்தருளல். வழுதியாகிய உக்கிரனென்க. கூட்டுண்ணுதல் - கொள்ளையிட்டுண்ணுதல். கொழி தமிழ்-தெளிக்கப்பட்ட தமிழ். பமரம்-வண்டு. யாழ்மிழற்ற-யாழொலிபோல ஒலிக்க. நறவு-தேன். குழலியர் - குழலையுடைய மானுட மகளிர். பளிக்குப் பால்நிலாமுன்றில் - பளிங்குக் கற்களினாலாகிய வெண்மையான நிலாமுற்றம். இமையாடாதிருத்தற்குக் காரணம் அம்மனையாடலி லுள்ள மனவெழுச்சி. அமரர் நாடியர்- அமரர் நாட்டிலுள்ள பெண்கள். ஐயம் நுண் நுசுப்பு அளவு அல என்று மருளுதலாவது இதற்குமுன் உண்டோ இல்லையோ என்னும் சந்தேகம் பெண்களது இடையளவிலே யிருந்தது; இப்பொழுது இவர் மானுட மகளிரோ தேவ மகளிரோ வென்னும் ஐயம் உடல் முழுவதிலும் உண்டாயினமையின் மயங்குதல். அமரரும் - மானிடரே யன்றித் தேவரும். குழலியர் பமரம் யாழ்மிழற்ற நறவு கொப்பளிக்கும் பனிமலர் சூடினமையின் மானுட மகளிரென அறியப்படுதலாமே யெனின், அம்மனையாடுதலி னுளதாம் அதிர்ச்சியின் அவை யகன்று நீங்கினவாதலின், அறிதல் இயலாததாயிற் றென்க. அரா-பாம்பு. அலங்கல்-மாலை. வேணி-சடை. இது தமிழின் சிறப்புக் கூறியவாறு.

கங. உலவாக்கோட்டை - கெடாத அரிசிக்கோட்டை. ஒருவன் - அடியார்க்கு நல்லார் என்னும் சிவபக்தர், அவருக்குச் சோமசுந்தரக்கடவுள் உலவா அரிசிக்கோட்டை அருளியதை உலவாக் கோட்டை யருளிய [illegible] காண்க. வேள் - மன்மதன். [illegible] - அம்பருத் [illegible] வேள் [illegible] - மன்மதன் எய்தற்கு [illegible] அம்பு. மால் மன்மதன் பிதாவாதலின் அப்பிதா மகன் [illegible] [illegible] சிவபெருமான் [illegible] [illegible] பொருள் [illegible] பற்றி [illegible] ஒரு [illegible] [illegible] [illegible] [illegible] கொண்டு [illegible] [illegible]



தும் ஒருவனுக்கு நீர் கொடுத்தது அளவிற் குறைந்ததேனும் உலவாத தனியாகலின் அளவிற் குறைந்ததும் மிகுந்தது போன்றே யாயிற்று. இங்ஙனம் கொடுத்தல் தக்கதன்றே என்றவாறு. இது தலைவனைப் பிரிந்த தலைவி கூறியது.

கச. தலைவன் தலைவியின் வடிவத்தைப் படத்தி லெழுதிக் கையிற் கொண்டு மடலேறக் கருத அஃதறிந்த தோழி தலைவியின் நடை, நிற்குநிலை, சொன்னலம் முதலியனவற்றையும் நீ எழுத வல்லாயல்லை யென்று கூறித் தடுத்தல் இச்செய்யுள். இஃது எழுதலரிதென விலக்கலாகிய துறை. கடாம் - கன்னம். கரி - விநாயகப் பெருமான். அவரது மதப்பெருக்கு அவர் குடமுடைந்து வழிகிற நறுசெய்யுள் முழுகி யெழுகின்றாரெனக் கருதுமாறு வழிகின்றதென்க. மடவம் - மடப்பம்: அஃதாவது அழகு. பச்சை மயில் - மீனாக்ஷியம்மையார். வேலோ யென்றது தலைவனை. எழுதுவை என்பது குறிப்பால் எழுதமாட்டாயென்னும் பொருளைத் தந்தது. நடை முதலியன வடிவமில்லாதனவாகலின் அவற்றிற்கு வடிவமில் பொருள்களை யெழுதுதல் வேண்டும்: அவ்வாறுயின் எழுததலே யியலாதென்றவாறு. எழுதில் உனை யொத்த பெயர் எவர்தா மென்க.

கரு. கலை-நூல்கள். போர்த்தல்-நிரப்புதல். வளர்தல்-மிகுதல். பல ஆடைகளைப் போர்த்து அறம் கண் வளர்கின்ற தென்னும் பொருளும் தொனித்தல் காண்க. விகிர்தன் - வேறுபாடுடையோன். நினது வடிவத்தில் ஒரு பாதி ஆணும் மற்றொரு பாதி பெண்ணுமாக விருப்பதே எமக்கு மிக்க வியப்பைத் தருகின்றது: திருமால் திருமகள் நிலமகளென்னும் இருமனைவியர்க்குங் கணவனாகி உனக்கு ஓர் மனைவியாயிருப்பது அவ்வியப்பினும் வியப்பாயிருக்கின்றது என்பதாம். திருமால் சிவபெருமானுடைய நால்வகைச் சத்திகளுள் ஒரு சத்தியாதல் பற்றிக் கூறியதென்க. தாருகவனத்து நிகழ்ச்சி பற்றிக் கூறியதுமாம்.

கசு. காண் தகைய - யாவரும் விரும்பிக் காணுந் தகுதியுடைய. ஆனந்த தாண்டவம்-ஆனந்தக் கூத்து. ஆண்டவர்-மீனா

ஆளாக அடிமை கொண்டவர். பூண்டு-காதல் கொண்டு. மென்னத் திருப்பீர்-மெல்லத் திரும்பும்படி செய்வீர்.

௧௭. கார் காலத்து மீண்டு வருவே னெனக் காலங் குறித்துச் சென்ற தலைவன் வினை முடிந்து மீண்டு வரும்போது தன் முன் மேகஞ் செல்வது நோக்கி, இவற்றைக் கண்டு தலைவி வருந்துவாளே என்று கருதிப் பாகனுடன் கூறியது இச்செய்யுள். மிக்கார் முகத்து - அன்பின் மிக்க அடியார்களிடம், கைக் கார்முகம் - கையிலுள்ள வில்லாகிய மேருமலை. விட நாண் - நஞ்சினையுடைய நாணாகிய ஆதிசேடன். அது துவக்காக் கார்முக மென்றது மேருவின் இயற்கை யுயர்ச்சியை யுணர்த்தும் பொருட்டு. அதனைப் போன்ற தேரென்க. வலவன் - பாகன். கை பரத்தல் - இடத்திற் பரவுதல். கார்-மேகம். இக்கார் கண்ணீராகிய உகாந்த சலதியை முகக்க எழுந்த கொலாம் என்க. எமது ஆவியென்னத் தக்காரென்றது தலைவியை. முகத் தடங்கண் - முகத்திலுள்ள விசாலமான கண்கள். உகாந்தம்-யுகத்தின் முடிவு. சலதி-கடல்.

௧௮. சலராசி-இங்கே பாற்கடல். கணை-திருமால். கணையை முப்புரத்தை யெரித்தற்கு எவிய திருத்தோளுடையவ ரென்க. சரணாரவிந்தம் - திருவடித்தாமரை. மலராகிடந்த நயனாரவிந்தர் - மலராகுமாறு இடக்கப்பட்ட நயனத் தாமரையை யுடையவர் : மலராக - அகரந் தொகுத்தல் விகாரம் பெற்றது. மலராகிடு அந்த நயன மெனவும் மலர் ஆகு இடந்த நயனமெனவும் மலரா கிடந்த நயன மெனவும் பிரித்துப் பொருள் கூறுவாரு முளர். புகலார் - சொல்லார். திரிவார்களாகிய சில ரென்க. ஆவியின்றி உடல் சுமந்து திரிவாரென்றது கணவரைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிரை. விழ-விழுமாறு. புலாத கங்குலென்றது விரகதாபத்தால். அங்கி-நெருப்பு; இங்கே சந்திரன். புகையாது எரிதலாவது - இருள் கவியப் பெறுமை. இது தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியது.

௧௯. கடுக்கை-கொன்றை மாலை. கருமான்-யானை. உடுக்கை-ஆடை. திரு-இங்கே உமாதேவியார் : ' திருமாதோடுறைகோயில்



என்றாற்போல. இடத்தினார்-இடப் பாகத்தை யுடையவர். அருளானது குடிகொண்டிருந்த கூத்து என்க. நாடலார்-நாடுகின்றாரல்லர். கானம்-பாட்டு. வேய்இசை-புள்ளாங்குழலி னோசை. உறவான-சுற்றம். வேய்வசை - மூடுகின்ற பழிச் சொல். அன்றிற் பறவை இவளைக் கன்றுவித்து ஒலிக்கும். வேனிலான்-மன்மதன்; வேனிற் காலத்துக்கு உரிமை பூணுதல்பற்றி அவன் அப்பெயர் பெற்றான். மெல-மெல்ல. இடை இடைந்து நொந்தது போல் மனம் இடைந்த தென்க. இது செவிலி யிரங்கல் : பாங்கி யிரங்கலுமாம்.

௨௦. உடையதொர் பெண்கொடி - மனைவியாகவுடையதாயிருப்பதொரு கொடி போலும் பெண் : அவள் உமாதேவி. அவளுடைய முகமண்டலத்துக் கயல் என்க. கயல்-கண்ணை யுணர்த்திற்று. இக் கயல் கடலுதவுங் கயலன்றிக் கடலையுதவுங் கயலென வியந்தவாறு. அது பொரும் மொய்ம்பு-உமாதேவியாரது கண்ணோக்கம் பாய்கின்ற திருத்தோள். புடை கொள் கருங்கலை புனைபவள்-நிலமகள். அவள் கலைமகளாகும்படி வடகலை முதலியன பொலியு மதுரை யென்க. வடகலை முதலியன பொலிதற்குக் காரணம் முன் ௭௮-வது செய்யுளுரையிற் கூறப்பட்டது.

௨௧. வள்ளை-காதை யுணர்த்திற்று. வாய் கிழித்தலாவது அதனை யனாவுத லென்றவாறு. குமிழ்-நாசியை யுணர்த்திற்று. அமர்தல்-போர் செய்தல். மதாரிக்கண்-களித்துச் செழித்த செவ்வரிபடர்ந்த கண். குழவி யென்றது குமரக்கடவுளை. ஆங்கு-அவ்வாறே. இது சோமாஸ்கந்த வடிவத்தை வியந்தவாறு. ஒரு தலைக் காமம்-ஒரு குழந்தையிடத்து விருப்பம். உலகமெல்லாம் பெற்ற உங்கட்கு ஒரு தலைக்காமம் வந்தவா றென்னை யென்னும் பொருளும் தொனிப்பது காண்க. கோடீரம்-சடாமகுடம். சிவபிரானது கோடீரத்து மகுடத்தின் பேரொளிப்பரப்பினால் திங்கட்குரிய அக் கோடீரம் சூரியனுக்கும் கிடைத்ததோவென் றெண்ணுதலாயிற்று. மீக்கொளூஉ-மேற்கொண்டு. தாக்கு அணங்கு அனையார்-தீண்டி வருத்துந் தெய்வம் (மோகினி) போன்ற பெண்டிர் : இலக்குமி போன்ற வடி வழகுடைய பெண்டிருமாம். கண்

ணேறு-கண் திட்டி தோஷம். காப்பு-ரக்ஷை. வேப்பலர் - வேப்ப மாலை. மிலேச்சம்-சூடும். கைதவக் களிறு-பாண்டிய வம்சத்துக் களிறு போன்றவர். செய்தவக் கூடல்-செய்து முற்றிய தவத்தினை யுடைய மதுரை. மீக்கொளூஉ மிலேச்சங்களி றென்க. மீக்கொள வென்பதும் பாடம்.

௯௨. கட்புலம் - கண்ணாகிய இந்திரியம். கதுவுதல்-புலப் படுதல் அஃதாவது விஷயமாதல். வேதம் ஒலிமயமாதலின் கட் புலத்திற்கு விஷயமாகாது செவிப் புலத்திற் புகுந்தது. துஞ்சு தல் - தங்குதல். செந்நாமுற்றம் - செவ்விய நாவாகிய முற்றம்: 'அறங்கரை நாவி னான்மறை முற்றிய' என்று பனம்பாரனார் கூறியதும் இங்கே கருதத் தக்கது: சிவந்த நாக்கு என்று பொருள் கோடல் சிறப்பின்று. பல வேறு வண்ணம்-பலவகைப்பட்ட சந் தம் (சந்தசு). பரியென்றது வேதத்தை. புட்கொடி-கருடக்கொடி. எடுத்த என்பதன் அகரம் தொகுத்தல் விகாரம் பெற்றது. எடுத்த வான் கொடி. பூங்கொடி-இலக்குமி. மட்கொடி - பூமகள். இவ் விருவரும் தங்கிய வான்கொடி. ஆழி - கடல். தேரென்றதற் கேற்ப உருள். முடவு - வளைவு. சுடிகை-ஆதிசேடனது உச்சி. நெடிய நிலத்தற்றெருவில் நீங்காத நிலத்தேரென்க. நிலத்தேர்- பூமி. மீனவர் பெருமான் - உக்கிரகுமார பாண்டியர். மானம்- பெருமை. மதுரையிலுள்ள எழுகடற்றீர்த்தத்தைக் கடலெனக் கருதி மேகக்குழு மேய்ந்ததென்க. எழுகடல் மதுரையில் வந்த வர லாற்றை எழுகடலழைத்த படலத்திற் காண்க. சோமசுந்தரக் கட வுளால் மாமியார் காஞ்சனமாலையின் பொருட்டு அழைக்கப்பட்ட எழுகடல் அவர் திருக்குமாரராகிய உக்கிர பாண்டியர் வேலுக்குப் பிழைத்து வந்ததெனக் கூறினர். காலவாராய்ச்சி யீண்டுக் கருதத் தக்க தன்று. இறங்குபு-இறங்கி. கொண்மூக் குழு-மேகக் கூட்டம். மின்னுக் கொடி-மின்னலாகிய கொடி. பாகு - பாகர். அலைத்தன ராய்ப் பற்ற என்க. யானைப் பாகர்கள் எழுகடற்றீர்த்தத்தில் நீர் குடிக்க வந்த யானைகளுக்கும் அங்குத் திரைமேயவந்த கொண்மூக் களுக்கும் வேற்றுமை தெரிய வியலாமையால் கொண்மூக்களை யானைகளென்று பற்றின ரென்க. பரிதி வேல் உழவன்-சூரியன்



போன்ற ஒளியினையுடைய வேற்படை வீரன்: என்றது உக்கிர குமார பாண்டியனை. அலறுபு-அலறி. வெரீஇ-வெருவி. பெய் முறை-பெய்யும் முறைப்படி. வாரி பெய்யும் பெயல்-நீரைப் பெய்யும் மழை. நெய் முதலியன பெய்தற்குக் காரணம் எழுகடல் மேய்தல். பெயல் தலைஇ-மழையைப் பெய்து விடுதலால். 'தலைப்பெயறலைஇய தண்ணறுங் கானத்து' என்பது திருமுருகாற்றுப்படை. கூடலாகிய மடந்தை யென்க. மின்நுழை மருங்குல்-மின்னல் போன்ற நுண் ணிய இடை. பொன்-மீனாக்ஷியம்மையார். துரியம்-துரியநிலை. துவாதச அந்தம்-பிரம ரந்திரத்தின் மேற் பன்னிரண்டு விரற்கிடை யுள்ள ஓரிடம். உலக வடிவமான விராட் புருடனுக்கு மதுரை துவாதசாந்தஸ்தானமாம். வளாகம் - வெளியிடம் முளையின்று முளைத்தமூல லிங்கம் என்றதை 'முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி' என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவா ரந்தா லறிக. அளவைகளாலே அளக்கமுடியாத. கடல் - விளி. வேத புருடனும் விராட் புருடனுமாகிய இவர்களே நின் பெருந் தன்மையை யாம் நிகழ்த்துது மென மதிாலங் கொள்ளின் அவர் பெரிதும் பேதைமைப் பாலர்: அங்ஙனமாகவும் நினது அத் தன் மையை எம்மனோரும் நினையவும் பாடவும் புரிதலின் நினது அருட் குணம் வாழ்வதாக: நினையும் எனது மனமும் பாடும் எனது அழ கிய நாவும் வாழ்வனவாக என்றவாறு. "நின் பெருந்தன்மை வானவர் தமக்கு நிகழ்த்தரிதாதலின் மனித, னன்பொடும் வழுத்த விழைந்திடி னகையே யடைவதற் கையமின்றேனு, மூன் பெயர் கருதும் பெருந்தவ வருவா யொருவழி யாற்கிடைத் திடுக, வென்ப தோர் மதிவந் தென்னையீர்த் தெழுமா லெங்கணு நிறைந்த பூர ணனே" என்பது ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவாக்கு.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் றிருவடி வாழ்க.

# நீதிநெறி விளக்கம்

க. சுருட்டு நெடுந்திரைகள் - சுருளுதலை யுடைய பெரிய அலைகள். யாக்கை - உடம்பு. நமரங்காள் - நம்மவர்களே. மன்று - சபை. இச் செய்யுள் சிதம்பரச்செய்யுட் கோவை (செய்யுள் ௯) யினும் வருதல் காண்க.

உ. பயக்கும் - கொடுக்கும். இசை - கீர்த்தி. கவல் - கவலை. கல்வியின் ஓங்கு-கல்வியின் மேம்பட்டு. அறமுதலிய நான்கும் புருடார்த்தமென்று வழங்கப்படும்.

௩. தொடங்குங்கால் - கற்கப்புகுங் காலத்தில். மடம் - அறிவின்மை. அகற்றுதல் - பெருகச் செய்தல். சில்நீர - அற்பத் தன்மையை யுடைய. பீழை-துன்பம்.

௪. மல்லல்-பொலிவு. வெறுக்கை-செல்வம். மாண் அவை-மாட்சிமைப்பட்ட நல்லசபை. மண்ணுறுத்தல் - அழகுசெய்தல். சபையி னிலக்கணத்தை வெண்பாப் பாட்டியலுட் காண்க.

௫. கல்வியின் துறை பலவாதலின் எத்துணைய எனப்பட்டது: துணையதெனப் பாடங் கொள்வாரு முளர். இடமறிந்து உய்த்துணர்வு-இடத்தினை யறிந்து சொற்களைக்கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளும் உணர்வு. பொன்மலர்-அழகிய மலர். பொன்னாற் செய்யப்பட்ட மல ரென்பாரு முளர்.

௬. விதிர்த்தல் - நடுங்குதல். ஆகுலச்சொல் - ஆரவாரமான பேச்சு. நவை - உயர்மலிருத்தலால் வருங் குற்றம்; பொருள் தேடும்

காலத்துளவாம் பழி பாவங்களாகிய குற்றங்களுமாம். ஈத்து-ஈந்து. நல்கூர்ந்தார் - வறியவர். இன்நலம்-ஈகை முதலிய நற்குணங்கள். பூத்தல் - உண்டாதல். கல்விப் பொருளுடையார் அவை யஞ்சுதலும் அஃதில்லார் அவை யஞ்சாமையும் தக்கனவல்லவென்று கூறப் புகுந்தார் அப் பொருளோடு உடன் எண்ணப்படும் செல்வப் பொருளுடையார் ஈத்துண்ணுமையும் அஃதில்லார் ஈகைமுதலிய நலமுடையராதலும் தக்கனவல்லவென்று ஒருங்கு கூறினர். இந் நய முணரார் இல் நலமெனச் சொற்பிரித்து வறியவருடைய மனைவியின் நன்மையெனப் பொருள்கூறி இடர்ப்படுப.

௭. வாழ்க்கை-வாழ்வு. முகத்தது - முகத்திலுள்ளது. மலரவன்-பிரமன். மண் புனல் தீ வளி வெளியென்னும் ஐம்பூத மயமாதலின் பிரமன் செய்யும் உடம்பு வெற்றுடம் பெனப்பட்டது. புகழ் கொண்டு வண்டமிழோர் செய்யு முடம்புகள் மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வனபோல மாயாவாதலின் மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் என்க. போல் அசையென்பாரு முளர்.

௮. பகல்-நாள். கற்ற-கற்றநூல்கள். உடைந்துளார் - தோற்றவர்கள். உட்குதல் - அஞ்சுதல். உடைந்துளார் கல்வி யென்க. குதிலான் - அயலான். இல்-தனது மனையாள். நீப்பரிது - விலக்குதல் முடியாது. கடும்பகற்கண்ட என்றதனால் அவனது தீயொழுக்கப் பயிற்சி மிகுதி குறிக்கப்பட்டது. இனி இதற்குப் பசிப்பிணியால் வருந்திச் செல்லும் உச்சிக் காலத்திலே அட்டிற் றொழிலும் விட்டு என நயங் கூறவாரு முளர்: அட்டிற் றொழிற்குரிய காலம் முற்பகலென்பது 'பின்புக லுணங்க லட்டும் பேதைமார்' எனுந் திருவாக்கா னறியக் கிடத்தலானும், அட்டிற் றொழிலும் விட்டு என்றதனாற் பெறப்படும் விசேடப் பொருள் யாது மின்மையானும் அது பொருந்தாது.

௯. ஓம்பாது - பேணுமல். மற்றும் சில என்க. கற்பான் - கற்க. கைத்தலத்த கருந்தனம் - கையிடத்திலுள்ளனவாகிய மிக்க பொருள்கள். உய்த்துச் சொரிதல் - கொண்டுபோய் வீசி யெறிதல். அங்கு-அசை. அரிப்பு அரித்தலாவது - நீர் நிலையில் மண்ணோடு வீழ்க் கிடக்கும் பொற்றூளை அரித்தல். எய்த்து - வருந்தி. கையிலுள்ள மிகுந்த பொருளைப் புறத்தே யெறிந்துவிட்டுப் பின் வேறு பொருள் ஈட்டுவான் அரிப்பரித்து வருந்திப்பொருள் செய்திடல் போலா மென்க. 'வருவதிற் கருத்தினை மட்டுப்படுத்தி; வந்ததிற் சிந்தையைச் சிந்தா திறக்குக' என்றார் ஈசானதேசிகர்.

௰. இலம்பாட்டார் - வறியவர். தினை-சிறுமைக்கு எடுத்துக் காட்டப்படுவதோர் அளவை. மனைத்தக்காள் - மனையாள். மாண்பாவது நற்குண நற்செய்கைகள். பூண்டநல்லறம்-மேற்கொண்டனவாகிய நல்ல அறங்கள். இவ்வாறு கொள்ள அறியாதார் 'கைத்தலத்த கருந்தனம்' 'பூண்ட நல்லறம்' என்பனவாக வருபவைகளைப் பெயரெச்சத் தொடராகவைத்துப் பொருள் கொள்ப: பெயரெச்சத் தொடருள் யாண்டும் எச்சச்சொல்முன் வருதலேயன்றி முடிக்குஞ் சொற்குப் பின்வருத லில்லையென்பது அவ ரறிகிலர்.

௧௧. தாழ்நடை-பணிவு. ஒன்றில்லானேல் - பொருள் சிறிதுமில்லாதவனுயின். வன்சொல்லி னல்லது வாய்திறவா-வலியுறுத்தற்கு எதிர்மறை முகத்தாற் கூறினர். கைத்து-பொருள். காற்கீழ் ஒதுங்குதல் - அடங்கிநடத்தல். ஞாலம்-பூமி: இங்கே பூமியிலுள்ளோர். ஞாலம் பிறவல்ல என்றுங் கூட்டுக. ஞாலம்பித்துடைய பிற பித்துடையனவல்ல என்று கூட்டி யுரைப்பாருமுளர்: ஈண்டுப் பித்துடையன யாவை அல்லன யாவையென ஆராய்தலின்றி இவ்வாறு நிகழும் ஞாலம் எத்தகைய வென்றே யாராயப் புகுந்தாராகலின் அது பொருந்தாது.

௧௨. இவறன்மை - உலோபத்தன்மை. உடையார்-செல்வர். குறை - ஆக வேண்டுங்காரியம். முற்பகல்-முன்னுள் : இங்கே முன்னைப் பிறப்புக்களை யுணர்த்திற்று. நோற்றல் - தவஞ்செய்தல். கற்பு கல்லாமை யென்பன முறையே அறிவையும் அறிவின்மையையுங் குறித்து நின்றன. இது புகழ்வார்ப் போன்று பழித்தல்.

௧௩. கல்விநலன்-கல்வியழகு. கலன்-அணிகலம். கற்றோர்க்குக் கல்வியழகே அணிகல மாவதன்றி அவர்க்கு அழகு முற்றுதற்கு

வேறோ ரணிகலம் வேண்டா என்க. முற்றவேண்டா என் றியைக்க. முழுமணி - மாணிக்க ரத்தினம்.

௧௪. கற்றனம் - கற்றுவிட்டோம். களியற்க - செருக்குக் கொள்ளாதொழிக. கல் - மலை. கனங்குழாய் - மகடூஉ முன்னிலை. கொல்லுலைக்கூடம் - கொல்ல னுலைக்களத்துள்ள சம்மட்டி.

௧௫. மெலியார்-செல்வத்திற் குறைந்தோரை யுணர்த்திற்று. அம்மா - வியப்பிடைச் சொல். எல்லாம் - எஞ்சாமைப் பொருட்டு. எற்று-எத்தன்மையது. அஃதாவது மிகக் குறைந்ததென்றவாறு. இவர்க்கு - இவரது கல்விக்கு. கருத்தழிக - செல்வ விஷயத்தில் தம்மின் மெலியாரைநோக்கித் தம்முடைமை பெரிதென்று கொண்டமைபோலக் கல்வி விஷயத்திலும் தம்மிற் குறைந்தாரை நோக்கித் தங்கல்வி பெரிதென்று கொண்ட கருத்து அழியக்கடவர்.

௧௬. எனப்படும்-என்று சிறப்பித்துக் கூறப்படும்: 'ஊரெனப் படுவதுறையூர்' என்புழிப்போல. அவ்விரண்டு செல்வமுடையாரும் செருக்கின்றிப் பணிவுடைய ராயவழியே அவை சிறப்பித்துக் கூறப்படும் என்க.

௧௭. ஆக்கம் - செல்வம். சிறியாரிடைப்பட்ட - சிறியவரிடத்திலே யுண்டாகிய. மீச்செலவு-கர்வம். மெலியது-எடை மிகுதியில்லாத நொய்யபொருள். வலிது - எடைமிகுதி யுள்ள வலியபொருள். துலைக்குத் தூக்கில் - தராசில் நிறுக்கப்பட்டவழி.

௧௮. விலக்கிய-நூல்களிலே செய்யலாகாதனவென நீக்கப்பட்டவை. ஓம்புதல் - பரிகரித்தல்: இஃ திப்பொருட்டாதலை 'ஓம்பாவொழுக்கம்' என வரும் சிந்தாமணி யானும் அறிக. விதித்தன - நூல்களிலே செய்யவேண்டுவனவென அறுதியிடப்பட்டவை. நலத்தகையார்-நற்குணமுடையார். புலப்பகை-ஐம்புலன்களாகிய பகை. நல்லொழுக்கு-நல்லொழுக்கம். பிற-அசைச்சொல். பாடு-பெருமை. தம்மிற்கொள்ளுதலாவது தாமே தம்முள்ளத்தில் நன்கு மதித்துக் கொள்ளுதல்.

௧௯. வியப்பிப்பான் - பிறர் நன்குமதிக்க வேண்டுமென்று கருதி. வியப்பாவது தன்னை வியவாமையன்றே என்க. நயவாமை-விரும்பாமை. நலம்-நல்ல சுகம். வியப்புக் கூற வந்தார் நலத்தையுமுடன் கூறினார்.

௨௰. சுட்டு-நன்குமதிப்பு: தொல்காப்பியரும் நன்குமதிக்கப்படும் பொருளை 'மக்கட் சுட்டே' என்று கூறினார். நோற்பது-கைக்கொண்டு ஒழுகவேண்டுவது. பிறர்பிறர் யார்யாரென்னும் அடுக்குக்கள் பன்மைப் பொருளில் வந்தன. தூற்றுதல்-பலரறியச் சொல்லுதல். சிறுமை - குற்றங்கள், தாழ்ச்சி - பணிவோடுகூடிய மொழி.

௨௧. நில்லார்-கற்று உரைக்கும் ஒழுக்க நெறியிலே நில்லாதவர்கள். வாய்ப்படுதல்-வாயிற்றோன்றுதல். வெற்றுரை யென்றார் பயப்படுமுரையேயாயினும் அவர் வாய்ப்படுதலின் பயப்பாடில்லாதாயிற்றென்ப துணர்த்தற்பொருட்டு. நாண்-வெட்கம். உறைத்தல்-வருத்துதல். 'கடுவுறைப்ப' என்றாற்போல.

௨௨. கற்ற-வினைப்பெயர். பயன்வேறுவது தென்புலத்தார் கோவினை ஏவல் கொளல் திறப்படூஉம் தீவினை - குணமிலியை அஃதுடையானென்றலால் வரும் பொய் முதலிய பலவகைப்பட்ட பாவச்செயல்கள். விறல்-வலிமை. தென்புலத்தார் கோ-இயமன். அவனை வேலை கொளலாவது-அவன் தம்மை யொறுக்குமாறு செய்து கொள்ளுதல்.

௨௩. கற்பன-கற்றற்குரிய கல்வித்துறைகள். ஊழ்-ஆகூழ். ஒற்கம்-அடக்கம். இன்று-இன்றி 'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே' என்றாற்போல. கல்லாமையின் இழிவுதோன்ற 'ஊத்தைவா' யென்றும், அவர் கூறுஞ் சொல் பயன் றருதலின்மை தோன்ற 'அங்காத்த' லென்றுங் கூறினார். வல்லுரு-ஊண் உறக்க முதலியவற்றைப் பொருளெனக் கொள்ளாது மிகவும் வருந்திக் கற்றார் துடம்புபோலாது அவற்றையே பொருளெனக் கொண்டு வளர்த்த உடம்பு. என்ப-என்று கூறுதலாம்: மா பறவை-விலங்கும் பறவைகளும். புல்லுரு-புனங்களிற் புல்லாற் செய்து வைக்கப்படும் பதுமை. அஞ்சுவ - அஞ்சுவது.

௨௪. போக்கு-குற்றம்: 'போக்கறு பனுவல்' என்பது தொல்காப்பியப்பாயிரம். புலம்-அறிவு. மீக்கொள் நகையினார்- மேலாகக் கொள்ளப்படுகின்ற மதிப்பு செல்வமுதலியனவுடையார். நகை-ஒளி: அஃதாவது மேம்பட்டு விளங்குதலுடைமை. தாக்கணங்கு - தீண்டி வருத்துந் தெய்வப்பெண். ஆணவாம் பெண்மை- அழகிற்சிறந்த அத்தாக்கணங்கு தானும் தன் பெண்டன்மை யிழந்து ஆண்டன்மையவாவும் அத்துணைப் பேரழகுடைமை: இது பேட்டி னழகு. ஒரு பெண் தன்னிற் சிறந்த அழகுடைய மற்றொரு பெண்ணைக் கண்டவழித் தான் ஆணாகி அப் பெண்ணலம் நுகர விரும்புதலும், ஓராண்மகன் கட்டழகுடைய மற்றோராண்மகனைக் கண்ட வழித் தான் பெண்ணாகி அவ் வாணலம் நுகர விரும்புதலும் இயல்பென்ப. சிந்தாமணியில் 'வாண்மதர் மழைக்கணோக்கி வருமுலைத்தடமு நோக்கிக், காண்வர வகன்ற வல்குற் கண்விருப் புற்று நோக்கிப், பாணுவண் டரற்றுங் கோலச் சிகழிகை வடிவு நோக்கி, யாண் விருப்புற்று நின்றா ரவ்வளைத் தோளி னாரே' என வருதல் காண்க. பெண் நலம்-ஒருபெண் நுகரு மின்பம். பேடு-பெண்மை யவாவி ஆண்மை யிழந்தது. ஆண்மை யவாவிப் பெண்மை யிழந்தது அலி யெனப்படும். இவ் வேறுபாட்டினைப் 'பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி, னாண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவியும்' என்பதற்குச் சேனாவரையர் கூறிய வுரையானு மறிக. எங்ஙனம் ஒரு பெண் நுகருமின்பத்தைத் தாக்கணங்கும் ஆணவாம் பெண்மையுடைய பேடு நுகர்தலில்லையோ அங்ஙனம் புலமிக்கார் நுகரும் கல்விப்பயனைச் செல்வம் அதிகாரம் நன்கு மதிப்பு முதலிய வற்றாற் பேரொளி யுடையவர் நுகருதலில்லை யென்பது திரண்ட பொருளென்க.

௨௫. கல்லார் செவிமாட்டி-கல்லாரது செவியிலே வற்புறுத்திக் கூறி. கை உறூஉம் குற்றம்-சிறுமையடைதற்குக் காரணமாகிய குற்றம்: உறூஉமென்னும் பெயரெச்சம் குற்றமென்னுங் காரணப் பெயர் கொண்டு முடிந்தது. உணராதார் - உணராதவரா யிருப்பவும். தம் உணரா ஏதிலர்-தம்மை உணராத மற்றையோர். எவன்-வினாவினைக் குறிப்புமுற்று.



௨௬. வேந்து+அவை = வேந்தவை: அஃதாவது அரசசபை. மிகல் மக்கள்-உயர்ந்தோர். காத்தது-காத்தனூற் கிடைக்கும் பொருள்: வினைப்பெயர். மாத்தகை-பெருஞ்சிறப்பு. கந்து-கட்டுத்தறி. பூட்கை-வலிமை.

௨௭. கொழுநன்-கணவன். மன்ற-தெளிவுப்பொருளுணர்த்து மிடைச்சொல்: 'மன்றவென் கிளவி தேற்றஞ்செய்யும்' என்பது தொல்காப்பியம். அறவோர்-பிரமசரியவறத்தி னிற்போர். அடிகள்-குரு. இலைமுகப் பைம்பூண் - இலைத் தொழி லமைந்த முகத்தினையுடைய பசிய அணிகலம்.

௨௮. கண்-கண்ணின் குறிப்பை யுணர்த்திற்று. சொலி-சொல்லி: இடைக்குறை. செவியிறேர்க்குதலாவது தான் இருந்த விடத்திலே யிருந்தும் ஒற்றர் தூதர் முதலியோரால் நிகழ்வன வனைத்தையும் நிகழ்ந்தாங் கறிதல். அளி - இரக்கம்: ஆல்-ஓடுப் பொருளில் வந்தது. மன்பதை-உயிர்கள். ஆணல்லவர்-பேடிகள்.

௨௯. கொன்றன்ன இன்னா செய்தென்பார் கொன்றென்று கூறினார். இறை-அரசர்க்குரிய பகுதிப்பொருள். கன்று+ஆ=கற்றா: கன்றினையுடைய பசு: அஃதாவது கறவைப் பசு. மடி கொன்று-மடியை அறுத்து, மடியை நோவுற வருத்தி யென்றுரை கூறுவாருமுளர்: வெள்ளம்-ஒருபேரெண். வெள்ளத்தின் மேலும் பலவாதலை காம் காண்டு மென்க.

௩௰. கோடற்பால - பெறுதற்பகுதியுடையனவற்றை. நின்று குறையிரப்ப நேர்படாமையாவது-அரசன் திருமுன்னே நின்று ஐயனே எங்கட்கு ஆகவேண்டுவன இவை யென்று பணிந்து கூறியவற்றைப் பெறுதற்கண் காட்சிக் கெளியனல்லாமை. எயிறலைத்தல்- பற்களைக்கடித்துச் சினத்தல். நாளைக்கோளப் பொறுமையும் குறை யிரப்ப நேர்படாமையும் ஆறலைத்தலுடைமையின் வேடனே யென்பேமாயின் வேடன் காட்டிலே பதுங்கி நின்று கொள்ளுதற் குரியோரை வருத்துதலன்றி இவ்வரசன் போல் நாட்டிலே பலர் காண வீற்றிருந்து கொள்ளுதற்குரியரல்லாரையும் வருத்துதலின்

'வேடல' னென்றும் வேந்தனே யென்பேமாயின், வேந்தனுக்குரிய குணங்களின்மையின் 'வேந்துமல' னென்றுங் கூறினர்.

௬௧. முடிப்ப, பூசுவ, உடுப்ப, உண்ப இவை நான்கும் வினைப் பெயர்கள். உண்ணு-உண்டு. செவி கொளா கண்விழியா-உயர் திணையேயாயினும் செவியிற் கோடலும் காண்டலுமாகிய தன்மைக ளில்லா இழிவு தோன்ற அஃறிணையாற் கூறினர். அவ்வாறு செவியிற் கொள்ளாதும் கண்ணை விழியாது மிருக்கு மரசர் உயிர்ப்போடு உற்ற பிணமேயாவர் என்றவாறு.

௬௨. ஒற்று - ஒற்றர். தெரியா - தெரிந்து. சிறைப்புறம்- ஒதுக்கிடம். செங்கோன்மையாவது செய்திகளை முதலில் ஒற்ற ரால் தெரிந்து அவ்வளவி லமையாது தனது பொற்றேளே தனக் குத் துணையாக ஒதுக்கிடங்களிற் சென்று அறிந்தும் பின்னும் குற் றம் நம்மா லறிதற்கரியது என்று அஞ்சுவதா மென்க. தெரியா- வினையாலணையும் பெயராகக் கொண்டு ஒற்றராலே தெரியப்படாத செய்திகளைத் தானே தெரிந்தென்று பொருள் கூறுவாருமுளர்: தான் நேரில் அறிந்தவைகளிலும் உண்மையாதோ வென ஐயுற்று மீளமீள ஆராயும் வேந்தன் ஒற்றர் கூறிய செய்திகளிலே அமைதி யுடையனுதலின்மையின் அது பொருந்தாது.

௬௩. எதிலார் - பிறர் பிறர். புகல - அகரவீற்று வியங்கோள். கோது - குற்றம். ஒரீஇ - நீக்கி. முதுக்குறைவு - அறிவுடைமை. வெளிது - வெண்ணிறமுடையது. சால்பு உடைத்து - பொருத்த முடையது.

௬௪. கண்கூடு - பிரத்தியக்கம். பட்டது - உண்டானது, மண்டுஎரி - நெருங்கிய தீ. வாய் மடுப்பினும் - சூழ்ந்தெரியினும். மாசுணம் - பெரும்பாம்புகள். பேரா - பேராமல்.

௬௫. பக்கத்தார் - மந்திரிகள்: அவர்களே அரசர்க்குப் பக் கத்திலிருந்து அவர்க்காவன கூறுபவர். திருவள்ளுவநாயனரும் மந்திரியை 'உழையிருந்தான்' என்பர். வடமொழியில் அமாத்திய ரென வருவதும் இப்பொருட்டு. தக்கார்-பெரியோர். செடுமொழி- கடுந்திச் சொற்கள். கோறல் - இங்கே பொருளாகக் கொள்ளாமை.



குணம் பிறிதாதல்-குதாட விழைதல், கூத்தும் காண விரும்புதல் முதலியன.

௬௬. பணியப்படுவார்-தம்மாலே வணங்கத் தக்க பெரியார். தணிவு இல் களிப்பு-குறைதலில்லாத செல்வக் களிப்பு. இளையாள்- சீதேவி. மூத்தாள்-மூதேவி. புணர்முலை-நெருங்கிய கொங்கை: அஃதாவது 'ஈர்க்கிடை போகா விளமுலை.'

௬௭. இல வுலகத்திலுள்ள கற்பக விருக்ஷம் கூறப்படுகின் றது. கண்ணேக்கு-கண்ணூற் குளிரப் பார்க்கும் பார்வை. நகை- மலர்ச்சி. நாள் மலர்-அன்றலர்ந்த பூ. இன்மொழியின் வாய்மை- இனிய சொல்லோடு கூடிய மெய்ம்மை. தீங்காய்-சுவையுடைய காய். சலியாத-கொடுத்து இளையாத.

௬௮. கவளம்-வாயளவு கொண்ட உணவு. வாய் தப்பின்- வாயினின்றுந் தவறிவிழின். தூங்குங்களிறு - அசையுமியல்பினை யுடைய ஆண் யானைகள். உய்யும் - பிழைக்கும். ஆரும் கிளை- நிறைந்த சுற்றம். அயின்று-உண்டு. இது பிறிது மொழிதலென் னும் அலங்காரம்: செல்வர்க்குத் தம் பொருளின் ஒரு சிறு பகுதி செலவு செய்தலாற் கேடின்றெனவும் அச்சிறு பகுதியாற் பல்லோர் பிழைத்துப் பயன் பெறுவரெனவும் பொருள் தருதலால். இதனை நுவலா நுவற்சி யென்பாரும் ஒட்டென்பாரும் உளர்.

௬௯. மாகம்-ஆகாயம். மாகஞ் சிறுகுதலாவது வெளிப்பரப் பெங்கணும் பொருள் பரந்து கிடத்தல். ஈகையின்-ஈறழ்பொரு: எக்கழுத்தம் - தலையெடுப்பு: 'எக்கழுத்தம்போல வினிதன்றே' என்பது சிந்தாமணி. 'எ பெற்றாகும்' என்பது தொல்காப்பி யம். எ அப்பொருட்டாதலை 'எத்தருமயிற்குழா' மென்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையா னறிக. மா கொல் பகை-யானை யைக் கொல்லுகின்ற பகைத் தன்மை. அதனை முனையிலேயுடைய ஒளி பொருந்திய வேற்படை யென்க. தீட்டுதல்-வரைதல்: இங்கே பதியுமாறு செய்தல். நகை முகம்-மகிழ்ச்சியோடு கூடிய முகம்.

௭௰. களைகண் - பற்றுக்கோடு. உற்றுழி - துன்பம் வந்த இடம். விளைவு-பயன். வெற்றுடம்பு என்றார் பிறர்க்குப் பயன்

படாமை கருதி. தனர் நடையது-தனரும் தன்மையை யுடையது. உடம்படுதல் - இணங்குதல். புகழ் விரும்பினோர் தம்முடம்பினை ஒரு பொருளாகக் கருதாது பிறர்க்கு வரும் துன்பங்களை நீக்குவா ரென்றவாறு.

௪௧. ஆற்றல் - வலிமை. மானம் - பெருமை. தோற்றல்- இழத்தல். ஓம்பினும் ஓம்புக-காப்பா ராயினுங் காக்க. சிறுவரை- சிறுபொழுது. மன்ற-தெளிவாக. இறுவரை-இறக்குங் காலம்.

௪௨. கலன்-இங்கே மங்கல நாண். அஃதழிந்தமையாவது கைம்மை யடைதல். ஒருங்க-ஒருவழிப்பட. பொய்-பொய்யாகிய உலக வின்பம். அதனை ஒழிந்தார் - துறவிகள். ஞாட்பு-போர். மொய்ம்பு-வலிமை. முரண்மறலி-வலிமையுடைய இயமன். தும்பை போர்மேற் செல்வோர் சூடும் பூவாதலின், தும்பை சூடினும் என்பது போர்மேற் கொண்டு வரினும் எனப் பொருள்படும்: அஃதாவது உயிர் கவரவரினும் என்றவாறு. கைம்பெண்டிரும் துறவிகளும் வீரரும் மரித்தற்கு அஞ்சாது தம் மானத்தைப் பெரிதும் பேணுவ ரென்க.

௪௩. அழுகி - அழுகுதலால். யோசனை - இங்கே நெடுந் தூரத்தை யுணர்த்திற்று. கழி முடை நாற்றம்-மிகுந்த துர்க்கந் தம். விழலர்-வீணர். விளிவு - இறத்தல். உன்னுதல்-கருதுதல். வெய் துயிர்த்தல்-பெருமூச்சு விடுதல். மெய்ப்பயன் கொண்டார்- உண்மைப் பயன் அறிந்தார். சளித்தல்-வெறுத்தல். சமை போடு தல்-உடம்பினை விடுதல்.

௪௪. இகல்-வலி. சீர் வழி-சிறப்பின் வழி. புனை-தெப் பம். 'மன்னனெப்படி மன்னுயிரப்படி' என்பது பழமொழி.

௪௫. செவிசுட-காதிற் சுடும்படி. இடித்து-நெருக்கி. மூட் டிப் போரவெனை முடிக்க. வாய் வெரீஇ-சொல்லுதற்கு அஞ்சி கவிழ் மதம்-சொரிகின்ற மதம். கைம்மா-யானை. பாகு-பாகன். அம்மாண்பு-அத்தன்மை. யானை மதம் பிடித்துத் தீய வழிச் செல் லும்போது பாகன் அதன் வசப்படாது நின்று அதனைத் தன் வச மாகத் திருப்புதல் போல அரசன் களிப்பு முதலியவற்றால் தீய வழிச் செல்லும்போது அமைச்சன் அரசன் வசப்படாது நின்று அவ னைத் தன் வசமாகத் திருப்புதல் வேண்டு மென்றவாறு. பாகு கைம்மா வயத்ததே-பாகன் யானையின் வசப்பட்டவனோ. அமைச்சு பாகு என்பன சொல்லால் அஃறிணையாகலின் அஃறிணைவினை கொண்டு முடிந்தன. இச்செய்யுட் பொருளைக் 'கதங்கொள் சீற் றத்தை யாற்றுவா னினியன கழறிப், பதங்கொள் பாகனு மந்திரி யொத்தனன் பன்னூல், விதங்களா லவன் மெல்லென மெல்லென விளம்பு, மிதங்கள் கொள்கிலா விறைவனை யொத்ததோர் யானை' என்னும் கம்பராமாயணச் செய்யுளிலுங் காண்க.



௪௬. கைவரும்-பழக்கமா யிருக்கின்றான். காதலித்து-வினைப் பெயர். செவ்வி-ஏற்ற காலம். எண்மையன்-காட்சிக் கெளியன். கண்ணிலன் - கண்ணோட்ட மில்லாதவன். உள் வெயர்ப்பினன்- உள்ளத்தே சினமுடையன்.

௪௭. பழைமை - தொன்றுதொட்டு வரும் நட்பு. கடைப் பிடித்தல்-உறுதியாகக் கொள்ளுதல். கேண்மை-உறவு. கிழமை- தொடர்பு. காதன்மை - விருப்புடையரார் தன்மை. உண்டே- உண்டோ. இறைமாண்டார்-அரசில் மாட்சிமைப்பட்டார். அரசர் வெகுளின் அவர் பழைமை கேண்மை கிழமை யாதும் பாரார்: அவர்க்குக் காதன்மையு மில்லை: ஏதிலரிவர் ஆர்வலரிவரென்னும் பகுப்புமில்லை யென்றவாறு.

௪௮. வறிது - பயனின்றி. காண்டும்-கண்டோம். கடை முறை-இறுதிமுறை. கைகொடுத்து-உதவி.

௪௯. உறுதி-இங்கே நன்மையை யுணர்த்திற்று. பயப்ப- தரும் முயற்சிகள். கடைபோதல்-முற்றுப் பெறுதல்: அஃதாவது எண்ணிய பயனைத் தருதல். இறுவரை காறும்-அது முடிவாங்காலம் வரை. இறும் உயிர்-இறக்குமென அறுதியிட் டறிந்த உயிர். ஆயுள் மருந்து-ஆயுளைக் கொடுக்கும் மருந்து. அல்லனபோல் ஆவனவும் சில உண்டு-முற்றுப் பெறாதனபோற் காணப்பட்டுப் பின் முற்றுப் பெறுவனவும் சில வுண்டு.

௩௰. முயற்றின்மை - முயற்சியின்மை. உயலாகா - முடிவு பெறாத காரியங்களை. ஊழ்த்திறத்த-ஊழின் பகுதியையுடையன : அஃதாவது ஊழாலே அக்காரியம் முடியவில்லை யென்பது. மயலா யும்-மயக்கங் கொண்டேனும். ஊற்றம் இல் தூ விளக்கம்-நிலைத் திருக்குந் தன்மையில்லாத தூய விளக்கு. எறிகால் - வீசுகின்ற காற்று.

௩௧. உலையா-கெடாத. களைகண் - பற்றுக்கோடு : இப் பொருள் முன்னுங் கூறப்பட்டது. ஊழின்வலி-விதியின் வலிமை. பால்-ஊழ். பால் முளை-ஊழின் முளை : அஃதாவது ஊழ் காரண மாக வரும் பிறப்பு. மறலி-இயமன். கான் முளை-பிள்ளை : இங்கே மார்க்கண்டேய முனிவரைக் குறித்தது. கரி-சான்று. போலும்- அசை. மறலி யுயிர்குடித்தமை சிவபெருமான் செயலேனும் மார்க் கண்டேயர் காரணராயிருந்தமைபற்றி அவர் செயலாக உபசரித்தார்.

௩௨. ஒருவினை செய்வார் அறியவேண்டுவன இவையென் பது கூறப்படுகின்றது. செய்வினையின் மூலம்-தாம் செய்யுங் காரி யத்தின் காரணம். விளைவு-அச்செயலான் வரும் பயன். சூழ்தல்- ஆராய்தல். துணைமை வலி - துணையா யுள்ளோரது வலிமை. ஆள் வினை-முயற்சி. சூழ்வன சூழ்தலாவது தான் செய்யப் புகுஞ் செய லுக்கு வரு மிடையூறுகள் அவற்றை விலக்கும் முறைகள் முதலி யன. ஆகவே ஒரு காரியஞ் செய்யப் புகுவார் காலம், இடம், காரணம், பயன், இடையூறு, விலக்குமுறை, துணைவலியாகிய வேழனையும் ஆராய்ந்து தொடங்குக என்றவாறும்.

௩௩. கண்துஞ்சுதல்-தூங்குதல். எவ்வெவர் தீமை-எவரெவ ராயினுந் தமக்குச் செய்யும் பொல்லாங்கு. செவ்வி-காலம். தாம் மேற்கொண்ட காரியத்தின் பயனை எதிர் பார்ப்பவர்கள் இவ்விவற் றைப் பொருட்படுத்தா ரென்பது கூறப்பட்டது.

௩௪. ஓம்புதல்-பரிகரித்தல்; முன்னுங் கூறப்பட்டது. கயம்- நீர். நிறை கயத் தாழ் நீர் மடு-நிறைந்த நீரையும் ஆழமான தன்மை யையு முடைய மடு. மடு-நீர்நிலை. காண்பு-காணுதல்.



௩௫. புறப்பகை - வெளிப்படையான பகை. அகப்பகை- புறத்துப் புலனாகாத பகை. சொல் ஒன்றின் யாப்பார்-ஒரு சொல் லிலே கட்டவல்ல முனிவர். முனிவர் தஞ் சொல்லாலே யாவும் நடத்துவரென்பது 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டி விடும்' என்னும் திருக்குறளானு மறிக. பரிந்து - வருந்தியும். அத்தகைய முனிவரும் உட்பகையாகிய காமத்தை யஞ்சிக் காப்பர் என்க.

௩௬. நட்டு-நட்புக்கொண்டு. வேர்ப்பார்-புழுங்குவோர். அவர திணக்கம் நஞ்சுபோன்ற பகையே யாதலின் அதனை நச்சுப் பகைமை யென்றார். செய்யேல் - செய்யாதே. கருவி - ஆயுதம். கருவியிடுதலாவது சத்திரமிடுதல் முதலியன.

௩௭. குய்யம்-வஞ்சம். எய்யாவினை சூழ்ந்து - பிறரால் அறி யப்படாத பல தீவினைகளை ஆராய்ந்து. வட்கார்-பகைவர். திட்பம்- உறுதி. நாள் உலந்தது அன்றே-வாழ்நாள் முடிந்தது. ஆயின் அவருடம்பு நிற்கக் காண்கின்றோமே யெனின் நடுவனென்னும் பெயரினனாகிய இயமன் அப் பெயர்க்கேற்ப நடுவு நிலைமையின்மை யின் தான் செய்யவேண்டுந் தொழிலை மறந்து வாளா கிடக்கின்றா னென்க.

௩௮. கறுப்பு-கோபம். 'காய்வதன்க, ணுற்றகுணந்தோன்றா தாகு முவப்பதன்கண், குற்றமுந் தோன்றா கெடும்' என்பதும் ஈண் டறியத்தக்கது.

௩௯. கனியும் மொழி-கனிந்து உரைக்குஞ் சொல். கடு- நஞ்சு. அனல் கொளுந்தும்-அனல்பற்றிய. வெங்காரம்-ஒருவகை யுப்பு. மெய்பொடித்தல்-சரீரத்தில் உரோமஞ் சிலிர்த்தல். சிங்கி- நஞ்சு.

௪௰. குறளை-கோள். சொல்லின் வழு எய்தாமை காத்தும்- தான் கூறுஞ் சொல்லிலே குற்றமாக வாராமற் காத்தும். மெய் யிற் புலம் ஐந்தும்-உடம்பிலேயுள்ள ஐம்பொறிகளும். நல்லாறுவது சொல்வழுவையும் ஐம்பொறியையுங் காத்து மனமாசு அகற்றுத லென்க.

௬௧. தலை நின்றார்-தலையென்பது உபசர்க்கம். நல்கூர்ந்தும்-வறுமை யெய்தினும். அல்லன-நல்லனவல்லன : அவையாவன தீயன. ஒருப்படார் - இணங்கார். பல்பொறியபல புள்ளிகளை யுடைய. புலியேறு-ஆண்புலி. அற-மிக. பைங்கட்புனம்-பசுமையான இடத்தையுடைய கொல்லை. பைங்கூழ்-பசியபயிர்.

௬௨. குலம்-அங்கே குலத்திற்கேற்ற ஒழுக்கம். வெறுக்கை-செல்வம். வாய்மை நலம்-மெய்பேசுதலாகிய நன்மை. ஊன்-உடம்பு. வாழ்வு-செல்வம். இஃதிப்பொருட்டாதலை 'வாழ்வெனு மையல்விட்டு' என்னும் சிவஞான சித்தித் திருவாக்கா னறிக. உரிமை-தனக்குள்ள நன்குமதிப்பு. ஒருவன் பொருள் வருவாய் கருதித் தன் குல வொழுக்கத்தையும், மெய்ம்மையையும், தவத்தையும், நன்குமதிப்பையும் கைவிடலாகாதென்பது கூறப்பட்டது.

௬௩. இடை-தக்க சமயம். அச்சுறுத்து-அச்சத்தை யுண்டாக்கி. எமாப்பார் - இறுமாந்திருப்பார். பொம்மல் - பொலிவு அஃதாவது பூரிப்பு. ஒருவன் எளியோர் பொருளை அவரை அச்சுறுத்து வஞ்சித்துப் பெறுவானாயின், அப் பொருள் முற்படப் பெருகுதல்போலத் தோன்றினும் பின்னர்க் கெட்டுவிடு மென்பதாயிற்று.

௬௪. பெற்ற-கிடைத்த பொருள்கள். பெறாத-கிடையாத பொருள்கள். சிற்றுயிர்-சிற்றறிவு சிறு தொழிலுடைய வுயிர்கள். ஆக்கம்-சிறப்பு. வாய்மடுத்து - உண்டு : அஃதாவது எரித்து. விராய்-விறகு. எரிதழல்-எரிகின்ற தீ. எங்ஙனம் தீ தன்பால் வரும் விறகனைத்தும் எரித்தப்பின் விறகின்மையாலேனும் தானும் அழிகிறதோ அங்ஙனம் பெற்றவைகளைச் சிறியனவாகக் கொண்டு பெறாதவைகளிலே ஆசை கொள்பவன் அப் பொருள் பெறாமையாலே வருந்தி யழிவனென்றவாறாயிற்று.

௬௫. நிலை-ஆச்சிரமம் : தகுதியுமாம். குடிமை-குடிப்பிறப்பு. தப்பலமே-தவறுதல்: அஃதாவது பொருத்தமானதாக. ஒத்த கடப்பாடு-ஏற்ற முறை. தாள்-முயற்சி. எய்த்தும்-(வறுமை முதலியவற்றால்) தளர்ந்தாராயினும். அறங்கடை - பாவம். வெஃகுதல்-



விரும்புதல். புறங்கடை-தலைவாயில். தமது வருணச் சிரமங்கட்குப் பொருத்தமாக ஏற்ற முறையில் முயற்சி செய்து, தளர்ந்தும் பாவ வழியிற் செல்லாதும் பிறர் பொருளை விரும்பாது மிருப்பார் தலை வாயிலிலே பொருள் தானே வந்து சேருமென்பதாம்.

௬௬. பொது மகள்-வேசை. கலன் அழிந்த கைம்மையார்-மங்கல நாணிழந்த விதவைகள். தலையாயார் செல்வங்கள் பலர்க்கும் பயன் படுதலானும் இடையாயார் செல்வங்கள் அச் செல்வமுடையார்க்கு மட்டும் பயன்படுதலானும் கடையாயார் செல்வங்கள் எவர்க்கும் பயன்படுதலின்மையானும் அம்மூன்றும் முறையே வேசை குலமகள் விதவையாகிய மூவர் நலங்களோ டுவமிக்கப் பட்டன.

௬௭. வள்ளன்மை - ஈகைத் தன்மை. அஃதில்லாதான் - உலோபி. செல்வத்தின்-உறழ்பொரு. மற்றையோன்-ஈகைக் குணமுடைய வறியோன். நல்குரவு - வறுமை. போலும் - அசை. கொன்னே - பயனின்றி. கண்ணறையன் - கண்ணோட்ட மில்லாதவன்.

௬௮. இன் சொலினும் நல் கூர்தல் - இனிய சொல்லிலும் வறுமை யடைதல் : அஃதாவது இனிய சொல்லுங் கூறாதிருத்தல். ஓவோ-வியப்பிரக்கக் குறிப்பு : ஓகோ என எதுகைக் கேற்பப் பாடங் கொள்வாருமுளர். நா-நாக்கு. தீவினைக் கம்மியன்-தீவினையாகிய கம்மாளன். கம்மியன்-கம்மத் தொழில் வல்லோன். ஆவா-இரக்கக் குறிப்பு.

௬௯. நல்வினை கோறலின் வேறல்ல - புண்ணியத்துக்குக் காரணமான வினைகளைக் கெடுத்தவன் வேறான செயலன்று. வல்லை-விரைவு. அஞ்சுபவோ - அஞ்சுவார்களோ. தமது செல்வாக்கினாலே பிறர்க்கு உளதாகும் பயனின்னதென் றறிந்தவர்கள் தமது செல்வாக்கினாலே தமது செல்வம் அழிவதாயினும் அதனைப் பொருட் படுத்தார். ஏனெனின் அரிதாகக் கிடைத்தற்குரிய செல்வாக்கு உண்டாயின் அதனைப் பயன்படுத்தாது வீணிலே விடுதல் நல்வினையைக் கெடுத்தலேயன்றிப் பிறிதில்லையாதலின் என்க.

௭௰. சிறு முயற்சி யென்றது முற்கூறிய செல்வாக்கினாற் செய்யப்படும் உதவி. ஆங்கு-அசை. உறுபயன்-பெரும்பயன். தாழ்வரோ-தாமதஞ் செய்வரோ. அறனல்ல - பாவங்கள். எண்மைய ஆயினும்-செய்தற்கு எளியனவே யாயினும். ஒண்மை-நன்மை: அஃதாவது அறம். தீர்ந்து ஒழுகலார் - தவறி நடக்கவறியாதவர்கள்.

௭௧. செயக் கடவ அல்லன-செய்தற்கு இயலாதன. செய்தும் மன்-மிகுதியுஞ் செய்வோம். நயத்தகு நாகரிகம்-விரும்பப்பட்ட நாகரிகம். நாகரிகம்-நகர சம்பந்த முடையோர் செயல். நகரசம்பந்த முடையோர் புண்ணியரென்பது நூற்கருத்தாகலின், நாகரிகம் புண்ணியர் செயலெனப் பொருள்படும். செயிர்த்தல்-சினந்து கடிதல். நோம்-வருந்தும். துமிப்பான்-வெட்டுபவன். எஞ்சாது-முற்றிலுஞ் செய்ய முடியாத காரியத்தை நாம் செய்து முடிப்போமென்று கூறி ஒருவனை வஞ்சித்தல், ஒருவன் நாம் சினந்து கடிந்து உரைப்பின் அவன் நெஞ்சு வருந்துமே யென்று எண்ணிச் சினந்து கூறாது பின் அவன் தலையைத் துமித்தற்கு ஒருப்படுதல் போலா மென்றவாறு.

௭௨. அல்லன - தம்முடைய தகுதிக்குப் பொருந்தாதன. ஆகுலம்-பலரும் அறிதல். சூழ்-பயன். ஒல்காதார்-மன வமைதியில்லார். உலம்புவ - ஆரவாரஞ் செய்வார்கள். அறிமடம்-அறிந்தும் அறியார் போன்றிருத்தல். மனவமைதி யில்லாதார் தம்முடைய தகுதிக்குப் பொருந்த மில்லாத சில சிறு நற்காரியங்களைச் செய்யினும் பலரும் அவற்றை யறிதலையே பயனாகக் கொண்டு தம் வாயாற்கூறி ஆரவாரஞ் செய்வாரல்லது வேறு பிறராகிய மன வமைதியுடையோர் செய்வது போலத் தம்முடைய தகுதிக்குத் தக்க சிறந்த நற்காரியங்களைச் செய்தும் அறியார் போன்றிருப்பாரல்லரென்றவாறு. பிறர் பிறர் செய்பபோற் செய்து என்று கூட்டி அதற்கேற்பப் பொருள் கூறுதலுமாம்.

௭௩. பகையின்று-பகையில்லாமல். நகை-இகழ்ச்சி. பயம்-பயன். மெய் விதிர்ப்பு-உடம்பு நடுங்குதல். கொடிறு-கதுப்பு. கைவிதிர்த்தல்-கைந் நடுங்குதல். பழி கூறுவோன் பிறரா லஞ்சப்படுதல் கூறியவாறு.



௭௪. கண் நின்று நின்று-பல காலும் அவரெதிரில் நின்று. தெய்வம் இலதென்பார்க்கு இல்லை-தெய்வமில்லை யென்று கூறுவார்க்கு அவ்வாறு பலகாலும் எதிர் நின்று ஒறுத்து கல்வழியிற் செலுத்துமாறில்லை. செயப்படு னென்றமையால் அவர் செய்யாமை பெற்றாம்.

௭௫. ஆக்கம்-செல்வம். தீயன-அவர் செய்த தீய செயல்கள். தீயனவே-தீய செயல்களே. வலியுறுத்தற் பொருட்டு 'வேறல்ல' என்றும், தீயன நல்லனவாதலு முளதோவென்னும் ஐயப்பாடு நீக்குதற் பொருட்டு 'தீயன நல்லன வாகாவாம்' என்றும் கூறினார். நா இன்பு உற நக்கி-நாவினால் இன்பமுண்டாகும்படி நக்கி. வையமா - காட்டுப் பசு.

௭௬. நன் மக்கள்-பெரியோர். சொன்னா-சொல்லிய நாவிலே. தழும்பிருத்தலாவது அப்பெரியோர் இவாது புகழைப் பலகாலுங் கூறுதல். நான் வாயும் - நாடோறும். உன்னி - எண்ணி. உள் உடைதல்-மனங் குலைதல். அறிவுடையோர் ஊழ் வலியால் (அபுத்தி பூர்வமாக) தீவினையை ஒரோ வழிச் செய்தாராயினும் அவர் அது பற்றித் தமக்கு வரும் பழியை நாணி மனங் குலைவர்: ஆகையால் அவர் பிறரால் இகழப்படார்.

௭௭. பிறன் வரை நின்றான்-மற்றவனுடைய எல்லையிலே நின்றவன்; பரஸ்திரீ என்றவாறு. கடைத்தலை-வீட்டு வாயில். சேறல் - செல்லுதல். பிறன்மனை விழைதல் அறமன்றாயினும் ஆகுக: அஃது இன்பந் தருமேல் அதனை யொருவன் கொள்க. அஃதன்றி உடம்பு நடுங்க மனம் நடுங்கும் நோய் இன்பமன்று என்றவாறு. சிறுவரையும்-கொஞ்சமாயினும். நன்னலந்தது-நல்ல இன்பத்தைக் கொடுப்பது. மெய்ந் நடுங்க உண்ணடுங்கு நோயென்றதனைப் 'புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சம், துய்க்குமிடத் தச்சந் தோன்றாமற் காப்பச்சம், எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ, உட்கான் பிறனில் புகல்' எனவும் 'காணிற் குடிப்பழியாம் கையுறிற் கால்குறையும், மாணின்மை செய்யுங்கா லச்சமாம்-நீணிரயத், துன்பம் பயக்குமாற் றச்சாரி நீகண்ட, வின்ப மெனக் கெனைத்தாற் கூறு' எனவும் வரும் நாலடியார் கொண்டு தெளிக.

எஅ. இன்பந் துய்க்குமாறு கூறுகின்றது. கருமம்-செய்யற்பாலனவாகிய நற்செயல்கள். சிதையாமே-அழியாமல். இன்னலமும்-தம்முடைய உடல்வலி முதலாயின : இல் நலமெனப் பிரித்து இல்லற நன்மை யென்பாருமுளர்; அது முற்கூறப்பட்ட தருமத்து ளடங்குதலின் அவ்வுரைபோலி யென்க: யாண்டும் இன்னல மென்பதை இல்நல மெனப் பிரித்திடர்ப்படுவ தவரியல் பென்க.

எகூ. கொலை அஞ்சார் - இரண்டனுருபேனும் ஐந்தனுருபேனும் விரிக்க: 'அச்சக் கிளவிக் கைந்துமிரண்டு, மெச்சமிலவே பொருள்வயினான' என்பது தொல்காப்பியம். கதுவப்பட்டார் - பற்றப்பட்டவர்கள். காம மீதூரப்பட்டார் ஏனைய தீச்செயல்க ளெல்லாம் புரிவரென்பதாம். இதனைக் 'காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோடாத, காமமே களவுக்கெல்லாங் காரணங் கூற்றமஞ்சுங், காமமே கள்ளுண்டற்குங் காரண மாதலாலே, காமமே நரகபூமி காணியாக் கொடுப்பதென்றான்' என வருந் திருவிளையாடற்புராணச் செய்யுளானு மறிக.

அய. திரு-இலக்குமி. மனைக்கிழத்தி - மனைக்கு உரியவன் : அவன் மனைவி. பிறர் மனை-பரதாரம். பீடு-பெருமை. பிறர்மனை விரும்பாமையே ஒருவர்க்குப் பீடு. நாயனாரும் 'பிறன்மனை நோக்காத பேராண்மை' யென்றார். நறுவிய - நல்ல மணமுடைய பொருள்கள். வாயின - வாயிடத்திலுள்ளன. கடு - கைப்புள்ள பொருள்கள். தீய விலங்கு-இங்கே ஒட்டகத்தைக் குறித்தது. 'தன்னரும் பாரந் தாங்கிய வொட்டகந், தெள்ளு தீங்கரும் பியாவையுந் தின்கில, வுள்ள மென்னத்தம் வாயு முலர்ந்தன, கள்ளுண் மாந்தரிற் கைப்பன நாடியே' என்றார் கம்பர்.

அக. நன்மனைவிக்கு உரிய குணங்களை உருவகப்படுத்தினின்றார். கற்பு ஆடை, அன்பு மலர், நாண் மெய்ப்பூச்சு, நற்குண நற்செய்கைகள் அணிகலம், மக்கட்பேறு செல்வம். இவையனைத்துமுடைய நன்மனைவியை ஒருவன் பெற்றால் அக் கணவனுக்குச் செய்தவம் வேறு இல்லை என்றவாறு.

அஉ. பெண்கள் நிலையற்ற மனமுடையா ரென்பது கூறப்படுகின்றது. ஏர் தெழில் - சிறந்த அழகு : இதனை 'ஏர்தபோன்



விளக்கு' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையான் அறிக. அஃதறியார் 'எவராலுங் கொள்ளப்படும் அழகு' என் றுரை கூறுவர். இளையான் - இளமைப் பருவமுடையான். கார்தையர்-பெண்கள். கேள்-கணவன். இச் செய்யுளிற் கூறப்பட்ட செய்தியை 'அன்பு நூலாக வின்சொ லலர்தொடுத் தமைந்தகாத, லின்பஞ் செய்காமச் சாந்திற் கைபுனைந் தேற்றமாலை, நன்பகற் சூட்டி யின்னா தொழுகினு நங்கைமார்க்குப், பின்செலும் பிறர்கணுள்ளம் பிணையனார்க் கடிய தன்றே' என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளாலும், 'ஐம்புலன் களும்போ லைவரும் பதிகளாகவு மின்னம் வேறொருவ, னெம்பெருங் கொழுநனாவதற் குருகு மிறைவனே யெனதுபே ரிதயம்' என வரும் பாரதச் செய்யுளாலும் அறிக.

அரு. கற்பு இல் மகள் - கற்பு இல்லாத பெண். நலம் விற்று உண்ணும் பொற்றொடி நல்லார்-தங்கள் இன்பத்தைப் பிறர்க்கு விற்றுப் பெறும்பொருள் கொண்டு வாழ்நாள் கழிக்கும் பொருட்பெண்டிர். இல்லிருந்து தீயொழுக்கம் பயில்வார் தங்கணவர்க்கும் மற்றையோர்க்கும் தமக்கும் சுற்றத்தார்க்கும் தீமைபுரிதலின் அவரினும் அவ்வாறு தீமைபுரியாத பொருட் பெண்டிர் சிறந்தோரென்றவாறு. இதனால் இல்லிருந்து தீங்கொழுகுவாரது இழிவு கூறப்பட்டது.

அசு. முறைமை - தனக்கு இன்ன முறையினரெனக் கருதுதல். குடிமை - தமது குடியின் பெருமை. பான்மை - சாதியின் பிரிவு. நிறை - மனத்தைக் கற்புநெறி நிறுத்தல். பெற்றிமை - தன்மை. பேதைமைக்கு உண்டோ - பேதைமைத் தன்மைக்கு உளதோ. கற்பிலாப் பெண்டிர் பெரும்பாவஞ் செய்தோரென்பார் அவரையே பெரும் பாவமென்றார்.

அஎ. பெண்மை - பெண்களுடைய அழகு முதலியன. வியவார் - நன்கு மதியார். பெயரும் - பெண்ணென்னும் பெயரும் உறைப்ப-பதியுமாறு. பண்ணொடு பாடல்-இராக வாலாபனையோடு பாடப்படும் பாடல். அவ்விதம் பாட்டுக் காமத்தை விளைத்தலின் அதனைச் செவிமடுத்த லாகாதென்றார். நச்சினார்க்கினியரும் 'பாட்டுக்காமத்தை விளைத்தலின்' என்றார். செவிமடுத்தல் - கேட்டல்.

பண்பல்ல-மற்றும் நன்மையல்லாதன. வீடு இல்புலம் - கெடுதலில்லாத ஐம்புலம். அவற்றிற்குப் பகையாயினார் துறவிகள். 'ஸ்த்ரியம் குணபவத் பச்யேத்' (மகளிரைப் பிணமெனக் காண்க) என்பது சிவாகமத்திற் சைவ சந்நியாசவிதியிற் கூறப்பட்டது.

௮௬. துயில்சுவை - தூக்கத்தினால் வருமின்பம். தூசல்லார் தோட்சுவை - மகளிரைத் தழுவுதலால் வருமின்பம். அயில்சுவை - உண்டியால் வரும் இன்பம். 'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்' என்பதும் அறிக. பித்து-பித்தர்கள். துறவிகள் பித்தர் உணவு கொள்ளுதல்போல உணவு கொள்ளுவர் என்றவாறு. 'ஔஷதஞ் சாக்ஷபாராதிம் வ்யாதிப்ரதா சாந்தயே சரேத்' (அன்னபானத்தினைப் பசிப்பிணி தீர்த்தற்கு மருந்தாகக் கொள்க) என்பது சிவாகம விதி. பிறர் சிலர்-உலகவின்பத்தில் ஈடுபட்டு நிற்போர். மொத்துண்ணுதல்-அடிபடுதல்; இங்கே ஐம்புல வாசையால் அடிபடுவார். மொய்ம்பு - இங்கே தவ வலிமை.

௮௭. அன்பு-தொடர்புபற்றி ஒருயிர்மேல் நிகழ்வது. அருள்-தொடர்பு பற்றாது அவ்வாறு செல்வது. துறந்தார்க்குப் பிறவுயிர்கள்மேல் அன்பும் அருளும் இருப்பினும் தம் முடம்பின்மேல் அவை யில்லையென்றவாறு. உயிர் நிலை - உயிர் நிற்றற்கிடமாகிய உடம்பு. என்பு இயக்கம் - எலும்புகள் எண்ணிக் கணக்கிட்டுக் கொள்ளலாமாறு மேலெழுந்து தோன்றுதல். புறந்தரார்-காவார். புன்புலாற் பொய்க்குடில்-இழிந்த ஊனு லியற்றப்பட்ட உடம்பு. போதம் - ஞானம். அதனால் அவர் வேய்ந்த புக்கில் - மோக்ஷம். 'ஞானத்தால் வீடு' என்பது சித்தியார்.

௮௮. செல்வீது - சிறமை யுடையது. பேரின்ப மாக்கடல் பேரின்பமாகிய பெரியகடல். பார் இன்பம் - உலகவின்பமாகிய சிற்றின்பம். பாழ்ங்கும்பி - அழுகற் சேற்றுநீர். கடலிலாடுபவர் சேற்று நீரிலாடுவரோ என்று கூறிய நயமுணரார் கும்பி யென்பதற்கு நரகமெனப் பொருள்கூறி யிடர்ப்படுப.

௮௯. இணைவிழைச்சு - மகளிர்ப் புணர்ச்சி. தெவ் - பகை. தூர்த்தர் - இடங்கழியான ராகிய காமுகர். அலர் - பழிச்சொல். துறவியர் தம்முற வொழுக்கத்திற்கு விலக்கப்பட்ட பவதிச்செயல்க



ளுடைய ராயினும் இணைவிழைச் சொன்றுமட்டும் இலராயின் அவரை அவர் பகைவருந் திசைநோக்கித் தொழுவர்: அவ்வாறன்றி ஏனைத் தீச்செயல்க ளிலராயினும் இணைவிழைச் சொன்று மட்டுமுடையராயின் அவரைக் காமுகரும் பழிதூற்றுவ ரென்பதாம்.

௯௰. பரபரப்பு-விரைவு. பாழ் - பயனில்லாத காரியம். நல்லாறு- நல்ல வழி. ஊக்கின் - ஊக்கப் படுத்தினால்: தூக்கினெனப் பிரித்துச் செலுத்தினெனப் பொருள்கோடலும் பொருந்தும்.

௯௧. இளையம் - இளமைப் பருவமுடையேம். முது தவம் ஆற்றுதும்-முதுமையில் தவத்தைச் செய்வோம். நோற்றலாவது-உடம்புக்கு வருந் துன்பங்களைப் பொறுத்தல். உளைவு இன்று - வருத்தமின்றி. கண்பாடு-தூங்குதல். ஊழ்-முறை. விளிவு இன்று-கேடில்லாமல். காண்பார் - இங்கே முனிவர். தாழாமே - தாமதமின்றி. உலகத்தார் தம்முடைய வாழ்நாள் இவ்வளவின தெனக் கேடின்றி யறிவாராயின், அவர் 'இப்பொழுது நாம் இளையம்; முதுமையில் நோற்றுத் தவம் ஆற்றுதும்' என்று வருத்தமில்லாமல் தூங்குதலும் முறையாகும். (அவ்வாறு காணுதல் கூடாதே) அஃதன்றியும் தம் வாழ்நாளின் எல்லையை யறிந்த முனிவரும் காலதாமதஞ் செய்யாது தவஞ்செய்வர். இங்ஙனமாகவும் சாதாரண மனிதராகிய உலகினர் வாளா பொழுது கழிப்பது என்னை யென்றவாறு.

௯௨. நோனுமே - பொறுமல். அல்லன-தீயவூழ்கள். அல்லவற்றில்-தீயகாரியங்களில். உய்க்கும் - செலுத்தும். எல்லி-இரவு. மறித்து வியல்நெறி-பெரிய வழி. ஆறு அலைத்து உண்பார்-வழியிலே மறித்துப் பொருள் பறித்து வாழ்பவர். செலவு - செல்லும் நெறி. பிழைத்து-விலகுமாறுசெய்து: இது பிறவினைப் பொருளில் வந்த தன் வினை; வடநூலார் இவ்வாறு வருவனவற்றை அந்தர்பாவிதணிச் என்பர். உய்ப்பபோல்-கொண்டு செல்லுதல் போல.

௯௩. புறம்பு ஆ-புறம்பு ஆக: அஃதாவது புறத்து விடயங்களிலே செல்லவும். துறந்தார் தவப்போர்வை-துறந்தவராகக் காணப்படுவாரது தவவேடமாகிய போர்வை. கஞ்சுகம் - சட்டை. எப்புலனும்-எந்த இந்திரியத்தையும்: எந்த இடத்தையு மென்று

பொருள் கூறுவாரு முளர்; கஞ்சுகம் ஒருவகையான் உடம்பை யேனும் வெயில் மழை பனி யிவற்றினின்று காக்கும்: இப் போலித் தவப்போர்வை அவ் வுடம்பைத் தானும் அவ்வளவினுங் காவாது ஆதலின் இப்போலித் தவப்போர்வை யாதோர் பயனும் அஃ துடையார்க்குத் தருவதன்றென்னும் நயம் அப்பொருளாற் பெறப் படாமையானும் கஞ்சுகம் உடம்பினையன்றி வேறு எதனையுங் காவாதென்பதில் யாதுஞ் சிறப்பின்மையானும் அப்பொருள் பொருந்தா தென்க. கஞ்சுகம் - கவசமுமாம்: அப் பொருட்குப் பகைவர் ஆயுதங்களின் எறிமுதலியவற்றினின்று உடம்பினைக் காக்கு மென்பது பொருளாகக் கொள்க.

௧௪. மதியிலி - அறிவில்லாதவன். வஞ்சித்த - தவவேடங் கொண்டு பிறரை வஞ்சித்த காரியங்களை. எங்கும் உளன் ஒருவன்- கடவுள். காணும்-காண்பார். அங்கம் குலைவது-உடம்பு பதறுவது. 'அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழி'லாதலால் அதனை 'அறிவு' என்றார்.

௧௫. மறைவழி-மறைவிடம். பட்ட-நடந்த. பழிமொழி- பழியான காரியம்பற்றி யுண்டாகிய சொல். ஓடிப் பரக்கும்- விரைந்து பரவும்; இதனை 'தார்த்தடம்புயத்தானவர் பல்லிய மார்த்தவோதை யகிலமும் புக்கதாற், றூர்த்த மங்கையர் சோர் வினிற் செய்பழி, வார்த்தை யெங்கணும் வல்லையிற் சொல்லல் போல்' என்னுங் கந்தபுராணத்து அக்கினி முகாசுரன் வதைப் படலச்செய்யுளானு மறிக. மூடை - துர்க்கந்தம். சென்று உதைக் கும்-போய்த் தாக்கும்: சென்று தைக்குமென்று பிரித்தலுமாம்.

௧௬. மெலியார் வலியாரென்பன இங்கே முறையே இல் லறத்தாரையுந் துறவறத்தாரையுங் குறிக்கின்றன. துறவினை நோக்க இல்லறம் மென்மையுடைமையின் அந்நிலை நிற்பார் மெலி யாரென்றும், இல்லறத்தை நோக்கத் துறவு வன்மையுடைமையின் அந்நிலை நிற்பார் வலியாரென்றுங் கூறப்பட்டார். நொய்ய-அற்ப மான பொருள்கள். சழக்கென-விரைவில். பிற-கனமான பொருள் கள். இச் செய்யுட்பொருளை 'இந்திரர் புகழுந் தொல்சீ ரில்லறம் புரிந்துளோர்க்குந், தந்தம தொழுக்கந்தன்னிற் றகுமுறை தவறிற்



றேனுஞ், சிந்திடுந்தீர்வு முண்டாற் செய்தவர்க்கனைய சேரி, லுய்ந் திட லரிதால் வெற்பினுச்சியிற் றவற லொப்ப' என வருங் கந்த புராணத்து மார்க்கண்டேயப் படலச் செய்யுளானு மறிக.

௧௭. இசையாத-பொருத்தமில்லாதன. போலினும்-போன்றி ருந்தனவாயினும். மேலையோர்-பெரியோர். அவர் செய்கைகளிற் சில உலகத்தார்க்குப் பொருந்தாதனவாயினும் அவை அவர்க்கு வசையாகா. ஆனால் அச்செய்கைகளை உலகத்தார் செய்வாராயின் அவை அவர்க்கு வசையேயாமென்க. பசு-யாகபசு. பசுவேட்டுத் தீயோம்புதலைப் 'பசுவேட்டெரியோம்பும்' எனத் திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் அருளிச்செய்திருப்பது கொண்டு தெளிக. வான் வழக்கம்-மழைபெய்தல். காண்பார் - காண்பவர்களாகிய முனிவர் கள். ஒப்பவே-ஒப்பார்களோ. இங்கே கூறப்பட்டது உடம்பினைப் பேணி மேலும் அது கொழுத்தற்பொருட்டு ஊன்றின்பவராகிய கொலைஞர் செய்யுங் கொலையே கொலையாவதல்லது தேவர்களைப் பரவி உலகத்தில் மழைவளஞ்சொரிதற் பொருட்டுப் பசுவேட் போராகிய முனிவர் செய்யுங் கொலைகொலையாகாதவாறுபோல உல கினர் செய்யும் பொருத்தமில் செய்கையே வசையாவதல்லது பெரி யோர் செய்யும் அச் செயல் வசையாகாதென்பதாம். யசுர் வேதத் தில் 'ப்ரதிபூருஷ மேககபாலந்நிர்வபதி ஜாதா ஏவப்ரஜாருத்ராந் ந்ரவதயதே' என்று தொடங்கும் பகுதியில் 'நக்ராம்யாந் பசூந் ஹிநஸ்தி நாரண் யாந்' (நாட்டிலுள்ள பசுக்களேனுங் காட்டிலுள்ள பசுக்களேனும் கொல்லப் படுவதில்லை) என்பது கூறப்பட்டது. இதனை ஸ்ரீஹரதத்தாசாரியர் சதுர் வேத தாற்பரிய சங்கிரகத் தில் 'யசுர்வேதமுடையார் உமாதேவியாரைச் சிவபிரானது தங்கை யென்று கூறுப' என் றருளிச் செய்த 'யா மாமநந்தி' என்று தொடங்குஞ் சுலோக வுரையில் சிவலிங்கபூபதி விளக்கியிருக்கிறார்.

௧௮. உப்பால்-புறம்பு. எம் உடையார் - எம்மை ஆளாக வுடைய ஞானிகள். தம்முடையான்-தம்மையாளாகவுடைய கடவுள். எப்பால்-எவ்விடம். கடவுள் எங்கும் நிறைந்து நிற்பினும் எதனி னும் தாக்கின்றி நிற்றல்போல ஞானிகளும் உலகத்தாரோடு கலந்து நிற்பினும் தமக்கோர் தாக்கின்றி நிற்ப ரென்றவாறும்.

௧௧. பொய் - பொய்ப்பொருள்கள்: அவையாவன நிலையில்லாத பொருள்கள். புலம்-இந்திரியம். கைவருதல்-சித்தித்தல். கண்ணு - கருத்தாக. மெய்யுணர்ந்தார் காப்பு - ஞானிகளுடைய காவல்: ஞானிகள் காவலாவது ஞானிகளுடன் பயிலுதலால் தம்முடைய பிராரத்த வாசனை பிரவேசியாது தடுத்தல். பழி நாணம்-பழியை நாணுதல். நிறை-மனத்தைப் புறவிடங்களிற் செல்லாது நிறுத்துதல். செறித்து-இறுக்கி.

௨௰. துறைபோதல் - கற்றவழி நடத்தல். தலைமகன் - தலைச்செம்பிள்ளை. முற்றத்துறத்தல்-அகப்பற்று புறப்பற்றுக்களை விடுத்தல். இறந்த எலாம் - அஃதல்லாத வினையவெல்லாம்.

௨௰௧. தீது-தீமையாகிய காமமுதலியன. ஒரீஇ - விடுத்து. நன்று-கொல்லாமை தவம் முதலியன. பெற்றது-இங்கே ஞானத்தையுணர்த்திற்று. திருத்துதல் - செம்மையாக்குதல். பற்றுவிரண்டனுள் முன்னது பற்றப்படுவதாகிய மோக்ஷத்தையும் பின்னது அதனையடைதற்குச் சாதனமாகிய தியான முதலியவற்றையுங் குறிக்கும். பணியற நிற்றல்-தன் செயல் யாதுமின்றி இறைபணி நிற்றல். ஒன்று-தேய எகப்பொருளாகிய கடவுள். நீள்நெறி-முத்தி.

௨௰௨. ஐயம்-இஃது யாதோ என ஒன்றிற்றுணிவு பிறவாதாராய்தல். திரிபு-ஒன்றை யதனோடொப்புமையுடைய வேறு பொருளாக மயங்கி நிச்சயித்தல். அளத்தல்-பிரமாணங்களால் அளத்தல். உத்தி-பொருந்துமாறு. துங்குதல்-தியான நித்திரைசெய்தல். கனவு கனவாகப் பூணுதலாவது தியானநித்திரையிற் கண்ட முதற்பொருளைத் தவிர மெய்ப்பொருளாக யாதொன்றுங் காணுமை. தீர்ந்த பொருள்-முடிந்தபொருள்: அஃதாவது சித்தாந்தம்.



திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேசிகன்றிருவடி வாழ்க.

---

# திருவாரூர் நான்மணிமாலை

## அரும்பொருள் விளக்கம்

---

நான்மணிமாலையென்பது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. அதன் இலக்கணம்

‘ வெண்பாக் கலித்துறை யகவல் விருத்த
நண்பாய் வருவது நான்மணி மாலை ’

எனவரும் பன்னிருபாட்டியற் சூத்திரத்தானறிக. இச் சூத்திரத்துள் வெண்பா கலித்துறை அகவல் விருத்தமெனப் பாவின் முறை கூறப்பட்டதேனும் பிற்காலத்தார் வெண்பா கலித்துறை விருத்தம் அகவலெனவே தொடுத்தனர். இந் நான்மணிமாலையும் இப் பிற்கால முறையிலே தொடுக்கப்பட்டது. இதன் செய்யுட்டொகை நாற்பது.

இனி, இரட்டைமணிமாலை யென்பது இவ்வாறே வெண்பாவும் கலித்துறையுமாக இருபது செய்யுளாற் பாடப்படும் பிரபந்தம். மும்மணிக்கோவை யென்பது இவ்வாறே அகவலும் வெண்பாவும் கலித்துறையுமாக முப்பது செய்யுளாற் பாடப்படும் பிரபந்தம்.

---

## காப்பு

கமலேசர்-திருவாரூரில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான். கமலை-கமலாலயம்: இலக்குமியாற் பூசிக்கப்பட்டமையின் திருவாரூர்க்குக் கமலையென்னும் பெயருண்டாயிற்று. இதனை 'இன்னும் வேண்டிய நல்வரங் கேட்டியென் றிசைத்தலு மெதிர் தாழ்ந்து, பொன்னு றழ்ந்தபூஞ் சுணங்கவிர் பூண்முலைப் பொன்னிரு கரங் கூப்பிப், பின்னல் வார்சடைப் பெருமவித் திருநக ரெனதுபேர் பெற்றோங்க, மன்னு மாருள் புரிந்தரு ளென்றனள் வள்ளலு மருள்செய்தான்' 'வரமளித்தான் மறைந்தனன் றிருமனை வல்லியு மாயோனை, யுரிய நற்பெருங் கணவனுப் பெற்றினி துவந்துவாழ் வுடனுற்று, ளரிய நற்றவ முனிவிர்கா ளன்றுதொட் டந்தணு ரூரென்னும், புரமதற்குவண் பூங்கமலாலய மெனும்பெயர் பொலிந்தன்றே' எனவரும் திருவாரூர்ப் புராணச் செய்யுட்களா லறிக. கவிதை-பா. அகத்தின் முயல்வோர்-மனத்தில் தியானிப்பவர். போதகம்-யானை: இங்கே விநாயகக்கடவுள். கழல் பாலிக்குமென முடிக்க.

## நூல்

க. நீரூர்ந்த முந்நீர்- நீர் நிரம்பிய கடல். நிலவலயம்-பூமண்டலம். கொடிஞ்சி-தேர்த்தட்டின் முன்னே தாமரைப்பூவின் வடிவிற் செய்து நடப்படுவது. நிலவலயத்தே ரென்க. சிவபெருமான் பூமண்டலத்தைத் தேராக வூர்ந்தது முப்புரமழிக்கச் சென்ற காலத்திலென்க. தியாகன்-தியாகராஜப்பெருமான்: இது திருவாரூரிலெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமான்றிருப்பெயர். வீதி விடங்கன் என்பதில் விடங்கன் என்பது சுயம்பு மூர்த்தி யெனப் பொருள்தரும். (டங்கம்-உளி. விடங்கம்-உளிசம்பந்தமில்லாதது) இம் மூர்த்தி ஏனைய சுயம்பு மூர்த்திகள் போலாது வீதியிலும் எழுந்தருளுதலால் வீதி விடங்கரெனப்பட்டார். வேலை-கடல். இங்கே பாற்கடல். மதிப்பாதிவிடம்-பாதிச்சந்திரனாகிய இந்த நஞ்சையும். கா- (வருத்தஞ் செய்யாமற்) காக்க. தலைவனைப் பிரிந்த தலைவி சந்திரோதயத்தால் வருந்திக் கூறியது. விடங்கரிதாயும் நிலாவெளிதாயு மிருப்பினும் பாற்கடலினின்றெழுதல் வருத்தஞ் செய்தலென்பவற்றாலிரண்டும் ஒத்தன.



உ. பார் பெற்றவல்லி-உமாதேவியார். பாகீரதி-கங்கை. இவ்விரு தேவியர்க்கும் மெய்ப்பாதியும் வேணியுந் தந்தாராகிய தியாகரென்க. தடம்புயம்-பெரிய தோள். நாண்-நாணம், வில்லினுண். வணங்கி-தலைகுனிந்து, வளைந்து. சிலை-மலை, வில் எனச் சிலேடைப் பொருள் கொள்க. பொன்மலை-மேருமலை. இது மேருமலை நாணால் வணங்கிச் சிலையெனப்பேர் பெற்றதற்குக் காரணங் கற்பித்தவாறு. இங்ஙனம் மேருமலை தானே வணங்கியதாகவும் அவ்வுண்மை யறியாதார் பொன்மலையை எம்பெருமான் வளைத்தாரென்று கூறுப. தேவிமார்க்குப்போல உறுப்பொன்றினைத் தியாகேசர் தாராராயினும் ஒருறுப்பின் சீரேனுந் தந்தாரில்லையே தாம் தியாகராதலின் அவர்க்கஃது தரிதுமன்றே யென மேரு வருந்திற்றென்க.

௩. என்பு-எலும்பு. ஆகம்-உடம்பு. நகுதலை-தக்கயாகத்திற் சிரித்து வந்த தலைகள். ஓடு-ஆமையோடு: பிரமகபாலமுமாம். உடம்பிலே எலும்பு நகுதலை ஓடு என்பவற்றை யணிந்த கமலேசரென்க. ஓடு-மூன்றனுருபுமாம். உன்றன்பாகம்-அர்த்த நாரீசவடிவத்திலேயுள்ள எம்பெருமானது வலப்பாகம். திருநிறம் வேறுதல்-பெருமாட்டி கருவிழி தோய்தலின் பெருமான் றிருமேனி கருநிறமாகவும் பெருமானது செவ்விழி தோய்தலின் பெருமாட்டி திருமேனி செந்நிறமாகவுமாதல். பொன்-அம்மையார். புகலொணாது-கூறமுடியாது.

௪. செங்கதிர்க்கடவுள் வெயில் - ஞாயிற்றினது வெயில். விழும்பிற் பொதும்பு என்க. பொதும்பு-சோலை. பாதபம்-மரம்: (அடியினால் நீர் குடிப்பதென்பது பொருள்). இருவேறு உருவின் மந்தி யென்றார் மாறுபட வடிவமும் விலங்குவடிவமு மொருங்குடைமையின். வருக்கை-பலாக்கனி. முளையெயிறு-முளைபோலும் பல். மடித்தலத்து இருத்தி-மடியிலே வைத்து. வகிர்தல்-பிளத்தல். மடுத்தல்-உண்ணுதல். மாறுபட மடங்கல்-நரசிங்கம். ஆடகப்பெய

ரின் அவுணன்-இரணியனென்னும் பெயரினையுடைய அசுரன்: புத்திசேனனைத் 'திங்கள் விரவிய பெயரினன்' என்றாற்போல. திணம்-கொழுப்பு. உண்டென - உண்டாற்போல. இரும்பூது-வியப்பு. பணை-வயல். தவிசு-இருக்கை. கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்கு என்றதை யசுர்வேதத்தில் அர்த்த நாரீசுர வடிவங் கூறுமிடத்து 'அஹோராத்ரே பார்ச்வே' (பகலுமிரவும் பக்கங்களாம்) எனவருதலானும் 'பகலுமிரவுஞ்சேர் பண்பினர்' 'இரவொடு பகலதாமெம்மான்' எனத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தலானு மறிக. நடுவண்வைகும் நாகிளங் குழவி-இருவருக்கும் நடுவில் வீற்றிருக்கும் முருகக்கடவுள். நாகிளங் குழவி என்பது 'ஒரு பொருளிரு சொற்பிரிவில வரையார்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலமைந்தது. ஒருவிரின்-ஒருவிரைப்போல. ஒருவிர் இருவிரென்ப முன்னிலைப்பெயர்கள். எந்திளிர்-வினையெச்ச முற்று. முச்சுடர் மூன்று கண்களை யுணர்த்திற்று. குமுதம் வாயினையும் தேறல் வாயூறலையுங் குறித்தன. எழுதாக் கிளவி-வேதம். இழுமெனல்-இனிதாதல். செவிகளுக்கு-செவிகளில். போக்கி-செலுத்தி. தீஞ்சொற்சுவை யமுதன்னுஞ் செவிகளிலே யான் எனது புன்மொழிகளைச் செலுத்தி அருள் பெற அமைந்தது அற்புத முடையதென்க.

௫. சிவபெருமான் திகம்பரராதல் பற்றிக் கூறியது இச்செய்யுள். தேங்குபுகழ்-நிறைந்த புகழ். ஒளி வீங்கு பகற்போது-ஒளி மிகுந்த பகற்பொழுதிலே. படம்-துகில்.

௬. ஒன்றிய-பொருந்திய. பொன்மார்பு-அழகியமார்பு. எம்தாய்-எம்முடைய தாயாராகிய உமாதேவியார். சூதொன்று-சூதாடு கருவிபோன்ற. களிற்று உரிவை-யானைத்தோல். மீது ஒன்றவு-திருமேனியிலே பொருந்துவது. வெங்கோபமா-யானை. அம்முகத்தான் மூத்தபிள்ளையார். இணைச்சுவடு-இரண்டனுருபுவிரிக்க. நியகேசர் திருமேனியிலே யானைத்தோல் பொருந்தியிருப்பதை விநாயகப்பெருமான் கண்டு இஃது ஒரு யானைபோலுமென்று கருதித் தனது மருப்பாற் பாய்ந்ததனாலுண்டாகிய இணைச்சுவட்டை உமாதேவியார் அவரைத் தழுவிய காலத்து அழுந்திய கொங்



கைச் சுவடென்பரென்றவாறு. கருணைவடிவாகிய எம்பிராட்டியார் தழுவியகாலத்து அவரது மென்முலை தாக்கி இச்சுவடுண்டாயிருத்தலில்லை. அது வெங்கோபமாமுகன் எதிர்பாய்ந்த காலத்து அவனது வெண்மருப்புத்தாக்கி யுண்டாயதேயாமெனக் கூறியதென்க.

௭. கமலா லய மால்-இலக்குமி ஒடுங்குந்திருமால். அவர் இதயத்திற் பொலிந்த தியாகேசரென்றதனை 'நிற்பமற் றித்திறநேமியான் முன்னைநா, ளற்புடன் வழிபடு மமலையைக் குமரனைத், தற்பரக் கடவுளைத் தனதுமார் பிற்கொடே, பற்பகற் பணியின்மேற் பாற்கடற் றுஞ்சினன்' எனவருங் கந்தபுராணச் செய்யுளானும், 'வீற்றிருந் தருளெந்தையை யன்னையை வீரவே லினையோனைப், போற்றி மற்றவர் தமைக்கொடு பாற்கடற் போந்துநாடொறும்பூசை, யாற்றி நெஞ்சமா மம்பொனங் கோயிலி னகத்துவைத் தீரைந்து, நூற்று வாயர வணைமிசைத் துயின்றன னுவலரும் புகழ்மாயோன்' எனவருந் திருவாரூர்ப்புராணச் செய்யுளானு மறிக. மண்மகளிதயம்-திருவாரூர். இதனைத் திருத்தொண்டர் புராணத்தில் 'மேதினிக், காதன் மங்கை யிதய கமலமா, மாதொர் பாகனு ராரூர்' என வருதலா னறிக. அக்கமலம் மான-அத்திருமாலின் இதய கமலம்போல. கமலை-திருவாரூர். திருமாலிதயம் கமலாலயமானது போல மண்மகளிதயமும் கமலாலயமாயிற்று: மனைவியரிதயமுங் கொழுநரிதயமும் ஒன்றாகு மதனாலென்றவாறு. கொழுநர் - கணவர்.

௮. தானம்-யானை மதநீர். நலம்பாடு-மேம்பாடு உண்டாதல். 'நலங்கிளர்......நாதன்' என்றாற்போல நன்மையும் பெருமையுமாம். துறந்து ஒரீஇ-அறத்துறந்து. இலம்பாடு இன்றி-தம்மிடத்து வறுமை யின்றாக. புரவலர் - புரப்போர். இரவலர் - இரப்போர். உருவம்-திருமேனி. இடப்பால் உமாதேவியார் தர்மசம்வர்த்தனியாயும் வலப்பால் சிவபிரான் கங்காளராயு மிருந்தலை வியந்தவாறு. விண்டொட நிவந்த - வான் அளாவுமாறு உயர்ந்த. அகடு-வயிறு: அஃதாவது நடு. ஆற்றுபு-ஆற்றி. கொடியார் - கொடியவர் எனவும் துகிற் கொடி யெனவும், மதியார் - அறிவுடையரெனவும் சந்திரனெனவுஞ் சிலேடையாற் பொருள்படும். வாழிய-வாழ்க.

௯. கருமான் - யானை. அதள் - தோல். கச்சு - அரவக்கச்சு. ஒருமான் - உமாதேவியார். சங்கத் தடங்காது - சங்கக்குழையணிந்த நீண்டகாது. அங்கத்து அவா அடங்காது என்க.

௰. அம்போருகம் - தாமரை. புள் - கொக்கின் வடிவமாய்க் கண்ணபிரானை விழுங்கவந்த அசுரன். தூவி - அம்பின் இறகு. அம்போர் - அம்பினையுடையவர். சிவபெருமான் முப்புரமெரிக்கச் சென்ற காலத்துத் திருமால் அம்பாகவும் வாயு அம்பினிறகாகவு மாயினராகலின் அவர் 'புள்வாய்கிழித்த தூவியம்போ' ரெனப் பட்டார். ஆவிஅம்போர் - உயிர்ப்போர்: அஃதாவது உயிரைக்கவர் தற்குச் செய்யும்போர். உகந்து - விரும்பி. உடன்றாலும் - எதிர்ந் தாலும். நெஞ்சமே நீ அவரை ஒருக: நாவே நீ அவர் நாமங்களை இயம்பு என்க. ஓர் உகளனப் பிரித்து நீ ஒருக மகிழ்க என்பாரு முளர்.

௧௧. நாமவேல் - பகைவர்க்கு அச்சந்தரும்வேல். வாமபாகம்- இடப்பக்கம். நீர்மங்கை-கங்காதேவியார். தாமம் - பெருமை. தன் நிறம்-கங்கையினது நிறம். நிரை-தொகுதி. காமர் - அழகு. விழிக் கயல் உலாவரலாவது - தியாகேசப்பெருமானைத் தரிசித்த பெண் டிர் கண்கள் அத்திருமேனியின அழகிலீடுபட்டு அடிமுதன் முடி காறும் மறித்து மறித்துச் செல்லுதல்.

௧௨. வருமுலை - பூரித்தெழுங் கொங்கை. வாங்குதல்-நடங் குதல். மாடங்களிலே பதிக்கப்பட்ட வயிரமும் நீலமும் செம்மணியு மென்க. மாஇருள்-மிக்க இருள். மழகதிர் - இளவெயில். சுரநதி - கங்கை. வாநதி - சிறந்தயாறு. வாநதிமூன்றாவன கங்கை யமுனை சோணையென்பன. திருவநீண்மறுகு-அழகினையுடைய நீண்டதெரு. திருவ-அசாரியை. 'திருவமேகலை' என்பதற்கு நச்சினார்க்கினியர் இவ்வாறு கூறினார்: திருவம் - அம் சாரியையுமாம். கடுப்ப - உவம வாசகம். துளைஞன்-மீன்பிடிக்கும் பரதன். ஊற்றம் இல்யாக்கை- நிலைபேறில்லாத உடம்பு. கேணிப்புலம் - கேணியாகிய இடம். ஐ-சிலேஷ்மம். வளி-வாதம். பித்து-பித்தம். மிதப்பு - தூண்டிலிற் கட்டப்பட்டிருக்கும் சடைக்கருவி: மீன் தூண்டிலிற் பட்டதை



அஃதறிவிக்கும். அயிறல் - உண்ணுதல். தள்ளாமுயற்சி - குன்றாத முயற்சி. இதனைத் 'தள்ளாவிளையுள்' என்பதற்குப் பரிமேலழகர் கூறியவுரையா னறிக. ஒழிந்தென - ஒழிந்ததென்று. கருக்குழி கழிய - பிறவியாகிய குழிகடந்து நீங்க. அருளுதியென வணங்குது மென்று முடிக்க.

௧௩. ஈசனூர் பூங்கோயில் - தியாகேசப்பெருமானது திருக் கோயில். பூங்கோயிலென்பது அதற்கொருபெயர். நந்தி புடைத் தலைப் 'பங்கயர் துளவநாரும் வேத்திரப்படை பொறுத்த செங்கை யெம்பெருமானந்தி' எனவருங் காஞ்சிப்புராணத் தாலும் 'வந்திறை யடியிற்றாழும் வானவர் மகுடகோடிப், பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற்றாக்கி, யந்தியும் பகலுந் தொண்ட ரலகிடுங் குப்பையாக்கு, நந்தியெம் பெருமான்' எனவருந் திருவிளையாடற் புராணத்தாலு மறிக. சிவபெருமான் மண்சுமந்தமை வையை நதியின் பெருக்கடைத்தற்கண் வந்தியின் பொருட்டு நிகழ்ந்தது. 'நாமோ எம்பெருமானது சாரூபம்பெற்ற நந்தி தேவராற்புடைக் கப்பட்டோம்; அது நமக்குப் புகழேயாயது. ஆனால் தேவாதிதேவ னாகிய எம்பெருமானே பாண்டியவரசனாற் புடைக்கப்பட்டார். அஃதவர் பெருமைக்கேலாதே; அன்றியும் நாம் புடைத்தன்மாத்தி ரம் பெற்றோம் அவர் புடைத்தலோடு மண்சுமத்தலும் பெற்றாரே' என முனிவர் உருகுவாராயினரென்க.

௧௪. வாதஹஸ்தம் இடக்கரமாதலின் அஃது உமாதேவியா ரது திருக்கரமாயிற்று. அது - அந்தக்கை. பலிகாதலித்துச் சிறந் தந்த செங்கைக் கமலேசரென்னும் பெயரடையாற் கமலேசாது இயல்பு கூறப்பட்டது; 'வேய்த்தோளவட்கு' என்னுந் திருக்குறளிற் போல. அரம் தந்த - அரம்போன்ற. வாள்-ஒளி. பிச்சை விரும்பிப் பிரமகபாலத்தைத் தாங்கிய கையினருக்குத் தியாகரெனும் பெயர் உமாதேவியார் அறம்வளர்த்துக் கொடுத்ததென்பது. இது போன்று திருநாவுக்கரசு நாயனாரும் முப்புரமெரித்தமையினைக் கூறினார். 'கற்றூர் பயில்கட லுகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே, விற்றாங் கியகரம் வேனெடுங் கண்ணி வியன்கரமே, நற்றா ணெடுஞ் சிலை நாண்வலித்த கரநின்கரமே, செற்றார் புரஞ்செற்ற சேவக

அவர் கருநிறமும், சிலையும் உடையராய் நீரையுமிழ்தலின் 'கரு முகில்' எனப்பட்டார். விசயன் - அருச்சுனன். வழுதி - அரிமர்த்தன பாண்டியன். நாவலர் பெருமான் - சுந்தரமூர்த்தி நாயனார். இது தியாகேசர் மகோந்நத நிலையினராயினும் அடியார் பொருட்டுச் செனலப்பியத் தன்மையுடையரெனக் கூறியவாறு.

கூஎ. தியாகேசர், உமாதேவியார், குமாரக்கடவுளாகிய மூவரும் முறையே கங்கை யமுனை வேணியாகிய மூன்று திருநதிகளையுமொப்பர் என்றவாறு.

கூஅ. தன் ஒக்கும் - தனக்குத் தானே சமானமாகும். தியாகேசரது திருச்சடாடவி எரியொக்கும், கொன்றை எரியிலிட்ட பொன்னொக்கும், அதிலுள்ள வண்டு கரியொக்கும், கங்கை ஆபரணஞ் செய்விக்கும் பெண்ணொக்கும், வெண்பிறை ஆபரணஞ் செய்யுங் கிழக்கோல்லனொக்கு மென்றவாறு.

கூகூ. தனவரை - பொன்மலையெனவும் கொங்கையாகியவரையெனவும் சிலேடையாற் பொருள்படும். அவ்விரண்டனுள் பொன் மலையாகிய மேருமலையே தியாகேசரது புயவரைக்குத் தலைவணங்கும்; உமாதேவியாரது கொங்கைவரை அப்புயவரையைக் குழையுமாறு பொருவதல்லது தான் வணங்குதலில்லை யென்றவாறு.

சய. கூட்டுண்ணுதல் - கொள்ளை கொண்டு உண்ணுதல். தெறிப்ப - சிந்தும்படி. பழுக்காய் - கமுகம் பழம். செடி படு முல்லை - அடர்ந்து படர்ந்தமுல்லைக் கொடி. தாறு - குலை. கண் - தோகையிற் கண். கூந்தல் - தோகை. முட்புறக்கனி - பலாப்பழம். கொட்பு - சுழலுதல். பணை - பறை. கடவுள் தோன்றி யெய்தி முன்னின்றாங்கு இழிந்து தோன்றி வழங்குமாலென முடிக்க. மதித்தல் - கடைதல், தியானித்தலென இருபொருள்படும். அவற்கு - இந்திரனுக்கு. முசுகுந்த சக்கரவர்த்தி தியாகேசரை இந்திரன்பாற் பெற்றவாலாறு கந்தபுராணத்துட் கூறப்பட்டது காண்க. புடவி - பூமி. மன்ற - தெளிவாக. மெமர்காள் நீர் இறைஞ்சுமின் என்க.

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேசிகன்றிருவடி வாழ்க

# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

## காப்பு

குடுமி - மலையுச்சி. குவடு - பக்கமலை. தவளநிலவு - வெள்ளிய கிரணம். வேதண்டம் - மலை. போர்க்களிறென்றது சிவபெருமானை. தென் - அழகு. பிடி - இங்கே உமாதேவியார். பிறந்து புணர்ந்து பயந்தளித்த குஞ்சரக்கன்றென்று முடிக்க. மின்பூத்த - மின்னல் போன்ற. கடவுள் வேழம் - இங்கே தெய்வயானையம்மையார். 'தெய்வக்களிறு' என்றார் கந்தர் கலிவெண்பாவிலும். கடம்படு மூலை - குடம்போன்ற மூலை. படா - சாயாத. முகை - அரும்பு. கொன் - பெருமை. முருகப்பெருமான் சிவபெருமானை வழிபட்ட காரணத்தால் கந்தபுரியென்பது புள்ளிருக்கு வேளூர்க்கு ஒரு பெயராயிற்று. கலி தழைய அஞ்சலிப்பா மென்க.

## நூல்

### காப்புப்பருவம்

க. பொங்கர் - சோலை. புலோமசை - இந்திராணி. புலோமன் மகளென்பது சொற்பொருள். அவள் வளர்த்த களி யானை தெய்வயானை யம்மையார். அம்மையார் தெய்வயானை யாதலின் அவர் தழுவும் புயங்களைப் பொருப் பென்றார். குறச்சிறுமி - வள்ளியம்மையார். கொத்து - தொகுதி. முத்தமிழ் - இயல், இசை, நாடக மென்

மெஞ்ஞானகொல் செப்புமினே' என்பது திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்.

சஇ. வன்னம் - வண்ணம். கலைமடந்தை - நாமகள். அவள் மகிழ்நர்-பிரமதேவர். மலர்மடந்தை-இலக்குமி. அவள் கொழுநர்-திருமால். இன்இணி - காலணி. சொன்னுவதும் உன்னுவதும் ஒழிவது என்க. ஒழிவது-ஒழிக. 'சொன்னப்படாது மறப்பதறிவிலென் கூற்றுக்களே' என்று திருக்கோவையாரினும், 'இங்கு நாமியம்புந் தத்துவங்களின்வைத் தறிவது' என்று சிவஞானசித்தியாரினும் வருதல்போல. மொழிவான்புகில் - பிரமவிஷ்ணுக்கள் கூறத் தொடங்கின். கரி - சான்று. உம்மை சிறப்பு. பிரமதேவர் 'நான் சிவபிரானது முடியினை அறிந்தே' னெனப்பொய் கூறினமை யாம் அறிதும் : திருமால் பொய்கூறினமை கண்டிலேமேயெனின், பிரமதேவர்க்குப்போலச் சான்று கிடைத்திலது அதனால் மெய்கூறினர்; அல்லுழிப் பிதாவாகிய அவரும் பொய்கூறுதலொருதலை யென்பார் திருமாலையு முடன்கூறினர். முன்னர்ப் பிரமதேவர் ஒருவர்மாத்திரம் பொய்கூறினராதலின் அக்கூற்றுத் திருமாலும் தேவீருமாகிய இருவிர்முன் பயனெய்தாததாயிற்று: இப்பொழுது சான்றுகிடைக்கப்பெற்ற பிரமதேவருந் திருமாலும் பொய்கூறின் அக்கூற்று தேவீர் ஒருவிரேயாதலின் பயன்படுதலாய்விடும்: ஆதலின் ஒழிவது என்றாரென்க.

கூ. கருந்தாது - இரும்பு: கடுத்த மருப்பென்க. பெரும் பணைதாங்கும் - மிக்க பருமைபொருந்திய. படர்மருப்பு - விரிந்த கொம்பு. குதட்டுதல்-மெல்லுதல். தோடு - இதழ். தூ வெள்ளெகினம் - தூயவெள்ளையன்னம். பாலருவி பெருகுபூந்தடத்து முண்டகத்தலிற் பால்நீர்பிரித்துண் வெள்ளெகினம் நாற்பெருங்கடலுள் நுண்பொருள் தெரிந்து நாற்பயன் கொள்ளும் நாமகள் போன்றிருந்ததென்க. மென்பால் மருதம் - மென்பாலாகிய மருதம். மேருவின் - மேருமலைபோல. மூவர் - பிரமவிஷ்ணு உருத்திரர்கள். அகண்ட மூர்த்தியென்று எத்தும் - காலம் இடமென் பனவற்றால் வரையறுக்கப்படாத மூர்த்தியேயென்று துதிக்கும்.



சிவபெருமான் மும்மூர்த்திகளுக்கும் மேலாய பரம்பொருளென்பதனை 'த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தனம் | உர்வாருகமிவ பந்தநாந் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத் ||' (ருக்வே. எஇக. சுஉ.) என்னும் மந்திரத்திற்குச் சிவலிங்கபூபதி 'த்ரயாணும் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ராணும் அம்பக : பிதா த்ர்யம்பக : இதி த்ரயாணும் யோப்ரஹ்ம விஷ்ண்வீச ரூபிணும் அம்பகோ அஸௌபிதா யஸ்மாத் தஸ்மாத்ர்யம்பக உச்யத' எனச் சதுர்வேத தாத்பரிய சங்கிரக வியாக்கியானத்தில் (சடு-வது சுலோகவுரை) கூறுதலானறிக. அதர்வசிகோபநிடதமும் இதுபற்றியே மும்மூர்த்திகளையும் காரண ரல்லரென விலக்கிச் சிவபெருமானே காரணரெனக் கூறிற்று. 'மூவர் தாந்தொழு முக்கண் மூர்த்தி' எனத் தேவாரமும் 'மூவரும் அறிகிலர்' 'மூவர்கோன்' என்பனவாகத் திருவாசகமும் அருளின. தேவாகண்டர் என்பது தியாகேசப் பெருமானுக்கு வழங்குமோர் திருப்பெயர். தொழும்பு - தொண்டு. நின்னடித் தொழும்பர் - சிவஞானிகள். விழுமம் - துன்பம். புறக்கணித்திருந்தை - ஐயீற்றுடைக் குற்றியலுகரம். கோன்வாய் முனிவர் - அருந்தவக்கொள்கை வாய்ந்த ததீசி பிருகு முதலிய முனிவர்கள். சாபநீர்-சாபத்தன்மை. கொண்மார் - கொள்வார். இச்சொல் சுமந்து என்னும் வினை கொண்டு முடிந்தது. 'மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை, காலக்கிளவியொடு முடியுமென்ப' என்பது தொல்காப்பியம். இஃதறியார் வினையெச்ச முற்றென்பர். அக்கடவுளரென்றது திருமால் முதலிய தேவர்களைக் குறித்துநின்றது. ஸ்ரீ ஹரதத்தாசாரியர் 'தேவதாந்தரபுர : புரார்பவம் பச்யத : பசுபதே பயம் மம |' (தேவருடைய பல பிறப்புக்களை நோக்கும்வழி நமக்குக் கழிபேரச்சம் நிகழாநின்றது) என்றருளிச் செய்தனர். போலும்-அசை. கண்ணுதலோய், நினக்குப் பிறவியின் துயரறிவரிதாகலின் அருளாதொழிந்தனை யென்க. சிவபெருமானே முழு முதற்கடவுளென்று வலியுறுத்தியவாறு. 'நால்வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பனயாவை அவையெல்லாஞ் சீவர்க்கம்: அவ்வாறு பிறத்தலில்லது யாது அது பதிப்பொருளென்று இதுவொன்றே ஏனைச் செயல்களான் வேற்றுமையறிய வாராத அவ்விரண்டற்கும்

தம்முன் வேற்றுமையறிய நிற்பதாகலின், எனைத்தேவரெல்லாம் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படுதலானும், சிவனுக்கஃதின்றென்பது யாண்டானுங் கேட்கப்படாமையானும், சிவனொருவனே வினைவயத்தனாதலின்றி அவ்வத் தேவரிடமாக நின்று உயிர்கட்கு அவற்றை (பயன்களை) யறிந்துகூட்ட வல்லுவன் : எனைத் தேவர் அது செய்யமாட்டாரென்பதுதானே போதரும்' எனச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்ததும் உணர்க.

௧௭. கண்ணனார்-திருமால். சூள் - சபதம். திருமாலின் பொய்ச் சபதமாவது நான் சிவபெருமானது திருவடியைக் காண்பேனென்று கூறிய பொய். தென்புலத்தார் அண்ணலார்-பிதிரர்பதியாகிய இயமன். விருந்தாடுதல்-புதுமையாகக் கூடுதல்: அவியமிழ்துண்ணுதலுமாம். திருவாரூரில் தியாகேசர் இருந்ததிருக்கோலத்துடன் நடஞ் செய்வதுபற்றிக் கூறியது இச் செய்யுள். திருவடியைத் தூக்கின் திருமால் கண்டேனெனப் பொய் கூறுவரென்று கருதியோ, இயமன் சிவபெருமான் இப்பொழுதும் நம்மை உதைத்து வீழ்த்துவரென அஞ்சுவனென்று கருதியோ இருந்தாடியவாறு.

௧௮. உயிர்க்கு இரண்டும் வேற்றுமை மயக்கம். இளஞ்சேய் என்றது முருகக்கடவுளை. பிரானது நீலமணி போலுங் கழுத்தின் உயிர்க்கும் புயல்-மின்னலை வீசும் மேகம். கார்காலத்துக் கொன்றை மலர்தலின் 'புயலென்று தாதுயிர்க்க' என்றார். 'கார் தண் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியப், பூந்தனவ மாரப் புகுந்தின்றே-யேந்தொளிசேர், ரண்டம்போன் மீதிருண்ட வாதியாரையம்மணிசேர், கண்டம்போன் மீதிருண்ட கார்' என நக்கீரதேவரருளிச் செய்வதறிக. பொன் உயிர்க்கொண்கன்-இலக்குமி பிராட்டியின் உயிர்க்கணவன். பொலன் துகில்-பொன்னுடை. எந்தை பூந்துகில்-தோலாடை. அவ்வாடை கொன்றை தாது உயிர்த்தலின் திருமாலின் பொன்னுடையாமென்றவாறு.

௧௯. பூமாது - பூமாதேவி; வெண்டாமரைப்பூவி லெழுந்தருளி யிருக்கும் நாமகள் எனச் சிலேடையாற் பொருள் கொள்க.



அவாது இதய கமலத்தில் வைகுதலாவது திருவாரூரில் எழுந்தருளி யிருத்தலும் நாமகள் வடிவமாகிய கலைகளின் உட்பொருளாயிருத்தலுமென்க. புணரி-கடல்: இங்கே பாற்கடல். மா-இலக்குமி. இலக்குமி வழிபட்டமை திருமாலைத் தன் கணவனாகப் பெறுதற்கென்க. இதனைத் திருவாரூர்ப்புராணத்தில் மகா லக்குமிச் சருக்கத்திற் காண்க. மறைமுதல்-பிரமதேவர். நடுமுதல்-மூவரில் நடுவில் எண்ணப்படும் திருமால். முடிவில் நின்றதாம்-சங்கார காலத்து ஒருவராக நின்ற தாம். தரங்கம்-அலை. வாய்த்த-பெற்ற. குழைந்த-குழைந்து தழும்புபூண்ட.

௨௰. சோதி-சூரியன்போல. எறிப்பப் படர்சடை யென்று கூட்டுக. பிறையும் பாம்பும் கங்கை மருங்கில் விளையாட என்க. ஆற்றிய-சுமந்த. கடவுள்-விளி. எறழ்வலி-மிக்கவலி. தறுகண்-அஞ்சாமை. கேழல்-பன்றி. இலங்க-காரணப் பொருளில் வந்தது. முருகு-தேன். தலை-முறுக்கு. கடம் கலுழ் கடம்-மதநீர் பாய்கின்ற சுவடு. மடங்கல்-சிங்கம். சிவபெருமானுக்கு மேலாடை யானைத்தோலும் சிங்கத்தின் றோலுமாம். இதனைப் 'போர்த்தாயங் கொரானையி னீருரிதோல்' என்னுந் திருநாவுக்கரசுநாயனார் திருவாக்கானும், 'சிங்கத் துரியுத்த ராசங்கத் தண்ணல்' என்னுங் கச்சியப்பமுனிவர் வாக்கானும் அறிக. முத்து உண்டாகும் இடங்களிற் கமுகும் ஒன்று. கமுகுகளிற் கயிறு கட்டிக் கன்னியர் ஊசலாடக் கமுகின் பழம் சிந்துதலும் முத்து வெடித்து உகுதலும் கமுகின் மிடறுடைந்தாங்கு உதிரஞ் சிந்துதலும் கண்ணீருகுத்துக் கலுழ்வதும் போன்றன. அல்லதை-ஐயீற்றுடைக் குற்றியலுகரம். உயர்பும் இழிபும் ஒத்த சாதிப் பொருளிற் கூறுவதன்றி விலங்கினுள் மிக்கது கற்பக விருக்ஷமென வேற்றுச் சாதிப் பொருளிற் கூறுவதின்று. கற்பனை கடந்த கடவுளே, நின்னைத் தேவருள் முதல்வனென்று பழிச்சுதும். தேவசாதியோ உயிர்க்கென அமைத்த எழுவகைப் பிறப்பினுள் ஒன்று. பிறப்பில்லாத வேற்றுச் சாதிப் பொருளாகிய நின்னைப் பிறப்பினையுடைய தேவசாதியுயிர்களுள் முதல்வனெனக் கருதுமாறு வேதங் கூறியது எக்கருத்துப்பற்றியெனப் பலமுறை ஆராயினும் உண்மைப் பொருள்

அறிதலரிதாகின்றது. யாமெல்லாம் தேவரில் நீயும் ஒருவனென மயங்குமாறு நினது நிலையை நீயே மறைத்துக் கூறியதாமாதலின் அஃதுணர்ந்தோர் வேதத்திற்கு மறையெனும் பெயரை நன்கு நிறுத்தினர் என்க.

௨௧. நாதனே-நாதனே. கடா-வினா. விடை யிரண்டனுள் முன்னது இடபம், பின்னது மறுமொழி. உணரார்-வினையெச்ச முற்று. 'மூப்புர மிறப்புழி முகுந்தப் புத்தேண், மால்விடையாகி ஞாலமொடு தாங்கலின்...பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு, ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ, னென்பது தெளிக வியல் புணர்ந் தோரே' யெனச் சிவஞானசுவாமிக ளருளிச் செய்தது மறிக. திருமால் முதலிய தேவர்களைச் சிறந்தோரென வழிபடுவார்க்கு அறிவுச் சுடர் கொளுத்திய திச்செய்யுள்.

௨௨. ஏற்பது-ஏற்றுக்கொள்வது. பொருளொன்று - பரம் பொருளொன்று. இதனை 'உரைமாலை யெல்லா முடையவடி' யெனத் திருநாவுக்கரசுநாயனார் அருளியதாலு மறிக. 'யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாகனார் தாம் வருவர்மற் றத்தெய் வங்கள், வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு, மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வனன்றே' என்பது சிவஞானசித்தியார். சித்தாந்த சைவத் தெய்வமாகிய சுத்த சிவம் எவ்வெச் சமயத்தார் எதுவெது கூறினும் அதனையெல்லாம் ஏற்றுக் கொள்ளுதலின் அச் சிவத்தை யெவர்க்கும் பொதுவென்று கூறினும் அது பொருந்துவதே. யாதினுலெனின் அது பொதுவில் நிற்கும் அன்றி ஆரூரினும் வைகுமாதலினென்க. பொது-பொதுவிடம், சிதம்பர மெனவும்; ஆரூர்-யாருடைய ஊர், திருவாரூரெனவும் சிலேடையாற் பொருள் கொள்க. வைகலும்-நாளும்.

௨௩. உழுது உண்ண வல்லான்-திருமால். இது வராக வடிவங் கொண்டு உலகைத் தோண்டியது குறித்தும் இடையிட்ட பிரளயத்தில் உலகத்தை வயிற்றி லடக்கி யிருத்தல் குறித்தும் கூறப்பட்டது. நவநிதி-சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம்,



முகுந்தம், குந்தம், நீலம், வரமென்பன. ஒருவன்-குபேரன். ஒருவற்குக் கையில் அளித்து என்க. கதியாகிய வீடு; அஃதாவது கேவலம். கன்னிகை - உமாதேவியார்: 'பன்ன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்' என்பது சிவஞானசித்தியார். தியாகேசர் என்னும் பெயர் இவர்க்கே தகும்: தம்மிடமுள்ள இடம் பொருளென்பவற்றைப் பிறர்க்குக் கொடுத்தது மன்றித் தம் முடம்பிலொரு கூற்றையும் ஒருத்திக்குக் கொடுத்துத் தாம் கேவலம் அடைந்திருப்ப அக்கேவலத்தைத் தாமும் எமக்களித்தனராதலால். செய்யுளாகலின் முறை பிறழ வைத்தார். ஏனையோர்க்கு இவ்விவை கொடுத்தாரென்றல் இல்லது கூறப்படாமையின் முகமன் அன்று. எமக்குத் தியாகர் தம் கடப்பாடு கருதிக் கேவலத்தையே கொடுத்தலின் புகழும் அன்றென்க. 'தத்தாச்ரீ ரிஷூவேஷி ஸாதயிஷூவே வாலோ க்ருஹீதம் ஸ—ஹா: ஸஹாதாய வ்யயிதா கிரச்ச கிமிதேர தாதாஸ்ம்யஹ: கேவலம்: இத்யாலோச்ய தயாநிதி: ஸ்வயமே கைவல்ய மேவார்த்திநாம் ஸ்வாமீ மமதைவதம் ததிதரோ நாம்நாபி நாம் நாயதே' என்னும் வடமொழிச் சுலோகப் பொருளும் இன்குக் கருதத் தக்கது.

௨௪. உலகினை யிறந்து நின்றது அாறுருவமென்பது விளக்கப்படுகின்றது. கண்ணுதற் கடவுள் பலிதேர்ந்து உண்ணினும் உண்ணும்: அரசவீற்றிருப்பினு மிருக்கும்; போக மார்ந்திருப்பினு மிருக்கும்: யோகு செய்திருப்பினு மிருக்கும்: கற்பனை கடந்து நிற்றலின் நிற்பது இந் நிலையெனும் நியமமின் றெனமுடிக்க. ஆமையோடு-திருமால் கூர்மாவதாரங் கொண்டு உலகினை வருத்திய காலத்துச் சிவபிரான் அவ் வாமையைக் கொன்று அதன் ஓட்டினைப் பூண்டனன். தலையோடு-பிரமனுடைய கபாலம். காமரு-அழகிய: உ சாரியை. பலிதேர்ந்துண்ணல் தாருகவன நிகழ்ச்சி பற்றிக் கூறியது. முகிலென்றது திருமாலை. விரிஞ்சன் - பிரமன். இறைஞ்சினர்-வினையெச்சமுற்று. பதம்-நிலை. பாசுரர்-வாழ்த்துவோர். போகிகட்கு யோகிகட்குரிய சாதனங்களில்லையாகவும் சிவபெருமான் போகியாயிருந்தே சடைவிரித்து வெண்பொடி பூசி

எருக்கங்கண்ணி சூடி விளங்குதல் உமாதேவியார் நொடிப்பொழுது தணப்பினும் உடன் தாம் மடவூருங் குறிப்பினைத் தோற்றுவிக்கின்றதென்க. மீதூர்தல்-அதிகரித்தல். எமுற்று-மயங்கி. நைவருதல்-வருடுதல். புலவி-ஊடல். புலத்தல்-வெறுத்தல். யோகிகள்-சனகன் முதலானோர். அவர்கட்கு இதுகாறும் எய்தாத ஒண்பொருள் சித்திப்பதற்காக வென்க. ஞான முத்திரை-சுட்டு விரலின் நுனி பெருவிரலி னடியைப் பொருந்த ஏனைய மூன்று விரல்களையும் நிமிர்த்து வைத்திருக்கும் அடையாளம். இம்முத்திரையே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வலக் கீழ்க்கரத்து முத்திரை. இம் முத்திரையின் பொருளாவது உயிர் மும்மலங்களினீங்கிச் சிவபிரானது திருவடி நீழலெய்து மென்பது. இதனைத் திருவானைக்காப்புராணத்து வரும் 'மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயி, ரம்மலர்த்தாணிழ லடங்கு மெய்ம்மையைக், கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய, செம்மல்' என வருதலான் அறிக. சைவ சித்தாந்தத்தின் முடிபு மிதுவே. மீகெழு தபனிய மாடம்-மேலோங்கி யுயர்ந்த பொன்மாடம். அரமிய முற்றம்-அரமியமாகிய முற்றம். அரமியம்-நிலாமுற்றம். அரசியல் நடாத்த - ஆட்சிமுறையை நடத்துதற் பொருட்டு. கொங்கை, கண், அல்குலென்பன முறையே யானையும் வாட்படையும் தேருமாமென்க. சில்காழ் - சிலவாகிய மணிக்கோவை. அல்குலாகிய தேரென்க. பவக்குறும்பு - பிறவியின் வலிமை. தவக்குறும்பு - தவமாகிய குறுநிலமன்னன். மை உண் கண் - மைதீட்டப்பட்ட கண்கள். செம்முகத் தாமரைச் சிறை அளிக் குலங்கள் - சிவந்த முகமாகிய தாமரை மலரிலேயுள்ள சிறகினையுடைய வண்டினங்கள்: இது கண்களுக் குவமை. அம் மென் காந்தளின் அளிக்குலம் - அழகிய மெல்லிய கையாகிய காந்தண் மலரிலேயுள்ள வண்டினங்கள்: இது கழங்கிற் குவமை. கழங்காடு காலத்துக் கண்ணின்பார்வை கழங்குடன் செல்லுமாதலின் தாமரை வண்டு காந்தள் வண்டோடு கலந்து தழுவிக் காமுறல்போலு மென்னுர். கற்பனை-மனோபாவம், 'கற்பனை கடந்தசோதி' யென்பது பெரியபுராணம். இஃதறியார் கற்பனையைப் பொய்யென்பர். நியமம் - வரையறை.



௨௫. இன்னீர் - இனியநீர். இனிய நீராற்சூழப்பட்ட உலகமென்க. இல்நீர் உலகமெனக்கொண்டு நிலையில்லாத இயல்பினையுடைய உலக மென்பாருமுளர். உணர்த்துதலாவது பூமிதேவியின் இதயகமலத்துத் தாம் வீற்றிருந்து அறிவித்தல்; அஃதாவது திருவாரூரி லெழுந்தருளியிருந்து அறிவித்தல். ஆள்-அடிமை. தென்புலத்தார்கோ-இயமன். அவனுடைய அடிக்கு ஆளாகமாட்டா ரென்க.

௨௬. செவ்விளநீர் பொழிலாகிய பெண்ணுக்கு முலைபோன்று விளங்குங் கமலையென்க. வேலைப் புனம் ஒக்கும் கங்கை புனங்காவல்கொள்ளும் மாதரொக்கும் பிறைகவண் ஒக்கும். முகிழ்நகை வெண்டலையென்பது தோன்றும் சிரிப்பினையுடைய பிரமகபாலங்களெனவும் அரும்பு போன்ற பற்களையுடைய பொய்த்தலைகளெனவும் சிலேடையாற் பொருள்படும். இவ்வெண்டலை புனங்களிற் கண்ணூறு படாவாறு வைக்கப்படும்.

௨௭. இது புறங்காட்ட லென்னுந்துறை. பெரும்பாம்பு என்பது ஈண்டு அணையடைத்தற்கிடும் வைக்கோற்புரியை யுணர்த்திற்று. கறை - நஞ்சு. பைங்கமலை - இலக்குமி. மலர் பொழிற்கு அடை. குத்தகையாவது ஒரு நிலத்தை ஒருவருடைய அனுபவத்திற்குச் சிலகாலவெல்லை குறித்துவிடுதல். இங்கே மலர்ப்பொழிலென்றது மலர்போன்ற உறுப்புக்களை யுடைய தலைவியின் உடம்பு. நீர் குத்தகையாக்க் கொடுத்த சோலையை நான் அனுபவிக்கச் சென்ற காலத்து அச்சோலையில் இரண்டுமாவடுவுந் தேடிக் கண்டிலேன்: இளநீருங் கண்டேனில்லை யென்றவாறு. மாவடு கண்களையும் இளநீர் கொங்கைகளையும் உணர்த்தின.

௨௮. வேனிலான் - மன்மதன். நான்மறை முனிவன் - மிருகண்டு முனிவர். அவரது கான்முளை - மார்க்கண்டர். கழுமுள் - சூலம். விண்ணவர் குழாங்கள் திருவாரூர்ப் பிறந்தாரை உருத்திரகணங்களாகக்கண்டு வழிபட்டன ரென்க. நமிநந்தியடிகள் திருவாரூர்ப் பிறந்தாரனைவரையும் உருத்திரகணங்களாகக் கண்டு வழிபட்டமை 'தெய்வப் பெருமா டிருவாரூர்ப் பிறந்து வாழ்வா ரெல்லாரு, மைவைத் தனைய மணிகண்டர் வடிவே யாகிப் பெரு

கொளியா, மொய்வைத் தனைய மேனியராம் பரிசு கண்டு முடி குவித்த, வைவைத் தஞ்சி யவனியின்மைசை விழுந்து பணிந்து தனி சிறந்தார்' எனப் பெரியபுராணத்திற் கூறப்படுதல் காண்க. அருக்கியம் முதல - அருக்கியம் பாத்தியம் ஆசமன மென்பன. இவற்றுள் அருக்கியம் சிரசிற் றெளிக்கும் நீர், பாத்தியம் பாதசுத்தி யின் பொருட்டுக் கொடுக்கும் நீர், ஆசமனம் அகச்சுத்தியின் பொருட்டு முகத்திற் கொடுக்கும் நீர். சிவசாரூபம் பெற்ற அவர் கையில் மழுவேந்தி நிற்றல் 'இத்தலத்துற்றவர் இனித்தலத்தரோர்' என மழுவேந்திச் சாதிக்க நிற்பதுபோன்ற தென்க. சிவபிரானை யொப்பார் யாருமின்மையின் அவர் பெருமையினை அவரே கூறு தல் வேண்டிற்று. அங்ஙனமாயினும் மயங்குமாறு கூறுதல் மாண் புடையதன்று. காட்சி - ஞேயப் பொருள். அளவு இல் காட்சி - அளவைகளாலே வரையறுக்கப்படாத ஞேயப்பொருள். ஐயமின்று உணர்த்துதலாவது அளக்கப்படாத பொருளை அளக்கப்படாத முறையில் உணர்த்துத லென்க. உண்மையான் நோக்குங்கால் வேதம் மயங்கிற்றன்று: தன்னுடைய மயக்கத்தைத் திசைமேல் வைத்துக் கூறுதல்போலத் தான் மயங்கினானாகவும் அம்மயக்கத்தை வேதத்தின்மேல் வைத்துக் கூறினானென்பது. முதுக்குறைவு - அறிவு. எய்யாது-அறியாது. பரம்பொருளிதென்று வரையறுத்து வேதம் கூறவில்லை யென்பார்க்கு அறிவு கொளுத்தியவாறு.

௨௯. அன்னற் கருஞ்சேறு - ஒருபொருளிருசொல். பழனம்-வயல். வெண்டிங்கள் நகைக்கும் நகையென்க. புள் உருவாய் நண்ணிலாதார்-அன்னப்பறவை வடிவுகொண்டு சென்றும் சிவபிரானது திருமுடியை அறியாதவராகிய பிரமதேவர். அன்னம் திருவடியாகிய தாமரைமலரைத் தேடிச் செல்லவேண்டிய தொழிற்கு அஹங்காரத்தால் நெறியல்லா நெறியால் திருச்சடாடவியிற் சென்று அதனைக் காணப்பெறாது அயர்ந்தமை நோக்கித் திங்கள் நகைத்த தென்க. சசம்-ஆரு பெயர்.

௩௰. தண் மலரும் பொழில் - குளிர்ச்சிபொருந்திய சோலை. ஒண்மலர் - சிறந்த பூக்கள். சொல்மலர் - சொல்லாகிய பூக்கள்.



போலும்-அசை. ஓர் புலவன் என்றது சுந்தரமூர்த்தி நாயனாரை யுணர்த்திற்று. பண்மலர்-பண்சுமந்த பாடலாகிய மலர். திருமால் கண் மலர் சாத்தியது திருவீழிமிழலையிற் சிவபிரானைச் சக்கரம் வேண்டிப் பூசித்தகாலத் தெனவும் கழன்மலர் காண்பரிதாயது திருவண்ணாமலையில் அடிமுடிதேடியகாலத் தெனவு மறிக.

௩௧. அல்-இருள். கொல் அயில் வேல்-கொல்லுந்தன்மையை யுடைய கூரிய வேற்படை. அருவே தம் உருவாகிய முக்குணங்கள் என்க: அவை சத்துவகுணம், தமோகுணம், ரசோகுணமென்பன. சத்துவகுணம் வெண்ணிறமும் தமோகுணம் கருநிறமும் ரசோகுணம் செந்நிறமுமுடைமையின் அம்மூன்றும் முறையே கமலேசர் முதலிய மூவர்க்கும் ஏற்பனவாயின. அகிலம்-முழுவதும்: முக்குணங்களின் கூறாகிய உலகமுழுவதும் என்க. கமலேசருக்கு வெண்ணிறம் திருநீறு பூசியதாலுளதாயிற்று.

௩௨. நாஞ்சில் - மதிலுறுப்பு. இங்கே மதிலை யுணர்த்திற்று. நாஞ்சிலைச் சூழ்ந்துகிடக்கும் உவளகம். உவளகம் - அகழி. உவர்க் கடல் - உவரினையுடைய கடல். உவாக்கடலெனப் பாடங்கொள்வாருமுளர். கருவி மாமழை - தொகுதியையுடைய பெரியமேகம். 'கருவி தொகுதி' யென்பது தொல்காப்பியம்: 'கருவி வானம் என்புழிக் கருவி ஃமின்னு முழக்கு முதலாயவற்றது தொகுதி' யென்றார் சேனாவரையர். சென்றன - வினையெச்சமுற்று. வேற்றுமையாவது-இதுமேகம் இஃது யானை என்னும் பாகுபாடு. வல் விலங்கு இதுவென-யானை இது என்று. செல் விலங்கிட-மேகம் விலக. காகபந்தர்-காகங்கள் பறந்து விரிந்த பந்தர். நிமிர்த்தெழுதல்-உயர்த்து எழுதல். பாகு-பாகன். வழுதி-இங்கே உக்கிரகுமார பாண்டியர். நிகளம் - விலங்கு. கொடு போதந்த - கொண்டு வந்த. கொண்டல் - மேகம். மேகங்கள் விலக அவற்றை எதிர்சென்று பிடிக்க அம்மேகங்கள் பாகொடும் உலாவிப்படரும் தோற்றமென்க. மூவரொன்றெண்ண-உன்னோடு சேர்த்து மூவரொன்றெண்ணுமாறு. நின் முதற்றொழில் - நீ செய்யுஞ் சங்காரத் தொழிற்கு முற்பட்ட சிருட்டி திதி யென்னுந் தொழில்கள். உடம்பு வேறுதலாவது-

தெய்வ வடிவம் விடுத்து இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாதல். உயிர்ப்பொறை-உடல். நிற்க-ஒருபுற மிருப்பவும். எய்துபு-எய்தி. சிலர் பிறர் - பிரம விஷ்ணுக்கள். இவர்கள் எம்பெருமானோடு உடன்வைத்து மூவரொன் றெண்ணப்படுதலை 'மூவரொன்றே யெம் பிரானொடு மெண்ணி' என வருந் திருவாக்கானும், அடங்கா அகந்தைக் கறிவெலாம் வழங்கியதை 'ஆராவின்பமென் றரும் பெயர் பெறினும், வாரா வல்வினை வருவிக் கும்மே' என வரும் இவ்வாசிரியர் வாக்கானும், யாவரும் இறைஞ்ச இறுமாப்பு எய்தித் தேவரொன் றிருத்தலை 'மண்மேற், றேவரொன் றேயிறு மாந் தென்ன பாவந் திரிதவரே' என வருந் திருவாக்கானும் அறிக. தொண்டர் - மார்க்கண்டர்: சுவேதரும் உடன்கொள்ளப்படுவர். பொன்றுதல் - இறத்தல். எந்தாய் - எம்முடையதாய் போன்ற சிவ பிரான். தவம் பெரிதாயிற்று சிலர் பிறராற் காணப்படாத உனது திருவடிகள் நமனாலே தரிசிக்கவும் பரிசிக்கவும் பட்டமையி னென்க.

௬௩. முக்கட் கரும்பு-மூன்று கண்களையுடைய கரும்புபோல் பவராகிய தியாகேசர். விற் கரும்பன் - கருப்புவில்லன்: அவன் மன்மதன். சொற் கரும்பின் வாமக் கரும்பு - கரும்புபோன்ற சொல்லையுடைய இடப்பாகத்து வீற்றிருக்கும் உமாதேவியார். மனைக் கரும்பு-தர்மபத்தினி. காமக்கு-காமத்துக்கு: இன்பத் திற்கு என்றவாறு. அரும்பும்-விரும்பும். இது நற்றாய் கூறியது. முக்கட் கரும்பு என்பதில் கண் என்பது கண்களையும் கணுக்களை யும் சிலேடையாற் குறித்தது.

௬௪. கரும்பு உற்ற செந்நெல் - கரும்புபோன்ற செந்நெற் பயிர். 'நெற் கரும்பென' என்பது திருவிளையாடற் புராணம். தியாகேசர் புற்றிடங் கொண்டார், பாம்பினைப் பூண்டார், அன்றி நஞ்சம் உண்டார்: இவற்றிற்கெல்லாம் காரணம் தோகை பங் கான துணிவு என்றவாறு. சுரும்பு உற்ற-வண்டுகள் பொருந்திய. வரைத்தோகை-மலை யரசன் மகளாகிய உமாதேவியார். மயில் பாம் பின் பகையாதலின் இவ்வாறு கூறினார். பாம்புக்கு மயில் பகை யென்பதை 'மஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பை பிடித் துப் படங்கிழித்தாங்கு' எனவருந் திருக்கோவையாரிற் காண்க.



௬௫. கொண்டல்-மேகம். தண்டலை-சோலை. பதியுளாரைக் கண்டபின் என்க. இதழி - கொன்றை. பசலை பொன்னிறமாத லின் அதனைத் தன்பாற்கண்ட தலைவி தனக்குத் தலைவராகிய தியாகேசர் தமது கொன்றைமாலையைத் தந்தாரென்று கருதினள். உயிர் தளிர்த்தல் - உயிர் பெறுதல். தேவாமிர்தம் போன்ற உணவு தனக்கு வெறுப்பாயிருத்தலின் அதனைக் கடு என்றாள். இது கடுவேயாயினும் நம் தலைவராகிய தியாகேசர் உண்ட மிச்சிலா மென்று அதனை உண்ணத் தொடங்குவாள்: பின்னர் எனது தலை வர் என் உள்ளத்துள் இருத்தலின் யான் உண்ட மிச்சில் அவ ருண்ணுதல் ஏற்படுமே அது தகாதே என்று அதனை உமிழுவா ளென்றவாறு.

௬௬. பிலிற்றும்-துளிக்கும். அரி-செவ்வரி. தலைவி தலைவனு டைய மார்பில் பொற்கலன் இமைப்ப அக்கலனுள் தோன்றுந் தன் னுருத்தோற்றத்தைப் பிறிதோர் பெண்ணெனக்கருதி வெகுண்டுத் தன்பால் 'யான் (உன்மீது) மாலாயினே' னென்று கூறித் தன்னை வணங்கி யிரந்த அத்தலைவனைநோக்கி 'நீ தவறாத வாய்மொழியை யுடையை நீ வாழ்க' என்று பிணங்கினள். தலைவன் கூறிய சொற்கு அவள் கொண்ட பொருளாவது திருமால் தன் மார்பில் ஒரு பெண்ணை வைத்திருத்தல் போல யானும் ஒரு பெண்ணை வைத்திருத்தலின் திருமாலாயினேன் எனக் கூறினா னென்பது. தலைவன், கோபத்தாற் சிவந்த தலைவியது கண்களையும் தன் பிரிவி னாற் பசந்த அவளது மேனியையும் நோக்கி இவளும் மாலாகிய தன்மையை யுடையளெனத் தேறினான். சிலம்படி திருத்தி-அடி யிலே பூட்டப்பட்டிருந்த சிலம்பை ஒழுங்குபடுத்தி. தலைவியினூட லைத் தணிக்கும்போது அவளது செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய பாதத்தில் தலைவன் பணிதலின் 'பஞ்சியிற் பொலிந்த குஞ்சியன்' என்றார். வெள்ளப் புணர்ச்சி-மிக்க புணர்ச்சி. மைம் மாமுகில்-கரிய பெரிய மேகம். கானவர் பெருமான் - கண்ணப்பநாயனார்.

பண. கடவுட் பொலங்கிரி - இங்கே மந்தரமலையை யுணர்த்திற்று. திசைக்கரிகள்-அஷ்டதிக்கு யானைகள். திகிரிகிரி-சக்கரவாளகிரி. குலகிரி-அஷ்டகுல பர்வதங்கள். இவையனைத்துந் திரியுமாறு மந்தரமலையைத் திரித்தென்க. மத்து எறிய - மத்தாகவீச. பாமேவு மதுரம்-பாட்டுக்களிற் பொருந்திய இனிமை. பங்கயச் செல்வி-இலக்குமி. பச்சைப் பசுங்கொண்டல்-மிகவும் பசுமையான மேகம் போன்ற திருமால்: கொண்டல் புரக்க என முடிக்க.

௨. உமாதேவியார் ஒருபுறத்துவிளங்கச் சிவபிரான் பொன் மேனியோடு பொலிதலின் 'ஒருபுறத்து மரகதம் இமைப்ப ஒளிர் மாமேரு' எனப் பட்டார். வடபொருப்பு - மேருமலை. பிநாகி-பிநாக மென்னும் வில்லைத்தாங்கிய சிவபெருமான். முக்குடுமி அயில் - முத்தலை வேலெனப்படுஞ் சூலப்படை. திரித்துவருதல் - சுழற்றிவருதல். வாய் வாள் மழுப்படை - வெற்றிபொருந்திய மழு வாட்படை: இதனை 'மழுவாள் வலனேந்தி' யென்பதனானு மறிக: வாள்வாய் மழு எனக்கூட்டி ஒளிபொருந்திய மழுப்படை யென்றலுமாம்: பிறவாறு மொழிப்ப. உடலுதல் - போர்புரிதல். மல் தொழில் - மற்போர். கிராதன் - வேடன். கூக்குரல்விரி கடற் புடவி-மிகுந்தஒலி பரந்த கடலாலே சூழப்பட்ட வுலகம். திருமால் இடைப்பட்ட பிரளயத்தில் உலகத்தை வயிற்றிலடக்கிக் காத்தலானும் அவர் சிவபெருமான் முப்புரமெரிக்கச் சென்றபொழுது விடையாய் அப்பெருமானைத் தாங்கினமையானும் 'புடவிமுழுதுஞ் சுமையும் ஓர்காளை' எனப்பட்டார். காமாரி - மன்மதனை அழித்தவர். கௌமாரி - உமாதேவியார். கடவுள் மாமோகினி - திருமால்: அவர் மோகினி வடிவங்கொண்டது தாருகவனத்து இருடிகளை நல்வழிப்படுத்தற்குச் சிவபெருமான் சென்றருளிய காலத்தென்க. கௌமாரிக்குத் தாம் மணாளனதுபோலத் தனது திருவிழிமுன் நிற்கும் மோகினிக்கும் மணாளன் என்க. குக்கும வெளி-சிதாகாசம். பரநடம்-மேலான திருக்கூத்து. வேள்-குமாரக் கடவுள்: அவராலே பூசிக்கப்பட்ட தலமாதலின் இவ்வூர் வேளூர் எனப்பட்டது. குரவு - குராமலர். செச்சை - வெட்சிமலர். நறவு-மணம். உவட்டெழுதல் - பெருக்கெடுத் தோடுதல். தடி - தசை.



உரும் உக-இடியும் சிதறும்படி. குளிறுதல்-ஆர்த்தல். காலாயுதம்-சேவல். கோட்டிய குறுநகை - செய்த புன்சிரிப்பு. மனம் உருக-மனம் உருகுமாறு. வெற்பவர்-குறவர். மான்-இங்கே வள்ளியம்மையார். செழுமறைப் பொருளின் உரை - பிரணவத்தின் மெய்ப் பொருள். வேதா - பிரமன். பிரமதேவர் பிரணவப் பொருள் அறியாமையாலே முருகக்கடவுளாலே முடியிற் குட்டப்பட்டார். இதனைக் கந்தபுராணத்துக் காண்க. காய்ப்பு - வடு.

௩. அடர்தல் - நெருங்குதல். வடிகணை-கூர்மையான அம்பு. குமிழ்-குமிழம்பூப்போன்ற நாசியை யுணர்த்திற்று. மறித்த-தடுத்த. விழி நவ்வி - விழியையுடைய பெண்மான் போன்றவள். கோடு - யானைக் கொம்பு. குமுதம் - இங்கே திருவாயினை யுணர்த்திற்று. கொழுநர்-கணவர்: இங்கே சிவபெருமான். பிறர்-தொண்டரல்லாதார். தகவு இல்லி-தகுதியில்லாதவள். சேண்-தூரம். எழு பெரும் புவன.................குமரியென விருந்த கனகவ்வி' யென்பதனை 'சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று, மூவர் திருவரும்புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும், பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகுந், தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியுமன்றே' யெனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறிக. பால் தொகும் இருவர்-இருபுறத்துமுள்ள பிரம விஷ்ணுக்கள். கதுவ அரிய-பற்றமுடியாத. தையல்-தையனாயகியார். உணர்ந்தும் உணர்வரியதொன்று-சிவானுபவம். ஒருமொழி-பிரணவம். முதல்-வேர். தொழும்பு-தொண்டர்: அர் விகுதி குறைந்து நின்றது. இங்கே தேவர்களைக் குறித்தது. போற்று அடிமுடி-வழிபடுதற்குரிய திருவடியுந் திருமுடியும். மறைமுடிவு - உபநிடதம். கா-சோலை. சேக்கை-படுக்கை. வண்டு பெடையொடுந் துயின்று செவ்வழிப் பாட்டினை முரன்று இலஞ்சிதொறு முலவு கந்தபுரியென்க. விபஞ்சி-வீணை. மதங்கர்-பாணர். தெருமரல்-மயங்குதல்.

௪. கடாம்-மதநீர். கதம்-கோபம். கிம்புரி-கோட்டிற் செறிக்கும்பூண். ஒருகார அசலம்-ஒரு யானை: இங்கே கயாசுரன். இட்ட-உதவிய. கஞ்சுகி - மேற்போர்வையை யணிந்த சிவபெருமான். தம்

பன. கடவுட் பொலங்கிரி - இங்கே மந்தரமலையை யுணர்த்திற்று.
திசைக்கரிகள்-அஷ்டதிக்கு யானைகள். திகிரிகிரி-சக்கரவாளகிரி.
குலகிரி-அஷ்டகுல பர்வதங்கள். இவையனைத்துந் திரியுமாறு மந்
தரமலையைத் திரித்தென்க. மத்து எறிய - மத்தாகவீச. பாமேவு
மதுரம்-பாட்டுக்களிற் பொருந்திய இனிமை. பங்கயச் செல்வி-
இலக்குமி. பச்சைப் பசுங்கொண்டல்-மிகவும் பசுமையான மேகம்
போன்ற திருமால்: கொண்டல் புரக்க என முடிக்க.

௨. உமாதேவியார் ஒருபுறத்துவிளங்கச் சிவபிரான் பொன்
மேனியோடு பொலிதலின் 'ஒருபுறத்து மரகதம் இமைப்ப ஒளிர்
மாமேரு' எனப் பட்டார். வடபொருப்பு - மேருமலை. பிநாகி-
பிநாக மென்னும் வில்லைத்தாங்கிய சிவபெருமான். முக்குடுமி
அயில் - முத்தலை வேலெனப்படுஞ் சூலப்படை. திரித்துவருதல் -
சுழற்றிவருதல். வாய் வாள் மழுப்படை - வெற்றிபொருந்திய மழு
வாட்படை : இதனை 'மழுவாள் வலனேந்தி' யென்பதனானு
மறிக: வாள்வாய் மழு எனக்கூட்டி ஒளிபொருந்திய மழுப்படை
யென்றலுமாம்: பிறவாறு முரைப்ப. உடலுதல் - போர்புரிதல்.
மல் தொழில் - மற்போர். கிராதன் - வேடன். கூக்குரல்விரி கடற்
புடவி-மிகுந்தஒலி பரந்த கடலாலே சூழப்பட்ட வுலகம். திருமால்
இடைப்பட்ட பிரளயத்தில் உலகத்தை வயிற்றிலடக்கிக் காத்த
லானும் அவர் சிவபெருமான் முப்புரமெரிக்கச் சென்றபொழுது
விடையாய் அப்பெருமானைத் தாங்கினமையானும் 'புடவிமுழு
துணச் சமையும் ஓர்காளை' எனப்பட்டார். காமாரி - மன்மதனை
அழித்தவர். கௌமாரி - உமாதேவியார். கடவுள் மாமோகினி -
திருமால் : அவர் மோகினி வடிவங்கொண்டது தாருகவனத்து
இருடிகளை நல்வழிப்படுத்தற்குச் சிவபெருமான் சென்றருளிய
காலத்தென்க. கௌமாரிக்குத் தாம் மணாளனானதுபோலத் தனது
திருவிழிமுன் நிற்கும் மோகினிக்கும் மணாளன் என்க. சூக்கும
வெளி-சிதாகாசம். பரநடம்-மேலான திருக்கூத்து. வேள்-குமாரக்
கடவுள் : அவராலே பூசிக்கப்பட்ட தலமாதலின் இவ்வூர் வேளூர்
எனப்பட்டது. குரவு - குராமலர். செச்சை - வெட்சிமலர். நறவு-
மணம். உவட்டெழுதல் - பெருக்கெடுத் தோடுதல். தடி - தசை.



உரும் உக-இடியும் சிதறும்படி. குளிறுதல்-ஆர்த்தல். காலாயுதம்-
சேவல். கோட்டிய குறுநகை - செய்த புன்சிரிப்பு. மனம் உருக-
மனம் உருகுமாறு. வெற்பவர்-குறவர். மான்-இங்கே வள்ளியம்மை
யார். செழுமறைப் பொருளின் உரை - பிரணவத்தின் மெய்ப்
பொருள். வேதா - பிரமன். பிரமதேவர் பிரணவப் பொருள் அறி
யாமையாலே முருகக்கடவுளாலே முடியிற் குட்டப்பட்டார். இத
னைக் கந்தபுராணத்துக் காண்க. காய்ப்பு - வடு.

௩. அடர்தல் - நெருங்குதல். வடிகணை-கூர்மையான அம்பு.
குமிழ்-குமிழம்பூப்போன்ற நாசியை யுணர்த்திற்று. மறிந்த-தடுத்த.
விழி நவ்வி - விழியையுடைய பெண்மான் போன்றவள். கோடு -
யானைக் கொம்பு. குமுதம் - இங்கே திருவாயினை யுணர்த்திற்று.
கொழுநர்-கணவர் : இங்கே சிவபெருமான். பிறர்-தொண்டரல்லா
தார். தகவு இல்லி-தகுதியில்லாதவள். சேண்-தூரம். எழு பெரும்
புவன..................குமரியென விருந்த கனகள்வி' யென்பதனை
'சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று, மூவந்
திருவரும்புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும், பவன் பிரமசாரி
யாகும் பான்மொழி கன்னியாகுந், தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் றெரியுமன்றே' யெனவரும் சிவஞானசித்தித் திரு
விருத்தத்தா லறிக. பால் தொகும் இருவர்-இருபுறத்துமுள்ள பிரம
விஷ்ணுக்கள். கதுவ அரிய-பற்றமுடியாத. தையல்-தையனாயகியார்.
உணர்ந்தும் உணர்வரியதொன்று-சிவானுபவம். ஒருமொழி-பிரண
வம். முதல்-வேர். தொழும்பு-தொண்டர் : அர் விகுதி குறைந்து
நின்றது. இங்கே தேவர்களைக் குறித்தது. போற்று அடிமுடி-வழி
படுதற்குரிய திருவடியுந் திருமுடியும். மறைமுடிவு - உபநிடதம்.
கா-சோலை. சேக்கை-படுக்கை. வண்டு பெடையொடுந் துயின்று
செவ்வழிப் பாட்டினை முரன்று இலஞ்சிதொறு முலவு கந்தபுரி
யென்க. விபஞ்சி-வீணை. மதங்கர்-பாணர். தெருமரல்-மயங்குதல்.

௪. கடாம்-மதநீர். கதம்-கோபம். கிம்புரி-கோட்டிற் செறிக்
கும்பூண். ஒருகா அசலம்-ஒரு யானை : இங்கே கயாசுரன். இட்ட-
உதவிய. கஞ்சுகி - மேற்போர்வையை யணிந்த சிவபெருமான். தம்

பிதா அளித்த போர்வைக் கேற்ப விநாயகக்கடவுளும் முகபடா மணிந்தன ரென்க. நிர்த்தர்கள் - தூயதொண்டர்கள். பராவுதல் - வழிபடுதல். கற்பகக்கன்று - கற்பக விநாயகர். புத்தேள் - இங்கே சிவபெருமான். மனோலயம் உற்ற மெய்ப் பண்பு என்றது பிரணவப் பொருளை. சடானனன்-ஆறுமுகன். முதற்சங்கத்தில் முருகப் பெருமான் புலவரா யிருந்தமை இறையனாரகப் பொருளுரையிற் காண்க. சடாயு பூசித்த காரணத்தால் இத்தலத்திற்குச் சடாயுபுர மென்பது பெயராயிற்று.

௫. செம்பழுக்காய் - சிவந்த பாக்குப்பழம். பழுக்காயாகிய பழமென்க. பரிசு - தன்மை. ஞிமிறு - வண்டு. கொங்கு - தேன். நறை - வாசனை. ஞிமிறு பாடி இரப்பக் கொங்கினை இறைக்கும் காந்தளென்க. வேதங்கள் பூசித்தகாரணத்தால் வேதபுரி என்பதும் ஒரு பெயராயிற்று. பைந்தொடியார் - ஆய்ப் பெண்டிரை யுணர்த்திற்று. ஆய்ப்பாடியிலுள்ள பெருங்குடியில். திருத்தாதை- திருமால். அங்காப்பு - வாய்திறத்தல். அவர் அக்காலத்து விரும்பிய பால் தயிர் நெய்யேயன்றித் தேனும் கடலோடுண்ணுமா றென்க. அகிலம் - உலகம். பொய்யாகிய உடம்பை மெய்யென வழங்குதல் போலக் கிலமாகும் உலகத்தை அகிலமென்றல் மங்கல வழக்கு. இச் செய்யுளில் நால்வகை யுண்டிகளில் பருகும் உண்டியைப் பிதாவுக்கெனப் படைத்து, உண்ணும் உண்டியைத் தனக்கெனக் கொண்ட பெருமா னெனத் தொனிப் பொருள் படுதலுங் காண்க. இங்ஙனம் மேல் வருவன வற்றையும் அறிந்து கொள்க.

௬. கான்-வாசனை. கவிகை-குடை. அஷ்டதிக்குப் பாலர்களில் கீழ்த்திசைக் காவலுக்குடையோன் இந்திரனென்க. காணி இடம். காணி-ஆட்சி. வான் காறு கோடு- ஆகாயத்தை அளாவிய சிகரம். இமயமலை வயிறு வாய்த்த தலைமகள்-இமவதியாகிய உமா தேவியார். அவளுக்கு மணமகன்-சிவபெருமான். அவருக்கு மருமகள்-தெய்வயானையம்மையார். அவ்வம்மையாரைத் தன் மகளாகப் பெற்ற மாலென்க. மால்-இந்திரன். திருமால் உபேந்திரனெனப் படுதற் கேற்ப இந்திரன் மாலெனப்பட்டனன். மாமடிசென்



படும் பாடம். பால் நாறு செந்நெற்பசுங்கதிர்-பால் பிடித்த செந்நெல்லினது பசியகதிர். குதட்டுதல்-மெல்லுதல். பணை-பருமை. மருப்பு-கொம்பு. எருமையினது மடியாகிய மடி என்க. சித்தாமிர்தம்-ஓர் தீர்த்தம், அது சித்தர்கள் வைத்தியநாத பெருமானை அபிடேகித்த தேவாமிர்தக் கலப்புடையது. அத்தீர்த்தத்தில் பாலாறு தேனாறுடன் வாறுறெனப் பெருகியிருந்தது. அவ்வாறு அத்தீர்த்தம் பெருகிற்பது சிவபெருமானது சித்திப் பிரதாபத்தை விளக்கின்றதென்க. தினகரன் பூசித்த தலமாதலின் தினகரபுரியென்பது ஒரு பெயராயிற்று.

௭. மால்-மேகம்: கருமையுமாம். அந்நிறக் கடவுள் திருமார்பின் மறுசேவற்ச மெனப்படும். நறு-நறா: அஃதாவது வாசனை. மை இருள்-மிக்க இருள். மாயாத ஆணவ விருளி னிக்குதற்கு மாய் இருள் எனப்பட்டதுமாம். இவ்வாறு பொருள் கோடலைச் சிவஞான பாடியத்துப் பாயிரவுரையிற் காண்க. முன்தான் - முன்னையு[illegible] நானம். கான்-வாசனை. விளக்கிட்டும் கதவர் திறத்தளித்துக் காதன்மை காட்டும் கௌத்துவமென்க. கௌத்துவம் தன்னொளியால் கமலத்தை மலரச் செய்கின்றதென்க. காதன்மை காட்டுதலாவது உடன் பிறப்புரிமையால் தனது அன்பினைத் தெரித்தல். தானை வெள்ளமொடு பரியை நடாத்துஞ் சேவகப்பெருமான். மீன் நிறப்புணரி-மீன் மயமான கடல். தீநிறக் குடுமிச் சேவல்-சிவந்த சூட்டினையுடைய சேவல். வேதங்கள் பூசித்தமையின் வேதபுரி யென்பதொரு பெயராயிற்று.

௮. துறை-பாகுபாடு. இங்கே அறம் பொருள் இன்பம் வீடென்னும் பாகுபாடு. பிரமதேவர் செந்நாவி லிருப்பவராகிய நாமகள் வெண்டாமரையில் வீற்றிருத்தற்கு இரண்டு காரணங்கள் கற்பிக்கின்றார்: ஒன்று தன் சுதை நிறம் கெடாமை, மற்றொன்று துகில் நனையாமை. நறை-தேன். தோடு-மலரிதழ். கவினம்-வெண்டாமரை. பொகுட்டு-தாமரைக் கொட்டை. அன்புடைமை தோன்ற 'நன்னெஞ்சென' என்றார். சொல்லாகிய கடலிலே யெழுந்த தெள்ளமுதென்க. சிறை - கரை. செஞ்சடைக்கடவுள்-

சூரியன்; அவன் சித்தாமிர்தத் தீர்த்தத்து நீராடலின் அவ்வமிர்தக் கலப்பால் வெண்சுடர்க்கடவுள் போல அமுதமயமாயினன். உறைபட்ட சுதை-துளித்தல் கொண்ட சுதை. சகோரம்-நிலாமுகிப்புள். வெஃகும் - விரும்பும்.

௯. சத்த மாதர்களாவ்ர் அபிராமி மாகேசுவரி கௌமாரி நாராயணி வாராகி இந்திராணி காளி யென்பவர்கள். பனிவரை-கிரௌஞ்சமலை. பரிபுரம்-சிலம்பு. ஒலிடுதல் - சத்தித்தல். தகர்-ஆடு; இது நாரதனென்னும் பெயரினையுடைய முனிவரொருவர் செய்தயாகத்தினின்றும் எழுந்தது. முயல்-சந்திரனிடத்துள்ள களங்கம். ஒருமுழுமதி இளைத்துக் குறைமதியாக என்க. முயற்கறை பிறைவளர வளர்ந்து மதிதேயத் தேயுமென் றறிக.

௰. சததளத் திருமலர்-நூற்றிதழ்த்தாமரை. தமது முடித்தலையைத் தனது திருவடியிற் பதித்துத் துதித்தவர்க்கு இந்திர பதவி பிரமபதவி விஷ்ணுபதவி யென்பவற்றைக் கொடுத்தானென்க. மாதிரம்-திசை. சத்தி-வேற்படை. ஊதியம்-இலாபம். விடைக் கொடி-இடபக்கொடி. மடக்கொடி-உமாதேவியார். குருக்கள்-ஆசிரியர். மறைக்கிழவன்-வேதத்திற்கு உரிமையுடையோன்: அவன் பிரமன். மருத்துவரிருவர், வசுக்களெண்மர், கதிரவர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவராக முப்பத்து மூவர்: ஒவ்வொரு வருக்கத்தும் ஒருகோடிப் பேரிருத்தலின் தேவர்முப்பத்து முக்கோடியாயினர்.

## செங்கீரைப்பருவம்

௧௧. இருக்கு-இங்கே வேதத்தை யுணர்த்திற்று. எரிமணி-சுடர்விடும் இரத்தினம். இளஞாயிறு-பால சூரியன். உருக்கோலம்-வடிவழகு: 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு' என்பது திருமுருகாற்றுப்படை. வாளி-காதிலிடும் ஆபரணம். ஓடரிக்கண்-ஓடிய செவ்வரிகளையுடைய கண்கள். மரு-வாசனை. தையலாள்-தையனாயகி. இது புள்ளிருக்கு வேளூரில் வீற்றிருக்குந் தேவியார் திருநாமம். வள்ளிநாயகியார் முன் முருகப்பெருமான் கிழவடிவு



கொண்டு முதலிற் சென்றதும் பின் மணக்கோலங் கொண்டதுங் புராணத்தி லறிக. ஆனவன்-விளி.

௧௨. கும்ப ஆதி காரியம்-குடமுதலிய காரியப்பொருள்கள். எவ்வாறு குடமுதலிய காரியப் பொருள்கள் ஓர் நிமித்தகாரணனை வேண்டுகின்றனவோ அவ்வாறு இவ்வுலகமாகிய காரியப் பொருளும் சிவ சத்திகளை நிமித்தகாரணமாக வேண்டுகின்றதென்க. 'காரிய காரணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம், பாரின் மண்டிரிகை பண்ணுமவன் முதறுணை நிமித்தர், தேரின் மண்மாயையாகத் திரிகைதன் சத்தியாக, வாரியன் குலாலனாய் நின்றாக்குவனுலகெல்லாம்' என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் நிமித்த காரணம் சிவமும் துணைக்காரணம் சத்தியுமாயினும் சிவசத்திகட்குரிய அபேதம்பற்றி, இரண்டனையும் நிமித்த காரணமென்றார். அகில அண்டம்-அண்டமனைத்தும். 'இருவர் குறியுந் தலைக்கூடினும்' என்பதனை 'உவந்திருவரும் புணர்ந்திங்குலகுயிரெல்லாமீன்றும்' என்னும் சிவஞான சித்தியாரால் அறிக. உலகிற்கு நிமித்த காரணம் சிவமும் சத்தியுமாதலின் சிவபிரானுக்கு அக்காரணத் தன்மையில் பாதிக்கு மட்டும் உரிமையுண்டு: எனினும் முழுவுரிமையும் சிவபிரானுக்கே யுளதென்பதற்கு 'ஸர்வோ வை ருத்ர:' என்னுஞ் சுருதி சான்றாயிருக்கிறது. அங்ஙனமாகவும் தையனாயகி அச் சிவபெருமானது திருமேனியிலும் செம்பாதி கொண்டு அச் சிவபெருமான்றானும் தன்மயமென விளக்குகின்றாளென்க. சொம்-ஸ்வமென்னும் வட சொல்லின் றிரிபு: ஸ்வம்-உரிமை. இங்கே நிமித்தகாரணத்தன்மை. இரவிகுலத் தோன்றல்-இராமபிரான். இளவல்-இலக்குமணன். தீராத வினை தீர்த்த தம்பிரான்-வைத்தியநாதர்; இது தேவியின் வல்லபங் கூறியவாறு. இச் செய்யுட்குப் பிறவாறும் பொருள் கூறுப.

௧௩. எட்டுக் களிறு-திக்கு யானைகள் எட்டு. அக்களிற்றோடு முட்ட விடுதலாவது அவற்றுளொன்றனை மற்றொன்றனோடு மோதவிடுதல். ககனவட்டம்-ஆகாயவட்டம். பரிதிவட்டம்-சூரிய மண்டலம். திகிரிவட்டம்-சக்கரவாளகிரி. கோதண்டம்-வில். வேதண்

டம்-மலை : இங்கே மாமேருபர்வதம். மா தண்டம்-பெரிய தண்டா யுதம். மூதண்டகூடம்-பழைமையான அண்ட கூடம். திரிகூடம்-திரிகூடாசலம். மூரி-வலிமை. கடாசலம்-யானை. யானை மெய்க்குக் கொடுத்த சட்டையெனக. நேரிட்டிடப்பட்ட-நேராக அணியப் பட்ட. சிவபெருமான் மெய்க்கு யானை கொடுத்த சட்டைக்கு ஒப்பாக மலைக்கு அணியப்பட்ட மேகபடலமென்க. முட்டவிட்டு இட்டுச்சாடி மொண்டு பெய்து விளையாடு சேனாபதிக் கடவுளென முடிக்க.

௧௪. செங்கமல வல்லி-இலக்குமி. சேமியான் - திருமால். மறைமுதலி-வேதமுதல்வனாகிய பிரமன். தையலாள்-தையனாயகி. உள்ளந்தடம்-இருதய பிரதேசம். வேதசிரம்-உபநிடதம். கடுப்ப-போல. வேதபுரி முதலிய மூன்றும் புள்ளிருக்கு வேளூர் என்பதன் பரியாய பதங்கள். கந்தமாதனம் போலக் கயிலைச் சாரல் முதலிய மூன்றிடத்தும் தெய்வயானையம்மையாரோடு விளையாடும் மழகளி றென்க.

௧௫. அகழி-கடல். அதனைத் தீவாய் மடுத்தமை சேது பந்தன காலத்தென்க. வில்லியார்-இராமபிரான். கருணைவெள்ளம்-கருணைப் பிரவாகம். மும்முதற்கடவுள்-பிரமவிஷ்ணுருத்திரர்கள். இவர் மூவரும் ஆதிப்பிரானென்று அடித்தொழும்பு ஆற்றவென்க. தொழும்பு-தொண்டு. மற்று - வினைமாற்றில் வந்தது. குமரக் கடவுள் வள்ளிநாயகியார் குறிப்பறிந்து அருகணைந்து 'உன்குற் றேவல் செய்யக் கடைக்கண்பணிக்க' எனக் குறையிரந்து வாயூறி நின்றாரென்க. கிளவி - சொல்.

௧௬. அசும்புதல் - கசிதல் : இங்கே ஒளிவிடுதல். பண்டி - வயிறு. கம்பி - குண்டலத்தி னங்கமா யமைந்ததொன்று. தியா கேசர் 'கம்பிக்காதினன்' எனப்படுதலுங் காண்க. குழைக்கா தென்பது சந்தவின்பம் நோக்கிக் குழைகாதென நின்றது : வினைத் தொகையுமாம். சூழி - உச்சிக்கொண்டை. இது பாதாதிகேச வர்ணனையென்க.



௧௭. வெயில் - ஒளி. புயவலயம் - வாகுவலய மென்னுந் தோளணி. முதாரி - முன்கையணி. கால - கக்க. அரும்பியென - அரும்பினாற் போல.

௧௮. இதழ் - இங்கே உதடு. குரல் கம்முதல் - குரல் அடைத் தல். அஞ்சனம் - கண்ணுக்கு இடும் மை. கலுழ்தல் - அழுதல். கலுழி - கலங்கல் நீர். ஒருதாள் உந்திஎழுதல் முதலியன இப் பருவத்து நிகழும் நிகழ்ச்சியாதலின் அதனையும் இங்குக் கூறினார்.

௧௯. யானை இரண்டு - இரண்டு கொங்கைகள். மைக்கொண் டல் ஒன்று - கூந்தல். விழிக்கயல்மீன் இரண்டு - கயன்மீன் போன்ற இருவிழிகள். எகாரமூன்றும் உம்மைப் பொருளன. இவையனைத்தையு முடைய பெண்கள். சம்பரனைப் பொருசேவ கன் - சம்பராசுரனைக் கொன்ற வீரனாகிய மன்மதன். அவன் சண்டைகொளற்கு வந்தான் வந்தானென. பெண் - வள்ளி நாயகி யார். புனம் - தினைப்புனம். கம்பமதத்தர்-விநாயகப் பெருமான்.

௨௰. திருமாது-உமாதேவியார் : 'திருமாதோ டுறைகோயில்' எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்வதுங் காண்க. யசுர்வேதத்தில் 'ச்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்பதாகக் கூறப்படுதலுங் கண்டுகொள்க. இக்கருத்துப் பற்றியே ஆயுஷ்ய சூக்தத்தில் 'ச்ரியம் லக்ஷ்மீ மௌபலா மம்பிகாம் காம்ஜுஷ்டிம் ஜயாமிந்த்ரஸேநேத்யுதாஹு:' எனக் கௌரிபால் 'ஶ்ரீ' சப்தம் வழங்கப்பட்டது. சிவபுராணத்தில் 'தஸ்யாங்க மண்டலாரூடா சக்திர் மகேச்வரீபரா மஹாலக்ஷ்மீரிதி க்யாதா ச்யாமா ஸர்வமநோ ஹரா' என மேலதன் உபபிருங்கணம் வருதலு மறிக. இங்கே கூறப்பட்டதன் விரிவைச் சிவகர்ணாமிர்தத்திற் கண்டு தெளிக. மன்று - பொன்னம்பலம். மன்றில் மாதொடு நின்றாடும் செங்கண் விடைக்கொடியோன் என்க. இதனை 'எழையுடனே பொன்றசோலி மன்றத்து நின்றவரார்' என்னுந் திருக்களிற்றுப்படியார் திருவாக்கா னறிக. எம்தாய்-தையனாயகி. பொறி-புள்ளி. முருகப் பெரு மானை வண்டென்றது சிவபெருமான் உமாதேவியாருக்குஞானோப தேசஞ் செய்தபொழுது முருகப் பெருமான் வண்டுருக்கொண்டு

உமாதேவியார் கூந்தலிலிருந்து கேட்டமை பற்றி. கொந்து-பூங் கொத்து. அளகம்-கூந்தல். கங்கைமகள்-கங்கையாகிய பெண். மகளென்பது இப் பொருள் படுதலைப் 'பெற்றார்க் குரியர் பொற் றொடி மகளிர்' எனவருதலா லறிக.

### தாலப்பருவம்.

௨௧. ஆயத்திலே நுடங்க வென்க. மருங்குற்கு ஒல்கும் கொடி போய் நுடங்குமாறு ஓங்கிய பளிக்கு நிலாமுற்றம். சூளிகை உச்சி. கால்வீச - பரவ. சுரபி - காமதேனு. தரங்கம் - அலை. பாகிரதி - கங்கை.

௨௨. தொடை - வரிசை. தொடு நீர்ப்பரவை - தோண்டப் பட்ட நீரையுடைய கடல். பரவை மூகம் புழுங்குதலாவது கடலிடம் கொதித்தல். கவினம் - கடிவாளம். பொற்றலம் - பொன்மாளிகை. கடவுள் மால்யானை - ஐராவதம். ஐராவதம் முழுநீலத்தின் ஒளியில் மூழ்கிக் கரிதாய்த் தோன்றியதென்க. அது கண்ட அரமகளிர் இது நிலவுலகத்தினின்று வருங்களிறென ஐயுற்றனர்; அவ்வைரா வதந் தானும் தன்னுடம்பு சேறுபடிந்ததெனக் கங்கையாற்றில் நீராடச் சென்றதென்க.

௨௩. தீற்றுஞ்சுதை - பூசப்பட்ட சுண்ணச்சாந்து. பேரமர்க் கண்-பெரிய போர் செய்யும் கண்கள். செறிவுபற்றிக் குழலைக்கா டென்றார். மயில்கண்டு - மயிலைக் கண்டு. பவளம் - இங்கே வாய். ஊற்று நிலவு - பெரிதும் சொரிகின்ற நிலவு. இந்துசிலை - சந்திர காந்தக்கல். சூளிகை - நிலாமுற்றம். கலுழி வெள்ளம்-கலங்க னீர்ப் பெருக்கு. புலவு - புலால்மணம்.

௨௪. கிளைத்தல் - நெருங்குதல். சகரர்தொட்ட பெருங் கிடங்கு - கடல். இடங்கர்மா - முதலை: இடங்கராகியமா என்க. இயங்கும் - திரியும். அழுவம் - பள்ளம். கொழும்புனல் - நிறைந்த நீர். கமஞ்சூல் - முதிர்ந்தசூல். கடலென்று கருதி அகழிப்புனல் மேய்ந்த புயலென்க. பகடு - யானை. அப்புயல் சக்கரவாள கிரி யென்று ஏறி உடல்வருந்தும்படி யுயர்ந்த மதிலென்க. விண்டுபதம்- ஆகாயம். எணியும் வேலியுமாய் வளைக்குமென்க.



௨௫. சோலைப்புறம் - சோலையில். முப்புடைக் கனிகள் - தெங்கம்பழங்கள். முடத்தெங்கு - வளைந்த தென்னை. இமையவர் தம் தோன்றல் - இந்திரன். மயிலின் - மயில்போல. ஏலம்-மயிர்ச் சாந்து. இளமாதர் - அரம்பையர். தாறு - குலை. ஈற்று உளைந்த காலப்புயல் - சூலால்வருந்திய கார்காலமேகம். பழுக்காயாகிய பவ ழம். மாலைப் பழனம்-வரிசையா யமைந்த வயல்கள்.

௨௬. மாமஅடிகள் - மாமனாராகிய திருமால். முக்கட் கனி - சிவபெருமான். அக் கனியினிடத்துக் கனிந்த சுவையென்க. கன்னல் - கரும்பு. கரும்போ கமுகோ வென்றையுறுமாறு வளரும் நெற்பயிரென்க.

௨௭. கருமுகில் - இங்கே திருமாலைக்குறித்து நின்றது. இருபறவைகள் - சம்பாதி சடாயு. ஓர் பறவை - பிரமனைக் குறித்து நின்றது. உட்குதல் - நாணுதல். வெள்ளிமலைக்கட் பொன்மலை - சிவபெருமான். குவவு - திரட்சி. கூந்தற்பிடி - உமாதேவியார்.

௨௮. மெய்ப்புலன் - உண்மை யறிவு. புண்ணியம் நாறும் ஓர் பெண்கனி-உமாதேவியார். புள்ளூறென - புள்ளூர்போல.

௨௯. தோலாத - தோல்வியடையாத. நாவா - நாவினை யுடையவனே. மூவா - முதிராத. மாஆம் அச்சூர் - மாமரமாகிய அந்தச் சூரபதுமன். நூலா நூல்-வேதம்: பாயாவேங்கை, பறவாக் குளவி, நூலாக் கலிங்கமென்பன போல்வதோர் வழக்கு: மக்க ளாற் செய்யப்படாத நூலென்றலுமாம். கீலம் - ஒளி. கீலா - சோதிவுருவனே. காலாயுதம் - சேவல். வீறு - மேம்பாடு. ஏறு - ஆண்சிங்கம் போன்றவனே. ஏறு ஏறுங்காபாலி-இடபத்தை ஏறிச் செலுத்துஞ் சிவபெருமான். குருகு-இங்கே கழுகு.

௩௰. போதன் - மெய்ஞ்ஞான முடையோன். ஆறு - நீங் காத. அநுபாநா - அநுபாநமா யிருப்பவனே. ஆயாதசொல் - பிர ணவம். நான்ஆய் - கலப்பினால் நான்ஆகி. அநுபூதன் - காரணனா யுள்ளோன். நாதா-அறிபவனெனக் கொண்டு சிவஞானிகள் முதலி யோர்க்கு அறியத்தக்கோனே என்பதும் பொருந்தும்.

## சப்பாணிப்பருவம்

௧௧. முடங்குதல் - வளைதல். பரவை - இங்கே பாற்கடல். முளரிப்பிராட்டி - இலக்குமி. வள்ளிநாயகியார் திருமகள் புதல்வி யாதலின் முளரிப் பிராட்டியைத் தமுத்தாடு குறப்பாவையென்றார். 'மூவா முகுந்தன் முதளுட் பெறமமுது' என்பது கந்தபுராணம். அகில்தூமம் - அகிற்புகை. தாமம்-பூமாலை. தூரியம் - எழுதுகோல். அஞ்சனம் - கண்ணுக்கிடும் மை. அவள் மகிழ்ச்சிகண்டு தான் மகிழ்தமை கூறுவார் 'குங்குமப் புயங்கொட்டி நடமிட்டவ' னென்றார்.

௧௨. மழை - மேகம். கொந்தளம் - கூந்தல். உண்கண்-மை தீட்டப்பட்டகண். கொந்தளமும் சாயலும் உண்கண்ணு முடைய மான்கன்றென்க. அமருல கென்பது அமருல கென்றாயிற்று. மான்கன்று மடப்பிடி யென்பன தெய்வயானை யம்மையாரைக் குறித்து நின்றன. திருத்தாதை - இந்திரன். பசும்பொற் றசும்பு - பசும்பொன்னாற் செய்தகுடம். அசும்புபொன் - பரவிய சுணங்கு. முகங்கோட்டி - முகங்கவிழ்த்து. எய்யாமை - அறியாமை. 'எய்யாமை அறியாமை' என்பது தொல்காப்பியம். 'நோக்காக்கால், தானோக்கி மெல்லநகும்' என்பது திருக்குறள்.

௧௩. உம்பர் - தேவர். பரிதியுடல் கிழித்தோடும் - சூரிய மண்டலத்தை யூடுருவிச்செல்லும். உம்பர் பிளுக்கள் வாய்த்தே னமுதும் தெள்ளமுதும் உண்ணவேல் பணித்தலாவது தேவர்கள் தாம் கவலையின்றி யுண்ணவழியில்லாது அவுணரால் வருந்திய வருத்தம் நீங்கி அவற்றை நுகருமாறு செய்தமை. அவுணர்குழு அவ் வாறு உண்ணவேல் பணித்தலாவது அவுணர்கள் வீரர்களாய்ப் போரிற் பின்னிடாது மாண்டு வீரசொர்க்கம் புகுதலின் அவற் றைத் தேவரொப்ப அவரும் நுகருமாறு செய்தமை. எயினர் - வேடர். விழிவேல் - விழியாகியவேல்: முன்பின்னுகத் தொக்க வுவமத்தொகையுமாம்.

௧௪. சாயல்-மென்மை. நிலாமணிவடம்-ஒளிவிடும் முத்தவடம். அற - அற்றுப்போமாறு. வளைப்பு-அழகு. இதை இடை-



சிற்றிடை. இடைப்பாவி - இடையாகிய பாவி: இரக்கம்பற்றி வந்தது. குடிப்பிறப்புக்கு இயை குணமாவது வன்மை: கொலையுமாம்; வள்ளியம்மையாரது திருமேனியின் மற்றை யுறுப்புக்கள் மென்மை யனவாகத் திருத்தனபார மட்டும் வன்மையதா யிருத்தலின் இவ் வாறு கூறினார். குறைகுணம் - கன்மை நிலை. கைத்தலம்-செவ்வொளி விளங்குமாறு கொட்டுக என்க.

௧௫. விண் - ஒலிக்குறிப்பு. புவனம் படத் தேந்து வேந்து - ஆதிசேடன். பார்தன்வைப்பு-நாகலோகம். முண்டகக் கண்ணன் - திருமால். தொண்டர்கள் தொழும்புக்கு - அடியார்கள் செய்யும் அடிமைக்கு. வேடர் சீறூர்-குறிச்சி. தண்சாரல்-குளிர்ந்த மலைச் சாரல். நாகலோக முதலிய தமது இடங்களை யெல்லாம் அடியார்க் குக் கொடுத்துவிட்டுத் தான் இருத்தற்கு வள்ளியம்மையார் சொணர்ந்த சீதனக் காணியாகிய குறிஞ்சியைக் கொண்டானென்ற வாறு.

௧௬. கடலைச் சுவறச் செய்தது உக்கிரபாண்டியராய் மது ரையை அரசுபுரிந்த காலத்தென்க. வரை-கிரௌஞ்சமலை. திரிய - மறுபடியும். காலப் பிறழ்ச்சி யீண்டு ஆராயத் தக்கதன்று. ஓர் கட லைச் சுவறச் செய்து அதற்குப் பிரதியாக அவுணரது குருதிக்கடலை யும், ஓர் வரையை யிடித்து அதற்குப் பிரதியாக அவுணர்களது பிணமலையையும் வகுத்தமைத்தாரென்க. ஒட்டலர்-பகைவர். பிற கிட்டவர்-முதுகிட்டவர். தடவு-விசாலம். தயிரின்-தயிர்போல. உதிரமாகிய புனலில். தசை-ஊன். குடுமி-முனை.

௧௭. பட்டவர்-இறந்தோராகிய அவுணர். தம்மை வெட்டிய பூதத்தலைவர்கள் போர்க்களத்து நிற்பவும் தாம் ஞாயிற்றினது நடுவு புகுந்து வீர சொர்க்கம் அடைந்து தேவப்பெண்களைப் பற்றினாரென்க. தந்தொழில் தலை நிற்றலாவது-தாம் செய்யக் கிடக்கும் தொழிலைச் செய்யத் தொடங்குதல், அமரிற்கு உரிய மடக் கொடியார்-அமர்செய்து பிறகிடாது வீந்தோர்க்கு உரியபெண்டிர். உடல் மாறினமையால் அறிவு மாறினரென்க. கணவர்கள்-கணத்த வர்கள். இனி அவுணக் கடலைக் குரோடுந் தடிவாயாக என்று முருகப்பிரானை அவர்கள் வேண்டினரென்க.

௫௮. உடற்குறை-கவந்தம். உடற்குறை நீங்கிய முடித்தலையென்க. பறந்தலை-போர்க்களம். சிற்றலகை-சிறுபேய். தேர் அழிந்துபோக அதினின்று கழியும் சக்கரம். பரிசில் - தோணி விசேடம். தெருமால் - (அப்பரிசில்) சுழலுதல். மட்பகைஞன்-குயவன். திரிகை-குயச் சக்கரம். கொற்றமகள்-வெற்றியாகிய பெண் : அவள் சய லக்குமி.

௫௯. மறிதிரை - மடங்குகின்ற அலை. அளிதல் - கனிதல் : 'அளிபழம்' என்றாற்போல. அளியும் இன் அமுது - கனிந்த இனிய அமிர்தம். அறம் முதிய தவத்தோடும் வளருமாறு வளர்த்திடுதாயென்க. அடைய-முழுவதும். கலை-சாத்திரங்கள். மறை-வேதம். இவ்வளிகள் மொய்த்த மலர்ச்சோலை. மதவலி-மிக்கவலி. இங்கே மிக்கவலி யுடையோன்.

௬௰. தத்தாய்-கிளியே. கணை - அம்பு. பிணை-பெண்மான். நனை மலர்-குளிர்ந்த பூ. எழிலி-மேகம். கலபம்-மயிற்றோகை. வைத்தனை - வினையெச்சமுற்று : வைத்தனையாகி. முத்தேவாம் இறைவர்-பிரம விஷ்ணு ருத்திரர்கள்.

## முத்தப்பருவம்

௬௧. குருகு-கைவளை. நாறுதல் - பொருந்துதல். கையும் துசப்புமுடைய கொம்பென்க. கொம்பு-இங்கே உமாதேவியார். சிவபெருமான் பிரம விஷ்ணுக்களின் தலைகளை மாலையாகக் கோத்து அணிதலின், 'தாமரையோடு துழாய்ச் சருகு நாறுமுடைத் தலையின் தாமம் நாறு திண்டோட் டாதையார்' எனப்பட்டார். குரவு-குராமலர். அருகும்-பக்கத்திலும். முருகு-தேன்.

௬௨. கார்த்திகைப் பெண்டிர் கோல் கொண்டோச்சியவழி முருகப் பெருமான் புன்னகை புரிந்தமைக்குக் காரணங் கற்பித்தவாறு. நறவு-தேன். தாமரையாகிய தொட்டிலிலே. கைத்தாயர்-கார்த்திகைப் பெண்கள். குருதி ததும்ப-இரத்தம் கொப்புளிக்குமாறு. கோம் என-வருந்துமென்று. ஓச்சியவழித் தன்பெருந்தன்மையை நினைந்து முன்னிகழ்ந்ததை மறந்து பின்னதற்கு மகிழ்பூத்து முறுவலித்தா னென்க.



௬௩. புணரி-கடல். புளகம் - உரோமாஞ்சம். பகற்பொழுதைச் செய்யுஞ் சூரியனும் இராப்பொழுதைச் செய்யுஞ் சந்திரனும் சிவபிரானது திருவிழிகளாதலின் 'போது செய்யும் விழி' யென்றார். போது - பொழுது என்பதன் மரூஉ. அலையெறியுமாறும் புளகம் போர்க்குமாறும் விழியும் மனமுங் குளிர்துங்குமாறும் திருச்செவிகள் விருந்தாட்டயருமாறும் வார்த்தையொன்று மொழியும் பவளவாய் என்க. 'வீணைக்குதவுந் திருச்செவிக' ளென்றார் சிவபெருமானது திருச்செவி யிரண்டிலும் அசுவதரன் கம்பளனென்னும் இருவர் தோட்டு வடிவமாயிருந்து எப்பொழுதும் இசைப் பணிவிடை செய்தலின்.

௬௪. கலைப்பால்-சாத்திரப் பகுதிகள். மூதுக்குணறவு-பேரறிவு. கனியக் கனிய அமுது ஊறும் - பலகாலும் கனிந்தவழி அமுதத்தைச் சுரக்கும். கனிதலாவது இங்கே முதிர்தல். சாத்திரப் பகுதிகளின் அறிவு முற்றிய பேரறிவினையுடைய பண்டிதர்களது கேள்வி நலம் முதிர முதிர அமுது சுரக்கும் தெய்வமறையென்க. பாவலரது பசுந்தமிழ். மறையுந் தமிழும் நாற முலைப்பால் நாறுஞ் செங்கனிவா யென்க. அம்மை - உமாதேவியார். அமுதூறல் கொண்ட முலை-தேவாமிர்தத்தைச் சூலாகக் கொண்ட திருமுலை.

௬௫. புயலுண்டு - மேகம்போன்று. கொந்தளம் - கூந்தல். புளகம்-பூரிப்பு. பெண்ணமுது-வள்ளி நாயகியார். பன்னிரு கண்கட் கேற்பப் பன்னிருபொருள்கள் கூறினார். அமுதின் இயலுஞ் சுவை - அமிர்தத்திற் பொருந்திய சுவை. அவி - அவியுணவு. ஏமாப்பு - தருக்கு.

௬௬. கோடு - சிகரம். துழனி - ஒலி. குரவைப் பாட்டுப் பாடுதலாலுண்டாகிய துழனியா லென்க. கொண்டல் நிரைய-மேகங்கள் நிரையுமாறு. குழவு-இளமை. 'மழவுங் குழவு மிளமைப் பொருள' என்பது தொல்காப்பியம். பகட்டு வாளை-பெரிய வாளைமீன். சேடு - பெருமை. புத்தேள் நிலம் - தேவருலகம். புனிறு-ஈன்றணிமை. சேதா-செவ்விய பசு. சேதாவின் மடி

யிலே மூட்டவென்க. அது தனது செங்கன்று என்று கருதி மடை திறந்து பாலூற்றுகின்றது. தடவு - பெருமை. சினை - அரும்பு. மலர்த்தேனருவி-மலரினின்று சொரியும் தேனாகிய அருவி. இழுது படு கழனி - சேறு பொருந்திய வயல். தேவருலகிற் பசுவின்பாலும் கற்பகத்து மலரின்றேனும் பாய்தலாலே தெய்வமணம் நாறுகின்ற தென்க. ஏன்று-ஏற்றுக்கொண்டு காடுபடு செந்நெல் - மிகுதியாக விளைந்த செந்நெற்பயிர். கன்னல்-கரும்பு. 'நெற்கரும்பென' என்றார் பரஞ்சோதி முனிவர்.

௪௭. மழை - குளிர்ச்சி. சோலை செய்ய - சோலைபோன்று விளங்க. தோற்றம் - உதயம். அறுகால் மடுத்து அளிதூங்கு தேன் இறால் - ஆறு கால்களையும் பதித்து வண்டுகள் தூங்குகின்ற தேன் கூடு. இது தம்மின் - இதனைத் தாருங்கள். வம்மின் - வாருங்கள். அழிநறா-அறிவு அழிதற்குக் காரணமாகிய கள்: 'அழி பசி' என்றாற் போல. ஆர்தல்-குடித்தல். நல்லார் - பெண்கள். கட்குடித்த பெண்கள் தமது அறிவழிந்த காரணத்தால் உதய சந்திரனைக்கண்டு அது தேன்கூடென்று கருதி அதனைத் தருமாறு ஆடவரைக் கேட்க அவரும் அவ்வாறே செய்து பிழிந்தூற்றத் தொடங்கின ரென்க. ஊற்றும் அளவின் - ஊற்றும் பொழுதில். அபராதம் - குற்றம். அப்பொழுது சந்திரன் 'நான் இனிப் பெண்கள் முகமதிக்கு ஒப்பென்று சொல்லேன்: என்னை விட்டுவிடுக' வென்று வேண்டினன். உடுபதிக் கடவுள் - நக்ஷத்திரங்களுக்குத் தலைவனாகிய சந்திரன். மற்று-அசை. அவரினும் - அவரிடமிருந்தும்.

௪௮. மரு-வாசனை. கருங்கொந்தளம் - கருங்கூந்தல். பூந்துகள் - மகரந்தம். நறும்புகை - அகிற்புகை. முகிற்படலஞ் செய - மேகபடலம் போன்று விளங்க. தாமரைபோன்ற முகத்தின் சோதியெழத் தோன்றுகின்ற புன்முறுவலென்க. தழல் மணிக் கலன் வெயில்செய - பிரகாசம் பொருந்திய இரத்தினாபரணங்கள் சூரியன் போன்று பிரகாசிக்க. நிதம்பமும் முலையும் முறையே கடலும் மலையும்போல் தோன்ற. கோசிகன் செம்மல் - விசுவாமித்திர முனிவர். விசுவாமித்திரர் திரிசங்கு மன்னன் பொருட்டு வேறு விண்



ணுலகு படைத்தது போன்று நீவிரும் படைக்க வல்லமையுடையீர் போலுமென்று மகளிரைக் கூடிப்பிரிந்த தலைவர்கள் அவர்கள் மகிழுமாறு கூறுஞ் சொற்களை ஆண்டுக் கேட்டிருந்த கிளிகளும் கூற, அதனாற் பெண்டிர் மனங் குழைகின்றா ரென்க.

௪௯. வனசம் - தாமரை. அகம்-திருவுள்ளம். அமர் தொற்றவன் - இந்திரன். அவன் புதல்வி - தெய்வயானை யம்மையார். சூரியனும் சந்திரனும் ஒளிருமாறு விளங்கும் ஒளி யுடையவனே யென்க: அஃதாவது இப்பெருமான் அவர்கட்கு உட்பொருளாயிருந்து அவர்களை விளக்குகின்றா ரென்பது. அளிதல் - கனிதல்.

௫௰. செச்சை - செச்சை மலரை யுணர்த்திநின்றது. குரவு - குராமலர். கடவும் மயில்-ஏறிச் செலுத்தும் மயில். அயில்-வேற்படை. வடிவினழகு முதலியவற்றைத் தமது கண்களிலும் மனத்திலும் எழுதி அடிகளைப் பணியும் அடியார்க ளென்க.

## வருகைப் பருவம்

௫௧. கருங்கழல் - பெரியகழல். அரிக்குரல் - தவளைக்குரல் போன்றகுரல். பகடு-விசாலம். சன்னவீரம்-வெற்றிமாலை. மகரகுண்டலம்-மகரமீன் வடிவிற் செய்யப்பட்ட குண்டலம். கட்டி சூழியப்பட்டமென்பன ஆபரண விசேடங்கள். பனி-குளிர்ச்சி. குரவு-குராமலர்.

௫௨. பசுந்தேறல்-இங்கே வாயூறலைக் குறித்தது. குரவை-குரவைக்கூத்து. முழவு முதிர்துடி-முழவின்றன்மை முற்றப் பெற்றதுடி: எழுவகை முழவுகளுள் காலமுழவு துடி யெனப்படுதலின் 'முழவு முதிர்துடி' யெனப்பட்டது. இதனைச் சிலப்பதிகாரத்து அரங்கேற்றுகாதையில் 'தாழ்குரற்றண்ணுமை' யென வருவதற்கு அடியார்க்கு நல்லார் கூறிய உரையான் அறிக. இதுமுதல் முருகப்பெருமானது சிறுபருவக் குறும்பு கூறப்படுகின்றது. அனல்-சிவபெருமான் திருக்கரத்திலுள்ள நெருப்பு. மோலி நீர் - கங்கை. இளமான்-சிவபெருமான் திருக்கரத்துமான். அறுகு - திருமுடியிலுள்ள அறுகம்புல். விழவு - ஈண்டு மங்கலமென்னும்

பொருளில் வந்தது. சேப்ப-சிவப்ப. முழுவெள்ளநீர்-கங்கைநீர். துளையம் ஆடி - விளையாடி.

௩௩. இமைத்தல்-பிரகாசித்தல். அலர்சோதி-விளங்குகின்ற ஒளி. இளஞாயிறு என-உதய சூரியனென்று எண்ணி. தொகுதியைக் காடென்றார்: வனமென வருவதும் அது. 'செந்தாமரைக் காடு' என்றார் திருவாதவூரடிகள். தாமரைக்காடும் குமுதவனமும் உழக்கி யென்க. செம்மலர்களாக-சிவப்ப. கலவி-இணை விழைச்சு. வெருளின் மடநோக்கு-வெருட்சியோடு கூடிய மடப்பம் பொருந்திய பார்வை. நீள் வீரர்-சிறந்த வீரர்கள். அவர்களாவார் வீரவாகுதேவர் முதலிய இலக்கத்தொன்பதின்மர். கோளரிக்குருளை-சிங்கக்குட்டி.

௩௪. சடை காடெனப்பட்டது யாறு பாம்பு கொன்றையென்றித்தொடக்கத்தனவுடைமையால். பிறை - பிறை வடிவிற் செய்த அணிகலம். தெட்டல்-கவர்தல். சந்திரன் போன்றிருந்தலின் செம்பாம்பு பைவிரித்தாடிற்று. அதனைக் குமரக்கடவுள்தர் திருமுடியிற் சூட்டுதற்கேற்ற காந்தண்மலர் போலுமென்றெண்ணி அருகணைந்தனர். மட்டு-தேன். நகைத்தி-நகைக்கின்றாய். ஆல்-அசை. மலரவன்றலை-இயல்புவிளி. இதழ் அதுக்குதல்-உதட்டினை மேற்பல்லால் அழுத்துதல்: இது சினக் குறிப்பு.

௩௫. அங்கைத் தலத்து-அங்கையால். அம்மையார் விசாலாக்ஷியாதலால் முருகக்கடவுள் தம் திருக்கரத்தாற் புதைத்த காலத்து அம்மையாரது கண்கள் அடங்காவாயின. சிவபெருமானுக்குச் சுடர்களே கண்களாதலின் அவர் திருக்கண்களைப் பொத்திய காலத்து இருட்படலம் மூடியதென்க. ஏங்குதல் இரண்டனுள் முன்னது விம்மியெழுதற் பொருளிலும் பின்னது இரங்குதற் பொருளிலும் வந்தன. எடுத்தணைப்பாள்-உமாதேவியார். கதுப்பிற்றெறித்தல்-கன்னத்தில் (விளையாட்டாக) அடித்தல். நீவுதல்-தடவுதல். கௌமாரி-உமாதேவியாரது திருநாமங்களுள் ஒன்று. மாரியின்-மாரிபோல. கொண்மூயாகிய குடம்.



௩௬. கமல வட்ட அணைப்பாவை-இலக்குமி. முடை நறவு-முடை நாற்றம் பொருந்திய கள். கடைக்கூடாமை - முடிவு பெறாமை. மாயச்சலதி - மாயக்கடல். சமயத்தவர்-முக்கூற்றுப் புறச் சமயத்தார். ஆனந்தக்கடல்-சிவபெருமான். திருவாதவூரடிகளும் 'ஆனந்த மாகட'லென்றார்.

௩௭. வள்ளை-வள்ளைத்தண்டு போன்ற காது. தாவடி-போர். தாவடிபோதல்-போர்க்குச் செல்லுதல். மடுவில்-மடுவினின்றும். வெடிபோம்-துள்ளியெழும். அழுவநீர்ப்பரப்பு - கடலாகிய நீர்ப் பரப்பு. பரிசு-தன்மை. வீட்டின்பத்தை நுகருங் கருத்தோடு மெய்யல்லாத பிறிதொரு தெய்வத்தை உண்மைப் பொருளென்று கருதவும் தம்முடைய அறிவிலே மெய்ப் பொருளாயுள்ள சிவபெருமான் முற்றுவித்தலினாலே தாம் விரும்பிய உறுதிப்பயன் கிடைத்த பரிசு போல வென்க.

௩௮. கொலை நீற்றம்-கொலைத்தன்மை பூசப்பட்ட. இகல் கடந்து-பகைவர்களை வென்று. களிறு-கொங்கையாகிய யானைகள். மடல்-பூவிதழ். கடலந்தானை-கடல் போன்று பரந்த படை: அம்-சாரியை. கை நிமிர்தல்-மிகுதியாக வருதல். படைவீடு-போர்மேற் சென்றோர் தங்கியிருக்கும் பாசறை. வேள் முருகக் கடவுட்கும் மன்மதனுக்கும் பெயராதலின் முருகக் கடவுளால் வேளெனும் பெயர் வந்ததேனும் மன்மதனால் அப் பெயர் வந்ததென்று கூறுதலும் இவ் விக் காரணங்களாற் பொருந்து மென்றவாறு.

௩௯. அமுதகிரணம்-சந்திரன். உதயம்-சூரியன். கழுவு துகளர் என்பது வடமொழி வழிக்குப் பற்றி வந்தது. 'கழிந்த உண்டியர்' எனத் திருமுருகாற்றுப்படையில் வருவது அது. ஒளியின் நிலயம்-ஒளிக்குப் பிறப்பிடமாயிருப்பவன். அறிவு-உயிர்: அதற்கு உள் அறிவு உயிர்க்குயிராகிய சிவபெருமான்.

௪௰. இழுமென்னு மோசையுடன் வீழும் அருவி. வதனன்-முகத்தையுடையோன். விளரி-யாழிசை. அளி ஞிமிறு என்பன வண்டின் பேதங்கள்.

## அம்புலிப் பருவம்

௧௧. மண்டலம் - உலகம், வட்ட வடிவம். போற்றுதல்-வணங்குதல், கொள்ளுதல். அமுதம்-அழிவில்லாதது, அமிர்தம். முழுமதிக்கடவுள் - முற்றுணர் வுடையவர், பூர்ண சந்திரன். வானாறு-ஆகாய கங்கை, சிறந்த நதி. தலை மடுத்தல்-முடியிற் கலத்தல், தன்னிடம் வந்து கலத்தல். பொங்கு மானந்த மாக்கடல்-உயர்ந்த சிவபெருமானாகிய ஆனந்தக் கடல், பெருகும் பெரிய சங்குகளையுடைய பெருங்கடல். கொடிச்சி வாய்க்குமுதம் விள்ளல்-வள்ளி நாயகியார் வாயாகிய குமுதம் திறந்து பேசுதல், கொடியிற் குமுதமலர் விரிதல். கரத்தாமரை முகிழ்த்தல்-கையாகிய தாமரை மலரைக் கூப்புதல், ஒளி பொருந்திய தாமரைகள் வாடுதல். உயிர்ப் பயிர்-ஜீவகோடிகளாகிய பயிர், உயிருள்ள பைங்கூழ்கள். தண்ணளி-குளிர்ந்த கிருபை, மிக்க குளிர்ச்சி. பரஞ்சோதி கட்பொறி-சிவபெருமானது திருக்கண்ணிற் றோன்றிய அனற் பொறி வடிவம், சிவபெருமானது கண்ணிந்திரியம் என முறையே முருகப் பெருமானுக்கும் அம்புலிக்கும் ஏற்குமாறு பொருள் கொள்க. அண்டர் அண்டம்-தேவருலகம்.

௧௨. சொல்-நூல், புகழ். புலவர்-சங்கப் புலவர், தேவர்கள். கலையமுது - நூல்களின் சுவை, கலையிற் பெருகும் அமிர்தம். கொளவிருங் தோகைமேல் கொள்ளல்-கொள்ளுமாறு அவர்க்குத் தலைவராயிருந்து மகிழ்ச்சி கொள்ளுதல், கொள்ளுமாறு விருந்து செய்தலாகிய மகிழ்ச்சி கொள்ளுதல். தோற்றி முன் பொங்கி மலை போல அலைமோதும் அச் சோதி வேலை யுகத்தல்-வெளிப்பட்டுச் சீறிக் கிரௌஞ்ச மலையைப் போலக் கடலையும் மோதிய ஒளி விளங்கும் அந்த வேற்படையை உயர்த்துதல், உதித்து கின்முன் பெருகும் மலைபோன்று அலை யெறியும் வடவா முகாக்கினியை யுடைய கடலை விரும்புதல். குணம்-அருட்குணம், நிறம். குறித்தல்-தியானித்தல், மேற்கொள்ளுதல். இரவலர்-யாசகர்களாகிய அடியார்கள், இரவில் மலரும் பூக்கள். கோடாது-மாறுபடாது, குவியாது. கொடியது - தவசத்திலுள்ளது, கொடுமையானது.



இதழ்-அதரம், பூவிதழ். நிலா-புன்முறுவல், நிலவு என முறையே முருகப் பெருமானுக்கும் அம்புலிக்கும் ஏற்குமாறு பொருள் கொள்க. அல் பொதி களத்தவன்-நஞ்சு தங்கிய திருமிடற்றை யுடைய சிவபெருமான். முதலடியில் குமாரப் பெருமான் தோகையின்மேல் எழுந்தருளுதலுங் குறிக்கப்பட்டமை காண்க. இவை யிரண்டு செய்யுளுஞ் சாமம்.

௧௩. அடிகள்-இங்கே சிவபிரான். இரவோன்-சிலேடையாற் கங்குலை ஆள்பவன், யாசிப்பவன் எனப் பொருள் படும். அமுத அசனர்-அமிர்தத்தை உணவாகக் கொள்ளுந் தேவர்.

௧௪. இருட் போதத்து-இருட் பொழுதில். அவிருள்-ஆணவ மலம். சகோரம்-நிலாமுகி யென்னும் பறவை. குறுகி-அடைந்து. ஆயிரம் மறை-பல வேதங்கள்: இனி ஆயிரஞ் சாகையை யுடைய சாம வேதமுமாம். குமாரக் கடவுள் சாம வேதத்தால் துதிக்கப்படுதலைச் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்திற் காண்க. இவையிரண்டும் பேதம்.

௧௫. தரு-கற்பகதரு. தலைத்தலை மயங்கலாவது - தேவரிடைதலாற் றேவருலகென்றும் மனிதரிடைதலாற் பூவுலகென்றும் கூறுமாறு விரவுதல். பையுள் - துன்பம். க்ஷயரோகம்-க்ஷய ரோகம். வெண்சாந்து-சந்நிதியின் றென்பாலுள்ள விபூதிக் குண்டத்திலுள்ள திருநீறு. திருச்சாந்து அங்கசந்தானத் தீர்த்தத்துள்ள திருமண். சித்தாமிர்தம்-இதனை அ-வது செய்யுளுரையிற் காண்க.

௧௬. உரை-ஆகமப் பிரமாணம். உணர்த்துவதை-ஐசானியை. உளக் கண்ணதாம் விழி-உள்ளத்திலிருப்பதாகிய ஞானக்கண். பொழியாத புயல்-திருமால். புயனிறங் கொண்டும் விண் தாங்கியும் நீர் பொழிதலின்மையின் அவ்வாறு கூறப்பட்டார். அவரது புவனம்-வைகுண்டம். இவை யிரண்டுந் தானம்.

௧௭. நெட்டுடல்-நெடிய வுடம்பு. தூணம்-தூண். வீக்குதல்-கட்டுதல். பழு என்பு-விலா எலும்பு. கொடிறு-கவுள். பிலவாய்-பிலம் போன்றவாய்: பிலம்-மலைப் பிளவு. மட்டு-தேன். அட்ட திக்கு-எட்டுத்திசை. திக்கு-புகல்.

௬௮. குன்று-கிரௌஞ்சமலை. குடுமி-முனை. சூர்-சூரபதுமன். குண்டிகை-கமண்டலம். கள்வன் - இங்கே நான்முகன் : வேதப் பொருள் உணராதிருப்பவும் உணர்ந்தவனாகத் தன்னைக் கருதிச் செருக்குக் கொண்டமையாற் 'கள்வன்' எனப்பட்டான். குலிசன்-இந்திரன். எண்மர்-எட்டுத் திக்குப் பாலர்கள். அன்றைக் கணக்கு-அன்றைக்கு நடந்தது போல்வது.

௬௯. இரவிபகை-பாநுகோபன். இளவீரன்-வீரவாகுதேவர். கள்ளம் பழுத்தல் கண்ணுக்கு அடை. முத்துக் குவிக்கப்பட்ட மணற்குன்றென்க.

௭௰. சகத்-உலகம். சுரநதி-கங்கை. தேவர் பேதை-தெய்வப் பெண். கங்கையாற்றில் தெய்வப் பெண்கள் நீராடுவதுபோலக் காவிரியாற்றில் சிறை விரித்து அன்னப் பறவைகள் திளைத்தாடுகின்றன என்க. இவை நான்குந் தண்டம்.

## சிற்றிற்பருவம்

௭௧. குறுமென்னடை-தளர் நடை. நகை-முறுவல். கண்குளிரக் கண்டு மகிழ்ந்தென்க. சுட்டியினை அணியுங் குஞ்சி. கனி பவளம்-கனிந்த பவளம் போன்றவாய். முத்தண்டு-முத்தமிட்டு. முன்றிற்புறம்-வீட்டின் முன் புறம். பொன்-அணங்கு. இளையார்-சிறுமியர்கள். மறுக-வருந்த. மறுகு-வீதி.

௭௨. நாண்மலர்-அன்றலர்ந்த பூ. குரவு-குராமலர். மகனே கொழுந்தே யென்று இரந்து தொழுகின்ற வானவரென்க. அவர்கள் தம்முடைய முடியிலே சூட்டிக்கொள்ளுஞ் சோதியாகிய சிவபெருமான். நீ அவர் மீதேறி விளையாடுகின்ற காலத்து உனது காலிற் புழுதி அவர் திருமுடியிற் படினும் படுக. சுடர்க் கழுவாமணி-ஒளியினையுடைய மண்ணுத மணி. மணியும் முத்தும் உன் காலிற் படுமேல் உமையம்மையார் அவை தங் கண்ணிற் பட்டனவாகக் கொண்டு வருந்துவ ரென்பதாம்.

௭௩. புறம்பு-ஒதுக்கம். கடுக் கடலில் வருத்த நகர்-மகேந்திரபுரம். முற்றில்-சிறுசுளகு. 'முற்றத் திடையுலவி முற்றின் மணி கொழித்து' என்பது கந்தபுராணம். குருகு-பறவை. குருகு பெயர்க் குன்றம்-கிரௌஞ்சமலை. சுழிக் குண்டு அகழி-சுழிகளையுடைய ஆழமான அகழி. வளை-சங்கு.



௭௪. பூரி-பெருமை. வடி-மாவடு. கண்ணேறு-கண் திட்டி. வேழக் கரும்பு - கரும்புவிசேடம். பருதித் தேருக்கெழில் செய்தலாவது பாளைவிரி கமுகுங் கரும்பும் சூரியமண்டலம் வரை அளாவி அத் தேருக்குக் கட்டி யலங்கரித்தாற்போன்று விளங்குதலென்க.

௭௫. தேவப்பெண்களுக்கு மாளிகையுஞ் சூளிகையும் புதுக்கிக் கொடுத்தலாவது சூரபதுமன் தீக்கொளுவி யழித்த இந்திரலோகத்தை மீட்டும் புனைந்து இந்திரன் அரசாளுமாறு அவனுக்கு முடிசூட்டிவைத்தல். ஞானமெய்ந் நின்றவர் - உண்மை யறிவிலே உறைத்து நின்ற சிவஞானிகள். உள்விழிப்பாவை - அகக்கண். கங்கைப் போற்றிலே வாளைப்பகடு உதைத்தலானே வீழ்ந்த தென்னம்பழம் கற்பகத்தின் கழுத்தொடியுமாறு வீழ்கின்றதென்க.

௭௬. மீனம் - மீன். மிச்சில் - எச்சில். மிசைதல் - உண்ணுதல். நசை - விருப்பம். குமுதத்தமுது - வாயமுது. பிறையின் கோடு உரிஞ்சுகின்ற கொடியென்க. குரு - நிறம். கங்கையிலேயுள்ள தாமரைகள் மாடத்திலழுத்திய மணியின் ஒளியால் மலர்கின்றன வென்க.

௭௭. செருகுதல் - தலையிலே முடித்தல். ஆயவெள்ளம் - பெண்கள்கூட்டம். வேண்டில் இடுகேம்-நீ விரும்பினையாயின் தருகின்றேம். சிறுகுறம்பு - சிறுவீடழித்தல், சிறுகலஞ் சிதைத்தன் முதலியன. காமன் கொடியேற்று - காமன்விழாவிற்குச் செய்யுங் கொடியேற்று.

௭௮. பேதையொருத்தி - உமாதேவியார். மட்டித்தல்-அழித்தல். விடலாய் - விடலையென்பதன் விளி. வித்தும் முளையும் வேறன்று - 'விரையொன்றிடச் சுரையொன்று முளையாது' என்னும் பழமொழி. கடமா - யானை. திடர் - மேடு.

௭௯. வாமம் மாண்கலை - அழகு மாட்சிமைப்பட்ட மேகலை. அகம்படிமை-உள்ளிடத்துச்செய்யும் பணிவிடை. காய்மாண் குலை-

காய் மாட்சிமைப்பட்ட குலை. கடவுட்சாதி மடநல்லார் - தெய்வப் பெண்கள். எக்கறுதல் கண்டு கமுகு முத்தரும்பிற்றென்பது.

௮௰. கருக்கொண்டிருந்த பெருங் கருணையாகிய மழையென்க. கண்டாய் - படைத்தாய். மனைகோலுதல் - வீடு அமைத்தல். மாறு - வேறுபாடுடையது.

## சிறுபறைப்பருவம்

௮௧. உவட்டல்-பெருக்கெடுத்தல். முச்சி-உச்சிக்கொண்டை. மும்முதற் கடவுள் - பிரமவிஷ்ணு ருத்திரர்கள். போற்றுந் திறத்தின் - காக்குந் தன்மைபோல. வேளூரிலுள்ள தவள மாடங்களின் ஒளி பிரதிபலித்தலின் நெடுவெளி முகடும் கருமுகிலும் புவனத் தட்டொடு அண்டச் சுவர்த்தலமும் வெண்மையாயின வென்பார் அவ்வாறு கூறினர். இதனால் சந்திரனும் இத்தவளமாடத்தின் ஒளிப் பிரதிபிம்பமே என்றதாயிற்று. ஏனையவும் அன்னவாறுதல் காண்க.

௮௨. கடைவெள்ளம் - ஊழிக்காலத்து வெள்ளம். சுருங்க - சுருங்குமாறு. வீங்கி - பெருகி. வேதண்டம் எட்டு - அஷ்டகுல பருவதங்கள். முதண்டகூடம் - பழைமையான அண்டமுகடு. பெரும்புறக்கடல் - உலகங்களனைத்துக்கும் அப்பாலுள்ள கடல். வாய்மடுத்தல் - குடித்தல். பனிக்கறை சந்திரன் பலகாலும் ஏறி இளைக்குமாறு அத்துணை உயர்வுடையது. அதுகாலும் இளநிலா சந்திரனது முயற்கறை நீங்குமாறு செய்கின்றதென்க. அத்துணைச் சிறப்புடைய இளநிலாவிலே மூழ்கிப் பின்பு பாகீரதியின் வெள்ளத்திலே குடையும் பெண்கள்போலத் திளைக்குந் துகிற் கொடிகள் என்க. அத்துகிற்கொடிகள் முகிற்கொடிபோல விளங்கும் வேளூர். நகில் - கொங்கை.

௮௩. வேளூரிலுள்ள பளிங்கு மாடங்களினின்று விரியும் சுதை நிலவு கடலாகக் கொள்க. அக்கடன் முகட்டெழும் பிறை முயலாகிய குழந்தை யேறவிடும் ஓடமென்க. 'முயலெனு மொரு மகனுப்பச், செலவு கொண்டதோர் தோணிபோன்றது சிறு திங்கள்' என்றார் கச்சியப்பசிவாசாரியர். தேவப்பெண்களும் தேவர்களுஞ் செலுத்தும் விமானம். வெயிற் கதிர்ப்போர்வையான் - ஞாயிற்றுப் புத்தேள். விமானமுந் தேரும் தெப்பமாமென்க. இவ்வாறு கூறுமாறு திரளும் மாடமென்று கூட்டுக.



௮௪. மொய்ம்பு - வலிமை. மோடு - பெருமை. உருக்க - ஒளிய. முடவு - வளைவு. அரவரசு - ஆதிசேடன். கம்பம்-அசைவு. யானையெட்டு - அஷ்டதிக்கயங்கள். நெட்டரவெட்டு - வாசுகி முதலிய நாகங்கள். உருக்கப்பொங்க கவிழ்ப்பிதுங்கத் தடம்புரிசை உருவி யளவலாலென்க. அவரவர் - அவ்வுலகத்துள்ளார். வழங்குதல் - செல்லுதல். தலைக்கடை - வாசல். அடுக்கேழும் நிலையேழும் பொருந்திய கோபுரமென்க.

௮௫. தடமதில் மிக்க உயரமுடையதாதலின் ஞாயிறுந் திங்களும் அதனைக் கடந்து அகநகர் புகுதலரிதாயிற்று. ஆதலின் வேளூரில் ஞாயிறுந் திங்களும் தரும் ஒளியை ஆண்டுள்ள செம்மணி மாடங்களும் செழுந்தரள மாடங்களுமே தருகின்றன. பிரமன் கற்பந்தோறும் உலகிற்கு ஒளிதருமாறு படைக்கின்ற இருசுடர் என்க. ஒருவழி - ஓரிடம். பசுங்கதிர் வெண்புரி புரிக்கும் - பசுமையான கிரணமாகிய வெள்ளிய கோட்டையை வளைக்கும். இம் மாடங்கள் ஒரேகாலத்தில் ஒளிவிடுதலின் பகலுமிரவும் பிரித்து அறிதல் அரிதாயிற்று. ஆதலின் ஆண்டு மலருந் தாமரையும் குமுதமுமே அவ்வக்காலத்தை அறிவிப்பனவாயின.

௮௬. குமரப்பெருமான் முழக்கும் பறையொலிகேட்ட பிறர் பிறர் தாந்தாம் கருதும் ஒலியெனக் கோடல் கூறப்படுகின்றது. மயிலினம் மழைமுழக் கெனவும் விரகமடைந்த பெண்டிர் கடலொலி யெனவும் தேவர் வேதவொலி யெனவும் சிவானுபூதி யுடையார் பரநாதவொலி யெனவும் அமரரும் முனிவரும் சிவபெருமான் நடனஞ்செய்கின்ற காலத்து வாணாசுரனும் திருமாலுங் கொட்டும் முழவினொலி யெனவும் கருதுமாறு பறை முழக்குக என்றவாறு. ஆயிரம் அங்கையினோ னண்ணல் - வாணாசுரன்.

௮௭. சிறுபறையினை மெல்ல முழக்குமாறு வேண்டப்படுகிறது. வெளிமுகடு - அண்டமுகடு. பித்திகை - சுவர். பேரண்டத்

துள வேதண்டங்கள் - பெரிய அண்டத்திலேயுள்ள மலைகள். குரு மணி சிதறியவென்ன - பல நிறம் பொருந்திய மணிகள் சிதறின வென்று கூறுமாறு. உடுத்திரள் - நக்ஷத்திரத்தொகுதி. திசை யெல்லாம் செவிடுபடுமாறு ஒலித்தலான் சிலரது குடல்கள் குழம் பாமல். விரலும் நகக்கண்களும் கன்றாமல்.

அஅ. வம்பின் - வாருங்கள். கவிவாணர் - கவியால் வாழ்பவர். வாணர் - வாழ்நர் என்பதன் மரூஉ. பொன்னுலகின்ற அணங்கு - தெய்வயானை யம்மையார். தெவ்முனை - பகைப்புலம். களவேள்வி-வீரர்செய்யும் வேள்வி. விழவு அயர்தல் - விழாக்கொண்டாடுதல். மும்முரசு - தியாகம் மங்கலம் வெற்றியென்னு மூன்றனையுங் குறிக் கும் முரசுகள். வேளூரில் மும்முரசும் ஒலித்தலான் நீயும் அவ்வாறு அவ்வம் முரசாகப்புலவர் முதலியோர் கருதுமாறு பறை முழக்குக என்றவாறு.

அகூ. சுவையினையுந் தெளிவினையு முடையதேன். கனி கனி-கனிந்த கனி. மலையும் நெகிழ்ந்து உருகுமாறு பேசுங்கிளி யென்க. அளியனிடத்து-அளிசெய்யத் தகுந்தோனாகிய என்னி டத்து. புகலா-புகன்று. அருளில் புனத்தவர்-வேடர்கள். வரு டல் செயா-வருடி. பொற்பதத்தை வருடி எடுத்து முடித்திடு காமலர். வயிரமலை போன்ற புயமலையுடையவனே.

கூ௰. ஆசிரியர் தோல்காப்பியனார் மெய்ப்பாட்டியலிலே 'நகையே யழுகை யிளிவரன் மருட்கை, யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென், றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப' என்று எட்டே கொண்டாரெனினும் அழுகை தன் பொருட்டழுகையும் பிறர் பொருட் டழுகையுமென விருவகைப்பட்டு அவை முறையே அவலமெனவும் கருணையெனவும் கொள்ளப்படுதலின் இரசம் ஒன்பதா மென்னுங் கருத்தான் 'தமிழின் வடித்திடு நவரசமே' யென்றார். இதயம்-உள்ளம். இருள்-அறியாமை. கழுவு மணி-சுத்தஞ்செய்யப்பட்ட இரத்தினம். முக்கனி-மா, பலா, வாழை யிவற்றின் கனிகள். சலநிதி-கடல்.



## சிறுதேர்ப்பருவம்

கக. போர் ஒடு படை - போரிலே செலுத்தப்படும் படை. துறந்து-கைவிட்டு. உடல் திறந்து ஒடு செம்புனல்-உடலினின்று வெளிப்போந்து பெருகுகின்ற குருதி. ஓடி-புறங்காட்டியோடி. புணரிப்பெருந்தானை-கடல் போன்ற பெரிய சேனை. அதனை யுடைய அவுணப் படைத் தலைவ ரென்க. குஞ்சியவிழ்தல் கண்ணி மைத்தல் போரிலே எதிர் செல்லாது பின் வாங்குதல் கையிலே படை கொள்ளாமை முதலிய இவை ஒரு வீரனிடத்து நிகழு மாயின் அவனை எதிர்த்தல் கூடாதென்பது அறப்போரின் விதி. ஆகவே இவ்வினை செய்து புறங்காட்டி வந்த எங்களுக்கும் உங்க ளுடைய மாங்கலியத்திற்கும் முருகக் கடவுள தாணையே வேலி யென்று தம் பெண்டிர்க்குக் கூறவென்க. நாமனும் தாலி-இஃது எங்கே நீங்கிவிடுமோ என்று நீங்கள் அச்சங் கொள்ளுதற்குக் காரணமாயிருந்த திருமாங்கலியம். பீர் ஒடு கொங்கை-பசலை பார்ந்த தனம். கண்ணீர் ஒடு வெள்ளருவி-கண்ணீராக ஓடுகின்ற அருவி. கடை-வீட்டு வாயில். அவ்வாறோதிய காலத்து அப்பெண்கள் முருகப்பெருமானது திருவருள் விலாசத்தை நினைத்து நிற்ப அவர் கண்முன் தவ்வினை அனவரதமும் பிரியாது உடனுறையும் தெய்வ நாயகி வள்ளிநாயகி யென்னுமிவர் கண்கள் முன் நின்றாற் போன்று நிற்பவ னென்க.

கஉ. வீரர்-அவுண வீரர். கண் தொட்டு உண்ணும்-அக்கண் ணைத் தோண்டியுண்ணும்: 'கண்டொட்டுண்ட கழிமுடைக் கருந் தலை' யென்பது திருமுருகாற்றுப்படை. மருட்பேய்-மயக்கினை யுடையபேய். தும்பைத் தலைச் செம்மயிர்-தும்பை மாலை யணிந்த தலையினது செம்மயிர்: இம்மாலை போரெதிர்ப்போ ரணியுமாலை யென்க. சிணுங்குதல்-அழுதல். சூர்ப்பேய் அம்பிற்சுட அதுகண்ட குறட்பேய் மகிழ்ந்து கவந்தமொடு தொந்தமிட்டாடும் பறந்தலை யென்க. பறந்தலை-போர்க்களம்.

கங. பங்கி-ஆண்மயிர். அவுணராதலின் அவர் பங்கி செந் நிறப் பங்கியாயிற்று. கமலவனம்-தாமரைக்காடு. அது நிறைந்த

குருதியாறு என்க. அவ்வாற்றிலே பெரிய யானை துதிக்கையை மேலே வீசிக்கொண்டு பிளிறி நீந்துகின்றது. அதனைக் கடலிலே யுள்ள மகரமீனென்று நினைந்து அதனைப் பிடித்தற்கு விரும்பி அவ் வெள்ளங் கொண்டு செல்லும் ஓர் சிறிய குடராகிய வலையை யெடுத்துக் குறட்பேயொன்று வீசியது. உடன் அவ்யானை மிகுந்த சினங்கொண்டு அப் பேயைப் பிடித்து இழுக்க அஃதலறியது. இவ்வளவிலே முருகக் கடவுளது சேனைவீரர் அவுணர்மேல் எறிந்த சக்கரப்படை அவுணரைக் கொன்று அவ்யானை குறட் பேயைப் பற்றிய இடத்திற்கு வந்தது. இக்காட்சி திருமால் விடுப்பக், கயேந் திரனைக் காத்தற்கு வந்த திகிரி பொன்ற தென்க. அவ்வாறு விளங் கும் பறந்தலையிலே சூரபதுமன் செலுத்திய இந்திர ஞாலத்தேர் உருவாது செய்த பிரானே சிறுதே ருருட்டுக என்றவாறு.

௬௪. சிறை-சிறகு. மயிலினது தோகையிற் கண்களிருத்த லால் 'பைக்கட் சிறை' யெனப்பட்டது. கால்-காற்று : அஃதா வது முருகப்பிரான் மயிலின்மீதேறிச் செல்லும் பொழுது தோகையாலெழும் காற்று. கடைக்கால்-ஊழிக்காற்று. அதனால் மலைகள் பண்டு இந்திரன் அரிந்த சிறகுகளை மீளவும் பெற்றுப் பறப்பனபோல இம் மயிலின் வேகத்தினெ டொக்கப் பறக்க வென்க. உடற்குறையும் தலைக்குறையும். மாச்செல்-கரியமேகம். உடுகை-நக்ஷத்திரங்கள் சிதற. பொங்கல்-பொங்கி யெழுதல். கட லும் திக்கும் தம்மிற் போர்புரிய. ஆர்த்தலினாலே யுண்டாகிய புகைப்படலத்தையுடைய வடவாமுகாக்கினி போன்ற செங்கண் என்க. வாம்பரி-வாவும்பரி : 'செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர, மவ்விட னறித லென்மனார் புலவர்' என்பது தொல்காப்பியம்.

௬௫. செய் வைத்தல்-செய் பூசுதல். பிடிக்கு உதவ-பெண் யானைக்குக் கொடுக்கும் பொருட்டு. காற்கோட்டுக் குன்று-ஐரா வதம். கிளம்-சங்கிலி. கன்னல்-கரும்பு. கைவைத்திட-கைவைத் திடுமாறு. பரிமுகஞ் செய்து-குதிரை முகம் போலுர் தோற்ற முடையனவாய் வளர்ந்து. பின்பிடிக்க-பின்பற்ற. மூலை வேழம்-தெய்வப் பெண்கள்.



௬௬. காமன் படை-மகளிர் : அப்படை தங்கும் பாடி வீடு ஊர்க ளனைத்தும். அத்திரம் தாமரை நீலமுதலியன. அவற்றிற் குரிய சாலை பழனங்கள். காற்றாகிய தேரும் இருளாகிய யானை யுங் கட்டப்படுங் கூடம் பூஞ்சோலை. இவ்வாறு மன்மதன் தங்கு தற்குரிய இடமாக இருந்தும் இந்திரன் மருதக் கோமானாய் வீற் றிருக்கும் சோணாடென்க. திண்டோட் பொற்றடங்குன்று-இது முருகப் பெருமானுடைய புயாசலங்கள். அல்குலாகிய கடலென்க. புயாசலத்தில் கொடியாகிய வள்ளி நாயகியார் படருமாறு நின் றவ னென்க.

௬௭. கோல்பாய்தலினாலே உண்டாகிய பசும்புண். கோல்-அங்குசம். அசும்புதல்-கசிதல். தடங்குன்று-இங்கே யானை. கவுள்-மதம்பாயுமிடம். கொட்டருவி-மதநீ ரருவி. இது யமுனை போன் றிருந்தது. தேனருவி சோணை போன்றிருந்தது. கோப்ப-சேர. துணைப்பாவையர்-மேற்கூறிய யமுனை சோணையாகிய பெண்கள். ஒருவன் - மன்மதன். தண்டுறை தொறும் சேல் பாய் தடம்பணை யென்க.

௬௮. மீதந்த மாகம் - மேலேயுள்ள ஆகாயம். மேகமும் நக்ஷத்திரங்களும் நீங்குமாறு உகளும். மதி அகடு-சந்திரனது உள் ளிடம். வாளைமீன் சண்பகப் பூவின்றேன் மாரிபோலப் பெருகு கின்ற காவேரி யாற்றை மதியக டுடைத்தூற்று அமுதவெள்ளருவி யாற் கங்கையாக்கிப் பின்னர் ஐராவதம் பிளிறுமாறு தாவிக் கற்பகக் காட்டை யுழக்கி மகரந்தத்தை யெழுப்பி அப் பூந்துகளால் கங்கை யைக் காவிரியாக்கிற் றென்க. தேத்தந்த தண்பணை - இனிமை பொருந்திய வயல்.

௬௯. காமன்-இங்கே இந்திரன் : கற்பகக்காவுக்கரசன் என்ற வாறு. அவனது பெருஞ் செல்வத்தையுடைய அரசர்கள். கொடி கள் கமுகிற் படர்ந்து பின் கற்பகத்திலும் படர்தலாற் கமுகாடும் பொழுது கற்பகமுமாடிய தென்க. கற்பகத்தெய்வம் தலையசைத்து மலர்மாரி பொழிவது போலப் பொன் மலர்மாரி தூர்க்கும்.

௩. வார் ஆட்டு முலை - கச்சப்பொருந்திய கொங்கை. முத்தண்டும்-முத்தமிட்டும். கண்மணியிலே காணப்படும் உன் வடிவத்தை உனக்குக் காட்டி நீ யிப்பாலர்களோடு விளையாடு என்று சொல்லியும். வினைதீர்த்த தம்பிரான்-வைத்தியநாதர்.

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.

# சிதம்பர மும்மணிக்கோவை

## அரும்பொருள் விளக்கம்

### காப்பு

செம்மணிக்கோவை - செவ்விய இரத்தினக்கோவைகள். மும்மணிக்கோவை - ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை யென்னும் மூன்றானும் முப்பது செய்யுட்கள் அந்தாதித் தொடையாகப் பாடுவது. உவந்து - விரும்பி. எம் - எம்முடைய. மணிக்கோனும் அஞ்சக்காரனும் கற்பகத்தானும் என்பது மணிக்கோவஞ்சக்கரக் கற்பகத்தாரென்றாயிற்று; சேர சோழ பாண்டியரென்றாற் போல: 'உயர்திணை மருங்கி னும்மைத்தொகையே, பலர்சொன்னடைத்தென மொழிமனார் புலவர்' என்பது தொல்காப்பியம். மணிக்கோன் - கௌத்துப மணியை அணிந்த திருமால். அஞ்சம்-அன்னம்: இங்கே அன்னக்கொடி. அஞ்சக்கரன் - அன்னக்கொடியைப் பிடித்த கையையுடைய நான்முகன். கற்பகத்தான் - இந்திரன். இம்மூவரும் இறைஞ்சும் என்க. அஞ்சு கஞ்சக் கரம் - ஐந்து தாமரை மலர்போன்ற திருக்கரங்கள். கற்பகம் - கற்பக விநாயகர்.

---

## நூல்

க. கற்பகப் புத்தேள் வைப்பு - தேவலோகம். காமநீர்-அச்சந்தரும் நீர். நானிலம் - பூலோகம் : பாலைக்குத் தனியே நிலமின்மையின் பூமி நானிலமெனப்பட்டது. எண் நீங்கு உயிர் - அளவு கடந்த உயிர்கள். தமருகக் காம் - உடுக்கை தாங்கிய கை. அமைத்த கைத்தலம் - அபயஹஸ்தம். தோற்றுபு - தோற்றி. மாற்றுதல் - அழித்தல். ஊன்றியபதம் - முயலகன் மீது மிதித்த திருவடி. குஞ்சிதபதம்-தூக்கிய இடது திருவடி. குஞ்சிதம் - வளைவு. இது காறுங் கூறப்பட்ட ஐந்தொழிற்றன்மை,

> 'தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
> சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
> யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு'

என மனவாசகங் கடந்தார் அருளிச்செய்தலான் அறிக. நோயுண் மருந்து - நோய்க்கு உண்ணப்படும் மருந்து.

> 'பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
> நோயுண் மருந்து தாயுண் டாங்கு'

என்பது சித்தாந்த மரபுகண்டனத்தார் 'மாதா மகவுக்கு வந்த வியாதி நிமித்தம் மருந்து தின்னக் கண்டோமெனில், தனர்தயனுக் கொழிய வேறில்லை' யென்று கூறியதை மறுக்குமிடத்து 'மாதா மகவுக்கு வந்த வியாதி நிமித்தம் மருந்துதின்னக் கண்டது தனர்தயனுக் கொழிய வேறில்லை யென்றீர். அங்ஙனங் கூறியது எமக்கே துணையாயிற்று. அம்மையப்பராகிய சத்தி சிவங்களை நோக்கி உயிர்களெல்லாந் தனர்தயரேயாகலின், சிவனொன்று கொண்டாலன்றி மலப்பிணி நீங்காதென்பது தெற்றென அறிக. பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண்மருந்து தாயுண் டாங்கு—எனத் தருமபுரத்தில் வழங்கும் அகவலின் பொருளு மறியீர் போலும்' என ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளால் எடுத்துக் கூறப்பட்டது. அருள் சூல் கொண்ட-அருளே கருப்ப



மாகக் கொண்ட. திருமாண் சாயல் திருந்திழை - அழகு மாட்சிமைப்பட்ட சாயலையுடைய உமாதேவியார். சில-இரண்டனைக் குறித்து நின்றது. இன்சொலின்-இனிய சொல்லோடு; விருந்து ஓம்புவார்க்கு இன்றியமையாததாகலின் 'இன்சொலின் விருந்து புறந்தந்து' என்றார் : இதனைப் பரிமேலழகர் உரையானும் அறிக. இது காமந்தகத்தும் (III. 21) கூறப்பட்டது. ஐவகை வேள்வி - வேதமோதுதல், ஓமம் வளர்த்தல், நீர்க்கடனாற்றுதல், விருந்தோம்புதல், பலியீதலென்பன : இவை முறையே பிரமயாகம், தேவயாகம், பிதிர்யாகம், மானுடயாகம், பூதயாகமெனவும் படும். நிறீஇ-நிறுத்தி. பிறன்மனை நயவான் - பிறனுடைய மனைவியை விரும்பாதவனாகி. வரையாநாள்-கூடாதென விலக்கப்படாத நாட்களில். மற்றையது - இங்கே அறவறம். முதுக்குறைவு - சிறந்த அறிவு. பொறை - பொறுமை. 'ஓாறி வுயிர்க்கு முறுதுய ரோம்பி' யென்பது கொல்லாமை யென்பதற்குப் பரிமேலழகர் கூறிய வுரையிற் காண்க. கானீர் - காற்றும் நீரும். நீர் அழுவம் - நீர் நிலை. ஐவகையழல் - பஞ்சாக்கினி. நாற்புறந் தீயும் மேலே ஞாயிறும். நிலை-ஆச்சிரமம். உரன்-அறிவு. முத்தலம்-திருவாரூர் காசி சிதம்பரமென்பன. இத்தலம்-இவ்வுலகம். புலனெறி வழக்கு-செய்யுள் வழக்கு. நேர்படினல்லது - இயல்பாக முன் வினைப்பயனாகக் கிடைத்தாலல்லது. அறந் தலைத்தந்த-தரும வழியிற் சம்பாதித்த. உடைந்து-வருந்தி. பெரும்பற்றப்புலியூர் - சிதம்பரம் : தன்னைக் கண்டவர்களுக்கு மிகுந்த பற்றினை யுண்டாக்குவது என்பது பொருள். கலுழ்தல்-அழுதல். இருவருக்கும் - மனமகிழ்ந் துண்பவனுக்கும் அருவருப்புற்றுச் சுழித்து நடுங்கி வீழ்த்துக் கலுழ்ந்து மாந்துபவனுக்கும். நொதுமல்-உறவும் பகையுமில்லாமை. மன்றுடையோர் - நியாயசபையி லிருப்பவர் எனவும், பொன்னம்பலத் திருப்பவரெனவும் பொருள்படும்.

உ. சிதம்பரம் தாமரையை ஒக்கும்: அம்பலம் பொகுட்டினையும், மதில்கள் தாமரை யிதழ்களையும், மாடங்களில் தங்கும் மேகங்கள் தாமரையிலுள்ள வண்டுகளையும் ஒக்கும் ஆதலின்

என்பது பொருள். பொன்-அழகு. நற் புண்டரீகம்-நல்ல தாமரை. புண்டரீகம்-புலி: இங்கே வியாக்கிரபாத முனிவர்; அவர்க்குரிய தலமாதலின் சிதம்பரம் புண்டரீக புரமெனப் பட்டது.

௩. புரம் ஒன்று இரண்டும்-முப்புரங்களும். புவனம் உண்ணும் சாம்-திருமால். நடராஜப் பெருமான் ஒரு திருவடியை உயரத் தூக்கி நின்று நடம்புரியுமாறு பதஞ்சலி முனிவர் வரம் பெற்றதற்குக் காரணங் கற்பித்தவாறு. உமது இரண்டு திருவடிகளும் ஊன்றின் தன் சிரத்திற்குப் பாரம் அதிகமாகுமென்று பதஞ்சலி முனிவர் என்றுஞ் சலியாது ஒரு காலைத் தூக்கி நடனஞ் செய்ய வேண்டுமென்று உம்மிடம் வரம் பெற்றனர் போலும் என்பது. பதஞ்சலியார் ஆதிசேடனென்பது கோயிற் புராணத்திற் காண்க.

௪. அளவை-காண்டல் கருதல் உரை யென்னும் மூவகைப் பிரமாணங்கள். உத்தி-பொருந்துமாறு. பேராவியற்கை-என்றும் ஒரு நிலைமையிலிருக்கும் இயல்புடைமை: அஃதாவது வீடு: இதனை 'ஆராவியற்கை யவாநீப்பினந்நிலையே, பேராவியற்கை தரும்' என்றுங் குறளுக்குப் பரிமேழலகர் கூறிய வுரையானறிக. தொண்டர் பெற்றனரென்க. ஒண்பொருள் துக்குதல்-பதிபசு பாசமென்னும் மூப் பொருள்களையுங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதல். கைதை-தாழை. சுரிமுகப் பணிலம்-வளைந்த முகத்தையுடைய சங்கு. வெண் பொடி-திருநீறு. இருந்தவம் உஞற்றியும் யாம் பெறற்கு அரிய-பெரிய தவஞ் செய்தாலும் யாம் அடைதலில்லாத. தாழை தான் சிவபெருமானாற் சபிக்கப் பட்டமையிற் இவ்வாறு கருதிற்று. கடவுள்-விளரி. கண்ணீர்-சிலேடை. பணிலம் வெண்மதிக் கடவுளும் தானம் உடுக்கணமாகவுங் கொள்க. உடுபதி-சந்திரன். புறவு-புறா. இருவேம்-தொண்டரும் யானும். ஆற்றல் சான்ற சிறப்பினையுடைய அவர்-தொண்டர்.

௫. கூடு - பாம்பினை யடைத்துவைக்கும் கூடு: உடம்பு. பொறி-படப்புள்ளி: இந்திரிய மெனச் சிலேடையாற் பொருள் கொள்க. ஒட்டு விக்க ஓடும் அரவென்க. மாசுணம்-பாம்பு: பதஞ்சலி முனிவர். ஐந்து பாம்புகளைப் பிடித்து ஆட்டும் சித்தராகிய உம்மை ஒரு பாம்பு நின்று ஆட்டுவிக்க நீராடுவது வியப்பன்றோ என்க.



௬. நீர்-தன்மை: இங்கே நிறம் அழகு மண முதலியன. உண்ட-கொண்ட. புண்டரிகத் துணைத்தாள்-செந்தாமரை போன்ற இரண்டு திருவடிகள். சீர்-சிறப்பு: அஃதாவது வீடு பேறு. அடித்தொண்டு செய்யாவெனக்கும் வீடு பேறு உண்டென்க. கார் உண்ட கண்டன்-கருநிறம் பொருந்திய கழுத்தினையுடையோன். தேவாமிர்தத்தை உண்டவர் யாவராயினும் அவர்கள் அமரரே அதுபோல அடித்தொண்டு செய்யாதேன் யானாயினுங் காருண்ட கண்டனைக் கண்டேனாதலால் எனக்கும் வீடுபேறுண்டென்க.

௭. இருநிதிக் கிழவன்-குபேரன். ஐங்கணைக்கிழவன்-மன்மதன். துஞ்சா-கெடாத. நலன்-அழகு. கைத்து உண் வாழ்க்கை-வெறுத்து நுகரும் வாழ்வு. வளி-வாதம். ஐ-சிலேஷ்மம். வாத முதலிய மூவகை யுடம்புடையவர்களால் உண்ணப்படும் புளிப்பு முதலிய மூன்றும்: பிறவாறும் உரைப்ப. அல்லனமூன்று-உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு என்பன. உரன் - வலிமை. காட்சி - அறிவு. இழுதையன்-அறிவில்லாதேன். பனசம்-பலா. பணியுலகு-நாகலோகம். ஒட்பம்-ஞானம். 'கல்லாதானொட்பங் கழிய நன்றாயினும்' என்பதினும் ஒட்பமிப் பொருளில் வந்தமை காண்க. பதஞ்சலி முனிவரைத் தந்த நாகலோகத்திற்குக் கையுறையாகக் கொடுக்கின்றன வென்க. வறுமனை-நுகரும் பொருள் யாதுமில்லாத பாழ்மனை. புற்கை-மிக்க நீரான் அடப்பட்ட வுணவு. விழுமை-மேன்மை. இச் செய்யுளால் ஆசிரியாது மனநிலைமை நன்குணரலாகும்.

௮. சிவபெருமானுக்கு மலைகளே புயங்கள்: ஆகாயமே திருமேனி: அண்ட முகடே மௌலி இவ்வாறாதலின் அவர் ஆடுதற்குச் சிற்றம்பலம் போதுமோ வென்க. கோதண்டம்-வில். சிற்றம்பலம்-சிறிய அம்பலம்.

௯. தம்பலம்-வெற்றிலையிட்டு உமிழ்ந்த சாறும். செல்வி-ஏற்ற சமயம். புல்லர்-அறிவிலிகள். வெற்றம்பலம் - பயனில்கூட்டம். பேர் அம்பலம் - பெரிய சிறந்த பலன். செய்யாதவராகிய வீணர் மெய்யிளைத்து வெற்றம்பலந் தோறும் ஏறுவரென்க. 'ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தம்மைப், போற்றாதவர்க்கடையாளமுண் டேயிந்தப் பூதலத்திற், சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றிங், கேற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பர்களே' என்னுஞ் செய்யுளினும் இதனைக் காண்க. கெட்டேன் - இரக்கக் குறிப்பு.

௰. கைதவ வொழுக்கம்-படிற்றொழுக்கம். அஃதாவது வேடநெறி நில்லாமை. நின்னிலை-சிவபாவனை. பாவம், பாவனை, பாவகம் என்பன ஒருபொருட் கிளவி. பயனின்-பயனால். இதனாலே பாவனை போலியென்று கூறும் மாயாவாதி கூற்று மறுக்கப்பட்டமை காண்க. பாவனை உண்மையென்பதும் அது பயன்றருமென்பதும் சிவஞானபாடியத்து ஆறாஞ் சூத்திர வுரையிற் காண்க. உளை-இருக்கின்றாய். இரு பெருஞ்சுடர் - ஞாயிறுந் திங்களும். புருடன்-ஆன்மா. ஐவகைப் பூதம்-பஞ்சபூதங்கள். இவை சிவபெருமானது அட்ட மூர்த்தமென்று கூறப்படும் 'ஐம்பெரும் பூத மிருசுட ரான்மாவன்றி வேறுலகிலை யவைதா, நின்பெரு வடிவமெனப் படுமன்றே' என்பது சிவதத்துவவிவேகம். ஓய்வு இன்று-ஓய்வு இல்லாமல். அருள் மூர்த்துறுத்த ஐந்தொழில்-இதனாலே சிருட்டி முதலிய அனைத்துத் தொழில்களும் அருளேயாதல் காண்க. பிறவாறு முரைப்ப. மூர்த்துறுத்தல்-முற் கொள்ளல். நிலையில் பொருள்-பொய்ப்பொருள். நிலையியற் பொருள்-மெய்ப்பொருள். உலையா மரபு-கெடாதமுறை. இடித்து-கண்டித்து. வரைநிறுத்தி-இந்நிலையிலே நில்லென்று நிறுத்தி.

௧௧. ஒக்கல்-சுற்றம். படப்பாயலான் - படத்தை யுடைய பாம்பைப் பாயலாகவுடைய திருமால்: அவர் மைத்துனராதலின் ஒக்கலெனப் பட்டார். அவர் காணுமாறு இடப் பாதத்தைத் தூக்கியது பைந்தொடி தாள் என்று கொண்டோ. திருமாலால்



காணப்படாத திருப்பாதத்தைச் சிவபெருமானார் இப்பொழுது அவர் காணுமாறு தூக்கினரே இனிமேற் புராணங் கூறிய வரலாறு பொய்யாமோ வெனின் இல்லை : அவர் தூக்கியது இடது திருவடி : அத் திருவடியோ உமாதேவியாரது பாகத்துத் திருவடியாதலின் என்றவாறு. இனிப் படப்பாயலான் ஆதிசேடனாகிய பதஞ்சலி முனிவரெனக் கொண்டு அவர் காணுமாறு இடத் திருவடியைத் தூக்கினமை பைந்தொடியாகிய உமாதேவியாரது திருவடி 'அனிச்சமும் அன்னத்தின் றூவியுமாதரடிக்கு நெருஞ்சிப்பழம்' என்றவாறு மிக்க மென்மையுடையதாதலின் அது பூமியிற் படப்பொறாதென்று கருதியோ என்று கூறலும் பொருந்தும்.

௧௨. தில்லைக் கண்ணுதலாரென்க. கனம் - மேகம். சடையைக் காடென்றார் பாம்பு, கொன்றை, யாறு, அறுகு என்பனவுடைத்தாய்ச் சந்திரன் தவழுதலின். அது செந்நிறத்ததாகலின் தாமரைவனம் ஒக்கும். கங்கை வெண்ணிறமாதலின் அது வெள்ளையன்னம் போல்வது. அம்புலி பிறையாதலின் வளைவாற் சங்கொத்தது.

௧௩. மாயோனது கட்டிலைவாங்கி அவனது பாயலையுமெடுத்து என்க. கலிக்கால் என்பது வலிமையையுடைய கட்டிலின்கால் என்றும் ஒலியையுடைய காற்று என்றும் சிலேடையாற் பொருள் படும். நிவத்தல் - ஓங்குதல் ஆதிசேடப் பாயலுக்குப் பாற்கடல் ஆதாரமாயிருத்தலின் அதனைக் கட்டிலென்றார். கால் - உருள்: காற்று. காமப்புள் - மன்மதனாகிய பறவை. தீப்பொறி - நெருப்புப் பொறி: தீயகண்ணி. மாதவர் - திருமால், சிறந்த தவத்தையுடையவர். சாபம் - வில்: வேடனாய்ப் பிறக்க வென்ற கட்டளை. தவ வேடக் கொற்றவர் - தவத்தினையுடைய வேடர்தலைவர்: தவ வேடத்தினையுடைய தலைவர். கண்பறித்தும் சிவபெருமான் தருமமூர்த்தியாயினர் அவ்விருவரும் முறையே பூசை முடிவுபெறுற்றுச் சக்கரம் பெற்றமையாலும் சாமீப்பியம் பெற்றமையாலு மென்க. முட்டை முதலிய நான்கும் நால்வகைப் பிறப்பெனவும் நிற்பன முதலிய எழும் எழுவகைத் தோற்றமெனவுங் கூறப்படும். நிறைய

மிகுதியாக: குறையாதவாறு நிறைவு அடைய. கேண்மதி - மதி முன்னிலை யசைச்சொல். எம்மனோரும் முத்திபெற் றுய்தற்கு நினது அடிக்கமலத்தைப் போற்றுவார்கள் என்க. பிறப்பின் வேட்கையனாகி - பிறப்பிலே விருப்புடையனாகி. தாமரைக் கண்ணன் - திருமால். 'அஞ்சினவன் எழுதல் காணப்படவும் திருமால் எழுந்திலன் அதன்காரணம் அவன் நின்னுடல் கண்டாற் பிறப்பு நீங்கிவிடுமே: பிறக்கவேண்டு மென்று நாம்கொண்ட விருப்பம் நிறைவேறாதே' என்று கருதி நின்னுடல் காண அஞ்சினன்போலும் என்பது. தில்லை முன்றிலிற் றிருமால் கிடத்தற்குக் காரணம் கற்பித்தவாறு. மாணிக்கவாசக சுவாமிகள் 'பரங்கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா, திரங்கிடெந்தா யென்றிரப்பத் தன்னீரடிக் கென்னிரண்டு, கரங்கடந்தா னொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று, வரங்கிடந்தான் றில்லையம்பல முன்றிலம் மாயவனே' என்றருளிச் செய்ததும் காண்க.

௧௫. முக்கட் கரும்பு - சிவபெருமான். கரும்பென்றதற்கேற்ப ஆலையிலிட்டு ஆட்டுகின்றவர் யாருமின்றித் தானேயாடும் என்றும் மூன்று கணுக்களையுடைய தென்றும் நயர்தொனித்தல் காண்க. சிவபிரான் தன் வயத்தனாயிருத்தல் 'ஆட்டுகின்றோ ரின்றி யாடும்' என்பதனாற் குறிக்கப்பட்டது. வேட்டு - விரும்பி. மால்யானை - பெரிய விநாயகக்கடவுள். பிடி - உமாதேவியார். கன்றீன்றபிடி யென்றதற்கேற்ப மிகவுண்ணற் பாலதாகிய பிடி ஒரு கரும்பினையே கெடோளாக வுண்பதாயிற்றென்ற நயர்தொனித்தல் காண்க.

௧௬. பிடிப்பது உமக்கெனை வேண்டிடல் - என்னைப் பிடிப்பதென்பது உமக்கு விருப்பமாயின். மத்த முடியார் - ஊமத்தமலர் அணிந்த திருமுடியையுடைய நடராசப்பெருமானார். வெங்கூற்றெனும் பேர்முடிய முடிப்பது வேண்டும் - வெங்கூற்றென்னும் உமதுபெயர் இல்லையாய் உம்மைக்கொல்வது வேண்டப்படும். அடிப்பதுமம் - திருவடித்தாமரை. அத்தன்மையாம் - உம்மை



உதைப்பதற்குக் காட்டிய குறிப்பாம். சமனார் இது நாடுமின் - நமனாரே, நீரிதனை அறிந்துகொள்ளும்.

௧௬. மின்னுவீழ்ந் தன்ன விரிசடை - இதனை 'மின்னின் பிறக்கர்துன்னு நின்சடையே' எனப் பட்டினத் தடிகள் கூறியவாற்றானுமறிக. பன்மாண் துத்திப் பஃறலைப்பாந்தள் - சொல்லப்படும் மாட்சிமையுடைய படப்பொறியினையுடைய பல தலைகளையுடைய பாம்பு. அதன் மூச்சுக் காற்றடித்தலானே கங்கைதிரை சுருட்டுகின்ற தென்க. சுடிகை - உச்சி. கொளுந்த - கொளுந்துதலினாலே. திருநுதற்கண் - சிவபெருமானது நெற்றிக்கண். சுருங்காது ஆட வென்க. கங்கையாறு பாம்பின் கட்டழல் கதுவநீர்ப் பெருக்கற்றதாக அதனைத் திங்களின் அமுதம் நிரப்பிற்றென்க. எண்ணி யிரண்டனுள் முன்னையது ஆராய்ந்தெனவும் பின்னையது தெளிந்தெனவும் பொருள்படும். நால்வகைப்பொருள் - அறம்பொருள் இன்பம் வீடு. வேதத்தை வேடபுருடனென்றல் மரபு. முறைப்பட நிறீஇய - ஒழுங்குபட வகுத்த. வாதராயணன் - வியாசன். கையிழந்தமை - காசி விசுவநாதப்பெருமான் சந்நிதியில் 'ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் நதைவம் கேசவாத்பரம்' என்று கையெடுத்துக் கூறினமையால் நிகழ்ந்தது. இதனைக் காசிகாண்டத்துட் காண்க. ஓதியதும் சிலநூல்கள், கேள்வியும் தெளிவில்லாதது, அறிவும் குறை, ஆயுளும்குறை, துன்பந்தரும் நோயோ எண்ணில, இவ்வாறுடைய யாம் அளத்தலாகா நின்னிலையை அளத்தும் போலுமென்று முடிக்க. இச்செய்யுளுள் வேதங்கள் இருக்காதி நான்கே யென்பதும் அவை கூறும்பொருள் அறமாதி நான்கே யென்பதும் பெறப்பட்டவாறு அறிக.

௧௭. தரு - கற்பகவிருக்ஷம். அஃதுதவும் பொன்னரிமாலையும் புனையும் துழாய்மாலையும் சூடேம். இதனாற் குறிக்கப்பட்டது நாம் இந்திரன் திருமாலென்னு மிவர் பதங்களை விரும்போமென்பது. கமலம் இரண்டனுள் முன்னது நீர் பின்னது தாமரை. பனிதோய் கமலம் - குளிர்ச்சிபொருந்திய கங்கை. மொய்குழல் - உமாதேவியார். அடிக்கமலம் - திருவடித்தாமரை.

௧௮. அரவு - இங்கே பதஞ்சலிமுனிவர். அவராவாதலின் கலைநிரம்பிய மதியைத் தொடருதலும் தோகைக்கு அஞ்சுதலும் வேண்டும்: ஆனால் அது செய்திலராய் எம்பிரான் திருக்கூத்திற்கே மையல்கொண்டு நின்றார். யாதினாலெனின் அரவாகிய தாம் ஆடுந் தொழிலிலே வல்லாராதலின் அவ்வாடுந் தொழிலின் அருமையைக் கண்டென்றவாறு. 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றது போல அவர் ஆடுந்தொழில் வல்லாராதலின் அவ்வருமை கண்டு கூத்தினுக்கு மையல் செய்தாரென்க.

௧௯. கட்புலம் - கண்ணிந்திரியம். கதுவுதல் - சென்று பற்றுதல். விட்புலம் - விண்ணிடம். வல்லியின் - கொடிபோன்று. பேரழகு ஆற்றியும்-மிகுந்த அழகுகொண்டு விளங்கினும். இருவர்க்கும் - திருந்திழை மகளிர்க்கும் அமரர் மாதர்க்கும். உளை - இருக்கின்றாய். வெருவரல் உற்றிலன் - அஞ்சுதல் செய்யேன். ஒருதுயர் வரும்போது மாத்திரை உணர்தல் பிராகிருதர்க்குரிய செயலென்க. இதனை மிருகேந்திராகமத்திற் காண்க. மூதுக்குறைவு - பேரறிவு. முந்நீர் - கடல். நீத்து - நீந்துதல். தேவரிற் சிலர் எனது தகுதியின்மையைக் கருதாதவராகித் திருநடம் கும்பிட்டும் ஒருவன் உச்சிவித்திலனே: வேதமும் உண்மைகூறாதோ என்றஞ்சுவரென்க.

௨௰. பதஞ்சலிமுனிவர் தம்மைப்போல இவரையும் பதஞ்சலியாராக்கினர்: பதம்சலியார் - திருவடி சலியாதவர். என் பிறவியைச் சாடுகின்ற அப் பதஞ்சலி முனிவர் ஆக்கினாரென்க. சிவபிரான் தன்னைப்போலப் பிறரை ஆக்குதலன்றி தான் பிறர்போலாகாத தன்வய முடையராயினும் இப்பொழுது பதஞ்சலியார் வயப்பட்டுத்தானும் பதஞ்சலியா ராயினர் இஃதென்னை வியப்பு என்றவாறு.

௨௧. கடலிலாடப் பெற்ற யாம் குழியிற் சுழலேம் என்க. தாமம்-பூமாலை. நல்லார்-பெண்டிர். சிவபிரான் கங்கையை முடித்தலினாலும், திருப்பாற் கடலில் நஞ்சமும் அமுதமும் உதித்தவாறொப்பச் சிவபிரான் மிடற்றில் நஞ்சும் இடப்பாகத்து அமுதம் போன்ற உமாதேவியாரும் வைத்தாராதலினாலும் 'கங்கைப் பேராறுபாய் நஞ்சங் களத்தும், வாமத் தமுதமும் வைத்தாடுமானந்த மாக்கடல்' என்றார்.



௨௨. கலுழி-காறு. யானையையுடைய வழுதி யென்க. மடங்கல்-சிங்கம். துப்பு-வலிமை. ஒருவன் - திருமால். வனசப்புத்தேன்-பிரமன். அவனுடைய நாவாகிய குதிரைப் பந்தியிற் கட்டப்பட்ட புரவி - வேதம். மாணிக்கவாசக சுவாமிகள் தம்பொருட்டு அரிமர்த்தன பாண்டியன் முன்பு சிவபெருமான் குதிரைச் சாத்துடன் எழுந்தருளி வரச் செய்தமை கூறப்பட்டது. பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்-மாணிக்கவாசக சுவாமிகள். இங்கே பைந்தமிழ் என்றது திருவாசகம். ஐந்திணை-குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தலென்பன. நாற்பொருள்-அறம் பொருள் இன்பம் வீடென்பன. காமஞ் சான்ற ஞானப்பனுவல்-திருக்கோவையார். திருவாதவூரடிகள் 'அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்குமென, விருபொருளுநுதலி யெடுத்துக் கொண்டனர்' என்பதனால் வீடும் இன்பமுந்தானே கூறினாரென்றல் அமையும் நாற்பொருளுங் கூறினாரென்ற லமையாது எனின், பேராசிரியர் 'திருவளர் தாமரை' யென்னுங் கோவைச் செய்யுளுரையில் அச் செய்யுள் உடனிலைச் சிலேடையாக வந்ததென்று கூறி அதனை விளக்கும் வழி 'இன்பத்தை நுதலிய தென்றாராயினும் இன்பந் தலைக்கீடாக அறம்பொருள் இன்பம் வீடென நான்கு பொருளையும் நுதலிற்று. அவற்றுள் வீடு நுதலியவாறு மேலே சொன்னோம் ஒழிந்த மூன்றனையும் நுதலியவாறென்னை யெனின், ஈண்டுத் தலை மகனுந் தலைமகளுமென்று நாட்டினார். இவனுக்கு ஆண் குழுவினுள் மிக்காருமொப்பாருமில்லை இழிந்தாரல்லது; இவளுமன்னள். இவர் ஒருவர்கண் ஒருவர் இன்றியமையாத அன்புடையாரகலான், இவர் கண்ணே அம்மூன்று முளவாம்' எனக் கூறுதலின் நாற்பொருளுங் கூறினாரென்றல் அமைவுடைத்தாதல் காண்க. சுட்டிய-சுட்டிக் காட்டிய. இதனைத் திருவாதவூரடிகள் புராணத்தாலறிக. அறுபதில் தாக்கிய ஐம்பது-மூவாயிரம். முனிவர்-தில்லை வாழந்தணர்கள். 'முனிவருள், ஒருவனென் றிசைத்த இருபிறப்பாள' என்

பதைச் 'செம்மை மெய்ப்பெரியோர் போலத் தேடரி தென்று மைந்தன், மெய்ம்மையிற் றயரநோக்கி விமலன் விண்ணவருங் கேட்ப, வெம்மை யொப்பவர்கள் யாரும் யாமவர்க் கொப்பே மென்றே, யம்மையப்புறு மாவாரூ மவர்களி லொருவனென்றான்' எனவருங் கோயிற்புராணச் செய்யுளாலறிக. வெள்ளிய மாடங்களின் நிலா யானைமீது படுதலான் அவை ஐராவதம் போன்று தோன்றுமின்றன: பெண்களுடைய அஞ்சனக் கண் குமாரது கதிர்செய் மேனியில் பொருந்துதலான் அவர் இந்திரன் போல்கின்றார். திருவ-அசாரியை. வேய்ச்சொல்-ஒற்றர் பகைப்புலத்துச் சென்றறிந்து உணர்த்துஞ் சொற்கள்: 'ஒற்றினுகிய வேய்' என்பது தொல்காப்பியம். தொக்கவாய்ச் சொல்-அவ்வொற்றர் மூவர் கூறிய சொல்லும் ஒத்து வாய்மையாதல். 'ஒற்றொற் றுணராமை யாள்கவுடன் மூவர், சொற்றொக்க தேறப் படும்' என்பது திருக்குறள். விரிச்சி-நற்சொல்: இதனைப் 'பாக்கத்து விரிச்சி' யெனத் தொல்காப்பியத்து வருதல் கொண்டறிக. பயன் துக்காது-குறி யெதிர்ப்பை நோக்காது. போலும்-அசை. குழர்தை யன்பு-குழர்தை யன்பு போன்ற அன்பு. ஈருவது - பழிப்பது.

௨௧. உள்-மனம்.

௨௨. இது பொழுது கண்டிரங்கல். விழி மூன்று-சூரியன் சந்திரன் அக்கினி யென்பன. சூரியன் திவாகரனெனவும் சந்திரன் நிசாகரனெனவுங் கூறப்படுதலின் 'அரும்பகலும் நீடிய கங்குலும் கண்ணிரண்டாலுற' என்றான். ஆற்றியிருத்தலருமை நோக்கி 'அரும்பக' லென்றும், துன்ப மிகுதியால் 'நீடிய கங்கு' லென்றுங் கூறினான்.

௨௩. பொறுஅன் - வினையெச்சமுற்று. அஃதாவது தனிச் செங்கோல் செலுத்துதல். செவியிற் கண்டு கண்ணிற் கூறி-இதனைக் 'கண்ணிற் சொலிச் செவியினோக்கு மிறைமாட்சி' என இவ்வாசிரியர் நீதிநெறிவிளக்கத்திற் கூறியது கொண்டறிக. மிக் கோனொருவன்......தோன்ற இதனைப் 'பெற்ற சிறைப் பெறாத



பெரிதன்றுஞ் சிற்றுயிர்.' என இவ்வாசிரியர் கூறினார். வெறுக்கை-செல்வம். இழப்புறு விழுமம் - தனக்குண்டாய செல்வத்தையும் இழத்தற்குக் காரணமாகிய துன்பம். அழுக்கறுத்து - பொறாமை கொண்டு. தெரீஇ-தெரிந்து. அயிற்சுவை-உணவின் சுவை. துயிற்சுவை-தூக்கத்தின் நன்மை. வழங்கா-வழங்காமல். புற்கை-மிக்க கீரானடப்பட்ட உணவு: முன்னுங் கூறப்பட்டது. அடகு-இலை: இஃகே இலைக்கறி: இதனைப் 'பொய்யே, யடகென்று சொல்லி யமுதத்தையிட்டாள்' என்னும் ஔவையார் பாட்டானறிக. அயல் மனை-பக்கத்துவீடு. முயற்சி இல் மகன்-பிரயத்தனமில்லாத மற்றொருவன். இனையன் - இத்தன்மையை யுடையவன். இதனைத் 'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, யம்மாபெரிதென் றகமகிழ்க' என இவ்வாசிரியர் கூறுதலானறிக. உவாக்கடல் - நீர் நிறைதலையுடைய கடல். அவாக்கடல் கடத்தற்கு மெய்யுணர் வல்லது வேறு புணையில்லை யென்க. இருபிறப்பு - துவிசத்துவம். புகையெழுவது தேவரைக் கோனெனும் எதிர்கொள விடுத்தது கடுக்கும் என்க. இச்செய்யுளிற் கூறியதை 'ஆராவியற்கை யவா நீப்பின் அந்நிலையே, பேரா வியற்கை தரும்' என்னூர் திருக்குறளானறிக.

௨௬. புயங்கம்-பாம்பு. புயங்கள்-திருக்கரங்கள்.

௨௭. வெண்தாது-திருநீறு. விராட் புருடனுள்ளக் கமலம்-சிதம்பரம். பைந்தேற லென்றது சிவபிரானை.

௨௮. கொண்டல்-மேகம். தண்டலை-சோலை. இடம்புரி-இடத்தை விரும்புகின்ற. பெரும்புலவன்-சுந்தரமூர்த்தி சுவாமிகள். பாய் இருள் நடுநாள்-பரந்த இருளையுடைய நடு இராத்திரி. இருகால் ஒருகால்-இரண்டு முறை ஒரு காலத்தில். கமலத்து இயம்புவல்-திருவடிகளுக்கு விண்ணப்பஞ் செய்கின்றேன். ஆணவ மலத்தைச் சேரிப்பரத்தை யென்றது 'பலரைப் புணர்ந்து மிருட் பாவைக்குண் டென்றங், கணவர்க்குத் தோன்றாத கற்பு' எனவருந் திருவருட்பயனாலறிக. குடிலை-சுத்தமாயை. ஐவர்-சுத்த மாயையிற் றோன்றிய சிவம் சத்தி சாதாக்கியம் மகேசுரம் சுத்த

வித்தை யென்னும் ஐந்து தத்துவங்கள். மோகினி-அசுத்தமாயை. மூவர்-காலம் நியதி கலையென்பன. கலைதந்த மூவர்-வித்தை அராகம் மூலப்பிரகிருதி யென்பன. வித்தையினின்றும் அராகந் தோன்று மென்பது 'விச்சையி னராகந் தோன்றி வினைவழி போகத்தின்க, ணிச்சையைப் பண்ணி நிற்கும்' எனவருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாற் பெறப்படுவதாகவும் கலையினின்று தோன்றியதாகக் கூறினர், பரம்பையிற் றோன்றுதல் பற்றி. 'மந்திர முதலியவற்றிற்குங் கலையில் வியாத்தி கூறியது பரம்பரையின் வியாப்பியமாதல்பற்றி யாதலால், மேல் ஒன்றினொன்று வியாத்தி யென்பதனோடு முரணாமை யறிக' எனச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்தலின் அவ்வாறு கூறுதல் அமைவது காண்க. எண் மூன்று திறத்தர்-இருபத்து நான்கு தத்துவங்கள்: அவையாவன:- குணம், புத்தி, அகங்காரம், மனம், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, தன் மாத்திரை ஐந்து, பூதங்கள் ஐந்து என்பன. ஐயெழுவர் - முப்பத்தைவர். அவராவார் - சுத்தமாயையிற் றோன்றியவர் ஐவர், அசுத்தமாயையிற் றோன்றியவர் அறுவர், பிரகிருதி மாயையிற் றோன்றியவர் இருபத்து நால்வர். அறிஞர்-சிவஞானிகள். அஞ்சினன் - அஞ்சி. ஞேயம்-கடவுட் பொருள். போலியாகக் கொண்டு அன்பென்பாருமுளர்.

உக. கதிகூடும்-வீடுகைவரும். ஒருகால்-சிலேவடை. அபிநயம்-குறிப்பு. கட்காதனர்-பதஞ்சலியார்: அவர் ஆதிசேட ராதலின் அவ்வாறு கூறப்பட்டார். இச்செய்யுட் பொருளை 'நிஜபத லோகநே ஸதிர்ருணமிதரை: ஸாக்ருதை ரலமிதி போதமா ததிவாபயமுத்ரிகயா | கரக ஸபாவிபாவி கரவை புரவைரி மஹ: ஸ்திரபவ ரோக ஹாரி கருணாபரணம் சரணம் ||' (ஞாலத்து நார்க்குமதி தன்னடிக் காட்சியிற்றனே யமையு நன்கு, சாலப்பற் பலவேறு செயல் வேண்டா வென்றுணர்த்தன் மானத் தன்கைக், கோலத்திற் குயிற்றபய முத்திரையொ டிரும்பிறவி தனக்குங் கோளில், சீலத்தர் புரக்குமொரு பகையாய்மன் நிலங்கொளியைச் சரணஞ் சேர்வாம்) என அப்பதீக்கிதர் கூறுமாற்றானும் அறிக.



கய. இச்செய்யுள் சிவபிரானது திருவடி சிவந்தமைக்குக் காரணங் கற்பித்தவாறு. நடிக்க – நடித்தலினாலே. நகை - புன்சிரிப்பு. நடராசப்பெருமானது திருவடி அவர் நடித்தலினாலுஞ் சிவந்திலது: உமாதேவியார் தமது தளிர்க்கையினாலே பிடித்தலினாலேயுஞ் சிவந்திலது: பின் சிவந்தது தேவர்கள் எம்பிரானே யென்று வாழ்த்தித் தமது திருமுடிகளால் வணங்க அம்முடிகள் பட்டதனாற்றான் போலுமென்க.

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

# சிதம்பரச் செய்யுட்கோவை

௧. ஒன்று - முத்தியை யுணர்த்திற்று. கண்ணியவர் - அடை விரும்புபவர்.

௨. மாதவன் என்பது இலக்குமி நாயகனென்றும் மிக்க த முடையோனென்றும் சிலேடையாற் பொருள்படும். எந்தைதா காணாகிய திருமால் நாண் கொள்ளுமாறு உலகத்தார் மாத னென்பது அறனன்றென்க.

௩. கண்ணுதல் இயமனைச் செற்றவராதலின் அவரைக் கண் டார்க்கு இயமன் காணப்படா னென்றவாறு.

௪. கண்ணி - முடிச்சூட்டுமாலை.

௫. கறை - நஞ்சு. இறைவி - உமாதேவி. இறைவியின் நறு நுதல் வண்ணந் தான் பெறாமையின் திங்கள் அஞ்சுவதாயிற்று: இது பின்னதற்கு மொக்கும். கைம்மான் - கையிலேயுள்ள மான். நடம் உவந்த காற்புலி - வியாக்கிரபாத முனிவர். அம்மான் - அந்த மான்போன்ற பிராட்டி. விழிமான் - மூன்பின்னாகத் தொக்க உவமத்தொகை. இறைவியின் திருநுதலும் திருவிழியும் தமக்குக் கேள்போலிருந்தும் பகையாயிருத்தலின் வான்போற் பகைவ ராகிய பாம்புக்கும் புலிக்கும் அஞ்சாத திங்களும் மானும் அஞ்சின வென்க.



௬. வணங்குதல் - தொழுதல். மருங்குலையுங் கண்ணையு முடையமாதர். அணங்கு - துன்பம்

௭. வாத்தின் - வாத்தினால். புரம் - உடம்பு. இரும் புண்டரீக புரம் - சிறந்த புலியூர்.

௮. குமைத்தல் - உதைத்தல்.

௯. இச்செய்யுள் நீதிநெறிவிளக்கத்து முதற்செய்யுளாதல் ஆண்டுக் காண்க.

௧௧. நறு - வாசனை. தேவன் - திருமால். தேவி - உமாதேவி. திருமால் சிவபிரானுக்குத் தேவியென்றமை அவர் நால்வகைச் சிவசத்தியு ளொருசத்தியாதல் பற்றி. 'அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே' என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக் கும் இக்கருத்தேபற்றி வந்ததென்க. இவ்வுண்மையைப் புராணங்கள் தாருகாவன நிகழ்ச்சியால் வலியுறுத்தும். பார்தன் - ஆதிசேடன். பூ - பூவென்றும் பூமியென்றுஞ் சிலேடையாற் பொருள்படும்.

௧௨. அழுவம் - ஆழம். புக்கு - புகுந்து. தாளூன்றி - சிலேடை யாற் பொருள்கொள்க. நீர்தவம் ஒப்பச் செயின்வாழியென்க.

௧௩. வேதந்துறை செய்தான் - வேதத்தைப் பாகுபாடுசெய்த வியாதன். மெய் - உண்மை. கைதுணிந்தான் - கை வெட்டப்பட் டான். வெஃகேம் - விரும்பேம்.

௧௪. மன்றம் - சபை.

௧௫. பாடகம் - காலணிவிசேடம். சூடகம் - கைவளை. சிவ பெருமானுக்கு உமாதேவியாரும் கங்காதேவியாரும் பிராட்டியா ரென்க.

௧௬. போது அம்பு அடரும் என்று பிரித்து மன்மதனது மலரம்பு வருத்து மெனவும் போதம் படரும் என்று பிரித்து ஞான மிகு மெனவுஞ் சிலேடையாற் பொருள்கொண் டியைக்க.

௧௭. காமர் - மன்மதன். அவனைச் செகுத்தகண் நெற்றிக் கண். நலனழிக்குங்கண் சந்திரனைக் கொண்டகண். இன்னாவிரவு - துன்பந்தரும் இராக்காலம். அதனை யொழிக்கும் கண் சூரியனைக்

கொண்டகண். தன்னேரிலாதான் என்றமை எனைத் தேவர்கட்கெல்லாம் கண்களிரண்டேயாக இவற்குமட்டும் முக்கண்ணுண்மையால்.

௧௮. விழித்தலால்-விழியாகச் செய்தலால். உய்வு உண்டே-பிழைத்தல் உண்டோ.

௧௯. வெள்ளிப்புரியாகப் புரிக்கப்படும் திங்கட் கண்ணியென்க. 'ஊர்தியால் வெள்ளேறே சிறந்த, சீர்கெழு கொடியுமவ்வே றென்ப' என்பது புறநானூறு. வீரமிக்க மகளிர்க்கு எருதின் கழுத்திற் கட்டும் மணியோசை முதலியன துன்பந்தருதலின் இவ்வாறு கூறினர்.

௨௰. கருந்தாது - இரும்பு. வல்விலங்கு - ஆசையாகிய தளை. திருந்தாதார் - பகைவர். யாம் களிதுங்கி யிருந்தோமென்க.

௨௧. அவரது விழி, புன்னகை, உகிர், திருவடி யென்னுமிவைகளே பகைவருயிர் செகுக்கும் படைக்கலங்களாயிருக்கவும் வேறும் படைக்கலங்கள் கொள்ளுதல் மிகை யென்றவாறு. பரசு-மழுப்படை. பிநாகம்-வில். சேப்ப - சிவப்ப.

௨௨. புலன் - அறிவு. நலன் - நன்மை.

௨௩. வண்டு முதலிய மூன்றும் சாதிவிசேடங்கள். இமயம் புனை மன்று - பொன்மன்று. கொடிறு - கபோலம்.

௨௪. கங்கைக்குக் கண்மலர் சாத்தலாவது காதற் குறிப்பு நிகழ்த்துதல். கருங்குவளை செங்குவளை பூத்தலாவது உமாதேவியார் உடன் கண்சிவத்தல். இது சினக்குறிப்பு. பங்குற்றும் பசப்புத் தீரா என்க. இது சிவகாமியென்னும் பெயர்ப்பொருளை விளக்குமுகத்தான் எம்பிராட்டி உயிர்கள் போக நிகழ்ச்சி புரியுமாறு செய்யும் பேரருட்டிறத்தை வியந்தவாறு.

௨௫. கபாய் - நிலையங்கி. அம்பை - தாய்: இங்கே சிவகாமியம்மையார்.

௨௬. வேட்டோர்க்கும் வேட்கப்பட்டோர்க்கும் நிகழ்ச்சியொன்றுயிற்றென்று வியந்தவாறு. தமது பொற்புயத்தை வேட்ட



எங்கள் கொங்கை யாங்கள் கொன்றையைக் கருதுதலிற் பொன்பூத்தது: வேட்கப்பட்ட அவரது சடையும் அக்கொன்றையைச் சூழ்தலின் பொன்பூத்தது என்க. சூழ்தல் - சுற்றிமுடித்தல், கருதுதல்.

௨௭. உழுவல் - எழுமையுந் தொடர்ந்த அன்பு. உழுவல்மான் எனக் கூட்டுக. அத்தமன்று - பொன்மன்று. என்னும் - என்று கூறுவாள்.

௨௮. சிவபெருமான் பொன்மேனிய ராதலின் 'அம் பொன் மேரு' எனப்பட்டார். 'ய: சுக்ர இவஸூர்யோ ஹிரண்ய மிவரோசதே' எனவும் 'நமோ ஹிரண்யவர்ணாய ஹிரண்ய ரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே பசுபதயே நமோநம:' எனவும் வேதங் கூறியது. 'பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்' எனவும், 'பொன்னார் மேனியனே' எனவும், 'பொன்வண்ணமெவ்வண்ண மவ்வண்ணமேனி' எனவும் வரும் திருவாக்குக்களும் அக் கருத்துப்பற்றியனவே யென்க.

௩௰. கம்பாநதி காஞ்சியின் அணித்தாய்ச் செல்வது. சிவபிரான் காமாக்ஷியம்மையாரின் முலைத்தழும்பும் வளைத்தழும்பு மணிந்தமை காஞ்சிப்புராணத்துத் தழுவக்குழைந்த படலத்துக் காண்க. விடை திருமாலாதலாலும் அவர் இடையிட்ட பிரளயத்தில் உலகங்களைத் தமது வயிற்றடக்குதலாலும் 'விடையுலகேழுமுண்டதுவே' யென்றார்.

௩௧. பிடி-உமாதேவியார். யானைக்கன்று - விநாயகப் பெருமான். களிறு தழீஇ ஈனுமெனமுடிக்க.

௩௨. 'சிவம் சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தையீன்றும்' எனவருஞ் சித்தியார் திருவிருத்தத்தால் அனாகாடகற்கும் அன்னை மகன் தாய் மனைவி என்னும் முறையினளாத லறியப்படும். 'யசுர்வேத முடையார் சிவபிரானேடுடன்றோன்றுதல் பற்றி, அருட்சத்தியாராகிய சிவபிராட்டியாரை அவர்க்குத் தங்கையென்று கூறுப' என்று அநந்தாசாரியர் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்திற் கூறுதலின் தங்கை யென்னும் முறையினளாத

லறியப்படும். திருவாதவூரடிகளும் 'எம்பெருமானிமவான் மகட்குத் தன்னுடைக்கேள்வன்மகன் தகப்பன் தமையன்' என்றருளிச் செய்தார்.

௩௪. அம்பு ஏர் உண்கண்-அம்புபோன்ற மையுண்ட கண். கோள்-முதனிலைத் தொழிற் பெயர்.

௩௫. பாசு இருக்கும் தமிழ் மூவர் பாட்டு-பாசுதல் பொருந்திய மூவர்முதலிகள் திருப்பாட்டு.

௩௬. படரா நிற்கும்-படர்கின்ற. உண்டே-உண்டோ.

௩௭. கூற்றின் தன்மை பொருந்திய வலிய சக்கரப் படையென்க. கொண்டலோடுங் குழல்-முகில் போன்ற கூந்தல்.

௩௮. பரவை நாச்சியார் வாயிலிற் சென்றது சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டென்க.

௩௯. சிவபிரானே முத்தொழிற்குரிய ரென்பது கூறப்பட்டது. இதனை 'உரைத்தவித் தொழில்கள்' என்னுஞ் சித்தியார் திருவிருத்தத்தாலறிக. தில்லைவனத் துள்ளீரே யென்பதே பாடம்.

௪௰. அஞ்ச-நாம் அஞ்சுமாறு. மஞ்சு-மேகம். இஞ்சி-மதில்.

௪௧. பொன் தாது-பொன்னாகிய தாது. கற்பகதரு கொடியொடு படருமென்க.

௪௨. மழை கண்டு மயில் அகவுதலும் குயில் வருந்துதலுங் குறிக்கப்பட்டன. சாய்தல் - அழிதல். கோடரம் முசு என்பன குரங்கின் விசேடம். தலைஇ-சொரிந்து. இஃதிப் பொருட்டாதலைத் 'தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்து' என்னுந் திருமுருகாற்றுப்படையா னறிக: பெய்து மாறுதலுமாம் 'கார்ப்பெய றலைஇய' என்பது புறம்.

௪௩. கள்ளாகிய நீர்.

௪௪. பாயிருள் - பரந்த இருள். பரம நாடகம் - மேலான கூத்து. நோயாவது சந்திரன், மருந்தாவது கொன்றைக் கண்ணி. தெள்ளமுது அன்னவர்-பெண்டிர்.



௪௬. ஐந்தெழுத்துக்கள் சொல்லும் பொருளுமா யிருக்கின்றன. சொல்லைச் செவியாலும் பொருளைக் கண்ணாலும் அறிய வேண்டுதலின் சொல்லும் பொருளுமா யிருக்கின்ற ஐந்தெழுத்தை அறிவதற்குச் செவியும் கண்ணும் ஒருருப்பாகக் கொண்ட பதஞ்சலி முனிவரே தகுதியுடையா ரென்றவாறு. பதஞ்சலி அனந்தனென்பது கோயிற்புராணத்தா லறிக. சிவபிரானது திருவுருவம் ஐந்தெழுத்தென்பது உண்மை விளக்கத்தா லறியப்படும்.

௪௭. எம்பிரான் சடையிலுள்ள திங்கள் கங்காதேவியின் நுதல், முத்துக் கச்சு, வளை யென்பவற்றை ஒக்கும் என்றவாறு.

௪௮. நாண் மதியும் தலைக் கலனும் விளங்குந் தோற்றமென்க. கங்குல் மேகம்-இருள் கொண்ட மேகம். ஆகம்-உடம்பு. மா கம் பதியும் மதி-பெரிய தலையி லணிந்த சந்திரன்.

௪௯. அமரர்சேயிழை மாதர் நஞ்சின் வேகத்தால் தங் கணவரை யிழந்து கொங்கை முற்றத்துக் கையாற் புடைப்பரென்பதாம்.

௫௰. உன்னுமுன் - நினைக்குமுன். இது யாக்கையினிலையாமை கூறிற்று. கிழமுதிரமையம்-கிழப்பருவம் முதிர்ந்த பொழுது. ஐ வளி பித்து-சிலேஷ்ம வாதபித்தங்கள். உடற்கு மூலம் இம்மூன்று மாதலின் மெய்தரும் வித்தென்றார். வித்தின்-வித்திலிருந்து. திரை-சுருக்கு. கலித்தல்-பெருகுதல். இது பிணி மிகுதி கூறிற்று. அயில் முக்குடுமிப்படை-கூரிய முத்தலைச் சூலம். எயிறலைத்தல்-பற்கறித்தல். கூற்றம் - இயமன். அகலுபு - அகன்று. மெய்ப்பொருள் துணிவோர் குஞ்சித கமலங் கும்பிடவேண்டுவர். குஞ்சிதம்-வளைவு.

௫௧. ஒருவர்க் கமுது மற்றவர்க்கு நஞ்சாயிற் றென்றவாறு. தலைக்கலன் சிரித்தல் பிரம விஷ்ணுக்களுக்கு அழுகையாயிற்றென்பது: அத்தலைக்கலன்களும் முன்னைப் பிரம விஷ்ணுக்கள் தலைகளே யாதலின்.

௫௨. கனம்-மேகம். தாளம் பாளையிலிருக்கும் பொழுதுள தாம் நிறம்: பவளம் பழுத்தபின்புள தாம் நிறம். 'எண்ணூர்

முத்தமீன்று மாகதம் போற் காய்த்துக், கண்ணார் கமுகு பவளம் பழுக்குங் கலிக்காழி ' என்பது தமிழ்வேதம். புண்ணியம் மலர்ந்த தில்லையென்க. ஆனந்த மாக்கடல்-சிவபெருமான்: மூன்னுங் கூறப் பட்டது. அனம்-உமாதேவியார். பொழில்-உலகு. பலம்-பயன்: பழம் எனச் சிலேடையாற் பொருள் கொள்க.

௫௨. கோ முனிவர்-சிறந்த முனிவர்கள். சிவபிரானது திருச்சடையிற் பிறையை விநாயகப் பிரான் தனது கொம்பென எடுப்பதற்குத் துதிக்கையாற் றொட அப்பிறை துதிக்கையைத் தன்னைப் பற்றவரும் பாம்பென்று கருதிக் கங்கையிற் செல்ல விநாயகப்பிரான் அதனை ஓர் தோணிபோலு மெனக் கருதித் தம் விருப்பத்தை மீட்பரென்றவாறு.

௫௩. இச் செய்யுள் தமிழ் மொழியிலுள்ள 'ஒருவர்' என்னுஞ் சொல்லின் அமைதியை அர்த்த நாரீச வடிவில் வைத்து வியந்தவாறு. அடங்க நீத்தோர்-முற்றிலும் கைவிட்டோர். அருக்கன் மதிவளிவான் இயமானன் தீ நீர் மண் - இவை சிவபிரானது அட்டமூர்த்தங்கள். ஒருவன் - சிவபிரான். ஒருத்தி - பிராட்டி. ஒருவரென்னுஞ் சொல் முதனிலையை நோக்கும் வழி யொருமையாயும் இறுதி நிலையை நோக்கும் வழிப் பன்மையாயு மிருத்தல் அர்த்தநாரீசமாகிய ஒரு வடிவத்திற்கும் ஆண் பெண்ணாகிய இருபாலுக்கும் ஏற்புடையதாயிற்று.

௫௪. அணங்கு அனார்-தெய்வப் பெண் போன்ற நல்லார். தழங்க-ஒலிக்க. பூதி - விபூதி. பாசமிரண்டனுள் முன்னது கயிறும் பின்னது ஆணவமும் குறித்து நின்றன.

௫௫. கணிச்சி - மழுப்படை. இறலோர்-இறலையுடையவர். இறலோராம் எம் அத்தரென்று கூட்டுக. கட்படைக்கு இளைத்த இவர் வேறு கணிச்சிப் படை தாங்குதல் மிகை யென்றவாறு. கச்சு அறுத்து-கச்சினைக் கிழித்து. 'கச்சுஉக' என்பது திருத்தணிகைப் புராணம். வேள் - மன்மதன். அத்திரம் - அம்பு. நெடு அயில் கண்-நெடிய வேல் போன்ற கண். நித்திலம்-உவமையாகு பெயர்: சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையாது வந்தது.



௫௬. கொன்-பெருமை. மதர்-களிப்பு. மின் செய்த-மின்னல் போன்ற. பெருந்தேவி - சிவகாம வல்லியார் : மொய் குழல், திருந்திழை, பெண்ணமுது என வருவனவும் அப் பிராட்டியாரையே குறிக்கின்றன. கண்ணாகிய கயலுக்கு உன்றிருமேனி புதுவெள்ளக் கடலென்க. வெறி-வாசனை. அறல்-கரியநுண் மணல், கண்ணாகிய மான்மறி. புறவம்-முல்லை நிலக்காடு. பிறை அளிக்கும்-பிறை போன்று விளங்கும். கண்ணாகிய சிறையை யுடைய வண்டென்க. பொதும்பர்-சோலை.

௫௭. கா-கற்பகச் சோலை. புரந்தரன்-இந்திரன் : பகைவரூர்களை யழிப்பவனென்பது சொற் பொருள். கோடு-தனங்களை யுணர்த்திற்று. இடைந்த-வருந்திய. இடுகிடையவர்-சிற்றிடையை யுடைய பெண்டிர். ஒரு கோட்டு மழகளிறு-ஒற்றைக் கொம்பை யுடைய விநாயகப் பெருமான். இளங்கோ-முருகப் பெருமான். பாரித்த-பருத்த. பண்டி-வயிறு. வாரித்தண் புனல்-திருப்பாற் கடலை யுணர்த்திற்று. மாலுக்கு மால் செய்வீர் - திருமாலுக்கு ஆசையைப் பெருக்குவீர். தொண்டர் - சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறித்தது. துணைவர் - தோழர். குழலியர் - பரவைநாச்சியார். ஐயமிடு வில்மாரன் - வில்லையுடைய மன்மதன். கமலன் - பிரமன். மங்கையர்கள் - தாருகாவனத்து முனிபத்தினிகள். தங்கலர் - அசுரர். நங்கையர் தம்புரம் - பெண்களது உடல். நும் இருங்கலை - உம்முடைய திகம்பரம். மார் - மார்பு என்பதன் மரூஉ. முகைத்தில - பொடித்தல.

௫௮. படவரவு அடுபுலி யென்பன பதஞ்சலி முனிவரையும் வியாக்கிரபாத முனிவரையுங் குறித்தன. சூடகம் - கைவளை. ஆடகம் - பொன். மடங்கலீருரி வெண்முகிலும் கடமலையின் வன்றோல் கருமுகிலும் போன்றன. விசித்தல் - கட்டுதல். கடாநாகம் - யானை. விடங்கால் நாகம் - பாம்பு. தடநாகம் - குலபருவதங்கள். இவை தரித்த துகில்-திக்கு. கொடுவரி - புலி. நீலப்புயல் - கரியமேகம். கார்காலத்திற் கொன்றைமலர்தலின் 'வருநீலப் புயன்மலா மலரிதழி' எனப்பட்டது. மதிக்கண்ணி - சந்திரனாகிய கண்ணி. விழி

யொடும் எயிற்றொடும் பகட்டொடும் வலியொடும் வரும் மறலி யென்க. அலம்வருதல்-சுழலுதல். உயிர்களும் புலவருமென்க. இரசத அசலம் - வெள்ளிமலை. தசமுக நிசிசரன்-பத்துத் தலைகளையுடைய அரக்கனாகிய இராவணன். இரதமது உலைவற நடவிடும் ஒருவன் - பிரமன். அலைகடலாகிய நெடிய முரசுஒலிக்க எதிர்த்த மன்மத னென்க. அம்நலம் - அழகிய நன்மை, பொன்நலம் - பொன்னின் நன்மை. ஆலின்கீழமர்ந்தோ யென்பது முன் 'திங்கட்சடையீ' ரென்றதுபோல உருத்திரனைக் குறித்து நின்றது. கற்பனை - பாவனை. 'கற்பனை கடந்தசோதி' யென்பது பெரியபுராணம். மன்றின் உயர்வினை யுணர்த்தியவாறு. பொன்மன்றின் முடியில் திங்களும் அடியில் முகிற்குலமும் தவழ்தலும் படிதலும் ஆரழற் பிழம்பின் மேலுங்கீழும் பிரமனும் திருமாலுந் தேடி நின்ற தன் மையை யுணர்த்துகின்றன.

௬௰. செய்த மூன்றும் உவமவாசகம். மால்-மேகம். வாமம்-அழகு. மாறிநிற்பது - கனியவேண்டு மிடத்துக் கனியாது கரைந் துருகவேண்டாத இடத்துக் கரைந்துருகிநிற்றல். அகம் மூன்றலுள் முன்னைய இரண்டும் மனம்: பின்னையது பாவம். ஆறிநிற்பது - ஆறுதலடைந்து நிற்றல்.

௬௧. நொ-துன்பம். திருமால் முதலிய தேவர்களும் சிவ பிரானைப்போலக் கையில் அபயவரத முத்திரைகளைத் தாங்குதல் சித்திரம் போன்று பொலிவதன்றிப் பயப்பா டுடையதன்றென்பது ஆலாலவிட மெழுந்தகாலத்து நிகழ்ச்சிபற்றி யறியப்படுமென்ப தாம்.

௬௨. தொடலை - விளையாட்டு. நம் பாவையாகிய கிள்ளை. படலை - மாலை. பேதைக்குழாம் - சிறுமியர் கூட்டம். வீதிக்கே - வேற்றுமை மயக்கம்: 'மணற்கீன்ற' என்றாற்போல. அஞ்சனக் கண்ணாள் - உமாதேவியார். அஞ்சனக் கண்ணாளும் தாமும் அணி தில்லைச் செஞ்சடைக் கூத்தனார் என்பது 'தாளுந் தன்றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்' என வருந் திருவாசகத்திற்போல வந்தது: 'பன்னிரண்டு மொய்ம்புடையவன் பாவையுந் தானு



மின்னும் வெஞ்சுடர்ப் பருதியும்போல விண்படர்ந்து' எனக் கந்த புராணத்து வருவதும் அது. உடையான் - சுவாமி. வார்குழலார் - தோழிமார். குளிரி - பூ, தளிர் இவற்றான் ஒன்றாற்செய்யும் குளிர்ந்த அணை. எய்தானது கடுக்கை யென்க. தன் தந்தைதா ளெறிந்தார் - சண்டேச நாயனார்.

௬௩. அடிகொண்ட குனிப்பு - ஊன்றிய வலத்திருவடியின் கூத்து. முடிகொண்ட - கிரீடம் சுமந்த. தலைவணக்கின் குனிப் பெல்லாம்-தலையை வணங்குதலா லாகிய வளைவு, குனிப்பெல்லாம் என்பது நடுநிலைத்தீபம். இவ்வளைவெல்லாம் போய்க் குடி கொண்ட படிபோலும் இடது திருவடியின் வளைவு என்க.

௬௪. திருமால் பலரும் பிரமர் பலருமிறந்தொழிதலை 'நூறு கோடிபிரமர்' எனவருந் தேவாரத்தானறிக. பல ஆண்டுகள் கழிய வும் தாம் கழியாத இளமை யுடையோராகிய கணதிபர்கள். ஒல்லை-சிறுபொழுது.

௬௫. கழை - மூங்கில். கோமாரி - கௌமாரி. கண்களை முலைக்கண்வைத்தல் - தலைகவிழ்தல். உழை - பக்கம். குயின் - மேகம். உருமு - இடி. நக்கு-மின்னி. எங்க உக நக்குமழை தூங் கும் பொழிலென்க. மீனேற்றின் துவசத்தான் - மன்மதன். கவளமா - கவளமாக. கணம் - நொடி. எனவாங்கு - என்று. அறத் தின் புங்கவன் - தருமக்கடவுளாகிய நந்திபிரான். முனியான் - முனிவில்லாதவனேனும். அறத்தின் புங்கவன் முதலாகவுள்ள பகுதிக்குப் பிறவாறும் பொருள்கூறுப.

௬௬. குறைதங்குகலை - குறைந்துள்ள கலைகள். கோள் இழைக்குங்கொல் - துன்பஞ் செய்யுமோ. தலையுவவு - பூர்வபக்கப் பௌர்ணிமை. மத்து - ஊமத்தமலர். கள் - தேன். கடு - விடம். முழை - தான் இருத்தற்குரிய அளை. சிலைக்கோடு - வில்வளைவு. மருப்பினையுடைய விநாயகப்பெருமான் என்க. முழவுத்தோளாகிய மலைக்கோட்டில். கொல்லுதற் றொழில்வாய்ந்த தன்கோடு. விடலை இங்கே முருகப்பெருமான். தன் என்பது கயாசுரனை யுணர்த்திற்று. விடர் - பிளவு. முருகக்கடவுள் வீரருள் வீரராதலின் வீரங்கொண்டு

போர்செய்த யோகரனை வியர்தார். சிலைமுகம் கோட்டும்-வில்லில் பூட்டும். அச் சில்லரித் தடங்கண் - அந்த அம்புபோன்ற செவ்வரிய வரிகளையுடைய நீண்ட கண்களையுடைய பிராட்டியார்.

௬௭. பகல் செய்யும் ஞாயிறும் இரவுச்செய்யும் சந்திரனும் எம்பெருமானுக்கு விழிகளாதலின் உயிர்கள் பகலில் தொழில் செய்து இரவில் துயில்செய்தன. கருநோக்காவகை - பிறப்பிற் புகாதவாறு. அவ்விரு திருவிழிகளும் பொதுநோக்கமும் சிறப்பு நோக்கமும் புரியுமாறு செய்து என்க. கருணைக் கண்ணோக்க மென்றது எல்லா உயிர்கள் பாலும் பொதுவிற் செல்லும் திருவருணோக்கம். கமலப்பார்வை வைத்தும் - தாமரைபோன்ற கண்ணைத் திருவடியிற்சாத்தியும். மலம் மறியாதேம் முடிக்க அறிதுமென்க. முதற்றொழில் - சிருட்டித்தொழில். தலையிழந்த அத்தொழில் - திருமுடியைக் காணுதொழிந்த அச்செயல். துறைகண்டார்-வியாத முனிவர். நாவிழந்து தோளிழந்தாரென்க. மறிந்தலை-யாட்டுந்தலை. மாமடிகள் - மாமனாகிய அடிகள். உலகு - உயர்ந்தோர்.

௬௮. சிறிற் குடில்தோன்றி யழிய மெல்லைதாறும் நிலைபெறாத உடம்பிலே செல்லுதற்குரிய கதவைத் துறந்து இன்பவீட்டை யெய்தக் கதவுதிறந்தாற்போன்ற பொது. உளவயின் உளஅளவு - மனத்தின் கண்ணேயுள்ள அனுபவ அளவு. உளவயினென்ற பாலது உளவையி னென்றதுபோலி. சோட்டு விளக்கு இலை - உயிர்களாகிய குழந்தைகளைச் சோட்டுந் தன்மையுளக்கு இல்லை. அவ்விளையாட்டு உமாதேவியாரது விளையாட்டு. ஆயினும் அஃது உன்விளையாட்டு எனப்பெயர் பெறுவதாயிற்று. உமாதேவியார் அன்னையாராதலின் உயிர்களுக்குத் துயசெய்துஞ் செயலைச் செய்யார். ஆயினும் உயிர்கள் துயரடைதலும் அவர் தம் வினை நீக்கத்தின் பொருட்டேயாவது.

௬௯. செல் - மேகம். முத்தேவர் - பிரமவிஷ்ணு ருத்திரர்கள். முகிலூர்தி - இந்திரன். கற்பகக்கன்று - கற்பகவிநாயகர்.



௭௰. இருகூற்று உருவம்-சிவமுஞ் சத்தியுமாகிய இருதன்மையுடைய வடிவம் : அவ்வுருவத்தி லொருகூறு சிவவடிவம். கூற்றம் - யமன்.

௭௧. மீளி-சிறந்தோனாகிய தலைவன். தோற்றென-தோற்றமை குறித்து.

௭௨. பானல் - நீலோற்பலமலர். கொன்றை சாருப்பியர் தருதல் - பசலைபாய்தல். பீளை யொழுகும் புறக்கண்ணாகிய வனக் கண்ணிதுவே உனக் கண்ணதாம் ஞானக்கண்ணே யாதல் நல்கும் பிரானென்க. நடராசர் நூர்கிலார்.

௭௩. ஒவ்வாத்திருவுரு ஒன்று-ஆணும் பெண்ணுமாய ஒருவடிவம். வாச்சியம்-வாசகத்தால் உணர்த்தப்படும் பொருள். பை வாய்ப் பொறி அரவு-படத்திலே பொறியையுடைய பாம்பு. அரவல்குல் எந்தாய் என்பது சிலேடையால் அரவத்தை அல்குலிலே யணிந்த என் தந்தையே யென்று சிவபிரானையும் அரவின் படம் போன்ற அல்குலையுடைய எம் தாயே யென்று உமாதேவியாரையுங் குறிக்கும்.

௭௪. கருப்புவில் கருப்பு நாண் அருப்புக்கணை யென்க. இரும்பு - இரும்பு போன்ற வலியமனம். இது காமுற்றானது கூற்று.

௭௫. குரைத்தல் - கத்துதல். சமன் - யமன். தேவேசன் - தேவர்க டலைவன். அது-வாரே மென்றல்.

௭௬. வேந்தன்-இந்திரன். மழ முனிவன்-வியாக்கிர பாதர். பையரவரசு-பதஞ்சலி முனிவர். கமல லோசனன்-திருமால். ஆதி சேடனே பதஞ்சலியாராக வந்திருத்தலின் 'தன்மருக்காதரித்தனை' யென்றார். புலிக்கால் முனிவரன் புதல்வன்-உபமன்னியு முனிவர். திருமால் தனக்குரிய அமளியும் மனையொடு சேக்கையுமின்றி வருந்தி நின் வாயிலில் நெடுநாள் வைகினனென்க. வீடு நல்குதல்-விடுதலை செய்தல்: சிலேடையாற் பெறும் பொருளுங் காண்க. சிதம்பர மும்மணிக்கோவை கஅ-வது செய்யுளுங் காண்க.

௭௭. 'உதவி வரைத்தன் றுதவியுதவி, செயப்பட்டார் சால்பின் வரைத்து' என்னூர் திருக்குறள் எடுத்தாளப் பட்டிருத்தல் காண்க. அடித்தாமரைச் சுடர்ப்பரிதி-அடித் தாமரையால் நிலத்தில் வரைந் துண்டாக்கிய ஒளிமயமாகிய சக்கரப் படை.

௭௮. துணி நின்று-துணிந்து நின்று. கல்-மலைப் பிரதேசம்.

௭௯. கொன்-பெருமை.

௮௰. மேவ அரும் தில்லை சென்றும்-பாவிகள் செல்லுதற்கரிய சிதம்பரத்தை அடைந்தோம். பரலோகம் ஒன்றினம்-சிவலோகத்தை அடைந்தோமாயினும். ஒன்றின் அம்பரலோகம் சென்றுமே வருந்து இல்லை - அவ்வாறு அடைந்தால் விண்ணுலகங்களிற் சென்று வருந்துதலுமில்லை.

௮௧. பரசோன்-பரசுப்படையுடைய சிவபெருமான். வாழி யர்-வாழ்க.

௮௨. ஆயிழை நோக்கு அலைகடலொக்கும்: கடல் சிவபெரு மானுக்கு நஞ்சினையும் வினையோர்க்கு அமிர்தத்தையு மொருங்கு அளித்ததுபோல இவள் கண்களும் நோய் நோக்கும் அது தீர்க் கும் மருந்துநோக்கு முடையவாதலின்.

௮௩. பின்வழி-பிற்காலத்து.

௮௪. புறநெறி-அறத்திற்குப் புறமாகிய தீயவழி.

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

# சிவகாமியம்மை இரட்டைமணிமாலை

௧. உள் ஐயம் ஒருங்கு ஈன்ற - மனத்தில் ஐயத்தை முற்றும் விளைத்த.

௨. சிவபெருமானுக்கு மாகமே திருவுருவம்: அங்ஙனமாயின் உனக்கு அப்பெருமான் இடப்பாகந் தருதல் இயலாது. ஆராய்ந்த வழி அப்பெருமானுக்குப் பரமானந்தமே என்றும் நிலைபெற்ற வடிவமாக்கி, உயிர்களுக்கு அருள்புரியும் வண்ணம் வேறு எண் ணிறந்த பல வடிவங்களைத் தருவதும் உனது திருவிளையாடலே யாம் என்றவாறு.

௩. அம்பலத்தார்க்கு ஆம் பலம் - சிவபெருமானுக்குக் கிடைத்த பயன். லகைச்சங்கு - கையிலுள்ள வளையாலுண்டாக்கப் பட்ட தழும்பு.

௪. பூ - மலர், பூமியெனவும், பூத்தல் - மலர்தல், உண்டா தல் எனவுஞ் சிலேடையாற் பொருள் கொள்க.

௫. அம்மையார் உலகங்களைப் படைத்துக் காத்தருளுகின் றார்: ஆனாற் சிவபிரானோ இப் பார் ஒடுங்க ஆடுகின்றார். இதற்கு ஏது, அம்மையே. அவர் பாடுகின்ற வேதமே அறியா. ஆயின் யாமோ அறியவல்லமென்றவாறு. ஏது-காரணம்.

௬. ஆரழல் என்றது சினக்கனலை, கனகவெற்பு-மேருமலை. அதனைக் குழைத்த சிவபெருமானது புயங்கள் மிகவும் வலியுடையன. அப் புயாசலங்களைக் குழைத்த நினது கொங்கைகள் மிகவும் வன்மையுடையன என்றவாறு.

௭. மறலி-இயமன். செய்தன் முரசு-சாப்பறை.

௮. முருந்து - இறகின் உள்ளடி. ஆரம் - முத்து. கயல் பொருந் தடங்கண் விழிக்கும் மார்பு என்க. கண் காதலித்து நோக்கும் திருமார்பு என்றவாறு.

௯. கறை-விடம். வம்பு-பயனற்றது. மயில்-உமாதேவியார். மயில் பாம்புக்குப் பகையாதலின், மயிலை யொருபாலுடையார் நஞ்சுண்டதும் அரவணிந்ததும் வியப்பல்ல வென்க. இறை - வழித்தி.

௰. அண்டம் - முட்டை, உலகம் எனச் சிலேடையாற் பொருள் கொள்க. ஆனந்தவாரி-சிவபிரான்.

௧௧. அண்டம் - ஆகாயம். 'விண்ணே திருமேனி' யென, மூன்றும் கூறினர். உரை-நூலளவை, விண்ணம்-விண்.

௧௨. வாய்ந்தது - உறுதியாயிற்று. சிறுநுதல் - கங்காதேவியார்.

௧௩. மறைசெய்த - வேதத்தைத் தோற்றுவித்த. மழலையையும் நுதலையுமுடைய பிராட்டியைச் சிவபிரானோடு உள்ளத்திலே இருத்தி யென்க. கண்ணுதல் - கருதுதல்.

௧௪. நுதல்நாட்டம் - சிவபிரானது நெற்றிக்கண். உன் சினம் தணியுமாறு அவர் உன்னைப் பணியும்பொழுது கங்கை நங்கையும் கீழ்விழுந்து பணிவாள். அப்பொழுது நீ அவளை 'என் தங்கையே எழுந்திரு' என்று கூறுவாய். அங்ஙனமாயின் அவட்கு நின்னினுஞ் சிறந்ததாக வந்த வாழ்வென்னை யென்க. தலையெடுப்பு - தலையிலே தூக்கி வைத்திருத்தலென்ற பொருளுஞ் சிலேடையாற் கொள்க.



௧௫. கலைகளும் வேதங்கள் நான்கும். குமரியாகி யிருந்தாள் என்பது 'பான்மொழி கன்னியாகும்' என்னுஞ் சிவஞானசித்தியாராலறிக. இருந்தாளாகிய சிவகாமவல்லி கற்பகப்பூங் கொம்பரே, தலைவளைத்தல் நாணுதல் அளிக்கு ஒல்குதலென்பன வுடைமையினென்க.

௧௬. நடுவின்மை - நடுவு நிலையில்லாமை, தொனிப்பொருளுங் கொள்க.

௧௭. கொம்பு-சிவகாமியம்மை. அக்கொம்பு ஆள் பதுமத்தாளென்க. அக்கொம்பினாலே ஆட்கொள்ளப்பட்ட திருமகள். பாவித்தாள் - கருதினாள் : அஃதாவது உமாதேவியார் போன்று தானும் தன் கணவரது ஆகத்திலிருக்க வேண்டுமென்று கருதினாளென்பது. ஆயினும் அஃது அத்திருமகட்கு இல்லாதாயிற்று. ஆகம்-சிலேடை.

௧௮. ஆவி - சிலேடை.

௧௯. நாட் கமலம்-அன்றலர்ந்த தாமரை மலர்மாலை. துழாய்-துழாய்மாலை. இதனாற் கூறியது நினது திருவடிக் கமலஞ் சூடப் பெறின் 'கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' என்பது.

௨௰. தரு-கற்பகவிருக்ஷம். அற - முற்றும். நீ அறம்பூண்டும் நின் கணவன் பலிக்கு உழலுதலின் அவ்வறம் என்ன பயப்பாடுடைத்து. அவர் பலிக்கு உழலுவதும் உன்சீர்த்தி கொண்டன்றிப் பிறிதில்லை. 'இரக்கப் போயினும் சிறக்கப் போதல் வேண்டு' மாதலின்.

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

# பண்டார மும்மணிக்கோவை

தருமையாதீன பரம்பரை

கமலைத் திருஞான சம்பந்த தேசிகர்
|
ஆனந்த பரவச மூர்த்திகள்
|
சச்சிதானந்த மூர்த்திகள்
|
மாசிலாமணி தேசிகர்

இங்கே காட்டப்பட்ட நான்காவது தேசிக மூர்த்தியாகிய மாசிலாமணி தேசிகரே இம் மும்மணிக்கோவைக்குத் தலைவர்: இவரே குமரகுருபர சுவாமிகளுடைய ஞானாசாரியர். இவ்வாறு கமலைத் திருஞான சம்பந்த தேசிகர் அருளிச் செய்த 'முத்தி நிச்சய'த்தின் உரையாசிரியராகிய வெள்ளி யம்பலவாணத் தம்பிரான் அந் நூலின் சிறப்புப் பாயிரவுரையிற் கூறுகின்றார்.



## காப்பு

சூளாமணியாகிய மாசிலாமணி தேசிகரது சீர். அனத்தான்-பிரமன்: அன்னத்தானென்பது இடை குறைந்து நின்றது. அனத்தானும் பாற்கடலானும் போற்றக் கண்டிகைப் பொற் பைந்நாகத்தான் அருள் கைந்நாகத்து ஆனனத்தா னென்க.

## நூல்

க. வீற்று வீற்று அமைந்த-வேறு வேறாகப் பொருந்திய. பிரசம்-தேன். அஞ்சிறை - அகம்+சிறை. ஓடையும் அடவியும் புரிசையும் சூழ்கிடந்த கமலையென்க. ஞானப் பிரகாசன்-கமலைத் திருஞான சம்பந்த தேசிகரது குருவாகிய கமலைச் சிதம்பர நாத ஞானப்பிரகாசதேசிகர்: இதனை முத்தி நிச்சயத்தின் முதற் செய்யுளால் அறிக. ஞானத் திருந்திழை-ஞானமாகிய பெண். சைவத் தருங்கலம்-சைவமாகிய அரிய அணிகலம். முதற்குரு ஞான சம்பந்தரென்னும் பெயருடையராதலின் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பெருமைகளை இவர்க்கு ஏற்றிக் கூறினார். தருமபுரத்துத் தேசிகர் சடைமுடியுடைய ராதலின் 'பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத், துள்ளதன் படிவ முணர்த்துவ கடுப்ப' என்றார்: இதனை 'ஒண்மணிச்சூட், டம்மா சுணந்தள்ளி யம்முடிமேற் கொண்டிருந்த, விம் மாசிலாமணி மற்றின்று' எனப் பின்னர்க் கூறுதலானுமறிக. சேவகம்-யானை துயிலிடம்.

உ. சம்பந்தமென்பது கொள்வதும் கொடுப்பதுமாகிய தன்மையாதலின் ஞான சம்பந்த னென்னும் பெயருடைய நீ என் வடிவத்தை உன் வடிவமாகக் கொண்டவாறே உன் வடிவத்தை எனக்குக் கொடுத்தல் தகுமென்றவாறு.

௩. முத்த நிலையிலே சிவபோதமேலிட்டு விளங்குதலும் பெத்த நிலையிலே சீவபோதமேலிட்டு விளங்குதலுங் கூறியவாறு. மணி என்றும் ஒரு தன்மையாய் விளங்குதலன்றி இவ்வாறு ஒருகால் விளங்கியும் ஒருகால் விளங்காது மிருத்தலில்லை யென்பார் 'காணேனிதற் கொத்த நன்மணியே' யென்றார். இச்செய்யுட்

பொருளைக் 'கோலங்கொண்டவா றுணராதே' யெனவருஞ் செய்யுளில் அருணந்திசிவாசாரிய சுவாமிகள் கூறுமாற்றா னறிக. இவ்வாசிரியரும் காசிக்கலம்பகத்தில் 'தானென் றவர்மு னொளித் தோடித் தன்னை யிழந்தவர்முன், யானென்று சென்றிடுங் காசிப் பிரான்' என்றார்.

௪. ஈயா மாக்கள் தீமொழி - உலோபிகள் கூறும் கொடுஞ் சொல்லாகிய இல்லை யென்னுஞ் சொல். நீர்ப்பட்டம் - நீர்நிலை. வெள்ளி வேதண்டத்துச் செங்கதிர்க் கடவுண்மா மணியென்க. மாசிலாமணி யென்னும் பெயர்க்குக் காரணங் கற்பித்தவாறு. அந்நியம் - பேதம். அநந்நியம் - அபேதம். இந்நிலை யிரண்டும் எய்திற்று - பேதாபேதம். ஏனைச் சமயத்தார் அத்துவித மென்னுஞ் சொற்பொருள் தேறாது இவ்வாறு வேறு வேறு கூறுவர்: அவர் சொல்வழிச் செல்லா தென்றவாறு. வல்வினை வருவித்தலைப் புராணங்களிற் கண்டு தெளிக. ஞமலி-நாய். அது அவதரிப்பது என்று முடிக்க.

௫. உற்பவம் - தோன்றுதல். தநியர் - பருவமுடையவர்கள். தான் ஏ - அசைகள்.

௬. கடல்பெற்ற தோர்மணி - திருப்பாற் கடலிலே பிறந்த சிந்தாமணி. அம்மணி சிந்தித்தவற்றை மட்டும் நல்கும்: ஆனால் அருட்கடல் பெற்று என்னுடலிலே யுள்ள கண்மணிக்கு உள்மணி யாகிய மாசிலாமணி கருத்துக் கெட்டாத பேரின்பத்தை நல்கிய வாறு என்ன வியப்பு என்றவாறு.

௭. இறைவனுக்கும் உயிர்க்கும் தன்மை ஒன்றே: அன்று என்று மறுத்துக் கூறினும் ஆம் என்று சிறத்தல் கூடும். எங்ஙன மெனின் நீயுள்ள காலத்தே யாமுமுளேம்; நித்திய முடையேம்; வியாபக முடையேம்; அறிவெனப் பெயருடையேம்; இச்சா ஞானக் கிரியைகளாகிய சத்திகளுடையேம். ஆதலின் யாங்கள் நினக்கு அந்நியமல்லேம் அநந்நியமே. உயிர்க்குப் புருடனென்னும் பெயர் வருதற்குக் காரணங் கூறியவாறு. ஆயினும் உன்னை நோக் கியவழி யாங்கள் சத்திகளே. புணர்த்தனை - புணர்வித்தனை.



காட்டு - உதாரணம். புருடோத்தமன் - திருமால். ஒப்பனை - சமம். சிற்சில - வியாபகத்தன்மை, அறிவுடைமை, இச்சா ஞானக் கிரியை யென்னுஞ் சத்திகளுடைமை யென்பன. அமளி - படுக்கை. பரவை - கடல்.

௮. சும்மா இருத்தல் - தமக்கெனச் செயலொன்றின்றி யிருத்தல்.

௯. கொண்டவர் - அதனை உடைமையாகக் கொண்டவர். உண்டே - உண்டோ. கணி - கண்ணணி. ஏனை மணி அதனை உடை யவரது பொருளா யிருப்பதன்றி அவரைத் தான்கொண்டு ஆளுமா றில்லை: ஆனால் இம் மாசிலாமணி, யாம் இதனைக் கொள்வோ மென்று ஒருவர் பார்க்குமுன்னே அவரைப் பணிகொண்டு தொண் டுங்கொண்டு ஆளுங் கொள்ளுதல் என்ன வியப்பு என்றவாறு. பணி முதலிய மூன்றும் ஆட்கொள்ளுதல் விகற்பம்.

௰. முற்படு மாயை - சுத்தமாயை. முதலாகிய நாட்டி லென்க. ஈரிரு கண்ணுறு - நால்வகைத் தோற்றம். எழுசரம்-எழு வகைப் பிறப்பு. ஆறு எழ் இரட்டி நூறுயிரத்த செய்கள் - எண் பத்து நான்கு நூறாயிர யோனிபேதம். படுகர் - நீர்நிலை. தெய்விக முதலா மும்மதகு - ஆதி தெய்விகம் ஆதிபௌதிகம் ஆதியான்மிக மென்பன. ஐம்பொறி - பஞ்சேந்திரியம். மந்திர முதலா அறுவகைப்படும் ஏரிகள் - மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலையென்னும் அறுவகை அத்துவாக்கள். நம்பி - சிறந் தோன். குடிலை - சுத்தமாயை. புறப்புறச் சமயத்தாரிற் பிறர் பிறர் கூறுமாறின்றிப் பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டு உய்க என. பாதபம் - மரம். உவந்தனர் - மகிழ்ந்தனர். வேதாந்தம் - உபநிட தம்; ஏகான்மவாதங் கூறும் வியாச சூத்திரமன்று: இதனைச் சிவஞானபாடியத்திற் காண்க.

௧௨. தான் அவனாகிய தன்மை பெற்றான் - சிவஞானி. தான் அவனென்பன மகாவாக்கிய வழக்கு. தான் - தாழப்பெற்ற அவன். அவனாகிய தன்மை - சிவனாகிய தன்மை. அத்தன்மையின்றித்

தான் அவனாகிய தன்மை பெற்றேற்கு - அவ்வாறு வழிபட்டு அப் பேறு எய்தாமல் சிவனாந் தன்மைபெற்ற எனக்கு. அருள் - அருள் புரிவீராக. தாழ் சடிலத்தான வல்நாகம் பெறு - சடை முடியிலே வலிய பாம்பினை யணியப்பெறாத : தாழ்சடிலத்தா னாயினும் அப் பிரானது வடிவம்பெறாத என்றுமாம். பிறவாறு முரைப்ப.

௧௩. சிந்தனை - மனம். வேங்கை சுரும்புணா மலராதலின் இவ்வாறு கூறினார். மருங்கு - பக்கம். இலையறப்பூத்த சுதைமலர்ப் புன்னை - இலை தெரியாமற் பூத்த வெண்மலர்ப் புன்னையின்மீது. மெய்ப்புலன் - உண்மையறிவு. இமையா வறுங்க ணென்றது தோகையிலுள்ள கண்களை. தார் - கழுத்திலிட்டவரை. 'செந்தார்ப் பசுங்கிளியா' ரெனச் சிந்தாமணியில் வருவதற்கு நச்சினார்க்கினியர் கூறு முரையாற் காண்க. கோடு - மருப்பு. கோடுபல - நான்கு மருப் புக்கள். கலைமதி - கலையோடு கூடிய சந்திரன், நூலறிவு. மானி டன் - மானை இடப்பாகத்து உடையவன், மாநுடன். எற்பணி பூணாது - எலும்பாகிய அணியைத் தாங்காது. எற்பணி பூண்டு - எனது பணியைக்கொண்டு. பாரிடம் - பூதகணம், பூமியாகிய இடத்திலுள்ளோர். கற்பினையுடைய மாக்கள். எதிர் நிறைகோள் - மாறாக நிறுத்தப்படுங் கொள்கைகள்; அவையாவன: மோக்ஷத்திற் குப் பந்தமும் ஞானத்திற்கு அஞ்ஞானமு மென்பன முதலாயின. வேற்றுமைத் தொகைப் பொருள் - மறுதலையாகிய எண்ணையுடைய பொருள்கள்; அவையாவன : அடியவர்க்கு உரியன திருநீறு உருத் திராக்கம் பஞ்சாக்கரம் தீர்த்தம் பிரசாதம் குரு இலிங்கம் சங்கம மென்னும் எட்டு மென்றவழி, அவர்கட்கு உரியனவாகாதன சந் தனம், ஆடை, ஆபரணம், தாம்பூலம், சுகந்ததைலம், சுகபோசனம், பஞ்சணை, பெண்ணென்னும் எட்டும் எனவும் ; கொள்ளப்படுவன குரு இலிங்க சங்கமங்களென்ற மூன்றுமென்ற வழித் தள்ளப் படுவன காம வெகுளி மயக்கங்க ளென்ற மூன்றும் எனவும் நிற் பன. இங்ஙனம் அவர்கட்கும் விருப்பு வெறுப்புக்கள் உளவாகக் காண்கின்றோமெனச் சாதுரியம்படக் கூறியவாறு. வேறு சொன் னயங்களுங் காண்க.



௧௪. இந்நூல் - இந்த மும்மணிக்கோவை. என்று பண் ணிற்கு அணியாப் பகர்வரென்க.

௧௫. மன்வசமாச் செய்யும் - மிகுதியும் வசமாகச் செய்யும். பொன் - இரும்பு.

௧௬. போந்தை - பனை. போந்தையங் கண்ணிவேந்து - சேர வரசர் : இமய வரம்பன்நெடுஞ் சேரலாதன் முதலியோர். கிரி - இம யம். சூளிகை - நிலாமுற்றம். அணந்து - அண்ணாந்து. மாடகம் - முறுக்காணி. மூவகை நிலையம் - எடுத்தல் படுத்தல் நலிதலென மூன்று தானங்கள் : அவை தாரம், மத்திமம், மந்தரமென்பன. இதனை 'மந்தரத்து மத்திமத்துந் தாரத்தும் வான் முறையாற், றந் திரிகண் மெலிவித்துஞ் சமங்கொண்டும் வலிவித்தும்' என வரும் பெரியபுராணச் செய்யுளாலறிக. ஏழு சுரம் - சப்த சுரங்கள். உகிர் - நகம். கின்னரப் பறவையும் வியக்கின்ற. வியப்பெனப் படாது தக்கோர்க் கருள் புரிதல் நின் கடப்பாடாதலின். சொற்றமிழ் விரகன் - ஈண்டு திருவாதவூரடிகள். கண்ணே செவிபோன் றிருத் தலின் கட்செவி மூங்கை யென்றார். மூங்கை - ஊமை.

௧௭. வெளியாயிருந்த - தோன்றிக் கொண்டிருந்த சித்து அசித்தென்னும் பிரபஞ்சப் பொருள்கள். எனக்கு இருளாயிருந்த - எனக்கு அவனருளிய காலத்து இருளாயிருந்தன. இருளா யிருத் தல் - தோன்றா தொழிதல். முற்கூறிய இருள் அஞ்ஞானம். வெளி யாதல் - நீ[illegible]கி விடுதல். முரணில்லாதவற்றை முரணுள்ளனபோல நயம்படக் கூறியவா றறிக.

௧௮. இறைவனை யன்றி உயிர்க்குச் செயல் வேறில்லா திருப் பவும் வினை வந்தவாறு யாதினா லெனின் எல்லாம் இறைவன் செயலாகவும் அதனை அங்ஙனம் உணராது அகங்காரத்தால் என் செயலென்று கொண்டமையாலேயா மென்றவாறு. 'முனைந்து செய் தொழில்' என்றருளினர் கச்சியப்ப சுவாமிகள்.

௧௯. உள்ளத் துணர்த்தல் விஞ்ஞானாகலருக்கும் சேய்நிலை நின்று திருக்கண் சாத்துதல் பிரளயாகலருக்கும் இறைவன் அருள்

புரியு முறைகளாம். பளிங்கினாற் செய்த நிலா முற்றத்தில். நகை முகிழ்த்தல்-அவரறியாமை பற்றி நிகழ்ந்த நிகழ்ச்சி. செறு-வயல். பரிபவம்-இகழ்ச்சி. அண்ணலங் குமரன்-மார்க்கண்ட முனிவர். கடுத்தல்-நிகர்த்தல். கடாவிடை-நிகரில்லாத இடபம்.

௨௰. பார்-இங்கே உலகம். ஏற-மிகுதியும். உலகு பொய் யாதலாவது காரிய வகையி லென்றும் நிலைத்திராமை. அது மெய் யாதலாவது சூக்கும நிலையில் காரணத்தில் ஒடுங்கி நிற்றல். உடலை மெய்யென்று வழங்குதல் மங்கல வழக்கு. அஃது அவ்வா றழைக் கப் படுதற்குக் காரணம் உடல் முகந்த வினை நுகருங் காறும் அஃதுளதாதல். அது பொய்யாத லாவது வினையற்ற வழி இல் லாது போதல். இஃது ஊர் பேரில்லாத மாசிலாமணி தேசிகர்க்கு ஊர் பேர் உண்டென்று கூறிய என்னை அவர் ஒன்றை முதலிற் பொய்யென்றும் பின் மெய்யென்றும் மற்றொன்றை முதலின் மெய் யென்றும் பின் பொய்யென்றுங் கூறி மருட்டின ரென்ற வாறு.

௨௧. மணி மந்திரம் மருந்து என்னு மூன்றானும் நோய் தீர் வதுலகிற் கண்டாம். ஆனால் பிறப்பு நோய், உலகிற் காணும் இம் மூன்றானும் நீங்குவ தன்று. அந் நோய் இக்காலை மணி யொன்றினால் நீங்கியது என்ன வியப்பு என்றவாறு. ஐந்தவித் தோர்-நீத்தார். சூழ்தல்-ஆராய்தல்.

௨௨. திருவிடை மருதூரில் சிவபிரான் தன்னைத் தானே வழிபட்டது உமாதேவியாருக்குச் சிவ வழிபாடு அநுக்கிரகிக்கும் பொருட் டென்க. இமய வல்லிக்கும் என்ற உம்மையால் காசியபர் முதலிய முனிவர்களுக்கு மென்று கொள்க. இதனைத் திருவிடை மருதூர்ப் புராணத்தா லறிக. உருத்திர கணங்கள்-விளி. ஈரெண் டிறத் துபசாரம்-பதினாறு வகைப்பட்ட உபசாரம். இது சோட சோபசார மென்று கூறப்படும். இதனை ஆகமங்களுட் காண்க. விட்பு-வெடிப்பு. புதைத்தனர்-வினை யெச்சமுற்று. அஞ்சனம்-மை. மையிட்டுப் பொருள் கண்டெடுத்தல் முதலியன உண்மை யின் 'அஞ்சனக் கள்வர்' என்றார். வாக்கு முதலிய மூன்றும்



திரிகரண மெனப்படும். ஒரு பொருட் கிளவி-ஒரு பொருளை மட் டுந் தருஞ் சொல். இரு பொருட் கிளவி-சிலேடை. திரிகரணங்க ளென்பது பசு கரணமா யிருந்தவை சிவகரணமாய் மாறியதென்ற பொருளைத் தரும். திரிதல்-மாறுதல்.

௨௩. எற்கு-எனக்கு. அமலம்-மலமின்மை. ஓர் மாத்திரை யளவு குறுகுதலாவது சீவனென்ற பெயர் சிவனென்றாதல். சிவ குணங்கள் தன் மாட்டுப் பதிந்து விளங்குதலின் இவ்வாறு கூறி னார்.

௨௪. பின்னம்-மாறுபாடு. சமய விரோதப் பிணக்கு-சமயப் பாகுபாட்டால் வரும் பொருந்தாமை. அதனை அறுத்தோரது சின்னம். சின்னம்-அடையாளம். மாசிலாமணிச் சித்தர் யாம்-யாம் மாசிலாமணி தேசிகரை வழிபடும் சித்தர். எமக்கென்று அன்னம் படைத்தவர் புவன மடங்கலும் பெற்றார்-எமக்கென்று சோறு கொடுத்தவர் உலக முழுவதும் பெற்றாரென்றும், எமக்கு (பிரமதேவருக்கு) வேண்டு மென்று அன்ன வாகனத்தைக் கொண்ட பிரமதேவர் உலக முழுவதும் படைக்கும் ஆற்றல் கை வந்தார் என்றும் பொருள் படும். இன்னம் படைத்தவரேது பெறார் அமுது என்பது இன்னம் அமுது படைத்தவர் எப் பொருள் தான் அடையார் என்றும், சிருட்டி கர்த்தாவாகிய அவர் அமுது ஏது இன்னம் பெறாரென்றும் பொருள் படும். (அமுது ஏது-முத்தி யடைதற்குரிய காரணம்) யாம் அதனை எளிதிற் பெற்றே மென்றவாறு. சொன்னயம் ஆங்காங்குக் காண்க.

௨௫. செவிப் புலனறியா வகத் தொலி முதலியவற்றை 'உளக் கணுக்கல்லா துன்கணுக் கொளித்துத், துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர், எறுப்புத் துளையி னிருசெவிக் கெட்டா, துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை, வைத்த நாவின் வழி மறுத் தகத்தே, தித்தித் தூறுந் தெய்வத் தேற, றண்டத் துளையிற் பண்டை வழியன்றி, யறிவினா றறிய நாற்றம்' எனப் பட்டினத் தடிகள் அருளிச் செயலானும் அறிக. அதுவே இன்ப வாரமுத மென்க. படுகர்-நீர்நிலை. பணிலம்-சங்கு. தருணம்-இளமை.

௨௬. விண்மணி - ஞாயிறு. மணிச்சூட்டு அம் மாசுணம்- இரத்தினச் சூட்டினையுடைய அழகிய பாம்பு. அம் முடி - பாம்பு நீங்கி யிருந்த சடைமுடி. இதனை முதற் செய்யு ளுரையிற் கூறி யது கண்டு தெளிக.

௨௭. ஓர் மணி கண்டவர் பலர்-ஒரு மணியைப் பார்த்தோர் பலர்: இஃது அகச் சமயத்தாரைக் குறித்து நின்றது. ஒர் மருங் காய் நின்றோர்-ஒரு பக்கத்து நின்றோர்: இஃது அகப்புற முத லிய முக்கூற்றுப் புறச்சமயத்தாரைக் குறித்து நின்றது. நீக்க மறச் சென்றோர் - இரண்டறக் கலந்து நிற்குஞ் சிவஞானிகளாகிய சித்தாந்த சைவர்.

௨௮. எழுயர்தல்-எழிடம் உயர்தல்: அவ்விடங்க ளாவன கால்கள், துதிக்கை, கோசம், வாலென்பன. இவ்வாறு நச்சினார்க் கினியர் கூறினர். எழு முழம் உயர்த லென்றும் உரைப்ப. அயிர்த்து-ஐயமுற்று. போகுதல்-நீளுதல். வால் உறுப்பு - வாலா கிய உறுப்பு. புழைக்கை-துதிக்கை. வானைய ரென்று கூறினும் தானவரும் கொள்ளப் படுவர். பொலங் கொம்பு-இங்கே திரு மகள். சத்திநிபாதம்-சத்தி வீழ்ச்சி. இதன் பொருளைச் சிவஞான பாடியத்துக் காண்க.

௨௯. பொருள் முதலிய மூன்றும் ஆசாரியர்க் களித்தலின் இவ்வாறு கூறினர். இங்கே பொருளென்றது செல்வ மன்றென் பதும், அது கரும மென்பதும் சிவஞான பாடியத்துக் காண்க. கொள்ளார்-தமக்கெனக் கொள்ளாராகி. கொள்ளாமுன் என்பதும் பாடம்.

௩௰. தரு-கற்பக விருக்ஷம். மணிக்கோ - மணிகளுட் சிறந் தது: அது சிந்தாமணி. இவற்றை யொக்கும் ஞான சம்பந்த னென்க. கமலைக் குரு - கமலையில் விளங்கும் ஞானாசாரியர். மணிக்கோ-மணியையுடைய கண். இம் மும்மணிக் கோவை ஒரு மணிக் கோவையே யாம்: யாதனா லெனின் இதிற் கோக்கப் பட்ட மணி மாசிலாமணி யொன்றே யாதலின். இதனைப் பூண்ட



வர் சங்கநிதி பதுமநிதி காமதேனு என்பவற்றைப் பொருளாகக் கொள்ளார். பூண் தவருமாம்.

## நூற்சிறப்பு

௧. முறித்து விடுத்த-தறித் தொழித்த. எய்தாத பேரின் பம்-முத்தி யின்பம்.

௨. வெள்ளை வள்ளக் கமலத்தவள்-வள்ளம்போன்ற வெண் டாமரை மலரில் வாழும் நாமகள்.

௩. சேர்த்தல் முதலிய நான்கும் சரியை முதலிய நான்கு மாயவாறு காண்க. நீ தெரிக்கின்றபோது என்பதனை 'பணி யுமா பணியே' முதலியனவாக வருந் திருவாக்குக்களின் வைத் தறிக.

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

---

# காசிக்கலம்பகம்

---

## காப்பு

பாசத்தளை-ஆணவம் கன்மம் மாயை யென்னும் மூவகைக் கட்டு. நேசத்தளை-அன்பாகியதளை. 'நேயத்தே நின்ற நிமலன்', 'பத்திவலையிற் படுவோன்' எனத் திருவாதவூரடிகள் அருளியவா றறிக. வரை-இமயமலை. தூரானை-தூண்டி விநாயகப் பெருமான். ஆனையுளத்து நிற்குமென்க.

## நூல்

௧. அமிர்த மிரண்டனுள் முன்னது விசாலாக்ஷியம்மையாரையும் பின்னது கங்காதேவியையுங் குறித்து நின்றன. கண்கதுவுதல்-கண்ணைக் கவர்தல். மணிகளைத் தெரிந்தெடுத் தென்க. அமரர் கம்மியன்-விசுவகருமன். விண் கதுவுதல் - வானளாவுதல். கற்பம்-கற்ப காலம். உறு களைகண்-சிறந்த பற்றுக்கோடு. பழங்கண்-துன்பம். உரையாத பழமறை-பெருமை யளவிட்டுச் சொல்லப்படாத பழமையான வேதங்கள். முதலெழுத்தின் ஒண்பொருள் - பிரணவத்தின் சிறந்த பொருள். காசியில் இறந்தோர்க்குச் சிவபிரான் பிரணவப் பொருளை உபதேசித்தல் பற்றி இவ்வாறு கூறினார். வருந் தாழிசையினு மிதனைக் காண்க. அணிவது என்பது உடுப்பது தோல் ஆயினும் தமர்களாய் முன் பணி



யும் பேறுடையார் நான்முகனுந் திருமாலும். எம்பிரான்-வினி. செடி-பாவம். 'செடியாயவுட தீர்ப்பான்' என்பது தமிழ்வேதம். இடுதிறை-கொண்டு சேர்க்குங் கையுறை. அருந்தவஞ் செய்தோர்களும் நோற்றுப் பெறற்கரிய பரந்தாமம். தாமம் - உலகம். எற்புடல்-எலும்போடு கூடிய உடல். இறும்பூது-வியப்பு. நிணம்-கொழுப்பு. நேரிழையாகிய திரு-முத்தித் திரு: கைவல்லிய லட்சுமி. முடை-நாற்றம். காணி-உரிமை. இது வெனல் அருமையின்-இது என்று அறிவித்தல் கூடாமையின். எழுதரும் மொழி-எழுதற்கு அரிய வேதங்கள். உளனலன் எவன் அவனே இவன் என்க. தகைமை - தன்மை: பெருமையுமாம். பூண்முலை-உமாதேவியார். எண் வகை யுறுப்பு-ஐம்பூதம் இருசுடர் ஆன்மாவென்னும் அட்டமூர்த்தம். வடவரை-மேரு. விசயன் - அருச்சுனன். மால் நடம்-சிறந்த ஆனந்தக் கூத்து. வீறுமே-பெருமையாகுமா? இக்கு ஊற்றுஇன் திருநாமத்து ஒரு கூற்றுக்கு இலக்கு - கருப்பஞ்சாற்றுப் பெருக்குப் போல் இனிய உன் பெயர் பலவற்றுள் ஒரு சொல்லுக்கு அவன் (யமன்) இலக்கு. அஃதாவது உன் திருப்பெயரொன்று கூறுபவர் யமனை வெல்வரொன்றவாறு. செஞ்செவி-மிக்க அழகாக. புன் மொழிக் கடு-புன்மையான சொல்லாகிய நஞ்சு. அருள் விழைகுவா யென்றது முன் ஆலகாலவிட முண்டமை கருதி.

௨. இஃது உமாதேவியார் சிவபிரான் மீது முலைத் தழும் பிட்டதற்குக் காரணங் கற்பித்தவாறு. உடையாள்-விசாலாட்சியம்மை. அகிலேசர் - விசுவநாதர். கோட்டின் - கோட்டினால். கடையில்-முடிவில். அவ்வர் செவ் வண்ணம் பெற்றார் - சாரூபம் பெற்ற உருத்திர கணங்கள்.

௩. இறை வளை-முன் கையில் வளையலணிந்த உமாதேவியார். நறை - மணம். அடிக்கு - அடியில். குருகீர்-நாரைகளே. தூமொழிகைக் குறைவளை-தூய மொழியினையுடைய இப் பெண்ணின் கைக்கு இன்றி யமையாத பொருளாகிய வளையல்; கைக்கு உறைவளை யெனின் மோனைச் சிறப்பின்றென்க. உங்கள் பேரிட்ட

தாவது-வளையும் குருகென்று பெயர் சொல்லப்படுதல். உருகீர் என்று-மனமிரங்கக் கடவீர் என்று. குருகீர், அடிக்கே சென்று உருகீரென்று கூறிடுமென்று முடிக்க. இது நாரைவிடு தூது.

௪. மிடைதரு - நெருங்கிய. மடவியர் - பெண்கள். வளை கொடு இறையவன் எழுது சுவடென்க: இதுவளைத் தழும்பு. மலடி - வந்தியென்னும் பெயருடைய பிட்டுவாணிச்சி. இடியல் - இங்கே பிட்டு. தட்டு - மண்சுமக்குங் கூடை. பரித்தல் - சுமத்தல். இதனைத் திருவிளையாடற் புராணத்து மண்சுமந்த படலத்திற் காண்க. வெயில்விட - ஒளி விடுதலால். உதயம் - உதயகிரி. இன் - உவமவுருபு. வலயம் - வாகுவலயம். பார் - முப்புரத்தசுரர். சரம் - திருமால். நரகரி - நரசிங்கமூர்த்தி. சிவபிரான் அம்புளாய் அடர்த்தமை கூறியவாறு. புகழினை நிலவாகவும் திறலை வெயிலாகவும் கூறிய நயமுணர்க. இந்நயமுணரார் 'மலியுமிழ் நில'வெனப் பாடங்கொண்டு பிற பிறவுரைப்ப. வெற்பு - மேருமலை. முத்தைச் சினையொடு அணைத்தென்க. அவிமுத்தம் - காசி. மிகவும் விடவேண்டிய காலத்தும் விடாமை யென்பது சொற்பொருள். திவோதாஸன் பொருட்டு நிகழ்ந்த இச்செய்தியைக் காசிகாண்டத்துக் காண்க. விண்டொடு குலகிரி - இமயம்.

௫. காந்தனது செயலையென்க. ஆவியுய்யத் துதியார் உதிப்பார் - உயிர் பிழைக்குமாறு துதியாதவர்கள் பிறப்பர். வையத்து உதியாரென்க. மறித்து - மீண்டு.

௬. இது சந்திரோபாலம்பனம். வேதங்களை தமது திருவடிவமாகக்கொண்ட விசுவநாதரே யென்க. மாதர் முன்னே - இப் பெண்ணின் முன்பு. முன் - முற்காலத்தில். பிறை முடித்த இறைக்கு ஓலம் ஓலமெனத் தேவரோலமிட - சிவபிரானுக்கு அபயம் அபயமென்று தேவர்கள் முறையிட. கறைக் கோலம் - களங்கத்தின் வடிவம். கனல் விடம் - ஆலகால விஷம். விடம் பிறை வடிவங் கொண்டு புறப்பட்டவா வென்க.

௭. விடுத்த வாளி - கட்பார்வையாகிய அம்பு. பகை மூளல் - விரோத முண்டாதல். ஆனந்த வனம் - காசி.



௮. எங்கே கண்மூடுவர் - எங்கே இளைப்பாறுவர். உருப் பாதியிற் படைத்தல் - சத்தி வடிவினின்றும் தோற்றுவித்தல். ஓர் பாதியில் துடைத்தல் - தமது வடிவத்தில் ஒடுக்குதல். வேலை கண்டு ஓடித் திரிவதல்லால் எங்கே கண்மூடுவ ரென்றவாறு. விசுவநாதராதலின் படைத்தலும் அழித்தலுமாகிய செயலைச் செய்வதற்கே அவர் பொழுது கழிகின்றதன்றித் தாம் இளைப்பாறுதற்குப் பொழுதில்லை யென்று கூறியது.

௯. காதல் மீறி அவசப்பட்டுக் கிடக்குந் தலைவி நிலைமை கண்டு கூறியது. மாலையிரங்கலென்னுந் துறை. இதழி - கொன்றை. எண் - நினைவு. எழுத்தொன்று - பிரணவம். ஏனையவற்றை முதற் செய்யுளுரையிற் கூறியது கொண்டு உணர்க.

௰. தும்பை - போர் செய்தற்குரிய மாலை. வாகை - வெற்றி மாலை. ஏமாந்திருத்தல் - செய்வதிஃதென்றறியா திருத்தல். இதுவும் இரங்கல்.

௧௧. அடியார் - சாரூப்பியம் பெற்றவர்கள்: அவர்களுக்கும் முடியிற் சந்திரன் உண்மையின் 'கொய்து கொய்து கொடுக்க' வென்றாள். வெறுங் கூடு - தலைவனைப் பிரிந்திருக்குந் தலைவியது உடல். மடுக்கத்தேடு மென்க. குறை உயிர் - இயல்பிலே குறைந்து வரும் உயிர். இதுவுமது.

௧௨. கொழுநி - துளைத்து. இளஞ்சேய் - முருகப் பிரான். அப் பிரானது அடிச்சுவடும் உமாதேவியாரது முலைச் சுவடு முடையாரென்க. தூதுவிடக் கூறுதல்.

௧௩. வரை - மேருமலை. அதனை வில்லாக வளைக்கும் தடந்தோளையுடைய விசுவேசர்க் கென்க. வளைக்கையார் - பெண்கள். நகை - பல். நேரா - ஒப்பாக. குவிமுத்தம் - குவிந்துள்ள முத்துக்கள். இது கங்கையின் சிறப்புக் கூறியவாறு. இறைஞ்சாதாராகிய இவர் யார்: அஃதாவது அபலா ரென்றவாறு.

௧௪. இது செவிலிகூற்று. புதுத் தோரணம் - இவ்வூர்க்குப் புதிதாகிய மகா தோரணம். மகரம் மன்மதனது கொடியாதலின்

அவ்வடி வமைந்த தோரணமிடுதல் தகாதென் றஞ்சாதென்க. மன்மதனுக்கு அஞ்சி அவன் தோரணத்தை யாவரும் அமைப்பாராயின் இப் பெண்ணுக்கு அவனாலுண்டாகிய அலரை யாவர் வந்து உமக்குக் கூறுவரென்றவாறு. நீர் அவனுக்குப் பகை யாதலின் அவனுக்கு அஞ்சினோர் நம்மிடம் வந்துரையார். இச் செய்யுட் கிவ்வாறன்றி மன்மதனது அரசிருக்கை யென்று பிறரஞ்சாதவாறு நீர் உம்முடைய இடபதோரணத்தைப் புதிதாக நாட்டுவீராயின் இவள் உய்வள். உய்ந்தவழி இவளைப்பற்றிய முறையீடுமின்று மெனக் கூறியதாகப் பொருளுரைப்பாரு முளர்.

கரு. பிச்சியார் முதலாக வருபவைகளுக்கு மதுரைக் கலம்பகத்திற்கு யாங்கூறிய வுரையிற் பொருள் கண்டு தெளிக. தவக் கோலமுஞ் சூலமும் தரித்துச் சிவபிரானுக்கு ஒப்பாக விளங்கலாற் பிச்சியா ரென்னும் பெயர் தரித்தவர்களே. புரம்-உடம்பு. இக் காமனென்பான் தன்னை வருத்துதலின்.

கசு. காணும் காணும் என்னும் அடுக்கு இடப் பன்மை குறித்து நின்றது; எகாரங்கள் முதன் மூன்றும் வினா. ஆகா என்றவாறு. ஆடினும்-ஆட விரும்பினும். ஆடி-மணி கர்ணிகையில் நீராடி. பேயொடாட விரும்புதலென்றது சிவசாரூப்பியம் பெறுதலை. இவ்வாறன்றி மணிகர்ணிகைத் துறையைச் சிந்திக்க வேண்டும்: சிந்தித்தவழி எல்லாம் கங்கையே, யாவையும் அகிலேசரே, யாவுந் தடமதிற்காசியே. ஆசையிஃதொன்றே பின் பேயோடாட விரும்பினும் புகழ்ந்து பெறுவோமென்று கூறுதலும் பொருந்தும். மணிகர்ணிகை - கங்காநதியிற் காசியிலுள்ள ஓர் தீர்த்தத் துறை: சிந்து பூந்துறை போல.

கஎ. பெற்றம்-இடபம். பெற்ற மூர்தல் முதலிய நான்கும் சாரூப்பியம் பெற்ற அடியார்களுக்கு எளிதிற் கிடைப்பன. ஆயினும் அவர்கள் உலகங்களனைத்தையும் அழித்துப் படைக்கும் ஆற்றலுடைய ராதலில்லை. ஆதலின் சாரூபம் பெறுதல் பதமுத்தி யென்று கூறப்படினும் உண்மையில் அவ்வடியார்க்குத் தேவரீர் பதம் கைகூடுத லில்லை யென்றவாறு. இதனை 'உம்பர் பிரானுற்பத்தி யாதிகளுக் குரிய வுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமுரித்தே' யெனவருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க. 'அங்குமுயிர் பெறவே பாடு மடியவரார்' என்றற் றொடக்கத்தன வெல்லாம் ஔபசாரிக மென்க. சிந்தித்தல்-கை கூடுதல். சிந்திப்ப தில்லையே யெனப் பாடங் கொள்ளின் தொண்டர் ஊர்வது முதலியன வெல்லாம் பெறினும் உலகெலாஞ் செற்று மீளப் படைத்தல் யாண்டும் பெறுதலின்மையின் இதுகாலை கிடைத்த ஊர்தி முதலியவைகளைத் தரும் பதமுத்தியையும் அவர் வெறுத்துப் பொருளாகச் சிந்திப்பதில்லை யென்பது பொருளாகக் கொள்க. இவ்வாறின்றி 'அவர் வீடும் வேண்டா விறலினராதலின் தேவரீர் பதத்தைச் சிந்திப்பதில்லை. அவர் வேண்டின் அழித்தலும் படைத்தலும் எளியவே' யென்று பொருள் கூறுவாருமுளர். அது சித்தாந்தத்திற் கேலாமை மேற்காட்டியவாற்றா னறிக.

கஅ. இல்லாள் - மனைவி, வறியவனெனச் சிலேடையாற் பொருள்படும். இல்லான் அறஞ்செயச் செல்வர் இரக்கின்றவாறு வியப்பு என்றவாறு. செல்-மேகம். பாத்தல்-பரவுதல்.

ககூ. இது நற்றாயிரங்கல். விசுவேசருக்குச் சாத்திரம் வேதம், உபதேசம் அறம், இருப்பிடம் முத்தி நகரங்களுட் சிறந்த காசி, இன்னமிவை யெல்லாம் பிறர்க்குப் பயன்படுந் தன்மையனவாயிருந்தும் அவரது மனம் இப்பெண் மட்டில் வயிரக் கல்லாயிருந்தவாறு இரங்கத் தக்கது என்றவாறு. அல் ஆர் குழல் அளவுமா-இருண்ட கூந்தலையுடைய இப்பெண் ணளவுமா.

உ௦. ஒருபெண்-உமாதேவியார். ஓடுதல்-விரைந்து செல்லுதல்: 'மலர் மிசையேகினான்' என்றருளிச் செய்தனர் திருவள்ளுவநாயனார். உள்ளமாதனம்-நிலைபெற்ற மிகுந்த பொருளென்றும், உள்ளமாகிய சிறந்த பொருளென்றும் பொருள் படும்.

உக. வழுத்துதல்-தோத்திரஞ் செய்தல். வளமை-செழிப்பு. இறைவனே தனது முதலாசிரியனாகவும், வேத மந்திரங்களைக் கண்டு வெளியிட்டருளும் பெருமையும் இறைவனோ டொப்ப வீற்றிருக்குஞ் சிறப்பும் வாய்ந்த அகத்திய முனிவரே தனக்கு இலக்க

ணம் வகுக்கும் ஆசிரியனாகவும், நாமகள் அமிசத்தினராகிய நக்கீரர் முதலிய புலவர்களை தன்னைப் பேணி நூல்களாகிய கலன்களால் ஒப்பனை செய்யும் பணியாளர்களாகவும் கொண்டு தமிழ் விளங்குதலான் 'கொழுத்ததமிழ்' என்றார். கைச்சங்கம்-கையிலுள்ள சங்கு வளையல். ஆழி-விரலிலணிந்த மோதிரம். மாசில் முழுத்த தவம்-குற்றமில்லாத முதிர்ந்த தவம். மாலாயினேம்-மயக்க முடையே மாயினே மெனவும், சங்கமும் ஆழியுந் தாங்கிய உம்மைப் போல யாமுந் திருமாலாயினே மெனவும் சிலேடையாற் பொருள் கொள்க.

௨௨. தவம் முயலாமலே யென்க. பெருந்தடங் கண்ணி-விசாலாக்ஷியம்மையார் செயலாவது ஒன்றிலை-செய்ய வேண்டுவது யாதொன்றுமில்லை. துயில் செய்யும்-தூங்குங்கள். பயல்-பையல்: சிற்றான். புவனம் படைப்பவர்-பிரமதேவர். காசியில் வசிப்பதே தவமாவதன்றி அப்பதி யுள்ளார்க்கு முத்திபெறற்கண் வேறுதவமும் வேண்டற் படுவதில்லை யென்று கூறியவாறு.

௨௩. அறமூப்பினும் - மிகவும் மூப்படைந்தாலும். பெருவாழ்வு-சிவசாயுச்சியம். அகரச் சுட்டு உலகறி பொருளில் வந்தது. இந்திரதிரு-தேவேந்திர போகம். திருவும் அரசாட்சியுமாகிய இவ்விரண்டனையும் விடுத்துவிட்டு. கடு ததும்பு களத்தர்-ஆலாகல விடம் நிறைந்த கண்டத்தையுடைய விசுவேசர். தேடுவார்-தேடுகின்ற மெய்யன்பர்கள்.

௨௪. திருக் கோலங் கொண்ட - திருமகளின் வடிவழகைப் பெற்ற. எண்டிசையினும் உருக்கோலங் காணுதலாவது அத்தேன் மொழியாள் விசுவேசரது உருவெளித் தோற்றத்தைக் காணுதல். நீலக்குழல்-உமாதேவியார். வாண உணரா யென்பனவிளி. நீ எங்குமாகியிருப்பதனை அறிந்திலன்: அறிந்தானாயின் தன்னிடத்துமிருக்கின்றாயென மகிழு மென்றவாறு.

௨௫. குங்குமம் - குங்குமம், செந்நிறமெனவும்; பீர்-பசலை, பீர்க்கு எனவும்; பொன் - பெண், தங்கமெனவும்; மாற்று-நீக்கும்



வழி, தரமெனவும்; உரையாய் - சொல்லாய், உரைத்துப் பாரா யெனவும் சிலேடையாற் பொருள் கொள்க. காமவிகாரமுற்ற பெண்டிர்க்குப் பீர் பூத்தல் முதலியனவுள வென்க. கொன்றை தேனைப் பிழிந்து ஊற்ற அதனைச் சுரும்பு பருகுதற்குக் காரணமாயிருந்த பொன்போன்ற சடை. பண்ணவன்-தேவன்.

௨௬. பண் ஏர் வேதம்-பண்ணின் அழகு பொருந்திய வேதம்: இது சாம வேதத்தைக் குறித்து நின்றது. இப் பெண்நேர்-இந்தப் பெண்ணுக்கு நேராக: அஃதாவது இப்பெண்ணை இலக்காகக் கொண்டு என்றவாறு. ஒருவன்-ஈண்டு மன்மதன். அவன் கணை ஐந்தாவன-தாமரை, மா, அசோகு, முல்லை, குவளை யென்பன. இவை செய்யும் அவத்தைகளாவன-சொல்லும் நினைவும், வெய் துயிர்த்தல், வெதும்புதலும் துய்ப்பன தெவிட்டலும், அழுங்கலும் மொழி பல பிதற்றலும், அயர்ப்பும் மயக்கமுமாம். உள் நேர் நின்றாய் - உள்ளத்திலே நேர்ந்து நின்றாய். இன்னருளால் நின்றாயாதலாலென்க. அவ்வைந்தனுள் குவளை யொன்றும் இவள் கண்ணின் எதிர் நிற்றலாற்றாது தளர்ந்து ஒழிந்ததென்றவாறு. அஃதாவது அதுமட்டும் தன் தொழிலைச் செய்யலாற்றாது ஒழிந்ததென்பது.

௨௭. கழியும் தலைக்கலன் - இறந்த பிரமவிஷ்ணுக்களது கபாலங்கள். நுதல்விழி-நெற்றிக்கண். இது தீக் கண்ணென்பது வெளிப்படை. இக்கண் மன்மதனை யெரித்து ஒழித்தது. மற்றை இடக்கண் சந்திரனாயினும் அதுவும் நெருப்புக் கண்ணே. யாதினாலெனின் மன்மதன் எம்பிரானோடு செய்த போரில் உடைந்து ஒழிந்த படைகளாகிய எங்களை அக்கண் சுடுதலாலென்க. மன்மதனுக்குப் படை மகளிர். நெருப்புச் செந்நிறமாயினும் வெண்ணெருப்பென்றது சந்திரன் வெண்ணிற மாதலானும் தார்க்கிகர் நெருப்புக்கு நிறம் வெண்மை யென்று கூறுதலானு மென்க. நெருப்பு வெண்ணிறமெனத் தார்க்கிகர் கூறுவதனைத் தருக்க சங்கிரகத்து உருவகுணம் கூறுமிடத்துத் 'தேயுவில் விளக்கமான வெண்மை' எனவருதல்பற்றி அறிக.

௨௮. விழைகுவது - எம்பெருமான் விரும்புவது. அன்பரது அகம் சுகித்தலை யென்க. கஞ்சுகம் - சட்டை. அடிகட்கு உள்ள தொழில் மாலயம். மாலயம் - சர்வ சங்காரம். முனிவர்களது உள்ளம் ஆலயம். பணி என்பு அணி - திருவாபரணம் எலும்பு களின் கோவை. அடியேனை ஆட்கொள்ளுமாறு தாம் எற்றுக் கொள்வது எனது திருத்தொண்டினை. மழகளிறு - விநாயகப் பெருமான். ஈன்றவள் - உமாதேவியார். அவள் பதி-அவளுக்குத் தலைவராகிய விசுவேசர். இனி விழைகுவ தன்பரகஞ் சுகமே யென்பதனைச் சுகமே விழைவது அன்பரகமென வியைத்து இனி மையாக விரும்புவது பக்தர்களின் மனமென்று உரை கூறுவாரு முளர். மேல் 'முனி வோருள மாலய' மெனவருதலின் அவ் வுரை பொருந்தா தென்க.

௨௯. வண்ணம்-அழகு. மேனி அரும்புவனம் - திருமேனி அரிய புவனங்கள். 'உலகமே யுருவமாக' என்பது சிவஞான சித்தி. வாசம்-வசிக்குமிடம். வாசம் அரும்பு வனங்கள்-மணம் பெருகும் ஆனந்த வன முதலிய வனங்கள். (ஆனந்த வனம் காசிக்கு ஒரு பெயர்.) ஆலயம் மாதவர் அகம்-ஆலயம் பெரிய தவத்தினரது உள்ளம். ஞாலம் எழ்தரும் மாது-உமாதேவியார். அவர் அகம்-அவரது அங்கத்துக் கலந்திருப்பவர். மாலை மரு தரும் கொன்றை-மாலையாவது வாசனையைத் தருகின்ற கொன்றைப் பூ. தருமருக்கு ஐயர் தருவது ஒன்றை-தருமநெறிச் செல்பவர்க்கு எம்பெருமான் அருளுவது மோக்ஷத்தை. மனத்திருக்கு துயில் கண்ணில் தற்பர்-மனத்தின் குற்றங்கள் நீங்கிய் வெளிப்பட்டருளுவர். திருக்கு-காமவெகுளி மயக்கங்கள். தருவதையர் தருமருக் கொன்றையே யென்பதற்குத் தருமிக்கு எம்பெருமான் கொடுத்தருளியது ஓர் பொற்கிழியே யெனவும், யமனுக்கு எம்பெருமான் கொடுத்தருளி யது ஓர் உதையே யெனவும் பலவாறு கூறுவாருமுளர். அவை பொருந்தாமை சொற்கிடக்கை முறையாலறியப்படும்.

௩௰. திருகு சினம்-முறுகி வளரும் கோபம். கூற்று-யமன். கடைநாளில் திரை எழ் ஒன்றுப் பெருகும் முழுநீத்தமாவது-



யுகாந்த வெள்ளம். புணைதேடலாவது - அப்பொழுதும் இறவாது பிழைத்திருக்கவேண்டு மென்று விரும்புதல். கண் அரும்புதல்-ஆனந்தக் கண்ணீர் சொரிதல். மெய்பொடித்தல்-மயிர்க் கூச் செறிதல். பாவம்-தீவினை: கோட்பா டென்றலுமாம்.

௩௧. எடவிழ்த்தல் என்பது சிலேடை. பாவலரும் காவலரும் எடவிழ்க்கும் காசி-பாக்கள் விரிந்த நாவினையுடைய வித்து வான்கள் திருமுறையேடுகளை அவிழ்க்கின்ற காசி. பண்மலகக் கண்மலரும் காவலரும் எடவிழ்க்கும் காசி-(வண்டுகள் செய்யும்) இசைகள் பரவுமாறு தேன் விரிதுள்ள சோலையிலுள்ள பூக்கள் இதழ்களை மலர்கின்ற காசி. நிமலரும் கஞ்சக்கரத்தான்-நெருப் பைத் தாங்கிய தாமரைபோன்ற திருக்கரத்தையுடையவன். மறைக்கு நாயகமாம் அஞ்சு அக்கரம்-வேதங்களுக்கு நாயகமணி யாய் விளங்கும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். 'வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது நாதனும நமச்சிவாயவே' என்பது தமிழ் வேதம். யசுர் வேதத்தின் நான்காவது கண்டத்து நடுவிலுள்ள திருவுருத்திரத்தி னடுவில் 'நமஸ்ஸோமாயச' என்று தொடங்கிவரும் பகுதியில் 'நமசிவாயச' எனவருதல் இங்கே குறிக்கப்பட்டது. அகம்-இருப் பிடம்.

௩௨. ஆகம் சகமேழுமீன்றெடுத்தா யென்றது எம்பெருமா னுக்குச் சத்தியே வடிவ மென்று கூறியவாறு. மிக மேவும் எண்ணம் பரமே எமக்கு அளித்தல்-மிகுதியாகக் கொண்டுள்ள கருத்து அடியேங்களுக்கு முத்தியைக்கொடுத்தருளுதல். அம்பரம்-திக்கு. சிவபெருமான் திகம்பரராதலின் 'அம்பரமே கலை' யென்றார்.

௩௩. அப்பாலும் மாலானல் வழங்காரோ-மன்மதனை யெரித் தொழித்த பின்பும் வேட்கை மீதூருவதாயின் பாகங்கொடாரோ வெனவும் அப்பக்கமுள் திருமாலானல் கொடாரோ வெனவும் பொருள் கொள்க.

௩௪. அம்மனை-உலக மாதாவாகிய உமாதேவியார். தம்மனை-தமது தருமபத்தினி. எம் அனையாய்-எம்முடையதாயாகி. உலந் தால்-கெட்டால். சொம்-சொத்து.

௬௫. தூதுகொண்டுந் தோழமைகொண்ட தொண்டர்-ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி நாயனார். சொற்கொண்ட காது என்க. போதினாலும் பச்சிலையினாலும் பூசைசெய்திலர். தாம்-காசியில் உறைவோர். அவர் பூசைசெய்திலராகவும் காசிநாதர் தமது பதத்தை எது கொண்டு கொடுப்பர்: அவர் கருத்தின்னதென்பது யாம் அறிந்திலேம். அவர் கொடுப்பரேல் பிரம விஷ்ணுக்களிருவருக்கும் நெஞ்சம் என்ன பாடுபடுமென்றவாறு. எதுகொண்டு கொடுப்பர் என்பதற்கு காரணம்பற்றியே கொடுப்பர். அக்காரணம் எது வென்று யாம் அருந்திலேமென்றலும் ஒன்று. செய்திலம் என்பது பாடமாயின் யாம் பூசைசெய்திலம் எதுகொண்டு பதங்கொடுப்பர்: கொடார். ஆயினும் கவிதை கொண்டு ஆட்கொண்ட நாதராதலின் அவர் கருத்து யாதோ அறிகிலம் என்பது பொருளாகக் கொள்க. இப்பொருள் கோளுக்குத் தாம் அசையெனக் கொள்க. பிரம விஷ்ணுக்கள் நெஞ்சம் வருந்துதற்குக் காரணம் நாம் நெடுங்காலந் தேடிமுயன்றுங் காணவொண்ணாத பதத்தை இவர் யாதொரு முயற்சியின்றிப் பெற்றாரே யெனக் கருதுதல்.

௬௬. அகிலேசர் - விசுவநாதர். அவரது அன்பர்களுக்கு இரும்பைப் பொன்னாக்கினோ மெனவும், இருப்பிடம் பொன்னுலகமாக்கிக் கொடுத்தோ மெனவும் பொருள் கொள்க. பிறவாறுங் கூறுப. இமையோர்க்கு இருப்புக்கல்லைக் கனகமாக்கினோமெனவும், இருப்பிடமாகிய மலையை மேருமலையாக்கினோ மெனவும் பொருள் கொள்க. அண்ட முகட்டைப் பொன்னாக்கினோ மெனவும், அழகாயிருக்கச் செய்தோ மெனவும் பொருள் கொள்க.

௬௭. கொன்றையினையும் நிலாக் கொழுந்தினையும் பாந்தளின் நிரையினையும் திரை சுழித்தெறிந்தற்குக் காரணமாகிய கரையை மோதுகின்ற நீர்ப்பெருக்கினையுடைய கங்கை யென்க. வள்ள வாய் - வள்ளம் போன்ற வாய். வெண்டலை - முன்பு இறந்த பிரமாது மண்டையோடு. அடியையும் காலையும் சிறையையும் சூட்டினையுமுடைய அன்னவடிவம். கிஞ்சுகம் - முண்முருக்க மலர். சென்னி யானை - தலையாகிய யானை. வெண்



டலை சிரித்தெனப் பெருவியப்பு இழைக்குமென இயையும். ஆள் வழக்கு அறுக்கும் கண்-ஆடவர்கள் செல்லுதலைப் போக்கும் கண். 'ஆள்வழக் கொழிய நீண்ட வணி மலர்த் தடங்கண்' என்பது சிந்தாமணி. கவர்ந்து உண்டென-பறித்துக் கொண்டனவென்று. கமஞ்சூற் கமுகு - நிறைந்த சூலையுடைய கமுகு மரம். இற - ஒடியுமாறு. யாத்து - கட்டி. மங்குல் - மேகம். சிதறும் பொதும்பரென்க. ஐ வளி பித்து - சிலேஷ்ம வாத பித்தங்கள். எல்லை - பொழுது. மாமுதல் தடிந்த காமரு குழவி - முருகப் பெருமான். 'மாமுத றடிந்த மறுவில் கொற்றத், தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்' என்பது திருமுருகாற்றுப்படை. கரைதல் - ஒலித்தல். மானம்-அபிமானம். அழுக்கறுப்ப-பொறாமை கொள்ள. அழுக்கறுத்தற்குக் காரணம் 'நாம் இருக்கவேண்டிய மடித்தலத்து' இவனொருவனிருக்கின்றானே' என்னும் உணர்வு. நுண்ணிய துகிலாகிய தோகை யென்க. நாகிளந் தென்றல் - மீமிசைச்சொல். மறை முதற் சொல் - பிரணவம். 'ஓமென்று மறை பயில்வார்' என்பது தமிழ் வேதம்.

௬௮. புன் குரம்பை-இங்கே உடம்பு. பாந்தாமப் புக்கில்-மேலான முத்தியுலகமாகிய பெரிய வீடு. முத்தித் திரு - கைவல்லிய லக்ஷ்மி. துடி இருக்கும் இடை - துடியின்வடிவு போன்ற இடை. யான் கடவேன் கொல்லோ என்க. சோதியான் ஒரு சொல்லுமாம்.

௬௯. சோதி - திருமேனிச் சோதி. பரவுதல்-புகழ்தல். தத்துவம்-உண்மைப் பொருள். உணர்த்துகேம்-உணர்த்துவேம். எதினால்-எக்காரணத்தால். பசு-யாகபசு. படுத்தல்-கொல்லுதல். அன்பர்-கண்ணப்ப நாயனார். இறைச்சி மிச்சில்-மாமிச சேடம். அதில் இச்சை கூர் ஆதியார்-அதனில் விருப்பம் மிகுந்த காளத்தியப்பர். என்பதனை ஆதியார் அறிவரென்க. அது கிடக்க-அறமனைத்திலும் பசுப்படுத்து அனல் வளர்த்தல் சிறந்ததென்பது மறுமையிற் சிறந்த சுகமுண் டென்னும் ஆகமவளவைபற்றியே துணியப்படும்: ஆனால் மது அருந்தில் பரமசுக முண்டென்பது

காட்சி யளவையி லறியப்படும் என்பது உணர்த்துகின்றமையின் வினை மாற்றுப்பொருளில் வந்தது. அது மறுத்த அவையில்லை-மதுவை மறுத்த நூல்களில்லை. மது-கள்ளுர் தேறு மூணர்த்தலின், கள்ளை மறுத்த நூல்களும் தேனை மறுத்ததில்லை யென ஒற்றுமைபற்றிக் கூறினர். கட் குடியர்க்கு இறைச்சியும் வேண்டுமாதலின் இவ்வாறு கூறினர்.

௪௰. இல்வாழ்வு-மனைவியோடிருந்து செய்யும் அறநிலை. கதி-வீடு. இல்வாழ்வையே தரும் ஏழைபங்களுடைய காசிப்பிரா னென்க. ஏழை - உமாதேவியார். காசிப்பிரானது கடுக்கை. கடுக்கை - கொன்றைமாலை. வல்-சூதாடு கருவி. முலையையுடைய கொம்பு போன்றவளே. தந்தைதான் மழுவா லெறிந்து கொல்வார்-சண்டேச நாயனர். புறச்சமயியாகிய சங்கர முனிவரும் சண்டேச நாயனரது அருஞ்செயலை 'நசக்கோபி கர்தும் பத்ரோஹ லேசம் கதம் ப்ரியலே த்வம் ஜாரே கிரீச ததாஹி ப்ரஸர்ரோவ கஸ்யாபி காந்தா ஸுநத்ரோஹிணோவா பித்ருத்ரோஹிணோவா' எனச் சிவ புஜங்கத்தில் (சுலோகம். கக) துதித்தனர்.

௪௧. இரு நாழி-இரு நாழிநெல். அதில்-அதனால்.

௪௨. மகன்-குமரப் பெருமான். அப்பெருமானுக்கு மகட் கொடுத்த குடி-வேட்டுவக் குடி. அணங்கே உன்னுடைய கைக் குறியும் முகக் குறியும், வளைக் குறியும் முலைக் குறியுமுடையாருடைய புயத்தை உனக்குத் தரும் என்க. சிவ பெருமான் காமாட்சி யம்மையாரது வளைக் குறியும் முலைக் குறியுங் கொண்டமை காஞ்சிப் புராணத் தறிக.

௪௩. புயல் வண்ணக் கண்ணன்-கண்டுக் கண்ண னென்பது பண்பு குறியாது பெயராய் நின்றது: 'கரும் கண்ணனை யறியாமை நின்றேன்' என்னுந் திருக்கோவையாரிற்போல. புணர்ப்பு-தந்திரம். கயல் வண்ணக் கண்ணி-கயலின் வடிவம் கொண்ட கண்ணையுடையாள். செயல் வண்ணம்-செய்யவேண்டிய விதம். கண்டிலன்-அறியான்.



௪௪. நறவெண்-அஞ்சாமை. திருமுகம்-ஓலை: முகம் எனவும் பொருள்படுதலின் 'கண் தொட்டு' முதலியன கூறப்பட்டன. மூட்டு-பிணிப்புக்களாயுள்ள என்புத் திரட்சி. கொடிறு-கதுப்பு.

௪௫. வச்சை மாக்கள்-உலோபிகள். மூட அலவன்-வளை விளையுடைய நண்டுகள். வளைவாய்-நுழை வளையின் வாயில்.

௪௬. மழை-மேகம் பூந்தழையைக் கையிற் கொடுத்தேன். தழையினுன்னே-தழையால். உளங் கண்டுகொள்-தலைவியின் மனநிலையை நீ அறிந்துகொள். இது தோழி கூற்று.

௪௭. ஓர் பேதைப் பெண்-விசாலாட்சி யம்மையார். கணம்-பிரமத கணங்கள். மறைகள்-வேதங்கள். எண் கண்ணன்-பிரமன். கண்ணன்-திருமால். அமரர் பலர்-ஏனைய பலராகிய தேவர்கள்.

௪௮. பல்லாண்டு தம்மை-பல ஆண்டுகளை. படைத்த அத்தேவர்-தம் வாழ் நாளாகப்பெற்ற அத் தேவர்கள். பைம்பொன் வில்லாண்ட தோள்-மேரு மலைபோன்ற தம்முடைய தோள்களை. ஏமாப்ப-களிப்படைவ. சேர்ந்தக்கால் சில்லாண்டிருந்து சிவமாய்ச் செல்லும் நம் வாழ்வு, பல்லாண்டிருந்தும் இத் தேவர்கட்குக் கிடைத்திலதே யெனத் தோள் கொட்டி ஏமாப் பெய்துவவாயின. தோள் கொட்டி யெய்துப என்பதும் பாடம். அப் பாடத்திற்குத் தோள்களைக் கொட்டிக்கொண்டு சிவலோகத்தை யடையுமென்பது பொருள். பல்லாண்டு தம்மைப் படைத்த அத்தேவர்-பல ஆண்டுகள் தம்மைப் படைத்தவராகிய அந்தப் பிரமதேவ ரெனப் பொருள் கோடலுமாம்.

௪௯. என் வந்து வளைத்தாய் எமை - எதன்பொருட்டு இங்கே வந்து எம்மை வளைத்தாய். வினையே விளைந்த போர்-உனது தீவினைகளே போராக விளைந்தன.

௫௰. படலை-பூமாலை. மதங்கி-பாடுவிச்சி. எமக்கு உடலும் ஒன்றே உயிரும் ஒன்றே. இதற்கு உம்முடைய கண்வாளிரண்டுமே மிகை. அவையும் போதாமல் வேறு இரண்டுவா ளெடுத்து நீர் வீசத்தொடங்குத லென்னே என்றவாறு. தொடலைவளை - மாலை

போலத் தொடர்ந்தவளை : 'தொடலைக் குறுந்தொடி' யென்பது திருக்குறள். உடலும்-விளையுமாம்.

௫௧. பணி-சிவத்தொண்டு. பணி தொடங்காமலும் மலர் தூவாமலும் முத்தியைக் கொடுக்குங் களிற்றுரியா ரென்க. குடங்கை-உட்குழிந்த உள்ளங்கை. உண் கண்-மையுண்ட கண்.

௫௨. பொன்னங் தாது - பொற்றுகள். தாதாடுதல்-மகரந் தத்தில் விளையாடுதல். முன்னம் கடு கைமுகந்து உண்டார்-முற் காலத்தில் விடத்தைக் கையான் முகந்து அருந்தினார். கடுக்கை-கொன்றைமாலை.

௫௩. குன்றிரண்டு-இங்கே கொங்கைகளைக் குறித்து நின் றது. ஆகம் ஒன்று இரண்டானார்-திருமேனி யொன்றே ஆண் பெண்ணென இரு வடிவமுமானார். புயத்திலும் மார்பிலும் புரளுங் கொன்றைமாலை. பொறி-புள்ளி. வண்டுசெய்த தவம் ஈது என்று புகலின் யானும் அத் தவஞ்செய்து அவ்வாறு கொன்றை மாலை யைத் திளைக்கப் பெறுவே னென்பதாம்.

௫௪. மதிக்கொழுந்து-பிறைச் சந்திரன். ஈகும்-தோன்றும். உகும்-விட்டு நீங்கும். அப்போது-உயிர் நீங்கும் அக் காலத்தி லேனும். காசியிலிறந்த வுயிர் சிவ சாரூபம் அடைதலின் தலைவி இறந்தேனும் கொன்றைமாலை பெறுவா ளென்பதாம்.

௫௫. ஆமோ-தகுமோ. சாதனம்-ஆணை. வயிரவருடைய சாதனமாவது காசியில் பெண்கொலை அவமிருத்தியு முதலிய பழிகள் நிகழ்த்தலாகா தென்ற ஆணை. தேன் மோதுகின்ற கொன்றைமாலை. பரந்தாமம் - மேலான வீட்டுலகு. வெறுந் தாமத்தைக் கொடாத நீர்தாமா பரந்தாமத்தைக் கொடுப்பீ ரென்று கூறியவாறு.

௫௬. பரந்தாமம்-வீடு. வரம் தாமத்தைப் பின்தருவதை முன் வழங்காரேல்-மேன்மை பொருந்திய (கொன்றை) மாலையை இறந்த பின் தருவதை இறக்கு முன் தாராராயின். புரம் தாமத்தைப் பொருதரு காசி-மாடங்கள் மலைபோன்று விளங்கும் காசி. இரந் தாம் மத்தை-அவரது சடையிலுள்ள ஊமத்தை மலரை யாசித்



தோம். பின் தருவதை யென்பதனை முன் ருச-வது செய்யுளிற் கூறியதுகொண் டுணர்க. மத்தம் - அம் குறைந்து மத்தென நின்றது.

௫௭. தேன் ஒழுக்கின்-தேனொழுக்கைப்போல. உகிர் வடிம்பு-நகத்தின் நுனி. மாற்றம்-சொல். பழிச்சுதல்-புகழ்தல். இலம் பாடு-வறுமை. அலைப்ப - வருத்த. சிதலை - கறையான். மசகம் உலங்கு என்பன கொதுகின் பேதங்கள். குடவன்-குடவுண்ணிப் பூச்சி. 'சாம்பல் கண்டறியா ஆம்பி பூத்த, எலிதுயி லடுப்பு' என் பதனை 'ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின், ஆம்பி பூப்ப' என்று வரும் புறநானூற்றுச் செய்யுளோடு ஒப்பிடுக. ஆம்பி-குடைக் காளான். மிக்க சிறியோரென்பது தோன்றச் 'சிறுசிறார்' என்றான். கடவுள் நல்லூழ் தெய்வத் தன்மையையுடைய நல்லஊழ்: ஆதி தெய் விக மென்றவாறு. உந்த-செலுத்த. தேம் பழுத்து அழிந்த-தேன் முதிர்ந்து வழிந்த. படப்பை-இங்கே நிலம். கற்பகக்கொடி-கற்பக வல்லி. முடவுப்பலவு-வளைவினையுடைய பலாமரம். கூன் மிடை கிழவன்-கூன்பொருந்திய கிழவனாகிய களைக் கூத்தன். சுரபி-காமதேனு. தரு-கற்பக விருக்ஷம். இருமை-இம்மை மறுமைப் பயன். வளமை-செழிப்பு. இரு நிதிக் கிழவன்-குபேரன். எக் கறுப்ப - பரிபவமடைய. சென்று பாடலும் பெற்றன னென முடிக்க.

௫௮. வண்டுகாள், விசுவேசரது புயத்திற் புரளும் கொன்றை தனது இதழ்க்கைகளால் ஊட்டும் தேனை விருந்தாக உண்டு மகிழ்ந்து என்னுடைய குறையை அப்பெருமானது திருச்செவியிற் கூறுக என்றவாறு. குறை-ஆகவேண்டுங் காரியம். இருவர்-அசுவ தரன், கம்பளன்.

௫௯. கூற்று அடி-யமதண்டம். செழியன்-இங்கே அரிமர்த் தன பாண்டியன். மாறு அடி-பிரம்படி. இது திருவாதவூரடிகள் பொருட்டு நிகழ்ந்தது. இதனை 'இத்தனை யெல்லாஞ் செய்த திவன்பொருட்டு' எனவரும் திருவிளையாடற் புராணச் செய்யுளா

லறிக. சேற்றடி-சேற்றில். போற்று-போற்றுவாயாக. அடிக்கு அஞ்சலிசெய்-திருவடியில் வணக்கஞ் செய்வாயாக.

௨௦. இலைமுகம் குழைத்த பைம்பூண் - இலை வடிவமாகச் செய்யப்பட்ட பசிய அணிகலம்: 'இலைமுகப் பைம்பூ ணிறை' யென்றார் நீதிநெறி விளக்கத்தும். ஏந்துதல்-உயர்தல். இளமுலை-உமாதேவியார். மலைமுகம் குழைத்த-மலையின் உருவத்தை வளைத்த. சிலைமுகக் கணை-வில்லிலே பொருந்திய அம்பு. கணைக்கு உணவாக அருந்த வென்க. திங்கட் கலைமுகம்-கலை நிரம்பிய திங்கள் போலும் முகம். களங்கமாய் விளங்குமாறு-அம் மதிகளங்கம் போன்று விளங்கும் விதம். விளங்குமாறு கண்டிலர்கொல் என்று முடிக்க.

௨௧. சிவபெருமானுக்கு விடை திருமாலாதலாலும் அத் திருமால் கன்றால் விளவெறிந்தாராதலாலும் 'விளங்கனி யொன் றெறி வெள்விடை' யென்றார். விரக அனலம்-காமத்தீ. தலைவன் பிரிந்தவழி தலைவி பிரிவாற்றா திருந்தமையும் அவன் தலைவியைக் கண்ணிற் பிணித்து மனத்துட் கொண்டமையுங் கூறியவாறு. வளங்கன் பிருந்த வயனிலங்கள். உமாதேவியாரது கையிலிருக்கும் கிளி களம்பழ மென்று பார்க்கும் கறைக்கண்டத்தை யுடையானே என்க.

௨௨. கண்டம் மட்டும்-கழுத்து மாத்திரம். பாதி பசத்தல்-உமாதேவியார் பாதிப் பாகத்தில் வீற்றிருத்தல். சிவபெருமானுடைய சாரூபபதத்தைப் பெறுபவர் கோடியின் மிகுதியாக இருக்கின்றார்கள். அவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் தலையாக முன்னிருந்த பிரம கபாலங்க ளெல்லாஞ் செலவான பிற்பாடு எனது தலையின் மேற் பாரம் வருமென்னும் கவலையினாற் பிரமதேவர் துயிலார் என்க. திருமால் துயிலவும் பிரமதேவர் துயிலாரென்னும் கொள்கை யதிசயம் அப் பிரமபதவியை அநுமான் விரும்பியவாறு வியப்பென்றவாறு. அவர் பதம்-பிரமபதம். சமீரகுமாரன்-வாயு புத்திரனாகிய அநுமன்.



௨௩. கும்பம்-தனங்களை யுணர்த்திற்று. இதழித் தெரியல்-கொன்றைமாலை. பைம்பொன் உரு - பசிய பொன்னிறமான மேனி. முலையும் மேனியும் பசலை பாய்ந்தன. பைங் கிளிக்குப் பீர் பூத்தன வென்க.

௨௪. கிஞ்சுகம்-முண் முருக்கமலர். பெண்பிள்ளை-உமாதேவியார். அகிலேசர் கங்காதேவியாரை வைத்த திருச்சடையிற் பிறையை மட்டும் வைத்திருப்பரேல் அத் தேவியார் இப்பொழுது காமானலம் வருத்தும் இவள்போன்று வருந்துவர்: அவ்வாறு வருந்தா வண்ணம் எம்பெருமானார் பிறையோடு கொன்றை மாலையையும் வைத்தா ரென்க. அவ்வாறு இவட்கும் கொன்றை மாலை தந்தருளின் இவளும் வருந்தாதிருப்பாள் என்றவாறு. இது கற்றுயிரங்கல்.

௨௫. கேட்டிளங் கொங்கை-அழகிய இளைய கொங்கையை யுடையாளாகிய இப் பெண். தோட்டிளங் கொன்றை-இதழ்களை யுடைய அழகிய கொன்றைமாலை. ஆட்டு - ஆடுதல். தலைவன் வாராமையால் தலைவி வருந்திக் கலுழ்கின்றாள். இவ்வாறு கண்ணீர் வெள்ளத்து மூழ்கித் தன்னையே நினைந்து வருந்தும் இவள் செயலை அறிகின்றிலரே யென்றவாறு.

௨௬. நமன் தமர் வழிக்கொண்டார்-நமனுடைய தூதர்கள் புறப்பட்டார்கள். திரை முதிர்தலால் உடல் சுருங்கிற்று. இரங்கல-வருந்ாதே. ஒழுகு ஒளிமுடி - வழிகின்ற பிரகாசத்தினையுடைய திருமுடி. கங்கையின் கரையில் பிறைச் சந்திரனை யணிந்தவரது காசி நகரத்தை அடைதி: இதுவே செயல்.

௨௭. அகரமாயினான்-அகர வுயிர்போல நிற்பவனாகிய விசுவநாதப் பெருமானது. நிகரில் காசி-ஒப்பில்லாத காசிப்பதி. நகரமாய்-(தான் ஒப்பில் நகரமேயாயினும்) உலகிலுள்ள ஏனைய நகரங்கள் போலத் தானும் ஒரு நகரமாக வைத்து எண்ணப்படுவதாய். மறைச் சிரம் ஆனது-வேத சிரசாகிய உபநிடதம் போன்று விளங்குகின்றது என்க. இறைவன் அகர வுயிர்போல் விளங்குதலை 'அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு' என

வரூஉந் திருவள்ளுவப் பயனாலும், 'அகர வுயிர்போலறிவாகி யெங்கு, நகரிலிறை நிற்கும் நிறைந்து' எனவரூஉந் திருவருட் பயனாலு மறிக. இனி 'மகாமாயினான்' என்பது பாடமாயின் ஆணவ மலத்தைப் போக்கினவ னென்பது பொருளாகக் கொள்க. மகாரம் ஆணவ மல மென்பதனைச் சித்தாந்த நூல் வல்லார்வாய்க் கேட்க. மாயினா னென்பது அந்தர்பாவிதணிச் செனப்படும் பிறவினைப் பொருளில் வந்த தன்வினை.

௬௮. இல் ஒன்று-ஓரிருப்பிடம். வல் ஒன்று பூண்முலை-சூதாடு கருவிபோன்ற பூணணிந்த கொங்கை. அல்லொன்று கூந்தல் - இருட்சி பொருந்திய குழல். அணங்காக-விசாலாக்ஷி யம்மையார். ஆடகப் பொன்வில் - மகா மேரு. இது தலைவி யிரங்கல்.

௬௯. நெடுங்கண் விண்ணமிர்தும் நஞ்சாம் உண்ணமிர்தத்தை, விடமும அமிர்தமாம் நஞ்சோடு உதவலா லென்க. இக் கண் உதவும் அமிர்தத்தோடு விண்ணமிர்தத்தை ஒப்பு நோக்கிய வழி அவ் விண்ணமிர்தம் நஞ்சென வெறுக்கத் தக்கது: இக்கண் உதவும் நஞ்சினோடு ஆலாகல விடத்தை ஒப்பு நோக்கிய வழி அவ் வாலாகலவிடம் அமிர்த மென விரும்பத் தக்கது என்றவாறு. இங்கே கண் தரும் அமிர்தம் தலைவியது சிறப்பு நோக்கு: அது தரும் நஞ்சு பொது நோக்கு. காதலை வெளிப்படுத்தும் சிறப்பு நோக்கு இன்பஞ் செய்தலின் அதனை அமிர்த மென்றும் அஃதில்லாத பொது நோக்குத் துன்பந் தருதலின் நஞ்சென்றும் கூறப் பட்டன. இவ்வாறு பொருள்கோடல் கைக்கிளைத் திணைக்குப் பொருந்திய தொன்றென்பதனை 'இருநோக்கிவளுண்கண்' என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய வுரையான் அறிக. இவ் விரண்டும் அளித்தலால் கண்கள் கடலொடு பிறந்தனபோலு மென்க. தடம் மலர் காசி-தடாகங்கள் தாமரைப் பூக்களை மலர் கின்ற காசி: தடாகங்கள் விளங்கும் காசியுமாம்.

௭௰. கண்ணொடு-கண்ணும். உள் - மனம். எண்பொருள்-மதிப்புவாய்ந்த பொருள்: அப்பொருள் விசுவேசர். அண்ணல்-



பெருமை. அவிமுத்தம் பொருள் நண்ணும் நகரானது என்க. ஒண்பொருளும் பாடம்.

௭௧. முத்தாடுதல் - முத்தமிடுதல். இளஞ்சேய் - முருகப் பெருமான். பொது-நடுவு நிலைமை. மன்று: வாரம்-பக்ஷபாதம்: அன்பு. எல்லோமும்-உயிர் வருக்கத்துள்ள யாங்களெல்லாம்.

௭௨. உண்டு - உணவாகக்கொண்டு. முகிலேழாவன:—சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ண மென்பன. வாய்மடுத்தல்-உண்ணுதல். மூலம்-அடி. புவனம் அவையேழு-மேலுலகமேழு. பிலமேழு - கீழுலக மேழு. அடைவு அடைவு-முறை முறையாக. கொண்டல்-மேகம். மணி-மாணிக்கம். இவைபோன்ற வடிவுடையார் திருமால். முண்டகம்-தாமரை. அதனை இடமாக வுடையவன் முண்டகக் கண்ணன்: பிரமன். குஞ்சிதம்-வளைந்தது. குஞ்சிதச் செஞ்சரணம்-தூக்கியாடும் இடது திருவடி. குடில கோடீரம்-சடையினையுடைய திருமுடி. குடிலம் - வளைவுமாம். காசியிலடைந்தோர்க்கு முத்தியாதலின் அதில் 'அடையாமற் பரமபதமடைவிப்பன்' என்பது கூறப் பட்டது.

௭௩. விரை குழைக்கும் மழை-வித்துக்களை முளைக்கச் செய்யும் மழை. விண்டு அலர்-விரிந்து மலர்கின்ற. விடலை-இங்கே திருமாலை உணர்த்திற்று. அரை - பக்கத்துறைகள். குழைக்கும்-தளிர்க்கும். அறல் - கருமணல். வரை குழைக்கும் முலை-வரைகளைத் தோற்பிக்கும் கொங்கை. இக் கொங்கைகள் குழைந்தலா… குழைந்த திரள்தோ ளென்க. அத் தோளினது அழகினுக்… முன் தான் (மேருமலை) முடி வணங்கிய தென்னுமாறு. கனை குழைக்கு மலை-எல்லை கடந்த மேருமலை. குழைத்த-வளைத்த.

௭௪. கழைக் கரும்பு: கழையாகிய கரும்பு இது மன்மதனது வில். அக்கணத்தில்-அவன் வளைத்த அளவில். அம்பொற்குழைக் கரும்பு - அழகிய பொற் குழையை யணிந்த இப்பெண். குழைந்திட்டது-குழைந்தாள். முழைக் கரும்புற்றரவாட - முழையாகிய புற்றிலே அரவு ஆட.

௭௫. கண் அஞ்சனம்-கண்ணிலே தீட்டப்பட்ட மை. நீர்-கண்ணீர். கடல்செய்ய நின்றாள்-கடல்போற் பெருகுமாறு வருந்தி நின்றாளாகிய இவளை. உன் நஞ்சு-மனம் ஊர்ந்து. ஊர்ந்து நஞ்சென்றாயது போலி. அனைத்துக்கும் அஞ்ச வைத்தார்-உண்ணும் சோற்றுக்கும் அஞ்சுமாறு செய்தார். அஃதாவது இவட்குச் சோறு நஞ்சுபோன்றிருத்தலின் இதனையான் எவ்வாறுண்பே னென்று ஏங்குமாறு செய்தா ரென்றவாறு. உம்பர் ஓட்டெடுப்பப்பண் நஞ்சம்-தேவர்கள் வேகம் பொறுக்கலாற்றாது ஓடுமாறு செய்த ஆலாகலவிடம். அதனை விரும்பும் உணவாகக்கொண்ட பரமரென்க. பச்சைப் பெண்-உமாதேவியார். அவர் அஞ்சுமாறு அரவத்தைக் கட்டியாடிய பிஞ்ஞகர். பிஞ்ஞகம்-தலைக்கோலம்.

௭௬. இது சந்திர உதயங்கண்டு வருந்திய தலைவி தூதுவிடுமாறு கூறுதல். கங்குலாகிய பகடு. பகடு - யானை. கலைமதியாகிய யமன். முருகு-வாசனை. முத்தர் - சிவன் முத்தர்: இனிக்காசியிலுள்ளார் முத்தி பெறுதல் ஒரு தலையாதலின் துணிவு பற்றி அவரைக் கூறியதுமாம். நெக்கு - கனிந்து. உடைந்து - தளர்ந்து. உருகுபத்தர் - கரைகின்ற திருத்தொண்டர்.

௭௭. நான்மறைச் சிரம் - நான்கு வேதங்களின் முடிபாகிய உபநிடதம். ஐந்து - ஐந்து அவாவை யுணர்த்திற்று: புலன்கள் ஐந்தாகலான் அவாவும் ஐந்தாயிற்று: உம்மைவிரிக்க. கிளைவளையவள் - விசாலாக்ஷியம்மையார். குளைத்தல்-ஒலித்தல். இருங்கடல்-பெரிய கடல். விரோதாணிமுதற் பலஅணிகளிருத்தல் காண்க.

௭௮. மானம் நிறை நாணாகிய இவற்றை முறையே சந்திரன் குயில் குழலிசை யென்பன கவர்ந்து உண்ணுகின்றன: ஆகுல் மன்மதனது கணைகளுக்கோ எனது உயிரொன்றுமே இலக்காகின்றது: யான் என்செய்கே னென்றவாறு. இவ்வாறன்றி உம்மைக் காதலித்த பெண்டிர் பலரிருக்கவும் மன்மதன் கணைக்கு யான்மட்டுமோ இலக்கென்று உரைப்பாருமுளர். 'வானமொன்று' முதல் விரோதவிசுவரூபங் கூறியது. வானமே பெரிய திருமேனி,



அண்ட கோளமே கிரீடம், பாதலங்கள் ஏழும் தாள், மலை யெட்டும் புயங்கள், மூச்சடைக்கும் மூக்குகள். காளம் - கஸ்தூரி.

௭௯. அகில அண்டமாய் - எல்லா அண்டங்களாய்: இஃது இறைவனது விசுவரூபங் கூறியவாறு. அகண்டமான-விசுவாதிக ஞானம். நகில்-நகிலம். சின்ன இடை - சிற்றிடையாளாகிய பிராட்டியார். விடை திருமாலாதலின் 'திருநாயனுஞ் செங்கமல மன்னவிடை' யென்றார்.

௮௦. குழைத்த-துவைத்த. கழை - கரும்பு: இது மன்மதனது வில். அக்கழையினின்றும் சிதறிய முத்துக்கள். ஏறு உண்டு-ஊதைத்து. எழுவுண்டு - வினைத்தொகை. நாண் - வில்லின் நாண். தசும்பு - கலசம். விசும்பு இரவியென - விண்ணில் விளங்கும் ஞாயிறென்று கருதி. பொற்றசும்பை இரவி யென்று கருதித் தாமரைகள் மலர்கின்ற காசி. இச் செய்யுள் சேர்வையணி. வண்டொலியையே சேவொலி யென்று கருதி மணங்கலங்கும் இவட்கு மெய்ம்மையாக நாவொலி யெழுதல் அம்புபாய்தல் நிகழுமாயின் யாதுவிளையுமோ வென்றிரங்கியவாறு.

௮௧. முத்தியை விரும்பினோர் சாரூபமாகிய பதமுத்தியும் பெறுதலுண்மையின் 'முடைத்தலையோ டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பினர்' என்றும், பதமுத்தி பெற்றபின் பரமுத்தியும் அடைதலுண்மையின் 'கேவலமே பலமாகப் பலித்ததுவே' என்றுங் கூறினார். மோட்டு உடற்பாரம் - பெரிய உடற்சுமை. முடைத்தலை - பிரம விஷ்ணுக்களது தலையைக் குறித்தது. அத்தி - அது எலும்பு. சாம்பல்-திருநீறு. சிவசாரூபம் பெற்றோர் இத்தலை முதலியவைகளைத் தாங்குதலால் அவர் இவற்றின் பொருட்டே தம் உடற்பொறையை ஓம்பினர்: இதுவே யன்றி வேறுகிடைப்பது அவர்க்கில்லை போலு மெனின் சிவபத்திக்கு முடிந்த பலமாகக் கேவலம் கிடைத்தது என்றவாறு. கேவலம் - இழிவு, முத்தி. பலம் - கனம், பயன். திருவாரூர் நான்மணிமாலை ௨௩-வது செய்யுளுரையும் காண்க.

௮௨. பல்வேறு உருவம் - 'ஒன்றொடொன் றொவ்வா வேடம்.' வில்லும் அதிற் பூட்டும் அம்பும் வேறு வேறில்லை: பூ வொன்றே. அல்வேறல்லாப் பூங்குழல் - இருளோடு தன்னிடை வேற்றுமையில்லாத கூந்தல். சொல்வேறு - சொல்லவேண்டியது வேறு. அநங்கன் - உருவமில்லாதவன்: மன்மதன்.

௮௩. இச் செய்யுளின் முதலிரண்டடிகளின் பொருளை முன் பண்டார மும்மணிக்கோவை ௩-வது செய்யுளுக்கு யாம் கூறிய வுரையிற் காண்க. காசிப்பிரான் - விளி. உடம்பென்று சொல் லப்படுவது எலும்பும் ஊனுமன்றி வேறில்லை யென்று கண்டு அவ் வுடம்பின் மேல்வைத்த பற்றினை நீக்கினோர் வீட்டின்பம் பெற்று மகிழ்வர்: அவ்வாறன்றி உடம்பென்பது தெவிட்டாத இன்பத்தைத் தரும் தேனென்று பற்றினை நீக்காதோர்க்கு அநுபவிக்குமாறு கிடைப்பது கொடிய நரகமே யென்றவாறு. 'ஊனைக்காவல் கை விட்டுன்னை யுகப்பாருணர்வாரே' என்பது சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம். இச் செய்யுட் கிவ்வாறன்றி 'காசிப்பிரானது திருமேனி பிரம விஷ்ணுக்களது எலும்பும் மாமிசமும் பொருந்திய தென்று அப்பிரானை அணுகாது அகல்வோர் பிறப்பிறப்புக்களிற்பட்டு உலகபோகங்களிற் களிப்பார்கள்: அவ்வாறன்றி அப்பிரானது திருமேனி அங்ஙனமாயினும் அது தெவிட்டாத இன்பத் தேனென்று கருதி அடைந்தோர்க்கு அப்பிரான்றரும் ஆனந்தானு பவமன்றி வேறு அநுபவிக்குமாறு கிடைக்கும் பொருள்களெல் லாம் கொடிய நஞ்சுபோன்று வெறுக்கப்படும் பொருள்களேயாம்' என்று பொருள் கூறலுமாம். இனி 'உண்ணக் கிடைப்பது நீவிடமே' யென்றது பிரான் உண்டது விடமாகலின் அவருருவம் பெற்றார்க்கும் அதுவே உண்ணக்கிடைப்பதென உபசரித்துக் கூறப்பட்டதென்றலுமாம். நீவிடம்-நீவுகளாகிய கண்ட மெனப் பட்டு மிலேச்ச தேசங்கள் என்றலும் பொருந்தும்.

௮௪. ஆலாகல விடத்தை உமக்குக் கொடுத்துத் தாம் அமிர் தத்தை உண்ணப்பெற்ற தேவர்கள். அவர்கட்கு ஒளித்துத் திரித லாவது அவரறியாதவாறு மறைந்து நிற்றல். பாவுதல் - பரத்தல்.



அவனது நாவினை இடமாகக்கொண்டு முகங்கள் நான்கிலும் நடிக் கும் குதிரை - வேதம். அதனை விட்டு இடபத்தின் மீதேறிக் காசி வீதியிலாடல் செய்யுமென்க. முகங் கர நான்கென்பது பாடமாயின் முகங்கள் நான்கிலும் கரங்கள் நான்கிலும் நடிக்குங் குதிரையென்று பொருள் கொள்க. வீதிக்கே - 'மணற்கின்ற நாணற் கிழங்கு' என்றாற்போல உருபுமயக்கம்.

௮௫. ஆனந்த வல்லி - விசாலாக்ஷியம்மையார். ஆனந்தக் கான்-ஸ்ரீகாசி. ஆனந்தக் கூத்து-ஆனந்தத் தாண்டவம். அருட் கடல்-சிவபெருமான். ஆடும்- முற்று. இளைத்து-வருந்தி.

௮௬. இது தலைவி யிரங்கல். வீரமென்பது வில்லையுடைய மன்மதனுக்கே குணமாக விருக்கின்றது: நீர் அவனோடு பகை கொண்டிருத்தலால் ஆம் பயன் யாதுமில்லை என் வருத்தங் கண்ட பிறர் இவ்வவிமுத்தருக்கு இவள்பால் அன்பென்பது இல்லையே யென்று தூற்றுகின்றாராதலால் உமக்கு என்பால் உரிமையாவது யாது? பதி வாழ் அவிமுத்தரே - பதியாகவாழும் அவிமுத்தத்தை யுடையவரே. இருந்து - வினையெச்சத் திரிபு. இனி இதனைப் பாங்கி கூற்றாக்கி 'வரையாமையாகிய கொடுமையை நீர் கொண் டிருத்தலா லாம்பயன் யாதுமில்லை' யெனப் பொருள் கோடலு மாம்.

௮௭. முத்துக்களை நிரைத்தாற்போன்ற சிறு பற்களையுடை யீர். முளரிக்கணையான்-தாமரையாகிய அம்பையுடைய மன்மதன். தாமரை ஏனையவற்றிற்கும் உபலக்கணம். நெருப்புக் கணையென் னுந் தொனிப் பொருளுங் கொள்க. திசைப்பத்தும் - பத்துத் திசைகளிலும். திசைகள் பத்தாவன-நேர்திசை நான்கும், கோணத் திசை நான்கும், மேலும் கீழுமென்பன. ஒரு திக்கு-ஒரு புகலிடம்: ஒரு திசை. உடு நிரை - நட்சத்திரக் கூட்டம்.

௮௮. யமனது அடிக்கு வருந்தி குறை கூறிக்கொண்டு என்க. குலமறை - சிறந்த வேதங்கள். போற்று அடிக் கஞ்சம் - துதிக் கின்ற திருவடித் தாமரை. தஞ்சமாக அடைந்தோம். சேற்றடி - சேற்றில். கஞ்சவயல்-தாமரைகள் உண்டாகிய வயல்கள். செருப்

படி - கண்ணப்ப நாயனார் செய்த திருத்தொண்டில் நிகழ்ந்தது. மாற்றடி - அரிமர்த்தன பாண்டியன் கொடுத்தது. வில்லடி-அருச்சுனன் கொடுத்தது. யமனடி ஒன்றனுக்கு அஞ்சி உம்பாலடைந்த எமக்குப் பல அடிகள் நேருவதாயின் யாம் யாரைச் சரணை அடைவோமென்றவாறு. இது சிவபெருமானது காருணியத்தை விளக்கியவாறு.

௯. இல்லை யென்பது இலையோர் மருங்கிலே - சிவபெருமான் விளங்கித் தோன்றுதலில்லை யென்று கூறப்படுவது உலோபரிடத்திலே. இல்லையோர்-இரப்போர்க்கு இல்லை யென்று கூறுவோர்: அவர் உலோபிகள். எல்லாத் தருமங்களும் ஒருபக்கத்திலே. ஒருபக்கமென்றது இங்கே இடது பாகத்தைக் குறிக்கின்றது: உமாதேவியார் அறம் வளர்த்தவளாதலால் இவ்வாறு கூறினார். எம்பெருமான் கொல்லுகின்றது யாவனை யெனின் அடியவர்கள் மேற் சீறி எழுந்துவரும் இயமனையே. கூறும் மாற்றம் - எம்பெருமான் சொல்லும் மொழி. எழுத அரும் கூற்றம் - எழுதாக் கிளவியாகிய வேதம். வில்லும் அதிற் பூட்டும் நாணும் முறையே பொன் மலையாகிய மேருவும் வாசுகியாகிய பாம்பும். எம்பிரான் விடுகின்ற அம்பிற்கு நாணத்தையுடைய திருமகள் வசிக்கும் மார்பு உண்டு. மல்லல் - வளப்பம். என்பு அது-எலும்பு: அது பகுதிப் பொருள் விகுதி. இனி இல்லை யென்பதிலையோர் மருங்கிலே யென்பதற்கு யாங்கேட்டோர்க்கு இல்லை யென்று கூறுதல் இறைவர்பாகமாகிய ஒரு பக்கத்தில் இல்லை யென்று பொருள் கூறலுமாம். பிறவாறுங் கூறுப.

௧௦. பணிக்கும் பணி என் என்று இரந்தபோது - தேவரீர் கட்டளையிடும் கட்டளை என்ன வென்று யான் யாசித்தபோது. பணிக்கும் - பாம்பாகிய அணிகலனுக்கும். பணிதிக்கும் மேக்கு என்று ஆர் என்பு அணிக்கும் - அணிகலனினுஞ் சிறந்தது என்று கருதி ஆர்த்திருக்கும் எலும்பு மாலைக்கும். பணியாய் இருந்தோர் என் பணிக்கும் - உண்மைத் தொண்டு பொன்றிருந்ததாகிய என்னுடைய தொண்டிற்கும். இன்பு ஆம் அகிலேசர்க்கு - விருப்பந் கொள்ளும் விசுவநாதப் பெருமானுக்கு. என் - அருளிச்செய்வது என்ன. யான் இரந்தபோது அப்பெருமான் அருள் செய்வது என்ன? (அப்பெருமானார் விருப்பு வெறுப்பில்லாதவராதலின் அவ்வப் பணிக்கு இயைந்த பயனருளுவர்) என்றவாறு. பணிதி-ஆபரணம். மேக்கு - சிறந்தது.



௧௧. கேயூரம் - தோளணி. மாயூரம் - மயூரம் மென்பது நீண்டது: மயில். அதனை யூரும் மைந்தன்-முருகப் பெருமான். நீத்தன்மை பொருந்திய அழகிய வேல். அடித்தொழும்பு - அடிமை.

௧௨. குருகு-கைவளை, நாரை. சுகம்-இன்பம், கிளி. அனம்-அன்னப் பறவை, உணவு. படிவர் உளத்து - ஞானிகள் உள்ளம் போல. உடையார் - உடையவர்; ஆடையினர்.

௧௩. கலை - ஆடை. ஒழுகும் பணி - செய்தல் வேண்டுந் தொழில். விரும்பு அணி - விரும்புகின்ற ஆபரணங்கள். வளை - கங்கணம். கைவளை - வளையல். இவள் இறந்தாளாயினும் உமது மூத்தியை யடைதல் ஒருதலை யாதலின் அப்பொழுதும் மேலான கொன்றை மாலையை விடுவாளல்லளென்றவாறு. முத்தி யென்றது இங்கே சாரூப்பியத்தைக் குறித்து நின்றது.

௧௪. வேதத்துரகம் - வேதமாகிய குதிரையை யுடையவர். விரகு-இங்கு இயற்கை யுணர்வைக் குறித்துநின்றது. உரகப் பரிபுரம் - பாம்பாகிய சிலம்பு. இவருடைய சேவடிக்குச் சேராதாரே தமது இயல்கெட்டு யமனது மோதுதலைக் குலைந்து கண்டாராவர். இனி இவரது சேவடியைக்கண்டவர் யமனது மோதுதலுக்குப் பொருந்தாரென்றும், யமனைக் கீழ்ப்படுத்தினாரவரென்றும் பொருள் கூறலுமாம்.

௧௫. குலைவளைக்கும் - குலை தள்ளிய. முழுத்தாறு - பெரிய குலை. பிரானது புயமென்க. மேருமலையையும் வளைத்த புயத்தினது ஆண்மை என்ன பயனுடைத்தாம். தெவ்-பகைவன்: இங்கே மன்மதன். தன் படைவீடாகிய காசியை மன்மதன் தனது அமர்க்களமாகச் செய்யின் காசிப்பிரானது புயத்தாண்மை என்னும்.

௯௬. மருங்கிலாத அவள் - இடையில்லாத அவள்: உமாதேவியார்: வேறொருத்தி - கங்காதேவியார். மோகினியின் உருவமாய் நடமிடு இங்கு இவன் - திருமாலாகிய மோகினியை யுணர்த்திற்று. பிள்ளை - இங்கே ஐயனார். நாவளைத்தல் - நாக்கினைவளைத்துப் பழிச்சொல்லைச் சொல்லுதல். மடிமடை - மடியாகிய மடை. கைதை - தாழை. அகத்தியமுனிவராற் பருகப்பட்ட கடலை நிரப்புதற்குக் கங்கை வந்தாளென்னும் வரலாறு கூறப்பட்டது: கற்புமிக்க நதி தன் கணவனாகிய சமுத்திரராஜனுக்குப் பாலுஞ்சோறுமிட்டு வயிற்றினை நிரப்புகின்றாளென்பதுந் தொனிப்பது காண்க. குண்டு அகழி-ஆழத்தினையுடைய அகழி.

௯௭. காவளை சரியோடு ஒழுகும் - கையிலுள்ள வளையல் கங்கணத்தோடு கழலுகின்றது. சரக்கு-பலபண்டம். ஒழுகும்-செல்லும். காவளை-தோணி. நாணற்புல் வளர்ந்த கரைகளிற் றவழும் சங்குமாம். அனம் தீவிடம் - உணவு கொடிய நஞ்சு. தவழும்கனம்-தவழுகின்ற மேகம். தீவு இடம்-தீவாகிய இடம். தடம் காக்கள் சீர்-விசாலமாகிய சோலையிற் சிந்தும் தேன்பெருக்கு. துயரே வதிதல் நந்தினம் - துன்பத்தில் தங்குதல் அதிகரித்தோம். நமது நாட்களெல்லாம் துன்பத்தழுந்துத லென்றலுமாம். சூரல் - பிரம்பு. திரட்சிக்கு உவமையாக வந்தது. நந்து இனம் - சங்குகளின் கூட்டம். பிரம்புகளின் கழுத்திற்றங்கும் நத்தைக்கூட்டமுமாம். நாவாய்-நாவும் வாயும். நாவாய் - மரக்கலம். கண்கள் உறங்கில: அவை கழுவுகின்ற நீரையுடையன. உருநீர்-கசிகின்றநீரில்லை. உருகுங்கழுமாம். அனத்தோடு உறங்கும் குருகு - அன்னப்பறவையோடு தூங்கும் நாரை. இவ்வாறு தோணி, மேகம், தீவு, தேன்பெருக்கு, சங்குகள், மரக்கலம், கடல், கழி, கழுநீர், நாரை இவற்றைநோக்கிக் கூறினாள். இதழி வனத்தார் - கொன்றையாகிய அழகியமாலை.

௯௮. பொற்பொது - பொன்னம்பலம். விழிக்கடை - கண்ணின்கடை. அது திளைத்தமார்பினை யுடையவரென்க. கருக்கொள் கருணைக்கொடி - அருள் சூற்கொண்ட பிராட்டி. நனைக்கமலம்-



தாமரையரும்பு. அன்னம் முத்தினை முட்டையென்று அணைத்து இனத்தொடு களிக்கும் காசி.

௯௯. முகில் வெளுத்தலாவது இவள் கூந்தலின் கருமையை நோக்கியவழி முகிலினை வெண்ணிற முடையதெனக் கூறல் வேண்டுமென்றது. ஒருமொழி - பிரணவம். செவியில் அதனைச் சொலச் சமயம் என்றது இறக்குஞ் சமயத்தை. காசியில் இறக்கும் உயிர்கட்கெல்லாம் இறைவன் பிரணவத்தை உபதேசித்துச் சாரூப பதவி தருதலின் இவ்வாறுகூறினார். திரைகள் இரைக்கவென்க.

௱. துறையிலுள்ள வலம்புரிச் சங்குகளைப்போல அத்துறையில் இடங்கொண்டிருக்கும் சந்திரன். முடவுப்படம் - வளைவினையுடைய படம். கடவுட் பைம்பூண் - ஆதிசேடனைக் குறித்தது. கால்விசை - கூத்தாடுங் காலத்துள்ள கால்வீச்சின் வேகம். வான் ஏறு-இடி. கடுப்ப-போல. வெரிந் - முதுகு. எம்பெருமானுக்குப் பாதச்சிலம்பு ஆதிசேடனாதலின் எம்பெருமான் கூத்தாடுகின்ற காலத்து கால் விசைக்கு ஆற்றாது விழுந்த இரத்தினங்கள் ஆதிசேடன் கக்கிய குருதித் திரள் போன்றிருந்தன. வேகத்திற் சிதறிய அவ்விரத்தினங்கள் இடிபோன்று திக்கு யானைகளின் முதுகிற்றாக்க அவை பொறுக்கலாற்றாது கையெடுத்து வீறிடுகின்றன. இது கூத்தினை வருணித்தவாறு. விழுக்குலை - பெரிய குலை. சுடரோன் செம்மல் - சுக்கிரீவன். தசமுகத்து ஒருவன் - இராவணன். வெஞ்சொல் என்பார் 'வேம்புங்கடுவுந் தேம்பிழியாக' என்றார். 'வேம்புங் கடுவும்போல வெஞ்சொல்' என்பது தொல்காப்பியம். செவிமடுத்து - கேட்டருளி. அளித்தனன் - அருள் புரிந்தனன். வேந்து + அவை = வேத்தவை: அரசசபை. இம்மையில் இந்திரவின்பத்தைப் பூமியிற்பெற்று முடிவில் கெடாத வீட்டின்பந் தரும் வழியைக் கேட்பீராயின் என்க. சிவபெருமான் பாட்டிற் குருகுவோராதலின் 'இன்னிசைப் பாத்தொடுத்தடுத்த பாஞ்சுடரோன்றார்.' 'அருச்சனை பாட்டே யாகும்' என்பது பெரியபுராணம். புலவீர் பாஞ்சுடரை நாத்தழும்பிருக்க ஏத்துமின் என்க.

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

# சகல கலா வல்லி மாலை

௧. வெள்ளை யுள்ளத் தண் தாமரை-மாசற்ற உள்ளமாகிய குளிர்ந்த தாமரை. சகம் ஏழும்-இருவகைப்பட்ட ஏழுலகங்களும்: பதினான்கு உலகங்களு மென்றவாறு. திருமால் இடையிட்ட பிரளயத்தில் பதினான்கு உலகங்களையும் தன் வயிற்றடக்கிக் காத்தலின் 'சகமேழும் அளித்து உண்டான்' என்றார். உறங்க-திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ள. ஒழித்தான் - முற்றும் அழிப்பவனாகிய உருத்திரன். உருத்திர நாதன் செயல்களெல்லாம் உலகிற்குமாறாய்ப் பித்தர் செயல் போன்றிருத்தலின் 'பித்தாக' என்றார். இங்ஙனம் மும்மூர்த்திகளுள் தன்னை ஒழித்தொழிந்த இருவரும் உறங்கியும் பித்தாயும் ஒழிய இவ்வுலகத்தை உண்டாக்கும் வண்ணம் கண்டானென்க. அவ்விருவரும் தந்தர் தொழிலால் உறங்கியும் பித்தாயுஞ் சென்றா ரென்றவாறு. நான்முகன் அவ்வாறு பிறர் பழிக்கும் பயனொன்று மில்லாத படைத்தற்றொழிலை மேற்கொண்டான். அவனது கரும்பென்க. வெள்ளையுள்ளம்-அறியாமையையுடைய மனமென்பாருமுளர். நான்முகன் படைத்த உலகங்களையே ஏனையிருவரும் காத்தும் அழித்தும் வருகின்றாராதலின் அவனன்றி உலகமில்லையென அவனது பெருமை



கூறி அவனது கரும்பென நாமகளைப் புகழ்ந்தார். சகல கலா வல்லி-எல்லாக் கலைகட்குந் தெய்வமாகிய பெண்.

௨. நாடும்-விரும்பும் பொருட் சுவை-விழுமிய கருத்துக் கண்ட வழி நிகழ்வது. சொற்சுவை-கருத்தினை நன்கு புலப்படுத்தும் செஞ்சொற் கண்ட வழி நிகழ்வது. நாற்கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தார மெனப்படும் நான்குவகைக் கவிகள். இவற்றின் இலக்கணத்தைப் பாட்டியல்களிற் காண்க. பணி - தொழில்: பணித்தருள்-கட்டளையிட் டருள்க. பங்கய ஆசனம் - தாமரைத் தவிசு. ஐம்பால்-கூந்தல்: ஐந்து பகுதிகளாவன கொண்டை முதலாயின. இஃது ஓர் கரும்பு குன்றுங் காடுஞ் சுமத்தலை வியந்து கூறிற்று.

௩. செழுந் தமிழ்-சிறந்த தமிழ். ஆர்ந்து-ஆர்ந்த என்பதன் அகரந் தொகுத்தல் விகாரம் பெற்றது. உளங் கொண்டு - மனத்தால் வாங்கி. தெள்ளித் தெளிக்கும் பனுவல்-மிகவும் தெளிவிக்கும் நூலறிவு. புலவோர் கவி மழை சிந்த - ஏகதேச வுருவகம். ஆர்ந்து-உண்டு என்று கூறுவாரும் உளர்.

௪. தூக்கு-பாட்டு. பனுவற்றுறை-நூல்களின் துறை. அதிற்றோய்தலாவது பழகுதல். வடநூல்-வட மொழியிலுள்ள நூல். துறைதோறும் முற்றிய பல நூல்களுடைமையின் வடநூற் கடலென்றும், மக்கட் குறுதி பயக்குஞ் சிறந்த நூற் செல்வமுடைமையின் செழுந்தமிழ்ச் செல்வமென்றுங் கூறினர்.

௫. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. அப்புதல் - ஊட்டுதல். இதம்-நன்மை. பங்கேருகம் - தாமரை. நெஞ்சத் தடம் - உள்ளமாகிய தடாகம். நெடுந்தாட் கமலம் என்றது மிகுந்த நீரில் உண்டாய தாமரை யென்பதாம். 'நீரளவாகி நிற்ற னெடுங்கொடியளவே யன்றிச், சீரமரிலையும் பூவுந் தினந்தொறு மொப்பக் காட்டுஞ், சாரினப் பொருளுக்கேற்ப வாழ்ந்து தண் கவிகையொப்பப், பாரிடை யளிக்கு மிந்தப் பதியொடும் பழகுங் கஞ்சம்' என்னுங் கவிச்சார்வ பௌமர் திருவாக்குங் காண்க. கமலத்து-தாமரை

மலரில் வீற்றிருக்கும். அஞ்சத் துவசம் உயர்த்தோன்-அன்னக் கொடியை உயர்த்திய நான்முகன். ஹம்சம் என்னும் வடசொல் அஞ்சமென்றாயிற்று. வெள்ளைக் கஞ்சம்-வெண்டாமரை மலர்.

௬. பண்-பாலைப்பண் முதலாயின. பரதம்-கூத்து நூல். தீஞ்சொற் பனுவல் - இனிய சொற்களாலமைந்த நூல். எழுதா மறை-வேதம்: சுருதி யென்னும் அதன் பெயரும் காண்க. 'ஆற்ற லழியுமென் றந்தணர்க ளான்மறையைப் போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்' என்பது திருவள்ளுவமாலை. கால்-காற்று. வேத மும் ஐம்பூதமும் அடியார் கண்ணுங் கருத்தும் நிறைந்து நின்ற வளே யென்க.

௭. உளங்கொண்டு - மனத்தில் தியானித்து. தீட்டுதல்-எழுதுதல். தெளித்தல் - பிரித்தறிதல். துறிமப்பேடு - அன்னப் பெடை. 'நீர் பிரித்தன்ன முண்ணுங் தூய தீம்பால்' என்ப வாகலின் 'தீம்பாலமுதம் தெளிக்கும் வண்ணங் காட்டும் வெள் ளோதிமப்பேடு' என்றார்.

௮. விற்பனம்-சாதுரியம். அவதானம்-இங்கே ஒரு காலத்தில் பல பொருளை அறிந்து சொல்லுதலை யுணர்த்திற்று. அவதானம் அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதான மெனப் பலதிறப்படும். நளினம் தாமரை. நளினாசனஞ் சேர் செல்வி-இங்கே திருமகளைக் குறித்தது. திருமகள் சிறையுஞ் செல் வத்தையே கொடுக்கவல்லளாதலின் அவட்கு இஃதரிதாயிற்று. மாமியாரால் இயலாத தொன்றை மருகி செய்தன ளென்று அவளை மகிழ்வித்தவாறு.

௯. சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராம் நின்னை யென்று கூட்டுக. மெய்ஞ்ஞானம்-உண்மை யறிவு. தோற்றம்-வடிவம். நா மகள் ஞான வடிவினளாதலின் 'மெய்ஞ்ஞானத்தின் தோற்ற மென்ன, நிற்கின்ற நின்னை' யென்றார். நிலந்தோய் புழைக்கை-பூமியில் தொடுகின்ற துதிக்கை: இது சிறந்த யானைக்கு உரிய இலக் கணங்களுள் ஒன்று. 'நிற்கும் பொழுதின் மாசொடுநிலத்திடைப் பழுக்கை படிநிலம்கொள்ளப் பாகரும் கூடி நிற்கவும்' எனும்



புழைக்கை' எனப்பாட மோதுவாருமுளர். குஞ்சத்தினையுடையது குஞ்சரம். பதாம்புயம் - திருவடித் தாமரை. அம்புயம் - நீரிற் றோன்றிய தென்னும் பொருளது.

௰. மண் - நிலம். கண்ட வெண்குடை-தாம் அடைந்த வெண் கொற்றக்குடை. மேற்பட்ட-சிறப்புவாய்ந்த. பண்-பாட்டு. படைப்போன் - நான்முகன். விண்கண்ட தெய்வம் - விண்ணைத் தமக்குரிய இடமாகக்கொண்ட தெய்வங்கள். கண்கண்ட தெய்வம்-பிரத்தியக்கமாகப் பயன்றரும் தெய்வம்.

முற்றிற்று

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க

# கைலைக் கலம்பகம்

க. கயிலை-சுவாமிகளவதரித்த ஸ்ரீ வைகுண்டத்திற்கு வழங்கும் பெயர். இங்கே சிவபெருமான் கயிலாச நாத ரென்னுந் திருப்பெயர் பூண்டு எழுந்தருளி யிருக்கின்றார். கயிலைப்பிரானது வடிவழகு என்று கூட்டுக. மிருத்து ஓடும் - இறப்பு இல்லையாகும்.

உ. தாமச் சடையான்-பூமாலை யணிந்த திருச்சடாபாரத்தை யுடையவன். புன்புழுக்கூடாம் அச்சு அடையான் அயன்-இழிந்த புழுக்கூடாகிய உடம்பிலே பிரமன் அடைக்கமாட்டான்.

ங. தலைவன் பிரிவாற் றலைவிக்குத் துன்பம் மிகுவித்தலின் 'மதித்தழல்' என்றான். நடத்தார் - நடத்தினையுடையவர்.

ச. கூற்று - இயமன் : இங்கே அவனது தன்மை. மாற்று-பொன்னின் உயர்வு. பசும் பொன்முலை - இங்கே பெண்ணை யுணர்த்திற்று. இது வண்டுவிடு தூது. ஆதலின் நீர் விரைந்து சென்று தலைவர்பாற் கூறுக வென்றவாறு.

ரு. கண்டல் - தாழை. துறைத் தமிழ் - அகம்புற மென்னுமிரு திணைகளிலும் பல துறைகளையுடைய தமிழ். ஏர் - அழகு. கூற்றம் - சொல்.



சு. புன்கண் - துன்பம். உளக்கண்-ஞானக்கண். கடுக்கை மாலை-(தாம் அணிந்த) கொன்றை மாலை. இது சிவபெருமான் வளையல் விற்றற்பொருட்டுக் கொண்ட திருக்கோலங் கண்டு காமுற்றாளொருத்தி அப் பெருமான் விலை பகர்ந்தமை தனக்குக் கூற்றமாயிருந்த தென்று கூறியது. அம்மே எனக்குக் கூற்றம் மதியம் தென்றல் குயில் கங்குல் இளவாடை அலர் மன்மதபாண மென்பன வல்ல எம்பிரான் வளைவிற்றற்குக் கூறிய சொற்களே யென்றவாறு.

எ. துத்தி - படப்பொறி. துத்திப் பூண் - பாம்பு. மால்-ஆசை: திருமால். கண்டமட்டில்-வேண்டுமளவும்: கழுத்துமட்டும்.

அ. அருந்தனம்-உவமை கூறுதற்கு அரிய கொங்கை : உண்ணுதற்குரிய உணவு.

முற்றிற்று

# பாட்டு முதற்குறிப் பகராதி

## மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அஞ்சிலம்போலிட | ௪௫ |
| அமரர்க்கதிபதி | ௪௯ |
| அமரில்வெந்நிடு | ௨௨ |
| இருபதமுமென்குரற் | ௭௨ |
| இழியும்புனற்றண் | ௬௫ |
| உண்ணிலாவுவகை | ௨௪ |
| உயிராயிருக்கின்ற | ௫௰ |
| உருகியபசும்பொன் | ௬௯ |
| உருகியுருகி | ௪௰ |
| ஊறுங்கரடக் | ௯௰ |
| எண்ணில்பலபுவன | ௫௯ |
| ஏடகத்தெழுதாதவேத | ௫௬ |
| ஒல்குங்கொடிச்சிறு | ௭௧ |
| ஒழுகியகருணை | ௯௯ |
| ஒன்மொளிமரகத | ௬௧ |
| ஒன்மொளியபவள | ௬௮ |
| ஓடும்படலை | ௯௰ |
| கங்கைமுடிமகிழ்நர் | ௬௯ |
| கடகளிறுதவுக | ௨௧ |
| கண்டுபடுகுதலை | ௫௧ |
| கரைக்குங்கடாமிரு | ௫௬ |
| கள்ளூறுகஞ்சக் | ௫௭ |
| காரிற்பொழிமழை | ௯௨ |
| கார்கொண்ட | ௧௫ |
| காலத்தொடு | ௪௰ |
| கீற்றுமதியென | ௫௨ |
| குண்டுபடுபோகழி | ௪௩ |
| கும்பஞ்சுமந்த | ௫௪ |
| குருமணிவெயில்விட | ௨௮ |
| குலத்தோடுதெய்வ | ௫௧ |
| குலைபட்டகாந்தட் | ௫௮ |
| குழியும்பசுங்கண் | ௭௧ |
| கைத்தலமோடிரு | ௧௭ |
| கைம்மலரிற்பொலி | ௬௧ |
| கொழுதிமதர்வண் | ௪௧ |
| கொள்ளைவெளருவி | ௬௭ |
| கொண்செய்தசெழுமணி | ௭௨ |
| கோடுங்குவடும் | ௪௨ |
| சங்குகிடந்த | ௨௮ |
| சங்கோலிடுங்கடற் | ௪௯ |
| சமரிற்பிறகிடு | ௯௮ |
| சிகரவடவரை | ௧௬ |
| சுண்ணந்திமிர்ந்து | ௪௮ |
| சுழியுங்கருங்கட் | ௧௯ |
| சுற்றுநெடுநேமி | ௨௪ |
| செழுமறைதெளிய | ௯௯ |
| சென்றிடுவாளிகள் | ௯௮ |
| சேர்க்குஞ்சுவை | ௭௰ |
| சேலாட்டுவாட் | ௯௭ |
| சேனைத்தலைவர் | ௯௨ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| சொற்கொடியோடு | கக | பைவைத்தநுத்தி | சுஉ |
| நகரக்கரிய | கூச | பொய்வந்தநுண்ணிடை | கரு |
| நகரக்குழலி | சுக | மங்குல்படுகந்தரச் | உரு |
| நசைந்திடுகொங்கை | உக | மண'கொண்ட | கச |
| நமரானநின்றனை | ருஅ | மத்தமதமாக் | சுக |
| நிங்கட்கொழுந்தைக் | ருஎ | மழைத்தொத்தன | ருரு |
| நுங்கமுலைப்பொற் | கரு | மறிக்குந்நிலைத்தண் | சுச |
| நுளிக்கும்பனித்திவலை | சுச | முகமதிபூடெட்டு | உசு |
| நுளிதூங்குதெள்ளமுத | ருரு | முதுசொற்புலவர் | கூகூ |
| தூங்குசிறையறகா | ககூ | முத்தமழுத்திய | கழு |
| தென்னன்றமிழி | உக | முயல்பாய்மதி | சுசு |
| தேர்க்கோலமொடுகின் | எய | முன்பும்பாரசெய் | ருசு |
| தேனொழுகுகஞ்ச | சுஎ | மேகப்பகங்குழலி | சுஅ |
| தொடுக்குங்கடவுட் | ருய | வடக்குங்குமக்குன் | சுஅ |
| நானவட்டத்தளிம | கூச | வடம்பட்டநின்றனை | சுஎ |
| நிரைபொங்கிடுஞ் | சுஉ | வடிபட்டமுக்குடுமி | உசு |
| நீராட்டியாட்டு | உகூ | வளையாடுவண்கை | சுஉ |
| பண்ணாருவரி | உரு | வார்க்குன்றிரண்டு | கூசு |
| பண்ணுறுகிளிமொழிப் | சுகூ | வானத்தருமொ | கஎ |
| பமரமடுப்பக் | சுஅ | விண்டலம்பொதியப் | ருஉ |
| பரியனமூறிய | உஎ | விண்ணளிக்குஞ்சுடர் | கூச |
| பருவரைமுதுபல | சுச | விளரிமிழற்றளி | கழு |
| பின்னற்றிரைக்கடன் | சுகூ | விற்பொலியகிலவு | சுஅ |
| புதையிருள்கிழிதர | சுரு | வீக்குஞ்சிறைபைர் | உசு |
| பூமருவெடிப்பமுகை | கரு | வெஞ்சூட் | உழு |
| பெருந்தேனிறைக்கு | ருய | வெள்ளித்தகட்டு | உழு |


## மீனாக்ஷியம்மை குறம்


| | | | |
|---|---|---|---|
| அங்கைத் | அச | இலைக்குறியுங் | அசு |
| அம்மேகின் | ,, | இனியாவை | அசு |
| அன்பாண்டு | அரு | ஊன்கொண்ட | ,, |
| ஆழிகைதா | எஅ | எண்டிசைக்கும் | ,, |
| ஆனேற்றுங் | அரு | எவ்விடத்தூர் | அசு |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| ஒருகாலங் | அகூ | சீர்வாழி | அசு |
| ஒன்றுகி | அசு | நெல்லளர் | அச |
| கச்சைப்பொருது | அய | பரசிருக்குர் | அசு |
| கடமலைக்கும் | எகூ | பலநிகள் | அரு |
| கருமலையச் | அரு | புல்வாயின் | அக |
| கன்னமதம்பெய் | அய | புழுகாலே | எஅ |
| கார்கொண்ட | எஎ | பூமருவிய | எஎ |
| கான்மணக்குஞ் | அசு | பேசுமென்குறி | எஅ |
| குங்குமஞ்சர் | அகூ | பொற்றொடிவள் | அஉ |
| கூல்புன | அஉ | பொன்பொதியுந் | அரு |
| கைக்குறியின் | எகூ | பொன்மாடஞ் | ,, |
| கொண்டுவா | அச | மங்கைகுங்குமக் | எஅ |
| கொழுங்கொடியின் | அக | மந்தமா | அய |
| சிங்கமும்வெல் | அய | மூந்நாழி | அகூ |
| செண்டிருக்கும் | எஅ | முன்னொருநாள் | அஉ |
| செந்நென்முத்துங் | எஎ | வஞ்சியேயப | எஅ |
| திக்யங்கள் | அரு | வானவர்கோன் | அசு |
| திங்கண்முடி | எகூ | விண்புரக்குங் | அரு |
| தினவட்ட | அரு | வெம்புருவச் | ,, |
| தூசுமொரு | எகூ | வெள்ளிமலைக் | அக |
| நங்கைநீகரு | ,, | வைத்தகபகி | அசு |


## மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை


| | | | |
|---|---|---|---|
| இராகின் | அகூ | தாளின் | கூய |
| இரைக்கு | கூய | தென்மலையுங் | கூக |
| கடம்பவன | ,, | நாவுண்டு | கூஉ |
| கருவால | கூக | நெஞ்சே | கூக |
| கனமிருக்குங் | கூய | பதுமத் | கூய |
| கார்பூத்த | அகூ | புனைந்தான் | கூஉ |
| குனங்கொண்டு | ,, | பொற்பூர | ,, |
| கொண்டைச் | கூக | மதம்பரவு | அகூ |
| சுவையுண் | கூஉ | மலரிய | கூக |
| தருமே | கூய | விண்டிருந்த | கூஉ. |

## மதுரைக்கலம்பகம்


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| அஞ்சேன் | ாகூ | எடார்புண்டரிகத் | ககச |
| அடுத்தங்குலவாக் | கஉகூ | எமவெற்பென்று | கககூ |
| அடுத்ததோர்தவ | ாகூ | எனின்றிரங்குதி | ககக |
| அடுத்தபதஞ்சலியா | கககூ | ஐயமணிக்கல | ககச |
| அம்மகோவெனும் | ாஉ | ஒன்றே | கூ |
| அம்மா நம் | கககூ | கடங்கரைக்கும் | ாரு |
| அரங்குமையற்கு | ாஅ | கடங்கால் | ாகூ |
| அருநாமமரசிவசங் | ாஎ | கடமுடைபு | கஉகூ |
| அரும்பிட்டுப் | கூகூ | கட்டுவார்குழ | ககங |
| அவனவளதுவெறு | ,, | கட்புலங்கதுவாது | கஉகூ |
| அழகுற்றதொர் | ாச | கண்டமுங்காமர் | ககரு |
| அறந்தந்த | ாஉ | கண்முத்தரும்பின | ாகூ |
| ஆவமே நானே | ாரு | கரியகண்டங் | ககரு |
| ஆவாவென்னே | ககரு | கரும்பொறிச் | ாய |
| ஆழ்தலை | ாகூ | கருவிட்ட | கஉய |
| இடங்கொண்ட | ாகூ | கரைபொரு | ாகூ |
| இருங்லனகழ்ந்த | ாஎ | காண்டகைய | கஉச |
| இருமையுமுதவு | கூகூ | குங்குமச்சே | கககூ |
| இருவருக்குங் | ாக | குரும்பைவெம்முலை | கககூ |
| இலதென | கூகூ | குறியிலனவதொரு | கூகூ |
| இன்னியர்துவைப்பச் | ககச | குழமுகைவெண் | கககூ |
| இன்னீரமுதுக் | கககூ | குழமுயலுங் | கஉக |
| ஈரமதிக்கு | ககரு | கூடலம்பதி | ாச |
| ஈரித்ததென்ற | ாகூ | கூடார்புரந்தீ | ாஅ |
| உடையதொர் | கஉரு | கேளார்புரஞ்செற்ற | ககச |
| உண்ணமுத | ா | கொங்குரை | ககஎ |
| உண்பதூஞ்சமா | ாச | கொம்மைக்குவடசையக் | ாச |
| உள்ளும்புறம்பும் | ாஅ | சலராசிதங்கு | கஉச |
| ஊன்வலையி | கூஎ | சிலைசிலையாக்கொண்ட | ககஎ |
| எய்யாதுவின்றொருவ | ாகூ | சிலையோகரும்பு | கககூ |
| எறிவேலிரண்டு | ாஉ | செல்விட்ட | ககஅ |
| என்போடுள்ளமு | கஉய | தடமுண்டகங்கண் | கூஅ |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| தமரநீர்ப் | கஉஉ | போரானைமுதுகுறைப்ப | ாஉ |
| தருமுகத்து | ககஅ | மட்டறுகடற்புவிய | கககூ |
| தழைத்திடுங் | ாச | மணிகொண்ட | கூரு |
| தனியிருப்பவ | கூகூ | மதுமலர்க்குழ | ககஉ |
| தானவெங்களி | ாகூ | மனவட்ட | கூகூ |
| திருவைப்புணர்பொற் | ககஎ | மாற்றொன் | கூஅ |
| தேத்தந்த | ககக | மிக்கார்முகத்தருன் | கஉச |
| தேம்பழுத்த | கூகூ | மீனேறுங் | கூஅ |
| தேனவழங்கு | கஉரு | முட்டாட்பாசடை | கஉய |
| தேனறுதசிலைக்கரும்பு | ககக | மும்மைத்தமிழ்க்கூடன் | ாஎ |
| தொடுத்தவிர்ந்தது | ாரு | முலைகொண்டு | கூகூ |
| நகையேயமையும்ர்த | ாஅ | மேதகைய | கஉச |
| நம்பாநினக்கோல | ாரு | மொழிக்கயலாகி | ககரு |
| நவ்வியங்கண் | கஉக | வடகலை | ககஅ |
| நீரோடு | கஉஉ | வரியளிபொதுளிய | ா |
| பட்டிருக்கத் | கூகூ | வரும்புண்டரீக | கஉய |
| பல்லாருயிர்க்குயி | ாகூ | வலங்கொண்ட | கூகூ |
| பாட்டுக்குருகு | ககஅ | வள்ளைவாய் | கஉரு |
| பாணறுமழலைச் | ாய | வாணிலாப்பரப்பு | ககக |
| பாம்க்குப் | கஉஉ | வானுநீ | கூஎ |
| புந்தித்தடத்து | கூரு | வானேறுஞ் | கூகூ |
| புயல்வண்ண | ாக | வாலவிர்த்த | கககூ |
| புழுகுநெய்ச் | ககஉ. | வாழியடக் | ககஎ |
| பைந்தமிழ்தேர் | கககூ | விண்ணரசும் | கூரு |
| பொருணன் | கூஅ | விண்ணூறு | கூகூ |
| பொழிந்தொழுகு | கூகூ | விற்கரும்பே | கககூ |
| பொன்பூத் | கூஎ | வீரம்வைத்தவில் | ாஅ |
| போகமாய்விளர்தோய் | ,, | வைவைக்கோ | கூகூ |


## நீதிநெறி விளக்கம்


| | | | |
|---|---|---|---|
| அல்லனசெய்யினு | கசக | அன்பொடருளுடைய | கசகூ |
| அவையஞ்சி | கஙஉ | ஆக்கம்பெரியார் | கஙகூ |
| அறம்பொரு | கஙக | இகழினிகழ்ந்தாங் | கஙஎ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| இசையாதபோலினு | ௧௪௫ | கற்றோர்க்குக் | ௧௬௬ |
| இடைதெரிந் | ௧௪௰ | காலமறிந்தாங் | ௧௬௮ |
| இவறன்மை | ௧௬௨ | குடிகொன் | ௧௬௫ |
| இளையமுதுதவ | ௧௪௪ | குலமகட்குத்தெய்வங் | ,, |
| இனியவொன்சொலினு | ௧௬௯ | குலம்விற்றுக்கொள்ளும் | ௧௪௰ |
| இன்சொல்லன் | ௧௬௨ | கைவரும் | ௧௬௭ |
| இன்றுகொளற்பால | ௧௬௫ | கொலையஞ்சார் | ௧௪௨ |
| ஈகையரிதெனினு | ௧௪௰ | சிறியபகையெனினு | ௧௬௮ |
| உலையாமுயற்சி | ௧௬௮ | சிறுமுயற்சி | ௧௪௧ |
| உறுதிபயப்ப | ,, | சிற்றின்பஞ்சின்னீர | ௧௪௬ |
| எத்துணையவாயினு | ௧௬௧ | செயக்கடவ | ௧௪௩ |
| எவரெவரெத்திறத்த | ௧௪௫ | செவிசுடச் | ௧௬௭ |
| எவ்வினையரேனு | ௧௪௬ | சொல்வன்மை | ௧௪௧ |
| எனைத்துணையவேனு | ௧௬௨ | தத்தநிலைக்குங் | ௧௪௰ |
| ஏதிலார்யாதும் | ௧௬௫ | தம்மின்மெலியாரை | ௧௬௬ |
| ஏர்தெழின் | ௧௪௨ | தம்முடையாற்றலு | ௧௬௭ |
| ஐயந்திரிபின் | ௧௪௫ | தன்னைவியப்பிப்பான் | ௧௬௬ |
| ஒற்றிற்றெரியா | ௧௬௫ | திருவினுநல்லாண் | ௧௪௨ |
| கண்கூடாப் | ௧௬௯ | தீயசெயற்செய்வா | ௧௪௧ |
| கண்ணிற் | ௧௬௫ | துயிற்சுவையுந் | ௧௪௬ |
| கண்ணோக்கரும்பா | ௧௬௯ | தெய்வமுளதென்பார் | ௧௪௧ |
| கருமஞ்சிதையாமே | ௧௪௨ | தொடங்குங்காற் | ௧௬௧ |
| கலனழிந்த | ௧௬௭ | நட்பிடைக் | ௧௬௯ |
| கலைமகன்வாழ்க்கை | ௧௯௨ | நட்புப்பிரித்தல் | ௧௬௪ |
| கல்வியுடைமை | ௧௬௬ | நல்லவைசெய்யத் | ௧௪௪ |
| கல்வியேகற்புடைப் | ௧௯௧ | நல்லாறொழுக்கின் | ௧௬௯ |
| களைகணுத் | ௧௬௯ | நன்மக்கள் | ௧௪௨ |
| கற்பனவூழ்ற்றூர் | ௧௬௪ | நீரிற்குமிழி | ௧௬௧ |
| கற்பின்மகளி | ௧௪௬ | நெஞ்சுபுறம்பாத் | ௧௪௪ |
| கற்புடைத்தன்பு | ௧௪௨ | நெடும்பகற்கற்ற | ௧௬௨ |
| கற்றனகல்லார் | ௧௬௪ | பகையின்று | ௧௪௧ |
| கற்றுங்கறிந்தடங்கித் | ௧௪௫ | பணியப்படுவார் | ௧௬௯ |
| கற்றுத்துறைபோய | ,, | பரபரப்பி | ௧௪௪ |
| கற்றுப்பிறர்க்குரைத்துத் | ௧௯௪ | பழைமை | ௧௬௭ |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| பிறராற்பெருஞ்சுட்டு | ௧௬௪ | மாகஞ்சிறகக் | ௧௬௯ |
| பிறர்க்குப்பயன்படத் | ,, | முடிப்பமுடித்துப் | ௧௬௫ |
| பிறன்வரை | ௧௪௨ | முயலாதுவைத்து | ௧௬௮ |
| புழுநெளிந்து | ௧௬௭ | முறையுங்குடிமையு | ௧௪௬ |
| புறநட்டகம் | ௧௬௯ | முற்றுமுணர்ந்தவ | ௧௬௬ |
| புறப்பகை | ,, | மெய்யுணர்ந்தார் | ௧௪௫ |
| பெண்மைவியவார் | ௧௪௬ | மெய்வருத்தம்பாரார் | ௧௬௮ |
| பெற்றசிறுகப் | ௧௪௰ | மெலியார்விழினு | ௧௪௪ |
| பொதுமகளேபோல்வ | ,, | வஞ்சித்தொழுகு | ,, |
| பொய்குறளை | ௧௬௯ | வருந்தித்தாங்கற்றன | ௧௬௨ |
| போக்கறுகல்வி | ௧௬௪ | வள்ளன்மை | ௧௪௰ |
| மறைவழிப்பட்ட | ௧௪௪ | வாங்குங்கவளத் | ௧௬௯ |
| மனத்தகறுப்பெனி | ௧௬௯ | விலக்கியவோம்பி | ௧௬௬ |
| மன்னர்புறங்கடைக் | ௧௬௮ | வேத்தவைகாவார் | ௧௬௪ |


## திருவாரூர் நான்மணிமாலை


| | | | |
|---|---|---|---|
| அழலவிர்சோதி | ௧௫௯ | தண்மலரும் | ௧௬௧ |
| அன்னாற் | ௧௬௧ | தம்மேனி | ௧௬௪ |
| ஆமையோடணிந்து | ௧௫௮ | தன்னெஞ்சுக்குஞ் | ,, |
| இணங்குகம | ௧௫௧ | தானமால்களிறு | ௧௫௧ |
| இதுவேபொரு | ௧௫௭ | தேங்குபுக | ,, |
| இன்னீருலகத்துக் | ௧௫௯ | நல்லார்தொழுங் | ௧௫௭ |
| உமிழ்தேன் | ௧௬௬ | நவமணி | ௧௬௧ |
| என்பணிந்த | ௧௫௬ | நற்கரும்பு | ௧௬௨ |
| என்பாக | ௧௪௯ | நாடுங்கமலேசர் | ௧௪௯ |
| என்னுயிர்க் | ௧௫௫ | நாமவேற்படைக் | ௧௫௨ |
| ஒண்கதிர் | ௧௫௰ | நீளூர்ந்த | ௧௪௯ |
| கண்ணனூர் | ௧௫௫ | பார்பெற்ற | ,, |
| கருந்தாது | ௧௫௪ | பிறையொழுக | ௧௫௯ |
| கரும்புற்ற | ௧௬௬ | பூமாதினிதய | ௧௫௫ |
| குழல்வைத்த | ௧௫௯ | பெருமான் | ௧௫௨ |
| கொண்டலை | ௧௬௬ | போதொன்றியதன் | ௧௫௧ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
| --- | --- | --- | --- |
| மல்லல்வனக் | கசுக | வாவியம்போருகஞ் | கருஉ |
| வண்டுகூட்டுண்ண | ககூ | வெண்ணிலவு | கரு |
| வார்தர்தருன | கருச | வேனிலாலுறப்பின் | ககய |
| வருமுலைசமர்து | கருகூ | வையமுழுது | கருஎ |
| வன்னமுலைக் | கருச | | |


---

## முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்


| | | | |
| --- | --- | --- | --- |
| அங்கைத்தலத் | ககூக | காளுழு | கஎகூ |
| அற்றவுடற் | ககய | இளைக்குஞ்சகார் | கஅகூ |
| இருக்கோவிடும் | கஎஎ | கும்பமதக்களி | கஅக |
| இருளறவிமைக்கு | ககூஅ | கும்பாதிகாரிய | கஎஎ |
| இருளூர்தாங்கக் | உகச | குருகுநாழு | ககூஉ |
| இழுமெனருவி | உாக | குழையடர்துவடி | கஎக |
| இழுமென்மொழித் | உகஎ | குழையொடு | கஅய |
| உண்ணிலாவுவகைத் | கஅஅ | குறமெண்ணடைய்யு | உாஎ |
| உண்ணெகிழ் | கஅரு | குன்றைத்திமர் | உாரு |
| உலகுகுளிர | உாக | கைக்கெட்டு | கஎஅ |
| ஊற்றும்பசுர்தே | உககூ | கொழுநாண்மலர்க் | உாஅ |
| ஊளுயுயிர்க்குயி | கஅகூ | கோடுபடுகொங்கைக் | ககூச |
| ஒருபுறத்துமர | கஎய | கோல்பாய்பசும் | உஉக |
| ஒழியாதபுவனத் | உாச | சமரிற்பட்டவர் | ககய |
| கங்கைமுடியடி | உாகூ | செம்பொற்கருங் | ககஎ |
| கடலைச்சுவற | கஅக | செம்பொனடிச் | கஎகூ |
| கடாமுமிழ் | கஎஉ | சொற்றருபெரும் | உாஉ |
| கட்டுண்ட | ககூஅ | சோலைப்புறமுப் | கஅச |
| கம்பக்களிற்றுக் | உகஅ | தரிக்குஞ்சுடர்ப் | உகரு |
| கருமுகிலுக்கரி | கஅரு | தருமன்னுபொன் | உாச |
| கருவீற்றிருந்த | உகஉ | தள்ளும்பவக் | உாகூ |
| கலைப்பா | ககூ | தன்னுைத்த | ,, |
| கள்ளவிழ்கறங் | உஉஉ | திங்களுதற்திரு | கஅக |
| களியொடுசுவை | கககூ | தீற்றஞ்சுதைவெண் | கஅகூ |
| கானக்குறப் | உாய | துளிதுங்கு | ககூரு |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
| --- | --- | --- | --- |
| துறைபட்ட | கஎரு | மண்டலம்போற் | உாஉ |
| தொடுக்குர்தொடை | கஅஉ | மதியுநதியு | ககூகூ |
| தோலாதமுத்தமிழ் | கஅகூ | மழவுமுதிர்கனி | ககூஎ |
| நஞ்சிற்றோய்த்துக் | உா | மழைக்கொர் | கஅஎ |
| நறவுவிரிந்த | ககூஉ | மழைமுகில் | உகரு |
| நெட்டுடற்பைங் | உாரு | மாலிமயத்து | கஅச |
| நெய்வைத்த | உஉய | மாணிறக்கடவு | கஎச |
| பயிறருமுதுமறை | கஎரு | மீத்தர்த | உஉக |
| பற்றுவிற்காமன் | உஉய | மீனேறு | கஎக |
| பாயிருட்போதத் | உாகூ | முடங்குர்திரைப் | கஅஎ |
| பில்கும்பசுர்தே | கஅஉ | மூறுக்குடை | கஎகூ |
| பிள்ளைமதிச் | உாய | மூரிக்களிறோ | உாகூ |
| புயலுண்டிருண்ட | ககூச | மைவிழிச்செங் | கஎஅ |
| பூமருவுயிர்க்கும் | ககூரு | மொய்ம்பிற்பெரும் | உகச |
| பூமேவுகற்பகப் | கஎய | வடிவினழகு | ககூகூ |
| பெருகுசுவைத் | உகஎ | விண்டேறுசெங் | உககூ |
| பெருவெளி | உககூ | வம்மினெனப் | உககூ |
| பைங்கட்சிறைக் | உககூ | வழிக்குப்புறம் | உாஅ |
| பைங்காய்க் | கஎகூ | வனரினவன | ககூக |
| பைர்தண்கமல | ககூகூ | வள்ளைக்குழை | உா |
| பொழியுங்கருணைப் | ககூகூ | வாமாண்கலைப் | உகக |
| பொன்பூத்த | ககூகூ | வாராட்டுதட | உஉஉ |
| பொன்னங்கொடி | உாகூ | விண்ணெண்கடற் | கஅகூ |
| போரோடுபடை | உகஅ | விரல்சுவையுண்டு | கஅய |
| மடாரடைத் | கஅஅ | விளைக்கும்பெரும் | உககூ |
| மடல்வாயவிழ்ந்த | உகக | | |


---

## சிதம்பர மும்மணிக்கோவை


| | | | |
| --- | --- | --- | --- |
| அமரர்கோமக | உகூஉ | ஓட்டுவிக்கக் | உகூக |
| ஆட்டுகின்றோ | உகூகூ | கடங்கலுழ் | உகூகூ |
| இனமொக்குங் | உகூச | கட்புலங்கதுவாக் | உகூஅ |
| என்செய்தீர் | உசஉ | கூடுங்கதி | உசச |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| கொடியுமுரசங் | ௨௪௧ | பிடிப்பதுமக் | ௨௯௬ |
| கொண்டல்கண் | ௨௪௨ | புரமொன்றிரண் | ௨௯௰ |
| சலியாது | ௨௯௰ | புலிக்கான் | ௨௯௫ |
| சூடுங்கலைமதி | ௨௯௭ | புனையேந்தரு | ௨௯௭ |
| செம்மணிக்கோ | ௨௨௭ | பூமலிகற்பகப் | ௨௨௭ |
| செய்தவவேட | ௨௯௯ | மன்றம்பொகுட்டா | ௨௯௰ |
| சென்றவரைத் | ௨௯௧ | மன்றுடையான் | ௨௪௰ |
| தக்கனூர் | ௨௯௪ | மீன்வீழ்தன்ன | ௨௯௬ |
| தாமக்குழலினல் | ௨௯௧ | வள்ளக்கலச | ௨௪௨ |
| நடிக்கச் | ௨௪௪ | வாடியநுண் | ௨௪௰ |
| நீருண்ட | ௨௯௧ | வேதண்ட | ௨௯௯ |
| பற்றம்பலம்திதித் | ௨௯௯ | | |


## சிதம்பரச் செய்யுட்கோவை


| | | | |
|---|---|---|---|
| அங்கட்கமலத் | ௨௫௧ | இருக்கோல | ௨௭௫ |
| அங்கமலன் | ௨௬௬ | இலதெனி | ௨௭௬ |
| அடிகொண்ட | ௨௭௨ | இலவிதழ் | ௨௬௧ |
| அந்நலம் | ௨௬௧ | இன்னருளே | ௨௭௭ |
| அம்பெருண் | ௨௫௭ | உண்டாங்கெனிலு | ௨௬௨ |
| அம்மங்கின் | ௨௭௫ | உம்பர்பெருமாற் | ௨௫௬ |
| அரசியல் | ௨௮௨ | உருவல | ௨௫௮ |
| அரிதென்று | ௨௮௧ | உலகமொ | ௨௬௧ |
| அருங்கலை | ௨௬௬ | உளவையி | ௨௭௬ |
| அருவமு | ௨௬௧ | என்பயிலா | ,, |
| அருவருக்கு | ௨௬௪ | எத்தொழிலுங் | ௨௭௭ |
| அருவெனி | ௨௭௬ | எவ்விடத்தி | ௨௭௬ |
| அறனன்று | ௨௪௭ | எவ்வுருவு | ௨௭௭ |
| அறிவினி | ௨௭௬ | என்னென்று | ௨௮௧ |
| அற்புதமணி | ௨௭௧ | ஒருநோக்கம் | ௨௭௫ |
| ஆங்கற் | ௨௭௮ | ஒன்றினம் | ௨௮௧ |
| ஆதிமுதலுணர்ந் | ௨௫௧ | ஒருருவாய் | ௨௭௬ |
| ஆடகச்செம் | ,, | கங்கைக்குக் | ௨௫௫ |
| இருகூற்றுருவத் | ௨௬௮ | கடாக | ௨௫௮ |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| கடிக்கமலப் | ௨௭௫ | சேல்செய்த | ௨௭௰ |
| கடித்தாமரைக் | ௨௮௰ | சொல்லொடு | ௨௬௧ |
| கண்ணுதல் | ௨௪௭ | சொன்மாலை | ௨௬௬ |
| கம்பக்காடக் | ௨௫௫ | தண்ணென் | ௨௬௰ |
| கம்பைமாநதி | ௨௫௬ | தந்தைநீ | ௨௭௭ |
| கருந்தாது | ௨௫௯ | தாமடிகண் | ௨௭௫ |
| கருமிடற்றன் | ௨௫௬ | திங்கட்சடைக் | ௨௬௯ |
| கரும்புஞ் | ௨௭௧ | திருமுடியிற் | ௨௪௮ |
| கறையரவுக் | ௨௪௮ | தீர்த்தமென் | ௨௬௧ |
| கறைவிட | ௨௬௮ | தேரினை | ௨௬௭ |
| கற்பனைகழன்ற | ௨௭௰ | தேன்மறிக்கும் | ௨௬௫ |
| கனகமார் | ௨௫௭ | தொடலைக் | ௨௭௧ |
| கனமளித்த | ௨௬௯ | தொல்லுலகம் | ௨௬௮ |
| காதன்மகளிர் | ௨௫௨ | நலனழிந்து | ௨௬௭ |
| காமருயிர் | ,, | நன்னிறங் | ,, |
| காளியாடக் | ௨௭௮ | நாகம்பொதி | ௨௬௨ |
| குழைதூங்கு | ௨௭௯ | நான்மறைக்குந் | ௨௭௫ |
| கூகாவென்று | ௨௭[illegible] | நின்னலா | ௨௭௭ |
| கூற்றங் | ௨௪௧ | நீரிற்குமிழி | ௨௪௧ |
| கூற்றிருக்கு | ௨௫௮ | நெஞ்சகங் | ௨௭௭ |
| கைத்தலத்த | ௨௬௪ | படர்தரும்வெவ் | ௨௫௮ |
| கொன்செய்த | ௨௬௫ | பாசிருக்குந் | ௨௫௭ |
| கோமுனிவ | ௨௬௯ | பருந்தளிக்கு | ௨௮௨ |
| கோளாருண் | ௨௫௭ | பலகலையுங் | ௨௭௫ |
| சத்தமுமாகியச் | ௨௬௧ | பல்பேரூழி | ௨௭௨ |
| சிலைக்கோடு | ௨௭௪ | பாடுவார் | ௨௬௭ |
| சிலைமுகங் | ,, | பாரித்த | ௨௬௬ |
| சிற்றம்பலத்து | ௨௬௧ | பானற்கருங்கட் | ௨௭௮ |
| சீராட்டு | ௨௭௭ | பிணியென்று | ௨௮௧ |
| சூன்முகத்த | ௨௭௫ | பிறையளிக்குஞ் | ௨௬௫ |
| செக்கர்ச்சடை | ௨௫௨ | பின்றாழ்நறுங் | ௨௫௭ |
| செம்பொன் | ௨௫௬ | புற்புதமுந் | ௨௭௬ |
| செல்லார் | ௨௭௮ | புனலழுவம் | ௨௫௰ |
| செவ்வாய்க் | ௨௭௧ | பூஉந்தண்ண் | ௨௫௧ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| பூங்கொன்றைக் | ௨௪௭ | முருகுயிர்க்கு | ௨௬௫ |
| பூந்தண்பசுந் | ௨௫௦ | முன்புல | ௨௫௯ |
| பெரியைநீ | ௨௭௦ | முன்மலையுங் | ௨௬௮ |
| பெருவெள்ளப் | ௨௭௯ | மெய்த்துயர | ௨௭௭ |
| பேதைமீர் | ௨௬௬ | மேதக்க | ௨௭௬ |
| பைந்துழாய | ௨௭௯ | வணக்கு | ௨௪௮ |
| பொற்றூது | ௨௫௧ | வண்டுஞ்சரும்பு | ௨௫௪ |
| பொன்செய் | ௨௮௧ | வம்பினமராங்காண் | ௨௮௨ |
| பொன்புரிந்த | ௨௫௯ | வாத்திற் | ௨௪௧ |
| பொன்மன்றம் | ௨௫௧ | வருநீலப் | ௨௬௮ |
| போற்றும்பின் | ௨௫௫ | வளங்குலாவரு | ௨௬௪ |
| மதுவிரி | ௨௬௫ | வாணேருண் | ௨௫௭ |
| மல்லாண்ட | ௨௭௨ | வாழிதிரு | ௨௪௧ |
| மறைதங்கு | ௨௭௯ | வாழ்த்தும்பின் | ௨௮௨ |
| மாயிரு | ௨௬௦ | வானேகிலனே | ௨௫௪ |
| மாயிருஞாலத் | ௨௬௨ | விசையிலெம் | ௨௬௧ |
| மாயையினு | ௨௭௬ | விடமார்ந்த | ௨௭௪ |
| மீனேற்றின் | ௨௭௯ | வின்மதனை | ௨௫௯ |
| முதிராவிளமுலை | ௨௬௭ | வெஞ்சம | ௨௫௧ |
| முத்தேவர் | ௨௭௮ | வெள்ளெருக்கும் | ௨௭௪ |
| முத்தொழிலின் | ௨௬௧ | வையமீன்ற | ௨௭௯ |
| முத்தொழிலின்முதற் | ௨௭௫ | | |


## சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை


| | | | |
|---|---|---|---|
| அங்கம்பகுர் | ௨௮௫ | சேர்பூத்த | ௨௮௫ |
| அங்கைகொண் | ௨௮௪ | தருவறநாணத் | ௨௮௮ |
| அண்டர்திரு | ௨௮௭ | தலைவளைத்து | ,, |
| அல்லிக்கம | ௨௮௮ | தாளிற்பதித்த | ,, |
| இன்றளிர்க்கைக் | ,, | நங்காய் | ௨௮௭ |
| ஒருவல்லி | ௨௮௫ | பூத்தவு | ௨௮௪ |
| கறைகொண்டு | ௨௮௧ | மறைநாறுஞ் | ௨௮௮ |
| குன்றஞ்சுமர் | ,, | மாகந்திரு | ௨௮௫ |
| சிறைசெய்த | ௨௮௭ | முருக்கடர்ந் | ௨௮௪ |




## பண்டார மும்மணிக்கோவை


| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| வன்னஞ்செறி | ௨௮௭ | தடுத்தபிறவித் | ௩௱௮ |
| வாய்ந்தது | ,, | தருமணிக்கோ | ,, |
| அடங்காலவம் | ௩௱௫ | தானவனுகிய | ௨௯௮ |
| அவமாசி | ௨௯௪ | தானின்றெனைத் | ௨௯௯ |
| ஆரூரே | ௩௱௩ | தன்னேரிலா | ௩௱௧ |
| இன்றோர்வியப் | ௩௱௬ | நான்மறைக் | ௩௱௨ |
| உள்ளத்தருணின் | ௩௱௮ | பந்தனை | ௨௯௮ |
| எண்டிசைக்குஞ் | ௨௯௧ | பின்னம்படைத் | ௩௱௫ |
| எம்மாருயி | ௨௯௬ | பூமலிசததள | ௨௯௧ |
| எற்கமலஞ் | ௩௱௫ | பொன்னேயல் | ௩௱௮ |
| என்செயலா | ௩௱௧ | போர்தையங் | ௩௱ |
| என்வசமா | ௩௱ | மணிகொண் | ௨௯௯ |
| என்வடிவ | ௨௯௩ | மணிவடஞ் | ௨௯௩ |
| எழுயர்மும் | ௩௱௯ | மீனாமணிமர் | ௩௱௩ |
| ஒன்றேதன்மை | ௨௯௫ | முற்படுமாயை | ௨௯௭ |
| கடல்பெற்ற | ,, | விண்புரக்குஞ் | ௨௯௮ |
| கண்ணிற்கணி | ௨௯௩ | விண்மணியாய்க் | ௩௱௬ |
| சூழ்போய் | ௩௱௪ | விரிக்குஞ்சரி | ௩௱௮ |


## காசிக்கலம்பகம்


| | | | |
|---|---|---|---|
| அகமேயவி | ௩௨௨ | ஆமோவலி | ௩௨௯ |
| அகிலாண்ட | ௩௩௬ | ஆர்க்கும்படை | ௩௧௮ |
| அடியவரே | ௩௧௩ | ஆனந்தவல்லி | ௩௩௮ |
| அம்மனைதம் | ௩௨௩ | இக்கூற்றின் | ௩௧௩ |
| அருகுமதன் | ௩௩௭ | இடமருங்கினின் | ௩௪௦ |
| அலகில்பல | ௩௧௩ | இடமற | ௩௧௪ |
| அவனவ | ௩௧௨ | இதுவென | ௩௧௨ |
| அழகுதயில் | ௩௨௬ | இருகுங்குமக் | ௩௨௧ |
| அழல்விழித் | ௩௧௩ | இருப்பாரவி | ௩௧௬ |
| அறிபவ | ௩௧௨ | இலைமுகங் | ௩௩௨ |
| ஆறெடு | ௩௨௯ | இல்லாளே | ௩௧௯ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| இல்லையென்ப | ௫௫௯ | கூற்றடிக்கஞ்சி | ௩௩௮ |
| இல்லொன் | ௫௫௫ | கேயூரமூரக் | ௩௩௬ |
| இல்வாழ்வை | ௫௨௫ | கொள்ளையிடச் | ௩௨௬ |
| இழுமென் | ௫௫௰ | கொழுதிவரி | ௩௧௭ |
| இறைவளைக் | ௫௧௪ | சரியோடொழு | ௩௪௰ |
| உடுத்தகலையு | ௫௫௯ | சிறைவிரிக்கு | ௩௩௧ |
| உடைதிரைச் | ௫௪௧ | செந்தேனொழு | ௩௨௮ |
| உடையாளகி | ௫௩௪ | செடிகொண்முடைப் | ௩௧௨ |
| உண்டவில | ௫௫௪ | சொல்லாவது | ௩௧௧ |
| உரைத்தனான் | ௫௫௬ | சோதியொன்றி | ௩௨௫ |
| உலகுசூழ் | ௫௧௪ | தண்ணுலாம் | ௫௧௮ |
| உளதென | ௫௧௨ | தாக்குபடை | ௫௨௭ |
| எடுக்கச்சிவந்த | ௫௧௰ | தானென்றவர்மு | ௫௫௭ |
| என்பணிக்குப் | ௫௫௯ | திருகுசினக் | ௫௨௨ |
| என்பணிய | ௫௧௨ | திருக்கோலங் | ௫௨௰ |
| எடவிழ்பொற் | ௫௨௫ | தீவிடங்கொடுத் | ௫௫௭ |
| கண்டமட்டு | ௫௫௨ | தூதுகொண்டுச் | ௩௨௩ |
| கண்ணஞ்சனத் | ௫௫௫ | தொடங்காமே | ௫௨௮ |
| கண்ணிருக்குங் | ௫௨௭ | தோகையுயிர் | ௫௧௰ |
| கண்ணொடாவி | ௫௫௪ | நகரமாய் | ௫௫௫ |
| கண்ணென்று | ௫௩௭ | நரைமுதிர்ந் | ,, |
| கருகுகங்குற் | ௫௫௫ | நிணம்புணர்வெண் | ௫௧௨ |
| கருமுகில்வெ | ௫௪௧ | நிற்பனவுந் | ௫௧௧ |
| கலைமதியின் | ௫௨௨ | நீரொழுத்துக் | ௫௧௨ |
| கழியுந்தலைக் | ௫௨௧ | நீர்கொண்ட | ௫௧௧ |
| களைக்கரும் | ௫௫௫ | படலைநறுங் | ௫௨௮ |
| காணுங்காணு | ௫௧௮ | படுத்தபாயுட | ௫௨௰ |
| கிள்ளைக்கமிர் | ௫௫௨ | பண்ணேர் | ௫௨௧ |
| குடியிருக்கும் | ௫௨௫ | பயின்மூன்று | ௫௧௫ |
| கும்பமிரண் | ௫௨௫ | பரந்தாமத் | ௫௨௯ |
| குருகைவிடுத் | ௫௫௯ | பல்லாண்டு | ௫௨௫ |
| குலைவளைக்கும் | ௫௪௰ | பல்வேறுருவாய் | ௫௫௭ |
| குன்றிரண்டு | ௫௨௯ | பற்பகனேற் | ௫௧௨ |
| கூற்றடிக்கஞ்சிக்குலை | ௩௫௧ | பாசத்தளை | ௫௧௧ |





| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| பாவலரு | ௩௨௨ | முயலாமலே | ௫௨௰ |
| பிரானென்றவர்க் | ௫௧௯ | வடவரை | ௫௧௨ |
| புகுமேமதிக் | ௫௨௯ | வண்ணமேனி | ௫௨௧ |
| புயலார் | ௫௧௬ | வரைவளைக்கும் | ௫௧௭ |
| புயல்வண்ணக் | ௫௨௬ | வழுத்துமவர்க் | ௫௧௯ |
| பெற்றமூர் | ௫௧௯ | வனத்திலுமொர் | ௫௪௧ |
| பொன்னந்தா | ௫௨௯ | வாட்டடங்கண் | ௫௫௫ |
| பொன்னுருக் | ௫௨௫ | விடுத்தவா | ௫௧௬ |
| மழைவளைக்கும் | ௫௨௭ | விண்ணமிர்து | ௫௫௫ |
| மறைக்கோலங் | ௫௧௬ | விரைகுழைக்கு | ௫௫௫ |
| மானமொன்று | ௫௫௯ | விழைகுவ | ௫௨௧ |
| முடைத்தலையிற் | ௫௧௨ | விளங்கனி | ௫௫௨ |
| முத்தாடி | ௫௫௪ | வீரமென்பது | ௫௫௮ |
| முத்திக்குவேட் | ௫௫௭ | வேதத்துரகர் | ௫௪௰ |
| முத்துநிரைத்த | ௫௫௮ | வையமுழு | ௫௨௬ |


## சகலகலாவல்லிமாலை


| | | | |
|---|---|---|---|
| அளிக்குஞ் | ௫௪௫ | பஞ்சப்பிதந்தரு | ௫௪௬ |
| சொல்விற்பன | ௫௪௬ | பண்ணும்பர | ௫௪௬ |
| சொற்கும்பொ | ௫௪௬ | பாட்டும்பொருளு | ௫௪௬ |
| தூக்கும்பனுவற் | ௫௪௫ | மண்கண்டவெண் | ௫௪௬ |
| நாடும்பொருட் | ௫௪௫ | வெண்டாமரைக் | ௫௪௫ |


## கைலைக்கலம்பகம்


| | | | |
|---|---|---|---|
| கங்கைச்சடை | ௫௪௯ | தன்னந்தனியே | ௫௪௯ |
| கழியேகழிக் | ௫௫௰ | தேமாம்பொழி | ,, |
| கூற்றிருக்குங் | ௫௪௯ | நங்கள்புன்க | ௫௫௰ |
| கைம்மான் | ௫௫௰ | பூணுதற்கு | ,, |

# சைவ சித்தாந்த
# நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்

## இலக்கண இலக்கிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம் ... | 4 | 0 |
| ,, சொல்லதிகாரம், சேனாவரையம் ... | 8 | 8 |
| நன்னூல் மூலமும், யாப்பருங்கல மூலமும், யாப்பருங்கலக்காரிகை மூலமும், தண்டியலங்கார மூலமும் ... | 0 | 12 |
| நன்னூல் மூலம் பாக்கட் ... | 0 | 3 |
| திருக்குறள் மூலம் (உயர்ந்த பதிப்பு, கலிக்கா கட்டடம்) ... | 0 | 8 |
| நாலடியார் உரையுடன் (திருத்தமான உயர்ந்த பதிப்பு) ... | 1 | 0 |
| களவழி நாற்பது உரையுடன் ,, ... | 0 | 5 |
| இனியவை நாற்பது உரையுடன் ,, ... | 0 | 5 |
| திணைமொழி ஐம்பது உரையுடன் ,, ... | 0 | 5 |
| நளவெண்பா உரையுடன் ,, ... | 1 | 0 |
| சோமேசர் முதுமொழி வெண்பா உரையுடன் (கலிக்கா) ... | 1 | 12 |
| திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி உரையுடன் (கலிக்கா) ... | 1 | 4 |
| மதுரைக்கலம்பகம் உரையுடன் (குமரகுருபர சுவாமிகள்) | 0 | 6 |
| மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் உரையுடன் ,, ... | 0 | 6 |
| நீதிநெறி விளக்கம் உரையுடன் ,, ... | 0 | 4 |
| அறிவுரைத்திரட்டு (சிறந்த பொருளடங்கிய 17 - கட்டுரைகளுடையது) ... | 0 | 12 |
| ஜீவகாருணிய ஒழுக்கம் (இராமலிங்க சுவாமிகள்) ... | 0 | 4 |
| மனுமுறை கண்ட வாசகம் ,, ... | 0 | 8 |

## சைவ சித்தாந்த நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவஞான சித்தியார் சுபக்கம் (ஸ்ரீ சிவஞான சுவாமிகள் பொழிப்புரையும், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பதவுரையும் அடங்கியது) ... | 4 | 8 |
| சித்தாந்தப் பிரகாசிகை (சிவஞான சுவாமிகள்) ... | 0 | 3 |
| ஞானாமிர்தக் கட்டளை (அரிய நூல்) ... | 0 | 4 |
| சைவ சித்தாந்த விளக்கச் சுருக்கம் (கா. சுப்பிரமணிய பிள்ளை) ... | 0 | 1 |
| சைவ சித்தாந்த வரலாறு ,, ... | 0 | 3 |

O-,11LKG2
N°25

| | ரூ. | அ. |
|---|---|---|
| பூப்பிள்ளை அட்டவணை (அம்பலவாண சுவாமிகள்) ... | 0 | 2 |
| சிவதத்துவ விவேகம் உரையுடன் ... | 0 | 5 |
| சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் உரையுடன் ... | 0 | 8 |

## புகழ் நூல்கள்

| | | |
|---|---|---|
| அகத்தியர் தேவாரத் திரட்டு விருத்தியுரையுடன் ... | 1 | 12 |
| திருவாசக மூலம் உயர்ந்த பதிப்பு .. | 3 | 0 |
| ஷை சாதாரண பதிப்பு ... | 1 | 2 |
| திருவடிப் புகழ்மாலை மலர் - க ... | 0 | 3 |
| ஷை மலர் - உ ... | 0 | 3 |
| ஷை மலர் - ௩ ... | 0 | 2 |
| திருமுருகாற்றுப்படை மூலம் (நக்கீரர்) ... | 0 | 2 |
| கந்தரலங்காரம், கந்தரனுபூதி (அருணகிரி நாதர்) ... | 0 | 8 |
| திருவகுப்பு (25 வகுப்புக்கள்) ... | 0 | 5 |
| கந்தர் கலிவெண்பா (குமரகுருபர சுவாமிகள்) ... | 0 | 2 |
| திருத்தணிகை யாற்றுப்படை (கச்சியப்பமுனிவர்) ... | 0 | 2 |
| கந்தர் சஷ்டி கவசம் (தேவராய சுவாமிகள்) ... | 0 | 1 |
| திருச்செந்திற் கலம்பகம் (சுவாமிநாத தேசிகர்) ... | 0 | 4 |
| திருப்புகழ் 51 பாட்டுக்கள் (கண்கவர்பதிப்பு) ... | 0 | 5 |
| முருகன் புகழ்மாலை (அழகொழுகும்பதிப்பு) இதன் கண் திருமுருகாற்றுப்படை முதல் திருச்செந்திற் கலம்பகம் ஈறாக 9 அருட்பனுவல்களும், புராணங்கள், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் முதலிய வற்றினின் றெடுத்த 117 தனிப்புகழ்ப்பாக்களும் அடங்கியன. பூசைக்குரியது. ... | 8 | 0 |

77911

## ஆராய்ச்சி நூல்கள்

| | | |
|---|---|---|
| சிவஞான சுவாமிகள் பிரபந்தம் முதற்பாகம் (வசன நூற்கள்) | 1 | 12 |
| கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி ... | 0 | 3 |
| சிவசின்னங்க ளணிவதேன்? ... | 0 | 1 |
| இந்து சமயங்களின் சுருக்க வரலாறு ... | 0 | 2½ |
| மாதிருக்கும் பாதியன் ... | 0 | 1 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
தலைமை நிலையம்: திருநெல்வேலி.
306, லிங்கசெட்டித் தெரு, சென்னை.